# ஆறு மாத
# இஸ்லாமிய
# கல்வி

# ஃபிக்ஹ் வகுப்பு

ஆசிரியர்: அஷ்ஷெய்க் உவைஸ் உமரி நஸீரி

# Table of Contents

Compiled by Dr M.K. Mohamed Ismail

## அறிமுகம் - விபரங்கள் மற்றும் விதிமுறைகள்

**بسم الله الرحمن الرحيم**

கண்ணியமிக்க இஸ்லாமிய சகோதரர்கள் மற்றும் சகோதரிகளே!

அஸ்ஸலாமு அலைகும் வரஹ்மதுல்லாஹி வபரகாதுஹு

வீட்டில் இருந்தே சிறந்த உலமாக்கள் மூலமாக இஸ்லாமிய கல்வியை பெறுவதற்கான வாய்ப்பை அல்லாஹ் உங்களுக்கு ஏற்படுத்தி தந்துள்ளான். இதனை பயன்படுத்தி கொள்வது உங்கள் மீதான கடமை.

**6 மாத இஸ்லாமிய கல்வி வகுப்பு - விபரங்கள் மற்றும் விதிமுறைகள்**

மொழி: தமிழ்

காலம்: ஜூன் 2020 முதல் நவம்பர் 2020 வரை

கட்டணம்: ரூ 500 (ஆகஸ்ட் மாதம் செலுத்த வேண்டும்; அனைவர் மீது கட்டாயமில்லை; விவரங்கள் பிறகு அறிவிக்கப்படும்)

**பாடங்களின் விவரங்கள்:**

1. அகீதா (இஸ்லாமிய கொள்கை)

ஈமானின் அடிப்படைகள் : (அல்லாஹ் மீது ஈமான், மலக்குமார்கள் மீது ஈமான், இறை வேதங்கள் மீது ஈமான், இறைத்தூதர்கள் மீது ஈமான், இறுதி நாள் மீது ஈமான் மற்றும் விதியின் மீது ஈமான்) & (சூனியம் தொடர்பான இஸ்லாமிய நிலைப்பாடு, அன்றும் இன்றும் வழி தவறிய கூட்டங்களில் சில)

2. ஃபிக்ஹு சட்டங்கள்

(தூய்மை சட்டங்கள், தொழுகை, ஜகாத், நோன்பு மற்றும் ஹஜ் சட்டங்கள்)

3. ஹதீஸ்

(ஹதீஸ் கலையின் அடிப்படைகள், இமாம் நவவியின் நாற்பது ஹதீஸ்களின் விளக்கம்)

4. ஸீரா (நபி [ஸல்] வாழ்க்கை வரலாறு)

5. ஆதாப் (இஸ்லாமிய ஒழுக்கங்கள் & நற்பண்புகள்)

**பாடங்களின் கால அட்டவணை:**

(மாணவர்கள் ஒரு பாடத்தை நன்றாக கற்றுக்கொள்ள வேண்டும் என்பதற்காக மாதம் முழுவதும் ஒரு பாடம் மட்டுமே நடத்தப்படும்)

ஜூன்: அகீதா

ஜூலை: பிக்ஹு

ஆகஸ்ட்: 40 ஹதீஸ்கள்

செப்டம்பர் & அக்டோபர்: ஸீரா

நவம்பர்: ஆதாப்

நவம்பர்: இறுதி தேர்வு

**ஒரு வாரத்தில் எத்தனை வகுப்புகள்?**

ஒரு வாரத்தில் ஆறு அரை மணி நேர பாடங்கள் ஆடியோக்களாக அனுப்பப்படும். மாணவர்கள் தினமும் அதனை கேட்டு நோட்டுப்புத்தகத்தில் குறித்துக் கொள்ளவேண்டும்.

**பாடங்களை எவ்வாறு படிப்பது?**

தினம் அரை மணி நேரம் பாடங்களுக்கு ஒதுக்க வேண்டும். பாடங்களை கேட்டு பாட இறுதியில் தரப்பட்டுள்ள கேள்விகள் மற்றும் இதர வேலையை ஹோம்வர்க் நோட்டுப்புத்தகத்தில் எழுத வேண்டும். ஒரு செயலை அது சிறியதாயினும் தொடர்ந்து செய்வதையே அல்லாஹ் நேசிக்கின்றான் என்று நபி (ஸல்) அவர்கள் தெரிவித்துள்ளார்கள். (முஸ்னத் அஹ்மத்).

கேள்வி பதில் எழுத தனி நோட்டுப்புத்தகம் வைப்பது சிறந்தது.

**கேள்வி பதில் நிகழ்ச்சி**

ஒவ்வொரு நாளும் (அகீதா/ஃபிக்ஹ் மட்டும்) அல்லது ஒவ்வொரு வாரம் நடத்தப்படும் வகுப்பிலிருந்து கேள்விகள் கூகுள் லிங்க் மூலமாக கேள்விகள் அனுப்பப்படும்.அதில் பங்கேற்று

தொடர்ச்சியாக சரியாக பதிலளிக்கும் பத்து நபர்களுக்கு ஒவ்வொரு பாடத்தின் இறுதியில் பரிசுகள் வழங்கப்படும்.

**பரிசு விவரம்**

- முதல் பரிசு ₹500
- இரண்டாம் பரிசு ₹250
- மூன்றாம் பரிசு ₹200
- நான்கு ~ பத்து வரை பரிசு ₹100

**தேர்ந்தெடுக்கும் முறை**

ஒவ்வொரு பாடம் அல்லது மாத இறுதியில் அந்தந்த பாட கேள்வி பதில்களில் தொடர்ச்சியாக சரியாக பதிலளிக்கும் பத்து நபர்களுக்கு வழங்கப்படும் இன் ஷா அல்லாஹ்.

**படிப்பு முடிந்த பின் சான்றிதழ் கிடைக்குமா?**

இறுதித் தேர்வில் வெற்றி பெற்ற பின் வழங்கப்படும்.

நாம் அஹ்லுஸ்ஸுன்னா வல்ஜமாஆ கொள்கையை பின்பற்றும் மன்ஹஜை சார்ந்தவர்கள். தௌஹீதையும் சுன்னாவையும் பற்றிப்பிடிப்பவர்கள், ஃபிக்ஹை ஆதரிப்பவர்கள். நம்மிடம் தாங்கள் பயிலும்போது இதனை உணர்வீர்கள். பாடங்கள் அனைத்தும் மதீனா பல்கலைக் கழக வழிமுறைக்கேற்ப நடத்தப்படும்.

(குறிப்பு: இந்த பாடத்திட்டம் இஸ்லாமிய கல்லூரிகளுக்கு சென்று படிக்க முடியாதவர்களை கருத்தில்கொண்டு அமைக்கப்பட்டுள்ளது. எல்லோரும் எளிதாக புரியும் வகையில் பாடங்கள் நடத்தப்படும். ஆகவே, இஸ்லாமை ஆழமாக பயில விரும்பும் சகோதரர்கள் மதரஸாக்கள் மற்றும் உலமாக்கள் மூலமாக நேரடியாக பயில்வதே சிறந்த வழி. அவர்கள் அரபி மொழியையும் கற்று கொள்ள வேண்டும்.)

பாடங்கள் ஆடியோக்களாக அனுப்பப்படும். இதனை கேட்டு குறிப்புகள எழதிக்கொள்வது மாணவர்கள் மீது கடமை. பாடம் சம்பந்தமான வீடியோக்கள் மற்றும் புத்தகங்கள் இருக்குமானால் குரூப்பில் அனுப்பி வைக்கப்படும்.

பாடக்குறிப்புகள் (notes) பாடம் முடியும் போது (pdf) ஆக கொடுக்கப்படும்.

தேவைப்படும்போது கேள்வி பதில் எழுதிய பக்கங்களை படம்பிடித்து குரூப் அட்மின்களுக்கு அனுப்ப வேண்டும்.

இப்பாடதிட்டத்தில் சேர்ந்துள்ள அனைவரும் இடையில் விட்டு போகாமல், இறுதி வரை பொறுமையோடு பயிலும்படி அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

கல்விப்பாதையில் செல்பவர்களுக்காக அல்லாஹ் சுவனப்பாதையை எளிதாக்குகின்றான் என்பதையும் அல்லாஹ் பொறுமையாளர்களோடு இருக்கின்றான் என்பதையும் நாம் மறந்து விடக்கூடாது.

அல்லாஹ் சுப்ஹானஹுவதஆலா நம் அனைவரையும் மார்க்க கல்வியை கற்று அமல் செய்யும் நன்மக்களில் ஆக்கி அருள் புரிவானாக. ஆமீன்.

## கல்வி கற்பவர்கள் பேணவேண்டிய பண்புகள்

**இமாம் முஹம்மது பின் ஸாலிஹ் அல் உஸைமின் ரஹிமஹுல்லாஹ் அறிவுரை**

பாகம் – 1

مراقبه النفس

1) தன்னுடைய ஆத்மாவை தானே கண்காணிப்பது

பிறரை கண்காணிப்பதை நிறுத்திவிட்டு நம்மை நாமே கண்காணித்துக்கொள்ளுதல் ஒவ்வொரு முஸ்லிமின் வாழ்விலும் அவசியமான ஒன்றாக இருக்கிறது

2) நம்மை பரிசோதிக்க வேண்டிய விஷயங்கள்:

நம்மிடம் خشية الله இறையச்சம் இருக்கிறதா என்று நாம் சோதித்து பார்க்க வேண்டும்.

நம்முடைய عمل அமல்களை சரியான முறையில் செய்து வருகிறோமா என்று பரிசோதிக்க வேண்டும்.

3) போதும் என்ற தன்மை (القناعة)

நபி (ஸல்) – செல்வம் என்பது போதும் என்ற தன்மையே கல்விக்கு மிகவும் இடைஞ்சலாக இருக்கும் விஷயம் போதும் என்ற தன்மையில்லாமல் பிறருடன் நம்மை நாம் உலகவிஷயங்களில் ஒப்பிடுவதே.

4) நாம் அதிகமாக கல்விகற்றவரைப்போல காண்பித்துக்கொள்ளக்கூடாது. தெரியாத விஷயங்களை தெரியாது என்று கூறும் தைரியம் வேண்டும்.

உமர் (ரலி) – தன்னிடம் இல்லாததை உள்ளது போல காண்பிப்பவனுக்கு அல்லாஹ் போதுமானவன்(புரியவைப்பான்)

இமாம் மாலிக் (ரஹ்) அவர்களிடம் கேட்கப்படும் பெரும்பாலான கேள்விகளுக்கு "எனக்கு விடை தெரியாது" என்று பதிலளித்தவராவார். அவர் தம்முடைய மரணத்தருவாயில் "நான் அளித்த தீர்ப்புக்களில் எனது சொந்தக்கருத்தை மிகைப்படுத்தி எங்கேனும் கூறிவிட்டேனோ" என்று அஞ்சி கூறினார்கள்...

ازهد في الدنيا يحبك الله، وازهد فيما عند الناس يحبك الناس

சஹல் இப்னு சஹத் அஸ் ஸாஹிதீ (ரலி) – நபி (ஸல்) – உலக விஷயத்தில் பற்றின்றி இருங்கள் அல்லாஹ் உங்களை நேசிப்பான். மக்கள் மத்தியிலுள்ள பொருட்கள் மீது ஆசை கொள்ளாமலிருந்தால் மக்கள் உங்களை நேசிப்பார்கள்.(இப்னு மாஜா – ஹஸன்)

இப்னு ஒதைமீன் (ரஹ்) – உபகாரத்தை அடிப்படையில் தண்ணீர் தந்தாலும் அதை பெறக்கூடாது அதற்கு பதிலாக தயம்மும் செய்து கொள்ளலாம். பணம் கொடுத்து தண்ணீர் வாங்கி உளூ செய்வதே மேலானதாகும்

ஸூரத்துஜ்ஜுமர் (கூட்டங்கள்) 39:9

هَلْ يَسْتَوِى الَّذِيْنَ يَعْلَمُوْنَ وَالَّذِيْنَ لَا يَعْلَمُوْنَ‌

··· அறிந்தோரும், அறியாதோரும் சமமாவார்களா? ...

ஸூரத்துல் முஜாதலா (தர்க்கித்தல்) 58:11

يَرْفَعِ اللّٰهُ الَّذِيْنَ اٰمَنُوْا مِنْكُمْ ۙ وَالَّذِيْنَ اُوْتُوا الْعِلْمَ دَرَجٰتٍ‌

···உங்களில் ஈமான் கொண்டவர்களுக்கும்; கல்வி ஞானம் அளிக்கப்பட்டவர்களுக்கும் அல்லாஹ் பதவிகளை உயர்த்துவான் ...

مَنْ يُرِدِ اللَّهُ بِهِ خَيْرًا يُفَقِّهْهُ فِي الدِّينِ

முஆவியா (ரலி) – நபி (ஸல்) – யாருக்கு அல்லாஹ் நன்மையை நாடுகிறானோ அவருக்கு மார்க்கத்தில் தெளிவைக்கொடுக்கிறான் (புஹாரி, முஸ்லீம்)

நாம் அதிகமதிகமாக கல்வியை தேடும்போதும், புத்தகங்களை வாசிக்கும்போதும், புத்தகம் வாசிப்பவர்களுடன் பழங்கும்போதும் தான்; நமக்கு முன் சென்ற அறிஞர் பெருமக்களின் மிகப்பெரும் பணிகளை நம்மால் விளங்கிக்கொள்ள முடியும்.

இமாம் ஷுஃபீ (ரஹ்) நீங்கள் எந்த ஒரு மார்க்கக்கல்வியை கேட்டாலும் எழுதுங்கள் எழுத வசதி இல்லையேல் பக்கத்தில் உள்ள சுவற்றிலாவது எழுதுங்கள் என வலியுறுத்தினார்கள்.

முன் சென்ற அறிஞர்கள் எழுதும் அடிக்குறிப்புகள் கூட பிறருக்கு புரியும் விதத்தில் இருந்தது. அவர்களது அடிக்குறிப்புக்களால் முக்கிய குறிப்புக்கு எந்த பாதிப்பும் இல்லாதவாறு இரண்டையும் பிரித்து சீராக எழுதும் வழக்கமுடையவர்களாக இருந்தார்கள்...

5) வீணான காரியங்களை விட்டும் தவிர்த்திருக்க வேண்டும்

ஸூரத்துல் முஃமினூன் (விசுவாசிகள்) 23:3

وَالَّذِيْنَ هُمْ عَنِ اللَّغْوِ مُعْرِضُوْنَۙ

இன்னும், அவர்கள் வீணான (பேச்சு, செயல் ஆகிய)வற்றை விட்டு விலகியிருப்பார்கள்.

அதனால் நேரம் அதிகமாக கிடைக்கும்.

6) மிருதுவான குணம்

إن الله رفيق يحب الرفق ويعطى على الرفق ما لا يعطي على العنف وما لا يعطي على ما سواه

ஆயிஷா (ரலி) – நபி (ஸல்) :

அல்லாஹ் மிருதுவானவன் அவன் மிருதுவானதை விரும்புகிறான்.

அல்லாஹ் மூஸா அலை அவர்களிடம் ஃபிரௌனிடம் சொல்லச்சொன்னது

ஸூரத்து தாஹா 20:44

فَقُوْلَا لَهٗ قَوْلًا لَّيِّنًا لَّعَلَّهٗ يَتَذَكَّرُ اَوْ يَخْشٰى

"நீங்கள் இருவரும் அவனிடம் (சாந்தமாக) மென்மையான சொல்லால் சொல்லுங்கள்; அதனால், அவன் நல்லுபதேசம் பெறலாம்; அல்லது அச்சம் கொள்ளலாம்."

7) சமயோசித புத்தியோடு அமைதியாக சிந்தித்தல் (التامل)

العجلةمن الشيطان و التاني من الله

நபி (ஸல்): வேகமாக செயல்படுவது ஷைத்தானின் தன்மையும் நிதானமாக செயல்படுவது அல்லாஹ் விரும்பும் தன்மையும் ஆகும்.

وَمَنْ كَانَ يُؤْمِنُ بِاللَّهِ وَالْيَوْمِ الْآخِرِ فَلْيَقُلْ خَيْرًا أَوْ لِيَصْمُتْ

நபி (ஸல்): யார் அல்லாவையும் மறுமையையும் நம்புகிறாரோ அவர் நல்லதை பேசட்டும் இல்லையேல் மௌனமாக இருக்கட்டும் .

8) الثبات والتثبت எந்த ஒரு செய்தியும் ஆதரத்தன்மையை ஆராய வேண்டும்

احب الاعمال الى الله ادومها وان قل

நபி (ஸல்): அல்லாஹ்விற்கு மிகப்பிடித்தமான அமல் தொடர்ந்து செய்யும் அமல்களே.

**Fiqh 1 Introduction about Fiqh (Islamic Jurisprudence)**

## ஃபிக்ஹ் வகுப்பு 1 - ஃபிக்ஹ் - அறிமுகம்

**ஆசிரியர்: அஷ் ஷெய்க் உவைஸ் உமரி நஸீரி**

அகீதா என்பது கொள்கை என்பதாகும். நமது அமல்களைச் சார்ந்த பகுதி, நமது வெளிப்படையான சட்டங்கள் குறித்து சொல்லப்படுவது ஷரியத் ஆகும். இந்த இரண்டும் சேர்ந்துதான் மார்க்கம் ஆகும். அகீதா சரியாக இருந்தால்தான் நமக்கு மறுமை வெற்றி கிடைக்கும். இந்த கொள்கை சரியாக இருந்தால்தான் வெளிப்படையான அமல்கள் ஏற்றுக் கொள்ளப்படும்.

ஷரியத்தும் முக்கியமானது. உள்ளத்தில் உள்ள ஈமான்தான் வெளிப்படையாக அமல்களாகத் தெரியும். இந்த ஷரியத்தைப் பற்றிய பாடம்தான் ∴பிக்ஹ் ஆகும். இந்த ஷரியத்தை அறிந்துவிடுவாரானால், அவருக்கு அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَى வின் அருள்கொடை கிடைத்துவிட்டது.

புஹாரி 71 மற்றும் முஸ்லிம் 1037

ரஸுலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ கூறியதாவது,

"سَمِعْتُ رَسُولَ اللَّهِ صلى الله عليه وسلم وَهُوَ يَقُولُ " مَنْ يُرِدِ اللَّهُ بِهِ خَيْرًا يُفَقِّهْهُ فِي الدِّينِ

“அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَى யாருக்கு நன்மையை நாடுகிறானோ, அவருக்கு மார்க்கத்தில் ஞானத்தை வழங்குகிறான்.”

∴பிக்ஹ் என்றால் என்ன? ف‘ ق‘ ه (∴பா, கா, ஹா) என்ற மூன்றெழுத்து சொல்லின் இலக்கணப் பூர்வமான பொருளாவது, ‘புரிந்து கொள்ளது’ என்பதாகும்.

அத்தியாயம் முனா∴பிகூன் 3 மற்றும் 7ஆவது வசனங்கள்:

ஸூரத்துல் முனாஃபிஃகூன் (நயவஞ்சகர்கள்)

**63:3** ذٰلِكَ بِاَنَّهُمْ اٰمَنُوْا ثُمَّ كَفَرُوْا فَطُبِعَ عَلٰى قُلُوْبِهِمْ فَهُمْ لَا يَفْقَهُوْنَ

**63:3.** இது நிச்சயமாக இவர்கள் ஈமான் கொண்டு பின் காஃபிர் ஆகி விட்டதனாலேயாகும்; ஆகவே இவர்களின் இதயங்கள் மீது முத்திரையிடப்பட்டு விட்டது; எனவே, அவர்கள் விளங்கிக் கொள்ள மாட்டார்கள்.

**63:7** هُمُ الَّذِيْنَ يَقُوْلُوْنَ لَا تُنْفِقُوْا عَلٰى مَنْ عِنْدَ رَسُوْلِ اللّٰهِ حَتّٰى يَنْفَضُّوْا‌ؕ وَلِلّٰهِ خَزَآٮِٕنُ السَّمٰوٰتِ وَالْاَرْضِ وَلٰـكِنَّ الْمُنٰفِقِيْنَ لَا يَفْقَهُوْنَ

**63:7.** இவர்கள் தாம், அல்லாஹ்வின் தூதருடன் இருப்பவர்கள்; (அவரை விட்டுப்) பிரிந்து செல்லும் வரை அவர்களுக்காக நீங்கள் செலவு செய்யாதீர்கள்” என்று கூறியவர்கள்; வானங்களிலும், பூமியிலுமுள்ள பொக்கிஷங்கள் அல்லாஹ்வுக்கே சொந்தமானவை; ஆனால் இந்நயவஞ்சகர்கள் (அதை) உணர்ந்து கொள்ளமாட்டார்கள்.

பனீ இஸ்ராயீல் (இஸ்ராயீலின் சந்ததிகள்)

**17:44** تُسَبِّحُ لَهُ السَّمٰوٰتُ السَّبْعُ وَالْاَرْضُ وَمَنْ فِيْهِنَّ‌ؕ وَاِنْ مِّنْ شَىْءٍ اِلَّا يُسَبِّحُ بِحَمْدِهٖ وَلٰـكِنْ لَّا تَفْقَهُوْنَ تَسْبِيْحَهُمْ‌ؕ اِنَّهٗ كَانَ حَلِيْمًا غَفُوْرًا

**17:44.** ஏழு வானங்களும், பூமியும், அவற்றில் உள்ளவர்களும் அவனைத் துதி செய்து கொண்டிருக்கின்றனர்; இன்னும் அவன் புகழைக் கொண்டு துதி செய்யாத பொருள் (எதுவும்) இல்லை. எனினும் அவற்றின் துதி செய்வதை நீங்கள் உணர்ந்து கொள்ளமாட்டீர்கள், நிச்சயமாக அவன் பொறுமையுடையவனாகவும், மிக மன்னிப்பவனாகவும் இருக்கின்றான்.

ஸூரத்து தாஹா

**20:25** قَالَ رَبِّ اشْرَحْ لِيْ صَدْرِىْ ۙ **20:26** وَيَسِّرْ لِىْۤ اَمْرِىْ ۙ
**20:27** وَاحْلُلْ عُقْدَةً مِّنْ لِّسَانِىْ ۙ **20:28** يَفْقَهُوْا قَوْلِىْ

**20:25.** (அதற்கு மூஸா) கூறினார்: "இறைவனே! எனக்காக என் நெஞ்சத்தை நீ (உறுதிப்படுத்தி) விரிவாக்கி தருவாயாக!
**20:26.** "என் காரியத்தை எனக்கு நீ எளிதாக்கியும் வைப்பாயாக!
**20:27.** "என் நாவிலுள்ள (திக்குவாய்) முடிச்சையும் அவிழ்ப்பாயாக!
**20:28.** "என் சொல்லை அவர்கள் விளங்கிக் கொள்வதற்காக!

கல்வித் துறையில் ஃபிக்ஹை ஒரு பாடமாகப் படிக்கும் போது, அதற்கான பொருளாவது, 'மஃரிஃபதுல் அஹ்காமி ஷரயித்தஹி பி அதில்லத்தி அத் தஃப்ஸீரத்தி' - மார்க்க சட்டங்களை அதன் விரிவான ஆதாரங்களைக் கொண்டு புரிந்து கொள்ளுதல் என்தாகும். மார்க்கச் சட்டத்தைப் புரிந்து கொள்ளுதல் என்ற இந்த பொருள் பற்றி அத்தியாயம் தவ்பா 122 ல்

ஸூரத்துத் தவ்பா (மனவருந்தி மன்னிப்பு தேடுதல்)

**9:122** وَمَا كَانَ الْمُؤْمِنُوْنَ لِيَنْفِرُوْا كَاۤفَّةً‌ ؕ فَلَوْلَا نَفَرَ مِنْ كُلِّ فِرْقَةٍ مِّنْهُمْ طَاۤٮِٕفَةٌ لِّيَتَفَقَّهُوْا فِى الدِّيْنِ وَ لِيُنْذِرُوْا قَوْمَهُمْ اِذَا رَجَعُوْۤا اِلَيْهِمْ لَعَلَّهُمْ يَحْذَرُوْنَ

**9:122.** முஃமின்கள் ஒட்டு மொத்தமாக புறப்பட்டுச் செல்லலாகாது. ஆனால் அவர்களில் ஒவ்வொரு வர்க்கத்தாரிலிருந்தும் ஒரு சிறிய கூட்டத்தார் சன்மார்க்க (ஞானத்தைக்) கற்று கொள்வதற்காகவும், (வெளியேறி சென்ற அவர்கள் பின்னே தங்கியவர்களிடம்) திரும்பி வந்தால் அவர்களுக்கு அச்சமூட்டி எச்சரிப்பதற்காகவும் புறப்பட வேண்டாமா? இதைக் கொண்டே அவர்கள் தங்களை(த் தீமையினின்றும்) பாதுகாத்துக் கொள்வார்கள்.

இப்னு அப்பாஸ் رَضِيَ اللهُ عَنْهُ அவர்கள், ரஸூலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ அவர்களுக்குப் பணிவிடை செய்வார்கள். அதற்காரணமாக, அவருக்கு, ரஸூலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ துஆ செய்தார்கள், "யா அல்லாஹ்! நீ இப்னு அப்பாஸுக்கு குர்ஆனுடைய விளக்கத்தைக் கற்றுக் கொடுப்பாயாக! மார்க்கச் சட்டங்களின் புரிதலை அறியச் செய்வாயாக!"

**மார்க்கச் சட்டங்களின் (அஹ்காம்) வகைகள் ஐந்து வகைப்படும். அவை:**

**1. வாஜிப் (ஃபர்ள்)** கட்டாயக் கடமை: அவசியம் செய்ய வேண்டியவை. செய்தால் நன்மை கிடைக்கும். செய்யாவிட்டால் பாவமாகும். உதாரணம் ஐநேரத் தொழுகை. தொழுதால் நன்மை கிடைக்கும். தொழமல் விட்டால் அது பாவமாகும். இந்த கடமைகள் அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَى வுக்குச் செய்ய வேண்டிய கடமைகள் மற்றும் மனிதர்களுக்குச் செய்ய வேண்டிய கடமைகள் ஆகிய இரண்டும் அடங்கும். மனிதருக்குச் செய்ய வேண்டிய கடமைக்கு உதாரணம், பெற்றோர்களுக்குச் செய்ய வேண்டிய கடமைகள். அவர்களுக்கு உபாகாரம் செய்வது. செய்தால் நன்மை கிடைக்கும். செய்யாமல் விடுவது பாவமாகும்.

**2. முஸ்தஹப் - ஸுன்னாஹ் - நஃபில்** உபரியான செயல்கள், வலியுறுத்தப்பட்ட செயல்கள் எனப் பொருள்படும். கட்டாயம் செய்ய வேண்டியது அவசியமல்லை. செய்தால் நன்மை கிடைக்கும். செய்யாவிட்டால் பாவம் அல்ல. உதாரணம் ஷவ்வால் 6 நாட்கள் மற்றும் ஆஷூரா நோன்பு, உபரியான தொழுகைகள். இவற்றை செய்தால் நன்மை, செய்யாவிட்டால் பாவமில்லை.

**3. ஹராம்** தடை செய்யப்பட்ட செயல்கள். செய்யாமல் விட்டால் நன்மை கிடைக்கும். அதனைச் செய்தால் தீமையாக கணக்கிடப்படும். செய்தால் பாவமாகும். உதாரணம், பொய் சொல்வது, மது அருந்துவது போன்றவை.

4. **மக்ரூஹ்** வெறுக்கத்தக்கது. ஆனால் ஹராமாக்கப்படவில்லை. செய்தால் பாவமாகக் கருதப்படாது. எனினும் அல்லாஹ் வெறுக்கிறான். ரஸுலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ அவர்களும் வெறுக்கிறார்கள். உதாரணம் ஒரே மூச்சில் தண்ணீரைக் குடிப்பது. மூன்று தரம் குடிப்பது ஸுன்னாஹ் ஆகும். வெறுக்கத்தக்கது, ஆனால் பாவம் எழுதப்படாது. தவிர்த்தால் நன்மை.

5. **ஹலால்** அனுமதிக்கப்பட்டது. ஹலாலான காரியங்கள் பல உள்ளன. உண்பது போன்ற பல. ஆனால் தீமை நன்மை நல்லது சிறந்தது என கிடையாது. விருப்பம் உள்ளவர்கள் செய்யலாம், அல்லது செய்யாமல் விடலாம்.

இந்த சட்டங்களை விரிவான ஆதாரகளுடன் நாம் எடுத்துக் கொள்ள வேண்டும். அப்படிப்பட்ட **ஆதாரங்கள் நான்கு**.

1. அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَى வுடைய வேதம் **குர்ஆன்**.

2. ரஸுலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ அவர்களின் **ஸுன்னாஹ்**. இவை அவர்களின் சொல், செயல் மற்றும் அவர்களின் அங்கீகாரம். உதாரணமாக,

ரஸுலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ கூறியுள்ளார்கள், (புஹாரி 1)

إِنَّمَا الأَعْمَالُ بِالنِّيَّاتِ،

“எண்ணங்கள் செயல்களின் அடிப்படையில் (அமைந்துள்ளன)”

மற்றொரு ஹதீதில் (நஸாயீ 5148) ரஸுலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ கூறியுள்ளார்கள்,

" أُحِلَّ الذَّهَبُ وَالْحَرِيرُ لإِنَاثِ أُمَّتِي وَحُرِّمَ عَلَى ذُكُورِهَا "

“தங்கமும், பட்டும் எனது உம்மத்தின் பெண்களுக்கு அனுமதிக்கப்பட்டுள்ளது. ஆண்களுக்கு ஹராமாக்கப்பட்டுள்ளது.”

இந்த ஹதீதிலிருந்து நம்மால் சட்டத்தை எடுத்துக் கொள்ள முடியும்.

அடுத்தது அவர்களின் செயல்கள். ஸஹாபாக்கள் கூறுவார்கள், “ரஸுலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ தொழுகையில் இவ்வாறு கையை உயர்த்துவார்கள், இவ்வாறு உளூ செய்ததைப் பார்த்தேன்” இவை அவர்களின் செயல்களாகும்.

மூன்றாவது, ரஸுலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ அவர்களின் அங்கீகாரம். அவர்களின் முன்னிலையில் ஒரு ஸஹாபி ஒரு காரியத்தைச் செய்கிறார். ரஸுலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ அவர்கள் மௌனமாக இருந்தாலும், அல்லது அவரைப் பாராட்டினாலும் அது அவர்களனின் அங்கீகாரம் ஆகும். அவை மார்க்கத்தில் அனுமதிக்கப்பட்டது. அவர் செய்தது தவறு என்றால், அவர்கள் அதனை உடனே தடுத்திருப்பார்கள்.

3. **இஜ்மா**: உம்மத்தில் எல்லா அறிஞர்களும் ஒட்டு மொத்த ஒருமித்த கருத்து. உதாரணமாக சிகரெட் ஹராம் என எல்லோரும் சொல்லியிருக்கிறார்கள். இவ்வாறு ஒருமித்த கருத்து ஒன்றை ஹலால் மற்றும் ஹராமாக ஆக்கினால் அதனை எடுத்துக் கொள்ளலாம். இஜ்மாவை நாம் எடுத்துக் கொள்ளலாமா என்பதற்கான ஆதாரம்,

ஸூரத்துன்னிஸாவு (பெண்கள்)

**4:115** وَمَنْ يُّشَاقِقِ الرَّسُوْلَ مِنْۢ بَعْدِ مَا تَبَيَّنَ لَـهُ الْهُدٰى وَ يَـتَّبِعْ غَيْرَ سَبِيْلِ الْمُؤْمِنِيْنَ نُوَلِّهٖ مَا تَوَلّٰى وَنُصْلِهٖ جَهَـنَّمَ‌ؕ وَسَآءَتْ مَصِيْرًا

**4:115.** எவனொருவன் நேர்வழி இன்னது என்று தனக்குத் தெளிவான பின்னரும், (அல்லாஹ்வின்) இத்தூதரை விட்டுப் பிரிந்து, முஃமின்கள் செல்லாத வழியில் செல்கின்றானோ, அவனை அவன்

செல்லும் (தவறான) வழியிலேயே செல்லவிட்டு நரகத்திலும் அவனை நுழையச் செய்வோம்; அதுவோ, சென்றடையும் இடங்களில் மிகக் கெட்டதாகும்.

ரஸூலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ அவர்களுக்கு மாறு செய்வது, மற்றும் மு.்.மின்கள் செல்லாத வழியில் செல்வது குறித்து அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَى எச்சரித்துள்ளான்.

திர்மிதி 2167

إِنَّ اللَّهَ لاَ يَجْمَعُ أُمَّتِي - أَوْ قَالَ أُمَّةَ مُحَمَّدٍ صلى الله عليه وسلم - عَلَى ضَلاَلَةٍ

ரஸூலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ கூறியுள்ளார்கள், "எனது உம்மத் வழி கேட்டில் ஒன்று சேரமாட்டார்கள்."

அதாவது உம்மத் ஒட்டுமொத்தாக ஒருமித்த கருத்தோடு செல்வது வழிகேடாக இருக்காது. ஒரு சில அறிஞர்களின் ∴பத்வா தவறாக வழியில் இருக்கலாம். ஆனால் ஒட்டு மொத்த ஒருமித்த கருத்து தவறாக இருக்காது. மேலும் இஜ்மா என்பது ஒருமித்த கருத்துதானே அன்றி பலர் கூறும் கருத்து அல்ல. எனவே பெரும்பாலானோர் கருத்து சரியாக இருக்கும் என்று எடுத்துக் கொள்ள முடியாது.

**ஸூரத்து யூஸுஃப்**

**12:103** وَمَآ اَكْثَرُ النَّاسِ وَلَوْ حَرَصْتَ بِمُؤْمِنِيْنَ

**12:103.** ஆனால் நீர் எவ்வளவு அதிகமாக விரும்பினாலும் (அம்) மனிதர்களில் பெரும் பாலோர் (உம்மை நபி என) நம்பமாட்டார்கள்.

**ஸூரத்துல் அன்ஆம் (ஆடு, மாடு, ஒட்டகம்)**

**6:116** وَاِنْ تُطِعْ اَكْثَرَ مَنْ فِى الْاَرْضِ يُضِلُّوْكَ عَنْ سَبِيْلِ اللّٰهِ‌ اِنْ يَّتَّبِعُوْنَ اِلَّا الظَّنَّ وَاِنْ هُمْ اِلَّا يَخْرُصُوْنَ

**6:116.** பூமியில் உள்ளவர்களில் பெரும்பாலோரை நீர் பின்பற்றுவீரானால் அவர்கள் உம்மை அல்லாஹ்வின் பாதையை விட்டு வழிகெடுத்து விடுவார்கள். (ஆதாரமற்ற) வெறும் யூகங்களைத்தான் அவர்கள் பின்பற்றுகிறார்கள் - இன்னும் அவர்கள் (பொய்யான) கற்பனையிலேயே மூழ்கிக்கிடக்கிறார்கள்.

4. **கியாஸ்** என்றால் கணித்தல் (அளந்து பார்த்தல்) என்பதாகும். நவீன பிரச்சனை குறித்து குர்ஆன் ஹதீதுகளில் நேரடியான ஆதாரங்கள் இல்லா நிலையில் அது குறித்து அவற்றைச் சார்ந்து சட்டம் எடுத்துக் கொள்வதாகும். உதாரணமாக, மது குடிப்பது ஹராம் என் குர்ஆனிலும், ஹதீதிலும் கூறப்பட்டுள்ளது.

ரஸூலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ கூறியுள்ளார்கள், (நஸாயீ 5699)

كُلُّ مُسْكِرٍ خَمْرٌ وَكُلُّ مُسْكِرٍ حَرَامٌ

"போதை தரும் ஒன்வொன்றும் ஹராம்தான்."

இவ்வாறு போதை குறித்து ஒவ்வொன்றும் ஹராம் என்று சொல்லப்பட்டுள்ளதால், மது ஹராமானது போல, நவீன காலத்தில போதை மருந்துகள், போதை தரும் பாக்கு போன்றவைகளும் ஹராம்தான் என நாம் எடுத்துக் கொள்வது கியாஸ் ஆகும். அது போல, சூதாட்டம் ஹராம் எனச் சொல்லப்பட்டதால், நவீன கிரிக்கெட் போன்ற விளையாட்டுகளை ஒட்டியுள்ள சூதாட்டங்களும் கியாஸின் அடிப்படையில் ஹராம்தான்.

ரஸூலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ அவர்களும் கியாஸைக் கற்றுத் தந்திருக்கிறார்கள். ஒரு தடவை, ஒரு பெண்மணி தங்களின் தாயார் நோன்பை விட்டுச் சென்றுள்ளதால், அதற்குப் பதிலாக தாங்கள் வைக்கலாமா என்று கேட்டதற்கு, அவர்கள் நேரடியாக பதில் சொல்லாமல், அவருக்குக் கடன்

இருந்தால் நீர் நிறைவேற்ற வேண்டாமா என்ற பொருளில் வினவினார்கள். இவ்வாறு அவர்கள் கியாஸ் செய்வதற்கான வழிமுறையைக் கை கொண்டுள்ளார்கள். அதாவது ஒது சட்டத்தை வைத்து, அதற்கு இணையாக நாம் கியாஸ் செய்யும் வழிமுறையைச் சொல்லிக் கொடுத்தார்கள். இவ்வாறு அடிப்படையில் நவீன விஷயங்களுக்குக் கியாஸின் அடிப்படையில் சட்டம் செய்யலாம்.

பிக்ஹுல் இபாதா - அமல்கள் குறித்த சட்டங்கள். பிக்ஹுல் முஆமலாத் - மற்ற மனிதர்களுடன் நம்முடைய செயல்பாடுகள் குறித்தது. குடும்பம், நிக்காஹ், தலாக், மற்றவர்களுக்கு உரிய உரிமைகள், வியாபாரம், குற்றவியல், தீர்ப்பு வழங்குதல், பிறை சம்பந்தப்பட்டது, இஸ்லாமிய ஆட்சி சம்பந்தப்பட்ட போன்றவை. இவ்வாறு உள்ள சட்டதிட்டங்களை, முக்கிய நமக்குத் தேவையான விஷயங்களைத் தெரிந்து கொள்வது கட்டாமாகிறது. உதாரணமாக, தொழுகை கட்டாயமாக இருப்பதால், அது குறித்த் ∴பிக்ஹ் பற்றி தெரிவது கட்டாயமாகிறது. திருமணம் முடித்து விட்டால், கணவன் மனைவி குறித்த உரிமைகள், செயல்பாடுகள் ஆகியன பற்றி தெரிந்து கொள்வது கட்டாயமாகிறது. அது போல, மற்ற மனிதர்களுக்குச் செய்ய வேண்டிய உரிமைகள் பற்றியும் நாம் அறிந்து கொள்ள வேண்டும்.

ரஸூலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ கூறியுள்ளார்கள், (இப்னு மாஜா 224)

طَلَبُ الْعِلْمِ فَرِيضَةٌ عَلَى كُلِّ مُسْلِمٍ

“அறிவைக் கற்றுக் கொள்வது ஒவ்வொரு முஸ்லிம்களின் மீதும் கடமையாகும்”

அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَى நமது அனைவருக்கும் மார்க்கக் கல்வியைக் கற்கும் பாக்கியத்தைத் தருவானாக! ஆமீன்.

## Fiqh 2 - Laws of Purity - 1

# ஃபிக்ஹ் வகுப்பு 2 - தூய்மையின் சட்டங்கள் -1

**ஆசிரியர்: அஷ் ஷெய்க் உவைஸ் உமரி நளீரி**

தஹாராஹ் (طهارة) என்று சொன்னால் தூய்மையாகும். இது இரண்டு வகைப்படும். ஒன்றாவது **உளத்தூய்மை**: ஷிர்க், நி∴பாக் (நயவஞ்சகத்தனம்) மற்றும் முகஸ்துதி ஆகியன இல்லாமல் இருப்பது. எனவே நமது வழிபாடுகளில் ஷிர்க், நயவஞ்சகம், முகஸ்துதி ஆகியவற்றை விட்டும் காத்துக் கொள்ள வேண்டும். எவ்வாறென்றால், இறை நம்பிக்கை, இக்லாஸ் மற்றும் பயபக்தி ஆகியவற்றைக் கொண்டு நாம் உள்ளத்தைத் தூய்மைப் படுத்திக் கொள்ள வேண்டும். இந்த பொருளில் தான் அத்தியாயம் தவ்பா 28ல் கூறுகிறான்,

ஸூரத்துத் தவ்பா (மனவருந்தி மன்னிப்பு தேடுதல்)

**9:28** يٰۤاَيُّهَا الَّذِيْنَ اٰمَنُوْۤا اِنَّمَا الْمُشْرِكُوْنَ نَجَسٌ فَلَا يَقْرَبُوا الْمَسْجِدَ الْحَـرَامَ بَعْدَ عَامِهِمْ هٰذَا‌ ۚ وَ اِنْ خِفْتُمْ عَيْلَةً فَسَوْفَ يُغْنِيْكُمُ اللّٰهُ مِنْ فَضْلِهٖۤ اِنْ شَآءَ‌ ؕ اِنَّ اللّٰهَ عَلِيْمٌ حَكِيْمٌ

**9:28. ஈமான் கொண்டவர்களே! நிச்சயமாக இணை வைத்து வணங்குவோர் அசுத்தமானவர்களே;** ஆதலால், அவர்களின் இவ்வாண்டிற்குப் பின்னர் சங்கை மிகுந்த இப் பள்ளியை (கஃபத்துல்லாஹ்வை) அவர்கள் நெருங்கக் கூடாது; (அதனால் உங்களுக்கு) வறுமை வந்து விடுமோ என்று நீங்கள் பயந்தீர்களாயின் - அல்லாஹ் நாடினால் - அவன் அதி சீக்கிரம் அவன் தன் அருளால் உங்களைச் செல்வந்தர்களாக்கி விடுவான் - நிச்சயமாக அல்லாஹ் (எல்லாம்) அறிந்தவனாகவும், ஞானமுடையவனாகவும் இருக்கின்றான்.

அவர்களின் உள்ளங்களில் அசுத்தம் உள்ளது என்ற பொருளில் அல்லாஹ் கூறுகிறான்.

இவ்வாறு உளத்தூய்மை என்பது, எல்லாவித அமல்களிலும் அடிப்படை நிபந்தனையாக உள்ளது. அது இல்லாமல் செய்யக் கூடிய அமல்களை அல்லாஹ் ஏற்றுக் கொள்ள மாட்டான்.

இரண்டாவது **புறத்தூய்மை** (வெளிப்படையான தூய்மை). இது இரண்டு வகைப்படும். ஒன்றாவது, **சிறு தொடக்கு மற்றும் பெருந்தொடக்கு** (ஹதத்) ஆகியனவற்றிலிருந்து தூய்மை அடைவது.. இரண்டாவது **அசுத்தம்** (நஜீஸ்) ஆகியவற்றிலிருந்து தூய்மை அடைவது.

சிறு தொடக்கு மற்றும் பெருந்தொடக்கு ஆகிய இரண்டும், மார்க்கத்தின் பார்வையில் தூய்மை அற்ற நிலையாகும். அவற்றிலிருந்து நாம் தூய்மை அடைய வேண்டும். சிறு தொடக்கிலிருந்து உளூ செய்வதன் மூலம் தூய்மை அடையலாம். பெருந்தொடக்கில் குளிப்பு கடமையாகி, குளித்து அதன் மூலம் தூய்மை அடையலாம்.

நஜீஸிலிருந்து தூய்மை அடைவது: நமது உடலிலோ, அல்லது உடையிலோ அல்லது நாம் தொழும் இடத்திலே அசுத்தம் இருந்தால் அதனைத் தூய்மைப் படுத்துவது ஆகும். இது பற்றிய விரிவான சட்டங்கள் பின்னர் கூறப்படும்.

இந்த இரண்டு வகையிலிருந்தும் சுத்தத்தை அடைவது என்ன வழி என்ன? அதுதான் நமக்கு அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَى அளித்த ஒரு பெரிய அருட்கொடை தண்ணீர் ஆகும். இந்தத் தண்ணீரில் அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَى இரண்டு அம்சங்களை வைத்துள்ளான். ஒன்று அது சுத்தமான ஒன்று. மற்றொன்று இது மற்றவற்றையும் சுத்தப்படுத்தக் கூடிய ஒன்று.

தண்ணீர் சுத்தமானது என்பதற்கு ஆதாரம், அத்தியாயம் ∴புர்கான் 48

ஸூரத்துல் ஃபுர்ஃகான் (பிரித்தறிவித்தல்)

**25:48** وَهُوَ الَّذِىْۤ اَرْسَلَ الرِّيٰحَ بُشْرًۢا بَيْنَ يَدَىْ رَحْمَتِهٖ‌ۚ وَاَنْزَلْنَا مِنَ السَّمَآءِ **مَآءً طَهُوْرًا** ۙ

**25:48.** இன்னும், அவன்தான் தன்னுடைய கிருபை (மழை)க்கு முன்னே காற்றுகளை நன்மாராயமாக அனுப்பி வைக்கின்றான்; மேலும், (நபியே!) நாமே வானத்திலிருந்து **தூய்மையான நீரையும்** இறக்கி வைக்கிறோம்.

தண்ணீர் மற்றவற்றைச் சுத்தப்படுத்தும் என்பதற்கான ஆதாரம், அத்தியாயம் அன்.ஃ.பால் 11

ஸூரத்துல் அன்ஃபால் (போரில் கிடைத்த வெற்றிப்பொருள்கள்)

**8:11** اِذْ يُغَشِّيْكُمُ النُّعَاسَ اَمَنَةً مِّنْهُ **وَيُنَزِّلُ عَلَيْكُمْ مِّنَ السَّمَآءِ مَآءً لِّيُطَهِّرَكُمْ بِهٖ** وَيُذْهِبَ عَنْكُمْ رِجْزَ الشَّيْطٰنِ وَلِيَرْبِطَ عَلٰى قُلُوْبِكُمْ وَيُثَبِّتَ بِهِ الْاَقْدَامَ ؕ

**8:11.** (நினைவு கூறுங்கள்:) நீங்கள் அமைதியடைவதற்காக அவன் சிறியதொரு நித்திரை உங்களை பொதிந்து கொள்ளுமாறு செய்தான்; இன்னும் **உங்களை அதன் மூலம் தூய்மைப்படுத்துவதற்காகவும்,** ஷைத்தானின் தீய எண்ணங்களை உங்களைவிட்டு நீக்குவதற்காகவும், உங்கள் இருதயங்களைப் பலப்படுத்தி, உங்கள் பாதங்களை உறுதிப்படுத்துவதற்காகவும், **அவன் உங்கள் மீது வானிலிருந்து மழை பொழியச் செய்தான்.**

எனவே சுத்தப்படுத்த அல்லாஹ் **سُبْحَانَهُ وَتَعَالَى** நமக்கு அளித்த அருட்கொடை தண்ணீர் ஆகும். சிறு தொடக்கு மற்றும் பெருந் தொடக்குக்கு நாம் தண்ணீரைக் கொண்டு உளூ மற்றும் குளிப்பதன் மூலம் சுத்தப்படுத்திக் கொள்வோம். அதுபோல நஜீஸ் எங்கு பட்டாலும் அதனைத் தண்ணீரைக் கொண்டு சுத்தப்படுத்திக் கொள்வோம்.

சுத்தப்படுத்துவதற்கான மற்றொரு வழி சுத்தமான மண் ஆகும். அத்தியாயம் மாயிதா 6

ஸூரத்துல் மாயிதா (ஆகாரம்) (உணவு மரவை)

**5:6** يٰۤاَيُّهَا الَّذِيْنَ اٰمَنُوْۤا اِذَا قُمْتُمْ اِلَى الصَّلٰوةِ فَاغْسِلُوْا وُجُوْهَكُمْ وَاَيْدِيَكُمْ اِلَى الْمَرَافِقِ وَامْسَحُوْا بِرُءُوْسِكُمْ وَاَرْجُلَكُمْ اِلَى الْـكَعْبَيْنِ‌ ؕ وَاِنْ كُنْتُمْ جُنُبًا فَاطَّهَّرُوْا‌ ؕ وَاِنْ كُنْتُمْ مَّرْضٰۤى اَوْ عَلٰى سَفَرٍ اَوْ جَآءَ اَحَدٌ مِّنْكُمْ مِّنَ الْغَآٮِٕطِ اَوْ لٰمَسْتُمُ النِّسَآءَ **فَلَمْ تَجِدُوْا مَآءً فَتَيَمَّمُوْا صَعِيْدًا طَيِّبًا فَامْسَحُوْا بِوُجُوْهِكُمْ وَاَيْدِيْكُمْ مِّنْهُ**‌ ؕ مَا يُرِيْدُ اللّٰهُ لِيَجْعَلَ عَلَيْكُمْ مِّنْ حَرَجٍ وَّلٰـكِنْ يُّرِيْدُ لِيُطَهِّرَكُمْ وَ لِيُتِمَّ نِعْمَتَهٗ عَلَيْكُمْ لَعَلَّكُمْ تَشْكُرُوْنَ

**5:6.** முஃமின்களே! நீங்கள் தொழுகைக்குத் தயாராகும்போது, (முன்னதாக) உங்கள் முகங்களையும், முழங்கைகள் வரை உங்கள் இரு கைகளையும், கழுவிக் கொள்ளுங்கள்; உங்களுடைய தலைகளை (ஈரக்கையால்) தடவி (மஸஹு செய்து) கொள்ளுங்கள்; உங்கள் கால்களை இரு கணுக்கால் வரை(க் கழுவிக் கொள்ளுங்கள்) - நீங்கள் பெருந்தொடக்குடையோராக (குளிக்கக் கடமைப் பட்டோராக) இருந்தால் குளித்து(த் தேகம் முழுவதையும் சுத்தம் செய்து)க் கொள்ளுங்கள்; தவிர நீங்கள் நோயாளிகளாகவோ, அல்லது பிரயாணத்திலோ இருந்தால், அல்லது உங்களில் எவரும் மல ஜலம் கழித்து வந்தாலும், அல்லது நீங்கள் பெண்களைத் தீண்டி (உடல் உறவு கொண்டி)ருந்தாலும் **(உங்களைச் சுத்தப்படுத்திக் கொள்ள) உங்களுக்குத் தண்ணீர் கிடைக்காவிட்டால் (தயம்மும் செய்து கொள்ளுங்கள்; அதாவது) சுத்தமான மண்ணைக் (கையினால் தடவிக்) கொண்டு அவைகளால் உங்கள் முகங்களையும், உங்களுடைய கைகளையும் தடவிக் கொள்ளுங்கள்;** அல்லாஹ் உங்களை வருத்தக் கூடிய எந்த சிரமத்தையும் கொடுக்க விரும்பவில்லை - ஆனால் அவன் உங்களைத் தூய்மைப் படுத்தவும்; இன்னும் நீங்கள் அவனுக்கு நன்றி செலுத்தும் பொருட்டு, தனது அருட்கொடையை உங்கள் மீது முழுமையாக்கவும் விரும்புகிறான்.

இதற்குப் பெயர் **தயம்மும்** ஆகும்.

நாம் சுத்தப்படுத்த பயன்படுத்தும் தண்ணீர், மழை நீர், ஆற்று நீர், கடல் நீர், குளத்து நீர் ஆகிய எந்த நீராக இருந்தாலும், அவை சுத்தமானதும், மற்றவற்றைச் சுத்தப்படுத்தும் தன்மையும் கொண்டதாகும். ஆனால் மற்ற திரவங்கள், உதாரணமாக, எலுமிச்சைச் சாறு போன்ற பானங்கள் சுத்தமாக இருந்தாலும், மற்றவற்றைச் சுத்தப்படுத்தாது. தண்ணீர் கிடைகாத நிலையில் இப்படிப்பட்ட சாறுகளை வைத்து நாம் சுத்தப்படுத்த முடியாது. தண்ணீருக்கு மட்டும் இரண்டு அம்சங்கள் உள்ளன. சுத்தமானதும், சுத்தப்படுத்தக் கூடியாது. மற்றவை சுத்தமாக இருந்தாலும் மற்றவற்றைச் சுத்தப்படுத்த முடியாது என்பதால், அதை அருந்த ஹலால்தான். ஆனால் சுத்தப்படுத்த பயன்படுத்த முடியாது.

மேற்கூறப்பட்ட சுத்தமான தண்ணீர் அசுத்தமாக மாற வாய்பபுள்ளது. இது குறித்து இரண்டு சட்டங்கள் உள்ளன. முதலாவது, அசுத்தம் ஏதேனும் தண்ணீரில் விழுந்து, அந்த தண்ணீரின் நிறமோ, சுவையோ அல்லது வாசனையோ மாறிவிட்டால், அந்தத் தண்ணீர் அசுத்தமாக மாறிவிடும். உதாரணமாக, ஒரு எலி அந்தத் தண்ணீரில் விழுந்து இறந்துவிட்டபோது, அத்தண்ணீரின் தன்மையில் மேற்சொன்ன மூன்றில் எந்த ஒரு மாற்றம் வந்தாலும், அந்த தண்ணீர் அசுத்தமாக மாறிவிடும். அதனை அருந்தவோ, அதனைக் கொண்டு சுத்தப்படுத்தவோ அனுமதியில்லை.

பெருநகரங்களில், சில சமயங்களில் சாக்கடை நீர் கலந்து குழாய்களில் நீர் வரலாம். ஓரளவு நீரை வெளியாக்கிய பிறகு, அதன் நிறம் மாறி தெளிவாக வந்தாலும், துர்நாற்றம் தொடர்ந்து வரலாம். இப்படிப்பட்ட நீர் அசுத்தம் என்பதால், அதனைக் குடிக்கவோ, அசுத்தம் நீக்கவோ பயன்படுத்தக் கூடாது. அறிஞர் பெருமக்களின் இஜ்மாதான் இதற்கு ஆதாரமாகும். அனைவரும் இந்த சட்டத்தைத்தான் கூறுகிறார்கள். இது ஒருமித்த கருத்தாகும். ஒரு பலவீனமான ஹதீதிலிருந்து இந்த இஜ்மா எடுக்கப்பட்டுள்ளது.

தண்ணீரில் சவர்க்காரம் (soap) விழுந்த காரணத்தால், அதன் நிறம், சுவை மற்றும் வாசைன ஆகிய மூன்று மாற்றங்களும் ஏற்பட்டாலும், சவர்க்காரம் நஜீஸ் இல்லை என்பதால், அந்தத் தண்ணீரை பயன்படுத்தலாம். எனவே சுத்தமான பொருள் விழுந்து மாறினால், தண்ணீர் அசுத்தமாக ஆகாது. ஆனால் அதனைத் தண்ணீர் என்று சொல்லப்படும் வரை அதனைப் பயன்படுத்தலாம். உதாரணமாக, சிறிதளவு எலுமிச்சச் சாறு விழுந்தால், தண்ணீர் அசுத்தமாக மாறாது என்பதால் அதனை சுத்தப்படுத்தப் பயன்படுத்தலாம். ஆனால் சாற்றின் அளவு அதிகமாகி, அதனைத் தண்ணீர் என்று சொல்ல முடியாமல், சாறு நிலைக்கு வந்தால், அது சுத்தமாக இருந்தாலும், மற்றவற்றைச் சுத்தப்படுத்தும் நிலையிலிருந்து மாறிவிடும். எனவே அதனைக் குடிக்க அனுமதி இருந்தாலும், அதனைக் கொண்டு சுத்தப்படுத்த அனுமதியில்லை.

தண்ணீரில் ஒரு நஜீஸ் விழுந்து அந்தத் தண்ணீரின் சுவையோ, நிறமோ, வாசனையோ மாறவில்லை என்றால் அப்போது அதன் நிலை என்ன? இந்தத் தண்ணீரை நாம் பயன்படுத்தலாம். இதற்கான ஆதாரம் நஸயி 327 மற்றும் அபுதாவூத் 66.

ரஸுலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ அவர்களிடம் வினவப்பட்டது,

عَنْ أَبِي سَعِيدٍ الْخُدْرِيِّ، أَنَّهُ قِيلَ لِرَسُولِ اللَّهِ صلى الله عليه وسلم أَنَتَوَضَّأُ مِنْ بِئْرِ بُضَاعَةَ وَهِيَ بِئْرٌ يُطْرَحُ فِيهَا الْحِيَضُ وَلَحْمُ الْكِلاَبِ وَالنَّتْنُ فَقَالَ رَسُولُ اللَّهِ صلى الله عليه وسلم " الْمَاءُ طَهُورٌ لاَ يُنَجِّسُهُ شَىْءٌ "

“புழாஆ கிணற்றுத் தண்ணீரைப் பயன்படுத்தலாமா? அதில் இறந்த நாய், மாதவிடாய்த் துணிகள் மற்றும் பல அசுத்தங்கள் போடப்பட்டுள்ளவே?” அவர்கள் கூறினார்கள், “அது சுத்தமான தண்ணீர்தான்.”

அந்தக் கிணற்றுத் தண்ணீர் அதிகமாக இருந்ததால், அதில் அந்த மூன்று மாற்றமும் ஏற்படவில்லை என்பதால் அதனை பயன்படுத்தலாம். நமது மனதில் வஸ்வஸா ஏற்பட்டு அது போன்ற தண்ணீரை

நாம் பயன்படுத்தாமல் விடலாம் என்றாலும், அது பயன்படுத்த அனுமதிக்கப்பட்ட ஒன்றுதான் என்பததை அறிந்து கொள்ள வேண்டும்.
தண்ணீர் குறைவாக இருந்த நிலையில், எவ்வித மூன்று மாற்றங்களும் நிகழாத நிலையில் அதே சட்டம்தானா? அத்தகைய குறைவான நீரை பாதுகாப்பாக மூடி வைக்க வேண்டும். ரஸுலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ கூறியுள்ளார்கள், "தண்ணீர் உள்ள பாத்திரத்தில் நாய் வாயை வைத்துவிட்டால், அதனை கீழே ஊற்றிவிடுங்கள்." எனவே குறைந்த அளவு தண்ணீரை பாதுகாக்க முயலவேண்டும். அதில் நஜீஸ் ஏற்பட்டால், எந்த மாற்றமும் ஏற்படாத நிலையிலும் அதனைத் தவிர்ப்பது நல்லது.
குறைந்த அளவு தண்ணீர் என்பதற்கான அளவு எவ்வளவு?

அபுதாவூத் 66.
ரஸுலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ கூறியுள்ளார்கள்,

" إِذَا كَانَ الْمَاءُ قُلَّتَيْنِ لَمْ يَحْمِلِ الْخَبَثَ "

"தண்ணீர் இரண்டு குல்லாஹ் (குல்லத்தைன்) அளவு இருந்தால், அது அசுத்தத்தை ஏற்படுத்தாது." அந்தக் காலத்தில் பயன்படுத்தப்பட்டது குல்லா என்ற பானை ஆகும். எனவே இரண்டு குல்லாஹ் அளவிற்குக் குறைவாக இருந்தால் அது நஜீஸ் ஆகிவிட வாய்ப்புண்டு.
குல்லாஹ் என்பது அக்கால பானை வகையைச் சேர்ந்ததாகும். அது ஈராக்கைச் சேர்ந்த பானை என அதிகமானோர் கருத்து கூறியுள்ளார்கள். இரண்டு குல்லாஹ் பானைகளின் மொத்த கொள்ளளவு என்ன என்பதில் கருத்து வேறுபாடு உள்ளது. குறைந்தபட்ச அளவு 161 லிட்டார் ஆகும்.

எனவே இரண்டு குல்லாஹ்வை விட குறைவான தண்ணீரில் நஜீஸ் படாமல் இருப்தற்கு அதனைப் பாதுகாப்பாக வைத்துக் கொள்ள வேண்டும். அதனால்தான், ரஸுலுல்லாஹ் صَلَّى الله عَلَيْهِ وَسَلَّمَ பாதுகாத்து வைப்பதற்கான சட்டங்களைக் கூறியுள்ளார்கள்.

இப்னு மாஜாஹ் 393

ரஸுலுல்லாஹ் صَلَّى الله عَلَيْهِ وَسَلَّمَ கூறியுள்ளார்கள்,

أَنَّ أَبَا هُرَيْرَةَ كَانَ يَقُولُ قَالَ رَسُولُ اللَّهِ ـ صلى الله عليه وسلم ـ " إِذَا اسْتَيْقَظَ أَحَدُكُمْ مِنَ اللَّيْلِ فَلاَ يُدْخِلْ يَدَهُ فِي الإِنَاءِ حَتَّى يُفْرِغَ عَلَيْهَا مَرَّتَيْنِ أَوْ ثَلاَثًا فَإِنَّ أَحَدَكُمْ لاَ يَدْرِي فِيمَ بَاتَتْ يَدُهُ "

தூக்கத்திலிருந்து ஒருவர் கண் விழித்தால், உடனே பாத்திரத்தின் உள்ளே கையைக் விடக்கூடாது என்றும், அதற்கு முன்பாக, அவர் தம் கரங்களை மணிக்கட்டு வரை அந்த பாத்திரத்திலிருந்து தண்ணீரைச் சாய்த்து இரண்டு அல்லது மூன்று முறை கழுவி விட்டு அதனுள் தமது கையை விடலாம். அந்த கை தூக்கத்தில் எங்கெல்லாம் சென்றது என நாம் அறியமாட்டோம்.''

அது போல, தேங்கிய தண்ணீரின் மீது சிறுநீர் கழிக்க வேண்டாம் என்று தடுத்துள்ளார்கள். நவீன காலத்தை எடுத்துக் கொண்டால், நீச்சல் குளத்தில் சிறுநீர் கழிக்கக் கூடாது.

பாதுகாக்கப்பட வேண்டிய தண்ணீரில், நஜீஸ் விழுந்து நிறம், சுவை மற்றும் மணம் ஆகியன மாறிவிட்டால், அதனைப் பயன்படுத்தக் கூடாது. அவ்வாறு மாறவில்லை என்றாலும், அதனைத் தவிர்ப்பது நல்லது. ஆனால் அதனைப் பயன்படுத்தக் கூடாது என்பதற்கான தெளிவான ஆதாரம் இல்லை. சுத்தமான பொருள் விழுந்து அதன் குணம் மாறி இருந்தால் அதனைப் பயன்படுத்தலாம். உதாரணம், சோப், கற்பூரம், வேப்பிலை போன்றவை. பலநாட்கள் இருந்ததனால், தண்ணீரின் தன்மை மாறியிருந்தாலும், அதனைப் பயன்படுத்தத் தடையில்லை. அசுத்தம் விழுந்தததனால் மாறவில்லை. மாறாக நாள்ப்பட்டதன் காரணமாகத்தான் மாறியது.

மார்க்க முறையில் அசுத்தங்கள் (நஜீஸ்) எவை? அவை என்ன என்று அறிந்தால்தான், அது விழுந்த தண்ணீர் பற்றிய சட்டத்தை நாம் உணர முடியும்.

குர்ஆன், ஹதீது, இஜ்மா மற்றும் கியாஸ் ஆகிய மூலம், எது அசுத்தம் என்று சொல்லப்பட்டதோ, அதுதான் அசுத்தமாகும். அவ்வாறு சொல்லாத வரையிலும் எதனையும் அசுத்தம் என்று எடுத்துக் கொள்ள முடியாது. அதனை சுத்தமாகத்தான் எடுத்துக் கொள்ள வேண்டும். இது அடிப்படை சட்டமாகும். நாம் சாப்பிட ஹராமாக்கப்பட்டவை தவிர மற்றவை ஹலால்தான் என்பது போல இது அமைகிறது.

ஸஹீஹ் முஸ்லிம் 332*

حَدَّثَنَا مُحَمَّدُ بْنُ الْمُثَنَّى، وَابْنُ، بَشَّارٍ قَالَ ابْنُ الْمُثَنَّى حَدَّثَنَا مُحَمَّدُ بْنُ جَعْفَرٍ، حَدَّثَنَا شُعْبَةُ، عَنْ إِبْرَاهِيمَ بْنِ الْمُهَاجِرِ، قَالَ سَمِعْتُ صَفِيَّةَ، تُحَدِّثُ عَنْ عَائِشَةَ، أَنَّ أَسْمَاءَ، سَأَلَتِ النَّبِيَّ صلى الله عليه وسلم عَنْ غُسْلِ الْمَحِيضِ فَقَالَ " تَأْخُذُ إِحْدَاكُنَّ مَاءَهَا وَسِدْرَتَهَا فَتَطَهَّرُ فَتُحْسِنُ الطُّهُورَ ثُمَّ تَصُبُّ عَلَى رَأْسِهَا فَتَدْلُكُهُ دَلْكًا

شَدِيدًا حَتَّى تَبْلُغَ شُئُونَ رَأْسِهَا ثُمَّ تَصُبُّ عَلَيْهَا الْمَاءَ . ثُمَّ تَأْخُذُ فِرْصَةً مُمَسَّكَةً فَتَطَهَّرُ بِهَا " . فَقَالَتْ أَسْمَاءُ وَكَيْفَ تَطَهَّرُ بِهَا فَقَالَ " سُبْحَانَ اللَّهِ تَطَهَّرِينَ بِهَا " . فَقَالَتْ عَائِشَةُ كَأَنَّهَا تُخْفِي ذَلِكَ تَتَبَّعِينَ أَثَرَ الدَّمِ . وَسَأَلَتْهُ عَنْ غُسْلِ الْجَنَابَةِ فَقَالَ " تَأْخُذُ مَاءً فَتَطَهَّرُ فَتُحْسِنُ الطُّهُورَ - أَوْ تُبْلِغُ الطُّهُورَ - ثُمَّ تَصُبُّ عَلَى رَأْسِهَا فَتَدْلُكُهُ حَتَّى تَبْلُغَ شُئُونَ رَأْسِهَا ثُمَّ تُفِيضُ عَلَيْهَا الْمَاءَ " . **فَقَالَتْ عَائِشَةُ نِعْمَ النِّسَاءُ نِسَاءُ الأَنْصَارِ لَمْ يَكُنْ يَمْنَعُهُنَّ الْحَيَاءُ أَنْ يَتَفَقَّهْنَ فِي الدِّينِ .**

****552.** ஆயிஷா (ரலி) அவர்கள் கூறியதாவது:அஸ்மா பின்த் ஷகல் (ரலி) அவர்கள் நபி (ஸல்) அவர்களிடம், மாதவிடாய்க் குளியல் பற்றிக் கேட்டார். அதற்கு நபி (ஸல்) அவர்கள், உங்களில் ஒருவர் (மாதவிடாய்க் குளியலின் போது) தண்ணீரையும் இலந்தை இலைகளையும் எடுத்து நன்கு சுத்தம் செய்துகொள்ளட்டும். பிறகு தலைக்குத் தண்ணீர் ஊற்றி நன்றாகத் தேய்த்து தலையின் சருமம் நனையும்வரைக் கழுவட்டும். பிறகு உடம்புக்குத் தண்ணீர் ஊற்றட்டும். அதன் பின்னர் கஸ்தூரி தடவப்பட்ட பஞ்சுத்துண்டு ஒன்றை எடுத்து சுத்தம் செய்துகொள்ளட்டும் என்று சொன்னார்கள். அதற்கு அஸ்மா (ரலி) அவர்கள், அதை வைத்து அவள் எவ்வாறு சுத்தம் செய்வாள்? என்று கேட்டார்கள். நபி (ஸல்) அவர்கள், சுப்ஹானல்லாஹ் (அல்லாஹ் தூயவன்!). அதனால் சுத்தம் செய்துகொள்ளட்டும் என்று (மீண்டும்) சொன்னார்கள். உடனே நான், இரத்தம் படிந்த இடத்தில் தடவிக்கொள் என்று -பிறர் காதில் விழாதவாறு அதை இரகசியமாகச்- சொன்னேன். மேலும், அஸ்மா நபி (ஸல்) அவர்களிடம், பெருந்துடக்கிற்காகக் குளிக்கும் முறை பற்றிக் கேட்டார். அதற்கு அவர்கள்,தண்ணீர் எடுத்து நன்கு சுத்தம் செய்துகொள். பிறகு தலைக்குத் தண்ணீர் ஊற்றி தலையின் சருமம் நனையும் அளவுக்கு நன்கு தேய்த்துக்கொள். பின்னர் உன் (மேனியின்) மீது தண்ணீர் ஊற்று! என்றார்கள். **ஆயிஷா (ரலி) அவர்கள் கூறினார்கள்: பெண்களிலேயே மிகச் சிறந்தவர்கள் அன்சாரிப் பெண்களாவர். மார்க்கத்தை விளங்கிக் கொள்வதில் வெட்கம் அவர்களுக்குத் தடையாக இருந்ததில்லை.** Book : 3 - ஸஹீஹ் முஸ்லிம்

* http://sunnah.com/muslim/3/72

** http://www.tamililquran.com/muslimdisp.php?start=552

அன்ஸாரி பெண்கள் அவ்வாறு தேவைக்கு தங்கள் சந்தேகங்களை ரஸூலுல்லாஹ் صَلَّى الله عَلَيْهِ وَسلَّمَ அவர்களிடம் கேட்டுச் செல்வார்கள். எனவே இதுபற்றி நாம் கூறுவது கொண்டு வெட்கப்பட வேண்டாம். வெடக்கத்தைத் தடையாக நீங்கள் ஆக்க வேண்டும்.

## அசுத்தங்கள்

**1. மனிதனுடைய மல ஜலம், முன் துவாரத்திலிருந்து வரும் இச்சை நீர், முன் மற்றும் பின் துவாரங்களிலிருந்து வரும் இரத்தம்** அனைத்தும் அசுத்தம்.

புஹாரி 216

مَرَّ النَّبِيُّ صلى الله عليه وسلم بِحَائِطٍ مِنْ حِيطَانِ الْمَدِينَةِ أَوْ مَكَّةَ، فَسَمِعَ صَوْتَ إِنْسَانَيْنِ يُعَذَّبَانِ فِي قُبُورِهِمَا، فَقَالَ النَّبِيُّ صلى الله عليه وسلم " يُعَذَّبَانِ، وَمَا يُعَذَّبَانِ فِي كَبِيرٍ "، ثُمَّ قَالَ " بَلَى، كَانَ أَحَدُهُمَا لاَ يَسْتَتِرُ مِنْ بَوْلِهِ، وَكَانَ الآخَرُ يَمْشِي بِالنَّمِيمَةِ ". ثُمَّ دَعَا بِجَرِيدَةٍ فَكَسَرَهَا كِسْرَتَيْنِ، فَوَضَعَ عَلَى كُلِّ قَبْرٍ مِنْهُمَا كِسْرَةً. فَقِيلَ لَهُ يَا رَسُولَ اللَّهِ لِمَ فَعَلْتَ هَذَا قَالَ " لَعَلَّهُ أَنْ يُخَفَّفَ عَنْهُمَا مَا لَمْ تَيْبَسَا أَوْ إِلَى أَنْ يَيْبَسَا ".

**பாடம் : 55 சிறுநீரிலிருந்து (உடையையும் உடலையும்) மறைக்காமலிருப்பது பெரும் (பாவச்) செயல்களில் ஒன்றாகும். 216.** நபி (ஸல்) அவர்கள் மக்கா அல்லது மதீனாவில் ஒரு தோட்டத்தின் பக்கமாகச் சென்று கொண்டிருந்தபோது, கப்ரில் வேதனை செய்யப்படும் இரண்டு மனிதர்களின்

சப்கக்கைச் செவியுற்றார்கள். அப்போகு, 'இவர்கள் இருவரும் வேகனை செய்யப்படுகிறார்கள். ஒரு பெரிய விஷயக்கிற்காக (பாவக்கிற்காக) இவர்கள் இருவரும் வேகனை செய்யப்படவில்லை' என்று சொல்லிவிட்டு, 'இருப்பினும் (அகு பெரிய விஷயம்கான்) அவ்விருவரில் ஒருவர், காம் சிறு நீர் கழிக்கும்போகு மறைப்பகில்லை. மற்றொருவர், புறம்பேசிக் கிரிந்கார்' என்று கூறிவிட்டு ஒரு பேரீச்ச மட்டையைக் கொண்டு வரச் சொல்லி அகை இரண்டாகப் பிளந்து ஒவ்வொரு கப்ரின் மீகும் ஒரு குண்டை வைக்கார்கள். அகு பற்றி நபி(ஸல்) அவர்களிடம் 'நீங்கள் ஏன் இவ்வாறு செய்கீர்கள்?' என்று கேட்கப்பட்டகற்கு, 'அந்க இரண்டு மட்டைக் குண்டுகளும் காயாமல் இருக்கும் போகெல்லாம் அவர்கள் இருவரின் வேகனை குறைக்கப்படக் கூடும்' என்று இறைத்தூதர்(ஸல்) அவர்கள் கூறினார்கள்: என இப்னு அப்பாஸ்(ரலி) அறிவித்தார். Book : 4 - **ஸஹீஹுல் புகாரி**

சிறுநீர் அசுத்தம் என்பது இதிலிருந்து விளங்குகிறது.

புஹாரி 307

سَأَلَتِ امْرَأَةٌ رَسُولَ اللَّهِ صلى الله عليه وسلم فَقَالَتْ يَا رَسُولَ اللَّهِ، أَرَأَيْتَ إِحْدَانَا إِذَا أَصَابَ ثَوْبَهَا الدَّمُ مِنَ الْحَيْضَةِ، كَيْفَ تَصْنَعُ فَقَالَ رَسُولُ اللَّهِ صلى الله عليه وسلم " إِذَا أَصَابَ ثَوْبَ إِحْدَاكُنَّ الدَّمُ مِنَ الْحَيْضَةِ، فَلْتَقْرُصْهُ ثُمَّ لِتَنْضَحْهُ بِمَاءٍ، ثُمَّ لِتُصَلِّي فِيهِ ".

**பாடம் : 9 மாதவிடாய் இரத்தத்தைக் கழுவுதல். 307.** 'ஒரு பெண் நபி(ஸல்) அவர்களிடம் வந்து, 'இறைத்தூதர் அவர்களே! எங்களில் ஒரு பெண்ணின் துணியில் மாதவிடாய் இரத்தம் பட்டால் அவள் எவ்வாறு (சுத்தம்) செய்ய வேண்டும்?' என்று கேட்டதற்கு, 'உங்களில் ஒருத்தியின் ஆடையில் மாதவிடாய் இரத்தம் பட்டால் அதைச் சுரண்டிவிட்டுப் பின்னர் அந்த இடத்தில் தண்ணீர் தெளித்து விடட்டும். அதன் பின்னர் அந்த ஆடையுடன் தொழுது கொள்ளலாம்' என்று இறைத்தூதர்(ஸல்) அவர்கள் கூறினார்கள்: என அஸ்மா பின்த் அபீ பக்ர்(ரலி) அறிவித்தார். Book : 6 - **ஸஹீஹுல் புகாரி**

**308.** எங்களில் ஒருவருக்கு மாதவிடாய் ஏற்படும்போது அவர் தன்னுடைய ஆடையில் இரத்தம் பட்ட இடத்தைச் சுத்தம் செய்வதற்காகஆடையிலிருந்து இரத்ததைச் சுரண்டிவிட்டு, அந்த இடத்தைக் கழுவியப் பின்னர் ஆடையின் இதர இடங்களிலும் தண்ணீர் தெளித்து அந்த ஆடையுடன் தொழுவார்' என ஆயிஷா (ரலி) அறிவித்தார். Book :6 - **ஸஹீஹுல் புகாரி**

இது குறித்துதான் அன்னை ஆயிஷா رَضِيَ الله عَنْهَا அவர்கள் அன்ஸாரி பெண்கள் சிறந்தவர்கள் எனக் கூறினார்கள். இரத்தம் அசுத்தம் என்பது இதிலிருந்து அறியலாம்.

இச்சை நீர் இரண்டு வகைப்படும். ஒன்று வதி என்பது. (ودي). சிறுநீர் கழித்த பிறகு, வெளியேறக் கூடிய வெள்ளை நிற நீர், ஓரிரண்டு சொட்டுகள். இது அசுத்தம் என்பது அறிஞர்களின் ஒருமித்த இஜ்மா ஆகும். மற்றொரு இச்சை நீர் மதி (مذي) இது இச்சை ஏற்படும்போது, உதாரணமாக கணவன், மனைவி முத்தமிடும்போது அல்லது கட்டி அணைக்கும் போது, நம்மை அறியாமல் வெளிவரும் நீர் இது ஆகும். இது அசுத்தம் என்பதால், அது எங்கெல்லாம் பட்டிருக்கிறதோ, அங்கெல்லாம் கழுவ வேண்டும்.

புஹாரி 178

قَالَ عَلِيٌّ كُنْتُ رَجُلاً مَذَّاءً، فَاسْتَحْيَيْتُ أَنْ أَسْأَلَ رَسُولَ اللَّهِ صلى الله عليه وسلم فَأَمَرْتُ الْمِقْدَادَ بْنَ الأَسْوَدِ فَسَأَلَهُ فَقَالَ " فِيهِ الْوُضُوءُ "

**178.** 'மதி எனும் காம நீர் வெளியாகும் ஆடவனாக இருந்தேன். (அததைப் பற்றி) கேட்க வெட்கப்பட்டு, மிக்தாத் என்பவரை நபி(ஸல்) அவர்களிடம் கேட்குமாறு பணித்தேன். அவர் அது பற்றி அவர்களிடம் கேட்டதற்கு, 'அதற்காக உளூச் செய்வதுதான் கடமை. (குளிக்க வேண்டிய

கட்டாயமில்லை)' என்று இறைத்தூதர்(ஸல்) அவர்கள் கூறினார்கள்: என அலீ(ரலி) அறிவித்தார். Book :4 - ஸஹீஹுல் புகாரி

மதி பற்றி ரஸுலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ அவர்களிடம் கேட்கப்பட்டபோது, "உளூ செய்து கொள்ளுங்கள்" எனக் கூறினார்கள். இது விஷயத்திலும் இஜ்மா உள்ளது.

**2. வடியும் இரத்தம்:** ஆடு, மாடுகளை அறுக்கும் போது வடியும் இரத்தம் அசுத்தமானது.

**3. இறந்தவை** அனைத்தும் அசுத்தமானது. இவைகளுக்கு ஆதாரங்கள்:

ஸூரத்துல் பகரா (பசு மாடு)

**2:173** اِنَّمَا حَرَّمَ عَلَيْكُمُ الْمَيْتَةَ وَالدَّمَ وَلَحْمَ الْخِنْزِيْرِ وَمَآ اُهِلَّ بِهٖ لِغَيْرِ اللّٰهِۚ فَمَنِ اضْطُرَّ غَيْرَ بَاغٍ وَّلَا عَادٍ فَلَاۤ اِثْمَ عَلَيْهِؕ اِنَّ اللّٰهَ غَفُوْرٌ رَّحِيْمٌ

**2:173.** தானாகவே செத்ததும், இரத்தமும், பன்றியின் மாமிசமும், அல்லாஹ் அல்லாத பெயர் சொல்லப்பட்டதும் ஆகியவைகளைத்தான் உங்கள் மீது ஹராமாக ஆக்கியிருக்கிறான்; ஆனால் எவரேனும் பாவம் செய்யாத நிலையில் - வரம்பு மீறாமல் (இவற்றை உண்ண) நிர்ப்பந்திக்கப்பட்டால் அவர் மீது குற்றமில்லை; நிச்சயமாக அல்லாஹ் கருணைமிக்கோனும், மன்னிப்பவனுமாக இருக்கின்றான்.

ஸூரத்துல் அன்ஆம் (ஆடு, மாடு, ஒட்டகம்)

**6:145** قُل لَّاۤ اَجِدُ فِىْ مَاۤ اُوْحِىَ اِلَىَّ مُحَرَّمًا عَلٰى طَاعِمٍ يَّطْعَمُهٗۤ اِلَّاۤ اَنْ يَّكُوْنَ مَيْتَةً اَوْ دَمًا مَّسْفُوْحًا اَوْ لَحْمَ خِنْزِيْرٍ فَاِنَّهٗ رِجْسٌ اَوْ فِسْقًا اُهِلَّ لِغَيْرِ اللّٰهِ بِهٖۚ فَمَنِ اضْطُرَّ غَيْرَ بَاغٍ وَّلَا عَادٍ فَاِنَّ رَبَّكَ غَفُوْرٌ رَّحِيْمٌ

**6:145.** (நபியே!) நீர் கூறும்: "தானாக இறந்தவைகளையும் வடியும் இரத்தத்தையும் பன்றியின் மாமிசத்தையும் தவிர உண்பவர்கள் புசிக்கக் கூடியவற்றில் எதுவும் தடுக்கப்பட்டதாக எனக்கு அறிவிக்கப்பட்டதில் நான் காணவில்லை" - ஏனெனில் இவை நிச்சயமாக அசுத்தமாக இருக்கின்றன. அல்லது அல்லாஹ் அல்லாதவற்றின் பெயர் சொல்லி அறுக்கப்பட்டது பாவமாயிருப்பதனால் - (அதுவும் தடுக்கப்பட்டுள்ளது) - ஆனால் எவரேனும் நிர்ப்பந்திக்கபட்டு, வரம்பை மீறாமலும் பாவம் செய்ய நினைக்காமலும் புசித்துவிட்டால் - (அவர்மீது குற்றமாகாது ஏனெனில்) நிச்சயமாக உங்கள் இறைவன் மிக்க மன்னிப்போனாகவும், பெருங் கருணையுடையோனுமாகவும் இருக்கின்றான்.

இறந்தவை பற்றிய கூடுதலான விஷயம், உயிரோடு இருக்கும் நிலையில் ஒரு விலங்கிலிருந்து எடுக்கப்பட்ட ஒரு பங்கு மாமிசம் அசுத்தமானதாகும்.

திர்மிதி 1480

قَالَ قَدِمَ النَّبِيُّ صلى الله عليه وسلم الْمَدِينَةَ وَهُمْ يَجُبُّونَ أَسْنِمَةَ الإِبِلِ وَيَقْطَعُونَ أَلْيَاتِ الْغَنَمِ قَالَ " مَا قُطِعَ مِنَ الْبَهِيمَةِ وَهِيَ حَيَّةٌ فَهُوَ مَيْتَةٌ " .

மதினாவுக்கு ரஸுலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ அவர்கள் வந்தபோது, அங்குள்ள மக்கள் ஒட்டகத் திமிலின் ஒரு பகுதியை, மற்றும் ஆட்டின் தொடையை வெட்டுவது பழக்கமாகக் கொண்டிருந்தனர். அவர்கள் கூறினார்கள், "உயிரோடு இருக்கும் ஒரு விலங்கிலிருந்து எடுக்கப்படும் எந்த ஒன்றும் இறந்ததாகும்."

**4. பன்றி மற்றும் நாயின் எச்சில்.** பன்றி குறித்து ஏற்கனவே அத்தியாயம் அன்ஆம் 145ல் கூறப்பட்டுள்ளது.

புஹாரி 172

ال إِنَّ رَسُولَ اللَّهِ صلى الله عليه وسلم قَالَ " إِذَا شَرِبَ الْكَلْبُ فِي إِنَاءِ أَحَدِكُمْ فَلْيَغْسِلْهُ سَبْعًا ".

**172.** 'உங்களில் ஒருவரின் (தண்ணீர்) பாத்திரத்தில் நாய் குடித்தால் அவர் அப்பாத்திரத்தை ஏழு முறை கழுவட்டும்' இறைத்தூதர்(ஸல்) அவர்கள் கூறினார்கள்: என்று என அபூ ஹுரைரா(ரலி) அறிவித்தார் Book :4 - **ஸஹீஹுல் புகாரி**

முஸ்லிம் 279*

حَدَّثَنَا مُحَمَّدُ بْنُ رَافِعٍ، حَدَّثَنَا عَبْدُ الرَّزَّاقِ، حَدَّثَنَا مَعْمَرٌ، عَنْ هَمَّامِ بْنِ مُنَبِّهٍ، قَالَ هَذَا مَا حَدَّثَنَا أَبُو هُرَيْرَةَ، " عَنْ مُحَمَّدٍ، رَسُولِ اللَّهِ صلى الله عليه وسلم . فَذَكَرَ أَحَادِيثَ مِنْهَا وَقَالَ رَسُولُ اللَّهِ صلى الله عليه وسلم طُهُورُ إِنَاءِ أَحَدِكُمْ إِذَا وَلَغَ الْكَلْبُ فِيهِ أَنْ يَغْسِلَهُ سَبْعَ مَرَّاتٍ "

**279d* (471**).** அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: நாய் வாய்வைத்துவிட்ட உங்களது பாத்திரத்தைச் சுத்தம் செய்யும் முறை யாதெனில், அதை ஏழு தடவை தண்ணீரால் கழுவுவதாகும். முதல் தடவை மண்ணிட்டுக் கழுவ வேண்டும். இதை அபூஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள். Book : 2 - **ஸஹீஹ் முஸ்லிம்**

* http://sunnah.com/muslim/2/117

** http://www.tamililquran.com/muslimdisp.php?start=471

**5. உண்ண அனுமதிக்கப்படாத விலங்குகளின் மல ஜலம்**: அவற்றின் சிறு நீர், சாணி, மற்றும் விட்டை ஆகியன நஜீஸ் ஆகும்.

புஹாரி 155

قَالَ اتَّبَعْتُ النَّبِيَّ صلى الله عليه وسلم وَخَرَجَ لِحَاجَتِهِ، فَكَانَ لاَ يَلْتَفِتُ فَدَنَوْتُ مِنْهُ فَقَالَ " ابْغِنِي أَحْجَارًا أَسْتَنْفِضْ بِهَا ـ أَوْ نَحْوَهُ ـ وَلاَ تَأْتِنِي بِعَظْمٍ وَلاَ رَوْثٍ "

**பாடம் : 20 கற்களால் (துடைத்து) சுத்தம் செய்தல். 155.** 'நபி (ஸல்) அவர்கள் இயற்கைத் தேவைக்காக வெளியே சென்றபோது அவர்களைத் தொடர்ந்து சென்றேன். அவர்கள் திரும்பிப் பார்க்காமலேயே சென்றார்கள். அவர்களின் அருகில் நான் சென்றபோது, 'சுத்தம் செய்வதற்காக எனக்குச் சில கற்களைக் கொண்டு வாரும். எலும்புகளையோ, விட்டையையோ கொண்டு வரவேண்டாம்' என்று கூறினார்கள். நான் (கற்களைப் பொறுக்கி) என்னுடைய ஆடையின் ஓரத்தில் எடுத்துக் கொண்டு வந்து நபி(ஸல்) அவர்களின் பக்கத்தில் வைத்துவிட்டுத் திரும்பினேன். நபி(ஸல்) அவர்கள் மலஜலம் கழித்த பின்னர் அக்கற்களால் சுத்தம் செய்தார்கள்' என அபூ ஹுரைரா(ரலி) அறிவித்தார். Book : 4 - **ஸஹீஹுல் புகாரி**

புஹாரி 156

أَنَّهُ سَمِعَ عَبْدَ اللَّهِ، يَقُولُ أَتَى النَّبِيُّ صلى الله عليه وسلم الْغَائِطَ، فَأَمَرَنِي أَنْ آتِيَهُ بِثَلاَثَةِ أَحْجَارٍ، فَوَجَدْتُ حَجَرَيْنِ، وَالْتَمَسْتُ الثَّالِثَ فَلَمْ أَجِدْهُ، فَأَخَذْتُ رَوْثَةً، فَأَتَيْتُهُ بِهَا، فَأَخَذَ الْحَجَرَيْنِ وَأَلْقَى الرَّوْثَةَ وَقَالَ " هَذَا رِكْسٌ "

**பாடம் : 21 கெட்டிச் சாணத்தின் மூலம் துப்புரவு செய்யக்கூடாது.** **156.** 'நபி (ஸல்) அவர்கள் கழிப்பிடத்திற்குச் சென்றபோது, மூன்று கற்களைக் கொண்டு வருமாறு எனக்குக் கட்டளையிட்டார்கள். நான் இரண்டு கற்களைப் பெற்றுக் கொண்டேன். மூன்றாவது கல்லைத் தேடிப் பார்த்தேன். கிடைக்கவில்லை. ஒரு விட்டையை எடுத்துக் கொண்டு வந்தேன். அவர்கள் விட்டையை எறிந்துவிட்டு 'இது அசுத்தமானது' என்று கூறினார்கள்' என அப்துல்லாஹ் இப்னு மஸ்வூத்(ரலி) அறிவித்தார். Book : 4 - **ஸஹீஹுல் புகாரி**

மற்றொரு அறிவிப்பின்படி 'கழுதையின் விட்டை' என்று சொன்னதாக உள்ளது. கழுதை சம்பந்தப்பட்ட தனி ஹதீது உள்ளது. அதன் அடிப்படையில் ஹராமாக்கப்பட்ட மற்ற விலங்குகளின் மலஜலங்களும் அசுத்தம் என்று கியாஸ் என்ற முறையில் சில அறிஞர்கள் கூறுகிறார்கள்.

**Fiqh 4 - Laws of Purity - 3 (These are not Impurities)**

# ஃபிக்ஹ் வகுப்பு 4 - தூய்மையின் சட்டங்கள் -3 (இவைகள் அசுத்தங்கள் அல்ல)

**ஆசிரியர்: அஷ் ஷெய்க் உவைஸ் உமரி நஸீரி**

நாம் முன்னர் கூறியபடி, குர்ஆனிலும், ஹதீதுகளிலும் எவற்றை நஜீஸ் என்று சொல்லியிருக்கிறார்களோ, அவற்றை மட்டும் தான் நாம் நஜீஸாக எடுத்துக் கொள்ள வேண்டும். எவற்றைப் பற்றி நஜீஸ் என்று கூறப்படவில்லையோ, அவற்றை எல்லாம் நாம் சுத்தமாகத்தான் எடுத்துக் கொள்ள வேண்டும். இதுதான் சரியான கருத்தும், அடிப்படையான சட்டமாகும்.

கீழே பட்டியலில் குறிப்பிட்டவை எல்லாம் அசுத்தமானது என்பதற்கான தெளிவான ஆதாரங்கள் இல்லை. ஓரிரண்டு பொருட்கள் குறித்து கருத்து வேறுபாடுகள் இருந்தாலும், அவை அசுத்தம்தான் என்பாதற்கான தெளிவான ஆதாரங்கள் ஏதும் இல்லை. அந்த சில பொருட்கள் அசுத்தம் என்பதும் சரியானதாக இருக்கலாம். அவை குறித்து தெளிவான ஆதாரம் இல்லை என்ற காரணத்தால் அவை சுத்தம் என்ற கருத்தும் சரியானதாக இருக்கலாம். மற்றவற்றில் அசுத்தமானது என்பதற்கு எந்த வித ஆதாரங்களும் இல்லை என்பதால் அவற்றை நாம் சுத்தமானதுதான் என்று எடுத்துக் கொள்ள வேண்டும்.

முதலாவதாக, மனிதனின் **வாந்தி** அசுத்தம் என்று கூறுவதற்கு எந்த தெளிவான ஆதாரமும் இல்லை. ஆனால் ஒரு அறிவிப்பின்படி அம்மார் பின் யாஸிர் رَضِيَ اللهُ عَنْهُ கூறுவதாவது, “நாங்கள் ஆடையில் சிறுநீர், இச்சை நீர் (மதி) போன்றவை பட்டால் எப்படி கழுவுகிறோமோ, அதனைப் போல்தான் வாந்தியையும் கழுவுவோம்.” இந்த ஹதீதின்படி, சில அறிஞர்கள், இவற்றுடன் வாந்தியைக் குறிப்பிட்டுள்ளதால், வாந்தியும் அசுத்தம்தான் என்று கூறுவார்கள். ஆனால் இந்த அறிவிப்பானது பலவீனமான அறிவிப்பாகும். இந்த அறிவிப்பை ஆதாரமாகக் கொண்டு வாந்தியை அசுத்தம் எனக் கூற முடியாது. எனினும் வாந்தி சுத்தமானதுதான். சுத்தமானது என்றாலும், வாந்தி பட்டால் கழுவக் கூடாது என்பது அல்ல. நமக்கு அறுவறுப்பாகத் தோன்றலாம். எனவே அதனைக் கழுவலாம். மனிதனுடைய எச்சில், சளி போன்றவை சுத்தமானதுதான். எச்சில் சுத்தமானதுதான் என்பததால்தான் நாம் அதனை விழுங்கிவிடுகிறோம். அசுத்தம் என்றிருந்தால், அது ஊற ஊற நாம் வெளியில் துப்பிக் கொண்டிருக்க வேண்டியதிருக்கும். அதுபோல, சளி அசுத்தம் என்று சொல்லப்படவில்லை. எனினும் எச்சிலோ, அல்லது சளியோ பட்டுவிட்டால், நாம் கழுவத்தான் செய்வோம். அதுபோல வாந்தி எடுத்து அதனைக் கழுவுவதால் அதனை அசுத்தம் என்று சொல்ல முடியாது. வாந்தி நம் உடலிலோ, அல்லது ஆடையிலோ பட்டு, நாம் அதனைக் கழுவாமல், தொழுதால், அந்தத் தொழுகை மற்ற நிபந்தனைகள் சரியாக இருந்தால் ஏற்றுக் கொள்ளப்படும். வாந்தியின் காரணமாக தொழுகை ஏற்றுக் கொள்ளப்படாமல் போகாது.

இரண்டாவது **மனிதனின் விந்து (மனி).** அத்தியாயம் குர்ஆனில் குதித்துவரும் நீர் என்று சொல்லப்படுவது இது ஆகும். வெண்ணிறமானது. இதுவும் முன்னர் சொல்லப்பட்ட மதி நீரைப் போல இச்சை நீர்தான். இரண்டுக்கும் உள்ள வேறுபாடு, மதி வெளியேறும்போது நாம் உணர மாட்டோம். அதற்கு உளூ செய்தாலே சுத்தமாகிவிடுவோம். ஆனால் இதற்கு குளிப்பு கடமையாகவிடும். மேலும் மதி வெளியேறினால் இச்சை முடிவடையாது. ஆனால் விந்து வெளியேறிவிட்டதும் இச்சை முடிவு பெறும். இதனை அசுத்தம் என்று கூற முடியாது. அவ்வாறு கூறுவதற்குத் தெளிவான ஆதாரம் இல்லை. எப்படி மதியைக் குறித்தும், மற்ற அசுத்தங்களைக் குறித்து தெளிவாக அவற்றைக் கழுவ வேண்டும் என ரஸூலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ கூறியுள்ளார்களோ, அதைப் போல விந்து பட்டால்

கழுவ வேண்டும் என்று சொல்லவில்லை. விந்து குறித்து குளிப்பு கடமை ரஸுலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ என்று தெளிவாக சொன்னாலும், அது அசுத்தம் எனவோ, அதனைக் கழுவ வேண்டும் எனவே கூறவில்லை. அதே நேரத்தில் அது அசுத்தமானது அல்ல என்று ஒரு சில ஆதாரங்களை ஹதீது கலை வல்லுநர்கள் கூறியுள்ளார்கள். உதாரணமாக, இமாம் ஷா.ஃ.பியி رَحْمَةُ اللهُ عَلَيْهِ , இமாம் அஹ்மது பின் ஹன்பல் رَحْمَةُ اللهُ عَلَيْهِ ஆகியோர். அவர்கள் கொடுக்கக் கூடிய ஆதாரம் முஸ்லிம 288 அன்னை ஆயிஷா رَضِيَ اللهُ عَنْهَا அறிவிக்கிறார்கள்,

عَنْ عَائِشَةَ، فِي الْمَنِيِّ قَالَتْ كُنْتُ أَفْرُكُهُ مِنْ ثَوْبِ رَسُولِ اللَّهِ صلى الله عليه وسلم .

**பாடம் : 32 விந்து பற்றிய சட்டம். 485.** அல்கமா (ரஹ்) மற்றும் அஸ்வத் (ரஹ்) ஆகியோர் கூறியதாவது: ஒரு மனிதர் (அன்னை) ஆயிஷா (ரலி) அவர்களிடம் (விருந்தினராகத்) தங்கினார். அவர் காலையில் தமது ஆடையைக் கழுவினார். (இதைக் கண்ட) ஆயிஷா (ரலி) அவர்கள், அது உமது ஆடையில் தென்பட்டால் அந்த இடத்தைக் கழுவினால் போதும். அவ்வாறு அது தென்படாவிட்டால் அந்த இடத்தைச் சுற்றிலும் தண்ணீர் தெளித்துவிடுவீராக! நான் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களின் ஆடையில்பட்ட இந்திரியத்தை நன்கு சுரண்டிவிடுவேன். அந்த ஆடையை அணிந்துகொண்டு அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் தொழுவார்கள் என்று கூறினார்கள். இந்த ஹதீஸ் இரு அறிவிப்பாளர்தொடர்களில் வந்துள்ளது. Book : 2 - **ஸஹீஹ் முஸ்லிம்**

**486.** அஸ்வத் (ரஹ்) மற்றும் ஹம்மாம் பின் முனப்பிஹ் (ரஹ்) ஆகியோர் கூறியதாவது: இந்திரியம் பற்றி ஆயிஷா (ரலி) அவர்கள் கூறுகையில், அதை நான் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களின் ஆடையிலிருந்து சுரண்டிவிடுவேன் என்று குறிப்பிட்டார்கள். Book : 2 - **ஸஹீஹ் முஸ்லிம்**

இவ்வாறு சுரண்டி எடுக்கும்போது, அது முழுவதும் வந்து விடும் என்று சொல்ல முடியாது. தண்ணீரைப் பயன்படுத்தினால்தான் முழுமையாக அகற்ற முடியும். ஒரு சில அறிவுப்புகளின்படி, ஈராமாக இருக்கும் நிலையிலும் கழுவுவார்கள் என்று சொல்லப்படாமல், விரலால் அல்லது மற்றொரு துணியைக் கொண்டு அகற்றி விடுவார்கள் எனவும், அத்துடன் தொழவும் செய்வார்கள் என வந்துள்ளது. கழுவி விடுவார்கள் என்று சொல்லப்படவில்லை. அதனை அசுத்தமாக இருந்தால் கட்டாயம் கழுவச் சொல்லியிருப்பார்கள். இது அசுத்தமானது என்று சொல்லக் கூடிய சில ஸஹாபாக்களின் கருத்துகளும் உள்ளன. உதாரணமாக, இப்னு அப்பாஸ் கூறியதாக, ஷைக் அல்பானி رَحْمَةُ اللهُ عَلَيْهِ *அல்ஸில்ஸிலதுல் ஸஹீஹா.ஃ.பா* என்ற நூலின்' 948 ஆம் ஹதீதாகக் கூறியுள்ளார்கள். இப்னு அப்பாஸ் கூறியதாவது, 'இந்த விந்தானது, எச்சில் அல்லது சளி மாதிரிதான்.' நாம் முன்னர் கூறியது போல, அவை இரண்டும் சுத்தமானது. அது போன்றுதான் இதுவும் சுத்தமானதுதான். அன்னை ஆயிஷா رَضِيَ اللهُ عَنْهَا அவர்களும், அலி அவர்களும் இதே போன்ற கருத்தைச் சொல்லியுள்ளார்கள். இது குறித்து அசுத்தமானது என்று சொல்லப்பட்ட கருத்தும் சரியானதாக இருக்கலாம். ஹதீதுகலை வல்லுநர்களின் கருத்தும் சரியானதாக இருக்கலாம். அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَى வே மிகவும் அறிந்தவன். எதனை எடுத்துக் கொண்டாலும், ஈரமாக இருந்தால் கழுவி விடலாம். காய்ந்திருந்தால் சுரண்டி எடுத்துவிடலாம். இவற்றிற்கு ஆதாரம் உள்ளது.

மூன்றாவது, பெண்களுக்கு வெளியேறக் கூடிய **வெள்ளை நிற நீர்.** (வெள்ளைப்படுதல்). இது அசுத்தமானது என்பதற்கு ஆதாரம் ஏதும் இல்லை. அவ்வாறிருந்தால் இது குறித்து ரஸுலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ அவர்கள் தெளிவாகச் சொல்லியிருப்பார்கள். அதனைக் கழுவ வேண்டும் என்பது கட்டாயமில்டலை. எனவே அது பட்ட உடையுடன் தொழுவது கூடாது எனச் சொல்ல முடியாது.

அவ்வாறு தொழுதால் தொழுகை நிறைவேறிவிடும். அது வெளியேறினால், உளூ முறிந்துவிடும். அதுபற்றி பின்னர் கூறப்படும்.

நான்காவதாக, **கறியோடு ஒட்டிருக்கும் இரத்தம்** அசுத்தமானது அல்ல. சுத்தமானதுதான். அத்துடன் வேகவைத்த கறியை உண்பது ஹலால் தான். ஆனால் நாம் முன்னர் சொன்னதுபோல, ஓடக்ககூடிய, வடியக் கூடிய இரத்தம் அசுத்தமானதுதான். அந்த இரத்தத்தைப் பிடித்து, காய வைத்து சாப்பிடுவது போன்றவை ஹராமாகும். ஒட்டியிருக்கும் இரத்தம் சுத்தமானது என்று சொல்வதற்கு ஆதாரம் தேவையில்லை. அதனைச் சாப்பிடலாம் என்பதற்கு ஆதாரம் என்ன? மண், இரும்பு ஆகிய சுத்தம்தான், ஆனாலும் சாப்பிட முடியாது. ஆனால் சாப்பிடக் கூடியது சுத்தமாக இருக்க வேண்டும். அதற்காகத்தான் ஆதாரம் கொடுக்கப்படுகிறது.

கைபர் போருக்கு முன்னால் இரண்டு விஷயங்கள் ஹலாலாக இருந்தன். ஒன்று முத்தஆ (தற்காலிகத் திருமணம்) மற்றொன்று கோவேறுக் கழுதை உண்பது. ஆனால் கைபர் போரின்போது, ரஸுலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ அவர்களால் இரண்டும் ஹராமாக்கப்பட்டது. அறிவிப்பு வந்த நேரத்தில், ஸஹாக்கள் கோவேறு கழுதையின் கறியினை வேக வைத்துக் கொண்டிருந்தார்கள். அதனோடு சேர்ந்த இரத்தம் குழம்பில் கொதித்துக் கொண்டிருந்தது. ஆனால் ஹராம் என்று தெரிந்த பிறகு, அதனை அவர்கள் கொட்டி விட்டார்கள். எனினும் கறியுடன் ஒட்டியிருக்கும் இரத்தத்தைச் சாப்பிடலாம் என்பதற்கு இது ஒரு ஆதாரமாகும்.

ஐந்தாவதாக, **உண்ண அனுமதிக்கப்படாத விலங்குகளின் எச்சில்:** இது அசுத்தம் என்பதற்கு எவ்வித ஆதாரமும் இல்லை. நாய் மற்றும் பன்றியின் எச்சிலைத் தவிர. இவை அசுத்தம் என்பதற்கு ஆதாரங்கள் தனிப்பட்டவாறு உள்ளன. மற்றவை சுத்தம் என்பதற்கு ஆதாரம், உதாரணமாக, பூனையின் எச்சில் பற்றிய ஹதீது. அபு தாவூது 76

அன்னை ஆயிஷா رَضِيَ اللهُ عَنْهَا அறிவிக்கிறார்கள்

إِنَّهَا لَيْسَتْ بِنَجَسٍ إِنَّمَا هِيَ مِنَ الطَّوَّافِينَ عَلَيْكُمْ " . وَقَدْ رَأَيْتُ رَسُولَ اللَّهِ صلى الله عليه وسلم يَتَوَضَّأُ بِفَضْلِهَا .

ரஸுலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ கூறியுள்ளார்கள், "பூனை அசுத்தமானது அல்ல. அது உங்களைச் சுற்றி வரும் ஒன்றாகும்." நான் ரஸுலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ பூனை அருந்திய மீதித்தண்ணீரில் உளூ செய்ததைப் பார்த்தேன்."

மற்றுமொரு ஸஹாபியும் இதனை அறிவித்துள்ளார்கள். மற்றுமொரு ஹதீதில் பூனையின் எச்சில் சுத்தமானது என்றும் ரஸுலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ கூறியுள்ளார்கள்.

மற்ற ஹராமான விலங்குகளுக்குத் தனித்தனியாக ஆதாரங்கள் இல்லை என்றாலும், பொதுவாக ஒன்றுக்கு மேற்பட்ட ஆதாரங்கள் உள்ளன. உதாரணமாக *ம.்.ரி.்.பத்துஸ் ஸுனன்* என்ற நூலில் 368ல் பதியப்பட்டுள்ளது. ஸஹாபாக்கள் வினவுவதாவது,

"ரஸுலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ அவர்களே! சின்னஞ்சிறு குட்டைகளில், கோவேறு கழுதை போன்ற விலங்குகள் தண்ணீர் அருத்திச் சென்றால், அந்தத் தண்ணீரில் உளூ செய்யலாமா? அது சுத்தமான தண்ணீர்தானா?" அதற்கு ரஸுலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ அவர்கள், "ஆம், பயன்படுத்தலாம்." என்றார்கள். மேலும் பல ஆதாரங்களில் விலங்குகள், உதாரணமாக சிங்கம் போன்ற விலங்குகள் அருந்திச் சென்றாலும், அந்த எச்சில் அசுத்தமில்லை எனவும்,அதனை நாம் பயன்படுத்தலாம் என்றும் பல ஆதாரங்கள் உள்ளன. எனவே அந்த விலங்குகள் உண்பதற்கு

ஹராமாக இருந்தாலும், அதன் எச்சில் சுத்தமானதுதான். எப்படி ரஸூலுல்லாஹ் صَلَّى اللّٰه عَلَيْهِ وَسَلَّمَ அவர்கள் பூனையைப் பற்றி தெளிவாகச் சொல்லியிருக்கிறார்களோ அப்படியாகும்.

ஆறாவதாக, **இரத்தம் ஓடாத புழு, பூச்சிகள்** உயிரோடு இருக்கும்போதும், இறந்த பின்பும் சுத்தமானவை. அதே போல் கடல் உயிரினங்கள் உயிரோடு இருக்கும் நிலையிலும், இறந்த பின்பும் சுத்தமானவை. முன்பு அசுத்தம் என்று கூறப்பட்ட இறந்தவை என்பவற்றும், இவை இரண்டும் விலக்கானவை. இதற்கான ஆதாரம், இப்னு மாஜாஹ் 3314

அப்துல்லாஹ் இப்னு உமர் رَضِيَ اللّٰه عَنْهُ அறிவிப்பதாவது:

عَنْ عَبْدِ اللَّهِ بْنِ عُمَرَ، أَنَّ رَسُولَ اللَّهِ ـ صلى الله عليه وسلم ـ قَالَ " أُحِلَّتْ لَنَا مَيْتَتَانِ وَدَمَانِ فَأَمَّا الْمَيْتَتَانِ فَالْحُوتُ وَالْجَرَادُ وَأَمَّا الدَّمَانِ فَالْكَبِدُ وَالطِّحَالُ " .

ரஸூலுல்லாஹ் صَلَّى اللّٰه عَلَيْهِ وَسَلَّمَ கூறியுள்ளார்கள்,

“இரண்டு வகையான இறந்த இறைச்சியும், இரண்டு வகையான இரத்தமும் நமக்கு அனுமதியளிக்கப்பட்டுள்ளன. இரண்டு வகையான இறந்த இறைச்சி மீனும், வெட்டுக்கிளியும். இரண்டு வகையான இரத்தம், கல்லீரலும், மண்ணீரலும்.”

ஹலாலாக்கப்பட்டுள்ளதால், அவை சுத்தமாகத்தான் இருக்கும். இரத்தம் ஓடாத அவை சுத்தம் என்றால், அது இரத்தம் ஓடாத மற்றவையும் சுத்தம் என்று எடுத்துக் கொள்ள வேண்டும். ஒன்றை நினைவில் கொள்ள வேண்டும். சுத்தமானது என்பது ஒரு விஷயம், ஆனால் அவை சாப்பிடக் கூடியதா என்பது மற்றொரு விஷயமாகும். எனவே புழு, பூச்சிகள் சுத்தமானது என்றாலும், அதனைச் சாப்பிடக் கூடாது.

அது போல் ஈயைக் குறித்து ஹதீது உள்ளது.

இப்னு மாஜாஹ் 3505

அபு ஹுரைராஹ் رَضِيَ اللّٰه عَنْهُ அறிவிப்பதாவது,

عَنْ أَبِي هُرَيْرَةَ، عَنِ النَّبِيِّ ـ صلى الله عليه وسلم ـ قَالَ " إِذَا وَقَعَ الذُّبَابُ فِي شَرَابِكُمْ فَلْيَغْمِسْهُ فِيهِ ثُمَّ لْيَطْرَحْهُ فَإِنَّ فِي أَحَدِ جَنَاحَيْهِ دَاءً وَفِي الآخَرِ شِفَاءً

ரஸூலுல்லாஹ் صَلَّى اللّٰه عَلَيْهِ وَسَلَّمَ கூறியுள்ளார்கள்,

“ஈ உங்களின் பானத்தில் விழுந்துவிட்டால், அதனை (பானத்தினுள்) அழுத்தி எடுத்து விட்டு, அதனை எறிந்து விடுங்கள். அதன் ஒரு சிறகில் நோயும், மற்ற சிறகில் அதற்கான நிவாரணமும் உள்ளது.” எனவே அது இறந்த நிலையிலும், அதனை அழுத்தி எடுத்து விட்டுப் பின்னர் அந்த பானத்தை அருந்தலாம். ஈயிலும் இரத்தம் ஓடாது. ஆனால் கொசுவில் இரத்தம் ஓடும்.

கடலின் உயிரினங்கள் பற்றிய ஹதீது:

ஸுனன் அந் நஸாயீ 4350

அபு ஹுரைராஹ் رَضِيَ اللّٰه عَنْهُ அறிவிப்பதாவது,

عَنْ أَبِي هُرَيْرَةَ، عَنِ النَّبِيِّ صلى الله عليه وسلم فِي مَاءِ الْبَحْرِ " هُوَ الطَّهُورُ مَاؤُهُ الْحَلاَلُ مَيْتَتُهُ " .

கடல் நீரைப் பற்றி ரஸூலுல்லாஹ் صَلَّى اللّٰه عَلَيْهِ وَسَلَّمَ கூறியுள்ளார்கள்,

“அது சுத்தமானது. அதிலுள்ள இறந்த இறைச்சியும் சுத்தமானதுதான்.”

கடல் நீரின் உப்பு சுத்தமானது. அதனைக் கொண்டு நாம் உளூ சுத்தமானது. அதைப் போல் அதில் உள்ள இறைச்சி இறந்த நிலையிலும் சுத்தமானது.

இறுதியாக, **உண்ண அனுமதிக்கப்பட்ட விலங்குகள், உதாரணமாக ஒட்டகம், ஆகியவற்றின் சிறுநீர், விட்டை, சாணி** போன்றவை, அனைத்தும் சுத்தமானவை. முன்பு கூறப்பட்ட ஹதீதில், உளூ செய்வதற்குக் கொண்டு வரப்பட்ட விட்டை அசுத்தம் என ரஸூலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ கூறியுள்ளதால், அனைத்து விட்டைகளும் அசுத்தம்தான் என சில ஆதாரமாக எடுத்துக் கூறுகிறார்கள். ஆனால் இப்னு ஹுஸைமாஹ் அவர்களின் அறிவிப்பில் அது கழுதையின் விட்டை என அதிகமாகக் கூறப்பட்டுள்ளதால், அது கழுதைக்கு மட்டும் பொருந்தும். எனவே உண்ண அனுமதிக்கப்பட்ட விலங்குகளின் விட்டை சுத்தமாகத்தான் எடுத்துக் கொள்ள வேண்டும். அதற்காக ஆதாரங்கள்:

புஹாரி 5686

அனஸ் رَضِي الله عَنْهُ அறிவிப்பதாவது:

عَنْ أَنَسٍ ـ رضى الله عنه ـ أَنَّ نَاسًا، اجْتَوَوْا فِي الْمَدِينَةِ فَأَمَرَهُمُ النَّبِيُّ صلى الله عليه وسلم أَنْ يَلْحَقُوا بِرَاعِيهِ ـ يَعْنِي الإِبِلَ ـ فَيَشْرَبُوا مِنْ أَلْبَانِهَا وَأَبْوَالِهَا، فَلَحِقُوا بِرَاعِيهِ فَشَرِبُوا مِنْ أَلْبَانِهَا وَأَبْوَالِهَا، حَتَّى صَلَحَتْ أَبْدَانُهُمْ

**பாடம் : 6 ஒட்டகத்தின் *சிறுநீரால் சிகிச்சையளிப்பது*** **5686.** அனஸ்(ரலி) கூறினார் ('உரைனா' குலத்தைச் சேர்ந்த) மக்கள் சிலர், மதீனாவின் தட்ப வெப்ப நிலை தங்களுக்கு ஒத்துவரவில்லை என்று கருதினர். எனவே, நபி(ஸல்) அவர்கள் அந்த மக்களைத் தம் ஒட்டக மேய்ப்பரிடம் சென்று அந்த ஒட்டகங்களின் பாலையும் சிறுநீரையும் குடிக்கும்படி பணித்தார்கள். (அதன்படி) அவர்கள் அந்த ஒட்டக மேய்ப்பரிடம் சென்று ஒட்டகங்களின் பாலையும் அவற்றின் சிறு நீரையும் குடித்தார்கள். அவர்களுக்கு உடல் நலம் ஏற்பட்டதும் ஒட்டக மேய்ப்பரைக் கொன்றுவிட்டு ஒட்டகங்களை ஓட்டிச் சென்றுவிட்டனர். இச்செய்தி நபி(ஸல்) அவர்களுக்கு எட்டியது. அவர்களைத் தேடி(ப் பிடித்து) வர (ஆட்களை) அனுப்பி வைத்தார்கள் நபி(ஸல்) அவர்கள் அவர்கள் பிடித்துக் கொண்டு வரப்பட்டனர். அவர்களின் கைகளையும் கால்களையும் நபி(ஸல்) அவர்கள் துண்டித்தார்கள். அவர்களின் கண்களில் சூடிட்டார்ள்.8 கத்தாதா(ரஹ்) கூறினார்: முஹம்மத் இப்னு சீரின்(ரஹ்), 'இது, (கொலை, கொள்ளைக்கான) கண்டனைச் சட்டங்கள் அருளப்பெறுவதற்கு முன்னால் நடந்த சம்பவம்' என்று கூறினார்கள். Book : 76 - **ஸஹீஹுல் புகாரி**

மதினாவின் தட்பவெட்பம் சில மக்களுக்கு ஒத்து வராமல் (வயிற்று வலி) நோய் ஏற்பட்டது. அதற்கு ரஸூலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ அவர்கள், அவர்களைத் தங்களின் இடையர்களைத் தொடர்ந்து சென்று ஒட்டகத்தின் பாலையும், சிறுநீரையும் (மருந்தாக) அருந்தச் சொன்னார்கள். அவர்கள் அவ்வாறு தொடர்ந்து சென்று ஒட்டகத்தின் பாலையும், சிறுநீரையும் அருந்தினார்கள். அவர்களின் உடல் சுகம் பெற்றது.'' அசுத்தமானதை அவர்கள் அருந்தச் சொல்ல மாட்டார்கள். அசுத்தமான ஒன்றை மருந்தாகவும் பயன்படுத்த முடியாது எனவும் ரஸூலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ அவர்கள் கூறியுள்ளார்கள்.

புஹாரி 429

حَدَّثَنَا سُلَيْمَانُ بْنُ حَرْبٍ، قَالَ حَدَّثَنَا شُعْبَةُ، عَنْ أَبِي التَّيَّاحِ، عَنْ أَنَسٍ، قَالَ كَانَ النَّبِيُّ صلى الله عليه وسلم يُصَلِّي فِي مَرَابِضِ الْغَنَمِ، ثُمَّ سَمِعْتُهُ بَعْدُ يَقُولُ كَانَ يُصَلِّي فِي مَرَابِضِ الْغَنَمِ قَبْلَ أَنْ يُبْنَى الْمَسْجِدُ.

**பாடம் : 49 ஆட்டுக் தொழுவங்களில் தொழுவது. 429.** அபூ தய்யாஹ் அறிவித்தார். 'நபி(ஸல்) அவர்கள் ஆடுகள் கட்டுமிடங்களில் தொழுபவர்களாக இருந்தனர். என்று அனஸ்(ரலி) ஆரம்பத்தில் கூறிக் கொண்டிருந்தார்கள். பின்னர் 'பள்ளி கட்டப்படுவதற்கு முன்னால் நபி(ஸல்) அவர்கள் ஆடுகள் கட்டுமிடங்களில் தொழுபவர்களாக இருந்தனர்' என்று விளக்கமாக அனஸ்(ரலி) கூறினார். Book : 8 - **ஸஹீஹுல் புகாரி**

அக்காலத்தில் தொழும்போது தரையில் எதனையும் விரிக்க மாட்டார்கள். அங்கு ஆட்டின் சிறுநீர் இருக்க வாய்ப்புள்ளது. ஆனால் அது குறித்து ரஸூலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ ஏதும் எச்சரிக்கையாக சொல்லாமல் தொழ அனுமதித்தார்கள். எனவே அங்கு சிறுநீர் இருந்தாலும் தவறில்லை எனப் புரிந்து கொள்ள வேண்டும்.

மேலும் ஸஹாபாக்கள் ஹலாலான விலங்குகளின் விட்டை சாணிகள் போன்றவற்றை விற்று வியாபாரம் செய்வார்கள். அவை அசுத்தமாக இருந்தால் அந்த வியாபாரத்தை ரஸூலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ அவர்கள தடை செய்திருப்பார்கள். எனவே அவற்றை நாம் சுத்தமானதுதான் என்றுதான் எடுத்துக் கொள்ள வேண்டும்.

இவ்வாறு மேலே கூறப்பட்ட ஏழு பொருட்கள் குறித்து பல கருத்த வேறுபாடுகள் இருந்தாலும், அவை அசுத்தம் தான் என்பதற்கான தெளிவான ஆதாரம் இல்லாத நிலையில் அவை அனைத்தும் சுத்தமானதுதான் என்றே எடுத்துக் கொள்ள வேண்டும். ஆனால் விந்து விஷயத்தில் மட்டும் இரண்டு விதமான கருத்துகள் உள்ளன, அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَى வே மிகவும் அறிந்தவன்.

**Fiqh 5 - How to get rid of impurities?**

## ஃபிக்ஹ் வகுப்பு 5 - அசுத்தங்களை எவ்வாறு அகற்றுவது?

**ஆசிரியர்: அஷ் ஷெய்க் உவைஸ் உமரி நளீரி**

கடந்த பாடத்தில் அசுத்தங்கள் பற்றியும், தெளிவான ஆதாரங்கள் இல்லாத நிலையில் எதனையும் அசுத்தம் என்று எடுத்துக் கொள்ளக் கூடாது என அறிந்தோம். இப்பாடத்தில் அப்படிப்பட்ட அசுத்தங்களிலிருந்து நீங்கி எவ்வாறு நாம் சுத்தப்படுத்திக் கொள்வது என்பது பற்றி காண்போம்.

**1. நாயின் எச்சிலைச் சுத்தப்படுத்தும் விதம்:**

நாயின் எச்சில் பாத்திரத்தில் பட்டாலும், அல்லது உடலில் பட்டாலும், அதனை ஏழு முறை கழுவ வேண்டும். இது சம்பந்தமாக ரஸுலுல்லாஹ் صَلَّى الله عَلَيْهِ وَسَلَّمَ அவர்களின் கூற்றில் பாத்திரத்தைப் பற்றிதான் குறிப்பிடப்பட்டுள்ளது. எனினும், உடலையும் எச்சில் பட்டால், அவ்வாறு ஏழு முறை கழுவுவது சிறந்தது. முன்னர் கூறப்பட்ட ஹதீதின்படி

முஸ்லிம் 279*

وَحَدَّثَنِي عَلِيُّ بْنُ حُجْرٍ السَّعْدِيُّ، حَدَّثَنَا عَلِيُّ بْنُ مُسْهِرٍ، أَخْبَرَنَا الأَعْمَشُ، عَنْ أَبِي رَزِينٍ، وَأَبِي، صَالِحٍ عَنْ أَبِي هُرَيْرَةَ، قَالَ قَالَ رَسُولُ اللَّهِ صلى الله عليه وسلم " إِذَا وَلَغَ الْكَلْبُ فِي إِنَاءِ أَحَدِكُمْ فَلْيُرِقْهُ ثُمَّ لْيَغْسِلْهُ سَبْعَ مِرَارٍ "

**279a*** **(469**).** . அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: உங்களில் ஒருவரது பாத்திரத்தில் நாய் வாய் வைத்துவிட்டால் அவர் அதைக் கொட்டி விட்டு ஏழு தடவை பாத்திரத்தைக் கழுவிக்கொள்ளட்டும். இதை அபூஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள். இந்த ஹதீஸ் இரு அறிவிப்பாளர்தொடர்களில் வந்துள்ளது. - மேற்கண்ட ஹதீஸ் அபூஹுரைரா (ரலி) அவர்களிடமிருந்தே மற்றோர் அறிவிப்பாளர் தொடர் வழியாகவும் வந்துள்ளது. அதில் அதை அவர் கொட்டிவிடட்டும் எனும் குறிப்பு இடம்பெறவில்லை. Book : 2 - **ஸஹீஹ் முஸ்லிம்**

* http://sunnah.com/muslim/2/114
** http://www.tamililquran.com/muslimdisp.php?start=469

“நாய் பாத்திரத்தை நக்கினால், அதிலுள்ளதை கொட்டிவிட்டு, அந்த பாத்திரத்தை ஏழு முறை கழுவ வேண்டும்.” சில அறிவுப்புகளில் அதில் ஒரு முறை ஆரம்பத்திலோ அல்லது கடைசியிலோ மண்ணைக் கொண்டு கழுவ வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது. முஸ்லிமின் மற்றொரு மற்றொரு அறிவிப்பில் ஏழு முறை தண்ணீருடனும், எட்டாவது முறை மண்ணைக் கொண்டும் கழுவ வேண்டும் எனக் கூறப்பட்டுள்ளது.

நாயின் எச்சில் ஒரு அடர்த்தியான அசுத்தம் என்பதால், குறிப்பிட்ட கணக்கில், ஏழு அல்லது எட்டு முறை கழுவ வேண்டும்.

**2. ஆண் குழந்தையின் சிறுநீர்:** பிறந்த ஆண் குழந்தையானது, தான் விரும்பி பாலை விட்டு மற்ற உணவு வகைகளைச் சாப்பிடும் வரையில், சுமாராக இரண்டு ஆண்டுகள் வயதுள்ள குழந்தை. அந்த காலம் வரையுள்ள ஆண் குழந்தையின் சிறுநீர் அசுத்தமானதுதான். எனினும் அந்த அசுத்தத்தை நீக்க அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَى எளிமையாக்கியுள்ளான். அந்த சிறுநீர் பட்டிருக்கும் ஆடை அல்லது உடலின் பகுதியில் தண்ணீரை எடுத்து தெளித்துவிட்டால் போதுமானது. அதனைக் கழுவி விட வேண்டும் என்ற அவசியம் இல்லை. மார்க்கத்தைப் பொறுத்தளவில் அந்த அசுத்தம் நீங்கிவிடும்.

அதற்கான ஆதாரம்:

புஹாரி 223:

عَنْ أُمِّ قَيْسٍ بِنْتِ مِحْصَنٍ، أَنَّهَا أَتَتْ بِابْنٍ لَهَا صَغِيرٍ، لَمْ يَأْكُلِ الطَّعَامَ إِلَى رَسُولِ اللَّهِ صلى الله عليه وسلم، فَأَجْلَسَهُ رَسُولُ اللَّهِ صلى الله عليه وسلم فِي حِجْرِهِ، فَبَالَ عَلَى ثَوْبِهِ، فَدَعَا بِمَاءٍ فَنَضَحَهُ وَلَمْ يَغْسِلْهُ.

**223.** '(தாய்ப் பாலைத் தவிர வேறு) உணவு சாப்பிடாத என்னுடைய சிறிய ஆண் குழந்தையை நபி(ஸல்) அவர்களிடம் கொண்டு வந்தேன். நபி(ஸல்) அவர்கள் அக்குழந்தையைத் தங்களின் மடியில் உட்கார வைத்தபோது, அக்குழந்தை நபி(ஸல்) அவர்களின் ஆடையில் சிறுநீர் கழித்துவிட்டது. உடனே தண்ணீர் கொண்டு வரச் செய்து (சிறுநீர் பட்ட இடத்தில்) தெளித்தார்கள்; அதைக் கழுவவில்லை' என உம்மு கைஸ்(ரலி) அறிவித்தார். Book :4 - **ஸஹீஹுல் புகாரி**

அக்காலத்தில் மக்கள் தங்கள் குழந்தைகளை பரக்கத்திற்காக (தஹ்னீஹ்) ரஸுலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ அவர்களிடம் கொண்டு வருவார்கள். அவர்கள் தங்களின் நாவினால் பேரிச்சம்பழத்தைச் சுவைத்து, அக்குழந்தையின் நாவில் வைப்பார்கள். அவ்வாறு உம்மு கைஸ் பின்த் மிஹ்ஸின் رَضِيَ اللهُ عَنْهَا என்ற பெண்மணி ஒரு தடவை வந்தார். வழக்கமான உணவை உண்ண ஆரம்பிக்காத அந்த குழந்தையைத் தங்களின் இடுப்பில் ரஸுலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ வைத்தார்கள். அந்தக் குழந்தை ரஸுலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ அவர்களின் ஆடையில் சிறுநீர் கழித்துவிட்டது. உடனே ரஸுலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ தண்ணீர் கொண்டு வரச்சொல்லி அதனை நனைந்த பகுதியில் தெளித்து விட்டார்கள். அதனைக் கழுவவில்லை.

அபு தாவூத் 377

அலி رَضِيَ اللهُ عَنْهُ அவர்கள் அறிவிப்பதாவது:

عَنْ عَلِيٍّ، -رضى الله عنه- قَالَ يُغْسَلُ مِنْ بَوْلِ الْجَارِيَةِ وَيُنْضَحُ مِنْ بَوْلِ الْغُلاَمِ مَا لَمْ يَطْعَمْ

"(மற்ற) உணவு உண்ண ஆரம்பிக்கும் வரை, பெண் குழந்தையின் சிறுநீரைக் கழுவி விட வேண்டும். ஆண் குழந்தையின் சிறுநீரின் மீது தண்ணீரைத் தெளித்தல் வேண்டும்."

**3. மதி என்னும் இச்சை நீர்:** இது இச்சையின் போது வரும் நீர் என்று முன்னர் சொல்லப்பட்டுள்ளது. மனி என்ற இச்சை நீருக்கும் இதற்கும் வித்தியாசம் முன்னர் கூறப்பட்டுவிட்டது. அலி அவர்கள் رَضِيَ اللهُ عَنْهُ, ரஸுலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ அவர்களின் ஒன்று விட்ட சகோதரர். வயதில் மிகவும் இளையவர். ஆரம்பத்தில் தங்களின் பிள்ளை போல் வளர்ந்து வந்தார்கள். மேலும் ரஸுலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ அவர்களின் ஃபாத்திமாஹ் رَضِيَ اللهُ عَنْهَا அவர்களைத் திருமணம் செய்த மருமகனாரும் ஆவார்கள். அவர்களுக்கு மதி நீர் அதிகமாக வெளிப்படுவதால், வெட்கத்தின் காரணமாக நேரடியாக ரஸுலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ அவர்களிடம் கேட்காமல், தங்களின் நண்பர் மிக்தாத் رَضِيَ اللهُ عَنْهُ மூலமாக ரஸுலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ அவர்களிடம் கேட்கச் சொன்னேன். அவர் ரஸுலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ அவர்களிடம் அது பற்றி வினவினார்.

புஹாரி 269:

عَلِيٍّ، قَالَ كُنْتُ رَجُلاً مَذَّاءً فَأَمَرْتُ رَجُلاً أَنْ يَسْأَلَ النَّبِيَّ صلى الله عليه وسلم لِمَكَانِ ابْنَتِهِ فَسَأَلَ فَقَالَ " تَوَضَّأْ وَاغْسِلْ ذَكَرَكَ ".

**பாடம் : 13 இச்சைக் கசிவு நீரைக் (மதீ) கழுவுவதும் அது வெளியேறியதற்காக அங்க சுத்தி (உளூ) செய்வதும். 269.** 'நான் அதிகமாக 'மதி' எனும் காம நீர் வெளிப்படுபவனாக இருந்தேன். நான் நபி(ஸல்) அவர்களின் மகளுடைய கணவன் என்பதால் இது பற்றி அவர்களிடம் கேட்டு வருவதற்கு ஒருவரை அனுப்பினேன். அவர் சென்று கேட்டபோது, 'நீ உன்னுடைய உறுப்பைக் கழுவிவிட்டு உளூச் செய்து கொள்' என்று இறைத்தூதர்(ஸல்) அவர்கள் கூறினார்கள்: என அலீ(ரலி) அறிவித்தார். Book : 5 - **ஸஹீஹுல் புகாரி**

முஸ்லிம் 303:

قَالَ عَلِيُّ بْنُ أَبِي طَالِبٍ أَرْسَلْنَا الْمِقْدَادَ بْنَ الأَسْوَدِ إِلَى رَسُولِ اللَّهِ صلى الله عليه وسلم فَسَأَلَهُ عَنِ الْمَذْىِ يَخْرُجُ مِنَ الإِنْسَانِ كَيْفَ يَفْعَلُ بِهِ فَقَالَ رَسُولُ اللَّهِ صلى الله عليه وسلم " تَوَضَّأْ وَانْضَحْ فَرْجَكَ " .

**510.** அலீ பின் அபீதாலிப் (ரலி) அவர்கள் கூறியதாவது: மனிதனிலிருந்து வெளியாகும் பாலுணர்வு கிளர்ச்சி நீர் குறித்து, அது கசிந்தால் என்ன செய்ய வேண்டும்? என்று கேட்பதற்காக மிக்தாத் பின் அல்அஸ்வத் (ரலி) அவர்களை அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களிடம் நாம் அனுப்பிவைத்தோம். அ(வர் கேட்ட)தற்கு அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள், அங்கத் தூய்மை (உளூ) செய்துகொள்ளுங்கள்: பிறவி உறுப்பில் தண்ணீர் ஊற்றி(க் கழுவி)விடுங்கள் என்று பதிலளித்தார்கள். இந்த ஹதீஸ் இரு அறிவிப்பாளர்தொடர்களில் வந்துள்ளது. Book : 3 - **ஸஹீஹ் முஸ்லிம்**

"ஆணுறுப்பைக் கழுவ வேண்டும். பின்னர் உளூ செய்தால் போதுமானது. குளிப்பு கடமையாகாது." ஒன்றைப் புரிந்து கொள்ள வேண்டும். உடலின் எந்தப்பகுதியில் இருந்தாலும் அதனைக் கழுவ வேண்டும். ஆனால் ஆடையில் பட்டிந்தால், அதனைக் கழுவ வேண்டும் என்ற அவசியம் இல்லை. மாறாக, அந்த இடத்தில் தண்ணீரைத் தெளித்தால் போதுமானது என அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَى எளிமைப் படுத்தியுள்ளான். ஆண்குழந்தையின் சிறுநீரைப் பொறுத்தளவில், உடலில் பட்டிருந்தாலும், ஆடையில் பட்டிருந்தாலும் தண்ணீரைத் தெளித்தால் போதுமானது. ஆனால் மதியைப் பொறுத்தளவில், உடலில் பட்டால் கழுவ வேண்டும். ஆனால் உடையில் பட்டால் அதன் மீது தண்ணீர் தெளித்தால் போதுமானது. ஆதாரம்:

அபு தாவூத் 210

ஸஹ்ல் பின் ஹுனை.்.ப் அறிவிப்பதாவது,

إِنَّمَا يُجْزِيكَ مِنْ ذَلِكَ الْوُضُوءُ " . قُلْتُ يَا رَسُولَ اللَّهِ فَكَيْفَ بِمَا يُصِيبُ ثَوْبِي مِنْهُ قَالَ " يَكْفِيكَ بِأَنْ تَأْخُذَ " كَفًّا مِنْ مَاءٍ فَتَنْضَحَ بِهَا مِنْ ثَوْبِكَ حَيْثُ تُرَى أَنَّهُ أَصَابَهُ "

"நான் ரஸூலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ அவர்களிடம் வினவினேன், "ரஸூலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ அவர்களே! அது எனது ஆடையில் பட்டிருந்தால் என்ன செய்வது?" அவர்கள் பதிலளித்தார்கள், "ஆடையில் அது பட்டிருந்த இடத்தில் ஒரு கையளவு தண்ணீரைத் தெளித்தால் போதுமானது."

**4. மற்ற அனைத்து அசுத்தங்கள்:** அந்த அசுத்தங்களை நீக்க வேண்டும். அதற்காகத் தண்ணீரைப் பயன்படுத்த வேண்டும். எனினும் குறிப்பிட்ட இத்தனை முறை என வரையறை செய்யப்படவில்லை. அதனை நீக்கிவிட்டால் போதுமானது. தண்ணீர் படுத்தாமல் நீக்கலாம் என்ற எளிய முறை இவற்றிற்கு இல்லை. பின்னர் அதன் அடையாளம் ஏதும் இருந்தாலும் அது நம்மைப் பாதிக்காது. உடலைப் பொறுத்தளவில் கழுவினால் எல்லா அசுத்தமும் போய்விடும்.

புஹாரி 307

فَقَالَ رَسُولُ اللَّهِ صلى الله عليه وسلم " إِذَا أَصَابَ ثَوْبَ إِحْدَاكُنَّ الدَّمُ مِنَ الْحَيْضَةِ، فَلْتَقْرُصْهُ ثُمَّ لِتَنْضَحْهُ بِمَاءٍ، ثُمَّ لِتُصَلِّي فِيهِ ".

**பாடம் : 9 மாதவிடாய் இரத்தத்தைக் கழுவுதல். 307.** 'ஒரு பெண் நபி(ஸல்) அவர்களிடம் வந்து, 'இறைத்தூதர் அவர்களே! எங்களில் ஒரு பெண்ணின் துணியில் மாதவிடாய் இரத்தம் பட்டால் அவள் எவ்வாறு (சுத்தம்) செய்ய வேண்டும்?' என்று கேட்டதற்கு, 'உங்களில் ஒருத்தியின் ஆடையில் மாதவிடாய் இரத்தம் பட்டால் அதைச் சுரண்டிவிட்டுப் பின்னர் அந்த இடத்தில் தண்ணீர் தெளித்து விடட்டும். அதன் பின்னர் அந்த ஆடையுடன் தொழுது கொள்ளலாம்' என்று இறைத்தூதர்(ஸல்) அவர்கள் கூறினார்கள்: என அஸ்மா பின்த் அபீ பக்ர்(ரலி) அறிவித்தார். Book : 6 - **ஸஹீஹுல் புகாரி**

ரஸூலுல்லாஹ் صَلَّى الله عَلَيْهِ وَسَلَّمَ அவர்கள் அந்தத் துணியைக் கழுவ வேண்டும். அகற்றிய பிறகு அதன் அடையாளம் இருந்தால் அது பாதிக்காது என்று அவர்கள் சொன்னதாக வந்துள்ளது. இது அனைத்து வகை அசுத்தங்களுக்கும் பொருந்தும்.

**5. விலங்குகளின் தோல்:** இவற்றைச் சுத்தப்படுத்தப் பதனிடப்பட (tannning)வேண்டும்.

நஸாயி 4241

قَالَ رَسُولُ اللَّهِ صلى الله عليه وسلم " أَيُّمَا إِهَابٍ دُبِغَ فَقَدْ طَهُرَ " .

“எந்த தோலாக இருந்தாலும் சரியே, அது பதனிப்பட்டால் சுத்தத்தை அடைந்துவிடும்.”

**6. தரையைச் சுத்தப்படுத்துவது:** அசுத்தம் இருக்கும் இடத்தில் ஒரு குடம் தண்ணீர் விட்டுச் சுத்தம் செய்த பிறகு, மற்றும் ஒரு குடம் தண்ணீர் விட்டுவிட்டால் போதுமானது. அந்த இடம் சுத்தமாகிவிடும். அசுத்தம் நீக்கப்பட வேண்டும் என்பதுதான் நோக்கம்.

புஹாரி 6025

அனஸ் இப்னு மாலிக் رَضِي الله عَنْهُ அறிவிப்பதாவது,

عَنْ أَنَسِ بْنِ مَالِكٍ، أَنَّ أَعْرَابِيًّا، بَالَ فِي الْمَسْجِدِ، فَقَامُوا إِلَيْهِ، فَقَالَ رَسُولُ اللَّهِ صلى الله عليه وسلم " لاَ تُزْرِمُوهُ ". ثُمَّ دَعَا بِدَلْوٍ مِنْ مَاءٍ فَصُبَّ عَلَيْهِ.

**6025.** அனஸ் இப்னு மாலிக்(ரலி) அறிவித்தார் ஒரு கிராமவாசி பள்ளிவாசலினுள் சிறுநீர் கழித்தார். அவரை நோக்கி நபித் தோழர்கள் (வேகத்துடன்) எழுந்தனர். அப்போது இறைத்தூதர்(ஸல்) அவர்கள் '(அவர் சிறுநீர் கழிப்பதை) இடை மறிக்காதீர்' என்று கூறிவிட்டுப் பிறகு ஒரு வாளியில் தண்ணீர் கொண்டு வரக் கூறினார்கள். பிறகு (தண்ணீர் கொண்டு வரப்பட்டு) அது சிறுநீர் மீது ஊற்றப்பட்டது. Book :78 - **ஸஹீஹுல் புகாரி**

அவர் தடுக்கப்பட்டால், அவரது அந்தரங்க உறுப்பு வெளியாகலாம் என்றோ, சிறுநீர் மற்ற இடங்களுக்குப் பரவலாம் என்றோ, இடையில் நிறுத்தினால் அவருக்கு ஏதும் தீங்கு வரலாம் என்றோ நினைத்திருக்கலாம். பின்னர் அவரிடம் பள்ளிவாசலின் சுத்தம் கூறித்து ரஸூலுல்லாஹ் صَلَّى الله عَلَيْهِ وَسَلَّمَ உபதேசம் செய்தார்கள். தண்ணீர் ஊற்றிவிட்டால் சுத்தமாகும் என இதிலிருந்து அறியலாம்.

**7. கண்ணாடி,** வாகனங்களில் பயன்படுத்தப்படும் பொருள்கள். அசுத்தம் இருக்கும் இடத்தைத் துணியால் துடைத்தாலே போதுமானதாகும். கண்ணாடி குறித்து சொல்லப்பட்ட ஹதீதில் இவ்வாறு துடைத்தால் போதும் என்று ரஸூலுல்லாஹ் صَلَّى الله عَلَيْهِ وَسَلَّمَ சொல்லியிருக்கிறார்கள். அதனை மற்றவற்றிற்கு எடுத்துக் கொண்டு, துடைப்பது போதும் என்றாகும்.

**8. பெண்களின் ஆடை நீளமாக இருந்து,** அது தரையோடு உரசி, அதில் அசுத்தம் ஒட்டிக் கொண்டால் என்ன செய்வது.

இப்னு மாஜாஹ் 531, அபு தாவூத் 383 மற்றும் திர்மிதி 143

أُمَّ سَلَمَةَ زَوْجَ النَّبِيِّ ـ صلى الله عليه وسلم ـ قَالَتْ إِنِّي امْرَأَةٌ أُطِيلُ ذَيْلِي فَأَمْشِي فِي الْمَكَانِ الْقَذِرِ فَقَالَتْ قَالَ رَسُولُ اللَّهِ ـ صلى الله عليه وسلم ـ " يُطَهِّرُهُ مَا بَعْدَهُ

அன்னை உம்மு ஸலமா رَضِيَ اللهُ عَنْهَا அவர்கள் வினவினார்கள், “ரஸூலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ நான் நீளமான ஆடையை அணிபவராக இருக்கிறேன், அசுத்தமான தரையில் செல்வேன். (அப்போது ஆடை அசுத்தமானால் என்ன செய்வது?” அதற்கு அவர்கள் பதிலளித்தார்கள், “(அசுத்தப்பட்ட பிறகு, மறுபடியும் தரையில் இழுத்துச் செல்லப்படும்போது,) பின்னர் வரும் சுத்தமான தரை அதனைச் சுத்தப்படுத்தி விடும்.”

இதன்படி நாம் அதனை கழுவ வேண்டியதில்லை. தரையில் உள்ள சுத்தமாக மண் அதனை சுத்தப்படுத்திவிடும். இதைப் போன்று, நமது காலணிகளிலும் அசுத்தம் பட்டால், பின்னர் நாம் சுத்தமான பகுதியில் தொடர்ந்து நடந்து சென்றால், அது சுத்தமாகிவிடும்.

மேலும் அபு தாவூத் 650

"وَقَالَ " إِذَا جَاءَ أَحَدُكُمْ إِلَى الْمَسْجِدِ فَلْيَنْظُرْ فَإِنْ رَأَى فِي نَعْلَيْهِ قَذَرًا أَوْ أَذًى فَلْيَمْسَحْهُ وَلْيُصَلِّ فِيهِمَا

ரஸூலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ கூறியுள்ளார்கள், “நீங்கள் பள்ளிவாசலுக்கு வரும்போது, காலணியில் அசுத்தம் இருந்தால், அதனைத் துடைத்துவிடவும்.” என்று கூறியுள்ளார்கள். அதனைக் கழுவ வேண்டும் எனக் கூறவில்லை.

பெண்களுக்கு நீண்ட ஆடைகளை ஒரு முழம் அதிகமான அளவிற்குத்தான் நீளமாக அணிய வேண்டும் என ரஸூலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ அனுமதித்துள்ளார்கள்.

**9. சாப்பிடக் கூடிய பொருட்கள்:** நீரைப் பொறுத்தளவில், குளிர்பானங்கள் குறைந்த அளவு இருக்கும் நிலையில் அசுத்தம் விழுந்துவிட்டால், அது முழுவதும் அசுத்தமாகிவிடும். அதனைப் பயன்படுத்தக் கூடாது. திடப்பொருள் சம்பந்தப்பட்ட விவரம். வெண்ணெயில் எலி விழுந்தால் என்ன செய்வது குறித்து: புஹாரி 5538

سَمِعَ ابْنَ عَبَّاسٍ، يُحَدِّثُهُ عَنْ مَيْمُونَةَ، أَنَّ فَأْرَةً، وَقَعَتْ، فِي سَمْنٍ فَمَاتَتْ، فَسُئِلَ النَّبِيُّ صلى الله عليه وسلم عَنْهَا فَقَالَ " أَلْقُوهَا وَمَا حَوْلَهَا وَكُلُوهُ

**பாடம் : 34 உறைந்த அல்லது உருகிய நெய்யில் எலி விழுந்துவிட்டால்...? 5538.** மைமூனா (ரலி) கூறினார் (ஒரு முறை) எலி ஒன்று நெய்யில் விழுந்து இறந்துவிட்டது. (அந்த நெய்யை உண்ணலாமா? என்று) அது பற்றி நபி(ஸல்) அவர்களிடம் கேட்கப்பட்டது. அதற்கு நபி(ஸல்) அவர்கள், '(உடனே) அந்த எலியையும் அதைச் சுற்றியுள்ள நெய்யையும் (எடுத்து) எறிந்துவிட்டு அ(தில் மீதியுள்ள)தை உண்ணுங்கள்' என்று பதிலளித்தார்கள். (இதன் அறிவிப்பாளர்களில் ஒருவரான) சுஃப்யான் இப்னு உயைனா(ரஹ்) கூறினார்: இந்த ஹதீஸை ஸுஹ்ரீ(ரஹ்) உபைதுல்லாஹ் இப்னு அப்தில்லாஹ்(ரஹ்) அவர்களிடமிருந்தே அறிவித்தார்கள். ஸுஹ்ரீயிடமிருந்து நான் இந்த ஹதீஸைப் பலமுறை செவியுற்றுள்ளேன். Book : 72 - **ஸஹீஹுல் புகாரி**

அதனை மாவு மற்றும் அரிசி போன்ற திடமான பொருளுக்கு எடுத்துக் கொள்ளலாம். இவ்வாறு பல விஷயங்கள் பற்றி ரஸூலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ கூறியுள்ளார்கள்.

**Fiqh 6 - Islamic toilet etiquette**

## ஃபிக்ஹ் வகுப்பு 6 - மலஜலம் கழிப்பதன் சட்டங்கள்

**ஆசிரியர்: அஷ் ஷெய்க் உவைஸ் உமரி நளீரி**

இன்றைய பாடத்தில் மல ஜலம் சம்பந்தப்பட்ட ஒழுக்கங்கள், செய்யக் கூடியவை மற்றும் செய்யக் கூடாதவை பற்றி நாம் காண்போம்.

முதலாவதாக உள்ளே செல்லும்போதும், வெளியில் வரும்போதும் ஓத வேண்டிய துஆக்கள் பற்றிக் காண்போம்.

உள்ளே செல்லும்போது ஓதவேண்டிய துஆ:

புஹாரி 142:

அனஸ் رَضِـي الله عَنْهُ அறிவிப்பதாவது,

سَمِعْتُ أَنَسًا، يَقُولُ كَانَ النَّبِيُّ صلى الله عليه وسلم إِذَا دَخَلَ الْخَلاَءَ قَالَ " اللَّهُمَّ إِنِّي أَعُوذُ بِكَ مِنَ الْخُبُثِ وَالْخَبَائِثِ "

**பாடம் : 9 கழிப்பிடம் செல்லும் போது சொல்ல வேண்டியவை. 142.** 'கழிப்பிடக்கிற்குச் சென்றபோது, 'இறைவா! அருவருக்கக் கக்க செயல்கள், இழிவான பண்பாடுகள் ஆகியவற்றைக் காண்டும் ஷைக்கானைவிட்டு உன்னிடம் பாதுகாவல் தேடுகிறேன்' என்று கூறும் வழக்கமுடையவர்களாக நபி(ஸல்) அவர்கள் இருந்தார்கள்' என அனஸ்(ரலி) அறிவித்தார். Book : 4 - **ஸஹீஹுல் புகாரி**

வெளியில் வரும்போது ஓத வேண்டிய துஆ:

அபு தாவூது 30

அன்னை ஆயிஷா رَضِـي الله عَنْهَا அவர்கள் அறிவிப்பதாவது,

ரஸூலுல்லாஹ் صَلَّى الله عَلَيْهِ وَسَلَّمَ கழிப்பிடத்தைவிட்டு வெளியே வரும்போது,

حَدَّثَتْنِي عَائِشَةُ، رضى الله عنها أَنَّ النَّبِيَّ صلى الله عليه وسلم كَانَ إِذَا خَرَجَ مِنَ الْغَائِطِ قَالَ " غُفْرَانَكَ " .

“உன்னிடம் பாவமன்னிப்பு வேண்டுகிறேன்.” என்று கூறுவார்கள்.

இவ்வாறு ஓதுவதுதான் ஸுன்னாஹ்வாக இருக்கிறது. சிலர் மேலதிகமாக, ‘அல்லாஹும்ம இன்னி ஹு.ஃபரானக்க அல்ஹம்துல்லாஹி அல்லதி அன்ஹப அன்னில் ஹஸன் வா ஆ.ஃபானி... போன்று ஓதுவார்கள். அவ்வாறெல்லாம் கூறுவது நபிவழி இல்லை.

இரண்டாவதாக, கழிவறைக்கு உள்ளே நுழையும் போது, இடதுகாலை முற்படுத்திம், வெளியில் வரும்போது வலது காலை முற்படுத்தியும் வரவேண்டும் என்பதற்கான நேரடியான ஆதாரம் இல்லை. எனினும் அன்னை ஆயிஷா رَضِـي الله عَنْهَا அவர்களின் அறிவிப்பின்படி, ரஸூலுல்லாஹ் صَلَّى الله عَلَيْهِ وَسَلَّمَ ஒவ்வொரு காரியங்களையும் வலது புறத்திலிருந்து ஆரம்பிப்பார்கள். உதாரணமாக, தூய்மை சம்பந்தப்பட்டது, தலை வாறுவது. கழிவறை அசுத்தமான இடம் என்பதால் அதற்கு மாறாக என்று நாம் எடுத்துக் கொள்ளலாம். எனினும் நேரடியான ஆதாரம் இல்லை.

மூன்றாவதாக, கழிவறைக்குச் செல்லும்போது, வெட்டவெளியில் செல்ல வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டால், தரையில் அமர்வதற்கு முன்புதான், ஆடையை எடுக்க வேண்டும். நின்ற நிலையிலேயே அவ்வாறு செய்யக் கூடாது.

அபுதாவூது 14

இப்னு உமர் رَضِـي الله عَنْهُ அறிவிப்பதாவது,

عَنِ ابْنِ عُمَرَ، أَنَّ النَّبِيَّ صلى الله عليه وسلم كَانَ إِذَا أَرَادَ حَاجَةً لاَ يَرْفَعُ ثَوْبَهُ حَتَّى يَدْنُوَ مِنَ الأَرْضِ.

ரஸுலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ தங்களின் இயற்கைத் தேவைக்குச் செல்லும்போது, அவர்கள் தரையில் அமருவதற்கு முன்பாகத் தங்களின் ஆடையை உயர்த்த மாட்டார்கள்.

தங்களின் அந்தரங்க உறுப்பை வெளிப்படுத்தக் கூடாது என்ற நோக்கில் இவ்வாறு செய்தார்கள். மற்றவர்கள் காணக்கூடாது என்பதற்கான நடவடிக்கையாகும்.

அபுதாவூது 2

جَابِرِ بْنِ عَبْدِ اللَّهِ، أَنَّ النَّبِيَّ صلى الله عليه وسلم كَانَ إِذَا أَرَادَ الْبَرَازَ انْطَلَقَ حَتَّى لاَ يَرَاهُ أَحَدٌ

ஜாபிர் رَضِـيَ الله عَنْهُ அறிவிப்பதாவது,

“ரஸுலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ தங்களின் இயற்கைத் தேவைக்குச் செல்லும்போது, யாரும் காணாதவாறு வெகு தூரம் செல்வார்கள்.”

இவையெல்லாம் தங்களின் அந்தரங்க உறுப்பை யாரும் காணக்கூடாது என்ற எண்ணத்தில் செய்தவையாகும்.

நான்காவதாக, வெட்டவெளியில் மல ஜலம் கழிப்பதானால் கிப்லாவை முன் நோக்கியோ அல்லது பின்னால் இருக்கும்படியோ அமரக் கூடாது.

புஹாரி 144

அபு அய்யூப் அன்ஸாரி رَضِـيَ الله عَنْهُ அறிவிப்பதாவது,

عَنْ أَبِي أَيُّوبَ الأَنْصَارِيِّ، قَالَ قَالَ رَسُولُ اللَّهِ صلى الله عليه وسلم " إِذَا أَتَى أَحَدُكُمُ الْغَائِطَ فَلاَ يَسْتَقْبِلِ الْقِبْلَةَ وَلاَ يُوَلِّهَا ظَهْرَهُ، شَرِّقُوا أَوْ غَرِّبُوا ".

**பாடம் : 11 மலஜலம் கழிக்கும் போது கிப்லா(கஅபா)திசையை முன்னோக்கக் கூடாது. மதில் முதலிய கட்டடம் இருந்தால் தவறில்லை. 144.** உங்களில் ஒருவர் மலம் கழிக்கச் சென்றால் அவர் கிப்லாவை முன்னோக்கக் கூடாது. தம் முதுகுப் புறத்தால் (அதை) பின்னால் ஆக்கவும் கூடாது. (எனவே) கிழக்கு நோக்கியோ, மேற்கு நோக்கியோ திரும்பிக் கொள்ளுங்கள்' இறைத்தூதர்(ஸல்) அவர்கள் கூறினார்கள்: என அபூ அய்யூபில் அன்ஸாரி(ரலி) அறிவித்தார். (குறிப்பு: மேற்கூறப்பட்ட ஹதீஸ், கிப்லா தெற்கு வடக்காக அமைந்த மதீனா, யமன், சிரியா போன்ற நாடுகளில் வாழும் மக்களுக்கே பொருந்தும்.) Book : 4 - **ஸஹீஹுல் புகாரி**

கட்டிடத்திற்குள் இருக்கும்போது, அவ்வாறு தடை ஏதும் இல்லை.

புஹாரி 145

இப்னு உமர் رَضِـيَ الله عَنْهُ அறிவிப்பதாவது,

فَقَالَ عَبْدُ اللَّهِ بْنُ عُمَرَ لَقَدِ ارْتَقَيْتُ يَوْمًا عَلَى ظَهْرِ بَيْتٍ لَنَا، فَرَأَيْتُ رَسُولَ اللَّهِ صلى الله عليه وسلم عَلَى لَبِنَتَيْنِ مُسْتَقْبِلاً بَيْتَ الْمَقْدِسِ لِحَاجَتِهِ.

**145.** நீர் உம்முடைய தேவைக்காக (மலம் கழிக்க) உட்கார்ந்தால் கிப்லாவையோ, பைத்துல் முகத்தஸ்ஸையோ முன்னோக்கக் கூடாது என்று சிலர் சொல்கிறார்கள். ஆனால் நான் ஒருநாள் எங்கள் வீட்டின் கூரையின் மீது (ஒரு வேலையாக) ஏறினேன். அப்போது (தற்செயலாக) நபி(ஸல்) இரண்டு செங்கற்களின் மீது பைத்துல் முகத்தஸ்ஸை முன்னோக்கியவர்களாக மலம் கழிக்க அமர்ந்திருக்கக் கண்டேன்' என அப்துல்லாஹ் இப்னு உமர்(ரலி) அறிவித்தார். - **ஸஹீஹுல் புகாரி**

எனவே வெட்டவெளியில்தான் அன்றி கட்டிடத்திற்குள் அந்தத் தடை இல்லை.

அபு தாவூத் 13

ஜாபிர் رَضِـيَ الله عَنْهُ அறிவிப்பதாவது:

عَنْ أَبَانَ بْنِ صَالِحٍ، عَنْ مُجَاهِدٍ، عَنْ جَابِرِ بْنِ عَبْدِ اللَّهِ، قَالَ نَهَى نَبِيُّ اللَّهِ صلى الله عليه وسلم أَنْ نَسْتَقْبِلَ الْقِبْلَةَ بِبَوْلٍ فَرَأَيْتُهُ قَبْلَ أَنْ يُقْبَضَ بِعَامٍ يَسْتَقْبِلُهَا .

“சிறுநீர் கழிக்கும்போது, கிப்லாவை முன்நோக்குவதை ரஸூலுல்லாஹ் صَلَّى الله عَلَيْهِ وَسَلَّمَ அவர்கள் தடுத்தார்கள். அவர்கள் மறைந்த ஒரு வருடத்திற்கு முன்பு அவர்கள் சிறுநீர் கழிக்கும்போது, கிப்லாவை முன்நோக்கி இருந்ததை நான் கண்ணுற்றேன்.”

கட்டிடத்திற்குள் இருக்கும்போதும், அல்லது ஏதேனும் தடுப்பு இருந்தாலும் இந்தத் தடையில்லை. எனினும் கிப்லாவுக்குக் கண்ணியம் கொடுக்கும் நோக்கில், வீட்டை அமைக்கும்போது, கழிவறையை கிப்லாவுக்கு முன்நோக்கியோ, அல்லது பின்நோக்கியோ இல்லாமல் கட்டுவது சிறந்தது.

ஐந்தாவதாக, மல ஜலம் கழித்த பிறகு, அதனைச் சுத்தப்படுத்த இரண்டு வழிகள் உள்ளன. ஒன்றாவது தண்ணீரைக் கொண்டு சுத்தப்படுத்துவது. அதனை அரபியில் இஸ்தின்ஜா எனப்படும். சுத்தத்தை அடைய மண் கட்டி, கற்கள் போன்ற பொருளைப் பயன்படுத்தினால் இஸ்திஜ்மார் என்பார்கள்.

இஸ்தின்ஜா மற்றும் இஸ்திஜ்மார் பற்றிய சட்டங்கள்:

முஸ்லிம் 262

ஸல்மான் ஃபார்ஸி رَضِيَ الله عَنْهُ அறிவிப்பதாவது,

عَنْ سَلْمَانَ، قَالَ قِيلَ لَهُ قَدْ عَلَّمَكُمْ نَبِيُّكُمْ صلى الله عليه وسلم كُلَّ شَىْءٍ حَتَّى الْخِرَاءَةَ . قَالَ فَقَالَ أَجَلْ لَقَدْ نَهَانَا أَنْ نَسْتَقْبِلَ الْقِبْلَةَ لِغَائِطٍ أَوْ بَوْلٍ أَوْ أَنْ نَسْتَنْجِيَ بِالْيَمِينِ أَوْ أَنْ نَسْتَنْجِيَ بِأَقَلَّ مِنْ ثَلاَثَةِ أَحْجَارٍ أَوْ أَنْ نَسْتَنْجِيَ بِرَجِيعٍ أَوْ بِعَظْمٍ .

**பாடம் : 17 கழிப்பிடத்தில் துப்புரவு செய்தல். 437.** அப்துர் ரஹ்மான் பின் யஸீத் (ரஹ்) அவர்கள் கூறியதாவது: சல்மான் அல்ஃபார்சீ (ரலி) அவர்களிடம், மலஜலம் கழிக்கும் முறை உட்பட அனைத்தையுமே உங்கள் இறைத்தூதர் உங்களுக்குக் கற்றுத்தந்திருக்கிறார் (போலும்) என்று (பரிகாசத்துடன்) கேட்கப்பட்டது. (இணைவைப்பாளர்கள்தாம் அவ்வாறு கேட்டனர்.) அதற்கு சல்மான் (ரலி) அவர்கள், ஆம் (உண்மைதான்); மலஜலம் கழிக்கும்போது கிப்லாவை முன்னோக்க வேண்டாமென்றும் (மலஜலம் கழித்த பின்) வலக்கரத்தால் துப்புரவு செய்ய வேண்டாமென்றும், மூன்றை விடக்குறைவான கற்களால் துப்புரவு செய்ய வேண்டாமென்றும்,கெட்டிச் சாணத்தாலோ எலும்பாலோ துப்புரவு செய்ய வேண்டாமென்றும் எங்களை (எங்கள் நபி) தடுத்தார்கள் என்று கூறினார்கள். இந்த ஹதீஸ் மூன்று அறிவிப்பாளர்தொடர்களில் வந்துள்ளது. - சல்மான் அல்ஃபார்சீ (ரலி) அவர்கள் கூறியதாவது: எங்களிடம் இணைவைப்பாளர்கள் (சார்பாக ஒருவர்) உங்கள் தோழர் (நபி (ஸல்) அவர்கள்) உங்களுக்கு மலஜலம் கழிக்கும் முறையைக்கூட கற்றுத்தருவதாக நான் கருதுகிறேன் என்று கூறின(ா)ர். அதற்கு நான் ஆம்(உண்மைதான்);எங்களில் ஒருவர் வலக் கரத்தால் துப்புரவு செய்யக்கூடாதென்றும் (மலஜலம் கழிக்கும்போது) கிப்லாவை முன்னோக்கக் கூடாதென்றும், கெட்டிச்சாணம், எலும்புகள் ஆகியவற்றை (துப்புரவு செய்வதற்காக)ப் பயன்படுத்தக் கூடாதென்றும் அன்னார் எங்களுக்குத் தடை விதித்தார்கள். மேலும், உங்களில் ஒருவர் மூன்றைவிடக் குறைவான கற்களால் துப்புரவு செய்ய வேண்டாம் என்றும் கூறினார்கள் என்றேன். Book : 2 - **ஸஹீஹ் முஸ்லிம்**

தங்கள் இறைத்தூதர் எல்லாவற்றையும் சொல்லிக் கொடுத்தார்கள் என்று மிகவும் பெருமையுடன் கூறினார்கள்.

இஸ்திஜ்மார் பற்றி இதில் உள்ள சட்டம், சுத்தப்படுத்துவதற்கு மூன்று கட்டிகளுக்குக் குறைவாக நாம் எடுத்துக் கொள்ளக் கூடாது.

முன்பு நாம் சொன்ன ஒரு ஹதீது

புஹாரி 156

أَنَّهُ سَمِعَ عَبْدَ اللَّهِ، يَقُولُ أَتَى النَّبِيُّ صلى الله عليه وسلم الْغَائِطَ، فَأَمَرَنِي أَنْ آتِيَهُ بِثَلاَثَةِ أَحْجَارٍ، فَوَجَدْتُ حَجَرَيْنِ، وَالْتَمَسْتُ الثَّالِثَ فَلَمْ أَجِدْهُ، فَأَخَذْتُ رَوْثَةً، فَأَتَيْتُهُ بِهَا، فَأَخَذَ الْحَجَرَيْنِ وَأَلْقَى الرَّوْثَةَ وَقَالَ " هَذَا رِكْسٌ "

**பாடம் : 21 கெட்டிச் சாணக்கின் மூலம் சுக்தம் செய்யக்கூடாது. 156.** 'நபி (ஸல்) அவர்கள் கழிப்பிடத்திற்குச் சென்றபோது, மூன்று கற்களைக் கொண்டு வருமாறு எனக்குக் கட்டளையிட்டார்கள். நான் இரண்டு கற்களைப் பெற்றுக் கொண்டேன். மூன்றாவது கல்லைக் கேடிப் பார்க்கேன். கிடைக்கவில்லை. ஒரு விட்டையை எடுக்குக் கொண்டு வந்தேன். அவர்கள் விட்டையை எறிந்துவிட்டு 'இது அசுத்தமானது' என்று கூறினார்கள்' என அப்துல்லாஹ் இப்னு மஸ்வூத்(ரலி) அறிவித்தார். Book : 4 - **ஸஹீஹுல் புகாரி**

இப்னு மஸ்வூதைத் திருப்பி அனுப்பினார்கள் என்ற செய்தி இங்கு தெளிவாகக் கூறப்படவில்லை. ஆனால் முஸ்னத் அஹ்மத் 450ல் அது தெளிவாகக் கூறப்பட்டுள்ளது. புஹாரியின் ஹதீதை ஆதாரமாகக் கொண்டு இரண்டு கற்களைக் கொண்டு சுத்தப்படுத்தலாம் என்பார்கள். ஆனால் முஸ்னத் அஹ்மதில் மூன்றாவது கல்லை எடுத்துவருமாறு கூறப்பட்டுள்ளதால், மூன்று கற்களைத்தான் பயன்படுத்த வேண்டும்.

இதன் அடிப்படையில் தண்ணீரை அல்லாமல், மண்கட்டி போன்றவற்றைக் கொண்டு, இஸ்திஜ்மார் செய்வது என்றால் மூன்று தடவைகள் மூன்று கற்களைக் கொண்டு சுத்தப்படுத்த வேண்டும் என்பது அவசியமாகும். ஒரு கல்லைக் கொண்டு சுத்தப்படுத்தப்பட்டாலும், மற்ற இரண்டு கற்களைக் கொண்டும் சுத்தப்படுத்த வேண்டும்.

இஸ்திஜ்மார் செய்வதற்கு, கற்கள், மண் கட்டி அல்லாமல், மெல்லிழை காகிதம் (tissue paper), மரக்கட்டை போன்ற பொருட்களைக் கொண்டு சுத்தப்படுத்தலாம். அதற்கான ஆதாரம் முந்தைய ஸல்மான் ஃபார்ஸி அறிவிக்கும் ஹதீதாகும். அதன்படி விட்டை மற்றும் எலும்பு ஆகிய இரண்டைத்தான் ரஸுலுல்லாஹ் صَلَّى اللّٰه عَلَيْهِ وَسَلَّمَ தடை செய்துள்ளார்கள். மண் கட்டி மற்றும் கற்கள் மட்டும் என்று குறிப்பிட்டுச் சொல்லாமல், எலும்பு மற்றும் விட்டையை மட்டும் தடுத்துள்ளார்கள். அவை ஜின்களின் உணவாகும். எனவே அந்த இரண்டைத் தவிர வேறு எதனைக் கொண்டும் இஸ்திஜ்மார் செய்யலாம். இவ்வாறு ஜின்களின் உணவைத் தடுத்ததை வைத்து, நாம் உண்ணக் கூடிய உணவும் தடுக்கப்பட்டதாகிவிடுகிறது.

மேலும் தண்ணீர் இருக்கும் நிலையிலும், தூய்மைக்கு இஸ்திஜ்மார் செய்யலாம்.

ஆறாவதாக, ஒரு சில இடங்களில் மல ஜலம் கழிப்பது தடை செய்யப்பட்டுள்ளது.

1. பொது வழி.
2. மக்களுக்கு நிழல் தரும் இடம். மரத்தின் அடியில், நிழல் தரும் கட்டிடம் போன்றவை.

அபு ஹுரைராஹ் رَضِيَ اللّٰه عَنْهُ அறிவிப்பதாவது:

عَنْ أَبِي هُرَيْرَةَ، أَنَّ رَسُولَ اللَّهِ صلى الله عليه وسلم قَالَ " اتَّقُوا اللَّعَّانَيْنِ " . قَالُوا وَمَا اللَّعَّانَانِ يَا رَسُولَ اللَّهِ قَالَ " الَّذِي يَتَخَلَّى فِي طَرِيقِ النَّاسِ أَوْ فِي ظِلِّهِمْ "

ரஸுலுல்லாஹ் صَلَّى اللّٰه عَلَيْهِ وَسَلَّمَ கூறியுள்ளார்கள், "சாபத்தைத் தூண்டும் இரண்டு காரியங்கள் குறித்து உங்களைப் பாதுகாத்துக் கொள்ளுங்கள்." "ரஸுலுல்லாஹ் صَلَّى اللّٰه عَلَيْهِ وَسَلَّمَ அவர்களே! சாபத்திற்குரிய அந்த இரண்டு செயல்கள் எவை?" எனக் கேட்டார்கள். அதற்கு, "நடைபாதையில்

அல்லது அவர்களின் (ஓய்விட) நிழல்களில் மலம் கழிப்பதுதான் என்று ரஸுலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ விடை அளித்தார்கள்.

3. தேங்கி நிற்கும் தண்ணீர்: இதிலும் சிறுநீர் கழிப்பது தடுக்கப்பட்டுள்ளது.

முஸ்லிம் 281:

ஜாபிர் رَضِي الله عَنْهُ அறிவிப்பதாவது,

عَنْ جَابِرٍ، عَنْ رَسُولِ اللَّهِ صلى الله عليه وسلم أَنَّهُ نَهَى أَنْ يُبَالَ فِي الْمَاءِ الرَّاكِدِ .

**பாடம் : 28 தேங்கி நிற்கும் நீரில் சிறுநீர் கழிக்க வந்துள்ள தடை. 474.** ஜாபிர் (ரலி) அவர்கள் கூறியதாவது: தேங்கி நிற்கும் தண்ணீரில் சிறுநீர் கழிக்க வேண்டாம் என்று அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் தடை விதித்தார்கள். இந்த ஹதீஸ் மூன்று அறிவிப்பாளர்தொடர்களில் வந்துள்ளது. Book : 2 - **ஸஹீஹ் முஸ்லிம்**

சிறுநீருக்குத் தடை இருக்கும்போது, மலத்திற்கும் தடை என எடுத்துக் கொள்ள வேண்டும்.

4. குளியலறை: இதில் சிறுநீர் கழிப்பதும் தடுக்கப்பட்டுள்ளது.

அபு தாவூத் 28

அபு ஹுரைராஹ் رَضِي الله عَنْهُ அவர்களுடன் இருக்கும் ஒரு மனிதர் அறிவிப்பதாவது,

قَالَ لَقِيتُ رَجُلاً صَحِبَ النَّبِيَّ صلى الله عليه وسلم كَمَا صَحِبَهُ أَبُو هُرَيْرَةَ قَالَ نَهَى رَسُولُ اللَّهِ صلى الله عليه وسلم أَنْ يَبُولَ فِي مُغْتَسَلِهِ ........

“ரஸுலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ குளியலறையில் சிறுநீர் கழிப்பதைத் தடுத்தார்கள்.” அவ்வாறு செய்யும்போது, மனதில் சிறுநீர் நமது உடலில் பட்டதா என்பது போன்ற குழப்பங்கள் ஏற்படக் கூடும்.

5. பொந்துகள், ஓட்டைகள் ஆகியவற்றில் சிறுநீர் கழிப்பதும் தடுக்கப்பட்டுள்ளது.

அபு தாவூத் 29

அப்துல்லாஹ் இப்னு ஸர்ஜிஸ் رَضِي الله عَنْهُ அறிவிப்பதாவது,

عَنْ عَبْدِ اللَّهِ بْنِ سَرْجِسَ، أَنَّ رَسُولَ اللَّهِ صلى الله عليه وسلم نَهَى أَنْ يُبَالَ فِي الْجُحْرِ . قَالَ قَالُوا لِقَتَادَةَ مَا يُكْرَهُ مِنَ الْبَوْلِ فِي الْجُحْرِ قَالَ كَانَ يُقَالُ إِنَّهَا مَسَاكِنُ الْجِنِّ.

“ஓட்டைகளில் சிறுநீர் கழிப்பதை ரஸுலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ தடுத்தார்கள். அதற்கான காரணம் அவை ஜின்கள் வாழும் இடம் என கத்தாதாஹ் கூறினார்கள்.” இந்த ஹதீத் பலவீனமான ஒன்றாக இருந்தாலும், உயிரனங்கள் ஏதேனும் அதனுள் இருக்கலாம் என்பதற்காக அவ்வாறு செய்யாமல் இருக்கலாம். ஹராம் என்று தடுக்கப்பட்டதற்கு தெளிவான ஆதாரம் இல்லை என்றாலும் இதனைத் தவிர்க்க வேண்டும்

6. மண்ணறை: இதிலும் தடுக்கப்பட்டுள்ளது.

இப்னு மாஜாஹ் 1567:

உக்பா பின் ஆமிர் رَضِي الله عَنْهُ அறிவிப்பதாவது,

عَنْ عُقْبَةَ بْنِ عَامِرٍ، قَالَ قَالَ رَسُولُ اللَّهِ ـ صلى الله عليه وسلم ـ " لأَنْ أَمْشِيَ عَلَى جَمْرَةٍ أَوْ سَيْفٍ أَوْ أَخْصِفَ نَعْلِي بِرِجْلِي أَحَبُّ إِلَىَّ مِنْ أَنْ أَمْشِيَ عَلَى قَبْرِ مُسْلِمٍ وَمَا أُبَالِي أَوَسَطَ الْقُبُورِ قَضَيْتُ حَاجَتِي أَوْ وَسَطَ السُّوقِ " .

“நான் மண்ணறை மீது நடப்பதைவிட கத்தி அல்லது கரியின் மீது நடப்பது சிறந்தாகும். மல ஜலம் கழிப்பதைப் பொறுத்தளவில் மண்ணறையும், சந்தை நடக்கும் இடமும் ஒன்றுதான்.”

உயிரோடு இருப்பவர்களுக்கு எவை துன்பம் கொடுக்குமோ, அவை மைய்யத்தான இருப்பவர்களுக்கும் துன்பத்தைக் கொடுக்கும். அதேபோல், உயிரோடு இருப்பவர்களுக்குக் கண்ணியம் கொடுப்பது போல, மரணித்தவர்களுக்கும் கண்ணியம் கொடுக்க வேண்டும்.

7. மல ஜலம் கழிக்கும் போது, சிறுநீர் தம் மீது படாதவாறு பார்க்க வேண்டும். கவனக் குறைவு கூடாது.

புஹாரி 216

مَرَّ النَّبِيُّ صلى الله عليه وسلم بِحَائِطٍ مِنْ حِيطَانِ الْمَدِينَةِ أَوْ مَكَّةَ، فَسَمِعَ صَوْتَ إِنْسَانَيْنِ يُعَذَّبَانِ فِي قُبُورِهِمَا، فَقَالَ النَّبِيُّ صلى الله عليه وسلم " يُعَذَّبَانِ، وَمَا يُعَذَّبَانِ فِي كَبِيرٍ "، ثُمَّ قَالَ " بَلَى، كَانَ أَحَدُهُمَا لاَ يَسْتَتِرُ مِنْ بَوْلِهِ، وَكَانَ الآخَرُ يَمْشِي بِالنَّمِيمَةِ ". ثُمَّ دَعَا بِجَرِيدَةٍ فَكَسَرَهَا كِسْرَتَيْنِ، فَوَضَعَ عَلَى كُلِّ قَبْرٍ مِنْهُمَا كِسْرَةً. فَقِيلَ لَهُ يَا رَسُولَ اللَّهِ لِمَ فَعَلْتَ هَذَا قَالَ " لَعَلَّهُ أَنْ يُخَفَّفَ عَنْهُمَا مَا لَمْ تَيْبَسَا أَوْ إِلَى أَنْ يَيْبَسَا ".

**பாடம் : 55 சிறுநீரிலிருந்து (உடையையும் உடலையும்) மறைக்காமலிருப்பது பெரும் (பாவச்) செயல்களில் ஒன்றாகும். 216.** நபி(ஸல்) அவர்கள் மக்கா அல்லது மதீனாவில் ஒரு தோட்டத்தின் பக்கமாகச் சென்று கொண்டிருந்தபோது, கப்ரில் வேதனை செய்யப்படும் இரண்டு மனிதர்களின் சப்தத்தைச் செவியுற்றார்கள். அப்போது, 'இவர்கள் இருவரும் வேதனை செய்யப்படுகிறார்கள். ஒரு பெரிய விஷயத்திற்காக (பாவத்திற்காக) இவர்கள் இருவரும் வேதனை செய்யப்படவில்லை' என்று சொல்லிவிட்டு, 'இருப்பினும் (அது பெரிய விஷயம்தான்) அவ்விருவரில் ஒருவர், தாம் சிறு நீர் கழிக்கும்போது மறைப்பதில்லை. மற்றொருவர், புறம்பேசிக் திரிந்தார்' என்று கூறிவிட்டு ஒரு பேரீச்ச மட்டையைக் கொண்டு வரச் சொல்லி அதை இரண்டாகப் பிளந்து ஒவ்வொரு கப்ரின் மீதும் ஒரு துண்டை வைத்தார்கள். அது பற்றி நபி(ஸல்) அவர்களிடம் 'நீங்கள் ஏன் இவ்வாறு செய்தீர்கள்?' என்று கேட்கப்பட்டதற்கு, 'அந்த இரண்டு மட்டைத் துண்டுகளும் காயாமல் இருக்கும் போதெல்லாம் அவர்கள் இருவரின் வேதனை குறைக்கப்படக் கூடும்' என்று இறைத்தூதர்(ஸல்) அவர்கள் கூறினார்கள்: என இப்னு அப்பாஸ்(ரலி) அறிவித்தார். Book : 4 - **ஸஹீஹுல் புகாரி**

எனவே சிறுநீர் நம்மீது படாதவாறு பார்த்துக் கொள்ள வேண்டும். அவ்வாறு நாம் அறியாத நிலையில் அந்த ஆடையுடன் தொழுதால், தொழுகை ஏற்றுக் கொள்ளப்படாமல் போகலாம்.

8. பேசுவது, திக்று செய்வது, குர்ஆன் ஓதுவது ஆகியன கூடாது.

இப்னு மாஜாஹ் 342

அபு ஸயீத் குர்தி رَضِي الله عَنْهُ அறிவிப்பதாவது,

عَنْ أَبِي سَعِيدٍ الْخُدْرِيِّ، أَنَّ رَسُولَ اللَّهِ ـ صلى الله عليه وسلم ـ قَالَ " لاَ يَتَنَاجَى اثْنَانِ عَلَى غَائِطِهِمَا يَنْظُرُ كُلُّ وَاحِدٍ مِنْهُمَا إِلَى عَوْرَةِ صَاحِبِهِ فَإِنَّ اللَّهَ عَزَّ وَجَلَّ يَمْقُتُ عَلَى ذَلِكَ

“ரஸுலுல்லாஹ் صَلَّى الله عَلَيْهِ وَسَلَّمَ கூறியுள்ளார்கள், “எந்த இரண்டு நபர்களும், மற்றவர்களை மல ஜலம் கழிக்கும் நிலையில் பார்த்துக் கொண்டு பேசக் கூடாது. மேலான, உயர்வான அல்லாஹ் அதனை வெறுக்கிறான்.”

இப்னு உமர் رَضِي الله عَنْهُ ஒரு தடவை ரஸுலுல்லாஹ் صَلَّى الله عَلَيْهِ وَسَلَّمَ அவர்களுக்கு ஸலாம் சொன்ன பிறகு, அவர்கள் சிறுநீர் கழித்து முடித்தபின்பு, கட்டியால் தயம்மும் செய்த பிறகுதான் பதில் கூறினார்கள். குளியலறையில் இருக்கும்போதும் பேசாமல் இருக்க வேண்டும். ஆனால் எதனையும் ஆரம்பிக்கும்போது, பிஸ்மி கொண்டு ஆரம்பிக்கும்போது, வாயில் மொழியாமலும், உதட்டை அசைக்காமலும், மனதளவில் கூறிக் கொள்ளலாம்.

9. குர்ஆன் வசனங்கள், ஹதீதுகள் எழுதப்பட்ட காகிதங்களை கொண்டு செல்வதைத் தவிர்க்க வேண்டும்.

அபு தாவூத் 19:

அனஸ் رَضِي الله عَنْهُ அறிவிப்பதாவது,

عَنْ أَنَسٍ أَنَّ النَّبِيَّ صلى الله عليه وسلم اتَّخَذَ خَاتَمًا مِنْ وَرِقٍ ثُمَّ أَلْقَاهُ . وَالْوَهَمُ فِيهِ مِنْ هَمَّامٍ وَلَمْ يَرْوِهِ إِلاَّ هَمَّامٌ .

"ரஸூலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ கழிவறைக்குள் செல்லும்போது தங்களின் மோதிரத்தைக் கழற்றிவிட்டுச் செல்வார்கள்."

அவர்களின் மோதிரத்தில் முத்திரை வைப்பதற்காக 'முஹம்மதுர் ரஸூலுல்லாஹ்' என்று பொறிக்கப்பட்டிருந்தது. அல்லாஹ் வின் பெயர் இருந்ததால் அவ்வாறு அவர்கள் செய்வார்கள். இந்த ஹதீது பலவீனமாக இருந்தாலும், அல்லாஹ் பெயர் கொண்ட எந்த ஒன்றையும் குளியறைக்குக் கொண்டு செல்வதைத் தவிர்க்க வேண்டும். தொலைந்து விடும் என்ற அச்சம் காரணமாக எடுத்துச் செல்லலாம் என்றாலும், முடிந்தவரை தவிர்ப்பதே நல்லது. முழுக் குர்ஆனைக் கொண்டு போவது அறவே கூடாது.

10. நாம் வசிக்கக் கூடிய இடத்தில் தேவைப்படும்போது ஒரு பாத்திரத்தை சிறுநீர் கழிக்கப் பயன்படுத்தலாம். இரவு நேரத்தில் பயன்படுத்துவதற்காகத் தங்களின் கட்டிலின் அடியில் ஒரு மரத்திலான பாத்திரத்தை ரஸூலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ வைத்திருப்பார்கள்.

حَدَّثَنَا مُحَمَّدُ بْنُ عِيسَى، حَدَّثَنَا حَجَّاجٌ، عَنِ ابْنِ جُرَيْجٍ، عَنْ حُكَيْمَةَ بِنْتِ أُمَيْمَةَ بِنْتِ رُقَيْقَةَ، عَنْ أُمِّهَا، أَنَّهَا قَالَتْ كَانَ لِلنَّبِيِّ صلى الله عليه وسلم قَدَحٌ مِنْ عَيْدَانٍ تَحْتَ سَرِيرِهِ يَبُولُ فِيهِ بِاللَّيْلِ.

Narrated Umaymah daughter of Ruqayqah:
The Prophet (ﷺ) had a wooden vessel under his bed in which he would urinate at night.

11. தேவைப்பட்டால் ஆண்கள் நின்று கொண்டு சிறுநீர் கழிக்கலாம். இது வெறுக்கத்தக்க காரியமோ அல்லது மக்ரூஹோ அல்ல. சிறுநீர் படாமல் இருப்பதற்கு எந்த நிலை உகந்ததோ, அந்த நிலையில் சிறுநீர் கழிக்கலாம்.

புஹாரி 224

ஹுதை.ஃபாஹ் رَضِي الله عَنْهُ அறிவிப்பதாவது,

عَنْ حُذَيْفَةَ، قَالَ أَتَى النَّبِيُّ صلى الله عليه وسلم سُبَاطَةَ قَوْمٍ فَبَالَ قَائِمًا، ثُمَّ دَعَا بِمَاءٍ، فَجِئْتُهُ بِمَاءٍ فَتَوَضَّأَ.

**பாடம் : 60 நின்று கொண்டும் உட்கார்ந்து கொண்டும் சிறுநீர் கழித்தல். 224.** 'நபி(ஸல்) அவர்கள் ஒரு சமூகத்தாரின் குப்பை கூளங்கள் போடும் இடத்தில் நின்று சிறுநீர் கழித்தார்கள். பின்னர் தண்ணீர் கொண்டு வரக் கூறினார்கள். நான் தண்ணீர் கொண்டு வந்தேன். அதில் நபி(ஸல்) அவர்கள் உளூச் செய்தார்கள்' என ஹுதைஃபா(ரலி) அறிவித்தார். Book : 4 - **ஸஹீஹுல் புகாரி**

குப்பை கொட்டிக்கிடந்த பகுதியில் அமர்ந்து சிறுநீர் கழிப்பதால், அசுத்தம் மேல் பட வாய்ப்புள்ளதால் அவ்வாறு செய்திருக்கலாம். மேலும் பள்ளிவாசலில் ஒரு கிராமவாசி சிறுநீர் கழித்ததாக நாம் அறிந்த அந்த ஹதீதில் அவர் நின்று கொண்டு சிறுநீர் கழித்ததாக வந்துள்ளது. பள்ளிவாசலுக்குள் சிறுநீர் கழித்தது குறித்து கூடாது என்று விளக்கிய ரஸூலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ, அவரிடம் நின்று கொண்டு சிறுநீர் கழிப்பது குறித்து ஏதும் கூறவில்லை. தவறு என்றால் அதனையும் அவர்கள் சுட்டிக்

காட்டிருப்பார்கள். எனவே நம்மீது சிறுநீரோ அல்லது அசுத்தமோ படாமல் இருப்பதற்கு எது வசதியோ அவ்வாறு நாம் செய்யலாம்.

நின்று கொண்டு சிறுநீர் கழிக்கக் கூடாது என வந்துள்ள ஹதீது பலவீனமானதாகும்.

இப்னு மாஜாஹ் 308

உமர் رَضِي الله عَنْهُ அறிவிப்பதாவது,

عَنْ عُمَرَ، قَالَ رَآنِي رَسُولُ اللَّهِ ـ صلى الله عليه وسلم ـ وَأَنَا أَبُولُ قَائِمًا فَقَالَ " يَا عُمَرُ لاَ تَبُلْ قَائِمًا " . فَمَا بُلْتُ قَائِمًا بَعْدُ .

“நான் நின்று கொண்டு சிறுநீர் கழித்ததைப் பார்த்த ரஸூலுல்லாஹ் صَلَّى الله عَلَيْهِ وَسَلَّمَ கூறினார்கள், “உமரே! நின்று கொண்டு சிறுநீர் கழிக்க வேண்டாம்.” அதற்குப் பின்னால் நான் ஒருபோதும் நின்று கொண்டு சிறுநீர் கழித்ததில்லை.”

எனவே ஆதாரப்பூர்வமான அறிவிப்பும், பலவீனமான அறிவிப்பும் முரண்படலாம் என்பதை அறிந்து கொள்ள வேண்டும். ஷைக் அல்பானி பலவீனமான அறிவிப்புகளை ஒரு நூலாகத் தொகுத்து, அதனை அமல் செய்ய முற்பட்டால் எவ்வாறு முரண்பாடுகள் ஏற்பட வாய்ப்பு உண்டு என்பதையும் குறிப்பிட்டுள்ளார்கள். அன்னை ஆயிஷா அவர்களின் கூற்றின்படி, ரஸூலுல்லாஹ் صَلَّى الله عَلَيْهِ وَسَلَّمَ நின்று சிறுநீர் கழித்ததில்லை என்ற கூற்றில் முரண்பாடு இல்லை. அவர்கள் வீட்டில் கண்டதைக் கூறியுள்ளார்கள். வெளியில் அவர்கள் நின்று சிறுநீர் கழித்ததைப் பார்க்க வாய்ப்பில்லாததால் அவ்வாறு கூறியுள்ளார்கள். எனவே நாம் தேவைப்படும் போது, வசதிப்படி சிறுநீர் கழிக்கலாம்.

## Fiqh 7 –Ten characteristics of the fitrah

## ஃபிக்ஹ் வகுப்பு 7 - பத்து இயற்கை மரபுகள்

**ஆசிரியர்: அஷ் ஷெய்க் உவைஸ் உமரி நளீரி**

இன்றைய பாடத்தில் பத்து இயற்கை மரபுகளைப் பற்றி காணப் போகிறோம். ஒரு சில விஷயங்கள் தூய்மையோடு (தஹாரத்) தொடர்பு கொண்டவை. அதனைக் கடைபிடிக்காமல் இருந்தால் தூய்மை கெட்டுவிடலாம். ஒரு சில விஷயங்கள் தூய்மையைப் பாதிக்காமல் இருந்தாலும், முழுமையான தூய்மையை அடைய அவற்றையும் கடைபிடிக்க வேண்டும்.

முஸ்லிம் 261.

அன்னை ஆயிஷா رَضِيِ الله عَنْهَا அறிவிக்கிறார்கள்,

عَنْ عَائِشَةَ، قَالَتْ قَالَ رَسُولُ اللَّهِ صلى الله عليه وسلم " عَشْرٌ مِنَ الْفِطْرَةِ قَصُّ الشَّارِبِ وَإِعْفَاءُ اللِّحْيَةِ وَالسِّوَاكُ وَاسْتِنْشَاقُ الْمَاءِ وَقَصُّ الأَظْفَارِ وَغَسْلُ الْبَرَاجِمِ وَنَتْفُ الإِبْطِ وَحَلْقُ الْعَانَةِ وَانْتِقَاصُ الْمَاءِ " . قَالَ زَكَرِيَّاءُ قَالَ مُصْعَبٌ وَنَسِيتُ الْعَاشِرَةَ إِلاَّ أَنْ تَكُونَ الْمَضْمَضَةَ . زَادَ قُتَيْبَةُ قَالَ وَكِيعٌ انْتِقَاصُ الْمَاءِ يَعْنِي الاِسْتِنْجَاءَ .

**436.** அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: பத்து விஷயங்கள் இயற்கை மரபுகளில் அடங்கும். (அவையாவன:) மீசையைக் கத்தரிப்பது, தாடியை வளர்ப்பது, பல் துலக்குவது, நாசிக்கு நீர் செலுத்துவது, நகங்களை வெட்டுவது, விரல் கணுக்களைக் கழுவுவது, அக்குள் முடிகளை அகற்றுவது, மர்ம உறுப்பின் முடிகளை மழிப்பது, (மல ஜலம் கழித்த பின்) தண்ணீரால் துப்புரவு செய்வது. இதை ஆயிஷா (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்.
இந்த ஹதீஸ் மூன்று அறிவிப்பாளர்தொடர்களில் வந்துள்ளது. (இதன் அறிவிப்பாளர்களில் ஒருவரான) ஸகரிய்யா பின் அபீஸாயிதா (ரஹ்) அவர்கள் கூறுகின்றார்கள்: (இந்த ஹதீஸை எனக்கு அறிவித்த) முஸ்அப் பின் ஷைபா (ரஹ்) அவர்கள், பத்தாவது விஷயத்தை நான் மறந்துவிட்டேன். அது வாய் கொப்புளிப்பதாய் இருக்கலாம் என்று கூறினார்கள். குதைபா (ரஹ்) அவர்களது அறிவிப்பில், (இந்த ஹதீஸின் மூலத்திலுள்ள) இன்திகாஸுல் மாயி எனும் சொற்றொடருக்கு (மலஜலம் கழிக்க பின்) துப்புரவு செய்தல் என்று பொருள் எனவும் அதிகப்படியாக இடம்பெற்றுள்ளது. Book: 2 - **ஸஹீஹ் முஸ்லிம்**

ரஸூலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ கூறியுள்ளார்கள், “பத்து காரியங்கள் ஃபித்ராவை (இயற்கை மரபுகளைச்) சேர்ந்தவை. அவை

1) மீசையைக் கத்திரிப்பது
2) தாடியை வளர்ப்பது
3) பல் துலக்குவது
4) நாசிக்கு நீர் செலுத்துவது
5) நகங்களை வெட்டுவது
6) விரல் கணுக்களை கழுவுவது
7) அக்குள் முடிகளை நீக்குவது
8) அந்தரங்க உறுப்புகளின் முடிகளை நீக்குவது
9) மல ஜலம் கழித்தபின்பு தண்ணீரால் கழுவுவது.

இந்த ஹதீதை அறிவித்த அறிவிப்பாளர் முஸ்அப் இப்னு அபு ஷைபாஹ் தாம் பத்தாவது விஷயத்தை தாம் மறந்து விட்டதாகக் குறிப்பிடுகிறார். அது வாய் கொப்பளிப்பதாக இருக்காலம் என்றும் கூறுகிறார்.

முஸ்லிம் 257:

அபு ஹுரைராஹ் رَضِـي الله عَنْهُ அறிவிப்பதாவது,

ரஸுலுல்லாஹ் صَلَّى الله عَلَيْهِ وَسلَّمَ கூறியுள்ளார்கள்,

عَنْ أَبِي هُرَيْرَةَ، عَنِ النَّبِيِّ صلى الله عليه وسلم قَالَ " الْفِطْرَةُ خَمْسٌ - أَوْ خَمْسٌ مِنَ الْفِطْرَةِ - الْخِتَانُ وَالاِسْتِحْدَادُ وَتَقْلِيمُ الأَظْفَارِ وَنَتْفُ الإِبْطِ وَقَصُّ الشَّارِبِ "

**430.** அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: இயற்கை மரபுகள் ஐந்தாகும். விருத்த சேதனம் செய்வது, மர்ம உறுப்பின் முடிகளைக் களை(ந்து கொள்வதற்காகச் சவரக்கத்தியைப் பயன்படுத்து)வது, மீசையைக் கத்தரித்துக் கொள்வது, நகங்களை வெட்டிக்கொள்வது, அக்குள் முடிகளை அகற்றிக்கொள்வது ஆகியவைதாம் அவை. இதை அபூஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள். இந்த ஹதீஸ் இரு அறிவிப்பாளர்தொடர்களில் வந்துள்ளது. Book : 2 - **ஸஹீஹ் முஸ்லிம்**

“∴பித்ராவைச் சேர்ந்த ஐந்து காரியங்கள், கத்னா செய்வது, அந்தரங்க உறுப்புகளின் முடிகளை நீக்குவது, நகங்களை வெட்டுவது, அக்குள் முடிகளை நீக்குவது, மீசையைக் கத்திரிப்பது.”

கத்னா செய்வதையும் முந்தைய பத்து காரியங்களுடன் சேர்த்தால் பதினொன்றாகும். சில அறிஞர்கள் முப்பது விஷயங்களைப் பட்டியலிட்டுக் கூறியுள்ளார்கள்.

மீசையைக் கத்திரித்தல்.

முஸ்லிம் 258:

அனஸ் رَضِـي الله عَنْهُ அறிவிப்பதாவது,

عَنْ أَنَسِ بْنِ مَالِكٍ، قَالَ قَالَ أَنَسٌ وُقِّتَ لَنَا فِي قَصِّ الشَّارِبِ وَتَقْلِيمِ الأَظْفَارِ وَنَتْفِ الإِبْطِ وَحَلْقِ الْعَانَةِ أَنْ لاَ نَتْرُكَ أَكْثَرَ مِنْ أَرْبَعِينَ لَيْلَةً .

**431.** அனஸ் பின் மாலிக் (ரலி) அவர்கள் கூறியதாவது: மீசையைக் கத்தரிப்பது, நகங்களை வெட்டுவது, அக்குள் முடிகளை அகற்றுவது, மர்ம உறுப்பின் முடிகளை மழிப்பது ஆகியவற்றில் நாற்பது நாட்களுக்கு மேல் விட்டு வைக்கக் கூடாதென எங்களுக்குக் கால வரம்பு விதிக்கப்பட்டிருந்தது. இந்த ஹதீஸ் இரு அறிவிப்பாளர்தொடர்களில் வந்துள்ளது. Book: 2 - **ஸஹீஹ் முஸ்லிம்**

மீசையைக் கத்திரிப்பது, நகங்களை வெட்டுவது, அக்குள் மற்றும், அந்தரங்க உறுப்புகளின் முடிகளை நீக்குவதற்கான நேர வரையறை, அவற்றை நாற்பது இரவுகளுக்கு மிகாமல் விட்டுவிடக் கூடாது.” அதாவது அதிகப்பட்ச நாட்கள் நாற்பது ஆகும். நாம் வாரத்திற்கு ஒரு தடவை என்று வைத்துக் கொள்வது நல்லது. நாற்பது நாட்களைத் தாண்டினால், பாவமாக அமையக் கூடும். நபிவழிக்கு மாற்றமானது.

மீசையை மழிக்க வேண்டுமா? உதடுகள் மறையுமாறு மீசையை வளரவிடக் கூடாது. அவை தெரியுமாறு மீசையை வெட்ட வேண்டும். மழிக்க வேண்டும் என்று எந்த அறிவிப்பிலும் சொல்லப்படவில்லை. قَصُّ الشَّارِبِ என்றுதான் சொல்லப்பட்டிருக்கிறது. புஹாரியின் மற்றொரு அறிவிப்பில் அதிகமாக வெட்டுவது என்ற பொருளில் கூறப்பட்டுள்ளது. எனவே மழிப்பது ஸுன்னாஹ் அல்ல. உமர் رَضِـي الله عَنْهُ அவர்கள் பதற்றத்திலிருக்கும் போது, மீசையின் முடிகளைப் பிடுங்குவார்கள். ஸஹாபாக்களும் மீசையைக் கத்திரிப்பார்கள். இமாம் மாலிக் رَحْمَةُ الله عَلَيْهِ , மீசையை மழிப்பவர்களை அடிக்க வேண்டும் எனக் கூறியுள்ளார்கள். ஒழுக்கத்தைச் சொல்லித் தருவதற்காக அவ்வாறு அவர்கள் செய்யச் சொன்னார்கள். மீசையைக் கத்திரிப்பது, கட்டாயக் கடமையாகும். நாற்பது நாட்கள் தாண்டிவிட்டால் பாவமாகும். நபிவழிக்கு மாற்றமாகும்.

திர்மிதி 2761

ஜைத் இப்னு அர்கம் رَضِي الله عَنْهُ அறிவிப்பதாவது,

عَنْ زَيْدِ بْنِ أَرْقَمَ، أَنَّ رَسُولَ اللَّهِ صلى الله عليه وسلم قَالَ " مَنْ لَمْ يَأْخُذْ مِنْ شَارِبِهِ فَلَيْسَ مِنَّا "

ரஸுலுல்லாஹ் صَلَّى الله عَلَيْهِ وَسَلَّمَ கூறியுள்ளார்கள், “மீசையை யார் கத்திரிக்கவில்லையோ, அவர் நம்மைச் சார்ந்வர் அல்லர்.”

எனவே பெரிய மீசைகள் வைப்பது கூடாது.

தாடியை வளர்ப்பது:

இது கட்டாயக் கடமை. மழிப்பது ஹராமாகும். இதில் கருத்து வேறுபாடு ஏதும் இல்லை. முதல் காரணம் ரஸுலுல்லாஹ் صَلَّى الله عَلَيْهِ وَسَلَّمَ அவர்கள் கூறிய ஒன்று. கட்டளையிட்டிருக்கிறார்கள். மற்றொரு காரணம், முஷ்ரிக்கீன்களுக்கு மாறு செய்வதற்காகவும் தாடியை வளரக்க வேண்டும். குறிப்பாக ரஸுலுல்லாஹ் صَلَّى الله عَلَيْهِ وَسَلَّمَ காலத்து யூதர்கள் மற்றும் ஈரானிலுள்ள மஜுஸிகள் தாடியை மழிப்பார்கள்.

புஹாரி 5892

இப்னு உமர் رَضِي الله عَنْهُ அறிவிப்பதாவது,

عَنِ ابْنِ عُمَرَ، عَنِ النَّبِيِّ صلى الله عليه وسلم قَالَ " خَالِفُوا الْمُشْرِكِينَ، وَفِّرُوا اللِّحَى، وَأَحْفُوا الشَّوَارِبَ ".

**5892.** இறைத்தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்' இணைவைப்பாளர்களுக்கு மாறு செய்யுங்கள்: தாடிகளை வளரவிடுங்கள். மீசையை ஒட்ட நறுக்குங்கள். என இப்னு உமர்(ரலி) அறிவித்தார். (இதன் அறிவிப்பாளர்களில் ஒருவரான நாஃபிஉ (ரஹ்) அவர்கள் கூறுகிறார்கள்: இப்னு உமர்(ரலி) அவர்கள் ஹஜ் அல்லது உம்ராச் செய்தால் தம் தாடியைப் பிடிப்பதுப் பார்ப்பார்கள். (ஒரு பிடிக்கு) மேலதிகமாக உள்ளதை (கத்தரித்து) எடுத்து விடுவார்கள். Book: 77 - **ஸஹீஹுல் புகாரி**

மூன்றாவது காரணம், பெண்களுக்கு ஒப்பாக நடப்பதற்கு இது மாற்றமாகும். அப்படிச் செய்பவர்களை ரஸுலுல்லாஹ் صَلَّى الله عَلَيْهِ وَسَلَّمَ சபித்திருக்கிறார்கள்.

புஹாரி 5885

இப்னு அப்பாஸ் رَضِي الله عَنْهُ அறிவிப்பதாவது,

عَنِ ابْنِ عَبَّاسٍ ـ رضى الله عنهما ـ قَالَ لَعَنَ رَسُولُ اللَّهِ صلى الله عليه وسلم الْمُتَشَبِّهِينَ مِنَ الرِّجَالِ بِالنِّسَاءِ، وَالْمُتَشَبِّهَاتِ مِنَ النِّسَاءِ بِالرِّجَالِ. تَابَعَهُ عَمْرٌو أَخْبَرَنَا شُعْبَةُ.

**5885.** இப்னு அப்பாஸ் (ரலி) அறிவித்தார். இறைத்தூதர்(ஸல்) அவர்கள் ஆண்களில் பெண்களைப் போன்று ஒப்பனை செய்துகொள்பவர்களையும், பெண்களில் ஆண்களைப் போல் ஒப்பனை செய்து கொள்பவர்களையும் சபித்தார்கள். இதே ஹதீஸ் மற்றோர் அறிவிப்பாளர் தொடர் வழியாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. Book: 77 - **ஸஹீஹுல் புகாரி**

ரஸுலுல்லாஹ் صَلَّى الله عَلَيْهِ وَسَلَّمَ கூறியுள்ளார்கள், “பெண்களைப் போல ஒப்பனை செய்யும் ஆண்களையும், ஆண்களைப் போல ஒப்பனை செய்யும் பெண்களையும் அல்லாஹ் சபிக்கிறான்.”

சிலர் இதனை ஸுன்னாஹ்தான் என்று கூறுகிறார்கள். ஆனால் இதனை ரஸுலுல்லாஹ் صَلَّى الله عَلَيْهِ وَسَلَّمَ வலியுறுத்திச் சொல்லியிருக்கிறார்கள். எனவே இது கட்டாயக் கடமையாகும். இதனைச் செய்யாமல் விட்டால் தவறு இல்லை என்று எந்த ஒரு ஆதாரமும் இல்லை. தாடியை மழிப்பது

ஸுன்னாஹ்வுக்கு மாற்றமானதும், ஹராமானதும் ஆகும். கட்டாயம் வைக்க வேண்டும் என்றுதான் ரஸுலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ அவர்கள் கட்டளையிட்டிருக்கிறார்கள். முஷ்ரிக்குகளுக்கும் மாற்றமாக செய்ய வேண்டும். பெண்களுக்கு ஒப்பாக இருக்கக் கூடாது என எல்லா விஷயங்களும் தாடி வளர்ப்பது முஸ்தஹப்.்ப் என்றில்லாமல் கட்டாயமான ஒன்று என அறிந்து கொள்ள வேண்டும்.

ரஸுலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ ஒரு மஜுஸியிடம் அவர் ஏன் தாடியையும், மீசையையும் மழித்துள்ளார் என்று வினவியபோது, தம்முடைய அறிஞர்கள் (ரப்புக்கள்) அவ்வாறு செய்யச் சொன்னதாகக் கூறினார். அதற்குப் பதிலாக, ''எனது ரப், தாடியை வளர்க்கவும், மீசையைக் கத்திரிக்கவும் சொன்னான்.'' என்று ரஸுலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ கூறினார்கள்.

தாடி எந்த அளவுக்கு வைப்பதற்கு இரண்டு வகையான ஆதாரமாக கருத்துகள் உள்ளன. ஒன்றாவது, அதனை எவ்வாறு வளருகிறதோ, அப்படியே விட்டுவிட வேண்டும். வெட்டக் கூடாது. அதற்கான ஆதாரம், தாடி பற்றிய ஹதீதுகளில் சொல்லப்பட்ட சொற்கள். அதனை *வ.்ப்.்பிரு* (وَفِّرُو) என்ற சொல்லுக்கு அடர்த்தியாக விட்டுவிட வேண்டும் என்பதாகும். அறவே வெட்டவே கூடாது. பயன்படுத்தப்பட்டுள்ள மற்றொரு சொல் 'அதனை மறந்து விடுங்கள், மன்னித்துவிடுங்கள்' என்று வந்துள்ளது. ஒருவரை மன்னித்துவிட்டால், அவரது குறையை மீண்டும் குறிப்பிட்டுச் சொல்லாமல் விட்டுவிடுவது போல, தாடியை அப்படியே விட்டுவிடவேண்டும்.

மற்றொரு கருத்து, ஒரு கைப்பிடி அளவிற்கு விட்டுவிட்டு, அதற்குப் பிறகுள்ளதை வெட்டிவிடுவது. அதற்கான ஆதாரம், தாடி குறித்து அறிவித்த அபு ஹுரைராஹ் رَضِي اللهُ عَنْهُ மற்றும் இப்னு உமர் رَضِي اللهُ عَنْهُ ஆகிய இரு ஸஹாபாக்களும், குறிப்பாக ஸுன்னாஹ்வைக் கடைப்பிடிப்பதில் பேணுதல் என்று பெயர் பெற்ற இப்னு உமர் رَضِي اللهُ عَنْهُ

وَكَانَ ابْنُ عُمَرَ إِذَا حَجَّ أَوِ اعْتَمَرَ قَبَضَ عَلَى لِحْيَتِهِ، فَمَا فَضَلَ أَخَذَهُ.

ஹஜ் மற்றும் உம்ராவின் போது, ஒரு கைப்பிடி அளவிற்கு தாடியை விட்டுவிட்டு மீதியை வெட்டிவிடுவார்கள். அபு ஹுரைராஹ் رَضِي اللهُ عَنْهُ எப்போது அவ்வாறு வெட்டினார் என்ற குறிப்பு இல்லை. ஷைக் அல்பானி رَحْمَهُ اللهُ عَلَيْهِ மற்றும் இமாம் அபு ஹனீ.்பா رَحْمَهُ اللهُ عَلَيْهِ ஆகியோர் அந்த இரு ஸஹாபாக்களின் வழிமுறையை எடுத்துக் கொண்டு செயல்பட வேண்டும் என்று கூறியுள்ளார்கள்.

இவை இரண்டு முறைகளை அல்லாமல் நாம் தாடியை எவ்விதமாகவும் வைத்துக் கொள்ளலாம் என்று சொல்வதற்கு ஆதாரம் ஏதும் இல்லை. எனவே இந்த இரண்டு முறையில் ஏதேனும் ஒன்றை எடுத்துக் கொள்ள வேண்டும்.

### பல் துலக்குவது:

இது சம்பந்தமாக, மிஸவாக் குச்சியை வைத்துத்தான் பல் துலக்க வேண்டும் என்பது கிடையாது. அக்காலத்தில் அதனை வைத்து பல் துலக்கினார்கள். மற்ற பல வழிகளையும் அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَى ஏற்படுத்தி வைத்துள்ளதால் நாம் அவற்றையும் எடுத்துக் கொள்ளலாம். பல்லை சுத்தமாக வைத்திருக்க வேண்டும் என்பதுதான் பல் துலக்குவதன் நோக்கம். எனவே மிஸ்வாக்கை வைத்துத்தான் துலக்க வேண்டும் என்று அவசியமில்லை.

இப்னு மாஜாஹ் 289

அபு உமாமாஹ் رَضِي اللهُ عَنْهُ அறிவிப்பதாவது,

عَنْ أَبِي أُمَامَةَ، أَنَّ رَسُولَ اللَّهِ ـ صلى الله عليه وسلم ـ قَالَ " تَسَوَّكُوا فَإِنَّ السِّوَاكَ مَطْهَرَةٌ لِلْفَمِ مَرْضَاةٌ لِلرَّبِّ وَمَا جَاءَنِي جِبْرِيلُ إِلاَّ أَوْصَانِي بِالسِّوَاكِ حَتَّى لَقَدْ خَشِيتُ أَنْ يُفْرَضَ عَلَىَّ وَعَلَى أُمَّتِي وَلَوْلاَ أَنِّي أَخَافُ أَنْ أَشُقَّ عَلَى أُمَّتِي لَفَرَضْتُهُ لَهُمْ وَإِنِّي لأَسْتَاكُ حَتَّى لَقَدْ خَشِيتُ أَنْ أُحْفِيَ مَقَادِمَ فَمِي " .

ரஸூலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ கூறியுள்ளார்கள், “பற்குச்சியைப் பயன்படுத்துங்கள். அது வாயைச் சுத்தப்படுத்தும். உங்களது இரட்சகனை திருப்திபடுத்தும். பல் துலக்குவது பற்றி, அது எனக்கும் எனது சமுதாயத்தினருக்கும் கடமையாகி விடும் என்று அஞ்சக்கூடிய வகையான அறிவுரையுடன் அன்றி ஜிப்ரயீல் என்னிடம் வரவில்லை. எனது சமுதாயத்தினருக்கு மிகவும் கடினமாக இருக்கும் என்று நான் அஞ்சாமல் இருந்திருந்தால், அதனை அவர்களுக்குக் கடமையாக்கி இருப்பேன். எனது ஈறுகள் புண்ணாகிவிடுமோ என்ற அளவிற்கு நான் பல் துலக்குவேன்.”

அடிக்கடி பல் துலக்க வேண்டும் என்பதை இது குறிக்கிறது. குறிப்பாக உளூ செய்யும்போது, தூங்கி எழுந்த பிறகு, வாயில் துர்நாற்றம் ஏற்படும் போது, வீட்டினுள் நுழையும்போது, தொழுகைக்காக இகாமத்திற்குப் பின் நிற்கும்போது ஆகிய இந்த நேரத்தில் பல் துலக்குவது வலியுறுத்தப்பட்ட நேரங்களாகும். இந்த நேரங்களில் மிஸ்வாக் குச்சி இருந்தால் நமக்கு வசதியாக இருக்கும்.

நாசிக்கு நீர் செலுத்துவது:

உளூ செய்யும்போது முக்கியமாக இதனைச் செய்ய வேண்டும். உளூவுடைய பாடத்தில் இதுபற்றி அதிகமாகக் கூறப்படும்.

நகங்களை வெட்டுவது:

முன்னர் சொல்லப்பட்டது போல, அதிகபட்ச வரம்பு நாற்பது நாட்களுக்குள் நகங்களை வெட்ட வேண்டும். வாராவாரம் வெட்டுவது நகங்களுக்கு இடையில் அழுக்கு சேராமல் இருக்கவல்ல நடைமுறையாகும்.

கை விரல்களின் கணுக்குகளுக்கு இடையில் கழுவுவது:

விரல்கள் என்று மட்டும் எடுத்துக் கொள்ளாமல், எங்கெல்லாம் இணைப்பு உள்ள இடங்கள் உள்ளதோ, அவற்றில் அழுக்கு சேர வாய்ப்புள்ளதால், அத்தனை இடங்களையும் எடுத்துக் கொண்டு கழுவி சுத்தமாக வைத்துக் கொள்ள வேண்டும்.

அக்குள் முடி, அந்தரங்கள உறுப்புகளிலுள்ள முடிகள்:

இவற்றை முன்னர் சொன்னபடி, அதிகபட்ச வரம்பாகிய நாற்பது நாட்களுக்குள் எடுக்க வேண்டும். வரம்பு தாண்டக் கூடாது. பெண் அந்தரங்க உறுப்பு இதில் அடங்காது என்றாலும் அதனையும் மழித்தல் சிறந்தது.

மல ஜலதத்திற்குப் பிறகு தண்ணீர் கொண்டு சுத்தப்படுத்துவது:

முந்தைய பாடத்தில் இது குறித்து விளக்கப்பட்டுள்ளது. தண்ணீர் பயன்படுத்துவது சிறந்தது. மற்ற வழிகளையும் பயன்படுத்தலாம்.

வாய் கொப்பளிப்பது: இது குறித்து உளூவின் பாடத்தில் விளக்கப்படும்.

கத்னா செய்து கொள்வது:

இதற்கு கால வரம்பு ஏதும் சொல்லப்படவில்லை. சிறிய வயது அல்லது நான்கைந்து என வரையறை குறிப்பிடப்படவில்லை. பருவ வயதை எட்டுவதற்கு முன்னர் செய்வது சிறந்தது. முதன்முதலில் இப்ராஹீம் அவர்கள்தாம் கத்னா செய்தவர்கள் என்பதற்கு ஹதீதில் ஆதாரங்கள் உள்ளன. அதற்கு முன்பு பற்றி ஏதும் செய்தி இல்லை.

## Fiqh 8 - Laws of Ablution-1 - Prerequisites and Obligations of Ablution (Wudu)

# ஃபிக்ஹ் வகுப்பு 8 - உளூவின் சட்டங்கள்-1 - உளூவின் நிபந்தனைகள் மற்றும் கடமைகள்

**ஆசிரியர்: அஷ் ஷெய்க் உவைஸ் உமரி நளீரி**

இஸ்லாத்தின் இரண்டாவது கடமையான தொழுகைக்கு உளூ செய்வது கட்டாயக் கடமையாகும். தொழுகைக்கான ஒரு அடிப்படை நிபந்தனை (ஷர்த்) உளூ ஆகும். இது அதன் அவசியத்தைக் குறிக்கிறது.

உளூவின் அவசியம்:

ஸூரத்துல் மாயிதா (ஆகாரம்) (உணவு மரவை)

**5:6** يٰۤاَيُّهَا الَّذِيْنَ اٰمَنُوْۤا اِذَا قُمْتُمْ اِلَى الصَّلٰوةِ فَاغْسِلُوْا وُجُوْهَكُمْ وَاَيْدِيَكُمْ اِلَى الْمَرَافِقِ وَامْسَحُوْا بِرُءُوْسِكُمْ وَاَرْجُلَكُمْ اِلَى الْـكَعْبَيْنِ‌ ؕ وَاِنْ كُنْتُمْ جُنُبًا فَاطَّهَّرُوْا‌ ؕ وَاِنْ كُنْتُمْ مَّرْضَىٰۤ اَوْ عَلٰى سَفَرٍ اَوْ جَآءَ اَحَدٌ مِّنْكُمْ مِّنَ الْغَآٮِٕطِ اَوْ لٰمَسْتُمُ النِّسَآءَ فَلَمْ تَجِدُوْا مَآءً فَتَيَمَّمُوْا صَعِيْدًا طَيِّبًا فَامْسَحُوْا بِوُجُوْهِكُمْ وَاَيْدِيْكُمْ مِّنْهُ‌ ؕ مَا يُرِيْدُ اللّٰهُ لِيَجْعَلَ عَلَيْكُمْ مِّنْ حَرَجٍ وَّلٰـكِنْ يُّرِيْدُ لِيُطَهِّرَكُمْ وَ لِيُتِمَّ نِعْمَتَهٗ عَلَيْكُمْ لَعَلَّكُمْ تَشْكُرُوْنَ

**5:6. முஃமின்களே! நீங்கள் தொழுகைக்குத் தயாராகும்போது, (முன்னதாக) உங்கள் முகங்களையும், முழங்கைகள் வரை உங்கள் இரு கைகளையும், கழுவிக் கொள்ளுங்கள்; உங்களுடைய தலைகளை (ஈரக்கையால்) தடவி (மஸஹு செய்து) கொள்ளுங்கள்; உங்கள் கால்களை இரு கணுக்கால் வரை(க் கழுவிக் கொள்ளுங்கள்)** - நீங்கள் பெருந்தொடக்குடையோராக (குளிக்கக் கடமைப் பட்டோராக) இருந்தால் குளித்து(த் தேகம் முழுவதையும் சுத்தம் செய்து)க் கொள்ளுங்கள்; தவிர நீங்கள் நோயாளிகளாகவோ, அல்லது பிரயாணத்திலோ இருந்தால், அல்லது உங்களில் எவரும் மல ஜலம் கழித்து வந்தாலும், அல்லது நீங்கள் பெண்களைத் தீண்டி (உடல் உறவு கொண்டி)ருந்தாலும் (உங்களைச் சுத்தப்படுத்திக் கொள்ள) உங்களுக்குத் தண்ணீர் கிடைக்காவிட்டால் (தயம்மும் செய்து கொள்ளுங்கள்; அதாவது) சுத்தமான மண்ணைக் (கையினால் தடவிக்) கொண்டு அவைகளால் உங்கள் முகங்களையும், உங்களுடைய கைகளையும் தடவிக் கொள்ளுங்கள்; அல்லாஹ் உங்களை வருத்தக் கூடிய எந்த சிரமத்தையும் கொடுக்க விரும்பவில்லை - ஆனால் அவன் உங்களைத் தூய்மைப் படுத்தவும்; இன்னும் நீங்கள் அவனுக்கு நன்றி செலுத்தும் பொருட்டு, தனது அருட்கொடையை உங்கள் மீது முழுமையாக்கவும் விரும்புகிறான்.

முஸ்லிம் 224

ابْنَ عُمَرَ ‏.‏ قَالَ إِنِّي سَمِعْتُ رَسُولَ اللَّهِ صلى الله عليه وسلم يَقُولُ ‏"‏ لاَ تُقْبَلُ صَلاَةٌ بِغَيْرِ طُهُورٍ وَلاَ صَدَقَةٌ مِنْ غُلُولٍ

முஸ்லிம் 225

وَقَالَ رَسُولُ اللَّهِ صلى الله عليه وسلم ‏"‏ لاَ تُقْبَلُ صَلاَةُ أَحَدِكُمْ إِذَا أَحْدَثَ حَتَّى يَتَوَضَّأَ ‏"‏ ‏.‏

**பாடம் : 2 தொழுகைக்குத் தூய்மை அவசியம். முஸ்அப் பின் சஅத் (ரஹ்) அவர்கள் கூறியதாவது: நோயுற்றிருந்த இப்னு ஆமிர் (ரஹ்) அவர்களை உடல்நலம் விசாரிப்பதற்காக அப்துல்லாஹ் பின் உமர் (ரலி) அவர்கள் சென்றார்கள். அப்போது இப்னு ஆமிர் (ரஹ்) அவர்கள், இப்னு உமர் அவர்களே! எனக்காகத் தாங்கள் அல்லாஹ்விடம் பிரார்த்திக்கக் கூடாதா? என்று கேட்டார்கள். அதற்கு இப்னு உமர் (ரலி) அவர்கள் அங்கத் தூய்மை (உளூ) செய்யாமல் எந்தத் தொழுகையும் ஏற்கப்படாது; மோசடி செய்த பொருளால் செய்யப்படும் எந்த தானதர்மமும் ஏற்கப்படாது என்று**

**அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறுவதை நான் கேட்டிருக்கிறேன். நீங்கள் பஸ்ராவி(ன் ஆட்சிப் பொறுப்பி)ல் இருந்தீர்கள் என்று கூறி (மறுத்து)விட்டார்கள். இந்த ஹதீஸ் மூன்று அறிவிப்பாளர் தொடர்களில் வந்துள்ளது. - மேற்கண்ட ஹதீஸ் மேலும் நான்கு அறிவிப்பாளர் தொடர்கள் வழியாகவும் வந்துள்ளது. - ஸஹீஹ் முஸ்லிம்**

**382.** ஹம்மாம் பின் முனப்பிஹ் (ரஹ்) அவர்கள் கூறியதாவது: இவை அல்லாஹ்வின் தூதர் முஹம்மத் (ஸல்) அவர்களிடமிருந்து அபூஹுரைரா (ரலி) அவர்கள் எமக்கு அறிவிக்க ஹதீஸ்களாகும். அவற்றில் பின்வரும் ஹதீஸும் ஒன்றாகும். அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: உங்களில் ஒருவருக்கு சிறு துடக்கு (ஹதஸ்) ஏற்பட்டுவிட்டால், அவர் அங்கத் தூய்மை (உளூ) செய்துகொள்ளாதவரை அவரது தொழுகை ஏற்கப்படாது. Book : 2 - **ஸஹீஹ் முஸ்லிம்**

இப்னு மாஜாஹ் 275

முஹம்மது பின் அல் ஹன∴பிய்யாஹ் رَضِي الله عَنْهُ தமது தந்தை கூறியதாக அறிவிக்கிறார்கள்,

عَنْ مُحَمَّدِ ابْنِ الْحَنَفِيَّةِ، عَنْ أَبِيهِ، قَالَ قَالَ رَسُولُ اللَّهِ ـ صلى الله عليه وسلم ـ " مِفْتَاحُ الصَّلاَةِ الطُّهُورُ وَتَحْرِيمُهَا التَّكْبِيرُ وَتَحْلِيلُهَا التَّسْلِيمُ " .

ரஸுலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ கூறியுள்ளார்கள், "தொழுகையின் திறவுகோல் உளூ ஆகும். அதன் ஆரம்பம் அல்லாஹு அக்பர் மற்றும், அதன் முடிவு ஸலாம் சொல்வதாகும்."

உளூவின் சிறப்பு:

முஸ்லிம் 246

அபு ஹுரைராஹ் رَضِي الله عَنْهُ அறிவிப்பதாவது,

" أَنْتُمُ الْغُرُّ الْمُحَجَّلُونَ يَوْمَ الْقِيَامَةِ مِنْ إِسْبَاغِ الْوُضُوءِ فَمَنِ اسْتَطَاعَ مِنْكُمْ فَلْيُطِلْ غُرَّتَهُ وَتَحْجِيلَهُ " .

**414.** நுஐம் பின் அப்கில்லாஹ் அல்முஜ்மிர் (ரஹ்) அவர்கள் கூறியதாவது: அபூஹுரைரா (ரலி) அவர்கள் அங்கத் தூய்மை (உளூ) செய்ததை நான் பார்த்தேன். அப்போது அவர்கள் தமது முகத்தை முழுமையாகக் கழுவினார்கள். பிறகு தமது வலக்கரத்தை புஜம்வரைக் கழுவினார்கள். பிறகு இடக்கரத்தை புஜம் வரைக் கழுவினார்கள். பிறகு (ஈரக் கையால்) தமது தலையைக் தடவி (மஸ்ஹு செய்யலா)னார்கள். பிறகு வலக் காலை கணைக்கால் வரைக் கழுவினார்கள். பிறகு இடக்காலையும் (அவ்வாறே) கணைக்கால்வரைக் கழுவினார்கள். பின்னர், இவ்வாறே அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் அங்கத் தூய்மை செய்வதை நான் பார்த்தேன் என்று கூறினார்கள். மேலும், அபூஹுரைரா (ரலி) அவர்கள் கூறினார்கள்: நீங்கள் அங்கத் தூய்மையை முழுமையாகச் செய்ததமையால் மறுமை நாளில் (பிரதான) உறுப்புகள் பிரகாசிப்போராய் இருப்பீர்கள். எனவே, உங்களில் யாருக்கு முடியுமோ அவர் (தம் பிரதான உறுப்புகளை) எல்லைக்கு மேல் அதிகமாகக் கழுவிக்கொள்ளட்டும் என்று அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள். இந்த ஹதீஸ் மூன்று அறிவிப்பாளர்தொடர்களில் வந்துள்ளது. Book : 2 - **ஸஹீஹ் முஸ்லிம்**

முஸ்லிம் 232

உதுமான் رَضِي الله عَنْهُ அவர்களால் விடுதலை செய்யப்பட்ட ஹும்ரான் رَضِي الله عَنْهُ அறிவிப்பதாவது,

رَأَيْتُ رَسُولَ اللَّهِ صلى الله عليه وسلم تَوَضَّأَ فَأَحْسَنَ الْوُضُوءَ ثُمَّ قَالَ " مَنْ تَوَضَّأَ هَكَذَا ثُمَّ خَرَجَ إِلَى الْمَسْجِدِ لاَ يَنْهَزُهُ إِلاَّ الصَّلاَةُ غُفِرَ لَهُ مَا خَلاَ مِنْ ذَنْبِهِ " .

**392.** உஸ்மான் (ரலி) அவர்களுடைய முன்னாள் அடிமையான ஹும்ரான் (ரஹ்) அவர்கள் கூறியதாவது: ஒரு நாள் உஸ்மான் பின் அஃப்பான் (ரலி) அவர்கள் அழகிய முறையில் அங்கத் தூய்மை செய்தார்கள். பிறகு பின்வருமாறு கூறினார்கள்: அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் (ஒரு முறை) அழகிய முறையில் அங்கத் தூய்மை செய்ததை நான் பார்த்தேன். பிறகு யார் இவ்வாறு

அங்கசுத்தமை செய்துவிட்டுத் தொழுவதற்காக என்றே பள்ளிவாசலுக்குப் புறப்பட்டுச் செல்கிறாரோ அவர், முன்பு செய்த (சிறு) பாவங்கள் மன்னிக்கப்பட்டுவிடும் என்று அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள். Book : 2 - **ஸஹீஹ் முஸ்லிம்**

உளூவின் நிபந்தனைகள்:

உளூவின் நிபந்தனைகள் மூன்று ஆகும். இந்த நிபந்தனைகளில் ஏதேனும் ஒன்று விடுபட்டால் உளூ கூடாமல் போய்விடும்.

1. எண்ணம் (நிய்யத்). ஒவ்வொரு வழிபாடுகளிலும் நிய்யத் என்பது அடிப்படை நிபந்தனையாகும். நிய்யத் இல்லாமல் எந்த வழிபாடும் ஏற்கப்படமாட்டாது. உளூ செய்யும் எண்ணம் அவரது மனதில் ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். சாதாரணமாக நாம் வெளியில் சென்று முகம் கால்களை உளூ செய்வது போல கழுவினாலும், அந்த நிய்யத் இல்லாமல் அவர் அவ்வாறு கழுவியிருந்தால், அது உளூ செய்ததாக ஆகாது. உமர் رَضِي الله عَنْهُ அவர்கள் அறிவித்த புஹாரியின் முதல் ஹதீது ரஸூலுல்லாஹ் صَلَّى الله عَلَيْهِ وَسلَّمَ கூறியுள்ளார்கள்,

"إِنَّمَا الأَعْمَالُ بِالنِّيَّاتِ،"

''செயல்கள் அனைத்தும் எண்ணத்தின்படியே'' என்பதை நினைவு கூறவேண்டும்.

2. நாம் பயன்படுத்தக் கூடிய தண்ணீர் சுத்தமாக இருக்க வேண்டும். தண்ணீர் அசுத்தமாக மாறியிருக்கக் கூடாது. அதனால் செய்த உளூ ஏற்கப்படமாட்டாது.

3. உளூ செய்யப்பட வேண்டிய உறுப்புகள் முழுவதிலும் தண்ணீர் பட வேண்டும். அவ்வாறு செல்லத் தடுக்கும் எந்த ஒன்றையும் நாம் நீக்கிவிட வேண்டும். உதாரணமாக, உடலில் அதிகமாக எண்ணெய் இருந்தால் அதனை சவக்காரம் கொண்டு கழுவிய பிறகு உளூ செய்ய வேண்டும். அது பேபல நகப் பாலிஷ் தண்ணீரை நகத்துடன் செல்லாமல் தடுத்துவிடும். எனவே நகப் பாலிஷ் போடுவது ஹராம் ஆகும். விரல்களில் அல்லது நகங்களின் ஓரங்களில் கட்டியான மாவு, பெயிண்ட் போற்றவற்றை அகற்றி விட்டுத்தான் உளூ செய்ய வேண்டும். இறுக்கமான மோதிரம் தண்ணீர் உள்ளுக்குள் செல்வதைத் தடுக்கும் என்றால், அதனைக் கழற்றி விட்டு உளூ செய்ய வேண்டும். உளூ செய்ய வேண்டிய பகுதி முழுவதும் தண்ணீரால் நனைக்கப்பட வேண்டும். அவ்வாறு நனையாமல் போனால் உளூ கூடாது.

அபு தாவூத் 97

அப்துல்லாஹ் இப்னு அம்ர் رَضِي الله عَنْهُ அறிவிப்பதாவது,

، أَنَّ رَسُولَ اللَّهِ صلى الله عليه وسلم رَأَى قَوْمًا وَأَعْقَابُهُمْ تَلُوحُ فَقَالَ " وَيْلٌ لِلأَعْقَابِ مِنَ النَّارِ أَسْبِغُوا الْوُضُوءَ " .

சில ஸஹாபியின் காலின் பின்பகுதியில் தண்ணீர் படாமல் காய்ந்திருப்பதைக் கண்ட ரஸூலுல்லாஹ் صَلَّى الله عَلَيْهِ وَسلَّمَ கூறினார்கள், ''அவர்களின் கால்களுக்கு நரகத்தின் கேடுதான். முழுமையாக உளூ செய்து கொள்ளுங்கள்.''

எனவே இந்த மூன்று நிபந்தனைகளும் இருந்தால்தான் உளூ ஏற்கப்படும்.

உளூவின் வாஜிபு (கடமைகள்):

உளூவின் நிபந்தனைகளைப் போலவே, இதன் வாஜிபான கடமைகளில் ஒன்றை விட்டுவிட்டாலும் உளூ ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது. எனவே இரண்டிலும் ஒன்றை விட்டாலும் உளூ கூடாது. எனினும் இரண்டுக்கும் உள்ள வித்தியாசமாவது: நிபந்தனைகள் உளூ என்ற இபாதத்தின் ஒரு பகுதியல்ல. ஆனால் வாஜிப்பானவை உளூவின் அங்கங்களாலும்.

உளூவின் வாஜிபுகள்: முன்னர் சொல்லப்பட்ட அத்தியாயம் மாயிதா 6 ஆம் வசனம்:

ஸூரத்துல் மாயிதா (ஆகாரம்) (உணவு மரவை)

**5:6** يٰۤاَيُّهَا الَّذِيْنَ اٰمَنُوْۤا اِذَا قُمْتُمْ اِلَى الصَّلٰوةِ فَاغْسِلُوْا وُجُوْهَكُمْ وَاَيْدِيَكُمْ اِلَى الْمَرَافِقِ وَامْسَحُوْا بِرُءُوْسِكُمْ وَاَرْجُلَكُمْ اِلَى الْكَعْبَيْنِ‌ ؕ وَاِنْ كُنْتُمْ جُنُبًا فَاطَّهَّرُوْا‌ ؕ وَاِنْ كُنْتُمْ مَّرْضٰۤى اَوْ عَلٰى سَفَرٍ اَوْ جَآءَ اَحَدٌ مِّنْكُمْ مِّنَ الْغَآٮِٕطِ اَوْ لٰمَسْتُمُ النِّسَآءَ فَلَمْ تَجِدُوْا مَآءً فَتَيَمَّمُوْا صَعِيْدًا طَيِّبًا فَامْسَحُوْا بِوُجُوْهِكُمْ وَاَيْدِيْكُمْ مِّنْهُ‌ ؕ مَا يُرِيْدُ اللّٰهُ لِيَجْعَلَ عَلَيْكُمْ مِّنْ حَرَجٍ وَّلٰـكِنْ يُّرِيْدُ لِيُطَهِّرَكُمْ وَلِيُتِمَّ نِعْمَتَهٗ عَلَيْكُمْ لَعَلَّكُمْ تَشْكُرُوْنَ

**5:6.** முஃமின்களே! நீங்கள் தொழுகைக்குத் தயாராகும்போது, (முன்னதாக) உங்கள் முகங்களையும், முழங்கைகள் வரை உங்கள் இரு கைகளையும், கழுவிக் கொள்ளுங்கள்; உங்களுடைய தலைகளை (ஈரக்கையால்) தடவி (மஸஹு செய்து) கொள்ளுங்கள்; உங்கள் கால்களை இரு கணுக்கால் வரை(க் கழுவிக் கொள்ளுங்கள்) - நீங்கள் பெருந்தொடக்குடையோராக (குளிக்கக் கடமைப் பட்டோராக) இருந்தால் குளித்து(த் தேகம் முழுவதையும் சுத்தம் செய்து)க் கொள்ளுங்கள்; தவிர நீங்கள் நோயாளிகளாகவோ, அல்லது பிரயாணத்திலோ இருந்தால், அல்லது உங்களில் எவரும் மல ஜலம் கழித்து வந்தாலும், அல்லது நீங்கள் பெண்களைத் தீண்டி (உடல் உறவு கொண்டி)ருந்தாலும் (உங்களைச் சுத்தப்படுத்திக் கொள்ள) உங்களுக்குத் தண்ணீர் கிடைக்காவிட்டால் (தயம்மும் செய்து கொள்ளுங்கள்; அதாவது) சுத்தமான மண்ணைக் (கையினால் தடவிக்) கொண்டு அவைகளால் உங்கள் முகங்களையும், உங்களுடைய கைகளையும் தடவிக் கொள்ளுங்கள்; அல்லாஹ் உங்களை வருத்தக் கூடிய எந்த சிரமத்தையும் கொடுக்க விரும்பவில்லை - ஆனால் அவன் உங்களைத் தூய்மைப் படுத்தவும்; இன்னும் நீங்கள் அவனுக்கு நன்றி செலுத்தும் பொருட்டு, தனது அருட்கொடையை உங்கள் மீது முழுமையாக்கவும் விரும்புகிறான்.

இந்த வசனத்தில் குறிப்பிடப்பட்ட நான்கு உறுப்புகளைக் கழுவுவதுதான் வாஜிப்பாக உள்ளது. இவை அல்லாமல் ஹதீதுகளில் கூறப்பட்டுள்ள உறுப்புகளைக் கழுவுவது அனைத்தும் ஸுன்னாஹ் ஆகும். எனவே முந்தைய நான்கு உறுப்புகளை மட்டும் கழுவிவிட்டு மற்றவைகளை விட்டுவிட்டாலும் உளூ கூடிவிடும். மற்றொரு கருத்தின்படி, குர்ஆனிலும், ஹதீதுகளிலும் எவை வாஜிபு என்று சொல்லப்பட்டுள்ளதோ, அவை அனைத்தும் வாஜிபாகவே எடுத்துக் கொள்ள வேண்டும். எவற்றை மட்டும் விட்டுவிட்டால் தவறில்லை என்பதற்கு ஆதாரம் உள்ளதோ அவற்றை மட்டும் வாஜிபு என்று எடுக்காமல் ஸுன்னாஹ் என எடுத்துக் கொள்ளலாம். உதாரணமாக, வாய் கொப்பளித்தல் பற்றி குர்ஆன் வசனத்தில் கூறப்படவில்லை. ஆனால் ரஸுலுல்லாஹ் صَلَّى اللّٰهُ عَلَيْهِ وَسَلَّمَ உளூ செய்யும்போது வாய் கொப்பளிக்க வேண்டும் என்று கூறியுள்ளார்கள். ஆனாலும் அவர்கள் உளூ செய்யும்போது, வாய் கொப்பளித்தலை விட்டுவிட்டு உளூ செய்ததாக எந்த ஹதீதிலும் சொல்லப்படவில்லை. குர்ஆனில் வரவில்லை என்றாலும், ரஸுலுல்லாஹ் صَلَّى اللّٰهُ عَلَيْهِ وَسَلَّمَ அதனைச் சொல்லி செய்தும் காட்டியுள்ளார்கள். எனவே வாய் கொப்பளிப்பதையும் நாம் வாஜிபாக எடுத்துக் கொள்ள வேண்டும்.

அதே நேரத்தில் ஒவ்வொரு உறுப்புகளையும் மூன்று முறை கழுவ வேண்டும் என்பது வாஜிபல்ல. காரணம் ரஸுலுல்லாஹ் صَلَّى اللّٰهُ عَلَيْهِ وَسَلَّمَ சில சமயங்களில் மூன்று தடவைகளும் கழுவியிருக்கிறார்கள். சில சமயங்களில் ஒரு தடவையும் கழுவியிருக்கிறார்கள். இதனால் மூன்று தடவைகள் கழுவுவது வாஜிபல்ல, ஸுன்னாஹ்தான் என்று எடுத்துக் கொள்ள வேண்டும். இந்த கருத்தை, அதாவது, குர்ஆனில் சொல்லப்பட்டது, மற்றும் ரஸுலுல்லாஹ் صَلَّى اللّٰهُ عَلَيْهِ وَسَلَّمَ வலியுறுத்திக் கூறி செய்தது, அனைத்தும் வாஜிபென்று எடுத்துக் கொள்ள வேண்டும். தொடராமல் விட்டுவிட்டு செய்தவை ஸுன்னாஹ்வாக எடுத்துக் கொள்ள வேண்டும்.

வாஜிபான விஷயங்கள்:

1. முகத்தைக் கழுவுவது: இதற்கான ஆதாரம் முன் சொல்லப்பட்ட குர்ஆன் வசனமாகும். இதனுள் வாய்க் கொப்பளித்தல் மற்றும் நாசிக்கு நீர் செலுத்துதல் ஆகிய இரண்டும் அடங்கும். அவை இரண்டும் முகத்தைக் கழுவுதல் என்ற வாஜிபில் அடங்கும்.

நாசிக்கு நீர் செலுத்துவது குறித்த ஹதீது

புஹாரி 162

அபு ஹுரைராஹ் رَضِي الله عَنْهُ அறிவிப்பதாவது,

أَبَا هُرَيْرَةَ، عَنِ النَّبِيِّ صلى الله عليه وسلم أَنَّهُ قَالَ " مَنْ تَوَضَّأَ فَلْيَسْتَنْثِرْ،

**162.** 'உங்களில் ஒருவர் உளூச் செய்தால் தம் மூக்கிற்குத் தண்ணீர்ச் செலுத்திப் பின்னர் அதை வெளியாக்கட்டும். மலஜலம் கழித்துவிட்டுக் கல்லால் சுத்தம் செய்பவர் ஒற்றைப் படையாகச் செய்யட்டும். உங்களில் ஒருவர் விழித்தெழுந்தால் அவர், தாம் உளூச் செய்யும் தண்ணீரில் தம் கையை நுழைப்பதற்கு முன்னர் கழுவிக் கொள்ளட்டும். ஏனென்றால், (தூக்கத்தில்) தம் கை எங்கே இருந்தது என்பதை உங்களில் எவரும் அறியமாட்டார்' என்று இறைத்தூதர்(ஸல்) அவர்கள் கூறினார்கள்: என அபூ ஹுரைரா(ரலி) அறிவித்தார். Book : 4 - ஸஹீஹுல் புகாரி

ரஸூலுல்லாஹ் صَلَّي الله عَلَيْهِ وَسَلَّمَ வாழ்வில் உளூ செய்யும்போதெல்லாம் அவ்வாறுதான் செய்துள்ளார்கள். பல ஸஹாபாக்களும் அவ்வாறே அறிவித்துள்ளார்கள். நாசிக்கு நீர் செலுத்தாமல் அவர்கள் உளூ செய்யவில்லை. நாசிக்கு நீர் செலுத்தாமல் உளூ செய்த ஆதாரம் கிடைத்தால் மட்டும்தான் நான் அதனை செய்யாமல் விட வழியுள்ளது. அப்படி ஏதேனும் ஆதாரம் இருந்தால் நாம் அதனை முஸ்தஹ.்ப் என்று சொல்லலாம். அவ்வாறு ஆதாரம் ஏதும் இல்லை. எனவே இது வாஜிபாகும்.

அதுபோல் வாய் கொப்பளிப்பது பற்றிய ஹதீது

அபு தாவூத் 144

இப்னு ஜீரைஜ் رَضِي الله عَنْهُ அறிவிப்பின்படி

حَدَّثَنَا ابْنُ جُرَيْجٍ، بِهَذَا الْحَدِيثِ قَالَ فِيهِ " إِذَا تَوَضَّأْتَ فَمَضْمِضْ " .

“நீர் உளூ செய்தால், வாய் கொப்பளிக்க வேண்டும்.” என்ற அறிவுறுத்தல் கட்டளையல்லவா? இதனை நிறைவேற்றுவது கட்டாய கடமையாகும். அதனையும் அவர்கள் விடவில்லை.

முகத்தைக் கழுவுவதில் இவ்வாறு நாசிக்கு நீர் செலுத்துவதும், வாய்க் கொப்பளிப்பதும் அடங்கும்.

2. கைகளை இரண்டு முழங்கை வரை கழுவுதல். இதற்கான ஆதாரம் முந்தைய குர்ஆன் வசனம்தான். கைகளைக் கழுவும்போது, விரல்களுக்கு இடையில் தண்ணீர் செல்லுவது பற்றி அச்சம் இருந்தால் மட்டும், விரல்களைக் கோதிக் கழுவுவது கட்டாயம் ஆகும். அதனை அரபியில் ஹிலால் செய்வது என்பார்கள்.

திர்மிதி 38

ஆஸிம் இப்னு லகீத் இப்னு ஸபீராஹ் رَضِي الله عَنْهُ அறிவிப்பதாவது,

عَنْ عَاصِمِ بْنِ لَقِيطِ بْنِ صَبِرَةَ، عَنْ أَبِيهِ، قَالَ قَالَ النَّبِيُّ صلى الله عليه وسلم " إِذَا تَوَضَّأْتَ فَخَلِّلِ الأَصَابِعَ "

ரஸூலுல்லாஹ் صَلَّي الله عَلَيْهِ وَسَلَّمَ கூறியுள்ளார்கள், “உங்களில் ஒருவர் உளூ செய்யும் போது விரல்களுக்கு இடைகளில் கோதிக் கொள்ளுங்கள்.”

3. தலையை மஸ்ஹு செய்வது: இதற்கும் அந்த வசனம் ஆதாரமாகும். தலையில் முழு பகுதியை மஸ்ஹு செய்ய வேண்டும். கால் பகுதியையோ அல்லது சிறிது பகுதியோ மஸ்ஹு செய்துவிட்டு மற்றதை விட்டுவிடக்கூடாது. ரஸுலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ தலைப்பாகை அணிந்த நிலையில் முன்நெற்றி பகுதியில் மஸ்ஹு செய்து விட்டு பின்னர் தலைபாகையில் மஸ்ஹு செய்ததாக ஒரு அறிவுப்பு உள்ளது. அது பற்றி பின்னர் கூறப்படும்.

தலைக்கு மஸ்ஹு செய்வதில், காதுக்கும் மஸ்ஹு செய்வது அடங்கும்.

திர்மிதி 37

அபு உமாமாஹ் رَضِيَ الله عَنْهُ அறிவிப்பதாவது,

وَمَسَحَ بِرَأْسِهِ وَقَالَ " الأُذُنَانِ مِنَ الرَّأْسِ

ரஸுலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ தலையை மஸ்ஹு செய்துவிட்டு, ‘காதும் தலையின் ஒரு பகுதியிலுள்ளதுதான்.’’ என்றார்கள். இந்த ஹதீதின் அடிப்படையில் பல் அறிஞர்கள் காதுகளுக்கும் மஸ்ஹு செய்வது அவசியம் என்று கூறுகிறார்கள். மேலும் எல்லா அறிவிப்புகளிலும், அவர்கள் தலைக்கு மஸ்ஹு செய்துவிட்டு, அவ்வாறு காதுக்குச் செய்யாமல் விட்டிருக்கிறார்கள் என்ற அறிவிப்பு காணப்படவில்லை. எனவே காதுகளுக்கும் மஸ்ஹு செய்வது கடமையாகும். மேலும் மஸ்ஹு செய்வதற்கென்று தனியாகத் தண்ணீரை எடுக்க வேண்டியதில்லை. இரண்டு கைகளைக் கழுவிய அந்தத் தண்ணீரோடு, இரண்டு மஸ்ஹுகளையும் செய்து விடலாம். அல்லது விரும்பினால், மறுபடியும் தண்ணீர் தொட்டு செய்யலாம்.

4. கால்களைக் கழுவுவது: இதற்கும் ஆதாரம் முந்தைய குர்ஆன் வசனமாகும். கழுவும்போது, விரல்களுக்கு இடையில் தண்ணீர் செல்லுவது பற்றி அச்சம் இருந்தால் மட்டும், விரல்களைக் கோதிக் கழுவுவது கட்டாயம் ஆகும். இதற்கான ஆதாரத்தை முன்னர் குறிப்பிட்டுள்ளோம்.

5. கழுவச் சொன்ன உறுப்புக்களை வரிசை கிரமமாகக் கழுவ வேண்டும். குர்ஆனில் சொல்லப்பட்ட அந்த வரிசையில் கழுவ வேண்டும். வாய் கொப்பளித்தல், நாசிக்கு நீர் செலுத்துதல், முகத்தைக் கழுவுதல், கைகளைக் கழுவுதல், தலை மற்றும் காதுகளை மஸ்ஹு செய்தல் மற்றும் கடைசியில் கால்களைக் கழுவுதல் என்ற இந்த வரிசையைப் பேண வேண்டும். உதாரணமாக, ஒருவர் வரிசையை மாற்றி, முகத்தைக் கழுவி, பிறகு தலைக்கும் காதுக்கும் மஸ்ஹு செய்துவிட்டு, கைகளையும், கால்களையும் கழுவினால், அவர் வரியையை மாற்றியுள்ளதால், அந்த உளூ சரியாகாது. மறதியின் காரணமாக அவ்வாறு செய்ய வாய்ப்புண்டு. நினைவு வந்தால், ஆரம்பித்திலிருந்து திருப்பிச் செய்ய வேண்டும் என்ற அவசியம் இல்லை. எந்த வரிசை மாறியதோ, அதிலிருந்து வரிசையைத் தொடர்ந்தால் போதுமானது.

மேலும் உறுப்புகளை வலது பக்கத்தை முதலில் ஆரம்பிப்பது ஸுன்னாஹ்வாக இருப்பதால், இட வலம் மாற்றத்தினால் உளூ கூடாமல் போகாது என்பதனையும் அறிந்து கொள்ள வேண்டும்.

6. தொடர்ச்சியாக உளூ செய்ய வேண்டும். அதன் பொருளாவது, முந்தைய உறுப்பு காய்வதற்கு முன்பே அடுத்த உறுப்பைக் கழுவி விட வேண்டும். முந்தைய உறுப்பு காய்ந்து விட்டால், மறுபடியும் முதலிலிருந்து உளூவை ஆரம்பிக்க வேண்டும்.

அபுதாவூது 175

சில ஸஹாபாக்கள் அறிவித்ததாவது:

أَصْحَابِ النَّبِيِّ أَنَّ النَّبِيَّ صلى الله عليه وسلم رَأَى رَجُلاً يُصَلِّي وَفِي ظَهْرِ قَدَمِهِ لُمْعَةٌ قَدْرُ الدِّرْهَمِ لَمْ يُصِبْهَا الْمَاءُ فَأَمَرَهُ النَّبِيُّ صلى الله عليه وسلم أَنْ يُعِيدَ الْوُضُوءَ وَالصَّلاَةَ .

ஒரு ஸஹாபி தொழுது கொண்டிருப்பதை ரஸுலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ கண்ணுற்றபோது, அவரது பாதத்தின் பின் பகுதியில் ஒரு திர்ஹம் அளவிற்கு இடமானது கழுவப்படாமல் இருந்தது. தண்ணீர் அதனுள் செல்லவில்லை. ரஸுலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ அவரைத் திரும்பவும் உளூ செய்து பிறகு தொழ வேண்டும் என்று கட்டளையிட்டார்கள்.

மேற் கூறப்பட்ட இவை ஆறும் உளூவின் கடமையாகும். உளூவின் ஸுன்னாஹ்கள் இன்ஷா அல்லாஹ் தொடரும்.

**Fiqh 9 - Laws of Ablution-2 - Sunnaths of Ablution (Wudu)**

## ஃபிக்ஹ் வகுப்பு 9 - உளூவின் சட்டங்கள்-2 - உளூவின் சுன்னத்துகள்

**ஆசிரியர்: அஷ் ஷெய்க் உவைஸ் உமரி நஸீரி**

ரஸுலுல்லாஹ் صَلَّى الله عَلَيْهِ وَسَلَّمَ சில சமயங்களில் உளூவில் போது அதிகமாகச் செய்தவை ஸுன்னாஹ்களாகும். இவை கடமையானவை அல்ல என்று கூறக் காரணம், இவற்றை அவர்கள் உளூ செய்யும்போது சில சமயங்களில் செய்யாமல் விட்டிருப்பார்கள், அல்லது அவர்கள் சொற்களினால் அவை கட்டாயம் இல்லை கூறியதைக் கொண்டும் நாம் அதனை அறியலாம். கடமைகளைப் போல் அல்லாமல், இவற்றை விட்டு விட்டாலும், உளூ பாதிக்கப்படாமல் ஏற்றுக் கொள்ளப்படும். இவற்றையும் உளூவில் செய்தால் கூடுதல் நன்மை கிடைக்கும். ஆனால் நாம் மறந்தோ அல்லது மறக்காமலோ கடமைகளில் ஒன்றை விட்டுவிட்டாலும் உளூ கூடாது என்பதனை அறிவோம்.

**உளூவின் ஸுன்னாஹ்கள்**

1. ஆரம்பத்தில் பிஸ்மில்லாஹ் بِسْمِ الله கூறுவது:

அபு தாவூத் மற்றும் முஸ்னத் அஹ்மது ஆகியவற்றில் குறிப்பிடப்பட்டுள்ளது. பொதுவாக எந்த காரியத்தைச் செய்தாலும் பிஸ்மில்லாஹ் என்று ஆரம்பிக்க வேண்டும் என ரஸுலுல்லாஹ் صَلَّى الله عَلَيْهِ وَسَلَّمَ அவர்கள் வறியுறுத்தியுள்ளார்கள்.

2. பல் துலக்குதல் (மிஸ்வாக் செய்தல்):

இதற்கு மிஸ்வாக் குச்சியைப் பயன்படுத்த வேண்டும் என்று அவசியமில்லை.

இப்னு மாஜாஹ் 289

அபு உமாமாஹ் رَضِيَ الله عَنْهُ அறிவிப்பதாவது,

عَنْ أَبِي أُمَامَةَ، أَنَّ رَسُولَ اللَّهِ ـ صلى الله عليه وسلم ـ قَالَ " تَسَوَّكُوا فَإِنَّ السِّوَاكَ مَطْهَرَةٌ لِلْفَمِ مَرْضَاةٌ لِلرَّبِّ وَمَا جَاءَنِي جِبْرِيلُ إِلاَّ أَوْصَانِي بِالسِّوَاكِ حَتَّى لَقَدْ خَشِيتُ أَنْ يُفْرَضَ عَلَىَّ وَعَلَى أُمَّتِي وَلَوْلاَ أَنِّي أَخَافُ أَنْ أَشُقَّ عَلَى أُمَّتِي لَفَرَضْتُهُ لَهُمْ وَإِنِّي لأَسْتَاكُ حَتَّى لَقَدْ خَشِيتُ أَنْ أُحْفِيَ مَقَادِمَ فَمِي " .

ரஸுலுல்லாஹ் صَلَّى الله عَلَيْهِ وَسَلَّمَ கூறியுள்ளார்கள், "பற்குச்சியைப் பயன்படுத்துங்கள். அது வாயைச் சுத்தப்படுத்தும். உங்களது இரட்சகனை திருப்திபடுத்தும். பல் துலக்குவது பற்றி, அது எனக்கும் எனது சமுதாயத்தினருக்கும் கடமையாகி விடும் என்று அஞ்சக்கூடிய வகையான அறிவுரையுடன் அன்றி ஜிப்ரயீல் என்னிடம் வரவில்லை. எனது சமுதாயத்தினருக்கு மிகவும் கடினமாக இருக்கும் என்று நான் அஞ்சாமல் இருந்திருந்தால், அதனை அவர்களுக்குக் கடமையாக்கி இருப்பேன். எனது ஈறுகள் புண்ணாகிவிடுமோ என்ற அளவிற்கு நான் பல் துலக்குவேன்."

இந்த ஹதீதின்படி பல் துலக்குவது கடமையாக்கப்படவில்லை என்பதனை அறியலாம். எனவே இது வாஜிபானது அல்ல என அறியலாம்.

3. உளூ ஆரம்பிக்கும்போது, இரு கைகளையும் மணிக்கட்டு வரை மூன்று முறை கழுவுதல்:

இப்னு மாஜாஹ் 393

ரஸுலுல்லாஹ் صَلَّى الله عَلَيْهِ وَسَلَّمَ கூறியுள்ளார்கள்,

أَنَّ أَبَا هُرَيْرَةَ كَانَ يَقُولُ قَالَ رَسُولُ اللَّهِ ـ صلى الله عليه وسلم ـ " إِذَا اسْتَيْقَظَ أَحَدُكُمْ مِنَ اللَّيْلِ فَلاَ يُدْخِلْ يَدَهُ فِي الإِنَاءِ حَتَّى يُفْرِغَ عَلَيْهَا مَرَّتَيْنِ أَوْ ثَلاَثًا فَإِنَّ أَحَدَكُمْ لاَ يَدْرِي فِيمَ بَاتَتْ يَدُهُ "

தூக்கத்திலிருந்து ஒருவர் கண் விழித்தால், உடனே பாத்திரத்தின் உள்ளே கையைக் விடக்கூடாது என்றும், அதற்கு முன்பாக, அவர் தம் கரங்களை மணிக்கட்டு வரை அந்த பாத்திரத்திலிருந்து தண்ணீரைச் சாய்த்து இரண்டு அல்லது மூன்று முறை கழுவி விட்டு அதனுள் தமது கையை விடலாம். அந்த கை தூக்கத்தில் எங்கெல்லாம் சென்றது என நாம் அறியமாட்டோம்.''

இவ்வாறு தூங்கி எழுந்தபிறகு மட்டும் அல்லாமல், உளூவின் ஆரம்பத்திலும் இவ்வாறு செய்வது அவர்களின் ரஸூலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ ஸுன்னாஹ்வாக இருக்கிறது. அவ்வாறு ஆரம்பத்தில் செய்யமால் உளூவின் கடமையான காரியங்களைச் செய்தாலும் உளூ கூறிவிடும்.

4. வாய்க் கொப்பளிப்பதையும், நாசிக்கு நீர் செலுத்துவதையும் சேர்த்து ஒன்றாகச் செய்வது:

எனினும் இவ்விரண்டையும் தனித்தனியாகச் செய்தாலும் உளூ நிறைவேறிவிடும். நாம் முன்பு சொன்னது போல, முகத்ததைக் கழுவுவதில் வாய்க் கொப்பளிப்பது, நாசிக்கு நீர் விடுவதும் அடங்கும். இவற்றைச் செய்வதிலுள்ள நபிவழியானது, ஒரு முறை எடுக்கும் தண்ணீரில் சிறிதளவு வாய்க் கொப்பளிக்கவும், அதில் மீதமுள்ள தண்ணீரை நாசிக்குச் செலுத்துவதும் ஆகும். மறுபடியும் தண்ணீர் எடுத்தால், அதனை வாய்க் கொப்பளிக்கவும், நாசிக்குச் செலுத்தவுமாக, இவ்வாறு இரண்டையும் சேர்த்து செய்வது ஸுன்னாஹ் ஆகும். அதிகமான நன்மைகள் கிடைக்கும்.

புஹாரி 191

حَدَّثَنَا مُسَدَّدٌ، قَالَ حَدَّثَنَا خَالِدُ بْنُ عَبْدِ اللَّهِ، قَالَ حَدَّثَنَا عَمْرُو بْنُ يَحْيَى، عَنْ أَبِيهِ، عَنْ عَبْدِ اللَّهِ بْنِ زَيْدٍ، أَنَّهُ أَفْرَغَ مِنَ الإِنَاءِ عَلَى يَدَيْهِ فَغَسَلَهُمَا، ثُمَّ غَسَلَ أَوْ مَضْمَضَ، وَاسْتَنْشَقَ مِنْ كَفَّةٍ وَاحِدَةٍ، فَفَعَلَ ذَلِكَ ثَلاَثًا، فَغَسَلَ يَدَيْهِ إِلَى الْمِرْفَقَيْنِ مَرَّتَيْنِ مَرَّتَيْنِ، وَمَسَحَ بِرَأْسِهِ مَا أَقْبَلَ وَمَا أَدْبَرَ، وَغَسَلَ رِجْلَيْهِ إِلَى الْكَعْبَيْنِ، ثُمَّ قَالَ هَكَذَا وُضُوءُ رَسُولِ اللَّهِ صلى الله عليه وسلم

பாடம் : 41 ஒரு கை நீரில் வாய் கொப்பளித்து (மூக்கிற்கு நீர் செலுத்தி) மூக்கைச் சிந்துதல். **191.** 'அப்துல்லாஹ் இப்னு ஸைத்(ரலி) பாத்திரத்திலிருந்து தண்ணீரைத் தம் இரண்டு முன் கைகளிலும் ஊற்றிக் கழுவினார். பின்பு ஒரே கையில் தண்ணீரை எடுத்து வாய் கொப்பளித்து மூக்கிற்கும் தண்ணீர் செலுத்தினார். இவ்வாறு மூன்று முறை செய்தார். பின்னர் தம் இரண்டு கைகளையும் மூட்டு வரை இரண்டு இரண்டு முறை கழுவினார். மேலும் தம் தலையைத் தடவினார். (இரண்டு கையால்) மேலும் தம் தலையைத் தடவினார். (இரண்டு கையால்) தலையின் முன் புறமும் பின்புறமும தடவினார். மேலும் தம் இரண்டு கால்களையும் கரண்டை வரை கழுவினார். பின்னர், இதுதான் நபி(ஸல்) அவர்களின் உளூ என்று கூறினார்' யஹ்யா அல் மாஸினி அறிவித்தார். Book: 4 - ஸஹீஹுல் புகாரி

புஹாரி 199

حَدَّثَنَا خَالِدُ بْنُ مَخْلَدٍ، قَالَ حَدَّثَنَا سُلَيْمَانُ، قَالَ حَدَّثَنِي عَمْرُو بْنُ يَحْيَى، عَنْ أَبِيهِ، قَالَ كَانَ عَمِّي يُكْثِرُ مِنَ الْوُضُوءِ، قَالَ لِعَبْدِ اللَّهِ بْنِ زَيْدٍ أَخْبِرْنِي كَيْفَ رَأَيْتَ النَّبِيَّ صلى الله عليه وسلم يَتَوَضَّأُ فَدَعَا بِتَوْرٍ مِنْ مَاءٍ، فَكَفَأَ عَلَى يَدَيْهِ فَغَسَلَهُمَا ثَلاَثَ مِرَارٍ، ثُمَّ أَدْخَلَ يَدَهُ فِي التَّوْرِ، فَمَضْمَضَ وَاسْتَنْثَرَ ثَلاَثَ مَرَّاتٍ مِنْ غَرْفَةٍ وَاحِدَةٍ، ثُمَّ أَدْخَلَ يَدَهُ فَاغْتَرَفَ بِهَا فَغَسَلَ وَجْهَهُ ثَلاَثَ مَرَّاتٍ، ثُمَّ غَسَلَ يَدَيْهِ إِلَى الْمِرْفَقَيْنِ مَرَّتَيْنِ مَرَّتَيْنِ، ثُمَّ أَخَذَ بِيَدِهِ مَاءً، فَمَسَحَ رَأْسَهُ، فَأَدْبَرَ بِيَدَيْهِ وَأَقْبَلَ ثُمَّ غَسَلَ رِجْلَيْهِ، فَقَالَ هَكَذَا رَأَيْتُ النَّبِيَّ صلى الله عليه وسلم يَتَوَضَّأُ

பாடம் : 46 குவளையில் உளூ செய்தல். **199.** 'என்னுடைய தந்தையின் உடன் பிறந்தார். (அமர் இப்னு அபீ ஹஸன்) அடிக்கடி உளூச் செய்பவராக இருந்தார். இவர் அப்துல்லாஹ் இப்னு ஸைத் அவர்களிடம், 'நபி(ஸல்) அவர்கள் எவ்வாறு உளூச் செய்ய நீர் கண்டீர் என்பதை எனக்கு அறிவிப்பீராக' எனக் கேட்டார். அப்துல்லாஹ் இப்னு ஸைத்(ரலி) ஒரு தட்டையான பாத்திரத்தில் தண்ணீர் கொண்டு வரச்சொல்லி, அதிலிருந்து தம் கையில் ஊற்றி மூன்று முறை கழுவினார். பின்னர் தம் கையை அந்தப் பத்திரத்தில் நுழைத்துத் தண்ணீர் எடுத்து மூன்று முறை ஒரே கை தண்ணீரால் வாய் கொப்பளித்து மூக்கிற்குத் தண்ணீர் செலுத்திச் சிந்தினார். பின்னர் தம் கையை(ப் பாத்திரத்தில்) நுழைத்துத் தண்ணீர் கோரி மூன்று முறை முகத்தைக் கழுவினார். பின்னர் தம்

இரண்டு கைகளையும் மூட்டு வரை இரண்டிரண்டு முறை கழுவினார். பின்னர் தம் கையால் தண்ணீர் எடுத்துத் தம் தலையின் முன் பக்கமிருந்து பின் பக்கமும் பின் பக்கமிருந்து முன் பக்கம் பின் பக்கமிருந்து முன் பக்கமும் கொண்டு சென்று தலையைத் தடவினார். பின் தம் இரண்டு கால்களையும் கழுவிவிட்டு 'இப்படித்தான் நபி(ஸல்) உளூச் செய்ய பார்த்தேன்' என்று கூறினார்கள்' யஹ்யா அல் மாஸினி அறிவித்தார். Book: 4 - **ஸஹீஹுல் புகாரி**

இவ்வாறு இரண்டையும் சேர்த்து செய்வது நபிவழியாகும். எனினும்,

அபு தாவூத் 139

தல்ஹா رَضِي الله عَنْهُ அவர்களின் பாட்டனார் அறிவிப்பதாவது,

عَنْ جَدِّهِ، قَالَ دَخَلْتُ - يَعْنِي - عَلَى النَّبِيِّ صلى الله عليه وسلم وَهُوَ يَتَوَضَّأُ وَالْمَاءُ يَسِيلُ مِنْ وَجْهِهِ وَلِحْيَتِهِ عَلَى صَدْرِهِ فَرَأَيْتُهُ يَفْصِلُ بَيْنَ الْمَضْمَضَةِ وَالاِسْتِنْشَاقِ .

“நான் ரஸுலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ அவர்கள் உளு செய்து கொண்டிருந்தபோது நுழைந்தேன். தண்ணீர் அவர்களின் முகத்திலிருந்தும், தாடியிலிருந்தும் நெஞ்சில் வடிந்து கொண்டிருந்தது. அவர்கள் வாய்க் கொப்பளித்ததையும், நாசிக்கு நீர் செலுத்துவதையும் தனித்தனியே செய்ததைக் கண்டேன்.”

இவ்வாறு ரஸுலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ அவற்றைத் தனித்தனியாக செய்ததாக கூறப்பட்டுள்ளது. அது பலவீனமான ஹதீதாகும். எனவே ஒரே தண்ணீரில் செய்வது ஸுன்னாஹ்வாகும்.

5. நாசிக்குத் தண்ணீர் செலுத்தும்போது நன்றாக உள்ளுக்குள் இழுத்துச் செய்வது: ரஸுலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ அவர்கள் இதனை மிகவும் வலியுறுத்திச் சொல்லியுள்ளார்கள். எனினும் நோன்பாளியாக இருக்கும் நிலையில் இவ்வாறு அதிகமாக இழுக்கக் கூடாது.

அபு தாவூத் 140

அபு ஹுரைராஹ் رَضِي الله عَنْهُ அறிவிப்பதாவது,

عَنْ أَبِي هُرَيْرَةَ، أَنَّ رَسُولَ اللَّهِ صلى الله عليه وسلم قَالَ " إِذَا تَوَضَّأَ أَحَدُكُمْ فَلْيَجْعَلْ فِي أَنْفِهِ مَاءً ثُمَّ لْيَنْثُرْ " .

ரஸுலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ கூறியுள்ளார்கள், “உளுச் செய்யும்போது, தண்ணீரை நாசிக்குள் உறிஞ்சி, அதிலிருந்து சளியை வெளியில் எடுக்க வேண்டும்.

அபு தாவூத் 141

இப்னு அப்பாஸ் رَضِي الله عَنْهُ அறிவிப்பதாவது,

عَنِ ابْنِ عَبَّاسٍ، قَالَ قَالَ رَسُولُ اللَّهِ صلى الله عليه وسلم " اسْتَنْثِرُوا مَرَّتَيْنِ بَالِغَتَيْنِ أَوْ ثَلاَثًا " .

ரஸுலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ கூறியுள்ளார்கள், “உங்களின் மூக்கை (தண்ணீரை நன்றாக உறிஞ்சி) இரண்டு அல்லது மூன்று முறை கழுவ வேண்டும்.”

6. தாடியைக் கோதிக் கழுவுவது:

முக்கியமாக அடர்த்தியான தாடியாக இருந்தால் கோதிக் கழுவுவது. குறைந்த அளவு இருந்தால், அவர்கள் நெற்றியிலிருந்து கீழ்தாடி முழுவதும் முகம் என்பதில் அடங்கும். எனவே முகத்தைக் கழுவும்போது, அதன் முழு இடத்தையும் கழுவ வேண்டும். அடர்த்தியான தாடி உள்ளவர்களுக்கு, முகம் என்பது நெற்றியிலிருந்து தாடி வரைதான் முகம் என்று அடங்கும். அதற்குப் பிறகு அது தாடி எனப்படும். அவர்கள் தாடியைக் கோதி கழுவ வேண்டும்.

7. உறுப்புகளை ஒன்றுக்கும் மேற்பட்ட தடடவைகள் கழுவுதல்:

ஒரு தடவை கழுவினாலேயே கடமை நிறைவேறிவிடும். எனினும் ஒன்றுக்கு மேற்பட்ட தடவைகள் கழுவுவது ஸுன்னாஹ்வில் அடங்கும்.

புஹாரி 158

அப்துல்லாஹ் இப்னு ஸைத் رَضِـي الله عَنْهُ அறிவிப்பதாவது:

عَنْ عَبْدِ اللَّهِ بْنِ زَيْدٍ، أَنَّ النَّبِيَّ صلى الله عليه وسلم تَوَضَّأَ مَرَّتَيْنِ مَرَّتَيْنِ.

**பாடம் : 23 உளூவில் (ஒவ்வோர் உறுப்பையும்) இருமுறை கழுவுதல். 158.** 'நபி(ஸல்) அவர்கள் உளூச் செய்தபோது அவர்கள் உறுப்புக்களை இரண்டிரண்டு முறை கழுவினார்கள்' என அப்துல்லாஹ் இப்னு ஜைத்(ரலி) அறிவித்தார். Book: 4 - **ஸஹீஹுல் புகாரி**

புஹாரி 159 மற்றும் முஸ்லிம் 226

ஹும்ரான் رَضِـي الله عَنْهُ அறிவிப்பதாவது:

....رَأَى عُثْمَانَ بْنَ عَفَّانَ دَعَا بِإِنَاءٍ، فَأَفْرَغَ عَلَى كَفَّيْهِ ثَلاَثَ مِرَارٍ

**பாடம் : 24 உளூவில் (ஒவ்வோர் உறுப்பையும்) மும்முறை கழுவுதல். 159.** 'உஸ்மான் இப்னு அஃப்பான்(ரலி) ஒரு பாத்திரத்தில் தண்ணீர் கொண்டு வரச் சொல்லித் தம் இரண்டு முன் கைகளில் மூன்று முறை ஊற்றிக் கழுவினார். பின்னர் தம் வலக்கரத்தைப் பாத்திரத்தில் செலுத்தி, வாய்க் கொப்புளித்து, மூக்கிற்குத் தண்ணீர் செலுத்தினார். பின்னர் தம் முகத்தை மூன்று முறை கழுவினார். தம் இரண்டு கைகளையும் மூட்டுவரை மூன்று முறை கழுவினார். பின்பு தலையை ஈரக் கையால் தடவினார். பின்னர் தம் இரண்டு கால்களையும் கரண்டை வரை மூன்று முறை கழுவினார். பின்னர் 'யாரேனும் என்னுடைய இந்த உளூவைப் போன்று செய்து, பின்னர் தீய எண்ணங்களுக்கு இடம் தராமல் இரண்டு ரக்அத்துகள் தொழுதால் அவர் முன்னர் செய்த (சிறு) பாவங்கள் மன்னிக்கப்படும்' என்று இறைத்தூதர்(ஸல்) அவர்கள் கூறினார்கள்: என உஸ்மான்(ரலி) கூறினார்' ஹும்ரான் அறிவித்தார். Book: 4 - **ஸஹீஹுல் புகாரி**

புஹாரி 157

இப்னு அப்பாஸ் رَضِـي الله عَنْهُ அறிவிப்பதாவது,

عَنِ ابْنِ عَبَّاسٍ، قَالَ تَوَضَّأَ النَّبِيُّ صلى الله عليه وسلم مَرَّةً مَرَّةً.

**பாடம் : 22 உளூவில் (ஒவ்வோர் உறுப்பையும்) ஒருமுறை கழுவுதல். 157.** 'நபி(ஸல்) அவர்கள் உளூச் செய்யும்போது அவர்களின் உறுப்புக்களை ஒவ்வொரு முறை கழுவினார்கள்' என இப்னு அப்பாஸ்(ரலி) அறிவித்தார். Book: 4 - **ஸஹீஹுல் புகாரி**

இவ்வாறு ரஸுலுல்லாஹ் صَلَّي الله عَلَيْهِ وَسلَّمَ அவர்கள் ஒரு முறையும் கழுவியுள்ளார்கள். நாம் இவ்வாறு ஒரு தடவை முதல் மூன்று தடவைகள் உறுப்புகளைக் கழுவுவது, அல்லது சில உறுப்புகளை ஒரு தடவையும், சில உறுப்புகளை அதிகமாகவும் கழுவுவதும் கூடும். ஒரு தடவை கட்டாயமாகும். எனினும் மூன்று தடவைகளுக்கு அதிகமாக எந்த உறுப்பையும் கழுவக் கூடாது. இது வீண் விரையம் செய்வது போல ஆகிவிடும். அதிகப்பட்சம் மூன்று முறை மட்டுமே.

8. மஸ்ஹு செய்வதற்கான ஸுன்னத்தான முறை:

ரஸுலுல்லாஹ் صَلَّي الله عَلَيْهِ وَسلَّمَ நெற்றியின் ஆரம்பத்திலிருந்து இரண்டு கைகளில், பெருவிரல் அல்லாமல் நான்கு விரல்களைக் கொண்டு தடவியாவாறு கழுத்தின் பின்பக்கம் வரை சென்று, மறுபடியும் ஆரம்பித்த இடத்திற்கு கொண்டு வருவார்கள். பின்னர் சுட்டு விரலைக் கொண்டு காது துவாரத்தையும், பெருவிரலைக் கொண்டு காதின் பின்பகுதியையும் தடவுவார்கள். சாதாரணமாக

தலையைத் தடவுதால் கடமை நிறைவேறி உளூ கூடிவிடும். ஆனால் இவ்வாறு செய்யும்போது, ஸுன்னாஹ்விற்கான நன்மையும் கிடைக்கும்.

9. ஒவ்வொரு தொழுகைக்கும் புதிதாக உளூ செய்வது:

எனினும் உளூ முறியாமல் இருந்தால், ஒரு தொழுகைக்குச் செய்த உளூவிலிருந்து ஒன்றுக்கும் மேற்பட்ட தொழுகையைத் தொழுவதற்கு அனுமதியுள்ளது. ஆனால் புதிதாக ஒவ்வொரு தொழுகைக்கும் உளூச் செய்வது ஸுன்னாஹ்வாகும்.

புஹாரி 214

عَمْرُو بْنُ عَامِرٍ، عَنْ أَنَسٍ، قَالَ كَانَ النَّبِيُّ صلى الله عليه وسلم يَتَوَضَّأُ عِنْدَ كُلِّ صَلاَةٍ. قُلْتُ كَيْفَ كُنْتُمْ تَصْنَعُونَ قَالَ يُجْزِئُ أَحَدَنَا الْوُضُوءُ مَا لَمْ يُحْدِثْ.

**பாடம் : 54 உளூ முறிவதற்குரிய காரணம் (ஹதஸ்) ஏற்படாமலேயே (புதிதாக) உளூ செய்தல்.**

**214.** 'நபி(ஸல்) அவர்கள் ஒவ்வொரு தொழுகைக்காகவும் உளூச் செய்வார்கள்' என அனஸ்(ரலி) கூறியபோது, 'நீங்கள் எப்படிச் செய்வீர்கள்?' என அனஸ்(ரலி) அவர்களிடம் நான் கேட்டதற்கு, 'உளூவை முறிக்கும் செயல்கள் நிகழாமலிருக்கும் போதெல்லாம் ஒரே உளூவே எங்களுக்குப் போதுமானதாகவே இருந்தது' என்று அனஸ்(ரலி) கூறினார்' அம்ர் இப்னு ஆமிர் அறிவித்தார். Book: 4 - - **ஸஹீஹுல் புகாரி**

10. உளூ செய்த பிறகு துஆ செய்வது:

மூன்று துஆக்கள் உள்ளன.

1. உமர் அறிவிப்பதாவது:

உங்களில் யாராவது முழுமையாக உளூ செய்தபின்பு வணக்கத்திற்கு உரியவன் அல்லாஹ் வைத் தவிர வேறில்லை, அவன் தனித்தவன், அவனுக்கு இணை இல்லை என்று நான் சாட்சி கூறுகிறேன். முஹம்மது அல்லாஹ் வின் அடியாராகவும், தூதராகவும் இருக்கிறார்கள் என்று நான் சாட்சி கூறுகிறேன் أَشْهَدُ أَنْ لَا إِلَهَ إِلَّا اللهُ وَحْدَهُ لَا شَرِيكَ لَهُ، وَأَشْهَدُ أَنَّ مُحَمَّداً عَبْدُهُ وَرَسُولُهُ என்று கூறினால், சுவனத்தின் எட்டு வாசல்களுக்கு அவருக்காகத் திறக்கப்படும். விரும்பிய வாசல் வழியாக அவர் நுழையலாம்.'' (முஸ்லிம்)

2. மற்றொரு துஆ:

اللَّهُمَّ اجْعَلْنِي مِنَ التَّوَّابِينَ وَاجْعَلْنِي مِنَ الْمُتَطَهِّرِينَ

“யா அல்லாஹ்! பாவமன்னிப்பு கேட்பவர்களின் கூட்டத்தில் என்னை ஆக்குவாயாக! பரிசுத்தமானவர்களின் கூட்டத்தில் என்னை ஆக்குவாயாக.'' (திர்மிதி பலவீனமான ஹதீது)

3. மூன்றாவது துஆ: க.்.ப்.்.பாரத்து மஜ்லிஸ்

سُبْحَانَكَ اللَّهُمَّ وَبِحَمْدِكَ، أَشْهَدُ أَنْ لَا إِلَهَ إِلَّا أَنْتَ، أَسْتَغْفِرُكَ وَأَتُوبُ إِلَيْكَ

யா அல்லாஹ்! நீ தூயவன்! மேலும் உனக்கே எல்லாப் புகழும், நன்றியும். நிச்சயமாக உன்மைத் தவிர வழிபட யாரும் இல்லை என நான் சாட்சி அளிக்கிறேன். என்னை மன்னிப்பாயாக! உன்னிடமே பாவமன்னிப்பு கோறுகிறேன்.''

11. குறைந்த அளவு தண்ணீரைக் கொண்டு உளூ செய்வது:

முடிந்த அளவிற்கு குறைந்த அளவிற்கான தண்ணீரைக் கொண்டு உளூ செய்வது ஸுன்னாஹ் ஆகும். ரஸூலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ ஒரு ‘முத்’ அளவிற்கான (சுமார் 750 மி.லி - முக்கால் லிட்டர்) தண்ணீரைக் கொண்டு உளூ செய்து விடுவார்கள்.

12. உளூ செய்தபிறகு, துண்டு அல்லது கர்சிப் கொண்டு துடைப்பது:

திர்மிதி 53

அன்னை ஆயிஷா رَضِيَ اللهُ عَنْهَا அறிவிப்பதாவது,

عَنْ عَائِشَةَ، قَالَتْ كَانَ لِرَسُولِ اللَّهِ صلى الله عليه وسلم خِرْقَةٌ يُنَشِّفُ بِهَا بَعْدَ الْوُضُوءِ

“உளூ செய்தபிறகு துடைப்பதற்காக ரஸூலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ ஒரு துணி வைத்திருந்தார்கள்.”

புஹாரி 266

عَنْ مَيْمُونَةَ بِنْتِ الْحَارِثِ، قَالَتْ وَضَعْتُ لِرَسُولِ اللَّهِ صلى الله عليه وسلم غُسْلاً وَسَتَرْتُهُ، فَصَبَّ عَلَى يَدِهِ، فَغَسَلَهَا مَرَّةً أَوْ مَرَّتَيْنِ ـ قَالَ سُلَيْمَانُ لاَ أَدْرِي أَذَكَرَ الثَّالِثَةَ أَمْ لاَ ـ ثُمَّ أَفْرَغَ بِيَمِينِهِ عَلَى شِمَالِهِ، فَغَسَلَ فَرْجَهُ، ثُمَّ دَلَكَ يَدَهُ بِالأَرْضِ أَوْ بِالْحَائِطِ، ثُمَّ تَمَضْمَضَ وَاسْتَنْشَقَ، وَغَسَلَ وَجْهَهُ وَيَدَيْهِ، وَغَسَلَ رَأْسَهُ، ثُمَّ صَبَّ عَلَى جَسَدِهِ، ثُمَّ تَنَحَّى فَغَسَلَ قَدَمَيْهِ، فَنَاوَلْتُهُ خِرْقَةً، فَقَالَ بِيَدِهِ هَكَذَا، وَلَمْ يُرِدْهَا.

**பாடம் : 11 குளிக்கும் போது வலக் கையில் தண்ணீர் அள்ளி இடக் கையின் மீது ஊற்றுவது.**

**266.** நபி (ஸல்) அவர்கள் குளிப்பதற்காக நான் தண்ணீர் வைத்துத் திரையிட்டேன். நபி(ஸல்) அவர்கள் தண்ணீரைத் தங்களின் கையில் ஊற்றி ஒரு முறையோ, இரண்டு முறையோ கழுவினார்கள். பின்னர் தங்களின் வலக்கரத்தால் இடக்கரத்தில் தண்ணீர் ஊற்றித் தங்களின் மர்மஸ்தலத்தைக் கழுவினார்கள். தங்களின் கையைச் சுவரில் அல்லது பூமியில் தேய்த்துக் கழுவினார்கள். வாய்க்கும் மூக்கிற்கும் தண்ணீர் செலுத்தினார்கள். மேலும் தங்களின் முகத்தையும் இரண்டு கைகளையும், தலையையும் கழுவினார்கள். தங்களின் உடல் முழுவதும் தண்ணீர் ஊற்றினார்கள். பின்னர், சிறிது நகர்ந்து நின்று தங்களின் இரண்டு கால்களையும் கழுவினார்கள். பின்னர் நான் அவர்களிடம் ஒரு துவாலையைக் கொடுத்தேன். அப்போது, 'வேண்டாம்' என்பது போல் தங்களின் கையினால் சைகை செய்தார்கள்' என மைமூனா(ரலி) அறிவித்தார். 'இரண்டு முறை கை கழுவினார்கள் என்பதோடு மூன்றாவது முறை கழுவினார்கள் என்று மைமூனா (ரலி) கூறினார்களா இல்லையா என எனக்குத் தெரியாது' என்று இந்த ஹதீஸ் அறிவிப்பாளர்களில் ஒருவரான ஸுலைமான் கூறினார். Book: 5

இதன்படி அவர்கள் குளித்தபிறகு அந்தத் துணியை வாங்கவில்லை. அவர்கள் வழக்கமாக பயன்படுத்துவார்கள் என்பதால், அன்னை மைமூனா அவர்கள் அவர்களிடம் துணியைக் கொடுத்தார்கள். எனினும் அதனை அவர்கள் வேண்டாம் என்பதால், துடைக்காமலும் இருக்கலாம் என்று நாம் எடுத்துக் கொள்ள வேண்டும்.

இறுதியாக, ஒரு சில ஸுன்னாஹ்கள் விடுபட்டுப் போயிருக்கலாம். எனினும் பல விஷயங்களைக் குறிப்பிட்டுள்ளோம். இவை எல்லாம் ஸுன்னாஹ் என்பதால் இதனை விட்டாலும் உளூ நிறைவேறிவிடும். ஆனால் ஸுன்னாஹ்வைக் கடைபிடித்தால் மேலதிக நன்மைகள் கிடைக்கும்.

அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَى நம் அனைவருக்கும் மார்க்க அறிவை அளித்து அருள்புரிவானாக!

**Fiqh 10 - Laws of Ablution-3 - Actions that break Wudu and things to avoid during Wudu**

## ஃபிக்ஹ் வகுப்பு 10 - உளூவின் சட்டங்கள்-3 - உளூவை முறிக்கும் செயல்கள் மற்றும் செய்யக்கூடாத காரியங்கள்

**ஆசிரியர்: அஷ் ஷெய்க் உவைஸ் உமரி நஸீரி**

### உளூவில் செய்யக்கூடாத காரியங்கள்

நபிவழி என்று சொல்லப்படாத சில விஷயங்களையும், நம்மில் சிலர் உளூவின்போது செய்வதைக் காண்கிறோம். அவ்வாறு செய்வதை நாம் தவிர்க்க வேண்டும். தவிர்க்க வேண்டிய அச்செயல்கள் குறித்து இப்போது காண்போம்.

1. வாயினால் சொற்களைக் கொண்டு நிய்யத் செய்வது:

தொழுகை, நோன்பு, உளூ போன்ற எந்த அமல்களிலும், சொற்களைக் கொண்டு நிய்யத் செய்ய வேண்டும் என ரஸுலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ அவர்கள் சொன்னதில்லை. நிய்யத் என்பதற்கான பொருள் எண்ணம் என்பதாகும். எனவே எண்ணம் என்பது உள்ளத்தில் ஏற்படுவதுதான். வாயில்தான் சொற்கள் வெளிப்படும். எனவே சொற்களைக் கொண்டு எண்ணம் கொள்வது என்பது சரியானதாக இருக்காது. இது நபிவழியும் அல்ல. அறிஞர்கள் இதனை பித்அத் என்றும் கூறியுள்ளார்கள்.

2. உளூவில் தண்ணீரை வீண் விரையம் செய்வது:

முந்தைய பாடத்தில் நாம் உளூ செய்யும்போது, உறுப்புகளை குறைந்தபட்சம் ஒரு முறை எனவும், அதிகபட்சம் மூன்று எனவும், கழுவுவதின் எண்ணிக்கை பற்றி கூறியுள்ளோம். மூன்று முறைக்கும் மேலாகக் கழுவினால், அது வீண் விரையம் ஆகிவிடும்.

3. ஒவ்வொரு உறுப்பையும் கழுவும்போதும், ஒரு குறிப்பிட்ட துஆ செய்வது:

இவ்வாறு ஒவ்வொரு செயல்களின்போதும் குறிப்பிட்ட ஒரு துஆவை ஓதுவது சிலருக்கு வழக்கமாக உள்ளது. ஆனால் ரஸுலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ அவர்கள் உளூ ஆரம்பிக்கும்போது பிஸ்மில்லாஹ்வைக் கொண்டும், முடித்தபிறகு முன்பாடத்தில் குறிப்பிடப்பட்டுள்ள மூன்று துஆகளை ஓதுமாறும் மட்டும்தான் சொல்லித் தந்திருக்கிறார்கள். மேலதிகமானது தவிர்க்கப்பட வேண்டியவையாகும்.

4. கழுத்துக்குப் பின்னால் மஸ்ஹு செய்வது:

தலைக்கு மஸ்ஹு செய்த பிறகு, காதுக்கு மஸ்ஹு செய்த பிறகு கழுத்திற்கும் சிலர் அவ்வாறு செய்வார்கள். இது குறித்து எந்த ஒரு ஆதாரப்பூர்வமான ஹதீதும் இல்லை. இவ்வாறு ஒரு ஸஹாபி அறிவித்ததாகக் கூறப்படும் ஹதீது பலவீனமானதாகும். பிக்ஹ் சம்பந்தப்பட்ட மத்ஹப் இமாம்கள் அனைவரும் அவ்வாறு கழுத்தின் பின்புறம் மஸ்ஹு செய்வதை சொல்லாமல் ஒருமித்த கருத்தில் இருந்தார்கள். எனவே இவ்வாறு செய்வது கூடாது என அறிந்து கொள்ள வேண்டும்.

5. கழுத்து மஸ்ஹு செய்த பிறகு, அல்லது நேரடியாக இரண்டு கண்களிலும் இரண்டு கட்டை விரல்களையும் ஒற்றிக் கொள்வது:

சிலர் இவ்வாறு தங்களின் இரட்டை கட்டை விரல்களைக் கொண்டு, தங்களின் கண்களில் ஒற்றிக் கொள்வார்கள். இந்த பித்அத்தையும் விட்டுவிட வேண்டும.

6. காதுகளுக்கு மஸ்ஹு செய்வதற்குத் தனியாக தண்ணீரை எடுத்துக் கொள்வது.

தலைக்கு மஸ்ஹு செய்வதற்கு எடுத்த தண்ணீரைக் கொண்டு காதுகளுக்கும் மஸ்ஹு செய்ய வேண்டும். தலைக்கு என்று தனியான தண்ணீர் எடுக்காமல், முந்தையை ஈரக் கைகளினாலும் தலையையும், காதுகளையும் மஸ்ஹு செய்யலாம். காதுக்கென்று தனியாகத் தண்ணீரை எடுக்கக் கூடாது.

7. உளூ செய்தபிறகு ஓதும் ஷஹாதத் கலிமாவை ஓதிய பிறகு விரலால் வானத்தை நோக்கிச் சுட்டிக்காட்டுதல்:

சிலர் இவ்வாறு உளூ முடிந்த பிறகு, தங்களின் விரலை வானை நோக்கிச் சுட்டிக்காட்டுவது உண்டு. இதுவும் ரஸுலுல்லாஹ் صَلَّى الله عَلَيْهِ وَسَلَّمَ அவர்களால் சொல்லப்படாத ஒன்றாகும்.

## உளூவை முறிக்கக்கூடிய (நவாகிதுல் உளூ) காரியங்கள்.

1. மனிதனின் முன் பின் துவாரங்களிலிருந்து ஏதும் வெளியேறினால்:

முன் பின் துவாரங்களிலிருந்து ஏதும் வெளியேறினால், உளூ முறிந்துவிடும். காற்று, மல ஜலம், இரத்தம் போன்றவை இதில் அடங்கும்.

புஹாரி 6954:

அபு ஹுரைராஹ் رَضِي الله عَنْهُ அறிவிப்பதாவது,

دَّثَنِي إِسْحَاقُ، حَدَّثَنَا عَبْدُ الرَّزَّاقِ، عَنْ مَعْمَرٍ، عَنْ هَمَّامٍ، عَنْ أَبِي هُرَيْرَةَ، عَنِ النَّبِيِّ صلى الله عليه وسلم قَالَ " لاَ يَقْبَلُ اللَّهُ صَلاَةَ أَحَدِكُمْ إِذَا أَحْدَثَ حَتَّى يَتَوَضَّأَ ".

**6954.** இறைத்தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்' உங்களுக்கு சிறுதுடக்கு ஏற்பட்டால் நீங்கள் அங்கசுத்தி (உளூ) செய்து கொள்ளாத வரை உங்கள் தொழுகையை அல்லாஹ் ஏற்கமாட்டான். என அபூ ஹுரைரா(ரலி) அறிவித்தார்.4 Book : 90 - **ஸஹீஹுல் புகாரி**

தொடக்குக்கு பிறகு உளூ செய்யாதவரை அல்லாஹ் தொழுகையை ஏற்றுக் கொள்ளமாட்டான் என இதிலிருந்து அறியலாம். முன் பின் துவாரங்களின் வழியாக மல ஜலம், காற்று பிரிவது, மற்றும் இரத்தம் ஆகியவை தொடக்கு ஆகும் என்பது அறிஞர் பெருமக்களின் ஒருமித்த கருத்தாகும்.

முன்னர் நாம் கூறியதை இப்போது நினைவில் கொண்டு வருகிறோம். பெண்களுக்கு வெளியேறும் வெள்ளைப் படுதல் அசுத்தமாகாது என்று நாம் கூறினோம். அதன்படி அவ்வாறு வெளியேறி உடலில் அல்லது ஆடையில் பட்டால் கழுவ வேண்டும் என்பது கட்டாயம் இல்லை என்று பொருளாகும். எனினும் அது வெளியேறினால் உளூ முறிந்துவிடும் என்பதனை இங்கு கூறுகிறோம். அது பட்டால் கழுவ வேண்டியது அவசியமில்லை என்றாலும், உளூ முறிந்துவிடும் என்பதால் மறுபடியும் உளூ செய்ய வேண்டும்.

இஸ்தின்ஜா செய்த பிறகு (அதாவது மல ஜலம் கழித்த பிறகு தண்ணீர் கொண்டு சுத்தம் செய்த பிறகு) அந்தத் தண்ணீர் பட்டால் நமது உளூ முறியாது. ஆனால் அது அந்த தண்ணீர் அல்லாமல் சிறிதாக வெளியேறிய சிறுநீர் என்று நாம் அறிந்தால், உளூ முறிந்துவிடும். இந்த சிறுநீர்ப் பிரச்சனை சிலருக்கு இருக்கலாம். சிறுநீர் கழித்த சில நொடிகளுக்குப் பிறகும் ஒரு சில சொட்டுகள் சிறு நீர் வெளியேறலாம். அவ்வாறு வெளியேறியது உறுதியானால், நம் உளூ முறிந்துவிட்டது என அறிந்து கொள்ள வேண்டும். அப்படிபட்ட மனிதர்கள் தங்களுக்கு அடிக்கடி இவ்வாறு ஏற்படும் என்ற கடுமையான பிரச்சனை இருந்தால், அவர் தொழுகைக்கு சில நிமிடங்களுக்கு முன்னால், உளூ செய்து தொழ வேண்டும். அவருக்கு பின்னர் ஒரு சில சொட்டுவந்தாலும், தொழுகையைத் தொடரலாம். எனினும் அப்படிப்பட்ட கடுமையான பிரச்சனை கொண்டவர்கள் ஒவ்வொரு தொழுகைக்கும் அவ்வாறு சிறிது நேரங்களுக்கு முன்னால் உளூ செய்ய வேண்டும். பிரச்சனை கடுமையில்லாதவர்கள் அவ்வாறு சிறுநீர் பிரிந்தால் மீண்டும் உளூ செய்துதான் தொழ வேண்டும்.

2. ஆழ்ந்த உறக்கம்:

ஒரு படுத்து, அல்லது அமர்ந்து அல்லது நின்ற நிலையில், அல்லது எதன் மீதும் சாய்ந்த நிலையிலும் ஆழ்ந்த தூக்கத்திற்கு ஆளானால் அவரது உளூ முறிந்துவிடும்.

அபு தாவூத் 203

அலி இப்னு அபுதாலிப் رَضِي الله عَنْهُ அறிவிப்பதாவது,

عَنْ عَلِيِّ بْنِ أَبِي طَالِبٍ، - رضى الله عنه - قَالَ قَالَ رَسُولُ اللَّهِ صلى الله عليه وسلم " وِكَاءُ السَّهِ الْعَيْنَانِ فَمَنْ نَامَ فَلْيَتَوَضَّأْ " .

ரஸூலுல்லாஹ் صَلَّى اللّٰه عَلَيْهِ وَسَلَّمَ கூறியுள்ளார்கள், “இரு கண்களும், பின் துவாரத்தின் தோல் முடிச்சு ஆகும். எனவே யாரும் தூங்கினால் (அந்த முடிச்சு அவிழ்ந்துவிடும் என்பதால்) அவர் உளூ செய்ய வேண்டும்.”

ஆழ்ந்த தூக்கத்தில் காற்று பிரிந்ததை அறியமுடியாது. எனவேதான் உளூ செய்ய வேண்டும். சிலர் படுத்துத் தூங்கினால்தான் உளூ செய்ய வேண்டும் என்ற ஹதீதைக் காட்டி, நின்று தூங்கினாலே அல்லது அமர்ந்து தூங்கினாலோ உளூ முறியாது எனக் கூறலாம். ஆனால் அந்த ஹதீது பலவீனமானது. எனவே எந்த நிலையில் இருந்தாலும், ஆழ்ந்த தூக்கம் உளூவை முறிக்கக் கூடியது.

சிறு தூக்கம் அதாவது தூக்கமும், நினைவும் கலந்த தூக்கம் உளூவை முறிக்காது. அனஸ் அவர்களின் அறிவிப்பின்படி, மக்கள் ரஸூலுல்லாஹ் صَلَّى اللّٰه عَلَيْهِ وَسَلَّمَ அவர்களுக்காகப் பள்ளிவாசலில் தொழுகைக்காகக் காத்திருந்தார்கள். அவர்கள் வர தாமதமாக நேரத்தில் சில ஸஹாபாக்கள் சிறுதூக்கத்திற்குச் சென்று விட்டார்கள். அவர்கள் வந்தவுடன் எல்லோரும் தொழுதார்கள். யாரும் மறுபடியும் உளூ செய்யவில்லை.

முஸ்லிம் 376

கத்தாதாஹ் رَضِـي الله عَنْهُ அறிவிப்பதாவது,

عَنْ قَتَادَةَ، قَالَ سَمِعْتُ أَنَسًا، يَقُولُ كَانَ أَصْحَابُ رَسُولِ اللَّهِ صلى الله عليه وسلم يَنَامُونَ ثُمَّ يُصَلُّونَ وَلاَ يَتَوَضَّئُونَ قَالَ قُلْتُ سَمِعْتَهُ مِنْ أَنَسٍ قَالَ إِي وَاللَّهِ .

**616.** ஷுஅபா (ரஹ்) அவர்கள் கூறியதாவது: அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களின் தோழர்கள் (உட்கார்ந்துகொண்டே) உறங்கிவிட்டு (பிறகு எழுந்து) தொழுவார்கள். (அதற்காகப் புதிதாக) உளூச் செய்யமாட்டார்கள் என்று அனஸ் (ரலி) அவர்கள் கூறுவதை நான் கேட்டேன் என கத்தாதா (ரஹ்) அவர்கள் கூறினார்கள். நான், இதை அனஸ் (ரலி) அவர்களிடமிருந்து நீங்கள் செவியுற்றீர்களா? என்று கேட்டேன். அதற்கு கத்தாதா (ரஹ்) அவர்கள், ஆம், அல்லாஹ்வின் மீதாணையாக! என்று சொன்னார்கள். Book : 3 - **ஸஹீஹ் முஸ்லிம்**

நான் அனஸ் رَضِـي الله عَنْهُ அவர்கள் சொல்லக் கேட்டேன். ரஸூலுல்லாஹ் صَلَّى اللّٰه عَلَيْهِ وَسَلَّمَ அவர்களின் தோழர்கள் சிறுதூக்கத்திற்குச் சென்றுவிட்டார்கள். பின்னர் அவர்கள் உளூ ஏதும் செய்யாமல் தொழுதார்கள். (அறிவிப்பாளர்) கூறுகிறார், “நீங்கள் உண்மையில் அனஸ் رَضِـي الله عَنْهُ அவர்களிடம் கேட்டது உண்மைதானா?” அவர் கூறினார், “அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَى வின் மீது ஆணையாக! (உண்மைதான்)”

ஆனால் படுத்துத் தூங்கினாலேயே உளூ முறிந்துவிடும்.

ஆழ்ந்தத் தூக்கம் என்பது மயக்கம் கொள்வது, போதையினால் நினைவு பேதலிப்பது, சிறிது நேரம் மனக்கோளாறு ஏற்படுதல் ஆகியவையும் அடங்கும். அப்போதும் உளூ முறிந்துவிடும்.

3. தமது அந்தரங்க உறுப்பை திரையில்லாமல் நேரடியாகத் தொடுவது:

நஸாயி 444

பஸ்ரா رَضِـي الله عَنْهُ அறிவிப்பதாவது,

عَنْ بُسْرَةَ، قَالَتْ قَالَ رَسُولُ اللَّهِ صلى الله عليه وسلم " مَنْ مَسَّ فَرْجَهُ فَلْيَتَوَضَّأْ " .

ரஸுலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ கூறியுள்ளார்கள், “யாராவது தங்களின் அந்தரங்க உறுப்பைத் தொட்டால், அவர் உளு செய்து கொள்ளட்டும்.”

நஸாயி 165

தல்க் இப்னு அலி رَضِي الله عَنْهُ அறிவிப்பதாவது?

طَلْقِ بْنِ عَلِيٍّ، عَنْ أَبِيهِ، قَالَ خَرَجْنَا وَفْدًا حَتَّى قَدِمْنَا عَلَى رَسُولِ اللَّهِ صلى الله عليه وسلم فَبَايَعْنَاهُ وَصَلَّيْنَا مَعَهُ فَلَمَّا قَضَى الصَّلاَةَ جَاءَ رَجُلٌ كَأَنَّهُ بَدَوِيٌّ فَقَالَ يَا رَسُولَ اللَّهِ مَا تَرَى فِي رَجُلٍ مَسَّ ذَكَرَهُ فِي الصَّلاَةِ قَالَ " وَهَلْ هُوَ إِلاَّ مُضْغَةٌ مِنْكَ أَوْ بَضْعَةٌ مِنْكَ " .

“....ஒரு மனிதர் ரஸுலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ அவர்களிடம் வினவினார், “ரஸுலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ அவர்களே! தொழுகையின்போது, தமது அந்தரங்க உறுப்பைத் தொட்ட ஒருவரின் நிலை என்ன?” அவர்கள் கூறினார்கள், “அது உம்முடைய ஒரு பகுதி அல்லது அது துண்டுதான்.”

இந்த ஹதீதில் ‘தொழுகையில்’ என்று வந்துள்ளதால், தொழுகையின் ஆடையில்லாமல் (திரையில்லாமல்) அவர் தொட வாய்ப்பில்லை என நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

இச்சையில்லாத நிலையில் தொட்டால் உளு முறியாது என்ற சில அறிஞர்களின் கருத்தின்படி, பெண்கள் தங்களின் குழந்தைகளைச் சுத்தம் செய்யும்போது, அவ்வாறு பட்டால் திரும்ப உளுச் செய்யத் தேவையில்லை என்று எடுத்துக் கொள்ளலாம். இப்னு ஹுஸைனி என்ற அறிஞர் இவ்வாறு கருத்து கூறியுள்ளார்.

4. ஒட்டகக்கறி சாப்பிட்டால் உளு முறிந்துவிடும்.

முஸ்லிம் 360

ஸமுரா رَضِي الله عَنْهُ அறிவிப்பதாவது,

عَنْ جَابِرِ بْنِ سَمُرَةَ، أَنَّ رَجُلاً، سَأَلَ رَسُولَ اللَّهِ صلى الله عليه وسلم أَأَتَوَضَّأُ مِنْ لُحُومِ الْغَنَمِ قَالَ " إِنْ شِئْتَ فَتَوَضَّأْ وَإِنْ شِئْتَ فَلاَ تَوَضَّأْ " . قَالَ أَتَوَضَّأُ مِنْ لُحُومِ الإِبِلِ قَالَ " نَعَمْ فَتَوَضَّأْ مِنْ لُحُومِ الإِبِلِ

**பாடம் : 25 ஒட்டக இறைச்சி சாப்பிட்ட பிறகு அங்கத் தூய்மை (உளூ) செய்வது. 588.** ஜாபிர் பின் சமுரா (ரலி) அவர்கள் கூறியதாவது: ஒரு மனிதர் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களிடம், ஆட்டிறைச்சி சாப்பிட்டால் நான் (புதிதாக) அங்கத் தூய்மை (உளூ) செய்ய வேண்டுமா? என்று கேட்டார். அதற்கு அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் நீர் விரும்பினால் உளூச் செய்துகொள்க! விரும்பா விட்டால் உளூச் செய்ய வேண்டாம் என்று சொன்னார்கள். அந்த மனிதர், ஒட்டக இறைச்சி சாப்பிட்டால் நான் (புதிதாக) அங்கத் தூய்மை செய்ய வேண்டுமா? என்று கேட்டார். அதற்கு அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள், ஆம்; ஒட்டக இறைச்சி சாப்பிட்டால் உளூச் செய்துகொள்க! என்றார்கள். அவர், ஆட்டுத் தொழுவத்தில் நான் தொழலாமா? என்று கேட்டார். அதற்கு ஆம் (தொழலாம்) என்றார்கள். அவர், ஒட்டகத் தொழுவத்தில் தொழலாமா?என்று கேட்டார் அதற்கு நபி (ஸல்) அவர்கள் இல்லை (தொழ வேண்டாம்) என்று கூறினார்கள். - மேற்கண்ட ஹதீஸ் மேலும் மூன்று அறிவிப்பாளர்தொடர்கள் வழியாகவும் வந்துள்ளது. Book : 3 - **ஸஹீஹ் முஸ்லிம்**

எனவே இந்த ஹதீதின்படி ஒட்டக இறைச்சியை சாப்பிட்டால் உளு முறிந்துவிடும்.

மனி சுத்தமானது என்றாலும், அது வெளியானால் ஏன் உளு முறிந்துவிடும் என்ற கேள்விக்கு, ஒட்டக இறைச்சி ஹதீது பதிலாகும். ஒட்டக இறைச்சி சுத்தமானதுதான், உண்ண ஹலால்தான். எனினும் அது சாப்பிட்டால் எவ்வாறு மீண்டும் உளு செய்ய வேண்டுமோ, அதைப் போன்றுதான் மனி சம்பந்தப்பட்டதும் ஆகும்.

மேலே சொல்லப்பட்ட நான்கு விஷயங்கள் உளுவை முறிக்கக் கூடிய காரியங்களாகும்.

**Fiqh 11 - Laws of Ablution-4 - Prayers for which Wudu is necessary and desirable timings for performing Wudu**

## ஃபிக்ஹ் வகுப்பு 11 - உளூவின் சட்டங்கள்-4 - உளூ அவசியமுள்ள வணக்கங்கள் மற்றும் உளூ செய்வதற்கு விரும்பத்தக்க நேரங்கள்

**ஆசிரியர்: அஷ் ஷெய்க் உவைஸ் உமரி நஸீரி**

### உளூவை முறிக்கக்கூடிய (நவாகிதுல் உளூ) காரியங்கள் என்று நினைக்கும், ஆனால் முறிக்காத காரியங்கள்

1. இரத்தம் வெளியேறுதல்: அடிப்பட்டு அல்லது காயத்திலிருந்து இரத்தம் வெளியேறினால் உளூ முறியும் என்பதற்கான ஆதாரம் ஏதும் இல்லை. சிலருக்கு மூக்கிலிருந்து அல்லது வாயிலிருந்து இரத்தம் வெளியேறினால் உளூ முறிந்து விடும் என்றவை பலவீனமான ஹதீதுகளைச் சேர்ந்தவையே, அவற்றால் உளூ முறியாது என்பததை அறிந்து கொள்ள வேண்டும். ஸஹாபாக்கள் இரத்தம் வெளியேறிய நிலையில், தொழுதார்கள் என்பதற்கான சான்றுகள் அதிகம் உள்ளன. அவ்வாறு உளூ முறிந்துவிடும் என்றிருந்தால், அந்தச் செயல் ரஸுலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ அவர்களினால் அப்போதே தடுக்கப்பட்டிருக்கும். அப்பாத் பின் பிஸ்ர் என்ற ஸஹாபி, எதிரிகளினால் அம்பெய்தப்பட்டு, இரத்தம் வடிந்த நிலையில் தொழுதார் என்ற செய்தி பிரபலமானதாகும்.

மேலும் முன் பின் துவாரங்களிலிருந்து இரத்தம் வந்தால் உளூ முறிந்துவிடும் என்பதனை முன்னரே கூறியுள்ளோம்.

2. தொழுகையில் சப்தமிட்டுச் சிரிப்பது: தொழுகையில சப்தமாகச் சிரித்தால் தொழுகை வீணாகிவிடும் என்பதால் மறுபடியும் தக்பீர் தஹ்ரிமாவுடன் தொழ வேண்டும். ஆனால் அவ்வாறு சிரிப்பதால் உளூ முறியாது. இது குறித்து உள்ள செய்திகள் பலவீனமானதாகும்.

3. மனைவியை முத்தமிடுதல், மனைவியைத் தொடுதல் ஆகிவற்றால் உளூ முறியாது.

திர்மிதி 86

அன்னை ஆயிஷா رَضِيَ اللهُ عَنْهَا அவர்களிடமிருந்து உர்வா رَضِيَ الله عَنْهُ அறிவிப்பதாவது:

عَنْ عُرْوَةَ، عَنْ عَائِشَةَ، أَنَّ النَّبِيَّ صلى الله عليه وسلم قَبَّلَ بَعْضَ نِسَائِهِ ثُمَّ خَرَجَ إِلَى الصَّلاَةِ وَلَمْ يَتَوَضَّأْ . قَالَ قُلْتُ مَنْ هِيَ إِلاَّ أَنْتِ قَالَ فَضَحِكَتْ .

ரஸுலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ தங்களின் மனைவியரில் ஒருவரை முத்தமிட்டுப் பின்னர் தொழுகைக்குச் சென்றார்கள். அவர்கள் உளூ செய்யவில்லை. உர்வா رَضِيَ الله عَنْهُ கூறினார், “உங்களைத் தவிர வேறு யாராக இருக்க முடியும்?” அதற்கு அவர்கள் சிரித்தார்கள்.”

4. ஒட்டகத்தின் இறைச்சியைத் தவிர எந்த சமைத்த உணவைச் சாப்பிட்டாலும் உளூ முறியாது.

புஹாரி 208

ஜா'்.பிர் இப்னு அம்ரு இப்னு உமைய்யாஹ் رَضِيَ الله عَنْهُ அறிவிப்பதாவது:

جَعْفَرُ بْنُ عَمْرِو بْنِ أُمَيَّةَ، أَنَّ أَبَاهُ، أَخْبَرَهُ أَنَّهُ، رَأَى رَسُولَ اللَّهِ صلى الله عليه وسلم يَحْتَزُّ مِنْ كَتِفِ شَاةٍ، فَدُعِيَ إِلَى الصَّلاَةِ فَأَلْقَى السِّكِّينَ فَصَلَّى وَلَمْ يَتَوَضَّأْ.

**208.** 'நபி(ஸல்) அவர்கள் ஆட்டின் தொடை இறைச்சியை வெட்டிச் சாப்பிட்டுக் கொண்டிருந்ததை பார்த்தேன். அப்போது தொழுகைக்காக அழைக்கப்பட்டது. உடனே கத்தியைப் போட்டுவிட்டுத் தொழுதார்கள்; உளூச் செய்யவில்லை' அம்ர் இப்னு உமய்யா(ரலி) கூறினார். Book: 4 - **ஸஹீஹுல் புகாரி**

5. அந்தரங்க உறுப்பைக் காண்பதால் உளூ முறியாது.

6. பொய் சொன்னால், அல்லது பாவம் ஏதும் செய்வதனால் உளூ முறியாது.

7. நஜீஸ் நம்மீது பட்டாலும் அல்லது உடலில் ஒட்டிருந்தாலும் உளூ முறியாது. அதனை சுத்தப்படுத்த வேண்டுமே அன்றி உளூ முறியாது.

8. வாந்தி எடுத்தால் உளூ முறியாது

இப்னு மாஜாஹ் 1221

அன்னை ஆயிஷா رَضِي الله عَنْها அறிவிப்பதாவது:

عَنْ عَائِشَةَ، قَالَتْ قَالَ رَسُولُ اللَّهِ ـ صلى الله عليه وسلم ـ " مَنْ أَصَابَهُ قَىْءٌ أَوْ رُعَافٌ أَوْ قَلَسٌ أَوْ مَذْىٌ فَلْيَنْصَرِفْ فَلْيَتَوَضَّأْ ثُمَّ لْيَبْنِ عَلَى صَلاَتِهِ وَهُوَ فِي ذَلِكَ لاَ يَتَكَلَّمُ " .

ரஸுலுல்லாஹ் صَلَّى الله عَلَيْهِ وَسَلَّمَ கூறியுள்ளார்கள், ‘‘யாரும் வாந்தி எடுத்தாலும், மூக்கிலிருந்து இரத்தம் வழிந்தாலும், எற்களித்தாலும், மதி வெளியானாலும் தொழுகையை நிறுத்திவிட்டு, உளூ செய்ய வேண்டும். பின்னர் தொழவேண்டும். அந்த நிலையில் பேசக் கூடாது.’’

எனினும் இந்த ஹதீது பலவீனமானதாகும்.

9. உளூ முறிந்துவிட்டது என்று சந்தேகம் ஏற்பட்டாலும் உளூ முறியாது.

முஸ்லிம் 362

அபு ஹுரைராஹ் رَضِي الله عَنْهُ அறிவிப்பதாவது,

عَنْ أَبِي هُرَيْرَةَ، قَالَ قَالَ رَسُولُ اللَّهِ صلى الله عليه وسلم " إِذَا وَجَدَ أَحَدُكُمْ فِي بَطْنِهِ شَيْئًا فَأَشْكَلَ عَلَيْهِ أَخَرَجَ مِنْهُ شَىْءٌ أَمْ لاَ فَلاَ يَخْرُجَنَّ مِنَ الْمَسْجِدِ حَتَّى يَسْمَعَ صَوْتًا أَوْ يَجِدَ رِيحًا " .

**590.** அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: உங்களில் ஒருவர் தமது வயிற்றில் ஏதோ ஏற்படுவதைப் போன்று உணர்ந்து, அதிலிருந்து ஏதேனும் வெளியேறிவிட்டதா இல்லையா என்று சந்தேகப்பட்டால், அவர் (வாயு பிரிவதன்) சப்தத்தைக் கேட்காதவரை, அல்லது நாற்றத்தை உணராதவரை (உளூ முறிந்துவிட்டதென எண்ணி) பள்ளிவாசலில் இருந்து வெளியேறிவிட வேண்டாம். இதை அபூஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள். Book: 3 - **ஸஹீஹ் முஸ்லிம்**

எனவே சந்தேகம் ஷைத்தானின் ஊசாட்டம் என்பதால் அதனால் உளூ முறியாது.

**மூன்று காரியங்களுக்காக உளூ செய்வது அவசியமாகும்.**

1. தொழுகை:

தொழுகையில் உளூ செய்வது தொழுகைக்கான நிபந்தனையாகும்.

முஸ்லிம் 224

இப்னு உமர் رَضِي الله عَنْهُ கூறியதாவது,

ابْنَ عُمَرَ . قَالَ إِنِّي سَمِعْتُ رَسُولَ اللَّهِ صلى الله عليه وسلم يَقُولُ " لاَ تُقْبَلُ صَلاَةٌ بِغَيْرِ طُهُورٍ وَلاَ صَدَقَةٌ مِنْ غُلُولٍ

**382.** பாடம் : 2 தொழுகைக்குத் தூய்மை அவசியம். முஸ்அப் பின் சஅத் (ரஹ்) அவர்கள் கூறியதாவது: நோயுற்றிருந்த இப்னு ஆமிர் (ரஹ்) அவர்களை உடல்நலம் விசாரிப்பதற்காக அப்துல்லாஹ் பின் உமர் (ரலி) அவர்கள் சென்றார்கள். அப்போது இப்னு ஆமிர் (ரஹ்) அவர்கள்,

இப்னு உமர் அவர்களே! எனக்காகத் தாங்கள் அல்லாஹ்விடம் பிரார்த்திக்கக் கூடாதா? என்று கேட்டார்கள். அதற்கு **இப்னு உமர் (ரலி) அவர்கள் அங்கத் தூய்மை (உளூ) செய்யாமல் எந்தத் தொழுகையும் ஏற்கப்படாது;** மோசடி செய்த பொருளால் செய்யப்படும் எந்த தானதர்மமும் ஏற்கப்படாது என்று அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறுவதை நான் கேட்டிருக்கிறேன். நீங்கள் பஸ்ராவி(ன் ஆட்சிப் பொறுப்பி)ல் இருந்தீர்கள் என்று கூறி (மறுத்து)விட்டார்கள். - **ஸஹீஹ் முஸ்லிம்**

ரஸுலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ கூறியுள்ளார்கள், “தூய்மை இல்லாமல் எந்தத் தொழுகையும் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. திருடி செய்யப்பட்ட தர்மமும் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.”

இங்கு தூய்மை என்று குறிப்பிடப்பட்டுள்ளது உளூவைத்தான்.

புஹாரி 6954

அபு ஹுரைராஹ் رَضِيَ الله عَنْهُ அறிவிப்பதாவது,

عَنْ أَبِي هُرَيْرَةَ، عَنِ النَّبِيِّ صلى الله عليه وسلم قَالَ " لاَ يَقْبَلُ اللَّهُ صَلاَةَ أَحَدِكُمْ إِذَا أَحْدَثَ حَتَّى يَتَوَضَّأَ ".

**6954.** இறைத்தூதர்(ஸல்) அவர்கள் கூறினார்கள்' உங்களுக்குச் சிறுதுடக்கு ஏற்பட்டால் நீங்கள் அங்கசுத்தி (உளூ) செய்து கொள்ளாத வரை உங்கள் தொழுகையை அல்லாஹ் ஏற்கமாட்டான். என அபூ ஹுரைரா(ரலி) அறிவித்தார்.4 Book : 90 - **ஸஹீஹுல் புகாரி**

2. முஸ்ஹ.்.பபை (குர்ஆனை)த் தொடுவதற்கு:

குர்ஆனைத் தொழுவதற்கு உளூ அவசியம். இதில் கருத்து வேறுபாடு காணப்பட்டாலும், இதுதான் சிறந்தது.

முவத்தா மாலிக் 473

அப்துல்லாஹ் இப்னு அபு பக்ரு رَضِيَ الله عَنْهُ அறிவிப்பதாவது,

عَنْ مَالِكٍ، عَنْ عَبْدِ اللَّهِ بْنِ أَبِي بَكْرِ بْنِ حَزْمٍ، . أَنَّ فِي الْكِتَابِ الَّذِي، كَتَبَهُ رَسُولُ اللَّهِ صلى الله عليه وسلم لِعَمْرِو بْنِ حَزْمٍ " أَنْ لاَ يَمَسَّ الْقُرْآنَ إِلاَّ طَاهِرٌ.

யஹ்யா رَضِيَ الله عَنْهُ கூறியதாவது, ரஸுலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ அப்துல்லாஹ் இப்னு ஹஸம் க்கு எழுதி அனுப்பிய கடிதத்தில் கூறப்பட்டுள்ளதாவது, “தூய்மையாக இல்லாத நிலையில் குர்ஆனை யாரும் தொடக்கூடாது.” சுத்தமானவர்கள் என்பது உளூ செய்தவர்கள் என்று பொருள்படும். திரையுடன் தொட அனுமதியுள்ளது.

3. க.்.பாவைத் தவா.்.ப் செய்வது.

புஹாரியிலுள்ள ஹதீதின்படி ரஸுலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ உளூ செய்துவிட்டுப் பின்னர் தவா.்.ப் செய்தார்கள். அன்னை ஆயிஷா رَضِيَ اللهُ عَنْهَا அவர்களுக்கு மாதவிடாய் ஏற்ப்பட்ட நேரத்தில் அவர்களை தவா.்.பைத் தவிர ஹஜ்ஜின் மற்ற அமல்களைச் செய்யுமாறும், தூய்மையான பிறகு தவா.்.ப் செய்யுமாறும் ரஸுலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ அறிவுறுத்தினார்கள். சில அறிஞர்களின் கருத்தின்படி தவா.்.ப் செய்வதற்கு உளூ அவசியமில்லை என்றும், பள்ளிவாசலில் தங்குவதற்கு பெருந்துடக்கை விட்டு நீங்கியிருக்க வேண்டும் எனக் கூறியுள்ளார்கள். அதனால்தான் அன்னை

ஆயிஷா رَضِيَ الله عَنْهَا அவர்களை அவ்வாறு ரஸுலுல்லாஹ் صَلَّى الله عَلَيْهِ وَسَلَّمَ தடுத்தார்கள் எனக் கூறுகிறார்கள்.

## உளு வலியுறுத்தப்பட்டுள்ள காரியங்கள்

சில காரியங்களில் உளு செய்வது கடமையாக இல்லாவிட்டாலும், அவ்வாறு செய்வது வலியுறுத்தப்பட்டுள்ளது. சிறந்ததாகவும் கூறப்பட்டுள்ளது.

1. குர்ஆன் ஓதும்போதும், திக்ரு செய்யும் போதும்:

குர்ஆனைத் தொடாமல் பார்த்து ஓதும்போது உளு செய்வது சிறந்ததாகக் கூறப்பட்டுள்ளது. எனினும் இப்னு அப்பாஸ் அவர்களின் அறிவிப்பின்படி ரஸுலுல்லாஹ் صَلَّى الله عَلَيْهِ وَسَلَّمَ தூக்கத்தை விட்டு எழுந்த பிறகு, அத்தியாயம் ஆல இம்ரானின் கடைசி வசனங்களை ஓதிய பிறகு உளு செய்வார்கள், என்பதிலிருந்து அவ்வாறும் ஓதலாம் என அறியப்படுகிறது.

அபு தாவூத் 17

முஜீபுர் இப்னு குன்.:.புத் رَضِيَ الله عَنْهُ அறிவிப்பதாவது,

عَنِ الْمُهَاجِرِ بْنِ قُنْفُذٍ، أَنَّهُ أَتَى النَّبِيَّ صلى الله عليه وسلم وَهُوَ يَبُولُ فَسَلَّمَ عَلَيْهِ فَلَمْ يَرُدَّ عَلَيْهِ حَتَّى تَوَضَّأَ ثُمَّ اعْتَذَرَ إِلَيْهِ فَقَالَ " إِنِّي كَرِهْتُ أَنْ أَذْكُرَ اللَّهَ عَزَّ وَجَلَّ إِلاَّ عَلَى طُهْرٍ " . أَوْ قَالَ " عَلَى طَهَارَةٍ " .

“நான் ரஸுலுல்லாஹ் صَلَّى الله عَلَيْهِ وَسَلَّمَ அவர்களுக்கு அவர்கள் சிறுநீர் கழித்துக் கொண்டிருந்த நிலையில் ஸலாம் சொன்னேன். அவர்கள் உளு செய்யாதவரை எனக்குப் பதில் சொல்லவில்லை. பின்னர் அவர்கள் வருத்தம் தெரிவித்துக் கூறினார்கள், “நான் தூய்மை (உளு) இல்லாமல் அல்லாஹ் வை நினைவு கூர்வதை வெறுக்கிறேன்.”

2. ஒவ்வொரு தொழுகைக்கும் புதிதாக உளு செய்வது

3. மனைவியுடன் உடலுறவு கொண்ட பிறகு, மறுபடியும் உடலுறவு கொள்ள விரும்பினால் உளு செய்து கொள்வது

முஸ்லிம் 308

அபு ஸயீத் அல் குத்ரி رَضِيَ الله عَنْهُ அறிவிப்பதாவது,

عَنْ أَبِي سَعِيدٍ الْخُدْرِيِّ، قَالَ قَالَ رَسُولُ اللَّهِ صلى الله عليه وسلم " إِذَا أَتَى أَحَدُكُمْ أَهْلَهُ ثُمَّ أَرَادَ أَنْ يَعُودَ فَلْيَتَوَضَّأْ "

**518.** அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: உங்களில் ஒருவர் தம் இல்லாளிடம் பாலுறவு கொண்டுவிட்டுப் பின்னர் மீண்டும் (உறவுகொள்ள) விரும்பினால் அவர் (இடையில்) அங்கத் தூய்மை (உளு) செய்து கொள்ளட்டும். இதை அபூசயீத் அல்குத்ரீ (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள். - **ஸஹீஹ் முஸ்லிம்**

4. குளிப்பதற்கு முன்பு உளு செய்வது:

முஸ்லிம் 316

அன்னை ஆயிஷா رَضِيَ الله عَنْهَا அறிவிப்பதாவது:

عَنْ عَائِشَةَ، أَنَّ رَسُولَ اللَّهِ صلى الله عليه وسلم كَانَ إِذَا اغْتَسَلَ مِنَ الْجَنَابَةِ بَدَأَ فَغَسَلَ يَدَيْهِ قَبْلَ أَنْ يُدْخِلَ يَدَهُ فِي الإِنَاءِ ثُمَّ تَوَضَّأَ مِثْلَ وُضُوئِهِ لِلصَّلاَةِ .

**526.** ஆயிஷா (ரலி) அவர்கள் கூறியதாவது: அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் பெருந்துடக்கிற்காகக் **குளிக்கும்போது முதலில் தம் கைகளை (மணிக்கட்டுவரை) கழுவுவார்கள்.** பிறகு வலக் கையால் (தண்ணீர் அள்ளி) இடக் கையின் மீது ஊற்றிப் பிறவி உறுப்பைக் கழுவுவார்கள். பின்னர் தொழுகைக்காக அங்கத் தூய்மை (உளூ) செய்வதைப் போன்று அங்கத் தூய்மை செய்வார்கள். அதன் பின்னர் தண்ணீரை அள்ளி மயிர்க்கால்களுக்கு இடையே விரல்களை நுழை(த்துத் தலையைக் கோய்)ப்பார்கள். தலைமுடி முழுவதும் நனைந்துவிட்டதாகத் தெரிந்ததும் இரு கைகளிலும் மூன்று தடவை தண்ணீர் அள்ளி தலையில் ஊற்றுவார்கள். பிறகு மேனி முழுவதிலும் தண்ணீர் ஊற்றுவார்கள். பின்னர் கால்களைக் கழுவுவார்கள். Book: 3 - **ஸஹீஹ் முஸ்லிம்**

**5.** துாங்குவதற்கு முன்னால் உளூ செய்வது:

புஹாரி 247

அல் பராஹு இப்னு ஆஸிப் رَضِي الله عَنْهُ அறிவிப்பதாவது,

عَنِ الْبَرَاءِ بْنِ عَازِبٍ، قَالَ قَالَ النَّبِيُّ صلى الله عليه وسلم " إِذَا أَتَيْتَ مَضْجَعَكَ فَتَوَضَّأْ وُضُوءَكَ لِلصَّلاَةِ، ثُمَّ اضْطَجِعْ عَلَى شِقِّكَ الأَيْمَنِ، ثُمَّ قُلِ اللَّهُمَّ أَسْلَمْتُ وَجْهِي إِلَيْكَ، وَفَوَّضْتُ أَمْرِي إِلَيْكَ، وَأَلْجَأْتُ ظَهْرِي إِلَيْكَ، رَغْبَةً وَرَهْبَةً إِلَيْكَ، لاَ مَلْجَأَ وَلاَ مَنْجَا مِنْكَ إِلاَّ إِلَيْكَ، اللَّهُمَّ آمَنْتُ بِكِتَابِكَ الَّذِي أَنْزَلْتَ، وَبِنَبِيِّكَ الَّذِي أَرْسَلْتَ. فَإِنْ مُتَّ مِنْ لَيْلَتِكَ فَأَنْتَ عَلَى الْفِطْرَةِ، وَاجْعَلْهُنَّ آخِرَ مَا تَتَكَلَّمُ بِهِ

**பாடம் : 75 உளூவுடன் நித்திரை செய்பவர் அடையும் சிறப்பு. 247.** நீ உன்னுடைய படுக்கைக்குச் செல்லும்போது தொழுகைக்குச் செய்வது போல் உளூச் செய்து கொள். பின்னர் உன்னுடைய வலக்கைப் பக்கமாகச் சாய்ந்து படுத்துக் கொள். பின்னர் **'யா அல்லாஹ்! நான் என்னுடைய முகத்தை உன்னிடம் ஒப்படைத்தேன். என்னுடைய காரியங்களை உன்னிடம் விட்டுவிட்டேன். என்னுடைய முதுகை உன் பக்கம் சாய்த்து விட்டேன். உன்னிடத்தில் ஆதரவு வைத்தவனாகவும் உன்னைப் பயந்தவனாகவும் இதைச் செய்கிறேன். உன்னைவிட்டுத் தப்பிச் செல்லவும் உன்னைவிட்டு ஒதுங்கி விடவும் உன் பக்கமே தவிர வேறிடம் இல்லை. யா அல்லாஹ்! நீ இறக்கிய உன்னுடைய வேதத்தை நான் நம்பினேன். நீ அனுப்பிய உன்னுடைய நபியையும் நம்பினேன்'** என்ற பிரார்த்தனைய நீ செய்து கொள். (இவ்வாறு நீ சொல்லிவிட்டு உறங்கினால்) அந்த இரவில் நீ இறந்துவிட்டால் நீ தூய்மையானவனாய் ஆகிவிடுகிறாய். இந்தப் பிரார்த்தனையை உன்னுடைய (இரவின்) கடைசிப் பேச்சாக ஆக்கிக் கொள்' என்று என்னிடம் இறைத்தூதர்(ஸல்) கூறினார்கள். நான் நபி(ஸல்) அவர்களிடம் இந்தப் பிரார்த்தனையைத் திரும்ப ஓதிக் காண்பித்தேன். அப்போது 'நீ அனுப்பிய உன்னுடைய நபியையும் நம்பினேன் என்பதற்குப் பதிலாக உன்னுடைய ரஸூலையும் நம்பினேன் என்று சொன்னேன். உடனே நபி(ஸல்) அவர்கள் 'இல்லை, நீ அனுப்பிய உன்னுடைய நபியை நம்பினேன் என்று சொல்லும்' என எனக்குத் திருத்திக் கொடுத்தார்கள்' என பராவு இப்னு ஆஸிப்(ரலி) அறிவித்தார். Book : 4 - **ஸஹீஹுல் புகாரி**

ரஸூலுல்லாஹ் صَلَّى اللّٰه عَلَيْهِ وَسَلَّمَ கூறியுள்ளார்கள், "உங்களில் யாரும் உறங்கச் செல்லும் முன்பாக, தொழுகைக்காகச் செய்வதுபோல, உளூ செய்துவிட்டு, வலது பக்கமாகப் படுத்து,

اللَّهُمَّ أَسْلَمْتُ وَجْهِي إِلَيْكَ، وَفَوَّضْتُ أَمْرِي إِلَيْكَ، وَأَلْجَأْتُ ظَهْرِي إِلَيْكَ، رَغْبَةً وَرَهْبَةً إِلَيْكَ، لاَ مَلْجَأَ وَلاَ مَنْجَا مِنْكَ إِلاَّ إِلَيْكَ، اللَّهُمَّ آمَنْتُ بِكِتَابِكَ الَّذِي أَنْزَلْتَ، وَبِنَبِيِّكَ الَّذِي أَرْسَلْتَ

என்று ஓதியாவாறு படுத்து, அந்த இரவில் இறந்துவிட்டால், அவர் ஈமானில் முஸ்லிமாக இறந்தவராக ஆகிவிடுவார். அதுவே அவரின் கடைசியாகச் சொன்னவையாக ஆகிவிடும்.''

6 ஜனாஸாவைத் தூக்கியவர்கள்:

அபு ஹுரைராஹ் رَضِي الله عَنْهُ அறிவிப்பதாவது,

عَنْ أَبِي هُرَيْرَةَ، عَنِ النَّبِيِّ صلى الله عليه وسلم قَالَ " مِنْ غُسْلِهِ الْغُسْلُ وَمِنْ حَمْلِهِ الْوُضُوءُ " .

ரஸுலுல்லாஹ் صَلَّى الله عَلَيْهِ وَسَلَّمَ கூறியுள்ளார்கள், ''உங்களில் யார் மய்யித்தைக் கழுவினார்களோ அவர்கள் குளித்துக் கொள்ளட்டும். யார் தூக்கிச் சென்றார்களோ அவர்கள் உளூ செய்து கொள்ளட்டும்.'' எனவே ஜனாஸாவைத் தூக்கிச் செல்பவர் உளூ செய்வது சிறப்பாகும். கட்டாயம் அல்ல

7. வாந்தி எடுத்தால் உளூ செய்வது நல்லது.

8. குளிப்பு கடமையானவர்கள் ஏதேனும் உணவருந்த விரும்பினால் உளூ செய்து கொள்வது:

அபு தாவூத் 224

அன்னை ஆயிஷா رَضِيَ الله عَنْهَا அறிவிப்பதாவது:

عَنْ عَائِشَةَ، أَنَّ النَّبِيَّ صلى الله عليه وسلم كَانَ إِذَا أَرَادَ أَنْ يَأْكُلَ أَوْ يَنَامَ تَوَضَّأَ

ரஸுலுல்லாஹ் صَلَّى الله عَلَيْهِ وَسَلَّمَ (குளிப்பு கடமையான நிலையில்)ஏதேனும் சாப்பிட விரும்பினால், அல்லது உறங்க விரும்பினால், அவர்கள் உளூ செய்து கொள்வார்கள்.

**Fiqh 12 - Laws of Ablution-5 - Doing masah on socks while performing Wudu**

## ஃபிக்ஹ் வகுப்பு 12 - உளூவின் சட்டங்கள்-5 - காலுறைகள் மீது மஸஹ் செய்வது

**ஆசிரியர்: அஷ் ஷெய்க் உவைஸ் உமரி நஸீரி**

நாம் உளூ செய்யும்போது, கால்களைக் கணுக்கால் வரை கழுவுவது கட்டாயம் என்பதை நாம் அறிவோம். காலுறைகள் அணிந்திந்தவர்களாக இருந்தால், அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَى அதற்கு ஒரு சலுகையைத் தந்திருக்கிறான். அதாவது, நாம் காலுறைகளைக் கழற்றி பின்னர் கால்களைக் கழுவுவதற்குப் பதிலாக நமக்கு இலகுவான வழிமுறையை அவன் அளித்துள்ளான். கால்களைக் கழுவுவதற்குப் பதிலாக அதன்மீது மஸஹ் செய்தன் மூலம் நாம் உளூவைப் பூர்த்தி செய்யலாம். இந்த சலுகையைக் குறித்து பல ஸஹாபாக்கள் அறிவித்துள்ளார்கள். நாற்பதுக்கும் மேற்பட்ட ஸஹாபாக்கள் அறிவிப்புச் செய்துள்ளதாக இமாம் அஹ்மது இப்னு ஹன்.்.பல் رَحْمَةُ الله عَلَيْهِ அறிவித்துள்ளார்கள். சுமார் எழுபதுக்கும் மேற்பட்ட ஸஹாபாக்கள் அறிவித்துள்ளதாக ஹஸன் பஸரி رَحْمَةُ الله عَلَيْهِ கூறியுள்ளார்கள்.

அன்னை ஆயிஷா رَضِيَ الله عَنْهَا, இப்னு அப்பாஸ் رَضِيَ الله عَنْهُ மற்றும் அபு ஹுரைராஹ் رَضِيَ الله عَنْهُ ஆகியோர் மஸஹ் செய்யக் கூடாது என்று அறிவித்துள்ளதாக சில நூற்களில் காணலாம். அந்த அறிவுப்புகள் அனைத்து பலவீனமானது மற்றும் இட்டுக் கட்டப்பட்டவை என இப்னு அப்தில்பர் رَحْمَةُ الله عَلَيْهِ போன்ற ஹதீது கலை அறிஞர்கள் கூறியுள்ளார்கள். எனவேதாம் நாம் பலவீனமாக ஹதீதுகளைப் பின்பற்ற வேண்டாம் எனவும், ஹதீது கலை வல்லுநர்கள் கூறிய ஆதாரப் பூர்வமான செய்திகள் போதுமானது என்கிறோம்.

முஸ்லிம் 274

இப்னு முஹைராஹ் رَضِيَ الله عَنْهُ தமது தந்தையின் கூற்றை அறிவிப்பாதாவது,

عَنِ ابْنِ الْمُغِيرَةِ، عَنْ أَبِيهِ، أَنَّ النَّبِيَّ صلى الله عليه وسلم مَسَحَ عَلَى الْخُفَّيْنِ وَمُقَدَّمِ رَأْسِهِ وَعَلَى عِمَامَتِهِ .

**462.** முஃகீரா பின் ஷுஅபா (ரலி) அவர்கள் கூறியதாவது: நபி (ஸல்) அவர்கள் (ஈரக் கையால்) தம் காலுறைகள், முன்தலை மற்றும் தலைப்பாகை ஆகியவற்றின் மீது தடவி (மஸ்ஹு செய்து)கொண்டார்கள். இந்த ஹதீஸ் இரு அறிவிப்பாளர்தொடர்களில் வந்துள்ளது. - மேற்கண்ட ஹதீஸ் மற்றோர் அறிவிப்பாளர்தொடர் வழியாகவும் வந்துள்ளது. Book: 2- **ஸஹீஹ் முஸ்லிம்**

முஸ்லிம் 274 மற்றும் திர்மிதி 100

பிலால் رَضِيَ الله عَنْهُ அறிவிப்பதாவது,

عَنْ بِلاَلٍ، أَنَّ رَسُولَ اللَّهِ صلى الله عليه وسلم مَسَحَ عَلَى الْخُفَّيْنِ وَالْخِمَارِ

**464.** பிலால் (ரலி) அவர்கள் கூறியதாவது: **அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் (ஈரக் கையால்) தம்முடைய காலுறைகள் மற்றும் தலைப்பாகையின் மீது தடவி (மஸ்ஹு செய்திடலா)னார்கள்.** இந்த ஹதீஸ் மூன்று அறிவிப்பாளர் தொடர்களில் வந்துள்ளது. அவற்றில் ஒன்றில், (மேற்கண்டவாறு) அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் செய்ததை நான் பார்த்தேன் என்று பிலால் (ரலி) அவர்கள் கூறியதாக இடம் பெற்றுள்ளது. Book: 2 - **ஸஹீஹ் முஸ்லிம்**

புஹாரி 387

இப்ராஹீம் رَضِي الله عَنْهُ அறிவிப்பதாவது,

قَالَ سَمِعْتُ إِبْرَاهِيمَ، يُحَدِّثُ عَنْ هَمَّامِ بْنِ الْحَارِثِ، قَالَ رَأَيْتُ جَرِيرَ بْنَ عَبْدِ اللَّهِ بَالَ ثُمَّ تَوَضَّأَ، وَمَسَحَ عَلَى خُفَّيْهِ، ثُمَّ قَامَ فَصَلَّى، فَسُئِلَ فَقَالَ رَأَيْتُ النَّبِيَّ صلى الله عليه وسلم صَنَعَ مِثْلَ هَذَا.

**387.** ஜரீர் இப்னு அப்தில்லாஹ்(ரலி) சிறுநீர் கழித்துப் பின்னர் உளூச் செய்து, **தம் இரண்டு காலுறையின் மீது மஸஹ் செய்துவிட்டு எழுந்து தொழுததைக் கண்டேன்**. இது பற்றி ஜரீர்(ரலி) அவர்களிடம் கேட்கப்பட்டதற்கு 'நபி(ஸல்) அவர்கள் இவ்வாறு செய்வதை பார்த்திருக்கிறேன்' என்று கூறினார்கள்' என ஹம்மாம் இப்னு ஹாரிஸ் அறிவித்தார். 'காலுறைகளின் மீது மஸஹ் செய்து தொழலாம் என்ற கருத்திலுள்ள அறிஞர்களுக்கு ஜரீர்(ரலி) அவர்களின் இச்செயல் மிகச் சிறந்த சான்றாகும். காரணம் ஜரீர் இப்னு அப்தில்லாஹ்(ரலி), நபி(ஸல்) அவர்களின் காலத்தில் கடைசியாக இஸ்லாத்தைத் தழுவியவராவார்' என்று இப்ராஹீம் குறிப்பிடுகிறார். Book : 8 - **ஸஹீஹுல் புகாரி**

இவ்வாறு காலுறையில் மஸஹ் செய்வது பற்றி பல ஸஹாபாக்கள் கூறியுள்ளார்கள். அக்காலக் காலுறைகள் தோலால் தயாரிக்கப்பட்டவையாக இருந்தது. ஆனால் இக்காலத்த்தில் பருத்தி, செயற்கை இழை போன்றவற்றால் தயாரிக்கப்படுகின்றன. இவற்றுக்கு அந்த ஹதீதுகள் பொருந்துமா என்பதற்கான ஆதாரம்.

திர்மிதி 99

இப்னு முஹைராஹ் رَضِي الله عَنْهُ தமது தந்தையின் கூற்றை அறிவிப்பாதாவது,

سَحْتُ عَلَى الْجَوْرَبَيْنِ وَهُمَا غَيْرُ مُنَعَّلَيْنِ

இங்கு காலுறைக்கு جَوْرَبَيْنِ என்று பயன்படுத்தப்பட்டுள்ளது. இது தோல் அல்லாமல் துணியால் செய்யப்படும் காலுறையாகும்.

இப்னு மாஜாஹ் 559 மற்றும் அபு தாவூத் 150, 159

முஹைராஹ் பின் ஷு:பாஹ் رَضِي الله عَنْهُ அறிவிப்பதாவது,

عَنِ الْمُغِيرَةِ بْنِ شُعْبَةَ، أَنَّ رَسُولَ اللَّهِ ـ صلى الله عليه وسلم ـ تَوَضَّأَ وَمَسَحَ عَلَى الْجَوْرَبَيْنِ وَالنَّعْلَيْ

இங்கும் காலுறைக்கு جَوْرَبَيْنِ என்று பயன்படுத்தப்பட்டுள்ளது.

மேலும் இப்னு மஸ்வூத் رَضِي الله عَنْهُ , அனஸ் இப்னு மாலிக் رَضِي الله عَنْهُ , அபு உமாமாஹ் رَضِي الله عَنْهُ ஆகியோரும் துணியால் தயாரிக்கப்பட்ட காலுறைகளில் மஸஹ் செய்வார்கள். வேறு எந்த ஒரு ஸஹாபியும், இவ்வாறு துணியால் தயாரிக்கப்பட்ட காலுறைகளில் மஸஹ் செய்யக் கூடாது என்று சொன்ன அறிவிப்புகள் ஏதும் இல்லை. எனவே துணிக் காலுறைகளிலும் மஸஹ் செய்யலாம்.

## மஸஹ் செய்வதற்கான நிபந்தனைகள்

கீழ்க்குறிப்பிட்ட ஒரு நிபந்தனை தவறினாலும் மஸஹ் கூடாமல் போய்விடும்.

1. உளூ செய்திருக்கும் நிலையில் காலுறை அணிந்திருக்க வேண்டும். உளூ முறிந்த நிலையில் காலுறை அணிந்திருந்தால், அவர்கள் உளூ செய்ய நாடும்போது, காலுறையின் மீது மஸஹ் செய்ய அனுமதியில்லை. கால்களை கழுவ வேண்டும். உளூவோடு அணிந்திருந்தால், மறுபடியும் உளூ செய்யும் போலு, கால்களைக் கழுவாமல் மஸஹ் செய்யலாம்.

புஹாரி 206

உர்வா இப்னு முகைராஹ் رَضِي الله عَنْهُ அறிவிப்பதாவது,

نْ عُرْوَةَ بْنِ الْمُغِيرَةِ، عَنْ أَبِيهِ، قَالَ كُنْتُ مَعَ النَّبِيِّ صلى الله عليه وسلم فِي سَفَرٍ، فَأَهْوَيْتُ لأَنْزِعَ خُفَّيْهِ فَقَالَ " دَعْهُمَا، فَإِنِّي أَدْخَلْتُهُمَا طَاهِرَتَيْنِ ". فَمَسَحَ عَلَيْهِمَا

**பாடம் : 49 இரு கால்களும் சுத்தமாக இருக்கும் நிலையில் காலுறை அணிந்தால்... 206.** 'நான் ஒரு பயணத்தின்போது நபி(ஸல்) அவர்களுடன் இருந்தேன். அவர்கள் (உளூச் செய்தபோது) அவர்களின் இரண்டு காலுறைகளையும் கழற்றுவதற்குக் குனிந்தேன். அப்போது நபி(ஸல்) அவர்கள், 'அதைவிட்டுவிடும். கால்கள் இரண்டும் சுத்தமாக இருக்கும்போதுதான் உறைகளை அணிந்தேன்' என்று கூறிவிட்டு அவ்விரு காலுறைகளின் மீதும் மஸஹ் செய்தார்கள்' என முகீரா(ரலி) அறிவித்தார். Book: 4 - **ஸஹீஹுல் புகாரி**

2. காலுறைகள் தோலால் தயாரிக்கப்பட்டிருந்தால், ஹலாலக்கப்பட்ட பிராணிகளின் தோலாக இருக்க வேண்டும். உதாரணமாக, கழுதையின் தோலால் தயாரிக்கப்பட்ட காலுறைகளைப் பயன்படுத்தவும் கூடாது. மஸஹும் செய்யக் கூடாது. அதுபோல தோலால் அல்லது துணியால் செய்யப்பட்ட காலுறைகளில் அசுத்தம் இருக்கக் கூடாது. அதில் கவனமாக இருக்க வேண்டும்.

3. மஸஹ் செய்வதற்கு ஷரியத்தில் குறிப்பிட்ட நேரத்தை விட அதிகமாக இருக்கக் கூடாது.

முஸ்லிம் 276 மற்றும் இப்னு மாஜாஹ் 552

ஷுரைஹ் இப்னு ஹானி رَضِي الله عَنْهُ அறிவிப்பதாவது,

عَنْ شُرَيْحِ بْنِ هَانِئٍ، قَالَ أَتَيْتُ عَائِشَةَ أَسْأَلُهَا عَنِ الْمَسْحِ، عَلَى الْخُفَّيْنِ فَقَالَتْ عَلَيْكَ بِابْنِ أَبِي طَالِبٍ فَسَلْهُ فَإِنَّهُ كَانَ يُسَافِرُ مَعَ رَسُولِ اللَّهِ صلى الله عليه وسلم . فَسَأَلْنَاهُ فَقَالَ جَعَلَ رَسُولُ اللَّهِ صلى الله عليه وسلم ثَلاَثَةَ أَيَّامٍ وَلَيَالِيَهُنَّ لِلْمُسَافِرِ وَيَوْمًا وَلَيْلَةً لِلْمُقِيمِ

**பாடம் : 24 காலுறைகள்மீது மஸ்ஹு செய்வதற்கான காலவரம்பு. 465.** ஷுரைஹ் பின் ஹானீ (ரஹ்) அவர்கள் கூறியதாவது: நான் ஆயிஷா (ரலி) அவர்களிடம் காலுறைகள்மீது மஸ்ஹு செய்வது குறித்துக் கேட்பதற்காகச் சென்றேன். அப்போது அவர்கள், நீங்கள் அலீ பின் அபீதாலிப் அவர்களை அணுகிக் கேளுங்கள். அவர்தாம் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களுடன் பயணம் செய்பவராய் இருந்தார்கள் என்று கூறினார்கள். எனவே, அலீ (ரலி) அவர்களிடம் (சென்று) அதைப் பற்றிக் கேட்டோம். அப்போது அவர்கள், பயணத்திலிருப்பவருக்கு மூன்று பகல் மூன்று இரவுகளையும்,உள்ளூரிலிருப்பவருக்கு ஒரு பகல் ஓர் இரவையும் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் நிர்ணயித்தார்கள் என்று கூறினார்கள். இதன் அறிவிப்பாளர்களில் ஒருவரான சுஃப்யான் அஸ்ஸவ்ரீ (ரஹ்) அவர்கள், தமக்கு இந்த ஹதீஸை அறிவித்த அம்ர் பின் கைஸ் (ரஹ்) அவர்களைப் பற்றிக் குறிப்பிடும்போது அன்னாரைப் பாராட்டுவார்கள். - மேற்கண்ட ஹதீஸ் மற்றோர் அறிவிப்பாளர் தொடர் வழியாகவும் வந்துள்ளது. - மேற்கண்ட ஹதீஸ் ஷுரைஹ் பின் ஹானீ (ரஹ்) அவர்களிடமிருந்தே மற்றோர் அறிவிப்பாளர் தொடர் வழியாகவும் வந்துள்ளது. அதில் பின்வருமாறு காணப்படுகிறது: ஷுரைஹ் (ரஹ்) அவர்கள் கூறினார்கள்: காலுறைகள்மீது மஸ்ஹு செய்வதைப் பற்றி ஆயிஷா (ரலி) அவர்களிடம் நான் வினவினேன். அதற்கு அவர்கள், அலீ அவர்களிடம் செல்லுங்கள். ஏனெனில், என்னைவிட அவர்தாம் இதுகுறித்து நன்கறிந்தவர் என்று கூறினார்கள். ஆகவே, நான் அலீ (ரலி) அவர்களிடம் சென்றேன். அப்போது மேற்கண்டவாறு அலீ (ரலி) அவர்கள் கூறினார்கள். Book: 2 - **ஸஹீஹ் முஸ்லிம்**

எனவே மஸஹ் செய்பவர்கள் ஊரில் தங்கிருந்தால், காலுறை அணிந்தபிறகு ஒரு பகல் மற்றும் ஓர் இரவு என்றும், பயணத்தில் இருப்பவர்கள் மூன்று பகல் மற்றும் மூன்று இரவுகள் காலுறைகளில் மஸஹ் செய்யலாம். உதாரணமாக ஊரில் இருப்பவர்கள் முதல் நாள் லுஹரில் காலுறையில் மஸஹ் செய்தால், அடுத்த நாள் லுஹருக்கு அனுமதியில்லை.

## மஸஹ் செய்வதை முறிக்கக் கூடிய விஷயங்கள்

இவ்வாறு ஏறபடும் நிலையில் நாம் காலுறையைக் கழற்றிவிட்டு உளூ செய்ய வேண்டம். அந்தத் காரியங்கள்:

1. முன்பு கூறியதைப் போல் நேரம் கடந்து விட்டால்:

2. குளிப்பு கடமையாகி விட்டால்:

இந்த நிலையில் நாம் குளிக்கும்போது, உடல் முழுவதும் நீர் கட்டாயம் பட வேண்டும். எனவே நாம் காலுறையைக் கழற்றித்தான் ஆக வேண்டும். ஷஃப்வான் رَضِي الله عَنْهُ அறிவின்படி, ரஸுலுல்லாஹ் صَلَّى الله عَلَيْهِ وَسَلَّمَ மல ஜலம் கழித்து வந்தாலும், தூங்கி எழுந்தாலும் காலுறைகளைக் கழுற்றாமல் மஸஹ் செய்யக் கூடாது.

3. அனுமதிக்கப்பட்ட நேரத்திற்குள் ஒரு காலுறை அல்லது இரண்டு காலுறைகளையும் கழற்றிவிட்டாலோ, அல்லது அதன் பெரும்பகுதி கிழிந்து விட்டாலோ, அனுமதிக்கப்பட்ட மஸஹ் முடிந்துவிடும்.

## மஸஹ் செய்யும் முறை

மஸஹ் செய்யும் முறை குறித்து, அதன் மேல் பகுதியில் தடவ வேண்டுமா, முழுவதும் தடவ வேண்டுமா, சில விரல்களினால் கழுவ வேண்டுமா அல்லது கை முழுவதைக் கொண்டு கழுவ வேண்டுமா என்ற விவரத்தை அளிக்கும் ஆதாரப் பூர்வமான அறிவுப்பு ஏதும் காணக் கிடைக்கவில்லை. அலி அவர்களின் ஒரு அறிவிப்பை இங்கு நாம் எடுத்துக் கொள்ளலாம். அவர்கள் கூறியதாவது, "மார்க்கம் அறிவின்படி அமையும் என்றால், நாம் காலுறைகளின் கீழ்ப்பகுதியில்தான் மஸஹ் செய்ய வேண்டும். எனினும் அதன் மேல் பகுதியில் மஸஹ் செய்ய வேண்டும் என்றுதான் ரஸுலுல்லாஹ் صَلَّى الله عَلَيْهِ وَسَلَّمَ கற்றுக் கொடுத்திருக்கிறார்கள்." அலி رَضِي الله عَنْهُ அவர்கள் ரஸுலுல்லாஹ் صَلَّى الله عَلَيْهِ وَسَلَّمَ அவர்கள் செய்வவைக் கண்ணுற்ற விதமாகத்தான் கூறியிருப்பார்கள்.

அதேபோல பெரும்பகுதியைத் தடவ வேண்டுமா அல்லது விரல்களினால் தடவுதல் போதுமா என்ற விவரத்திற்கு, இமாம் ஷாஃபியி رَحْمَةُ الله عَلَيْهِ அவர்கள் கூற்றை எடுத்துக் கொள்ளலாம். மஸஹ் என்ற சொல்லுக்குப் பொருந்தும் அளவிற்கு செய்தால், அதாவது விரல்களைக் கொண்டு தடவுதல் போதுமானதாகும்.

தலைப்பாகையின் மீது மஸஹ் செய்வது, பெண்கள் துப்பட்டா மீது மஸஹ் செய்வது மற்றும் அடிபட்ட காயத்தின் மீது மஸஹ் செய்வது பற்றிய சட்டங்கள்:

தலைப்பாகை அணிந்தவர்கள் அதன் மீது மஸஹ் செய்யலாம். தலை முடி தெரிந்த பகுதியிலும், தலைப்பாகையிலும் அவர்கள் மஸஹ் செய்யலாம். முன்னர் சொல்லப்பட்ட இந்த ஹதீதுகள் அதற்குச் சான்றாகும்.

முஸ்லிம் 274 மற்றும் திர்மிதி 100

பிலால் رَضِي الله عَنْهُ அறிவிப்பதாவது,

عَنْ بِلاَلٍ، أَنَّ رَسُولَ اللَّهِ صلى الله عليه وسلم مَسَحَ عَلَى الْخُفَّيْنِ وَالْخِمَارِ

**464.** பிலால் (ரலி) அவர்கள் கூறியதாவது: **அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் (ஈரக் கையால்) தம்முடைய காலுறைகள் மற்றும் தலைப்பாகையின் மீது தடவி (மஸ்ஹு செய்திடலா)னார்கள்.** இந்த ஹதீஸ் மூன்று அறிவிப்பாளர் தொடர்களில் வந்துள்ளது. அவற்றில் ஒன்றில், (மேற்கண்டவாறு) அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் செய்ததை நான் பார்த்தேன் என்று பிலால் (ரலி) அவர்கள் கூறியதாக இடம் பெற்றுள்ளது. Book: 2 - **ஸஹீஹ் முஸ்லிம்**

பெண்கள் துப்பட்டா அணிந்திருக்கும்போது, அதனை கழற்றுவது சுலபம் என்பதால், தலைப்பாகையின் சட்டம் இதற்குப் பொருந்தாது. எனினும் சில அறிஞர்களட, பெண்கள் வெளியில் சென்றிருக்கும் நிலையில், மக்கள் மத்தியில் துப்பட்டாவைக் கழற்றுவதில் தயக்கம் ஏற்பட வாய்ப்புள்ளதால், அதன் மீது மஸஹ் செய்யலாம் என்ற கருத்தை முன் வைக்கிறார்கள். அதுபோல், தலையை மஸஹ் செய்ய வேண்டும் என்றுதால் உள்ளது என்பதால், நீண்ட முடி முழுவதையும் மஸஹ் செய்ய வேண்டிய அவசியமில்லை.

கட்டு போட்ட இடத்தில் மட்டும் மஸஹ் செய்து, தண்ணீர் பட வாய்ப்புள்ள இடங்களில் தண்ணீரைப் பயன்படுத்த வேண்டும். இதற்கு நேரடியான ஆதாரம் இல்லை என்றாலும், கியாஸ் அடிப்படையில் அவ்வாறு செய்யலாம். காலுறை மற்றும் தலைப்பாகை ஆகியவற்றைக் கழற்றச் சிரமம் இருக்கும் நிலையில் மஸஹ் செய்ய அனுமதிக்கப்பட்டதைப் போல, அதைவிட கட்டுபோட்டதை அவிழ்க்க அதிகம் சிரமம் உள்ளதால், அவ்வாறு செய்யலாம் என்று அறிஞர்கள் கியாஸ் செய்துள்ளார்கள்.

**Fiqh 13 - Laws of Obligatory Bath**

## ஃபிக்ஹ் வகுப்பு 13 - கடமையான குளிப்பின் சட்டங்கள்

**ஆசிரியர்: அஷ் ஷெய்க் உவைஸ் உமரி நஸீரி**

### குளிப்பிற்கான கடமைகள்

1. மனி (இந்திரியம்) வெளியேறினால் குளிப்பு கடமையாகிவிடும். அது

- தூக்கத்தில், கனவில் வெளியேறினாலும்
- இச்சையின் காரணமாக வெளியேறினாலும்
- கணவன் மனைவி உடலுறவு கொண்டதால் வெளியேறினாலும்,

குளிப்பு கடமையாகிவிடும். இது ஆண்களுக்கும், பெண்களுக்கும் பொதுவாகும். பெண்களுக்கும் மனி வெளியேறினாலும் குளிப்பு கடமையாகும். இச்சையின் உச்சகட்டத்தில் மனி வெளியாகும், பின்னர் இச்சை அடங்கிவிடும்.

அபு தாவூத் 236

அன்னை ஆயிஷா رَضِيَ اللهُ عَنْهَا அறிவிப்பதாவது,

عَنْ عَائِشَةَ، قَالَتْ سُئِلَ رَسُولُ اللَّهِ صلى الله عليه وسلم عَنِ الرَّجُلِ يَجِدُ الْبَلَلَ وَلاَ يَذْكُرُ احْتِلاَمًا قَالَ " يَغْتَسِلُ " . وَعَنِ الرَّجُلِ يَرَى أَنَّهُ قَدِ احْتَلَمَ وَلاَ يَجِدُ الْبَلَلَ قَالَ " لاَ غُسْلَ عَلَيْهِ " . فَقَالَتْ أُمُّ سُلَيْمٍ الْمَرْأَةُ تَرَى ذَلِكَ أَعَلَيْهَا غُسْلٌ قَالَ " نَعَمْ إِنَّمَا النِّسَاءُ شَقَائِقُ الرِّجَالِ "

(தம்முடைய உடலில் அல்லது ஆடையில்) ஈரம் பட்டிருந்து, தாம் ஸ்கலிதமாகக் காரணமான கனவு குறித்து மறந்த ஒருவரைப் பற்றி ரஸூலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ அவர்களிடம் கேட்கப்பட்டது. அவர்கள் கூறினார்கள், ‘‘அவர் குளிக்க வேண்டும்.’’ ஸ்கலிதமான கனவு நினைவிருந்து, ஆனால் ஈரமாக ஒரு மனிதரைப்பற்றி அவர்களிடம் கேட்கப்பட்டது. அவர்கள் கூறினார்கள், ‘‘அவர் குளிக்கத் தேவையில்லை..’’ அன்னை உம்மு ஸலமா رَضِيَ اللهُ عَنْهَا அவர்கள் பின்னர் வினவினார்கள், ‘‘ஒரு பெண்மணிக்கு அவ்வாறு (ஸ்கலித ஈரம் பட்டால் குளிக்க வேண்டுமா)?’’ அவர்கள் பதிலளித்தார்கள், ‘‘ஆம்! பெண்களும், ஆண்களின் ஒரு பகுதிதானே!’’

அதே நேரத்தில் மதி (சிறதளவு இச்சையின் போது வெளியேறும்) வெளியேறியிருந்தால் குளிப்பு கடமையாகாது. அது உடலில் பட்டால் கழுவிவிட வேண்டும். துணியில் பட்டால் தண்ணீர் தெளித்து விடவேண்டும். குளிப்பு கடமை இல்லை. உளூ செய்ய வேண்டும்.

2. கணவன் மனைவி உடலுறவு கொள்ளுதல்:

மனி வெளியானாலும், வெளியாகாமல் இருந்தாலும் உடலுறவு செய்தாலேயே குளிப்பு கடமையாகிவிடும்.

முஸ்லிம் 349

அபு மூஸா رَضِيَ اللهُ عَنْهُ அறிவிப்பதாவது,

ى عَائِشَةَ فَأُذِنَ لِي فَقُلْتُ لَهَا يَا أُمَّاهْ ـ أَوْ يَا أُمَّ الْمُؤْمِنِينَ ـ إِنِّي أُرِيدُ أَنْ أَسْأَلَكِ عَنْ شَىْءٍ وَإِنِّي أَسْتَحْيِيكِ . فَقَالَتْ لاَ تَسْتَحْيِي أَنْ تَسْأَلَنِي عَمَّا كُنْتَ سَائِلاً عَنْهُ أُمَّكَ الَّتِي وَلَدَتْكَ فَإِنَّمَا أَنَا أُمُّكَ . قُلْتُ فَمَا يُوجِبُ الْغُسْلَ

قَالَتْ عَلَى الْخَبِيرِ سَقَطْتَ قَالَ رَسُولُ اللَّهِ صلى الله عليه وسلم " إِذَا جَلَسَ بَيْنَ شُعَبِهَا الأَرْبَعِ وَمَسَّ الْخِتَانُ الْخِتَانَ فَقَدْ وَجَبَ الْغُسْلُ " .

**579.** அபூமூசா அல்அஷ்அரீ (ரலி) அவர்கள் கூறியதாவது: முஹாஜிர்களிலும் அன்சாரிகளிலும் ஒரு குழுவினர் இரு குறிகளும் சந்தித்துக்கொண்டால் குளியல் கடமையாகுமா,அல்லது விந்து வெளிப்பட்டால் தான் குளியல் கடமையாகுமா என்ப)து குறித்துக் கருத்து வேறுபாடு (கொண்டு விவாதித்துக்) கொண்டனர். அன்சாரிகள், விந்து வெளியானால் தான் அல்லது துள்ளல் இருந்தால்தான் குளியல் கடமையாகும் என்று கூறினர். முஹாஜிர்கள், இல்லை, (இரு குறிகளும்) கலந்துவிட்டாலே குளியல் கடமையாகிவிடும். (விந்து வெளிப்படாவிட்டாலும் சரியே!) என்று கூறினர்.
உடனே நான், இப்பிரச்சினைக்கு நான் முற்றுப்புள்ளி வைக்கிறேன் என்று கூறிவிட்டு எழுந்து ஆயிஷா (ரலி) அவர்களிடம் சென்று (வீட்டுக்குள் நுழைய) அனுமதி கோரினேன். எனக்கு அனுமதி கிடைத்தது. நான் ஆயிஷா (ரலி) அவர்களிடம், அன்னையே! அல்லது இறைநம்பிக்கையாளர்களின் அன்னையே! நான் தங்களிடம் ஒரு விஷயத்தைப் பற்றிக் கேட்க விரும்புகிறேன். ஆனால், தங்களிடம் கேட்க எனக்கு வெட்கமாக இருக்கிறது என்று சொன்னேன். அதற்கு ஆயிஷா (ரலி) அவர்கள், உங்களைப் பெற்றெடுத்த தாயிடம் நீங்கள் எதைப் பற்றிக் கேட்பீர்களோ அதைப் பற்றி என்னிடம் கேட்க நீங்கள் வெட்கப்பட வேண்டியதில்லை. நானும் உங்கள் தாயார்தாம் என்றார்கள். நான், குளியல் எதனால் கடமையாகும்? என்று கேட்டேன். அதற்கு அவர்கள் கூறினார்கள்: சரியான ஆளிடம்தான் நீர் வந்திருக்கிறீர். அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: ஒருவர் தம் மனைவியின் (இரு கைகள், இரு கால்கள் ஆகிய) நான்கு கிளைகளுக்கிடையே அமர்ந்து (ஆண்)குறி (பெண்)குறியைத் தொட்டு (சந்தித்து)விட்டாலே (இருவர்மீதும்) குளியல் கடமையாகிவிடும். Book : 3 - ஸஹீஹ் முஸ்லிம்

இவ்வாறு உடலுறவு கூடினாலேயே குளிப்பு கடமையாகிவிடும். மனி வெளிவர வேண்டும் என்று நிபந்தனை ஏதும் இல்லை.

3. ஒருவர் இஸ்லாத்தை புதிதாகவோ அல்லது மீண்டும் இஸ்லாத்தில் இணைந்தாலே குளிக்க வேண்டும்.

அபு தாவூத் 355

கைஸ் இப்னு ஆஸிம் رَضِيَ الله عَنْهُ அறிவிப்பதாவது,

قَيْسِ بْنِ عَاصِمٍ قَالَ أَتَيْتُ النَّبِيَّ صلى الله عليه وسلم أُرِيدُ الإِسْلاَمَ فَأَمَرَنِي أَنْ أَغْتَسِلَ بِمَاءٍ وَسِدْرٍ

“நான் இஸ்லாத்தைத் தழுவும் எண்ணத்தில் ரஸூலுல்லாஹ் صَلَّى الله عَلَيْهِ وَسَلَّمَ அவர்களிடத்தில் வந்தேன். அவர்கள் என்னை இலந்தை இலையில் கொதிக்க வைத்த தண்ணீரின் குளிக்கக் கட்டளையிட்டார்கள்.”

துமாமாஹ் இப்னு உதல் رَضِيَ الله عَنْهُ என்ற ஸஹாபி ரஸூலுல்லாஹ் صَلَّى الله عَلَيْهِ وَسَلَّمَ அவர்களின் உத்தரவின் பேரில் மதினா பள்ளிவாசலில் ஒரு தூணில் கட்டி வைக்கப்பட்டிருந்தார். மூன்று நாட்கள் பிறகு மன்னித்து விடுதலை செய்யப்பட்டார். பின்னர் தாம் இஸ்லாத்தில் இணையப்போவதாக அவர் சொன்னதும், அவரைக் குளித்துவிட்டு வருமாறு கட்டளையிட வேண்டும் என ரஸூலுல்லாஹ் صَلَّى الله عَلَيْهِ وَسَلَّمَ கூறினார்கள். (முஸ்னத் அஹ்மது 483) இஸ்லாத்தைத் தழுவினால் குளிக்கும்படி ஏவ வேண்டும் என இதிலிருந்து தெரிகிறது.

4. மாதவிடாய் மற்றும் பிரசவ இரத்தப் போக்கு ஆகியன நின்றுவிட்டால் குளிக்க வேண்டும்.

புஹாரி 306

அன்னை ஆயிஷா رَضِيَ الله عَنْهَا அறிவிப்பதாவது,

عَنْ عَائِشَةَ، أَنَّهَا قَالَتْ قَالَتْ فَاطِمَةُ بِنْتُ أَبِي حُبَيْشٍ لِرَسُولِ اللَّهِ صلى الله عليه وسلم يَا رَسُولَ اللَّهِ إِنِّي لاَ أَطْهُرُ، أَفَأَدَعُ الصَّلاَةَ فَقَالَ رَسُولُ اللَّهِ صلى الله عليه وسلم " إِنَّمَا ذَلِكِ عِرْقٌ وَلَيْسَ بِالْحَيْضَةِ، فَإِذَا أَقْبَلَتِ الْحَيْضَةُ فَاتْرُكِي الصَّلاَةَ، فَإِذَا ذَهَبَ قَدْرُهَا فَاغْسِلِي عَنْكِ الدَّمَ وَصَلِّي ".

**306.** 'பாத்திமா பின்த் அபீ ஹுபைஷ் என்ற பெண் நபி(ஸல்) அவர்களிடம் வந்து, 'இறைத்தூதர் அவர்களே! நான் (இரத்தப் போக்கிலிருந்து) சுத்தமாவதே இல்லை. எனவே நான் தொழுகையைவிட்டு விடலாமா?' என்று கேட்டதற்கு, 'அது ஒரு நரம்பு நோய். அது மாதவிடாயன்று. மாதவிடாய் ஏற்படும்போது தொழுகையைவிட்டு விடு. மாதவிடாய்க் காலம் கழிந்ததும் இரத்தத்தைச் சுத்தம் செய்துவிட்டுத் தொழுது கொள்' என்று இறைத்தூதர்(ஸல்) கூறினார்கள்' என ஆயிஷா(ரலி) அறிவித்தார். Book : 6 - **ஸஹீஹுல் புகாரி**

5. இறந்த முஸ்லிம் குளிப்பாட்டப்பட வேண்டும்.

இது பர்லு கி∴பாயாஹ் ஆகும். அதாவது ஊரில் யாராவது ஒருவராவது மய்யித்தைக் குளிப்பாட்ட வேண்டும். அவ்வாறு செய்தால் எல்லோருடைய கடமையும் நீங்கிவிடும். அவ்வாறு குளிப்பாட்டாமல் விட்டால், எல்லோரும் குற்றம் செய்தவர்களாக ஆகிவிடுவார்கள்.

புஹாரி 1849

இப்னு அப்பாஸ் رَضِي الله عَنْهُ அறிவிப்பதாவது,

عَنِ ابْنِ عَبَّاسٍ ـ رضى الله عنهما ـ قَالَ بَيْنَا رَجُلٌ وَاقِفٌ مَعَ النَّبِيِّ صلى الله عليه وسلم بِعَرَفَةَ إِذْ وَقَعَ عَنْ رَاحِلَتِهِ، فَوَقَصَتْهُ ـ أَوْ قَالَ فَأَقْعَصَتْهُ ـ فَقَالَ النَّبِيُّ صلى الله عليه وسلم " اغْسِلُوهُ بِمَاءٍ وَسِدْرٍ، وَكَفِّنُوهُ فِي ثَوْبَيْنِ ـ أَوْ قَالَ ثَوْبَيْهِ ـ وَلاَ تُحَنِّطُوهُ، وَلاَ تُخَمِّرُوا رَأْسَهُ، فَإِنَّ اللَّهَ يَبْعَثُهُ يَوْمَ الْقِيَامَةِ يُلَبِّي ".

**1849.** இப்னு அப்பாஸ்(ரலி) அறிவித்தார். ஒருவர் நபி(ஸல்) அவர்களுடன் அரஃபாவில் தங்கினார். அப்போது அவர் தன் வாகனத்திலிருந்து கீழே விழுந்துவிட்டார். வாகனம் (ஒட்டகம்) அவரின் கழுத்தை முறித்து அவரைக் கொன்றது. நபி(ஸல்) அவர்கள் 'இலந்தை இலை கலந்த தண்ணீரால் இவரைக் குளிப்பாட்டுங்கள்; இரண்டு ஆடைகளில் இவருக்குக் கபனிடுங்கள்! இவருக்கு நறுமணம் பயன்படுத்தாதீர்கள்; இவரின் தலையை மூடாதீர்கள்! ஏனெனில், இவர் தல்பியா கூறிக் கொண்டிருக்கும் நிலையில் மறுமை நாளில் இவரை அல்லாஹ் எழுப்புவான்!' என்று கூறினார்கள். Book :28 - **ஸஹீஹுல் புகாரி**

இந்த ஐந்து விஷயங்களும் குளிப்பு கடமையானவையாகும்.

## குளிப்பது வலியுறுத்தப்பட்ட விஷயங்கள் (முஸ்தஹப்∴ப்)

1. ஜும்மாவில் குளிப்பது:

புஹாரி 858

அபு ஸயீத் அல் குத்ரீ رَضِي الله عَنْهُ அறிவிப்பதாவது,

عَنْ أَبِي سَعِيدٍ الْخُدْرِيِّ، عَنِ النَّبِيِّ صلى الله عليه وسلم قَالَ " الْغُسْلُ يَوْمَ الْجُمُعَةِ وَاجِبٌ عَلَى كُلِّ مُحْتَلِمٍ ".

**858.** இறைத்தூதர்(ஸல்) அவர்கள் அறிவித்தார்கள்: 'ஜும்ஆ நாளில் குளிப்பது, பருவம் அடைந்த ஒவ்வொருவரின் மீதும் கடமையாகும்.' என அபூ ஸயீத் அல்குத்ரீ(ரலி) அறிவித்தார். Book:10 - **ஸஹீஹுல் புகாரி**

இந்த ஹதீதின்படி வெள்ளிக் கிழமை குளிப்பது கடமையாகக் கூறப்பட்டுள்ளது.

அபு தாவூத் 354

ஸமுராஹ் رَضِي الله عَنْهُ அறிவிப்பதாவது,

عَنْ سَمُرَةَ، قَالَ قَالَ رَسُولُ اللَّهِ صلى الله عليه وسلم " مَنْ تَوَضَّأَ يَوْمَ الْجُمُعَةِ فَبِهَا وَنِعْمَتْ وَمَنِ اغْتَسَلَ فَهُوَ أَفْضَلُ " .

ரஸுலுல்லாஹ் صَلَّى الله عَلَيْهِ وَسَلَّمَ கூறியுள்ளார்கள், "யாரேனும் ஒருவர் வெள்ளிக்கிழமையன்று உளூ செய்தால் அது நி.்.மத் (நல்லதாகும்.) யார் குளிப்பார்களோ அது சிறந்தது."

2. இரண்டு பெருநாட்களில் குளிப்பது

3. ஹஜ் மற்றும் உம்ராவுக்கான நேரத்தில் இஹ்ராம் அணியும் முன்பு குளிப்பது.

4. மய்யித்தை குளிப்பட்டுபவர் குளிப்பது

இப்னு மாஜாஹ் 1463

அபு ஹுரைராஹ் رَضِي الله عَنْهُ அறிவிப்பதாவது,

عَنْ أَبِي هُرَيْرَةَ، عَنِ النَّبِيِّ صلى الله عليه وسلم قَالَ " مِنْ غُسْلِهِ الْغُسْلُ وَمِنْ حَمْلِهِ الْوُضُوءُ " .

ரஸுலுல்லாஹ் صَلَّى الله عَلَيْهِ وَسَلَّمَ கூறியுள்ளார்கள், "உங்களில் யார் மய்யித்தைக் கழுவினார்களோ அவர்கள் குளித்துக் கொள்ளட்டும். யார் தூக்கிச் சென்றார்களோ அவர்கள் உளூ செய்து கொள்ளட்டும்." இரண்டும் ஸுன்னத்தான விஷயமாகும்.

### குளிக்கும் முறை

மூன்று விஷயங்கள் நிபந்தனைகளாகும்.

1. நிய்யத்:

கடமையான குளிப்புக்காகக் குளிக்கிறேன் என்ற எண்ணத்துடன் நாம் குளிக்க வேண்டும். அந்த நிய்யத் இல்லாமல் வெறுமனே வழக்கமாகக் குளிப்பது போல குளித்துவிட்டால், குளிப்பின் கடமை நிறைவேறாது. தொழுகை, உளூ போன்ற எல்லாவற்றிற்கும் நிபந்தனையான இந்த நிய்யத் இதற்கும் பொருந்தும்.

2. வாய் கொப்பளித்தல் மற்றும் நாசிக்கு நீர் செலுத்துதல்.

3. உடல் முழுவதும் நனையும்படி நீர் செலுத்தப்பட வேண்டும். நீர்ப் படாமல் எந்தப் பகுதியும் விட்டுவிடக் கூடாது.

### குளிப்பின்போது உள்ள ஸுன்னாஹ்வான விஷயங்கள்.

1. நிய்யத்துடன் பிஸ்மில்லாஹ் கூறுவது
2. இரண்டு கைகளையும் மணிக்கட்டு வரை கழுவ வேண்டும்.
3. இடது கையைக் கொண்டு தமது அந்தரங்க உறுப்பைக் கழுவ வேண்டும்.
4. உளூ செய்ய வேண்டும்.
5. முதலில் முழுதலையிலும் தண்ணீரைச் செலுத்தி, விரல்களைக் கொண்டு கோதியவாறு மூன்று முறை கழுவ வேண்டும்.
6. உடல் முழுவதையும் தண்ணீர் ஊற்றும் போது வலது பக்கத்தை முந்திச் செய்ய வேண்டும்.
7. இறுதியில் சற்றுத் தள்ளி நின்று கால்களைக் கழுவ வேண்டும்.

புஹாரி 248 மற்றும் முஸ்லிம் 316

ரஸுலுல்லாஹ் صَلَّى الله عَلَيْهِ وَسَلَّمَ அவர்களின் மனைவியார் அன்னை ஆயிஷா رَضِي الله عَنْهَا அறிவிப்பதாவது,

عَنْ عَائِشَةَ، زَوْجِ النَّبِيِّ صلى الله عليه وسلم أَنَّ النَّبِيَّ صلى الله عليه وسلم كَانَ إِذَا اغْتَسَلَ مِنَ الْجَنَابَةِ بَدَأَ فَغَسَلَ يَدَيْهِ، ثُمَّ يَتَوَضَّأُ كَمَا يَتَوَضَّأُ لِلصَّلاَةِ، ثُمَّ يُدْخِلُ أَصَابِعَهُ فِي الْمَاءِ، فَيُخَلِّلُ بِهَا أُصُولَ شَعَرِهِ ثُمَّ يَصُبُّ عَلَى رَأْسِهِ ثَلاَثَ غُرَفٍ بِيَدَيْهِ، ثُمَّ يُفِيضُ الْمَاءَ عَلَى جِلْدِهِ كُلِّهِ.

**பாடம் : 1 குளிப்பதற்கு முன் உளூ செய்தல். 248.** 'நபி(ஸல்) அவர்கள் கடமையான குளிப்பை நிறைவேற்றும்போது முதலாவதாகத் தங்களின் இரண்டு முன்கைகளையும் கழுவுவார்கள். பின்னர் தொழுகைக்கு உளூச் செய்வது போல் உளூச் செய்வார்கள். பின்னர் விரல்களைத் தண்ணீரில் மூழ்கச் செய்து அதைக் கொண்டு தலை முடியின் அடிப்பாகத்தைக் கோதுவார்கள். பின்னர் அவர்கள் தலையின் மீது மூன்று முறை கையினால் தண்ணீரைக் கோரி ஊற்றுவார்கள். பின்னர் தங்களின் உடல் முழுவதும் தண்ணீரை ஊற்றுவார்கள்' ஆயிஷா(ரலி) அறிவித்தார். Book: 5 - **ஸஹீஹுல் புகாரி**

حَدَّثَنَا يَحْيَى بْنُ يَحْيَى التَّمِيمِيُّ، حَدَّثَنَا أَبُو مُعَاوِيَةَ، عَنْ هِشَامِ بْنِ عُرْوَةَ، عَنْ أَبِيهِ، عَنْ عَائِشَةَ، قَالَتْ كَانَ رَسُولُ اللَّهِ صلى الله عليه وسلم إِذَا اغْتَسَلَ مِنَ الْجَنَابَةِ يَبْدَأُ فَيَغْسِلُ يَدَيْهِ ثُمَّ يُفْرِغُ بِيَمِينِهِ عَلَى شِمَالِهِ فَيَغْسِلُ فَرْجَهُ ثُمَّ يَتَوَضَّأُ وُضُوءَهُ لِلصَّلاَةِ ثُمَّ يَأْخُذُ الْمَاءَ فَيُدْخِلُ أَصَابِعَهُ فِي أُصُولِ الشَّعْرِ حَتَّى إِذَا رَأَى أَنْ قَدِ اسْتَبْرَأَ حَفَنَ عَلَى رَأْسِهِ ثَلاَثَ حَفَنَاتٍ ثُمَّ أَفَاضَ عَلَى سَائِرِ جَسَدِهِ ثُمَّ غَسَلَ رِجْلَيْهِ .

**526.** ஆயிஷா (ரலி) அவர்கள் கூறியதாவது: அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் பெருந்துடக்கிற்காகக் குளிக்கும்போது முதலில் தம் கைகளை (மணிக்கட்டுவரை) கழுவுவார்கள். பிறகு வலக் கையால் (தண்ணீர் அள்ளி) இடக் கையின் மீது ஊற்றிப் பிறவி உறுப்பைக் கழுவுவார்கள். பின்னர் தொழுகைக்காக அங்கத் தூய்மை (உளூ) செய்வதைப் போன்று அங்கத் தூய்மை செய்வார்கள். அதன் பின்னர் தண்ணீரை அள்ளி மயிர்க்கால்களுக்கு இடையே விரல்களை நுழை(த்துத் தலையைத் தேய்)ப்பார்கள். தலைமுடி முழுவதும் நனைந்துவிட்டதாகத் தெரிந்ததும் இரு கைகளிலும் மூன்று தடவை தண்ணீர் அள்ளி தலையில் ஊற்றுவார்கள். பிறகு மேனி முழுவதிலும் தண்ணீர் ஊற்றுவார்கள். பின்னர் கால்களைக் கழுவுவார்கள். - மேற்கண்ட ஹதீஸ் மேலும் நான்கு அறிவிப்பாளர்தொடர்கள் வழியாகவும் வந்துள்ளது. அவற்றில், கால்களைக் கழுவியது பற்றியக் குறிப்பு இடம்பெறவில்லை. Book: 3 - **ஸஹீஹ் முஸ்லிம்**

புஹாரி 249 மற்றும் முஸ்லிம் 317

அன்னை மைமூனாஹ் رَضِيَ اللهُ عَنْهَا அறிவிப்பதாவது,

عَنْ مَيْمُونَةَ، زَوْجِ النَّبِيِّ صلى الله عليه وسلم قَالَتْ تَوَضَّأَ رَسُولُ اللَّهِ صلى الله عليه وسلم وُضُوءَهُ لِلصَّلاَةِ غَيْرَ رِجْلَيْهِ، وَغَسَلَ فَرْجَهُ، وَمَا أَصَابَهُ مِنَ الأَذَى، ثُمَّ أَفَاضَ عَلَيْهِ الْمَاءَ، ثُمَّ نَحَّى رِجْلَيْهِ فَغَسَلَهُمَا، هَذِهِ غُسْلُهُ مِنَ الْجَنَابَةِ.

**249.** 'நபி (ஸல்) அவர்கள் கால்களைவிட்டுவிட்டு தொழுகைக்கு உளூச் செய்வது போன்று உளூச் செய்வார்கள். மேலும் தங்கள் மர்மஸ்தலத்தையும் உடலில் பட்ட அசுத்தங்களையும் கழுவுவார்கள். பின்னர் தங்களின் மீது தண்ணீரை ஊற்றுவார்கள். பின்னர் சிறிது நகர்ந்து நின்று தங்களின் இரண்டு கால்களையும் கழுவுவார்கள். இதுதான் நபி(ஸல்) அவர்களின் கடமையான குளிப்பாக இருந்தது' என மைமூனா(ரலி) அறிவித்தார். Book :5 - **ஸஹீஹுல் புகாரி**

وَحَدَّثَنِي عَلِيُّ بْنُ حُجْرٍ السَّعْدِيُّ، حَدَّثَنِي عِيسَى بْنُ يُونُسَ، حَدَّثَنَا الأَعْمَشُ، عَنْ سَالِمِ بْنِ أَبِي الْجَعْدِ، عَنْ كُرَيْبٍ، عَنِ ابْنِ عَبَّاسٍ، قَالَ حَدَّثَتْنِي خَالَتِي، مَيْمُونَةُ قَالَتْ أَدْنَيْتُ لِرَسُولِ اللَّهِ صلى الله عليه وسلم غُسْلَهُ مِنَ الْجَنَابَةِ فَغَسَلَ كَفَّيْهِ مَرَّتَيْنِ أَوْ ثَلاَثًا ثُمَّ أَدْخَلَ يَدَهُ فِي الإِنَاءِ ثُمَّ أَفْرَغَ بِهِ عَلَى فَرْجِهِ وَغَسَلَهُ بِشِمَالِهِ ثُمَّ ضَرَبَ بِشِمَالِهِ الأَرْضَ فَدَلَكَهَا دَلْكًا شَدِيدًا ثُمَّ تَوَضَّأَ وُضُوءَهُ لِلصَّلاَةِ ثُمَّ أَفْرَغَ عَلَى رَأْسِهِ ثَلاَثَ حَفَنَاتٍ مِلْءَ كَفِّهِ ثُمَّ غَسَلَ سَائِرَ جَسَدِهِ ثُمَّ تَنَحَّى عَنْ مَقَامِهِ ذَلِكَ فَغَسَلَ رِجْلَيْهِ ثُمَّ أَتَيْتُهُ بِالْمِنْدِيلِ فَرَدَّهُ .

**528.** மைமூனா (ரலி) அவர்கள் கூறியதாவது: அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் பெருந்துடக்கிற்குக் குளிப்பதற்காக தண்ணீர் கொண்டுவந்து வைத்தேன். அவர்கள் (முதலில்) தம்மிரு கைகளையும் (மணிக்கட்டுவரை) இரண்டு அல்லது மூன்று தடவை கழுவினார்கள். பிறகு பாத்திரத்திற்குள் கையை நுழைத்து (தண்ணீரை அள்ளி) பிறவி உறுப்பின் மீது ஊற்றி, தமது இடக் கையால் கழுவினார்கள். பிறகு தமது இடக் கையை பூமியில் வைத்து நன்கு தேய்த்துக்

கழுவினார்கள். பின்னர் தொழுகைக்கு அங்கத் தூய்மை செய்வதைப் போன்று அங்கத் தூய்மை செய்தார்கள். பிறகு தம் கைகள் நிரம்ப மூன்று முறை தண்ணீர் அள்ளித் தமது தலையில் ஊற்றினார்கள். பின்னர் மேனி முழுவதையும் கழுவினார்கள். பிறகு அங்கிருந்து சற்று நகர்ந்து (நின்று) தம் கால்களைக் கழுவினார்கள். பின்னர் நான் அவர்களுக்காகத் துவாலையைக் கொண்டு வந்தேன்.ஆனால், அவர்கள் அதை வாங்கி(த் துடைத்து)க்கொள்ள மறுத்துவிட்டார்கள். இதை இப்னு அப்பாஸ் (ரலி) அவர்கள் தம் சிறிய தாயார் மைமூனா (ரலி) அவர்களிடமிருந்து அறிவிக்கிறார்கள். Book: 3 - **ஸஹீஹ் முஸ்லிம்**

குளிக்கும்போது ஆரம்பத்தில் உளு செய்வதால், மறுபடியும் தொழுகைக்கு உளு செய்ய வேண்டியதில்லை. ஆனால் இடையில் உளு முறிக்கக் கூடிய காரியத்தை செய்யாமல் இருந்திருக்க வேண்டும். உதாரணமாக நமது அந்தரங்க உறுப்பைக் கையால் தொடக் கூடாது.

## குளிப்பு கடமையானவர்கள் செய்யக் கூடாதவை

குளிப்பு கடமையானவர்கள் குளிக்கும் முன்னால் செய்யக் கூடாதவை இங்கு கூறப்படுகிறது.

1. தொழக் கூடாது.

2. பள்ளிவாசலில் நீண்ட நேரம் அமரவோ நிற்கவோ கூடாது. ஆனால் அதனைக் கடந்து செல்ல வேண்டிய அவசியம் இருந்தால் அவ்வாறு செல்லலாம்.

ஸூரத்துன்னிஸாவு (பெண்கள்)

**4:43** يٰۤاَيُّهَا الَّذِيْنَ اٰمَنُوْا لَا تَقْرَبُوا الصَّلٰوةَ وَاَنْتُمْ سُكَارٰى حَتّٰى تَعْلَمُوْا مَا تَقُوْلُوْنَ وَلَا جُنُبًا اِلَّا عَابِرِىْ سَبِيْلٍ حَتّٰى تَغْتَسِلُوْا ‌ؕ وَاِنْ كُنْتُمْ مَّرْضٰۤى اَوْ عَلٰى سَفَرٍ اَوْ جَآءَ اَحَدٌ مِّنْكُمْ مِّنَ الْغَآٮِٕطِ اَوْ لٰمَسْتُمُ النِّسَآءَ فَلَمْ تَجِدُوْا مَآءً فَتَيَمَّمُوْا صَعِيْدًا طَيِّبًا فَامْسَحُوْا بِوُجُوْهِكُمْ وَاَيْدِيْكُمْ‌ ؕ اِنَّ اللّٰهَ كَانَ عَفُوًّا غَفُوْرًا

**4:43.** நம்பிக்கை கொண்டவர்களே! நீங்கள் ஓதுவது இன்னது என்று நீங்கள் அறிந்து கொள்ள முடியாதவாறு நீங்கள் போதையில் இருக்கும்போது தொழுகைக்கு நெருங்காதீர்கள்; அன்றியும் குளிப்புக் கடமையாக இருக்கும்போது குளிக்கும் வரை (பள்ளிக்குள் செல்லாதீர்கள்; பள்ளியை) பாதையாக கடந்து சென்றால் தவிர. நீங்கள் நோயாளியாகவோ, யாத்திரையிலோ, மலஜலம் கழித்தோ, பெண்களைத் தீண்டியோ இருந்து (சுத்தம் செய்து கொள்ள) தண்ணீரை பெறாவிடின் சுத்தமான மண்ணைத் தொட்டு உங்களுடைய முகங்களையும், உங்களுடைய கைகளையும் தடவி "தயம்மும்" செய்து கொள்ளுங்கள்; (இதன்பின் தொழலாம்) நிச்சயமாக அல்லாஹ் பிழை பொறுப்பவனாகவும், மன்னிப்பவனாகவும் இருக்கின்றான்.

ஒரு தடவை ரஸூலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ அவர்கள் தங்களின் துண்டை மறந்துவிட்டு வந்ததால், அதனை அன்னை ஆயிஷா رَضِيَ اللهُ عَنْهَا அவர்களிடம் எடுத்து விட்டு வருமாறு ரஸூலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ சொன்னார்கள். அப்போது தாங்கள் மாதவிடாயில் இருப்பதாக அன்னை ஆயிஷா கூறினார்கள். அவர்கள் மாதவிடாயில் இருப்பதால், கையில் மாதவிடாய் இல்லை என்பதால் எடுத்து வரலாம் என்று சொன்னார்கள். இவ்வாறு அன்னை ஆயிஷா رَضِيَ اللهُ عَنْهَا அவர்கள் குளிப்பு கடமையாகிய நிலையிலும் பள்ளிவாசலுக்குச் சென்று உடன் திரும்பி வந்துவிட்டார்கள்.

3. குர்ஆனைத் தொடக்கூடாது.

உளு இல்லாமல் குர்ஆனைத் தொடக் கூடாத நிலையில் இதுவும் கூடாது என்பது தெளிவு. குளிப்பு கடமையான நிலையில் குர்ஆன் ஓதுவது ஹராம் என்று சொல்லும் விதமாக ஆதாரமும் இல்லை. அது தவறு என்று கூறப்படும் அனைத்து அறிவிப்புகளும் பலவீனமானவையாகும். எனவே அதனை ஹராம்

என்று கூற முடியாது. வெறுக்கத்தக்க விஷயம் என்று கூறலாம். அசுத்தமான நிலையில் திக்ருச் செய்வதைத் தாங்கள் ரஸுலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ வெறுப்பதாகக் கூறியுள்ளார்கள். இதனைக் கொண்டு நாம் அவ்வாறு சொல்லலாமே அன்றி ஹராம் என்று கூறிட முடியாது.

மாதவிடாயின் போது குர்ஆன் ஓதுவது, திக்ரு செய்வது குறித்தான ஒரு செய்தியாவது, ஹஜ் பயணத்தின் போது அன்னை ஆயிஷா رَضِيَ اللهُ عَنْهَا அவர்கள் மாதவிடாய் ஏற்பட்ட நிலையில், அவர்களை தவா∴பைத் தவிர மற்ற எல்லா அமல்களையும் செய்யுமாறு ரஸுலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ அறிவுறுத்தியுள்ளார்கள். எனவே குர்ஆன் ஓதுவது மற்றும் திக்ரு செய்யலாம் என்பது இதிலிருந்து தெரிகிறது. அவற்றை எல்லாம் முழுமையாக விட்டுவிடலாகாது.

குளிப்பு கடமையான ஆண்களும், பெண்களும் தாமதப்படுத்தாமல் குளித்து விடுவது இதுபோன்ற ஓதலாமா கூடாதா என்ற கருத்து வேறுபாடுகளிலிருந்து நாம் வெளிவந்துவிடலாம்.

**Fiqh 14 - Laws of doing Tayammum**

## ஃபிக்ஹ் வகுப்பு 14 - தயம்மும் செய்வதின் சட்டங்கள்

**ஆசிரியர்: அஷ் ஷெய்க் உவைஸ் உமரி நஸீரி**

தயம்மும் பற்றிய சட்டதிட்டங்களை இந்த பகுதியில் நான் காண்போம். தூய்மை நோக்கத்தோடு இரண்டு கைகளையும் சுத்தமான மண்ணின் மீது அடித்துப் பின்னர் முகத்தையும், இரு கைகளையும் மணிக்கட்டு வரைத் தடவிக் கொள்வதாகும். இது ஹிஜ்ரி 5 அல்லது 6ஆம் ஆண்டில் தயம்மும் சட்டங்கள் வழங்கப்பட்டது.

அபு தாவூத் 317

அன்னை ஆயிஷா رَضِيِ اللّٰه عَنْهَا அறிவிப்பதாவது,

عَنْ عَائِشَةَ، قَالَتْ بَعَثَ رَسُولُ اللَّهِ صلى الله عليه وسلم أُسَيْدَ بْنَ حُضَيْرٍ وَأُنَاسًا مَعَهُ فِي طَلَبِ قِلاَدَةٍ أَضَلَّتْهَا عَائِشَةُ فَحَضَرَتِ الصَّلاَةُ فَصَلَّوْا بِغَيْرِ وُضُوءٍ فَأَتَوُا النَّبِيَّ صلى الله عليه وسلم فَذَكَرُوا ذَلِكَ لَهُ فَأُنْزِلَتْ آيَةُ التَّيَمُّمِ

உஸைத் இப்னு ஹுளைர் رَضِيِ الله عَنْهُ யையும், மற்றும் சிலரை ரஸுலுல்லாஹ் صَلَّي اللّٰه عَلَيْهِ وَسلَّمَ அன்னை ஆயிஷா رَضِيِ اللّٰه عَنْهَا அவர்களின் உடைந்து, காணமால் போன கழுத்தணியைத் தேடும்படி அனுப்பினார்கள். அப்போது தொழுகை நேரம் வந்தபோது, அவர்கள் உளூ செய்யாமல் தொழுதார்கள். அவர்கள் திரும்பி வந்து அந்த விவரத்தைச் சொன்னபோது, தயம்மும் சம்பந்தப்பட்ட வசனம் இறக்கப்பட்டது.

இதன் வரலாறு:

அபு தாவூத் 320

அம்மார் இப்னு யாஸிர் رَضِيِ الله عَنْهُ அறிவிப்பதாவது,

عَنْ عَمَّارِ بْنِ يَاسِرٍ، أَنَّ رَسُولَ اللَّهِ صلى الله عليه وسلم عَرَّسَ بِأُولاَتِ الْجَيْشِ وَمَعَهُ عَائِشَةُ فَانْقَطَعَ عِقْدٌ لَهَا مِنْ جَزْعِ ظَفَارٍ فَحَبَسَ النَّاسَ ابْتِغَاءُ عِقْدِهَا ذَلِكَ حَتَّى أَضَاءَ الْفَجْرُ وَلَيْسَ مَعَ النَّاسِ مَاءٌ فَتَغَيَّظَ عَلَيْهَا أَبُو بَكْرٍ وَقَالَ حَبَسْتِ النَّاسَ وَلَيْسَ مَعَهُمْ مَاءٌ فَأَنْزَلَ اللَّهُ تَعَالَى عَلَى رَسُولِهِ صلى الله عليه وسلم رُخْصَةَ التَّطَهُّرِ بِالصَّعِيدِ الطَّيِّبِ

ஒரு முறை ரஸுலுல்லாஹ் صَلَّي اللّٰه عَلَيْهِ وَسلَّمَ பயணத்தின்போது அன்னை ஆயிஷா رَضِيِ اللّٰه عَنْهَا அவர்களும் உடன் சென்றிருந்தார்கள். பயணத்தின்போது அவர்களின் தங்க கழுத்தணி உடைந்து, காணாமல் போனது. அதனைத் தேடுவதற்காக, ரஸுலுல்லாஹ் صَلَّي اللّٰه عَلَيْهِ وَسلَّمَ அவர்களும் ஸஹாபாக்களும் உலத் அல் ஜைஷ் என்னும் இடத்தில் தங்க நேர்ந்தது. அந்த இடத்தில் தண்ணீர் கிடைக்கவில்லை. அவர்களிடம் இருந்த தண்ணீரும் காலியாகிவிட்டது. மக்கள் அபு பக்ரு رَضِيِ الله عَنْهُ அவர்களிடம் அன்னை ஆயிஷா رَضِيِ اللّٰه عَنْهَا அவர்களின் காரணமாக அவர்கள் இவ்வாறு தண்ணீர் இல்லாத இடத்தில் வந்து இருக்க வேண்டிய நிலை ஏற்பட்டுவிட்டதாக அபு பக்ரு رَضِيِ الله عَنْهُ அவர்களிடம் முறையிட்டார்கள். அதனைக் கேட்டதும், அபு பக்ரு رَضِيِ الله عَنْهُ அவர்கள் கோபத்துடன் அன்னை ஆயிஷா رَضِيِ اللّٰه عَنْهَا அவர்களைக் காண வந்தார்கள். ஒரு கூடாரத்தில் ரஸுலுல்லாஹ்

صَلَّى اللّٰهُ عَلَيْهِ وَسَلَّمَ அவர்கள் அன்னை ஆயிஷா رَضِيَ اللّٰهُ عَنْهَا அவர்களின் மடியில் படுத்து உறங்கிக் கொண்டிருந்தார்கள்.

அபு பக்ரு رَضِيَ الله عَنْهُ அவர்கள் அன்னை ஆயிஷா رَضِيَ اللّٰهُ عَنْهَا அவர்களை நோக்கி, "உன்னால், மக்கள் தண்ணீர் இல்லாத இந்த இடத்தில் தங்க நேரிட்டது." எனக் கூறி கடிந்தார்கள். பின்னர் தங்களின் விரலைக் கொண்டு அன்னை ஆயிஷா رَضِيَ اللّٰهُ عَنْهَا அவர்களின் கன்னத்தில் குத்தினார்கள். ரஸூலுல்லாஹ் صَلَّى اللّٰهُ عَلَيْهِ وَسَلَّمَ அவர்கள் உறங்கிக் கொண்டிருந்ததால், அன்னை அவர்கள் அசையாமல் இருந்து விட்டார்கள்.

மறு நாள் சில ஸஹாபாக்கள் பஜ்ர் தொழுகையை தண்ணீர் இல்லாமல் உளூ செய்யாமல் தொழுதார்கள். இன்னும் சிலர் என்ன செய்ய வேண்டும் என அறியாமல் தொழாமல் இருந்து கொண்டிருந்தார்கள். அச்சமயத்தில்தான் அத்தியாம் மாயிதா 6 வசனத்தை இறக்கினான்.

ஸூரத்துல் மாயிதா (ஆகாரம்) (உணவு மரவை)

**5:6** يٰۤاَيُّهَا الَّذِيْنَ اٰمَنُوْۤا اِذَا قُمْتُمْ اِلَى الصَّلٰوةِ فَاغْسِلُوْا وُجُوْهَكُمْ وَاَيْدِيَكُمْ اِلَى الْمَرَافِقِ وَامْسَحُوْا بِرُءُوْسِكُمْ وَاَرْجُلَكُمْ اِلَى الْكَعْبَيْنِ ؕ وَاِنْ كُنْتُمْ جُنُبًا فَاطَّهَّرُوْا ؕ وَاِنْ كُنْتُمْ مَّرْضٰۤى اَوْ عَلٰى سَفَرٍ اَوْ جَآءَ اَحَدٌ مِّنْكُمْ مِّنَ الْغَآٮِٕطِ اَوْ لٰمَسْتُمُ النِّسَآءَ فَلَمْ تَجِدُوْا مَآءً فَتَيَمَّمُوْا صَعِيْدًا طَيِّبًا فَامْسَحُوْا بِوُجُوْهِكُمْ وَاَيْدِيْكُمْ مِّنْهُ ؕ مَا يُرِيْدُ اللّٰهُ لِيَجْعَلَ عَلَيْكُمْ مِّنْ حَرَجٍ وَّلٰـكِنْ يُّرِيْدُ لِيُطَهِّرَكُمْ وَ لِيُتِمَّ نِعْمَتَهٗ عَلَيْكُمْ لَعَلَّكُمْ تَشْكُرُوْنَ

**5:6.** முஃமின்களே! நீங்கள் தொழுகைக்குத் தயாராகும்போது, (முன்னதாக) உங்கள் முகங்களையும், முழங்கைகள் வரை உங்கள் இரு கைகளையும், கழுவிக் கொள்ளுங்கள்; உங்களுடைய தலைகளை (ஈரக்கையால்) தடவி (மஸஹு செய்து) கொள்ளுங்கள்; உங்கள் கால்களை இரு கணுக்கால் வரை(க் கழுவிக் கொள்ளுங்கள்) - நீங்கள் பெருந்தொடக்குடையோராக (குளிக்கக் கடமைப் பட்டோராக) இருந்தால் குளித்து(த் தேகம் முழுவதையும் சுத்தம் செய்து)க் கொள்ளுங்கள்; தவிர நீங்கள் நோயாளிகளாகவோ, அல்லது பிரயாணத்திலோ இருந்தால், அல்லது உங்களில் எவரும் மல ஜலம் கழித்து வந்தாலும், அல்லது நீங்கள் பெண்களைத் தீண்டி (உடல் உறவு கொண்டி)ருந்தாலும் (உங்களைச் சுத்தப்படுத்திக் கொள்ள) உங்களுக்குத் தண்ணீர் கிடைக்காவிட்டால் (தயம்மும் செய்து கொள்ளுங்கள்; அதாவது) சுத்தமான மண்ணைக் (கையினால் தடவிக்) கொண்டு அவைகளால் உங்கள் முகங்களையும், உங்களுடைய கைகளையும் தடவிக் கொள்ளுங்கள்; அல்லாஹ் உங்களை வருத்தக் கூடிய எந்த சிரமத்தையும் கொடுக்க விரும்பவில்லை - ஆனால் அவன் உங்களைத் தூய்மைப் படுத்தவும்; இன்னும் நீங்கள் அவனுக்கு நன்றி செலுத்தும் பொருட்டு, தனது அருட்கொடையை உங்கள் மீது முழுமையாக்கவும் விரும்புகிறான்.

இவ்வசனத்தில் உளூ செய்வதற்கும், பெருந்தொடக்கிற்கும், தண்ணீர் கிடைக்காவிட்டாலும், அல்லது நோயுற்றாலும் தயம்மும் செய்யுமாறு அல்லாஹ் அறிவுறுத்தியுள்ளான்.

முந்தைய ஹதீதின் தொடர்ச்சி

زَادَ ابْنُ نُفَيْلٍ فَقَالَ لَهَا أُسَيْدُ بْنُ حُضَيْرٍ يَرْحَمُكِ اللَّهُ مَا نَزَلَ بِكِ أَمْرٌ تَكْرَهِينَهُ إِلاَّ جَعَلَ اللَّهُ لِلْمُسْلِمِينَ وَلَكِ فِيهِ فَرَجًا

இப்னு நுபை∴ல் رَضِيَ الله عَنْهُ தொடர்ந்தார், "உஸைத் இப்னு ஹுளைர் رَضِيَ الله عَنْهُ அன்னை அவர்களிடம் கூறினார், "அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَى உங்களின் மீது அருள்புரிவானாக! உங்களுக்கு

ஏற்பட்ட கசப்பான விஷயங்கள் ஆனாலும், அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَى முஸ்லிம்களுக்கு அவற்றின் மூலம் நல்லவற்றைக் கொண்டு வந்துள்ளான்.''

அபு தாவூதின் மற்றொரு ஹதீதில் பத்து வருடங்கள் தொடர்ந்து தண்ணீர் கிடைக்காவிட்டாலும், சுத்தமான மண்ணைக் கொண்டு தயம்முமும் செய்யலாம் ரஸுலுல்லாஹ் صَلَّى اللّٰه عَلَيْهِ وَسَلَّمَ என்று கூறியுள்ளார்கள்.

## தயம்மும் செய்ய அனுமதிக்கப்பட்ட நிலைகள்

1. தண்ணீர் கிடைக்காவிட்டால்:

இதற்கான ஆதாரம் முன்னர் கூறப்பட்ட அத்தியாயம் மாயிதாவின் 6வது வசனம்.

புஹாரி 344

இம்ரான இப்னு ஹுஸைன் رَضِي اللّٰه عَنْهُ அறிவிப்பதாவது

إِذَا هُوَ بِرَجُلٍ مُعْتَزِلٍ لَمْ يُصَلِّ مَعَ الْقَوْمِ قَالَ " مَا مَنَعَكَ يَا فُلاَنُ أَنْ تُصَلِّيَ مَعَ الْقَوْمِ ". قَالَ أَصَابَتْنِي جَنَابَةٌ وَلاَ مَاءَ. قَالَ " عَلَيْكَ بِالصَّعِيدِ، فَإِنَّهُ يَكْفِيكَ "

**344.** நாங்கள் நபி(ஸல்) அவர்களுடன் ஒரு பயணம் சென்றோம். இரவின் கடைசி நேரம் வந்தபோது எங்களுக்கு தூக்கம் மேலிட்டது. பயணிக்கு அதைவிட இன்பமான தூக்கம் எதுவும் இருக்க முடியாது. அந்தத் தூக்கத்திலிருந்து எங்களை (அதிகாலை) சூரிய வெப்பம்தான் எழுப்பியது. முதல் முதலாகத் தூக்கத்திலிருந்து எழுந்தவர் இன்னவர், அடுத்த இன்னவர் அவரை அடுத்து இன்னவர் இந்த ஹதீஸ் அறிவிப்பாளர்களில் ஒருவரான அபூ ரஜா எழுந்தவர்களின் பெயர்களைக் குறிப்பிட்டுக் கூறினார். அவருக்கு அடுத்த அறிவிப்பாளரான அவ்ஃப் அவர்களின் பெயர்களை மறந்துவிட்டார். நான்காவதாகத் தூக்கத்திலிருந்து எழுந்தவர் உமர் இப்னு கத்தாப்(ரலி) ஆவார்கள்.' நபி(ஸல்) அவர்கள் தூங்கினால் அவர்கள் தாமாகவே தூக்கத்திலிருந்து விழிக்கும் வரை வேறு யாராலும் எழுப்பப்பட மாட்டார்கள். காரணம் அவர்களின் தூக்கத்தில் என்ன செய்தி வருமென்பது எங்களுக்குத் தெரியாது. உமர்(ரலி) தூக்கத்தைவிட்டு எழுந்து மக்களுக்கு ஏற்பட்ட (ஸுப்ஹ் தொழுகை தவறிப்போன) இந்நிலையைப் பார்த்ததும் அல்லாஹு அக்பர்!' என்று சப்தமிட்டார். அவர் திடகாத்திரமான மனிதராக இருந்தார். அவர் சப்தமிட்டுத் தக்பீர் முழங்கிக் கொண்டே இருந்தார். அவர்களின் சப்தத்தைக் கேட்டு நபி(ஸல்) அவர்களும் தூக்கத்திலிருந்து எழுந்தார்கள். உடனே மக்கள் தங்களுக்கு ஏற்பட்ட இந்நிலையை நபி(ஸல்) அவர்களிடம் முறையிட்டார்கள். அப்போது 'அதனால் எந்தப் பாதிப்புமில்லை. நீங்கள் இங்கிருந்து புறப்படுங்கள்' என்று நபி(ஸல்) அவர்கள் கூறிவிட்டு, அந்த இடத்தைவிட்டும் புறப்பட்டார்கள். சிறிது தூரம் சென்றதும் அங்கே தங்கி உளூச் செய்யத் தண்ணீர் கொண்டு வரச் செய்து அதில் உளூச் செய்தார்கள். தொழுகைக்காக அழைப்புக் கொடுக்கப்பட்டது. மக்களுக்குத் தொழுகை நடத்தினார்கள். நபி(ஸல்) அவர்கள் தொழுகையை முடித்துவிட்டு திரும்பிப் பார்த்தபோது, அங்கு ஒருவர் கூட்டத்துடன் தொழாமல் தனியாக இருந்தார். 'ஜமாஅத்துடன் நீர் தொழாமலிருக்கக் காரணமென்ன?' என்று அவரிடம் கேட்டபோது, 'எனக்குக் குளிப்புக் கடமையாகிவிட்டது. தண்ணீர் இல்லை' என்று அவர் கூறினார். 'மண்ணில் தயம்மும் செய். அது உனக்குப் போதுமானது' என்று நபி(ஸல்) அவர்கள் அவரிடம் கூறினார்கள். என இம்ரான்(ரலி) அறிவித்தார். Book: 7 - **ஸஹீஹுல் புகாரி**

2. நோய்வாய்ப் பட்டிருந்தால் அல்லது தண்ணீர் பயன்படுத்தினால் நோய் அதிகரிக்கும் என்ற அச்சம் இருந்தால்:

இதற்கான ஆதாரமும் அத்தயாயம் மாயிதாவின் 6ஆம் வசனம். எனவே நோய் இருந்தாலும், அல்லது தண்ணீரினால் அந்நோய் அதிகரிக்கும் என்ற நிலையிலும் நாம் தயம்மும் செய்யலாம்.

அபு தாவூத் 336

ஜாபிர் رَضِي اللّٰه عَنْهُ அறிவிப்பதாவது,

عَنِ الزُّبَيْرِ بْنِ خُرَيْقٍ، عَنْ عَطَاءٍ، عَنْ جَابِرٍ، قَالَ خَرَجْنَا فِي سَفَرٍ فَأَصَابَ رَجُلاً مِنَّا حَجَرٌ فَشَجَّهُ فِي رَأْسِهِ ثُمَّ احْتَلَمَ فَسَأَلَ أَصْحَابَهُ فَقَالَ هَلْ تَجِدُونَ لِي رُخْصَةً فِي التَّيَمُّمِ فَقَالُوا مَا نَجِدُ لَكَ رُخْصَةً وَأَنْتَ تَقْدِرُ عَلَى الْمَاءِ فَاغْتَسَلَ فَمَاتَ فَلَمَّا قَدِمْنَا عَلَى النَّبِيِّ صلى الله عليه وسلم أُخْبِرَ بِذَلِكَ فَقَالَ " قَتَلُوهُ قَتَلَهُمُ اللَّهُ أَلاَّ سَأَلُوا إِذْ لَمْ يَعْلَمُوا فَإِنَّمَا شِفَاءُ الْعِيِّ السُّؤَالُ إِنَّمَا كَانَ يَكْفِيهِ أَنْ يَتَيَمَّمَ وَيَعْصِرَ " . أَوْ " يَعْصِبَ " . شَكَّ مُوسَى " عَلَى جُرْحِهِ خِرْقَةً ثُمَّ يَمْسَحَ عَلَيْهَا وَيَغْسِلَ سَائِرَ جَسَدِهِ "

“நாங்கள் பயணத்தில் இருந்தோம். எங்களில் ஒருவர் கல்லால் அடிபட்டுத் தலையில் காயம் பட்டார். அவருக்கு விந்து வெளியாகும் கனவினைக் கண்டார். அவர் மற்ற பயணிகளிடம், “(காயம் காரணமாக) தமக்கு ஏதும் சலுகை இருக்கிறதா?” என்று வினவினார். அவர்கள், “உமக்குத் தண்ணீர் பயன்படுத்தாமல் இருக்க எந்த சலுகையையும் நாங்கள் காணவில்லை” என்றார்கள். தண்ணீரின் குளித்த அவர் மரணமடைந்தார். நாங்கள் ரஸுலுல்லாஹ் صَلَّى الله عَلَيْهِ وَسَلَّمَ அவர்களிடம் வந்தபோது, இந்த நிகழ்வை அவர்களுக்குத் தெரிவித்தோம். அவர்கள் கூறினார்கள், “அவர்கள் அவரைக் கொலை செய்து விட்டார்கள். அவர்களை அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَى கொல்வானாக! அவர்கள் தெரியாத ஒன்றைப் பற்றி கேட்க வேண்டாமா? அறியாமைக்கான நிவாரணம், அது பற்றி கேட்பதுதான். அவருக்குத் தயம்மும் செய்வது போதுமானதாக இருந்திருக்கும். அல்லது சில துளித் தண்ணீர். அல்லது காயத்தின் மீது கட்டு கட்டிவிட்டு, உடலின் மற்ற பாகத்தைக் கழுவுவது.”

இவ்வாறு நோய் அதிகரிக்கும், அல்லது மரணம் ஏற்பட்டுவிடும் என்ற அச்சம் இருந்தாலும், நாம் தயம்மும் செய்து கொள்ளலாம்.

3. கடுமையான குளிர் காலத்தில், சுடு தண்ணீர் பயன்படுத்த வழியில்லாத நேரத்தில், குளிரில் தண்ணீரைப் பயன்படுத்தினால் நோய்வாய்ப்படுவோம் என்று அஞ்சினால் தயம்மும் செய்யலாம்.

அபு தாவூத் 334

அம்ரு இப்னு ஆஸ் رَضِيَ الله عَنْهُ அறிவிப்பதாவது,

عَنْ عَمْرِو بْنِ الْعَاصِ، قَالَ احْتَلَمْتُ فِي لَيْلَةٍ بَارِدَةٍ فِي غَزْوَةِ ذَاتِ السَّلاَسِلِ فَأَشْفَقْتُ إِنِ اغْتَسَلْتُ أَنْ أَهْلِكَ فَتَيَمَّمْتُ ثُمَّ صَلَّيْتُ بِأَصْحَابِي الصُّبْحَ فَذَكَرُوا ذَلِكَ لِلنَّبِيِّ صلى الله عليه وسلم فَقَالَ " يَا عَمْرُو صَلَّيْتَ بِأَصْحَابِكَ وَأَنْتَ جُنُبٌ " . فَأَخْبَرْتُهُ بِالَّذِي مَنَعَنِي مِنَ الاِغْتِسَالِ وَقُلْتُ إِنِّي سَمِعْتُ اللَّهَ يَقُولُ { وَلاَ تَقْتُلُوا أَنْفُسَكُمْ إِنَّ اللَّهَ كَانَ بِكُمْ رَحِيمًا } فَضَحِكَ رَسُولُ اللَّهِ صلى الله عليه وسلم وَلَمْ يَقُلْ شَيْئًا .

“நான் ஓர் இரவில் (விந்து வெளியாகக் கூடிய) கனவு கண்டேன். அது தாத் அல் ஸலாஸில் போரில் ஒரு குளிர் காலத்தில் நிகழ்ந்தது. எனவே நான் (குளிருக்குப் பயந்து) தயம்மும் செய்து, பஜ்ர் தொழுகையை தலைமை ஏற்று நடத்தினேன். அவர்கள் அதனை ரஸுலுல்லாஹ் صَلَّى الله عَلَيْهِ وَسَلَّمَ அவர்களிடம் கூறினார்கள். அவர்கள் வினவினார்கள், “அம்ரு رَضِيَ الله عَنْهُ வே! குளிப்பு கடமையான நிலையில் நீர் படைவீரர்களுக்கு தொழுகை நடத்தினீரா?” நான் குளிக்காமல் தயம்மும் செய்ததற்கான காரணத்தைக் கூறினேன். நான் சொன்னேன், “நீங்கள் உங்களை மாய்த்துக் கொள்ளாதீர்கள். நிச்சமயாக அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَى உங்களின் மீது அருளை அளிப்பவனாக இருக்கிறான்” (அந்நிஸா 29) என்று அல்லாஹ் கூறியதைக் கேட்டுள்ளேன்.” ரஸுலுல்லாஹ் صَلَّى الله عَلَيْهِ وَسَلَّمَ சிரித்து விட்டு, (அது பற்றி) ஒன்றும் கூறவில்லை.”

எனவே தண்ணீர் இல்லை என்றாலும், நோய்வாய்ப்பட்டிருந்தாலும், கடுங்குளிரில் தண்ணீர் பயன்படுத்தினால் ஆபத்து உண்டு என்று கருதினாலும் நாம் தயம்மும் செய்து கொள்ளலாம்.

## தயம்முமின் நிபந்தனைகள்

1. நிய்யத்

எல்லா அமல்களைப் போல, இதற்கும் தயம்மும் செய்கிறேன் என்ற நிய்யத் அவசியமாகும்.

2. சுத்தமான மண்:

தயம்முமைச் சுத்தமான மண்ணைக் கொண்டுதான் செய்ய வேண்டும். அசுத்தம் இருக்கும் என்றால் அதனைப் பயன்படுத்தக் கூடாது.

## தயம்மும் செய்யும் முறை

இரு கைகளையும் ஒரு முறை மட்டும் மண்ணில் அடித்து விட்டுப் பின்னர் வலது கையைக் கொண்டு இடது கையிலுள்ள மண்ணைத் தட்டிவிட்டும், இடது கையைக் கொண்டு வலது கையிலுள்ள மண்ணைத் தட்டிவிட்டு அல்லது ஊதிவிட்டு, இரண்டு கைகளைக் கொண்டு முகத்தையும், இரண்டு கைகளையும் மணிக்கட்டு வரையிலும் தடவ வேண்டும்.

அபு தாவூத் 337

அம்மார் இப்னு யாஸிர் رَضِي الله عَنْهُ அறிவிப்பதாவது,

عَنْ عَمَّارِ بْنِ يَاسِرٍ، قَالَ سَأَلْتُ النَّبِيَّ صلى الله عليه وسلم عَنِ التَّيَمُّمِ فَأَمَرَنِي ضَرْبَةً وَاحِدَةً لِلْوَجْهِ وَالْكَفَّيْنِ .

நான் தயம்மும் பற்றி ரஸுலுல்லாஹ் صَلَّى الله عَلَيْهِ وَسَلَّم அவர்களிடம் வினவினேன். அவர்கள் என்னை ஒரு அடி மட்டும் (தரையில் அடித்துப் பின்னர்) முகத்தையும். கைகளையும் தடவிக் கொள்ளும்படி கட்டயையிட்டார்கள்."

புஹாரி 338 மற்றும் திர்மிதி 144

அப்துர் ரஹ்மான் இப்னு அப்ஜா رَضِي الله عَنْهُ அறிவிப்பதாவது

فَقَالَ عَمَّارُ بْنُ يَاسِرٍ لِعُمَرَ بْنِ الْخَطَّابِ أَمَا تَذْكُرُ أَنَّا كُنَّا فِي سَفَرٍ أَنَا وَأَنْتَ فَأَمَّا أَنْتَ فَلَمْ تُصَلِّ، وَأَمَّا أَنَا فَتَمَعَّكْتُ فَصَلَّيْتُ، فَذَكَرْتُ لِلنَّبِيِّ صلى الله عليه وسلم فَقَالَ النَّبِيُّ صلى الله عليه وسلم " إِنَّمَا كَانَ يَكْفِيكَ هَكَذَا ". فَضَرَبَ النَّبِيُّ صلى الله عليه وسلم بِكَفَّيْهِ الأَرْضَ، وَنَفَخَ فِيهِمَا ثُمَّ مَسَحَ بِهِمَا وَجْهَهُ وَكَفَّيْهِ.

**338.** 'ஒருவர் உமர்(ரலி) அவர்களிடம் வந்து 'நான் குளிப்புக் கடமையானவனாக ஆகிவிட்டேன். தண்ணீர் கிடைக்கவில்லை. என்ன செய்யவேண்டும்?' என்று கேட்டபோது, அங்கிருந்த அம்மார் இப்னு யாஸிர்(ரலி) உமர்(ரலி) அவர்களிடம், 'நானும் நீங்களும் ஒரு பயணத்தில் சென்றோம். (அப்போது தண்ணீர் கிடைக்காததால்) நீங்கள் தொழவில்லை; நானோ மண்ணில் புரண்டுவிட்டுத் தொழுதேன். இந்நிகழ்ச்சியை நபி(ஸல்) அவர்களிடம் நான் சொன்னபோது நபி(ஸல்) அவர்கள் தங்களின் இரண்டு கைகளையும் தரையில் அடித்து, அவற்றில் ஊதிவிட்டு அவ்விரு கைகளால் தங்களின் முகத்தையும் இரண்டு முன்கைகளையும் தடவிக் காண்பித்து 'இவ்வாறு செய்திருந்தால் அது உனக்குப் போதுமானதாக இருந்தது' எனக் கூறிய சம்பவம் உங்களுக்கு நினைவில்லையா?' என்று கேட்டார்கள்' என அப்துர்ரஹ்மான் அப்ஸா(ரலி) கூறினார். Book : 7 - **ஸஹீஹுல் புகாரி**

எனவே தயம்மும் செய்வதற்கு ஒரே ஒரு முறை மட்டும் மண்ணில் தட்டினால் போதும். முகத்தை முதலிலும் பின்னர் கைகளையும் தடவ வேண்டும். கைகள் மணிக்கட்டு வரை தடவினால் போதும். முழங்கை வரை தடவ வேண்டாம். மேலும் உளூவைப் போலவே, குளிப்பு கடமையானவர்களும் இவ்வாறே தயம்மும் செய்து கொள்ளலாம். இவையே இந்த ஹதீதுகளில் கிடைக்கும் செய்தியாகும். இதையல்லாமல் வேறு விதமாக, அதாவது ஒன்றுக்கும் மேற்பட்டு மண்ணில் அடிப்பது, கைகளை முழங்கை வரை தடவுவது போன்ற செய்திகள் ஆதாரமற்றவையாகும்.

## தயம்மும் - முறிக்கும் காரியங்கள்

1. உளூவை முறிக்கும் அனைத்து காரியங்களும் தயம்முமையும் முறித்துவிடும். முன்பின் துவாரங்கள் வழியாக ஏதும் வெளிவருதல், ஆழ்ந்த தூக்கம் போன்றவை.

2. தண்ணீர் கிடைத்துவிட்டாலும் அல்லது தண்ணீரைப் பயன்படுத்தும் நிலையை அடைந்துவிட்டாலும் தயம்மும் முறிந்துவிடும்.

## தயம்மும் பற்றிய சில விளக்கங்கள்

1. தயம்மும் செய்து தொழுதபின்பு, தொழுகை நேரம் முடிவடைவதற்குள் தண்ணீர் கிடைத்தால், மறுபடியும் அந்தத் தொழுகையை நிறைவேற்ற அவசியமில்லை. முந்தைய தொழுகையே போதுமானது.

2. எனினும் தொழுகையின் இடையில் தண்ணீர் கிடைத்த செய்தி அறிந்தால், தொழுகையை பாதியில் நிறுத்தி, உளூ செய்து அந்தத் தொழுகையை நிறைவேற்ற வேண்டும்.

3. தயம்மும் செய்வதற்குப் பயன்படுத்த வேண்டியவை.

தயம்மும் செய்வதற்கான வசனத்தில், கூறப்பட்ட صَعِيدًا طَيِّبًا சுத்தமான ஸயீத் என்ற சொல்லுக்கு அகராதியின் பொருளாவது, பூமியின் மீது உள்ள அனைத்து பொருட்களுக்கும் - கற்கள், பாறைகள், செங்கள் போன்ற அனைத்துப் பொருட்களுக்கும் உபயோகப்படுத்தப்படும் சொல்லாகும். எனினும் ஹதீதுகளில் பல இடங்களில் சுத்தமான மண் என்ற சொல்லை நேரடியாக ரஸூலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ பயன்படுத்தியுள்ளார்கள். எனவே மண்ணைத்தான் முதலில் பயன்படுத்த முயற்சி செய்ய வேண்டும். அவ்வாறு மண் கிடைக்காத நிலையில் மட்டும் செங்கல், அல்லது கற்களின் மீது, அல்லது தூசியிருக்கும் சுவற்றின் மீது நாம் கைகளை அடித்து தயம்மும் செய்யலாம்.

4. தண்ணீர் போதுமான அளவு இல்லையென்றால், அதனை அடிப்படைத் தேவைகளுக்கு முதலில் தண்ணீரைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். உதாரணமாக, குடிப்பதற்கு, அசுத்தங்களை நீங்குவதற்கு முதலில் தண்ணீரைப் பயன்படுத்தலாம்.

5. தயம்மும் செய்வதற்குத் தண்ணீரும், மண்ணும் கிடைக்கவில்லை, தூசியும் இல்லை என்றால், எதனையும் செய்யாமல் நாம் தொழுது கொள்ளலாம். அதற்கான ஆதாரம், கழுத்தணி காணாமல் போன ஹதீதில், சில ஸஹாபாக்கள் உளூ செய்யாமல் தொழுதார்கள் என்ற விவரத்தை அறிகிறோம். அவர்கள் செய்து ஏற்றுக் கொள்ளப்படாத ஒன்றாக இருந்திருந்தால், ரஸூலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ அவர்களைத் திரும்பத் தொழச் சொல்லியிருப்பார்கள்.

எனவே எதுவும் முடியாத சமயத்தில், அதன் காரணமாகத் தொழுகையை விடாமல் நாம் தொழ வேண்டும். உதாரணமாக புகைவண்டி, விமானம் போன்ற பயணத்தின்போது ஏதும் கிடைக்க வழியில்லை என்றால், தொழுகையை விட்டுவிடாமல் தஹாரத் இல்லா நிலையிலும் தொழ வேண்டும். அதனை ஏற்றுக் கொள்ள அல்லாஹ் போதுமானவன் ஆவான்.

## Fiqh 15 - Laws of Hailu, Nifaas and Istihasa

# ஃபிக்ஹ் வகுப்பு 15 - ஹைழ், நிஃபாஸ் மற்றும் இஸ்திஹாஸா

**ஆசிரியர்: அஷ் ஷெய்க் உவைஸ் உமரி நளீரி**

இங்கு மாதவிடாய் மற்றும் பிரசவ இரத்தப் போக்கு பற்றிய சட்டங்களைக் காணலாம். மாதவிடாய் - ஹைழ் எனப்படும். பிரசவ உதிரப் போக்கு - நி.ஃ.பாஸ் ஆகும். இரண்டின் சட்டங்களும் ஒரே மாதிரியானவையாகும்.

### மாதவிடாய் (ஹைழ்)

ஹைழ் இரத்தம் கறுப்பு நிற, கட்டியான, துற்நாற்றம் கொண்ட இரத்தம் ஆகும். இது வரும் நாட்கள், ஒருவரின் உடல்நிலை, பருவ சூழ்நிலை போன்ற பல காரணங்களினால் அமையும். இதன் நாட்கள் குறைந்தபட்சம் ஒரு நாள். இந்நாட்களில் தொழக் கூடாது, நோன்பு வைக்கக் கூடாது. அது முடிந்ததற்கான அடையாளஙகள்:

முதலாவது, இரத்தம் முழுமையாக நின்றிருக்க வேண்டும்.

இரண்டாவது அடையாளம் வெள்ளைப் படுதல் ஏற்படும்.

இது எல்லா பெண்மணிகளுக்கும் ஏற்படாது.

இந்த இரண்டு அடையாளங்களையும் கண்டால் தங்களுக்கு மாதவிடாய் நின்று விட்டது என்று அறிந்து கொள்ளலாம். இந்த இரண்டு அடையாளங்களைக் காணாமல், இரத்தம் நிறம் மாறி சிவப்பு அல்லது மஞ்சள் நிறத்தில் இருந்தாலும், அதனை மாதவிடாய் நிறமாக எடுத்துக் கொள்ள வேண்டும். துாய்மை அடைந்த பிறகு, நிறமாறியிருந்தால், அதனை நாம் மாதவிடாயின் அங்கமாக எடுத்துக் கொள்ள வேண்டியதில்லை. அந்த நிலையில் அவற்றைச் சுத்தப்படுதினால் போதும். தொழுகையை விட்டுவிடக் கூடாது.

அபு தாவூத் 307

உம்மு அத்தியயாஹ் رَضِيَ اللهُ عَنْهَا அறிவிப்பதாவது,

عَنْ أُمِّ الْهُذَيْلِ، عَنْ أُمِّ عَطِيَّةَ، وَكَانَتْ، بَايَعَتِ النَّبِيَّ صلى الله عليه وسلم قَالَتْ كُنَّا لاَ نَعُدُّ الْكُدْرَةَ وَالصُّفْرَةَ بَعْدَ الطُّهْرِ شَيْئًا .

“துாய்மை அடைந்தபிறகு வரும் பழுப்பு மற்றும் மஞ்சல் (நீர்) குறித்து நாங்கள் (மாத விடாய் இரத்தமாகக்) கவனத்தில் எடுத்துக் கொள்ள மாட்டோம்.”

முன்னர் கூறிய மாதவிடாயிலிருந்து சுத்தம் அடைந்தற்கான இரண்டு அடையாளங்கள் இல்லாமல், பழுப்பு நிற அல்லது மஞ்சள் நிறத் திரவமோ, இரத்தமோ தொடர்ந்து வந்தால், நாம் பதினைந்து நாட்கள் வரை அதனை மாதவிடாயாக எடுத்துக் கொள்ள வேண்டும். பதினைந்து நாட்களைத் தாண்டிவிட்டால், அதனை மாதவிடாய் இரத்தமாக எடுத்துக் கொள்ளாமல், இஸ்திஹாழா என்னும் கர்ப்பப்பை நாளத்திலிருந்து வரும் திரவமாக எடுத்துக் கொள்ள வேண்டும். இது மாதவிடாய் அல்ல. அது நோயாகக் கருதப்படும்.

கர்ப்பிணிகளுக்கு அந்த நாட்களில் மாதவிடாய் இருக்காது. எனினும் சிலருக்கு அந்த நாட்களில் ஏற்பட வாய்ப்புண்டு, என்பதால் அதனை மாதவிடாயாக எடுத்துக் கொண்டு அதன் சட்டங்களுக்கு தகுந்தவாறு நடந்து கொள்ள வேண்டும்.

## பிரசவ உதிரப் போக்கு (நி∴பாஸ்)

சிலருக்கு பிரசவத்திற்குப் பிறகு, நி∴பாஸ் ஏற்படாமல் இருக்கலாம். சிலருக்கு மொத்த நாட்கள் வெவ்வேறு விதமாக இருக்கலாம். எனினும் அதிகபட்ச நாளாக நி∴பாஸ் நாற்பது நாட்கள் என எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்.

திர்மிதி 139

அன்னை உம்மு ஸலமாஹ் رَضِيَ الله عَنْهَا அறிவிப்பதாவது,

عَنْ أُمِّ سَلَمَةَ، قَالَتْ كَانَتِ النُّفَسَاءُ تَجْلِسُ عَلَى عَهْدِ رَسُولِ اللَّهِ صلى الله عليه وسلم أَرْبَعِينَ يَوْمًا فَكُنَّا نَطْلِي وُجُوهَنَا بِالْوَرْسِ مِنَ الْكَلَفِ

நாங்கள் நி∴பாஸுக்கு நாற்பது நாட்கள் காத்திருப்போம். அந்த நேரத்தில் எங்களின் முகத்தை சிவந்த மஞ்சள் துணியில் மூடிக் கொண்டிருப்போம்.”

பல அறிஞர்களின் கருத்தின்படி அதிகப்பட்ச நி∴பாஸ் நாட்கள் நாற்பது நாட்கள் மட்டுமே. அதற்கு அதிகமாக இருந்தால், அதனை மாதவிடாய் அதிகபட்ச நாட்களுக்குப் பிறகு உள்ளதை எடுத்துக் கொள்வதைப் போல, இஸ்திஹாழாக என்று எடுத்துக் கொள்ள வேண்டும். சிலருக்கு உதிரப்போக்கு நின்று நின்று வந்தாலும், அதிகப்பட்சமான நாற்பது நாட்களை நி∴பாஸாக எடுத்துக் கொள்ள வேண்டும். எனினும், நாற்பது நாட்களைத் தாண்டினால், உதிரப் போக்கு விட்டுவிட்டு வந்தால், அதனை மாதவிடாய் வருவது போன்றுள்ள நாட்களுக்குப் பொருந்தியுள்ளதா என்று கவனத்தில் கொண்டு, அவ்வாறு இருந்தால், அதனை மாதவிடாய் இரத்தமாக எடுத்துக் கொள்ள வேண்டும். உதிரப் போக்கும் மாதவிடாய்த் தன்மையில் உதிரப்போக்கு ஒத்திருக்கிறா என்றும் கவனத்தில் கொள்ள வேண்டும். அவ்வாறு இல்லாமல் தொடர்ந்து உதிரப்போக்கு நாற்பது நாட்களைத் தாண்டி வந்தால், நாம் முன்னர் கூறியவாது இஸ்திஹாழாக எடுத்துக் கொள்ள வேண்டும்.

## ஹைழ் மற்றும் நி∴பாஸ் நாட்களில் செய்யக் கூடாதவை

1. கணவன் மனைவி உடலுறவு கொள்ளக் கூடாது.

ஸூரத்துல் பகரா (பசு மாடு)

**2:222** وَ يَسْـَٔلُوْنَكَ عَنِ الْمَحِيْضِ قُلْ هُوَ اَذًى فَاعْتَزِلُوْا النِّسَآءَ فِى الْمَحِيْضِ وَلَا تَقْرَبُوْهُنَّ حَتّٰى يَطْهُرْنَ فَاِذَا تَطَهَّرْنَ فَاْتُوْهُنَّ مِنْ حَيْثُ اَمَرَكُمُ اللّٰهُ اِنَّ اللّٰهَ يُحِبُّ التَّوَّابِيْنَ وَيُحِبُّ الْمُتَطَهِّرِيْنَ

**2:222.** மாதவிடாய் பற்றியும் உம்மிடம் வினவுகிறார்கள்; நீர் கூறும்: “அது (ஓர் உபாதையான) தீட்டு ஆகும்; ஆகவே மாதவிடாயின் போது பெண்களை விட்டும் விலகியிருங்கள்; அவர்கள் தூய்மையாகும் வரை அவர்களை அணுகாதீர்கள்; அவர்கள் தூய்மையடைந்த பின் அல்லாஹ் எப்படி கட்டளையிட்டிருக்கின்றானோ அதன்படி அவர்களிடம் செல்லுங்கள்; பாவங்களைவிட்டு மீள்பவர்களை நிச்சயமாக அல்லாஹ் நேசிக்கிறான்; இன்னும் தூய்மையாக இருப்போரையும் நேசிக்கின்றான்.”

அவர்கள் தூய்மையை அடையும்வரை அவர்களிடம் உடலுறவு கொள்ளமாட்டார்கள்.

இப்னு மாஜாஹ் 644

அனஸ் رَضِيَ الله عَنْهُ அறிவிப்பதாவது,

عَنْ أَنَسٍ، أَنَّ الْيَهُودَ، كَانُوا لاَ يَجْلِسُونَ مَعَ الْحَائِضِ فِي بَيْتٍ وَلاَ يَأْكُلُونَ وَلاَ يَشْرَبُونَ . قَالَ فَذُكِرَ ذَلِكَ لِلنَّبِيِّ ـ صلى الله عليه وسلم

فَأَنْزَلَ اللَّهُ {وَيَسْأَلُونَكَ عَنِ الْمَحِيضِ قُلْ هُوَ أَذًى فَاعْتَزِلُوا النِّسَاءَ فِي الْمَحِيضِ}

فَقَالَ رَسُولُ اللَّهِ صلى الله عليه وسلم ـ " اصْنَعُوا كُلَّ شَىْءٍ إِلاَّ الْجِمَاعَ "

“யூதர்கள் மாதவிடாய் உள்ள பெண்களுடன் வீட்டில் இருக்க மாட்டார்கள். அவர்களுடன் உணவும், பானமும் அருந்த மாட்டார்கள். இது ரஸுலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ அவர்களுக்கு அறிவிக்கப்பட்டது. அப்போது அல்லாஹ் இந்த வசனத்தை அருளினான்: “மாதவிடாய் பற்றியும் உம்மிடம் வினவுகிறார்கள்;. நீர் கூறும்; "அது (ஓர் உபாதையான) தீட்டு ஆகும்;. ஆகவே மாதவிடாயின் போது பெண்களை விட்டும் விலகியிருங்கள்.” உடலுறவைத் தவிர மற்ற எல்லாவற்றையும் செய்யலாம் என அவர்கள் கூறினார்கள்.”

உடலுறவைத் தவிர மனைவியுடன் வழக்கமாகச் செய்வதைப் போல் எல்லாற்றையும் செய்யலாம். துாய்மையை அடைந்தவுடன் பெண்கள் குளிப்பின் கடமையை நிறைவேற்றிய பிறகுதான் உடலுறவு கொள்ள வேண்டும். வெறுமனே மாதவிடாய் நின்ற துாய்மையுடன் உடலுறவு செய்யக் கூடாது. குளிப்பதற்கான சங்கடம் ஏதும் இருந்தால் மட்டும் தயம்மும் செய்தபிறகு உடலுறவு கொள்ளலாம். இந்த வழிமுறையை மீறி, குளிப்பு முடியாத நிலையில் உடலுறவு செய்து கொண்டால் அது மிகவும் பெரிய பாவமாகும். அதற்கு அவர்கள் தவ்பா செய்து விட்டு, ஒரு தீனார் (4.25 கிராம் தங்கம் அல்லது அரை தீனார் (2.125 கிராம் தங்கம்) அளவிற்கு ஸதகா செய்ய வேண்டும்.

இப்னு அப்பாஸ் رَضِـي الله عَنْهُ அறிவிப்பதாவது,

عَنِ ابْنِ عَبَّاسٍ، عَنِ النَّبِيِّ صلى الله عليه وسلم فِي الرَّجُلِ يَأْتِي امْرَأَتَهُ وَهِيَ حَائِضٌ يَتَصَدَّقُ بِدِينَارٍ أَوْ بِنِصْفِ دِينَارٍ .

“மாதவிடாய் உள்ள பெண்ணுடன் உடலுறவு கொண்ட மனிதர் ஒரு தீனால் அல்லது அரை தீனார் கொடுக்கவும்” என்று ரஸுலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ கூறியுள்ளார்கள்.

2. கணவன் அந்த நாட்களில் தலாக் சொல்லக் கூடாது:

அவ்வாறு தலாக் சொல்ல நாடினால், அவர்கள் துாய்மை அடையும் வரைக் காத்திருக்க வேண்டும்.

ஸுரத்துத் தலாஃக் (விவாகரத்து)

**65:1** يٰۤاَيُّهَا النَّبِىُّ اِذَا طَلَّقْتُمُ النِّسَآءَ فَطَلِّقُوْهُنَّ لِعِدَّتِهِنَّ وَاَحْصُوا الْعِدَّةَ ۚ وَاتَّقُوا اللّٰهَ رَبَّكُمْ ۚ لَا تُخْرِجُوْهُنَّ مِنْۢ بُيُوْتِهِنَّ وَلَا يَخْرُجْنَ اِلَّاۤ اَنْ يَّاْتِيْنَ بِفَاحِشَةٍ مُّبَيِّنَةٍ ؕ وَتِلْكَ حُدُوْدُ اللّٰهِ ؕ وَمَنْ يَّتَعَدَّ حُدُوْدَ اللّٰهِ فَقَدْ ظَلَمَ نَفْسَهٗ ؕ لَا تَدْرِىْ لَعَلَّ اللّٰهَ يُحْدِثُ بَعْدَ ذٰ لِكَ اَمْرًا

**65:1.** நபியே! நீங்கள் பெண்களைத் “தலாக்” சொல்வீர்களானால் அவர்களின் “இத்தா”வைக் கணக்கிட ஏற்ற வகையில் (மாதவிடாய் அல்லாத காலங்களில்) தலாக் கூறுங்கள். உங்கள் இறைவனாகிய அல்லாஹ்வை அஞ்சிக் கொள்ளுங்கள்; தவிர, (அப்பெண்கள்) பகிரங்கமான மானக்கேடான (காரியத்)தைச் செய்தாலன்றி அவர்களை அவர்களின் வீடுகளிலிருந்து நீங்கள் வெளியேற்றாதீர்கள்; அவர்களும் வெளியேறலாகாது; இவை அல்லாஹ் (விதிக்கும்) வரம்புகள் எவர் அல்லாஹ்வின் வரம்புகளை மீறுகிறாரோ, அவர் திடமாகத் தமக்குத் தாமே அநியாயம் செய்து கொள்கிறார்; (ஏனெனில், கூடி வாழ்வதற்காக) இதன் பின்னரும் அல்லாஹ் ஏதாவது ஒரு வழியை உண்டாக்கலாம் என்பதை அறியமாட்டீர்.

புஹாரி 5251 மற்றும் முஸ்லிம் 1471

அப்துல்லாஹ் இப்னு உமர் رَضِـي الله عَنْهُ அறிவிப்பதாவது,

عَنْ عَبْدِ اللَّهِ بْنِ عُمَرَ ـ رضى الله عنهما ـ أَنَّهُ طَلَّقَ امْرَأَتَهُ وَهْىَ حَائِضٌ عَلَى عَهْدِ رَسُولِ اللَّهِ صلى الله عليه وسلم فَسَأَلَ عُمَرُ بْنُ الْخَطَّابِ رَسُولَ اللَّهِ صلى الله عليه وسلم عَنْ ذَلِكَ فَقَالَ رَسُولُ اللَّهِ صلى الله عليه

وسلم " مُرْهُ فَلْيُرَاجِعْهَا، ثُمَّ لِيُمْسِكْهَا حَتَّى تَطْهُرَ ثُمَّ تَحِيضَ، ثُمَّ تَطْهُرَ، ثُمَّ إِنْ شَاءَ أَمْسَكَ بَعْدُ وَإِنْ شَاءَ طَلَّقَ قَبْلَ أَنْ يَمَسَّ، فَتِلْكَ الْعِدَّةُ الَّتِي أَمَرَ اللَّهُ أَنْ تُطَلَّقَ لَهَا النِّسَاءُ ".

**5252.** அனஸ் பின் சீரின் (ரஹ்) அவர்கள் கூறியதாவது: இப்னு உமர் (ரலி) அவர்கள் கூறினார்கள்: மாதவிடாயிலிருந்த என் மனைவியை நான் மணவிலக்குச் செய்து விட்டேன். ஆகவே/ இதுகுறித்து (என் தந்தை) உமர் (ரலி) அவர்கள் நபி (ஸல்) அவர்களிடம் கூறினார்கள். அப்போது நபி(ஸல்) அவர்கள் (உங்கள் புதல்வர்) தம் மனைவியைத் திரும்ப அமைத்துக் கொள்ளட்டும்! என்று கூறினார்கள். அறிவிப்பாளர் அனஸ்பின் சீன் (ரஹ்) அவர்கள் தொடர்ந்து கூறுகின்றார்கள்: நான் இப்னு உமர் (ரலி) அவர்களிடம் (மாதவிடாயின்போது சொல்லப்பட்ட இந்த தலாக்) ஒரு தலாக்காகக் கருதப்படுமா என்று கேட்டேன். அதற்கு இப்னு உமர் (ரலி) அவர்கள் (தலாக்காகக் கருதப்படாமல்) வேறென்ன என்று கேட்டார்கள். இப்னு உமர் (ரலி) அவர்களிடமிருந்து யூனுஸ் பின் ஜுபைர் (ரஹ்) அவர்கள் அறிவித்துள்ள தகவலில் (பின்வருமாறு) காணப்படுகிறது: நபி (ஸல்) அவர்கள் உமர் (ரலி) அவர்களிடம் (உங்கள் புதல்வர்) தம் மனைவியைத் திரும்ப அமைத்துக் கொள்ளுமாறு அவருக்கு நீங்கள் கட்டளையிடுங்கள் என்று கூறினார்கள். நான் இப்னு உமர் (ரலி) அவாகளிடம் (மாதவிடாய்ப் பருவத்தில்) செய்யப்பட்ட இந்த மணவிலக்கு) மணவிலக்காகக் கருதப்படுமா என்று கேட்டேன். அதற்கு அவர்கள் அவன் (தன் கடமையை நிறைவேற்ற) இயலாமலும் (அதை) அறிந்து கொள்ளாமலும் இருந்து விட்டால் (மணவிலக்கு நிகழாமல் போய்விடுமா) என்ன என்று கேட்டாகள். Book : 68 - **ஸஹீஹுல் புகாரி**

**2918.** அப்துல்லாஹ் பின் உமர் (ரலி) அவர்கள் கூறியதாவது: நான் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களது காலத்தில் என் மனைவியை (மாதவிடாய் காலத்தில்) மணவிலக்குச் செய்துவிட்டேன். ஆகவே, (என் தந்தை) உமர் பின் அல்கத்தாப் (ரலி) அவர்கள் இதைப் பற்றி அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களிடம் வினவினார்கள். அப்போது அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் என் தந்தையிடம், "உங்கள் புதல்வருக்குக் கட்டளையிடுங்கள்; அவர் தம் மனைவியைத் திரும்ப அமைத்துக்கொள்ளட்டும்! பிறகு அவள் மாதவிடாயிலிருந்து தூய்மையடைந்து, அடுத்து மீண்டும் அவளுக்கு மாதவிடாய் ஏற்பட்டுப் பின்னர் அதிலிருந்து அவள் தூய்மையடையும்வரை அவளை (தம்மிடமே) விட்டுவைக்கட்டும். பிறகு அவர் விரும்பினால், (இரண்டாவது மாதவிடாயிலிருந்து தூய்மையான) பின்னர் தம்மிடமே (தம் மனைவியாக) வைத்திருக்கட்டும். அவர் விரும்பினால் அவளுடன் தாம்பத்திய உறவு கொள்வதற்கு முன்பாக அவளை மணவிலக்குச் செய்யட்டும். (மாதவிடாயிலிருந்து தூய்மையான) இந்தக் காலகட்டமே மனைவியரை மணவிலக்குச் செய்ய அல்லாஹ் (2:228ஆவது வசனத்தில்) அனுமதித்துள்ள ("இத்தா" எனும் காத்திருப்புக் காலத்தைக் கணக்கிட்டுக்கொள்வதற்கு ஏற்ற) கால கட்டமாகும்" என்று சொன்னார்கள். Book: 18 - **ஸஹீஹ் முஸ்லிம்**

**3.** தொழக் கூடாது:

புஹாரி 320

அன்னை ஆயிஷா رَضِيَ اللهُ عَنْهَا அறிவிப்பதாவது,

عَنْ عَائِشَةَ، أَنَّ فَاطِمَةَ بِنْتَ أَبِي حُبَيْشٍ، كَانَتْ تُسْتَحَاضُ فَسَأَلَتِ النَّبِيَّ صلى الله عليه وسلم فَقَالَ " ذَلِكِ عِرْقٌ، وَلَيْسَتْ بِالْحَيْضَةِ، فَإِذَا أَقْبَلَتِ الْحَيْضَةُ فَدَعِي الصَّلاَةَ، وَإِذَا أَدْبَرَتْ فَاغْتَسِلِي وَصَلِّي ".

**320.** 'பாத்திமா பின்த் அபீ ஹுபைஷ் என்ற பெண் உதிரப் போக்குடையவராக இருந்தார். நபி(ஸல்) அவர்களிடம் அப்பெண் (இது குறித்து) கேட்டதற்கு நபி(ஸல்) அவர்கள் 'அது ஒரு நரம்பு நோய். அது மாதவிடாய் இரத்தமன்று. மாதவிடாய் ஏற்படும்போது தொழுகையைவிட்டுவிடு. மாதவிடாய்க் காலம் கழிந்ததும் குளித்துவிட்டுத் தொழுது கொள்' என்று கூறினார்கள்' என ஆயிஷா(ரலி) அறிவித்தார். Book: 6 - **ஸஹீஹுல் புகாரி**

இவ்வாறு மாதவிடாய் நாட்களில் தொழக்கூடாது. தொழுகையைக் களாவும் செய்ய வேண்டியதில்லை.

4. நோன்பு நோற்கக்கூடாது.

எனினும் விட்டுப் போன நோன்புகளைத் துாய்மையடைந்த பிறகு களா செய்ய வேண்டும். தொழுகையை களா செய்ய வேண்டியதில்லை என்பததை முன்னர் கூறிவிட்டோம்.

புஹாரி 304

அபு ஸைத் அல் குத்ரி رَضِيَ الله عَنْهَا அறிவித்த ஹதீதின் ஒரு பகுதி

يَا رَسُولَ اللَّهِ قَالَ " أَلَيْسَ شَهَادَةُ الْمَرْأَةِ مِثْلَ نِصْفِ شَهَادَةِ الرَّجُلِ ". قُلْنَ بَلَى. قَالَ " فَذَلِكَ مِنْ نُقْصَانِ عَقْلِهَا، أَلَيْسَ إِذَا حَاضَتْ لَمْ تُصَلِّ وَلَمْ تَصُمْ ". قُلْنَ بَلَى. قَالَ " فَذَلِكَ مِنْ نُقْصَانِ دِينِهَا ".

**304.** 'ஹஜ்ஜுப் பெருநாளன்றோ நோன்புப் பெருநாளன்றோ தொழும் திடலிற்கு நபி(ஸல்) அவர்கள் சென்று கொண்டிருந்தபோது சில பெண்களுக்கு அருகே அவர்கள் சென்று, 'பெண்கள் சமூகமே! தர்மம் செய்யுங்கள்! ஏனெனில், நரக வாசிகளில் அதிகமாக இருப்பது நீங்களே என எனக்குக் காட்டப்பட்டது' என்று கூறினார்கள். 'இறைத்தூதர் அவர்களே! ஏன்' என்று அப்பெண்கள் கேட்டதற்கு, 'நீங்கள் அதிகமாகச் சாபமிடுகிறீர்கள்; கணவனுக்கு நன்றி கெட்டவர்களாக இருக்கிறீர்கள்; மார்க்கக் கடமையும் அறிவும் குறைந்தவர்களாக இருந்து கொண்டு மன உறுதியான கணவனின் புத்தியை மாற்றி விடக்கூடியவர்களாக உங்களை விட வேறு யாரையும் நான் காணவில்லை' என்று இறைத்தூதர்(ஸல்) அவர்கள் கூறியபோது 'இறைத்தூதர் அவர்களே! எங்களுடைய மார்க்கக் கடமையும் எங்களுடைய அறிவும் எந்த அடிப்படையில் குறைவாக உள்ளன' என்று பெண்கள் கேட்டனர். 'ஒரு பெண்ணின் சாட்சி ஓர் ஆணின் சாட்சியில் பாதியாகக் கருதப்படவில்லையா?' என்று நபி(ஸல்) அவர்கள் கேட்டதற்கு, 'ஆம்' என அப்பெண்கள் பதில் கூறினர். 'அதுதான் அவர்கள் அறிவு குன்றியவர்கள் என்பதைக் காட்டுகிறது; ஒரு பெண்ணிற்கு மாதவிடாய் ஏற்பட்டால் அவள் தொழுகையையும் நோன்பையும்விட்டு விடுவதில்லையா?' என்று நபி(ஸல்) அவர்கள் கேட்டதற்கும் 'ஆம்!' எனப் பெண்கள் பதில் கூறினர். 'அதுதான் பெண்கள் மார்க்கக் கடமையில் குறைவானவர்களாக இருக்கின்றனர் என்பதற்கு ஆதாரமாகும்' என்று நபி(ஸல்) கூறினார்கள்' என அபூ ஸயீதுல் குத்ரி(ரலி) அறிவித்தார். Book : 6 - **ஸஹீஹுல் புகாரி**

நோன்பு திறக்க சில நிமிடங்களுக்குள் மாதவிடாய் வந்தால், அந்த நோன்பு கூடாததாகிவிடும். அதனைக் களா செய்ய வேண்டும்.

5. பள்ளிவாசலுக்குள் தங்குவது

பள்ளிவாசலைக் கடந்து செல்வதற்கு அனுமதியுண்டு. இது குறித்து முன்னர் குளிப்பு கடமை பற்றிய பாடதில் கூறப்பட்டுள்ளது.

அன்னை ஆயிஷா رَضِيَ الله عَنْهَا அறிவிப்பதாவது,

فَقَالَ {مَا يُبْكِيكِ}. قُلْتُ لَوَدِدْتُ وَاللَّهِ أَنِّي لَمْ أَحُجَّ الْعَامَ. قَالَ {لَعَلَّكِ نُفِسْتِ}. قُلْتُ نَعَمْ. قَالَ " فَإِنَّ ذَلِكَ شَىْءٌ كَتَبَهُ اللَّهُ عَلَى بَنَاتِ آدَمَ، فَافْعَلِي مَا يَفْعَلُ الْحَاجُّ، غَيْرَ أَنْ لاَ تَطُوفِي بِالْبَيْتِ حَتَّى تَطْهُرِي ".

நாங்கள் ஹஜ் செல்லும்போது, எனக்கு மாதவிடாய் ஏற்பட்டதால் அழுது கொண்டிருந்தேன். ரஸுலுல்லாஹ் صَلَّى الله عَلَيْهِ وَسَلَّمَ, "ஏன் அழுகிறாய்?" என வினவினார்கள். நான் கூறினேன், "நான் ஹஜ் செய்ய முடியாது என நினைக்கிறேன்." அவர்கள் வினவினார்கள், "உமக்கு மாதவிடாய் வந்திருக்கலாம்." நான், "ஆம்." என்றேன். "இது அல்லாஹ் ஆதமுடைய பெண்மக்களுக்கு ஏற்படுத்திய விதியாகும். எனவே நீர் சுத்தமாகும் வரை க.்.பாவைத் தவா.்.ப் செய்வது தவிர மற்ற அனைத்து ஹஜ்ஜுக் கடமைகளையும் நிறைவேற்றலாம்."

இந்த விஷயம் முஸ்லிம் 1211லும் பதியப்பட்டுள்ளது.

6. அசுத்தமான முறையில் குர்ஆன் முஸ்ஹஃபைத் தொடக்கூடாது. குர்ஆன் முழுவதும் அல்லது சில அத்தியாயம் அல்லது வசனங்கள் மட்டும் இருந்தால்தான் தொடக்கூடாது. ஆனால் குர்ஆன் மொழியாக்கம் (தர்ஜுமாஹ்) மற்றும் விரிவுரை (தஃப்ஸீர்) ஆகியவற்றைத் தொடலாம்.

இவ்வாறு இந்த நாட்களில் மனைவியரிடம் உடலுறவு மட்டும் தான் தடுக்கப்பட்டுள்ளது. உறவாடுவது தடுக்கப்படவில்லை. அதுபோல் திக்ரு செய்வது, துஆ செய்வது, குர்ஆன் ஓதுவது, தவாஃப் தவிர மற்ற ஹஜ் காரியங்கள் செய்வது ஆகியன செய்யலாம். இப்போது ஸஃபா மற்றும் மர்வா பள்ளிவாசலுக்குள் வந்துவிட்டதால் ஸயீ செய்வதும் தடுக்கப்பட்டதாக ஆகிவிட்டது. பள்ளிவாசலுக்குள் செல்லக் கூடாது என்பதுதான் அதற்குக் காரணம்.

## இஸ்திஹாழா பற்றிய விவரம்

இது கருப்பையின் இரத்த நாளங்களிலிருந்து வரும் இரத்தமாகும். மாதவிடாய் இரத்தம் அல்ல. மாதவிடாய் இரத்தம் குறிப்பிட்ட நாட்கள் தாம் இருக்கும். அதற்குப் பிறகு வரும் இரத்தத்தை இஸ்திஹாழா இரத்தம் என்று என்று எடுத்துக் கொள்ள வேண்டும். இதன் இரத்தம் கட்டியாக இல்லாமலும், துற்நாற்றம் இல்லாமலும் இருக்கும்.

புஹாரி 320

அன்னை ஆயிஷா رَضِيَ اللّٰه عَنْهَا அறிவிப்பதாவது,

عَنْ عَائِشَةَ، أَنَّ فَاطِمَةَ بِنْتَ أَبِي حُبَيْشٍ، كَانَتْ تُسْتَحَاضُ فَسَأَلَتِ النَّبِيَّ صلى الله عليه وسلم فَقَالَ " ذَلِكِ عِرْقٌ، وَلَيْسَتْ بِالْحَيْضَةِ، فَإِذَا أَقْبَلَتِ الْحَيْضَةُ فَدَعِي الصَّلاَةَ، وَإِذَا أَدْبَرَتْ فَاغْتَسِلِي وَصَلِّي ".

**320.** 'பாத்திமா பின்த் அபீ ஹுபைஷ் என்ற பெண் உதிரப் போக்குடையவராக இருந்தார். நபி(ஸல்) அவர்களிடம் அப்பெண் (இது குறித்து) கேட்டதற்கு நபி(ஸல்) அவர்கள் 'அது ஒரு நரம்பு நோய். அது மாதவிடாய் இரத்தமன்று. மாதவிடாய் ஏற்படும்போது தொழுகையைவிட்டுவிடு. மாதவிடாய்க் காலம் கழிந்ததும் குளித்துவிட்டுத் தொழுது கொள்' என்று கூறினார்கள்' என ஆயிஷா(ரலி) அறிவித்தார். Book: 6 - **ஸஹீஹுல் புகாரி**

## இஸ்திஹாழாவின் சட்டங்கள்

சிலருக்கு ஒவ்வொரு மாதமும் ஒரே அளவிற்கு குறிப்பட்ட நாட்கள் மாதவிடாய் ஒழுங்காக வரும். இப்படிப்பட்டவர்களுக்கு உதிரப் போக்கின் நாட்கள் வழக்கமான நாட்களைத் தாண்டிச் சென்றால், அப்படிப்பட்ட நிலையில் அந்த இரத்தம் இஸ்திஹாழாவின் தன்மையில் இருப்பதாகத் தெரிந்தால், தங்களுக்கு மாதவிடாய் முடிந்துவிட்டதாக எடுத்துக் கொண்டு, குளித்து விட்டு உடனே தொழுகையை ஆரம்பிக்க வேண்டும்.

அவ்வாறில்லாமல் மாதவிடாய் நாட்கள் குறிப்பிட்டு ஒழுங்கில்லாமல் வந்தால், அவர்களின் சட்டமாவது, அதிகப்பட்ச நாட்களான பதினைந்து நாட்கள் வரை காத்திருக்க வேண்டும். அந்த நாட்களைத் தாண்டும் நிலையில் உதிரப் போக்கு வந்தால் அதனை இஸ்திஹாழாவாக எடுத்துக் கொள்ள வேண்டும்.

இதைப் போல நிஃபாஸின் காலமான நாற்பது நாட்களுக்கு அதிகமாக உதிரப்போக்கு இருந்தாலும் அதனை இஸ்திஹாழாக எடுத்துக் கொள்ள வேண்டும்.

இஸ்திஹாழா இரத்தப் போக்குக்கு மாதவிடாய் காலத்து வரைமுறைகள் பொருந்தாது. இவர்கள் உடனேயே குளித்துவிட்டு தொழுகையை ஆரம்பித்துவிட வேண்டும். நோன்பினையும் நோற்க வேண்டும். ஒவ்வொரு தொழுகைக்கும் தனித்தனியாக உளூ செய்து கொள்ள வேண்டும்.

**Fiqh 16 - Laws Related to Prayer 1 - Prayer Times for Five Prayers**

# ஃபிக்ஹ் வகுப்பு 16 - தொழுகை தொடர்பான சட்டங்கள் 1 - ஐவேளை தொழுகை நேரங்கள்

**ஆசிரியர்: அஷ் ஷெய்க் உவைஸ் உமரி நஸீரி**

தொழுகை சம்பந்தப்பட்ட சட்டங்கள் இந்த பகுதியிலிருந்து கூறப்படுகிறது. தொழுகை மற்றும் நோன்பு ஆகியன முந்தைய சமுதாயத்தினருக்கு விதிக்கப்பட்டதைப் போல, நமது சமுதாயத்தினருக்கும் விதிக்கப்பட்டுள்ளது.

**ஸூரத்துல்ஆல இம்ரான் (இம்ரானின் சந்ததிகள்)**

3:39 فَنَادَتْهُ الْمَلٰٓٮِٕكَةُ وَهُوَ قَآٮِٕمٌ يُّصَلِّىْ فِى الْمِحْرَابِ ۙ اَنَّ اللّٰهَ يُبَشِّرُكَ بِيَحْيٰى مُصَدِّقًۢا بِكَلِمَةٍ مِّنَ اللّٰهِ وَسَيِّدًا وَّحَصُوْرًا وَّنَبِيًّا مِّنَ الصّٰلِحِيْنَ

**3:39.** அவர் தம் அறையில் நின்று தொழுது கொண்டிருந்தபோது, மலக்குகள் அவரை சப்தமாக அழைத்து: "நிச்சயமாக அல்லாஹ் யஹ்யா (எனும் பெயருள்ள மகவு குறித்து) நன்மாராயங் கூறுகின்றான்; அவர் அல்லாஹ்விடமிருந்து ஒரு வார்த்தையை மெய்ப்பிப்பவராகவும், கண்ணியமுடையவராகவும், ஒழுக்க நெறி பேணிய (தூய)வராகவும், நல்லோர்களிலிருந்தே நபியாகவும் இருப்பார்" எனக் கூறினர்.

ஜகரிய்யாஹ் عَلَيْهِ السَّلَامُ தொழுததை இந்த வசனம் குறிப்பிடுகிறது.

**ஸூரத்து யூனுஸ் (நபி)**

10:87 وَاَوْحَيْنَاۤ اِلٰى مُوْسٰى وَاَخِيْهِ اَنْ تَبَوَّاٰ لِقَوْمِكُمَا بِمِصْرَ بُيُوْتًا وَّاجْعَلُوْا بُيُوْتَكُمْ قِبْلَةً وَّاَقِيْمُوا الصَّلٰوةَ ؕ وَبَشِّرِ الْمُؤْمِنِيْنَ

**10:87.** ஆகவே, மூஸாவுக்கும், அவருடைய சகோதரருக்கும்: "நீங்கள் இருவரும் உங்கள் சமூகத்தாருக்காக பட்டிணத்தில் வீடுகளை அமைத்துக் கொடுங்கள்; உங்களுடைய அவ்வீடுகளையே பள்ளிகளாக (கிப்லாவாக) ஆக்கி அவற்றில் தவறாமல் தொழுகையை நிலைநிறுத்துங்கள் - மேலும், நம்பிக்கை கொண்டவர்களுக்கு நற்செய்திகளும் கூறுவீராக!" என்று வஹீ அறிவித்தோம்.

இந்த வசனம் மூஸா عَلَيْهِ السَّلَامُ மற்றும் அவரது சகோதரர் ஹாரூன் عَلَيْهِ السَّلَامُ ஆகியோருக்கு அல்லாஹ் தொழக் கட்டளையிட்டதைக் கூறுகிறது.

**ஸூரத்து இப்ராஹீம்**

14:40 رَبِّ اجْعَلْنِىْ مُقِيْمَ الصَّلٰوةِ وَمِنْ ذُرِّيَّتِىْ ‌ۖ رَبَّنَا وَتَقَبَّلْ دُعَآءِ

**14:40.** ("என்) இறைவனே! தொழுகையை நிலைநிறுத்துவோராக என்னையும், என்னுடைய சந்ததியிலுள்ளோரையும் ஆக்குவாயாக! எங்கள் இறைவனே! என்னுடைய பிரார்த்தனையையும் ஏற்றுக் கொள்வாயாக!"

இந்த வசனம் இப்ராஹீம் عَلَيْهِ السَّلَامُ மற்றும் அவர்களின் சந்ததியினரின் தொழுகையைக் குறிக்கிறது. இவ்வாறு முந்தைய சமுதாயத்தினருக்கு வழங்கப்பட்ட வணக்கமாகும். அதைப் போலவே, ரஸூலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ அவர்களின் சமுதாயத்தினராகிய நமக்கும் தொழுகை

கடமையாக்கப்பட்டது. நபித்துவம் கிடைத்த பத்தாவது, அல்லது பதினோராவது வருடம் தொழுகை கடமையாக்கப்பட்டது. ரஸூலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ அவர்கள் மி.:.ராஜ் பயணத்தின்போது தொழுகை கடமையாக்கப்பட்டது.
எனினும் அதற்கு முன்னர் முஸ்லிம்கள் காலையிலும், மாலையிலும் இரண்டிரண்டு ரகஅத்துக்கள் தொழுது வந்தார்கள். மொத்தம் நான்கு ரகஅத்துக்கள் தொழுதார்கள். மி.:.ராஜ் பயணத்திற்குப் பிறகுதான் ஐவேளைத் தொழுகை கடமையாக்கப்பட்டது. ஆரம்பத்தில் எல்லா ஐந்து வேளைகளிலும் (பஜ்ர், லுஹர், அஸர், மக்ரிப் மற்றும் இஷா) இரண்டிரண்டு ரகஅத்துக்கள் தாம் தொழுது வந்தார்கள். ரஸூலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ மதினாவுக்கு ஹிஜ்ரத் செய்த பிறகுதான், நாம் இப்போது தொழுவதைப் போல் (பஜ்ர் -2, லுஹர் -4, அஸர் -4, மக்ரிப் -3 மற்றும் இஷா -4) என தொழ அறிவுறுத்தப்பட்டார்கள்.
அது போலவே ஆரம்பத்தில், பலஸ்தீனத்தின் ஜெருஸலத்தில் உள்ள பைத்துல் முகத்திஸ் பள்ளிவாசலைத்தான் கிப்லா திரையாகத் தொழுது வந்தார்கள். மதினாவுக்கு வந்து சில மாதங்கள் பிறகுதான், மக்காவிலுள்ள மஸ்ஜிதுல் ஹராம் க.:.பா, இகிப்லாவாக மாற்றப்பட்டது.

## தொழுகையின் சிறப்புகள்

தொழுகையானது இஸ்லாத்தின் இரண்டாவது தூண் - அடிப்படை - ஆகும். இஸ்லாத்தின் அனைத்து கடமைகளும் பூமியில் இருக்கும் போது கடமையாக்கப்பட்டது. ஆனால் தொழுகையானது வானில் மி.:.ராஜில் கடமையாக்கப்பட்ட ஒன்றாகும்.
நஸாயி 463
அப்துல்லாஹ் இப்னு புரைதாஹ் رَضِي الله عَنْهُ அறிவிப்பதாவது,

نْ عَبْدِ اللَّهِ بْنِ بُرَيْدَةَ، عَنْ أَبِيهِ، قَالَ قَالَ رَسُولُ اللَّهِ صلى الله عليه وسلم " إِنَّ الْعَهْدَ الَّذِي بَيْنَنَا وَبَيْنَهُمُ الصَّلاَةُ فَمَنْ تَرَكَهَا فَقَدْ كَفَرَ "

எனது தகப்பனார் கூறினார், “ரஸூலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ கூறியதாவது,
“நமக்கும், (கா.:.பிர்களான) அவர்களுக்கும் இடையில் உள்ளது தொழுகைதான். யார் தொழுகையை விட்டுவிடுகிறார்களோ, அவர்கள் கு.:.ப்ரை செய்துவிட்டார்.”
அபு தாவூத் 864
அபு ஹுரைராஹ் رَضِي الله عَنْهُ அறிவிப்பதாவது,

قَالَ يُونُسُ أَحْسِبُهُ ذَكَرَهُ عَنِ النَّبِيِّ صلى الله عليه وسلم قَالَ " إِنَّ أَوَّلَ مَا يُحَاسَبُ النَّاسُ بِهِ يَوْمَ الْقِيَامَةِ مِنْ أَعْمَالِهِمُ الصَّلاَةُ

யூனுஸ் رَضِي الله عَنْهُ அறிவிப்பதாவது, “ரஸூலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ கூறியதாவது,
“கியாம நாளில், மக்கள் செய்த அமல்களில் முதலில் கேட்கப்படும் அமல் தொழுகையைப் பற்றிதான்.”
எனவே தொழுகை மிக அவசியமான மற்றும் சிறப்பான வணக்கமாகும்.
அபு தாவூத் 495
அப்துல்லாஹ் இப்னு அம்ரு இப்னு ஆஸ் رَضِي الله عَنْهُ அறிவிப்பதாவது,

قَالَ رَسُولُ اللَّهِ صلى الله عليه وسلم " مُرُوا أَوْلاَدَكُمْ بِالصَّلاَةِ وَهُمْ أَبْنَاءُ سَبْعِ سِنِينَ وَاضْرِبُوهُمْ عَلَيْهَا وَهُمْ أَبْنَاءُ عَشْرِ سِنِينَ وَفَرِّقُوا بَيْنَهُمْ فِي الْمَضَاجِعِ " .

ரஸுலுல்லாஹ் صَلَّى الله عَلَيْهِ وَسلَّمَ கூறியதாவது,

“உங்கள் குழந்தைகள் ஏழு வயதானபோது, தொழும்படி ஏவுங்கள். பத்து வயதானால் (தொழுவுமாறு) அடியுங்கள். அவர்களுக்கு தனியாக படுக்கையைத் தயார் செய்யுங்கள்.”

குழந்தைகளின் மீது அதிக அன்பு கொண்ட ரஸுலுல்லாஹ் صَلَّى الله عَلَيْهِ وَسلَّمَ இந்த ஹதீதில் அடிக்குமாறு கூறிய காரணம், அவர்களுக்குத் தொழுகை கடமையாக ஆகவிட்டபின் ஒரு தொழுகையைக் கூடத் தவறாமல் தொழும் பழக்கத்தை சிறுவயதிலிருந்தே ஏற்படுத்துவதற்குத்தான்.

## கடமையான தொழுகையின் நேரங்கள்

ஐவேளைத் தொழுகைகளை குறிப்பிடப்பட்ட நேரங்களில் செய்ய வேண்டும் என்று அல்லாஹ் கட்டளையிட்டுள்ளான்.

ஸூரத்துன்னிஸாவு (பெண்கள்)

**4:103** فَاِذَا قَضَيْتُمُ الصَّلٰوةَ فَاذْكُرُوا اللّٰهَ قِيَامًا وَّقُعُوْدًا وَّعَلٰى جُنُوْبِكُمْ‌ ۚ فَاِذَا اطْمَاْنَنْتُمْ فَاَقِيْمُوا الصَّلٰوةَ‌ ۚ اِنَّ الصَّلٰوةَ كَانَتْ عَلَى الْمُؤْمِنِيْنَ كِتٰبًا مَّوْقُوْتًا

**4:103.** நீங்கள் தொழுகையை முடித்துக் கொண்டால், நின்ற நிலையிலும், இருந்த இருப்பிலும், விலாப்புறங்களின் மீது (படுத்திருக்கும்) நிலையிலும் அல்லாஹ்வை திக்ரு செய்யுங்கள்; பின்னர் நீங்கள் (ஆபத்தினின்று விடுபட்டு) அமைதியான நிலைக்கு வந்ததும், முறைப்படி தொழுது கொள்ளுங்கள் - ஏனெனில், நிச்சயமாக குறிப்பிட்ட நேரங்களில் தொழுகையை நிறைவேற்றுவது முஃமின்களுக்கு விதியாக்கப் பெற்றுள்ளது.

ரஸுலுல்லாஹ் صَلَّى الله عَلَيْهِ وَسلَّمَ அவர்களுக்கு, ஜிப்ரயீல் عَلَيْهِ السَّلاَمُ அவர்கள் ஒவ்வொரு தொழுகையையும் குறிப்பிட்ட ஒரு நேரத்தில் தொழுது காட்டிச் சென்றார்கள். மறு நாள் மீண்டும் வந்து மறுபடியும் எல்லா தொழுகைகளையும் முந்தைய நாள் அல்லாத வேறு குறிப்பட்ட நேரங்களில் திரும்பவும் தொழுது காட்டினார்கள். பின்னர் முந்தைய நாள் நேரம், அந்தத் தொழுகையின் ஆரம்ப நேரம் எனவும், அடுத்த நாள் தொழுத நேரம், அத்தொழுகை முடிகக் வேண்டிய கடைசி நேரம் என்றும் கூறிச் சென்றார்கள்.

முஸ்லிம் 613

ஸுலைமான் இப்னு புரைதாஹ் رَضِي الله عَنْهُ தம் தந்தையை மேற்கோள் காட்டி இந்த ஹதீதினை அறிவிக்கிறார்கள்,

عَنْ سُلَيْمَانَ بْنِ بُرَيْدَةَ، عَنْ أَبِيهِ، عَنِ النَّبِيِّ صلى الله عليه وسلم أَنَّ رَجُلاً سَأَلَهُ عَنْ وَقْتِ الصَّلاَةِ فَقَالَ لَهُ " صَلِّ مَعَنَا هَذَيْنِ " . يَعْنِي الْيَوْمَيْنِ فَلَمَّا زَالَتِ الشَّمْسُ أَمَرَ بِلاَلاً فَأَذَّنَ ثُمَّ أَمَرَهُ فَأَقَامَ الظُّهْرَ ثُمَّ أَمَرَهُ فَأَقَامَ الْعَصْرَ وَالشَّمْسُ مُرْتَفِعَةٌ بَيْضَاءُ نَقِيَّةٌ ثُمَّ أَمَرَهُ فَأَقَامَ الْمَغْرِبَ حِينَ غَابَتِ الشَّمْسُ ثُمَّ أَمَرَهُ فَأَقَامَ الْعِشَاءَ حِينَ غَابَ الشَّفَقُ ثُمَّ أَمَرَهُ فَأَقَامَ الْفَجْرَ حِينَ طَلَعَ الْفَجْرُ فَلَمَّا أَنْ كَانَ الْيَوْمُ الثَّانِي أَمَرَهُ فَأَبْرَدَ بِالظُّهْرِ فَأَبْرَدَ بِهَا فَأَنْعَمَ أَنْ يُبْرِدَ بِهَا وَصَلَّى الْعَصْرَ وَالشَّمْسُ مُرْتَفِعَةٌ أَخَّرَهَا فَوْقَ الَّذِي كَانَ وَصَلَّى الْمَغْرِبَ قَبْلَ أَنْ يَغِيبَ الشَّفَقُ وَصَلَّى الْعِشَاءَ بَعْدَ مَا ذَهَبَ ثُلُثُ اللَّيْلِ وَصَلَّى الْفَجْرَ فَأَسْفَرَ بِهَا ثُمَّ قَالَ " أَيْنَ السَّائِلُ عَنْ وَقْتِ الصَّلاَةِ " . فَقَالَ الرَّجُلُ أَنَا يَا رَسُولَ اللَّهِ . قَالَ " وَقْتُ صَلاَتِكُمْ بَيْنَ مَا رَأَيْتُمْ " .

**1078.** புரைதா (ரலி) அவர்கள் கூறியதாவது: நபி (ஸல்) அவர்களிடம் ஒரு மனிதர் தொழுகையின் நேரம் குறித்துக் கேட்டார். அவரிடம் நபி (ஸல்) அவர்கள், "நம்முடன் இவ்விரு நாட்கள்

தொழுங்கள்!" என்று கூறினார்கள். (அன்றைய தினம்) சூரியன் உச்சியிலிருந்து சாய்ந்தபோது, பிலால் (ரலி) அவர்களிடம் பாங்கு(ம் பிறகு இகாமத்தும்) சொல்லுமாறு உத்தரவிட பிலால் (ரலி) அவர்கள் லுஹ்ர் தொழுகைக்காக இகாமத் சொன்னார்கள். பிறகு பிலால் (ரலி) அவர்களிடம் (அஸ்ர் தொழுகைக்காக பாங்கும் இகாமத்தும் கூறுமாறு) உத்தரவிட, பிலால் (ரலி) அவர்கள் அஸ்ர் தொழுகைக்காக இகாமத் சொன்னார்கள். அப்போது சூரியன் ஒளிமிக்கதாகவும் தெளிவாகவும் (வானில்) தெரிந்தது. பிறகு பிலால் (ரலி) அவர்களிடம் (மஃக்ரிப் தொழுகைக்காக பாங்கும் இகாமத்தும் கூறுமாறு) உத்தரவிட, பிலால் (ரலி) அவர்கள் சூரியன் மறையும்போது மஃக்ரிப் தொழுகைக்காக இகாமத் சொன்னார்கள். பிறகு பிலால் (ரலி) அவர்களிடம் (இஷாத் தொழுகைக்காக பாங்கும் இகாமத்தும் கூறுமாறு) உத்தரவிட, பிலால் (ரலி) அவர்கள் செம்மேகம் மறையும்போது இஷாத் தொழுகைக்காக இகாமத் சொன்னார்கள். பிறகு பிலால் (ரலி) அவர்களிடம் (ஃபஜ்ர் தொழுகைக்காக பாங்கும் இகாமத்தும் கூறுமாறு) உத்தரவிட பிலால் (ரலி) அவர்கள் வைகறை புலரும்போது ஃபஜ்ர் தொழுகைக்காக இகாமத் சொன்னார்கள். இரண்டாம் நாள் நபி (ஸல்) அவர்கள் பிலால் (ரலி) அவர்களிடம் வெப்பம் தணிந்த பின் லுஹ்ர் தொழுகைக்கு (பாங்கும் இகாமத்தும் கூறுமாறு) உத்தரவிட, பிலால் (ரலி) அவர்கள் வெப்பம் தணிந்த பின், நன்கு வெப்பம் குறைந்திருந்த வேளையில் இகாமத் சொன்னார்கள். பின்னர் சூரியன் உயர்ந்திருக்கவே அஸ்ர் தொழுதார்கள். முந்திய நாளைவிடச் சிறிது நேரம் தாமதப்படுத்தினார்கள். செம்மேகம் மறைவதற்கு முன் மஃக்ரிப் தொழுதார்கள். இரவின் மூன்றில் ஒரு பகுதி சென்ற பின் இஷாத் தொழுதார்கள். நன்கு வெளிச்சம் வந்த பின் (சூரிய உதயத்துக்கு முன்) ஃபஜ்ர் தொழுதார்கள். பிறகு "தொழுகை நேரம் குறித்து என்னிடம் வினவியவர் எங்கே?" என்று கேட்டார்கள். அதற்கு அந்த மனிதர், "நான் (இதோ இருக்கிறேன்), அல்லாஹ்வின் தூதரே!" என்றார். நபி (ஸல்) அவர்கள் "நீங்கள் (இரு தினங்களாகக்) கண்ட நேரங்களுக்கு இடைப்பட்ட நேரம்தான் உங்கள் (ஐவேளைத்) தொழுகையின் நேரமாகும்" என்று கூறினார்கள். இந்த ஹதீஸ் இரு அறிவிப்பாளர்தொடர்களில் வந்துள்ளது. Book: 5 - **ஸஹீஹ் முஸ்லிம்**

இந்த ஹதீதின் விளக்கத்தின்படி நாம் இப்போது ஒவ்வொரு தொழுகையின் நேரத்தை அறிந்து கொள்வோம்:

1. பஜ்ர் தொழுகை:

இது அதிகாலை உதயமானதிலிருந்து, சூரியன் உதயமாகும் வரை. சூரியன் உதிக்கும் முன்பே, நமக்குச் சூரியன் தெரிவதற்கு முன்பே அதனுடைய கதிர்களினால் கிழக்கு வானம் வெளுத்து, அந்த வெளிச்சம் பரந்து தெரியும். இந்த நேரத்திற்கு முன்னால் ஸஹர் சாப்பிடுதல், தஹஜ்ஜத் தொழுகை மற்றும் வித்ரு தொழுகை ஆகியவற்றை முடித்துவிட வேண்டும். வெளிச்சம் பரவ ஆரம்பித்தால் பஜ்ர் நேரம் ஆரம்பித்துவிடும். அதிலிருந்து சூரியன் உதமாகும் வரை பஜ்ருத் தொழுகை நிறைவேற்றும் நேரமாகும்.

ரஸூலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ அவர்களின் காலத்தில் பிலால் رَضِيَ الله عَنْهُ முதலில் ஒரு அதான் சொல்வார்கள். அப்போது ஸஹர் செய்வர்கள் சாப்பிடுவதற்கும், தஹஜ்ஜத் மற்றும் வித்ரு தொழுவதற்கும் உரிய நேரம் என மக்கள் அறிந்து கொள்வார்கள். பின்னர் அப்துல்லாஹ் இப்னு உம்மு மக்தூம் رَضِيَ الله عَنْهُ இரண்டாவதாக ஒரு அதான் சொல்வார்கள். அந்த அதான் பஜ்ர் நேரம் ஆரம்பமான அடையாளமாகும். எனவே பிலால் رَضِيَ الله عَنْهُ அதான் சொன்னால் சாப்பிடுங்கள் எனவும், அப்துல்லாஹ் رَضِيَ الله عَنْهُ அதான் சொன்னால் ஸஹர் நேரம் முடிந்து, பஜ்ரு நேரம் ஆரம்பித்து விட்டது என அறிந்து கொள்ளுங்கள் என ரஸூலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ கூறுவார்கள். அதிகாலையில் அவ்வாறு பஜ்ரு தொழுகைக்கான வெளிச்சம் ஏற்படும் நேரம் பஜ்ரு ஸாதிக் என்று அழைக்கப்படும். இதில் ஆரம்பிக்கும் பஜ்ரு நேரம் சூரியம் உதிக்கும் வரை இருக்கும்.

2. லுஹர் தொழுகை:

இதன் நேரம் சூரியன் நடு உச்சிக்கு வந்த பிறகு மேற்கு நோக்கி சாய்ந்தவுடன் லுஹர் தொழுகை ஆரம்பிக்கிறது. அதன் முடிவான நேரம், மாலையில் ஒரு பொருளின் நிழலின் நீளம் அதே அளவிற்கு

வரும்வரை ஆகும். சூரியன் நடு உச்சியைவிட்டு சாய்வதற்கான அடையாளமாவது, ஒரு பொருளின் நிழல், கிழக்கு நோக்கி விழ ஆரம்பிக்கும். அந்த பொருளின் நிழலின் நீளம் அதே அளவிற்கு வந்தால் லுஹர் தொழுகையின் நேரம் முடிந்துவிடும்.

3. அஸர் தொழுகையின் நேரம்.

இது லுஹர் தொழுகை முடியும் நேரத்திலிருந்து ஆரம்பிக்கிறது. அதாவது, மாலையில் ஒரு பொருளின் நிழலின் நீளமானது, அதே அளவில் வந்தால், அஸர் தொழுகையின் நேரம் ஆரம்பித்துவிடும். சூரியன் மறையும்வரை அஸர் தொழுகையின் நேரம் ஆகும்.

4. மக்ரிப் தொழுகையின் நேரம்:

சூரியன் மறைந்ததிலிருந்து மக்ரிப் தொழுகையின் நேரம் ஆரம்பிக்கும். அதன் வெளிச்சம் முற்றாக மறைந்து செவ்வானம் மறைந்து (ஷ..பக்) இருட்டாகும் வரை மக்ரிப் நேரம் நீடிக்கும்.

5. இஷா தொழுகையின் நேரம்:

செவ்வானம் மறைந்த பிறகு இஷா தொழுகை ஆரம்பிக்கும். இஷா தொழுகையின் முடிவு இரவின் நடுப்பகுதியாகும்.

இவ்வாறு நாம் தொழுகை நேரங்களை அறிந்து கொண்டால், நாம் கடிகாரம் இல்லாமல் தொழுகை நேரங்களைக் கண்டறிய முடியும்.

## தொழுகை நேரங்கள் பற்றிய மற்ற விஷயங்கள்

1. தொழுகைகளை அந்தந்த ஆரம்ப நேரத்தில் தொழுவது வலியுறுத்தப்பட்டுள்ளது.

முஸ்லிம் 85

அப்துல்லாஹ் رَضِي الله عَنْهُ அறிவிப்பதாவது,

عَنْ عَبْدِ اللَّهِ، عَنِ النَّبِيِّ صلى الله عليه وسلم قَالَ " أَفْضَلُ الأَعْمَالِ - أَوِ الْعَمَلِ - الصَّلاَةُ لِوَقْتِهَا وَبِرُّ الْوَالِدَيْنِ " .

**140.** நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: "நற்செயல்களில்" அல்லது "நற்செயலில்" சிறந்தது உரிய நேரத்தில் தொழுகையை நிறைவேற்றுவதும் தாய் தந்தையருக்கு நன்மை புரிவதுமாகும் இதை அப்துல்லாஹ் பின் மஸ்ஊத் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள். Book: 1 - **ஸஹீஹ் முஸ்லிம்**

கடைசி நேரம் வரைக்கும் தொழலாம் என்றாலும், ஆரமபத்திலேயே தொழுவது சிறந்தது. எனவே எல்லா தொழுகைகளையும் ஆரம்பத்தில் தொழுவது சிறந்தது. எனினும் இஷாத் தொழுகையை தாமதித்து தொழுவது சிறந்ததாகும்.

அந் நஸயீ 533

இப்னு அப்பாஸ் رَضِي الله عَنْهُ அறிவிப்பதாவது,

عَنِ ابْنِ عَبَّاسٍ، قَالَ أَخَّرَ النَّبِيُّ صلى الله عليه وسلم الْعِشَاءَ ذَاتَ لَيْلَةٍ حَتَّى ذَهَبَ مِنَ اللَّيْلِ فَقَامَ عُمَرُ - رضى الله عنه - فَنَادَى الصَّلاَةَ يَا رَسُولَ اللَّهِ رَقَدَ النِّسَاءُ وَالْوِلْدَانُ . فَخَرَجَ رَسُولُ اللَّهِ صلى الله عليه وسلم وَالْمَاءُ يَقْطُرُ مِنْ رَأْسِهِ وَهُوَ يَقُولُ " إِنَّهُ الْوَقْتُ لَوْلاَ أَنْ أَشُقَّ عَلَى أُمَّتِي " .

ரஸுலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ இரவின் ஒரு பகுதி கழியும்வரை இஷா தொழுகையைப் பிற்படுத்தினார்கள். உமர் எழுந்து சென்று அழைத்தவாறு கூறினார்கள், “ரஸுலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ அவர்களே! பெண்களும், குழந்தைகளும் தூங்க ஆரம்பித்துவிட்டார்கள்.” பின்னர் தங்களின் தலையில் தண்ணீர் சொட்டியவாறு அங்கு வந்து கூறினார்கள், “எனது உம்மத்திற்கு இது கடினமாக இல்லாவிட்டால், இதுதான் (இஷாவிற்கான சிறந்த) நேரமாகும்.”

எனவே இஷா தொழுகையைச் சற்று தாமதித்தும், மற்ற தொழுகைகளை ஆரம்பத்திலும் தொழுவது சிறந்ததாகும்.

2. கோடை காலத்தில், கடுமையான வெயில் நேரத்தில், லுஹர் தொழுகையைத் தாமதித்துத் தொழுவது சிறந்தது. ஜமாஅத் தொழுகையையும் அவ்வாறு பிற்படுத்தி வைப்பது சிறந்தது.

புஹாரி 629.

அபு தர் رَضِي الله عَنْهُ அறிவிப்பதாவது,

عَنْ أَبِي ذَرٍّ، قَالَ كُنَّا مَعَ النَّبِيِّ صلى الله عليه وسلم فِي سَفَرٍ فَأَرَادَ الْمُؤَذِّنُ أَنْ يُؤَذِّنَ فَقَالَ لَهُ " أَبْرِدْ ". ثُمَّ أَرَادَ أَنْ يُؤَذِّنَ فَقَالَ لَهُ " أَبْرِدْ ". ثُمَّ أَرَادَ أَنْ يُؤَذِّنَ. فَقَالَ لَهُ " أَبْرِدْ ". حَتَّى سَاوَى الظِّلُّ التُّلُولَ فَقَالَ النَّبِيُّ صلى الله عليه وسلم { إِنَّ شِدَّةَ الْحَرِّ مِنْ فَيْحِ جَهَنَّمَ }

**629.** அபூ தர்(ரலி) அறிவிக்கார். நாங்கள் நபி(ஸல்) அவர்களுடன் ஒரு பயணக்கில் சென்றிருந்தோம். (லுஹர் தொழுகைக்கு) முஅக்கின் பாங்கு சொல்ல ஆயக்கமானபோது 'கொஞ்சம் பொறு' என்று நபி(ஸல்) அவர்கள் முஅக்கினிடம் கூறினார்கள். சிறிது நேரம் கழிக்து முஅக்கின் பாங்கு சொல்லக் கயாரான போதும் மலைக் குன்றுகளின் நிழல் அகே அளவிற்குச் சமமாகும் வரை '(பாங்கு சொல்வதைப்) பிற்படுக்துங்கள்' என்று நபி(ஸல்) அவர்கள் முஅக்கினிடம் கூறிவிட்டு, 'நிச்சயமாக இந்தக் கடும் வெப்பம் நரக வெப்பத்தின் வெளிப்பாடாகும்' என்று கூறினார்கள். Book: 10 - **ஸஹீஹுல் புகாரி**

3. யார் கடமையான தொழுகை மறந்தாலோ அல்லது தூங்கிவிட்டாலோ, அவருக்கு நினைவு வந்ததும், அல்லது விழித்தவுடன் தொழ வேண்டும்.

முஸ்லிம் 684

கத்தாதாஹ் رَضِي الله عَنْهُ அறிவிப்பதாவது, அனஸ் இப்னு மாலிக் رَضِي الله عَنْهُ கூறியதாவது,

عَنْ قَتَادَةَ، عَنْ أَنَسِ بْنِ مَالِكٍ، قَالَ قَالَ رَسُولُ اللَّهِ صلى الله عليه وسلم " إِذَا رَقَدَ أَحَدُكُمْ عَنِ الصَّلاَةِ أَوْ غَفَلَ عَنْهَا فَلْيُصَلِّهَا إِذَا ذَكَرَهَا فَإِنَّ اللَّهَ يَقُولُ أَقِمِ الصَّلاَةَ لِذِكْرِي " .

**1218.** அல்லாஹ்வின் காகர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: உங்களில் ஒருவர் கொமாமல் உறங்கிவிட்டால், அல்லகு கவனமில்லாமல் இருந்துவிட்டால் அகன் நினைவு வந்ககும் அகைக் கொழுகுகொள்ளட்டும். ஏனெனில், "என்னை நினைவுகூரும் பொருட்டு கொழுகையை நிலை நிறுக்குவீராக" என (20:14ஆவது வசனத்தில்) அல்லாஹ் கூறுகின்றான். இதை அனஸ் பின் மாலிக் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள். Book : 5 - **ஸஹீஹ் முஸ்லிம்**

வேண்டுமென்றே தொழாமல் விட்டுவிடக் கூடாது. ஆனால் மறதி அல்லது தூக்கத்தினால் தொழாவிட்டால், நினைவு வந்ததும், அல்லது விழித்ததும் தொழுது விட வேண்டும்.

4. நேரம் முடிவதற்குள் ஒரு ரகஅத்தாவது தொழுது முடித்திருந்தால் அவர் அந்தத் தொழுகையை அடைந்தவராக ஆகிவிடுவார்.

முஸ்லிம் 609

அன்னை ஆயிஷா رَضِيَ اللهُ عَنْهَا அறிவிப்பதாவது,

عَنْ عَائِشَةَ، قَالَتْ قَالَ رَسُولُ اللَّهِ صلى الله عليه وسلم " مَنْ أَدْرَكَ مِنَ الْعَصْرِ سَجْدَةً قَبْلَ أَنْ تَغْرُبَ الشَّمْسُ أَوْ مِنَ الصُّبْحِ قَبْلَ أَنْ تَطْلُعَ فَقَدْ أَدْرَكَهَا " . وَالسَّجْدَةُ إِنَّمَا هِيَ الرَّكْعَةُ .

**1066.** அல்லாஹ்வின் காகர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: சூரியன் மறைவகற்கு முன் அஸ்ர் தொழுகையில் ஒரு "சஜ்தா"வை, அல்லது சூரியன் உதிப்பதற்கு முன் சுப்ஹுத் தொழுகையில் ஒரு

"சஜ்தா"வை அடைந்துகொண்டவர் அந்தக் தொழுகையை (முழுமையாக) அடைந்து கொண்டவராவார். இதை ஆயிஷா (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள். இதில் இடம்பெற்றுள்ள "சஜ்தா" என்பதற்கு "ரக்அத்" என்று பொருள். இந்த ஹதீஸ் மூன்று அறிவிப்பாளர்தொடர்களில் வந்துள்ளது. Book: 5 - **ஸஹீஹ் முஸ்லிம்**

**Fiqh 17 - Laws Related to Prayer 2 - Conditions of Prayer**

# ஃபிக்ஹ் வகுப்பு 17 - தொழுகை தொடர்பான சட்டங்கள் 2 - தொழுகையின் நிபந்தனைகள்

**ஆசிரியர்: அஷ் ஷெய்க் உவைஸ் உமரி நஸீரி**

இப்போது தொழுகையின் நிபந்தனைகள் (ஷுரூத்) என்னென்ன என்பது பற்றி அறிவோம். நிபந்தனைகளில் ஒன்று பூர்த்தி செய்யாமல் விட்டாலும், தொழுகை ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. எனவே அதனை நாமட் கட்டாயம் பூர்த்தி செய்ய வேண்டும். தொழுகையின் தூண்களைப் போல் அல்ல இது. தூண் தொழுகையின் அங்கமாகும். நிபந்தனைகளோ தொழுகையோடு சேர்ந்தவை அல்ல.

## தொழுகையின் நிபந்தனைகள்

ஆறு ஆகும்

1. தூய்மை:
2. உடல், ஆடைகள் மற்றும் தொழக்கூடிய இடங்கள் ஆகியவற்றில் அசுத்தம் (நஜிஸ்) இல்லாமல் தூய்மையாக இருக்க வேண்டும்.
3. உடலில் மறைக்க வேண்டிய பகுதிகளை மறைத்திருக்க வேண்டும்.
4. உரிய நேரத்தில் தொழ வேண்டும்.
5. கிப்லாவை முன்நோக்கித் தொழ வேண்டும்.
6. நிய்யத்

## தூய்மை

சிறுந்தொடக்கு மற்றும் பெருந்தொடக்கு ஆகியவற்றிலிருந்து தூய்மை அடைந்திருக்க வேண்டும். சிறுந்தொடக்கிலிருந்து தூய்மை அடைய உளூ செய்ய வேண்டும். பெருந்தொடக்கிலிருந்து தூய்மை அடைய கடமையான குளிப்பை நிறைவேற்ற வேண்டும். தண்ணீர் பயன்படுத்த முடியாத நிலையில் நாம் தயம்மும் செய்திருக்க வேண்டும். இயலாமையின் காரணமாக இரண்டும் முடியாவிட்டால் மட்டும் தூய்மையில்லாமல் தொழலாம்.

## உடல், ஆடை மற்றும் இடம் சுத்தமாக இருத்தல்

உடலிலோ, ஆடையிலோ அல்லது நாம் தொழும் இடத்திலோ அசுத்தம் இருந்தால் நாம் அவற்றைச் சுத்தப்படுத்த வேண்டும். எனினும் நாம் அசுத்தம் இருப்பதை அறியாமல் தொழுதுவிட்டால், பின்னர் அதனை நாம் அறிந்து கொண்டாலும், அது மன்னிக்கப்படும். மறுபடியும் திருப்பித் தொழ வேண்டியதில்லை.

அபு தாவூத் 650

அபு ஸயீத் குத்ரி رَضِيَ الله عَنْهُ அறிவிப்பதாவது,

عَنْ أَبِي سَعِيدٍ الْخُدْرِيِّ، قَالَ بَيْنَمَا رَسُولُ اللَّهِ صلى الله عليه وسلم يُصَلِّي بِأَصْحَابِهِ إِذْ خَلَعَ نَعْلَيْهِ فَوَضَعَهُمَا عَنْ يَسَارِهِ فَلَمَّا رَأَى ذَلِكَ الْقَوْمُ أَلْقَوْا نِعَالَهُمْ فَلَمَّا قَضَى رَسُولُ اللَّهِ صلى الله عليه وسلم صَلاَتَهُ قَالَ " مَا حَمَلَكُمْ عَلَى إِلْقَائِكُمْ نِعَالَكُمْ " . قَالُوا رَأَيْنَاكَ أَلْقَيْتَ نَعْلَيْكَ فَأَلْقَيْنَا نِعَالَنَا . فَقَالَ رَسُولُ اللَّهِ صلى الله عليه

وسلم " إِنَّ جِبْرِيلَ صلى الله عليه وسلم أَتَانِي فَأَخْبَرَنِي أَنَّ فِيهِمَا قَذَرًا " . وَقَالَ " إِذَا جَاءَ أَحَدُكُمْ إِلَى الْمَسْجِدِ فَلْيَنْظُرْ فَإِنْ رَأَى فِي نَعْلَيْهِ قَذَرًا أَوْ أَذًى فَلْيَمْسَحْهُ وَلْيُصَلِّ فِيهِمَا " .

ரஸுலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَஒரு தடவை தொழுகை நடத்திக் கொண்டிருந்தபோது, தங்களின் செருப்பைக் கழற்றி இடது புறம் வைத்தார்கள். அதனைக் கண்ணுற்ற ஸஹாபாக்கள் தங்கள் செருப்புகளையும் கழற்றி வைத்துவிட்டார்கள். தொழுகை முடிந்ததும், ரஸுலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَவினவினார்கள், "உங்கள் செருப்புகளை எது கழற்றச் செய்தது?" அவர்கள் கூறினார்கள், "தாங்கள் கழற்றுவதை நாங்கள் கண்டோம். எனவே நாங்களும் எங்களின் செருப்புகளைக் கழற்றினோம்." ரஸுலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَகூறினார்கள், "ஜிப்ரயீல் عَلَيْهِ السَّلاَمُஎன்னிடம் வந்து, அதில் அசுத்தம் இருப்பதாகக் கூறினார்கள். எனவே யாரும் தொழ வரும்போது, தங்களின் செருப்புகளில் அசுத்தம் இருந்தால் அதனை நீக்கி விட்டு அதில் தொழ வேண்டும்."

இந்த ஹதீதின்படி, ரஸுலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَஅசுத்தம் என்று அறிந்த பிறகும், செருப்பைக் கழற்றினாலும், தொழுது முடித்த ரகஅத்துக்களை மீண்டும் தொழவில்லை.

## தொழும் இடம் பற்றிய விவரங்கள்

அபு தாவூத் 489

அபு தர் رَضِيَ اللهُ عَنْهُஅறிவிப்பதாவது,

عَنْ أَبِي ذَرٍّ، قَالَ قَالَ رَسُولُ اللَّهِ صلى الله عليه وسلم " جُعِلَتْ لِيَ الأَرْضُ طَهُورًا وَمَسْجِدًا " .

ரஸுலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَகூறியுள்ளார்கள், "பூமி எனக்குச் சுத்தமாகவும், பள்ளிவாசலாகவும் ஆக்கப்பட்டுள்ளது."

சில இடங்களில் தொழுகை தடை செய்யப்பட்டுள்ளது.

1. மண்ணறை 2. குளியலறை

அபு தாவூத் 489, மற்றும் திர்மிதி 317

ஸ'யித் رَضِيَ اللهُ عَنْهُஅறிவிப்பதாவது,

أَنَّ النَّبِيَّ صلى الله عليه وسلم قَالَ " الأَرْضُ كُلُّهَا مَسْجِدٌ إِلاَّ الْحَمَّامَ وَالْمَقْبُرَةَ "

ரஸுலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَகூறியுள்ளார்கள், "பூமி முழுவதும் எனக்குத் தொழும் இடமாக ஆக்கப்பட்டுள்ளது, மண்ணறையும், குளியலறையும் தவிர."

எனினும் ஜனாஸாஹ் தொழுகையை மண்ணறையில் தொழலாம்.

புஹாரி 458

அபு ஹுரைராஹ் அறிவிப்பதாவது,

أَبِي هُرَيْرَةَ، أَنَّ رَجُلاً، أَسْوَدَ ـ أَوِ امْرَأَةً سَوْدَاءَ ـ كَانَ يَقُمُّ الْمَسْجِدَ، فَمَاتَ، فَسَأَلَ النَّبِيُّ صلى الله عليه وسلم عَنْهُ فَقَالُوا مَاتَ. قَالَ " أَفَلاَ كُنْتُمْ آذَنْتُمُونِي بِهِ دُلُّونِي عَلَى قَبْرِهِ ". ـ أَوْ قَالَ قَبْرِهَا ـ فَأَتَى قَبْرَهُ فَصَلَّى عَلَيْهِ.

**458.** அபூ ஹுரைரா (ரலி) அறிவித்தார். பள்ளிவாசலைப் பெருக்குபவராக இருந்த ஒரு கறுத்த ஆண் அல்லது கறுத்த பெண்மணி இறந்துவிட்டார். அவரைப் பற்றி நபி(ஸல்) அவர்கள் விசாரித்தபோது அவர் இறந்துவிட்டதாகக் கூறினார்கள். 'இதை (முன்பே) என்னிடம் நீங்கள் சொல்லியிருக்க வேண்டாமா? அவரின் அடக்கக் கலத்தை எனக்குக் காட்டுங்கள்! என்று நபி(ஸல்) கூறிவிட்டு அவரின் அடக்கத்தலத்துக்கு வந்து அவருக்கு (ஜனாஸா) தொழுகை நடத்தினார்கள். Book: 8 - **ஸஹீஹுல் புகாரி**

புஹாரி 460

அபு ர.்.பி رَضِيَ الله عَنْهُஅறிவிப்பதாபது

عَنْ أَبِي رَافِعٍ، عَنْ أَبِي هُرَيْرَةَ، أَنَّ امْرَأَةً ـ أَوْ رَجُلاً ـ كَانَتْ تَقُمُّ الْمَسْجِدَ ـ وَلاَ أُرَاهُ إِلاَّ امْرَأَةً ـ فَذَكَرَ حَدِيثَ النَّبِيِّ صلى الله عليه وسلم أَنَّهُ صَلَّى عَلَى قَبْرِهِ.

**460.** அபூ ஹுரைரா (ரலி) அறிவித்தார். ஓர் ஆண் அல்லது பெண்மணி பள்ளிவாசலைப் பெருக்குபவராக இருந்தார். அவர் பெண்ணாகத்தான் இருக்க வேண்டும் என்று மேற்கூறிய செய்தியை அபூ ஹுரைரா(ரலி) குறிப்பிட்டார்கள். Book: 8 - **ஸஹீஹுல் புகாரி**

ஜனாஸா தொழுகையில் ருக்கூ மற்றும் ஸஜ்தா இல்லை என்பதனையும் நினைவு கொள்ள வேண்டும்.

மல ஜலம் களிக்கும் இடம் பற்றிக் கூறப்படவில்லை என்றாலும், குளியலறையில் இது அடங்கும்.

3. ஒட்டகம் கட்டப்படும் கொட்டகை:

திர்மிதி 348

அபு ஹுரைராஹ் رَضِيَ الله عَنْهُஅறிவிப்பதாவது,

عَنْ أَبِي هُرَيْرَةَ، قَالَ قَالَ رَسُولُ اللَّهِ صلى الله عليه وسلم " صَلُّوا فِي مَرَابِضِ الْغَنَمِ وَلاَ تُصَلُّوا فِي أَعْطَانِ الإِبِلِ " .

ரஸுலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَகூறியுள்ளதாவது, “ஆட்டுத் தொழுவத்தில் தொழலாம். எனினும் ஒட்டகம் ஓய்வெடுக்கும் இடத்தில் தொழக்கூடாது.”

4. மக்கள் பயன்படுத்தும் பொதுப்பாதை:

இது மக்ரூஹ் ஆகும். அது மக்களுக்கு தீமையாக இருந்தால் ஹராம் எனவும் கூறப்பட்டுள்ளது. சில நேரங்களில் உதாரணமாக, பெருநாள் தொழுகை, ஈத் தொழுகை, ஆகிய தொழுகைகளில் கூட்டத்தின் காரணமாக தொழ வேண்டிய நிலை ஏற்படும்போது, தொழ அனுமதிக்கப்பட்டுள்ளது.

5. அபகரிக்கப்பட்ட நிலம்:

இது விஷயத்தில் எவ்வித மாற்றுக் கருத்தும் இல்லை. அறிஞர்களின் ஒட்டு மொத்த கருத்தாகும். அபகரிக்கப்பட்ட இடத்தில் பள்ளிவாசல் கட்டினாலும் தொழக் கூடாது.

க.்.பாவின் கூரையில் தொழக் கூடாது என்ற ஹதீது பலவீனமான அறிவிப்பாகும். அவ்வாறு தொழத் தடையில்லை.

## உடலில் மறைக்க வேண்டிய பகுதி

ஆண்கள்: ஆண்கள் எப்போதும் தொப்புளிலிருந்து, இரண்டு கால் முட்டுகள் வரை மறைப்பது கட்டாயமாகும். தொழுகையில் அத்துடன் இரண்டு தோள்பட்டைகளையும் மறைக்க வேண்டும்.

புஹாரி 359

அபு ஹுரைராஹ் رَضِيَ الله عَنْهُ அறிவிப்பதாவது,

عَنْ أَبِي هُرَيْرَةَ، قَالَ قَالَ النَّبِيُّ صلى الله عليه وسلم " لاَ يُصَلِّي أَحَدُكُمْ فِي الثَّوْبِ الْوَاحِدِ، لَيْسَ عَلَى عَاتِقَيْهِ شَىْءٌ ".

**359.** 'உங்களில் ஒருவர் தன்னுடைய தோளின் மீது எதுவும் இல்லாதிருக்க ஓர் ஆடையை மட்டும் அணிந்து தொழ வேண்டாம்' என்று இறைத்தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: என அபூ ஹுரைரா (ரலி) அறிவித்தார். Book: 8 - **ஸஹீஹுல் புகாரி**

பெண்கள்: பெண்கள் என்றாலே முழுமையாக மறைக்கப்பட வேண்டியவர்கள்தாம். தொழும்போது முகத்தையும், இரண்டு கைகளை மணிக்கட்டு வரையும் மறைக்காமல் இருக்க அனுமதியுண்டு. அந்நிய ஆண் பார்ப்பார்கள் என்ற அச்சம் இருந்தால், முகத்தை மறைக்கலாம். பாதங்களின வெளிப்பகுதி மறைப்பது பற்றி கருத்து வேறுபாடு உள்ளது.

அபு தாவூத் 639

ஸைத் இப்னு குன்ஃபுத் رَضِيَ الله عَنْهُ அறிவிப்பதாவது,

زَيْدِ بْنِ قُنْفُذٍ، عَنْ أُمِّهِ، أَنَّهَا سَأَلَتْ أُمَّ سَلَمَةَ مَاذَا تُصَلِّي فِيهِ الْمَرْأَةُ مِنَ الثِّيَابِ فَقَالَتْ تُصَلِّي فِي الْخِمَارِ وَالدِّرْعِ السَّابِغِ الَّذِي يُغَيِّبُ ظُهُورَ قَدَمَيْهَا.

“நான் அன்னை உம்மு ஸலமாஹ் رَضِيَ اللهُ عَنْهَا அவர்களிடம் வினவினேன், “பெண்கள் எத்தனை துணியுடன் தொழ வேண்டும்?” அவர்கள் பதிலளித்தார்கள், “தங்களின் பாதங்கள் மூடக்க கூடிய அளவில் உள்ள நீண்ட ஆடையையும், முந்தானையும் போட்டுத் தொழ வேண்டும்.”

இந்த ஹதீதினை எடுத்துக் கொண்டு சில அறிஞர்கள் பெண்கள் தொழும்போது இரண்டு பாதங்களும் மறைக்கப்பட வேண்டும் எனவும், தெரிந்தால் தொழுனை முறிந்துவிடும். எனினும் இந்த ஹதீது பலவீனமானதாகும். இது அன்னை அவர்கள் சொன்னதாகத்தான் வருகிறது. ரஸூலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ அவர்கள் நேரடியாகச் சொன்னதாக வரவில்லை. எனவே பாதங்கள் தெரியாமல் தொழுவது நல்லது. எனினும் பாதங்கள் தெரிந்தால் தொழுகை கூடாமல் போய்விடும் என்று எடுத்துக் கொள்ளக் கூடாது என்பதே சிறந்தாகும்.

தொழுகையை உரிய நேரத்தில் தொழுது முடித்து விடவேண்டும். எனினும் முன்னர் சொல்லப்பட்டதைப் போல, மறதியின் காரணமாகவோ அல்லது தூங்கிவிட்டாலோ நினைவு வந்ததும், அல்லது விழித்தவுடனும் தொழ வேண்டும். வேண்டுமென்றே தொழுகையை உரிய நேரத்தில் தொழாமல் விட்டுவிட்டால் குற்றமாகும். சில அறிஞர்களின் கருத்தின்படி, களா செய்தாலும் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

## கிப்லாவை முன்நோக்குவது பற்றி

ஸூரத்துல் பகரா (பசு மாடு)

**2:144** قَدْ نَرٰى تَقَلُّبَ وَجْهِكَ فِى السَّمَآءِ‌ۚ فَلَنُوَلِّيَنَّكَ قِبْلَةً تَرْضٰهَا‌ فَوَلِّ وَجْهَكَ شَطْرَ الْمَسْجِدِ الْحَـرَامِ‌ؕ وَحَيْثُ مَا كُنْتُمْ فَوَلُّوْا وُجُوْهَكُمْ شَطْرَهٗ‌ ؕ وَاِنَّ الَّذِيْنَ اُوْتُوا الْكِتٰبَ لَيَعْلَمُوْنَ اَنَّهُ الْحَـقُّ مِنْ رَّبِّهِمْ‌ؕ وَمَا اللّٰهُ بِغَافِلٍ عَمَّا يَعْمَلُوْنَ

**2:144.** (நபியே!) நாம் உம் முகம் அடிக்கடி வானத்தை நோக்கக் காண்கிறோம்; எனவே நீர் விரும்பும் கிப்லாவின் பக்கம் உம்மைத் திடமாக திருப்பி விடுகிறோம்; ஆகவே நீர் இப்பொழுது (மக்காவின்) மஸ்ஜிதுல் ஹராம் பக்கம் உம் முகத்தைத் திருப்பிக் கொள்ளும். (முஸ்லிம்களே!) இன்னும் நீங்கள் எங்கிருந்தாலும் (தொழுகையின் போது) உங்கள் முகங்களை அந்த (கிப்லாவின்) பக்கமே திருப்பிக் கொள்ளுங்கள்; நிச்சயமாக எவர்கள் வேதம் கொடுக்கப்பட்டிருக்கின்றார்களோ அவர்கள், இது அவர்களுடைய இறைவனிடமிருந்து வந்த உண்மை என்பதை நிச்சயமாக அறிவார்கள்; அல்லாஹ் அவர்கள் செய்வது பற்றிப் பராமுகமாக இல்லை.

கிப்லா திசையை நாம் அறியாத நிலையில் அதனைக் கண்டுபிடிக்க நாம் முயற்சி செய்ய வேண்டும். நம் நாட்டைப் பொறுத்தளவில் பகலில் சூரியன் நிலையை வைத்து, மேற்கில் சிறிது வடப்பக்கமாக கிப்லா என எடுத்துக் கொள்ள வேண்டும். எனினும் கிப்லா சரியாகத் தெரியாமல் நாம் தொழுதுவிட்டால், அது நிறைவேறிவிடும். தொழுகையின் இடையில் சரியான கிப்லா தெரிந்தால், உடனே சரியான கிப்லாவின் திசையை நோக்கித் திரும்பித் தொழ வேண்டும்.

முஸ்லிம் 527

அனஸ் رَضِي الله عَنْهُ அறிவிப்பதாவது,

عَنْ أَنَسٍ، أَنَّ رَسُولَ اللَّهِ صلى الله عليه وسلم كَانَ يُصَلِّي نَحْوَ بَيْتِ الْمَقْدِسِ فَنَزَلَتْ

{ قَدْ نَرَى تَقَلُّبَ وَجْهِكَ فِي السَّمَاءِ فَلَنُوَلِّيَنَّكَ قِبْلَةً تَرْضَاهَا فَوَلِّ وَجْهَكَ شَطْرَ الْمَسْجِدِ الْحَرَامِ}

فَمَرَّ رَجُلٌ مِنْ بَنِي سَلِمَةَ وَهُمْ رُكُوعٌ فِي صَلاَةِ الْفَجْرِ وَقَدْ صَلَّوْا رَكْعَةً فَنَادَى أَلاَ إِنَّ الْقِبْلَةَ قَدْ حُوِّلَتْ . فَمَالُوا كَمَا هُمْ نَحْوَ الْقِبْلَةِ

**917.** அனஸ் (ரலி) அவர்கள் கூறியதாவது: அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் பைத்துல் மக்திஸை நோக்கித் தொழுது கொண்டிருந்தார்கள். அப்போது "(நபியே!) உங்கள் முகம் (அடிக்கடி) வானத்தின் பக்கம் திரும்புவதை நாம் காண்கிறோம். எனவே, நீங்கள் விரும்புகின்ற கிப்லா(வாகிய கஅபா)வின் பக்கம் நிச்சயமாக (இதோ) உங்களை நாம் திரும்பச்செய்கிறோம். ஆகவே,உங்கள் முகத்தை மஸ்ஜிதுல் ஹராம் (புனிதப் பள்ளிவாசலை) நோக்கித் திருப்புங்கள்" எனும் (2:144ஆவது) இறைவசனம் அருளப்பெற்றது. அப்போது பனூசலிமா குலத்தைச் சேர்ந்த ஒருவர் (நபி (ஸல்) அவர்களுடன் தொழுதுவிட்டுத்) தமது குலத்தாரைக் கடந்துசென்றார். அப்போது அவர்கள் ஃபஜ்ர் தொழுகையின் முதல் ரக்அத்தைத் தொழுதுவிட்டு (இரண்டாவது ரக்அத்தின்) ருகூஉவில் இருந்தனர். உடனே அம்மனிதர், "அறிந்துகொள்ளுங்கள்: இந்தக் கிப்லா (தொழும் திசை) மாற்றப்பட்டுவிட்டது" என்று உரத்த குரலில் அறிவித்தார். உடனே அம்மக்கள் தொழுகையிலிருந்தவாறு அப்படியே (கஅபா எனும் தற்போதைய) இந்தக் கிப்லாவை நோக்கித் திரும்பிக்கொண்டனர். Book: 5 - **ஸஹீஹ் முஸ்லிம்**

எனவே சரியான கிப்லா தெரிந்ததும், தொடர்ந்து சரியான கிப்லாவை முன்நோக்கி தொழுகையை முடிக்கலாம்.

நிய்யத்தைப் பொறுத்தளவில் அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَىவுக்காகத் தொழுகிறோம் என்ற எண்ணம் கொண்டிருக்க வேண்டும். மற்றவர்கள் நம்மைத் தொழுகையாளி என காணும் நோக்கத்தில் தொழக் கூடாது. இரண்டாவதாக, எந்த நேரத் தொழுகையைத் தொழுகிறோம், எந்தவிதமான தொழுகை (பர்லுத் தொழுகையா அல்லது ந.ஃ.பில் தொழுகையாக), எத்தனை ரகஅத் என்பதனையும் மனதில் கொள்ள வேண்டும்.

## நிபந்தனை பற்றிய சில குறிப்புகள்

1. தொழுகை ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும் என்றால் இந்த ஆறு நிபந்தனைகளையும் நாம் சரியாக கடைபிடித்தாக வேண்டும். ஒரு நிபந்தனையையும் விட்டுவிட்டால், தொழுகை ஏற்றுக் கொள்ளப்படாமல் போகிவிடும்.

2. நிபந்தனையில் நிய்யத்தைத் தவிர வேறு ஏனேனும் ஒன்று, இயலாமையின் காரணமாக விடுபட்டால் ஏற்றுக் கொள்ளப்படும். நிய்யத்தில் இயலாமை என்பது ஏற்பட வழியே இல்லை.

3. மறதியின் காரணமாகவோ அல்லது அறியாமையின் காரணத்தினால் நிபந்தனை எதனையும் விட்டுவிட்டவர், அது குறிந்து நினைவுக்கு வந்தாலும், அல்லது அதனைப் பற்றி தெரிய வந்தாலும், அவருக்கு அத்தொழுகையைத் தொழ நேரம் இருந்தால் திருப்பித் தொழ வேண்டும்.

புஹாரி 757

அபு ஹுரைராஹ் رَضِي الله عَنْهُஅறிவிப்பதாவது,

عَنْ أَبِي هُرَيْرَةَ، أَنَّ رَسُولَ اللَّهِ صلى الله عليه وسلم دَخَلَ الْمَسْجِدَ، فَدَخَلَ رَجُلٌ فَصَلَّى فَسَلَّمَ عَلَى النَّبِيِّ صلى الله عليه وسلم فَرَدَّ وَقَالَ " ارْجِعْ فَصَلِّ، فَإِنَّكَ لَمْ تُصَلِّ"

**757.** அபூ ஹுரைரா (ரலி) அறிவித்தார். நபி(ஸல்) அவர்கள் பள்ளிக்கு வந்தார்கள். ஒரு மனிதரும் (அந்த நேரத்தில்) பள்ளிக்கு வந்து தொழலானார். (தொழுது முடித்ததும்) நபி(ஸல்) அவர்களுக்கு அவர் ஸலாம் கூறினார். நபி(ஸல்) அவர்கள் பதில் ஸலாம் கூறினார்கள். அந்த மனிதர் முன்பு தொழுதது போன்றே மீண்டும் தொழுதுவிட்டு வந்து நபி(ஸல்) அவர்களுக்கு ஸலாம் கூறினார். 'திரும்பவும் தொழுவீராக! நீர் தொழவே இல்லை' என்று இறைத்தூதர்(ஸல்) அவர்கள் கூறினார்கள். இவ்வாறு மூன்று முறை நடந்தது. அதன் பிறகு அந்த மனிதர் 'சத்திய மார்க்கத்துடன் உங்களை அனுப்பியுள்ள இறைவன் மீது ஆணையாக இவ்வாறு தொழுவதைத் தவிர வேறு எதையும் நான் அறிந்திருக்கவில்லை! எனவே எனக்குக் கற்றுத் தாருங்கள்!' என்று கேட்டார். 'நீர் தொழுகைக்காக நின்றதும் தக்பீர் கூறும்! பின்னர் குர்ஆனில் உமக்குத் தெரிந்தவற்றை ஓதும்! பின்னர் அமைதியாக ருகூவு செய்வீராக! பின்னர் ருகூவிலிருந்து எழுந்து சரியான நிலைக்கு வருவீராக! பின்னர் நிதானமாக ஸஜ்தா செய்வீராக! ஸஜ்தாவிலிருந்து எழுந்து நிதானமாக உட்கார்வீராக! இவ்வாறே உம்முடைய எல்லாத் தொழுகையிலும் செய்து வருவீராக! என்று இறைத்தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள். Book: 10 - **ஸஹீஹுல் புகாரி**

இவ்வாறு நேரம் இருந்தால் திருப்பித் தொழலாம். அவ்வாறு நேரம் இல்லை என்றால் திருப்பித் தொழ வேண்டியதில்லை. எனினும், நாம் தொழும் உபரியான தொழுகையும், அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَىவிடம் நாம் துஆ கேட்பதன் மூலம் நாம் அந்த தவறுகளுக்கு பரகமாக அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَى ஆக்கவல்லவன் ஆவான்.

நேரம் தவறினால் தொழ வேண்டியதில்லை என்பதற்கு ஆதாரம்,

புஹாரி 338 மற்றும் திர்மிதி 144

அப்துர் ரஹ்மான் இப்னு அப்ஜா رَضِي الله عَنْهُ அறிவிப்பதாவது

فَقَالَ عَمَّارُ بْنُ يَاسِرٍ لِعُمَرَ بْنِ الْخَطَّابِ أَمَا تَذْكُرُ أَنَّا كُنَّا فِي سَفَرٍ أَنَا وَأَنْتَ فَأَمَّا أَنْتَ فَلَمْ تُصَلِّ، وَأَمَّا أَنَا فَتَمَعَّكْتُ فَصَلَّيْتُ، فَذَكَرْتُ لِلنَّبِيِّ صلى الله عليه وسلم فَقَالَ النَّبِيُّ صلى الله عليه وسلم " إِنَّمَا كَانَ يَكْفِيكَ هَكَذَا ". فَضَرَبَ النَّبِيُّ صلى الله عليه وسلم بِكَفَّيْهِ الأَرْضَ، وَنَفَخَ فِيهِمَا ثُمَّ مَسَحَ بِهِمَا وَجْهَهُ وَكَفَّيْهِ.

**338.** 'ஒருவர் உமர் (ரலி) அவர்களிடம் வந்து 'நான் குளிப்புக் கடமையானவனாக ஆகிவிட்டேன். தண்ணீர் கிடைக்கவில்லை. என்ன செய்யவேண்டும்?' என்று கேட்டபோது, அங்கிருந்த அம்மார் இப்னு யாஸிர் (ரலி) உமர் (ரலி) அவர்களிடம், 'நானும் நீங்களும் ஒரு பயணத்தில் சென்றோம். (அப்போது தண்ணீர் கிடைக்காததால்) நீங்கள் தொழவில்லை; நானோ மண்ணில் புரண்டுவிட்டுத் தொழுதேன். இந்நிகழ்ச்சியை நபி (ஸல்) அவர்களிடம் நான் சொன்னபோது நபி (ஸல்) அவர்கள் தங்களின் இரண்டு கைகளையும் தரையில் அடித்து, அவற்றில் ஊதிவிட்டு அவ்விரு கைகளால் தங்களின் முகத்தையும் இரண்டு முன்கைகளையும் தடவிக் காண்பித்து 'இவ்வாறு செய்திருந்தால் அது உனக்குப் போதுமானதாக இருந்தது' எனக் கூறிய சம்பவம் உங்களுக்கு நினைவில்லையா?' என்று கேட்டார்கள்' என அப்துர்ரஹ்மான் அப்ஸா (ரலி) கூறினார். Book: 7 - **ஸஹீஹுல் புகாரி**

**Fiqh 18 - Laws Related to Prayer 3 - Pillars of Prayer**

# ஃபிக்ஹ் வகுப்பு 18 - தொழுகை தொடர்பான சட்டங்கள் 3 - தொழுகையின் ருகுன்கள் (தூண்கள்)

**ஆசிரியர்: அஷ் ஷெய்க் உவைஸ் உமரி நளீரி**

தூண்கள் என்பது ருக்ன் (அர்கான் - பன்மை). இப்போது தொழுகையின் தூண்கள் யாவை என்பதனை அறிவோம்.

புஹாரி 6008

அபு ஸுலைமான் رَضِـيَ الله عَنْهُ மற்றும் மாலிக் இப்னு ஹுவைரித் رَضِـيَ الله عَنْهُ ஆகியோர் அறிவிக்கம் இந்த ஹதிதில்

عَنْ أَبِي سُلَيْمَانَ، مَالِكِ بْنِ الْحُوَيْرِثِ قَالَ أَتَيْنَا النَّبِيَّ صلى الله عليه وسلم وَنَحْنُ شَبَبَةٌ مُتَقَارِبُونَ، فَأَقَمْنَا عِنْدَهُ عِشْرِينَ لَيْلَةً، فَظَنَّ أَنَّا اشْتَقْنَا أَهْلَنَا، وَسَأَلَنَا عَمَّنْ تَرَكْنَا فِي أَهْلِنَا، فَأَخْبَرْنَاهُ، وَكَانَ رَفِيقًا رَحِيمًا فَقَالَ " ارْجِعُوا إِلَى أَهْلِيكُمْ فَعَلِّمُوهُمْ وَمُرُوهُمْ، وَصَلُّوا كَمَا رَأَيْتُمُونِي أُصَلِّي، وَإِذَا حَضَرَتِ الصَّلاَةُ فَلْيُؤَذِّنْ لَكُمْ أَحَدُكُمْ، ثُمَّ لِيَؤُمَّكُمْ أَكْبَرُكُمْ ".

**6008.** அபூ சுலைமான் மாலிக் இப்னு ஹுவைரிஸ்(ரலி) அறிவித்தார் (பனூ லைஸ் குலத்துக் குழுவில்) சம வயதுடைய இளைஞர்களான நாங்கள் நபி(ஸல்) அவர்களிடம் வந்தோம். அவர்களுடன் இருபது நாள்கள் தங்கினோம். நாங்கள் எங்கள் குடும்பத்தினரிடம் (திரும்பிச்) செல்ல ஆசைப்படுவதை அறிந்த நபி(ஸல்) அவர்கள் (ஊரில்) நாங்கள்விட்டுவந்த எங்கள் குடும்பத்தாரைப் பற்றி விசாரித்தார்கள். நாங்கள் அவர்களைப் பற்றித் தெரிவித்தோம். நபி(ஸல்) அவர்கள் நல்ல தோழராகவும் இரக்க குணமுடையவர்களாகவும் இருந்தார்கள். எனவே, நபி(ஸல்) அவர்கள், 'நீங்கள் உங்கள் குடும்பத்தினரிடம் திரும்பிச் சென்று அவர்களுக்குக் கல்வி கற்றுக் கொடுங்கள். அவர்களை (கடமையானவற்றைச் செய்யுமாறு) பணியுங்கள். என்னை எவ்வாறு தொழக் கண்டீர்களோ அவ்வாறே தொழுங்கள். தொழுகை நேரம் வந்ததும் உங்களில் ஒருவர் பாங்கு (தொழுகை அறிவிப்புச்) சொல்லட்டும்; பிறகு உங்களில் (வயதில்) மூத்தவர் உங்களுக்குத் தொழுகை நடத்தட்டும்' என்றார்கள்.32 Book: 78 - **ஸஹீஹுல் புகாரி**

எனவே நாம் ரஸூலுல்லாஹ் صَلَّي الله عَلَيْهِ وَسلَّمَ அவர்களின் தொழுகை முறைப்படி நாம் தொழ முயற்சி செய்ய வேண்டும். எனினும் தொழுகையில் நாம் செய்யக்கூடிய செயல்களும், நமது துஆக்களும் ஒரே மாதிரியான தரத்தில் இல்லை. சில செயல்களும், துஆக்களும் தொழுகையில் கட்டாயமாக்கப்பட்டுள்ளன. அவற்றைச் செய்யாமல் விட்டால் தொழுகை கூடாமல் போய்விடும். உதாரணமாக முந்தைய பாடத்தில் கூடப்பட்டுள்ள ஒரு ஹதீதை நினைவு கூறுகிறோம்.

புஹாரி 757

அபு ஹுரைராஹ் رَضِـيَ الله عَنْهُ அறிவிப்பதாவது,

عَنْ أَبِي هُرَيْرَةَ، أَنَّ رَسُولَ اللَّهِ صلى الله عليه وسلم دَخَلَ الْمَسْجِدَ، فَدَخَلَ رَجُلٌ فَصَلَّى فَسَلَّمَ عَلَى النَّبِيِّ صلى الله عليه وسلم فَرَدَّ وَقَالَ " ارْجِعْ فَصَلِّ، فَإِنَّكَ لَمْ تُصَلِّ ". فَرَجَعَ يُصَلِّي كَمَا صَلَّى ثُمَّ جَاءَ فَسَلَّمَ عَلَى النَّبِيِّ صلى الله عليه وسلم فَقَالَ " ارْجِعْ فَصَلِّ فَإِنَّكَ لَمْ تُصَلِّ " ثَلاَثًا. فَقَالَ وَالَّذِي بَعَثَكَ بِالْحَقِّ مَا أُحْسِنُ غَيْرَهُ فَعَلِّمْنِي. فَقَالَ " إِذَا قُمْتَ إِلَى الصَّلاَةِ فَكَبِّرْ، ثُمَّ اقْرَأْ مَا تَيَسَّرَ مَعَكَ مِنَ الْقُرْآنِ، ثُمَّ ارْكَعْ حَتَّى تَطْمَئِنَّ

رَاكِعًا، ثُمَّ ارْفَعْ حَتَّى تَعْتَدِلَ قَائِمًا، ثُمَّ اسْجُدْ حَتَّى تَطْمَئِنَّ سَاجِدًا، ثُمَّ ارْفَعْ حَتَّى تَطْمَئِنَّ جَالِسًا، وَافْعَلْ ذَلِكَ فِي صَلاَتِكَ كُلِّهَا ".

**757.** அபூ ஹுரைரா(ரலி) அறிவித்தார். நபி(ஸல்) அவர்கள் பள்ளிக்கு வந்தார்கள். ஒரு மனிதரும் (அந்த நேரத்தில்) பள்ளிக்கு வந்து தொழலானார். (தொழுது முடித்ததும்) நபி(ஸல்) அவர்களுக்கு அவர் ஸலாம் கூறினார். நபி(ஸல்) அவர்கள் பதில் ஸலாம் கூறினார்கள். அந்த மனிதர் முன்பு தொழுதது போன்றே மீண்டும் தொழுதுவிட்டு வந்து நபி(ஸல்) அவர்களுக்கு ஸலாம் கூறினார். 'திரும்பவும் தொழுவீராக! நீர் தொழவே இல்லை' என்று இறைத்தூதர்(ஸல்) அவர்கள் கூறினார்கள். இவ்வாறு மூன்று முறை நடந்தது. அதன் பிறகு அந்த மனிதர் 'சத்திய மார்க்கத்துடன் உங்களை அனுப்பியுள்ள இறைவன் மீது ஆணையாக இவ்வாறு தொழுவதைத் தவிர வேறு எதையும் நான் அறிந்திருக்கவில்லை! எனவே எனக்குக் கற்றுத் தாருங்கள்!' என்று கேட்டார்.

'நீர் தொழுகைக்காக நின்றதும் தக்பீர் கூறும்! பின்னர் குர்ஆனில் உமக்குத் தெரிந்தவற்றை ஓதும்! பின்னர் அமைதியாக ருகூவு செய்வீராக! பின்னர் ருகூவிலிருந்து எழுந்து சரியான நிலைக்கு வருவீராக! பின்னர் நிதானமாக ஸஜ்தா செய்வீராக! ஸஜ்தாவிலிருந்து எழுந்து நிதானமாக உட்கார்வீராக! இவ்வாறே உம்முடைய எல்லாத் தொழுகையிலும் செய்து வருவீராக! என்று இறைத்தூதர்(ஸல்) அவர்கள் கூறினார்கள். Book: 10 - **ஸஹீஹுல் புகாரி**

எனவே அவசர அவசரமாகத் தொழுவதில் எந்த பயனும் இல்லை.

சில விஷயங்கள் தொழுகையில் மறந்து விட்டால், அதற்குப் பதிலாக இரண்டு மறதி ஸஜ்தா (ஸஜ்ஹா சவ்) செய்தால் கூடிவிடும். உதாரணத்திற்கு, முதல் தஷஹ்ஹுத் (அத்தஹிய்யாத்) அமர்வில், மறதியில அமராமல் எழுந்து விட்டால், தொழுகையின் முடிவில் இரண்டு மறதி ஸஜ்தா (ஸஜ்ஹா சவ்) செய்தால் கூடிவிடும்.

முஸ்லிம் 570

அப்துல்லாஹ் இப்னு புஹைனாஹ் رَضِيَ الله عَنْهُ அறிவிப்பதாவது,

عَنْ عَبْدِ اللَّهِ ابْنِ بُحَيْنَةَ، قَالَ صَلَّى لَنَا رَسُولُ اللَّهِ صلى الله عليه وسلم رَكْعَتَيْنِ مِنْ بَعْضِ الصَّلَوَاتِ ثُمَّ قَامَ فَلَمْ يَجْلِسْ فَقَامَ النَّاسُ مَعَهُ فَلَمَّا قَضَى صَلاَتَهُ وَنَظَرْنَا تَسْلِيمَهُ كَبَّرَ فَسَجَدَ سَجْدَتَيْنِ وَهُوَ جَالِسٌ قَبْلَ التَّسْلِيمِ ثُمَّ سَلَّمَ .

**989.** அப்துல்லாஹ் பின் புஹைனா அல்அஸ்தீ (ரலி) அவர்கள் கூறியதாவது: அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் தமது தொழுகையில் இரண்டு ரக்அத்களை முடித்த பின் அமருவதை விரும்புவார்கள். ஆனால், (ஒரு நாள்) அமராமல் (மூன்றாவது ரக்அத்துக்காக) எழுந்து தொடர்ந்து தொழுதார்கள். தொழுகை முடியும் தறுவாயில் சலாம் கொடுப்பதற்கு முன் (முதல் இருப்பில் அமராததற்குப் பரிகாரமாக இரு) சஜ்தாக்கள் செய்தார்கள். பிறகு சலாம் கொடுத்தார்கள். Book: 5- **ஸஹீஹ் முஸ்லிம்**

சில அறிவிப்பின்படி, ரஸூலுல்லாஹ் صَلَّى الله عَلَيْهِ وَسَلَّمَ எழுந்த நிலையில, ஸஹாபாக்கள் உட்கார்ந்திருந்தார்கள். அவர்களை எழுந்திருக்குமாறு அவர்கள் சைகை செய்து, தொழுகையை ஸஜ்தா சவ்வைக் கொண்டு முடித்தார்கள்.

இன்னும் சில விஷயங்களை நாம் விட்டால், அதனால் தொழுகை வீணாகாது. அதற்கு ஸஜ்தா சவ்வும் செய்யத் தேவையில்லை. உதாரணமாக, தொழுகையின் ஆரம்பத்தில், அத்தியாயம் அல் ஃபாத்திஹாவுக்கு முன்னால் ஓதப்படும் சில துஆக்கள். இவை ஓதப்பட வேண்டும் என்று கட்டாயமாக்கப்படவில்லை என்பதால், இதனை விட்டால் தவறில்லை. அதுபோல, இடண்டாவது ரகஅத்திற்கு எழுந்திருக்கும் முன்பாக சிறிது அமர்ந்திருப்பது. இதனை விட்டாலும் தவறில்லை.

இவ்வாறு மூன்று வெவ்வேறு தரத்தில் தொழுகையின் செயல்களும், துஆக்களும் உள்ளன. விட்டால் சரி செய்ய முடியாத கட்டாயமான விஷயங்கள், மறதியால் விட்டால் ஸஜ்தா சவ்வின் மூலம் சரி செய்யக் கூடிய விஷயங்கள் மற்றும் விட்டால் தொழுகை வீணாகிவிடாத விஷயங்கள் என மூன்று விஷயங்கள் கூறித்து நாம் அறிந்து கொள்வோம்.

## தொழுகையின் தூண்கள்

1. நின்று தொழுவது:

நின்று தொழ சக்தி உள்ளவர்கள் நின்றுதான் தொழ வேண்டும். உட்கார்ந்து தொழுதால் தொழுகை கூடாது. ந.்.பில் தொழுகை உட்கார்ந்து தொழுவது அனுமதிக்கப் பட்டது. ஆனால் கட்டாயத் தொழுகையில் நிற்பது கட்டாயமாகும். சிலருக்கு ஸஜ்தா செய்வதில் அல்லது ருக்கூ போவதில் மட்டும் சிரமம் என்றிருந்தால், அவர்களும் ஸஜ்தா மற்றும் ருக்கூவுக்கு மாற்று வழியைப் பயன்படுத்தலாமே அல்லாமல், அவர்கள் நிற்க முடியும் என்றிருந்தால், தொழுகையை நின்றுதான் தொழ வேண்டும். மற்றவற்றிற்கு நிர்ப்பந்தத்தின் காரணமாக வேறு விதமாகச் செய்து கொள்ளலாம்.

2. தக்பீர் சொல்லி தொழுகையை ஆரம்பிப்பது:

இது தக்பீர் தஹ்ரிமா என்று சொல்லப்படும். தஹ்ரிமா என்பது, தொழுகை அல்லாத செயல்களை இந்தத் தக்பீர், ஹராமாக ஆக்கிவிடுகிறது.

3. அத்தியாயம் அல் ∴பாத்திஹா ஓதுதல்:

எத்தனை ரகஅத்துகள் தொழுகை என்றாலும், ஒவ்வொரு ரகஅத்திலும் அத்தியாயம் அல் ∴பாத்திஹாவை ஓத வேண்டும்.

4. ருக்கூ செய்வது

5. ருக்கூவுக்குப் பிறகு மறுபடியும் எழுந்து நிலைக்கு வருவது.

6. ஸஜ்தா செய்வது

7. இரண்டு ஸஜ்தாவுக்கும் இடையில் அமர்ந்திருப்பது:

இவ்வாறு இரண்டு ஸஜ்தாவுக்கும் இடையில் சிறிது நேரம் அமர்ந்திருப்பது கட்டாயம் ஆகும். அவ்வாறில்லாமல் உடனே இரண்டாவது ஸஜ்தாவிற்குச் சென்றால் தொழுகை கூடாது.

8. இறுதித் தஷஹ்ஹுத்திற்காக அமர்ந்திருப்பது.

இரண்டு ரகஅத் தொழுகையில் ஒரு தஷஹ்ஹுத்தான் இருக்கும். அதுதான் இறுதித் தஷஹ்ஹுத் ஆகும். அதற்கு அதிகமாக ரகஅத் தொழுகையில் இரண்டாவது தஷஹ்ஹுத் இறுதித் தஷஹ்ஹுத் ஆகும்.

9. தஷஹ்ஹுத் துஆவை ஓதுவது:

கீழ்க்கண்ட துஆவை ஓதுவதும் தூண் ஆகும்.

التَّحِيَّاتُ لِلّٰهِ وَالصَّلَوَاتُ وَالطَّيِّبَاتُ ،السَلاَمُ عَلَى النَّبِيِّ

ورَحْمَةُ اللهِ وبَرَكَاتُهُ ،السَّلاَمُ عَلَيْنَا وعَلَى عِبَادِ اللهِ الصَّالِحِيْنَ

أَشْهَدُ أَنْ لَاإِلٰهَ إِلاَّ اللهُ وأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُوْلُهُ

நாவினால் சொல்லப்படும் வணக்கங்கள், உடலால் செய்யப்படும் அமல்கள் மற்றும் தூய்மையான (செலவளித்தல் மூலம் செய்யப்படும்) வணக்கங்கள் அனைத்தும் அல்லாஹ் வுக்கே! இறைத்தூதர் மீது ஸலாமும், அருளும், ஆசியும் உண்டாவதாக! எங்களின் மீதும், நற்செயல் செய்யும் அடியார்கள் அனைவரின் மீதும் ஸலாம் உண்டாவதாக! அல்லாஹ் வைத் தவிர வழிபட யாருமில்லை என நான் சான்று கூறுகிறேன். மேலும் முஹம்மது صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ அவர்கள் அவனது அடியாரும், திருத்தூதரும் ஆவார்கள் எனவும் நான் சான்று கூறுகிறேன்.

10. முடிக்கும் போது ஸலாம் சொல்வது:

இரண்டு பக்கமும் ஸலாம் சொல்வது தூண் ஆகும். ந∴பில் மற்றும் ஜனாஸா தொழுகைகளில் ஒரு ஸலாம் சொல்வது போதுமானதாக இருந்தாலும், கட்டாயத் தொழுகைகளில் இரண்டு ஸலாம் சொல்ல வேண்டும்.

11. தொழுகையில் நிதானம் வேண்டும்:

தொழுகையின் ஒவ்வொரு ருக்குனையும் நிதானமாகச் செய்ய வேண்டும். அவசரம் காட்டக் கூடாது.

12. இந்தத் தூண்களையும் ரஸுலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ அவர்களினால் கூறப்பட்ட வரிசைப்படி செய்ய வேண்டும்.

ருக்கூவிலிருந்துத் தலையைத் தூக்குவது, மற்றும் அதைப் போல் ஸஜ்தாவிலிருந்து தலையைத் தூக்குவது ஆகிய இரண்டையும் தனித்தனியான ருக்னாக சிலர் கணக்கில் கொண்டு, மொத்தத் தூண்கள் பதினான்கு என்றும் கூறுவார்கள். எனினும் அடுத்த நிலைக்கு வரும்போது, தலையைத் தூக்குவதும் அடங்கும் என்பதால் தனியாகச் சொல்ல வேண்டியதில்லை.

இந்த பன்னிரண்டுத் தூண்களில் ஒரு தூணையும் தெரிந்தோ, அல்லது மறந்தோ விட்டால் அவரது தொழுகை கூடாது. மறதிக்கான ஸஜ்தாவை மட்டும் செய்தால் மட்டும் அத்தொழுகை சரியாகாது. விட்ட தூணையும் செய்தபிறகு, மறதிக்கான ஸஜ்தாவை செய்ய வேண்டும்.

உதாரணமாக நிற்க சக்தியிருந்தும், உட்கார்ந்து தொழுதால், அவர் தொழுகையைத் திருப்பித் தொழ வேண்டும். அவர் முதல் மூன்று ரகஅத்துகள் நின்றும், நான்காவது ரகஅத்தில் சக்தியிருந்தும் அமர்ந்து தொழுதுவிட்டால், அந்த ரகஅத்தைத் திரும்பத் தொழுது. மறதிக்கான ஸஜ்தாவை செய்ய வேண்டும்.

அதைப் போல, ஆரம்பத் தக்பீர் சொல்லாமல் ஒருவர் தொழுகையைத் தொழுதுவிட்டால், அவர் மறுபடியும் திரும்பத் தொழ வேண்டும்.

முன்னர் சொல்லப்பட்ட ஹதீதின்படி, நிதானமில்லாமல் தொழுதால், ரஸுலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ அவர்களின் அறிவுறுத்தலின்படி, அந்தத் தொழுகையையும் திரும்பத் தொழ வேண்டும்.

அத்தியாயம் அல் ∴பாத்திஹா ஒரு ரகஅத்தில் மட்டும் ஓதவில்லை என்றால், ஒரு ரகஅத்தை மட்டும் திரும்பத் தொழ வேண்டும். பின்னர் மறதிக்கான ஸஜ்தாவை செய்ய வேண்டும்.

இவ்வாறு மேலே சொல்லப் பட்ட எந்த தூணை விட்டாலும், இதே மாதிரியான சட்டத்தை நாம் மேற் கொள்ள வேண்டும். வரிசையை மாற்றித் தொழுதாலும் இவ்வாறே, தேவைக்குத் தகுந்தவாறு முழுத் தொழுகையையோ அல்லது குறிப்பிட்ட அளவான ரகஅத்தையோ திருப்பித் தொழ வேண்டும.

இவை தொழுகையின் தூண்கள் பற்றி செய்திகளாகும்.

**Fiqh 19 - Laws Related to Prayer 4 - Pillars of Prayer**

# ஃபிக்ஹ் வகுப்பு 19 - தொழுகை தொடர்பான சட்டங்கள் 4 - தொழுகையின் கடமைகள் மற்றும் சுன்னத்கள்

**ஆசிரியர்: அஷ் ஷெய்க் உவைஸ் உமரி நஸீரி**

இன்றைய பாடத்தில் தொழுகையின் வாஜிபுக்கள் (கடமைகள்) மற்றும் ஸுன்னாஹ்கள் பற்றி அறிவோம்.

## தொழுகையின் வாஜிபுக்கள் (கடமைகள்)

1. முதல் தக்பீர் (தக்பீர் தஹ்ரிமா) அல்லாத மற்ற எல்லா தக்பீர்களும் கடமையாகும். முதல் தக்பீர் ருக்ன்களில் ஒன்று என்பதனை அறிவீர்கள். மற்ற தக்பீர்களான ருக்கூ செல்லும்போது, ஸஜ்தா செல்லும்போது போற்றவை கடமையானவைகளாகும்.

2. ருக்கூவிலிருந்து எழுந்திருக்கும்போது,

سَمِعَ اللهُ لِمَنْ حَمِدَهُ

தன்னைப் புகழ்பவனை அல்லாஹ் கேட்கிறான் (பதிலளிக்கிறான்)

என்று சொல்வது.

3. குக்கூவிலிருந்த எழுந்த பிறகு,

رَبَّنَا ولَكَ الْحَمْدُ

எங்களது இரட்சகனே! எல்லாப் புகழும் உனக்கே (உரித்தது)

மேலும் கீழ்க்கண்ட விதமாகவும் எந்த ஒன்றையும் நாம் கூறலாம்.

رَبَّنَا لَكَ الْحَمْدُ ،اَللَّهُمَّ رَبَّنَا ولَكَ الْحَمْدُ ،اَللَّهُمَّ رَبَّنَا لَكَ الْحَمْدُ

4. ருக்கூவில் ஒரு முறையாவது, ரஸூலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ கற்றுக் கொடுத்த துஆவை ஓதுவது. உதாரணமாக,

سُبْحَانَ رَبِّيَ العَظِيْمِ

மகத்துவமிக்க எனது இரட்சகன் தூய்மையானவன்.

5. ஸஜ்தாவில் ஒரு முறையாவது, ரஸூலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ கற்றுக் கொடுத்த துஆவை ஓதுவது. உதாரணமாக,

سُبْحَانَ رَبِّيَ الأَعْلَى

(மிகவும்) உயர்வான எனது இரட்சகன் தூய்மையானவன்.

அத்துடன் “ஸுப்பூஹுன் குத்தூஸுன் ரப்புல் மலாயிகத்தி வர் ரூஹி” என்றும் ஓதலாம்.

அல்லது, இவ்வாறும் ஓதுவார்கள்.

2) سُبْحَانَكَ اَللّٰهُمَّ رَبَّنَا وَبِحَمْدِكَ اَللّٰهُمَّ اغْفِرْ لِيْ

2) யாஅல்லாஹ்! உன்னை நான் தூய்மையானவன் என துதிக்கிறேன்.
எங்கள் இரட்சகனே! உன் புகழைக்கொண்டு உன்னை போற்றுகிறோம்.
யா அல்லாஹ்! என்னை மன்னித்தருள்வாயாக.

6. இரண்டு ஸஜ்தாவிற்கு இடையில் துஆ செய்வது

உதாரணமாக,

رَبِّ اغْفِرْلِي ،رَبِّ اغْفِرْلِي

இரட்சகனே! என்னை மன்னிப்பாயாக! இரட்சகனே! என்னை மன்னிப்பாயாக!

இந்தத் துஆவையும் ஓதலாம்,

اَللَّهُمَ اغْفِرْلِي ،وَرْحَمْنِي ،وَجْبُرْنِي ،وَرْفَعْنِي ،وَعَافِنِي ،وَرْزُقْنِي

யா அல்லாஹ்! என்னை மன்னிப்பாயாக! என் மீது அருள் புரிவாயாக! எனக்குப் மனநிறை அளிப்பாயாக! எனது தரத்தை உயர்த்துவாயாக! எனக்கு சுகம் அளிப்பாயாக! எனக்கு வாழ்வாதாரம் அளிப்பாயாக!

சில அறிஞர்கள் இரு ஸஜ்தாவிற்கு இடையில் உள்ள இந்தத் துஆக்கள் கடமை இல்லை என்றும், ஸுன்னாஹ் என்றும், ஓதினால் நன்மை என்றும் கூறுகிறார்கள்.

7. முதல் தஷஹ்ஹுத்திற்காக அமர்வது.

8. அந்த அமர்வில் இதனை ஓத வேண்டும்,

التَّحِيَّاتُ لِلهِ وَالصَّلَوَاتُ وَالطَّيِّبَاتُ ،السَلاَمُ عَلَى النَّبِيِّ
ورَحْمَةُ اللهِ وبَرَكَاتُهُ ،السَّلَامُ عَلَيْنَا وعَلَى عِبَادِ اللهِ الصَّالِحِيْنَ
أَشْهَدُ أَنْ لَاإِلٰهَ إِلاَّ اللهُ وأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُوْلُهُ

நாவினால் சொல்லப்படும் வணக்கங்கள், உடலால் செய்யப்படும் அமல்கள் மற்றும் தூய்மையான (செலவளித்தல் மூலம் செய்யப்படும்) வணக்கங்கள் அனைத்தும் அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَىவுக்கே! இறைத்தூதர் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَமீது ஸலாமும், அருளும், ஆசியும் உண்டாவதாக! எங்களின் மீதும், நற்செயல் செய்யும் அடியார்கள் அனைவரின் மீதும் ஸலாம் உண்டாவதாக! அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَى வைத் தவிர வழிபட யாருமில்லை என நான் சான்று கூறுகிறேன். மேலும் முஹம்மது صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ அவர்கள் அவனது அடியாரும், திருத்தூதரும் ஆவார்கள் எனவும் நான் சான்று கூறுகிறேன்.

9. இறுதி தஷஹ்ஹுத்தில் அத்தஹியாத்திற்குப் பிறகு ரஸுலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ அவர்களின் மீது ஸலவாத்து ஓத வேண்டும்.

اَللَّهُمَ صَلِّ عَلَى مُحَمَّدٍ وعَلَى آلِ مُحَمَّدٍ كَمَا صَلَّيْتَ عَلَى
إِبْرَاهِيْمَ وعَلَى آلِ إِبْرَاهِيْمَ إِنَّكَ حَمِيْدٌ مَجِيْدٌ ،اَللَّهُمَ بَارِكْ عَلَى
مُحَمَّدٍ وعَلَى آلِ مُحَمَّدٍ كَمَا بَارَكْتَ عَلَى إِبْرَاهِيْمَ وعَلَى آلِ
إِبْرَاهِيْمَ إِنَّكَ حَمِيْدٌ مَجِيْدٌ

யா அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَى! இப்ராஹீம் عَلَيْهِ السَّلاَمُஅவர்களின் மீது மற்றும் இப்ராஹீம் عَلَيْهِ السَّلاَمُ அவர்களின் குடும்பத்தினரின் மீது நீ ஸலவாத்து சொன்னதைப் போல, முஹம்மது صَلَّى الله عَلَيْهِ وَسلَّمَ அவர்களின் மீதும், முஹம்மது صَلَّى الله عَلَيْهِ وَسلَّمَ அவர்களின் குடுப்பத்தினர்களின் மீதும் ஸலவாத்து சொல்வாயாக! நீயே புகழும், மகிமையும் மிக்கவன். யா அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَى! இப்ராஹீம் عَلَيْهِ السَّلاَمُ அவர்களின் மீது மற்றும் இப்ராஹீம் عَلَيْهِ السَّلاَمُ அவர்களின் குடும்பத்தினரின் மீது நீ பரக்கத் செய்ததைப் போல, முஹம்மது صَلَّى الله عَلَيْهِ وَسلَّمَ அவர்களின் மீதும், முஹம்மது صَلَّى الله عَلَيْهِ وَسلَّمَ அவர்களின் குடுப்பத்தினர்களின் மீதும் பரக்கத் செய்வாயாக! நீயே புகழும், மகிமையும் மிக்கவன்.

முதல் தஷஹ்ஹுத்தில் ஸலவாத்து சொல்ல வேண்டியதில்லை. எப்போதாவது சொன்னால் தவறில்லை.

ஸலவாத்து ஓதுவதில் கருத்து வேறுபாடுகள் உள்ளன. சில அறிஞர்கள் இதனை ருக்ன் எனவும், சிலர் இதனை வாஜிபு எனவும், சிலர் இதனை ஸுன்னாஹ் எனவும் கூறுகிறார்கள்.

மேலே கூறப்பட்டுள்ள கடமைகளில் ஏதேனும் ஒன்றை மறதியின் காரணமாக விட்டால், அதற்காக அதனை ருக்ன் போல திருப்பிச் செய்ய வேண்டியதில்லை. இறுதியில் ஸஜ்தா ஸஹ்வு செய்தால் போதுமானது. ருக்னுக்கும், வாஜிபுக்கும் உள்ள வேறுபாடு இதுதான். ருக்னை விட்டால், முழு தொழுகையையோ, அல்லது விட்ட ரகஅத்தையோ அல்லது விட்ட ருக்னை மட்டும் திரும்பச் செய்து, பின்னர் ஸஜ்தா ஸஹ்வு செய்ய வேண்டும். கடமையில் ஏதேனும் ஒன்றை விட்டால், ஸஜ்தா ஸஹ்வு செய்தால் போதுமானது.

முஸ்லிம் 570

அப்துல்லாஹ் இப்னு புஹைனாஹ் رَضِي الله عَنْهُஅறிவிப்பதாவது,

عَنْ عَبْدِ اللَّهِ ابْنِ بُحَيْنَةَ، قَالَ صَلَّى لَنَا رَسُولُ اللَّهِ صلى الله عليه وسلم رَكْعَتَيْنِ مِنْ بَعْضِ الصَّلَوَاتِ ثُمَّ قَامَ فَلَمْ يَجْلِسْ فَقَامَ النَّاسُ مَعَهُ فَلَمَّا قَضَى صَلاَتَهُ وَنَظَرْنَا تَسْلِيمَهُ كَبَّرَ فَسَجَدَ سَجْدَتَيْنِ وَهُوَ جَالِسٌ قَبْلَ التَّسْلِيمِ ثُمَّ سَلَّمَ .

**989.** அப்துல்லாஹ் பின் புஹைனா அல்அஸ்தீ (ரலி) அவர்கள் கூறியதாவது: அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் தமது தொழுகையில் இரண்டு ரக்அத்களை முடித்த பின் அமருவதை விரும்புவார்கள். ஆனால், (ஒரு நாள்) அமராமல் (மூன்றாவது ரக்அத்துக்காக) எழுந்து தொடர்ந்து தொழுதார்கள். தொழுகை முடியும் தறுவாயில் சலாம் கொடுப்பதற்கு முன் (முதல் இருப்பில் அமராததற்குப் பரிகாரமாக இரு) சஜ்தாக்கள் செய்தார்கள். பிறகு சலாம் கொடுத்தார்கள்.
Book: 5- ***ஸஹீஹ் முஸ்லிம்***

சில அறிவிப்பின்படி, ரஸுலுல்லாஹ் صَلَّى الله عَلَيْهِ وَسلَّمَஎழுந்த நிலையில, ஸஹாபாக்கள் உட்கார்ந்திருந்தார்கள். அவர்களை எழுந்திருக்குமாறு அவர்கள் சைகை செய்து, தொழுகையை ஸஜ்தா ஸஹ்வைக் கொண்டு முடித்தார்கள்.

## தொழுகையின் ஸுன்னாஹ்கள்

தொழுகையின் ருக்னை விட்டால், திருப்பி செய்துவிட்டு, ஸஜ்தா ஸஹ்வு செய்ய வேண்டும். வாஜிபை விட்டுவிட்டால் ஸஜ்தா ஸஹ்வு செய்தால் போதும். ஸுன்னாஹ்வை விட்டுவிட்டால், ஸஜ்தா

ஸஹ்வும் செய்யத் தேவையில்லை. எனினும் ஸுன்னாஹ் விஷயத்தில் நாம் அலட்சியமாக இருப்பது ஏற்றமில்லை. அவற்றைப் பேண வேண்டும். நாம் முன்னர் குறிப்பிட்ட இந்த ஹதீதில்

وَصَلُّوا كَمَا رَأَيْتُمُونِي أُصَلِّي

ரஸுலுல்லாஹ் صَلَّى الله عَلَيْهِ وَسَلَّم கூறியுள்ளார்கள், ‘‘நான் தொழுவதை நீங்கள் காண்பது போலத் தொழுவீர்களாக!’’

தொழுகையின் தரத்ததை இவ்வாறு பிரிப்பது, தொழுகையின் சட்டத்தைப் புரிந்து கொள்ளத்தான் அன்றி, ஸுன்னாஹ்வை நாம் விட்டுவிடலாம் என்ற நோக்கில் பிரிக்கப்படவில்லை.

சொற்கள் மற்றும் செயல்கள் ஆகிவற்றைக் கொண்டு ஸுன்னாஹ்களை இரண்டு வகைகளாகப் பிரிக்கலாம்.

சொற்கள் சம்பந்தப்பட்ட ஸுன்னாஹ்கள்:

1. தக்பீர் தஹ்ரிமாவுக்குப் பின்பு ஓதப்படும் ஆரம்ப துஆ (துஆ அல் இஸதி.்.ப்தாஹ்)

பல துஆக்கள் உள்ளன. எனினும் பிரபலமான துஆ:

سُبْحَانَكَ اللَّهُمَّ وَبِحَمْدِكَ وَتَبَارَكَ اسْمُكَ وَتَعَالَى جَدُّكَ وَلاَ إِلٰهَ غَيْرُكَ

யா அல்லாஹ்! தூய்மை அனைத்தும் உனக்கே! உனக்கே எல்லாப் புகழும், நன்றியும். உனது திருநாமம் பரகத்தானது. உனது மகத்துவம் உயர்ந்து விட்டது. உன்னைத் தவிர வேறு (இறைவன்) இல்லை.

மற்ற துஆக்கள்

إِنِّي وَجَّهْتُ وَجْهِيَ لِلَّذِيْ فَطَرَ السَّمَاوَاتِ وَالْأَرْضَ حَنِيْفًا
وَمَا أَنَا مِنَ الْمُشْرِكِيْنَ

வானங்களையும் பூமியையும் செம்மையாக படைத்த இறைவனின் பால் என்னுடைய முகத்தை முன்னோக்கிவிட்டேன் மேலும் நான் இணைவைப்போரை விட்டும் நீங்கிவிட்டேன்

أَللَّهُمَّ بَاعِدْ بَيْنِي وَبَيْنَ خَطَايَاىَ كَمَا بَاعَدْتَ بَيْنَ الْمَشْرِقِ وَالْمَغْرِبِ، اللَّهُمَّ نَقِّنِي مِنَ الْخَطَايَا كَمَا يُنَقَّى الثَّوْبُ الأَبْيَضُ مِنَ الدَّنَسِ، اللَّهُمَّ اغْسِلْ خَطَايَاىَ بِالْمَاءِ وَالثَّلْجِ وَالْبَرَدِ

யா அல்லாஹ்! கிழக்கிற்கும் மேற்கிற்கும் இடைப்பட்ட தூரத்தை போல் எனக்கும், பாவத்திற்கும் இடையில் தூரத்தை ஆக்குவாயாக! யா அல்லாஹ்! வெள்ளை ஆடையை அழுக்கிலிருந்து கழுவப்படுவதைப் போல எனது பாவங்களையும் கழுவுவாயாக! எனது பாவங்களை நீரினாலும், பனியினாலும், ஆலங்கட்டியினாலும் கழுவுவாயாக!

ஷேக் அல்பானி رَحْمَهُ الله தமது நூலில் எட்டு விதமான துஆக்களைப் பதிந்துள்ளார்கள்.

2. முதல் ரகஅத்தில் அத்தியாயம் ஃபாத்திஹாவுக்கு முன்னால்

أُعُوْذُ بِاللهِ مِنَ الشَّيْطَانِ الرَّجَيْمِ مِنْ هَمْزِهِ وَنَفْخِهِ وَنَفْثِهِ

எடுத்தெரியப்பட்ட ஷைத்தானிடமிருந்து, அவனிடமுள்ள மனக்குழப்பத்திலிரும், அவனுடைய அகந்தையிலிருந்தும், அவனது கெட்ட கவியிலிருந்தும், அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَى விடம் பாதுகாப்பு தேடுகிறேன்.

بِسْمِ اللهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ

அளவற்ற அருளானனும், நிகரற்ற அன்புடையோனுமாகிய அல்லாஹ்வின் திருநாமத்தால்

3. அத்தியாயம் ∴பாத்திஹாவின் முடிவில் ‘‘ஆமீன்’’ கூறுவது.

4. அத்தியாயம் ∴பாத்திஹாவுக்குப் பிறகு, குர்ஆனின் மற்ற அத்தியாயங்கள் அல்லது வசனங்கள் ஓதுவது.

5. இறுதித் தஷஹ்ஹுத்தில் அத்தஹியாத்து மற்றும் ஸலவாத்திற்குப் பிறகு, கீழ்க்கண்ட துஆக்களில் எதனையும் ஓதலாம்.

புஹாரி 832

ரஸுலுல்லாஹ் صَلَّي الله عَلَيْهِ وَسلَّمَ அவர்களின் துணைவியார் அன்னை ஆயிஷா رَضِي الله عَنْها அவர்கள் அறிவிப்பதாவது,

عَنْ عَائِشَةَ، زَوْجِ النَّبِيِّ صلى الله عليه وسلم أَخْبَرَتْهُ أَنَّ رَسُولَ اللَّهِ صلى الله عليه وسلم كَانَ يَدْعُو فِي الصَّلاَةِ " اللَّهُمَّ إِنِّي أَعُوذُ بِكَ مِنْ عَذَابِ الْقَبْرِ وَأَعُوذُ بِكَ مِنْ فِتْنَةِ الْمَسِيحِ الدَّجَّالِ، وَأَعُوذُ بِكَ مِنْ فِتْنَةِ الْمَحْيَا وَفِتْنَةِ الْمَمَاتِ، اللَّهُمَّ إِنِّي أَعُوذُ بِكَ مِنَ الْمَأْثَمِ وَالْمَغْرَمِ"

**832.** ஆயிஷா(ரலி) அறிவித்தார். 'இறைவா! கப்ருடைய வேதனையைவிட்டும் உன்னிடம் பாதுகாப்புக் கேட்கிறேன். தஜ்ஜாலின் குழப்பத்தைவிட்டும் உன்னிடம் பாதுகாப்புக் கேட்கிறேன். வாழும் போதும் மரணிக்கும் போதும் ஏற்படும் குழப்பத்தைவிட்டும் உன்னிடம் பாதுகாப்புக் கேட்கிறேன். பாவங்களைவிட்டும் கடனைவிட்டும் உன்னிடம் பாதுகாப்புக் கேட்கிறேன்' என்று நபி(ஸல்) அவர்கள் தொழுகையில் துஆச் செய்வார்கள். 'தாங்கள் கடனைவிட்டும் அதிகமாகப் பாதுகாப்புக் கேடும் காரணம் என்ன?' என்று ஒருவர் நபி(ஸல்) அவர்களிடம் கேட்டபோது 'ஒரு மனிதன் கடன் படும்போது பொய் பேசுகிறான்; வாக்களித்துவிட்டு அதை மீறுகிறான்' என்று நபி(ஸல்) அவர்கள் விளக்கமளித்தார்கள். Book: 10 - **ஸஹீஹுல் புகாரி**

திர்மிதி 3531

அப்துல்லாஹ் இப்னு அம்ர் رَضِي الله عَنْهُ அறிவிப்பதாவது,

عَنْ عَبْدِ اللَّهِ بْنِ عَمْرٍو، عَنْ أَبِي بَكْرٍ الصِّدِّيقِ، أَنَّهُ قَالَ لِرَسُولِ اللَّهِ صلى الله عليه وسلم عَلِّمْنِي دُعَاءً أَدْعُو بِهِ فِي صَلاَتِي قَالَ " قُلِ اللَّهُمَّ إِنِّي ظَلَمْتُ نَفْسِي ظُلْمًا كَثِيرًا وَلاَ يَغْفِرُ الذُّنُوبَ إِلاَّ أَنْتَ فَاغْفِرْ لِي مَغْفِرَةً مِنْ عِنْدِكَ وَارْحَمْنِي إِنَّكَ أَنْتَ الْغَفُورُ الرَّحِيمُ "

அபு பக்ரு رَضِي الله عَنْهُ அவர்கள் வினவினார்கள், ‘‘ரஸுலுல்லாஹ் صَلَّي الله عَلَيْهِ وَسلَّمَ அவர்களே! நான் தொழுகையில் துஆ செய்வதற்கு எனக்கு ஒரு துஆ கற்றுக் கொடுங்கள்.’’ அவர்கள் பதிலளித்தார்கள்,

‘‘யா அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَى! நான் எனக்குள் அதிகமாக தீமை செய்துவிட்டேன். உன்னைத் தவிர மன்னிக்கக் கூடியவன் யாருமில்லை. எனவே உன்னுடைய மன்னிப்பிலிருந்து என்னை மன்னிப்பாயாக! எனக்கு அருள் புரிவாயாக! நீயே மன்னிப்பளிப்பவன், மற்றும் நிகரற்ற அன்புடையோன்.’’

6. பஜ்ர், மற்றும் மக்ரிப், இஷா தொழுகைகளின் முதல் இரண்டு ரகஅத்துகளில் கிராஅத்துகளை சப்தமிட்டு ஓதுவது. (ஜஹ்ரி தொழுகை)

7. லுஹர் மற்றும் அஸர் தொழுகைகளில் சப்தமில்லாமல் ஓதுவது. (ஷிர்ரீ தொழுகை)

செயல்கள் சம்பந்தப்பட்ட ஸுன்னாஹ்கள்:

1. தக்பீர் தஹ்ரிமா, ருக்கூவுக்கு செல்லுதல், மீண்டும் நிலைக்கு வருதல், முதல் தஷஹ்ஹுத்திற்குப் பிறகு எழுந்தவுடன், ஆகிய இந்த நேரங்களில் இரு கைகளையும் உயர்த்துவது. கைகளை

தோள்பட்டை வரை அல்லது இரண்டு காதுகளின் சேனை வரை உயர்த்தலாம். கைகள் கிப்லாவை நோக்கி இருக்க வேண்டும். இதனை முப்பதுக்கும் மேற்பட்ட ஸஹாபாக்கள் அறிவித்துள்ளார்கள். இப்னு உமர், மாலிக் இப்னு ஹுவைரித், ஜாபிர் இப்னு அப்துல்லாஹ், அலி ஆகியோர் அறிவித்துள்ளனர்.

புஹாரி 737 முஸ்லிம் 391, இப்னு மாஜாஹ் 868, நஸயீ 881

அபு கிலாபாஹ் رَضِي الله عَنْهُ அறிவிப்பதாவது,

عَنْ أَبِي قِلاَبَةَ، أَنَّهُ رَأَى مَالِكَ بْنَ الْحُوَيْرِثِ إِذَا صَلَّى كَبَّرَ وَرَفَعَ يَدَيْهِ، وَإِذَا أَرَادَ أَنْ يَرْكَعَ رَفَعَ يَدَيْهِ، وَإِذَا رَفَعَ رَأْسَهُ مِنَ الرُّكُوعِ رَفَعَ يَدَيْهِ، وَحَدَّثَ أَنَّ رَسُولَ اللَّهِ صلى الله عليه وسلم صَنَعَ هَكَذَا.

**737.** அபூ கிலாஃபா கூறினார்: மாலிக் இப்னு அல் ஹுவைரிஸ்(ரலி) தொழும்போது தக்பீர் கூறித் தம் கைகளை உயர்த்தினார்கள். ருகூவுக்குச் செல்லும் போதும் தம் கைகளை உயர்த்தினார்கள். ருகூவிலிருந்து தம் கைகளை உயர்த்தினார்கள். நபி(ஸல்) அவர்கள் இவ்வாறு செய்துள்ளதாகவும் அவர்கள் குறிப்பிட்டார்கள். நபி(ஸல்) அவர்கள் தோள் புஜம் வரை கையை உயர்த்தியதாக அபூ ஹுமைத்(ரலி) தம் தோழர்களிடம் கூறினார். Book:10 - **ஸஹீஹுல் புகாரி**

இரு கைகளை உயர்த்துவது பற்றி புஹாரி தனியாக ஒரு நூல் எழுதியுள்ளார்கள். அந்த நூலில் ஹஸன் பஸரி அவர்களின் கூற்றைப் பதிந்துள்ளார்கள். இவர்கள் எண்பதுக்கும் மேற்பட்ட ஸஹாபிகளிடம் கல்வி கற்றவர்கள். அனைத்து ஸஹாபாக்களும் விதிவிலக்கு இல்லாமல் கைகளை உயர்தியதாகக் கூறியுள்ளார்.

அபு தாவூத் 748

அப்துல்லாஹ் இப்னு மஸ்வூத் رَضِي الله عَنْهُ அறிவிப்பதாவது,

عَنْ عَبْدِ الرَّحْمَنِ بْنِ الأَسْوَدِ، عَنْ عَلْقَمَةَ، قَالَ قَالَ عَبْدُ اللَّهِ بْنُ مَسْعُودٍ أَلاَ أُصَلِّي بِكُمْ صَلاَةَ رَسُولِ اللَّهِ صلى الله عليه وسلم قَالَ فَصَلَّى فَلَمْ يَرْفَعْ يَدَيْهِ إِلاَّ مَرَّةً .

"நான் ரஸுலுல்லாஹ் صَلَّي الله عَلَيْهِ وَسلَّمَ அவர்களைப் போல உங்களுக்குத் தொழுது காட்டவா?" பின்னர் அவர் தமது கைகளை ஒரு தடவை மட்டும் உயர்த்திய நிலையில் தொழுதார்."

அடுத்த ஹதீதிலும் இவ்வாறே முதல் தக்பீரில் மட்டும் கைகளை உயர்த்தியதாகப் பதியப்பட்டுள்ளது. எனினும் இந்த இரண்டு ஹதீதுகளும் பலவீனமானவையாகும். எனவே முன்னர் கூறப்பட்ட ஹதீதுகள் கைகளை உயர்த்த வேண்டும் என சொல்லப்பட்டது மிகவும் ஸஹீஹாக உள்ளன. அப்துல் பின் முபாரக் رَحْمَهُ الله عَلَيْهِ, இமாம் ஷா.:.பிய் رَحْمَهُ الله عَلَيْهِ, இமாம் ஹன்.:.பல் رَحْمَهُ الله عَلَيْهِ, இமாம் புஹாரி رَحْمَهُ الله عَلَيْهِ, இமாம் பைஹக்கீ رَحْمَهُ الله عَلَيْهِ போன்ற அறிஞர்கள் கையை முதல் தடவை மட்டும் உயர்த்த வேண்டும் என்ற ஹதீதுகள் பலவீனமானவை என்றே கருதுகிறார்கள். இமாம் அபு ஹனீ.:.பா رَحْمَهُ الله عَلَيْهِ அவர்கள் மட்டும் ஆரம்ப தக்பீரில் மட்டும் கை உயர்த்த வேண்டும் என்று கூறியிருப்பது, அவர்களுக்கு முன்னர் சொல்லப்பட்ட ஹதீதுகள் கிடைக்காமல் போயிருக்கலாம். மேலும் அவர்கள் தங்களுக்குப் பிறகு வேறு ஏதேனும் ஆதாரப்பூர்வமான ஹதீதுகள் கிடைத்தால் அதுவே தங்களின் மத்ஹப் என்று கூறிச் சென்றுள்ளார்கள். எனவே அவ்வாறு கிடைக்கப் பெற்ற ஹதீதுகளின்படி மற்ற நான்கு நிலைகளிலும் கைகளை உயர்த்த வேண்டும் என்பதே சரியாக இருக்கும்.

2. நிலையில் கை கட்டும்போது, வலது கையைக் கொண்டு இடது கையைப் பிடித்துக் கட்டிக் கொள்வது.

3. தொழுகையின்போது, ஸஜ்தா செய்யும் இடத்தை நோக்குவது.

4. ருக்கூ செய்யும்போது, இரண்டு மூட்டுகளையும் கெட்டியாகப் பிடித்துக் கொள்வது. அப்போது கைவிரல்களை விரித்து வைத்துக் கொள்ள வேண்டும்.

5. தஷஹ்ஹுத்தில் அமரும்போது, இடது காலில் படுக்க வைத்து அதன் மீது அமர்ந்து கொள்வது. அதே நேரத்தில் வலது பாதத்தைச் செங்குத்தாக நிறுத்தி வைப்பது. அதன் விரல்கள் கிப்லாவை நோக்கி இருப்பது. இறுதித் தஷஹ்ஹுத்தில் ‘தபர்ருக்’ என்ற அமர்வில் இருப்பது. அதாவது இடது காலை வலது பக்கம் வைத்துக் கொண்டு, தரையில் உட்கார வேண்டும். வலது காலை செங்குத்தாக, அல்லது கிடையாக வைத்திருக்கலாம்.

இவ்விதமான சொல் மற்றும் செயல் சம்பந்த ஸுன்னாஹ்களைப் பேணி தொழுதால் நன்மை அதிகமாகும். அதனை மறதியில் விட்டால், தொழுகை வீணாகாது. அதற்கான மறதி ஸஜ்தா ஸஹ்வைச் செய்ய வேண்டியதில்லை. எனினும் அவ்வாறு செய்தாலும் தவறில்லை. விரும்பினால் செய்யலாம்.

# ஃபிக்ஹ் வகுப்பு 20 - தொழுகை தொடர்பான சட்டங்கள் 5 - ஸஜ்தா ஸஹ்வு செய்வதின் சட்டங்கள்

**ஆசிரியர்: அஷ் ஷெய்க் உவைஸ் உமரி நஸீரி**

ஸஜ்தா ஸஹ்வு என்பது மறதிக்காக, அல்லது தவறுக்காகச் செய்யப்படும் ஸஜ்தா ஆகும். இதற்குரிய சட்டங்கள் பற்றி நாம் இங்கு காண்போம்.

## ஸஜ்தா ஸஹ்வு காரணங்கள்

மூன்று காரணங்களுக்காகச் செய்யப்படும்.

1. அதிகப்படுத்துவது: ரஸுலுல்லாஹ் صَلَّى الله عَلَيْهِ وَسلَّمَ கட்டளையிட்டதை விட அதிகமாகச் செய்வது.
2. ரஸுலுல்லாஹ் صَلَّى الله عَلَيْهِ وَسلَّمَ செய்யச் சொன்னதை செய்யாமல் விட்டுவிடுதல், அல்லது குறைத்து செய்தல்.
3. சந்தேகம் கொள்ளுதல்:

இந்த மூன்று நேரங்களில் ஸஜ்தா ஸஹ்வு செய்ய வேண்டும். வேண்டுமென்றே ஒரு ருக்னையோ அல்லது வாஜிபையோ அதிகமாகச் செய்தால், அத்தொழுகை ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. உதாரணமாக நான்கு ரகஅத் தொழுகையை வேண்டுமென்றே ஐந்தாகத் தொழுதால் அத்தொழுகை ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

முஸ்லிம் 1718

அன்னை ஆயிஷா رَضِي الله عَنْها அறிவிப்பதாவது,

قَالَ أَخْبَرَتْنِي عَائِشَةُ أَنَّ رَسُولَ اللَّهِ صلى الله عليه وسلم قَالَ " مَنْ عَمِلَ عَمَلاً لَيْسَ عَلَيْهِ أَمْرُنَا فَهُوَ رَدٌّ " .

**3540.** அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: நம்முடைய இந்த (மார்க்க) விஷயத்தில், அதில் இல்லாத ஒன்றை யார் புதிதாகப் புகுத்துகின்றாரோ அது நிராகரிக்கப்பட வேண்டியதாகும். இதை ஆயிஷா (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள். இந்த ஹதீஸ் இரு அறிவிப்பாளர்தொடர்களில் வந்துள்ளது. Book: 30 - **ஸஹீஹ் முஸ்லிம்**

தெரியாமல் அதிகப்படுத்தினால் ஸஜ்தா ஸஹ்வு செய்யலாம். உதாரணமாக, தெரியாமல் ஒரு தொழுகையில் இரண்டு ரகஅத்திற்குப் பதிலாக, மூன்று ஸஜ்தா செய்தால், அதற்காக அவர் ஸஜ்தா ஸஹ்வு செய்ய வேண்டும். அதனைப் போல், நான்கு ரகஅத் தொழுகையை மறதியாக ஐந்தாகத் தொழுதால் அதற்காக அவர் ஸஜ்தா ஸஹ்வு செய்ய வேண்டும்.

புஹாரி 404

அப்துல்லாஹ் رَضِي الله عَنْهُ அறிவிப்பதாவது,

عَنْ عَبْدِ اللَّهِ، قَالَ صَلَّى النَّبِيُّ صلى الله عليه وسلم الظُّهْرَ خَمْسًا فَقَالُوا أَزِيدَ فِي الصَّلاَةِ قَالَ " وَمَا ذَاكَ ". قَالُوا صَلَّيْتَ خَمْسًا. فَثَنَى رِجْلَيْهِ وَسَجَدَ سَجْدَتَيْ

**404.** 'நபி(ஸல்) அவர்கள் (ஒரு முறை) லுஹர் தொழுகையை ஐந்து ரக்அத்களாகத் தொழுதார்கள். அப்போது, 'இறைத்தூதர் அவர்களே! தொழுகை(யின் ரக்அத்கள்) அதிகமாக்கப்பட்டுவிட்டனவா?' என்று நபித்தோழர்கள் கேட்டதற்கு, 'ஏன் இவ்வாறு (வினவுகிறீர்கள்?)' என்று நபி(ஸல்) அவர்கள் கேட்டார்கள். 'நீங்கள் ஐந்து ரக்அத்கள் தொழுதுவிட்டீர்கள்' என்று நபித்தோழர்கள் கூறினார்கள். (மக்களை நோக்கி அமர்ந்திருந்த) நபி(ஸல்) அவர்கள் தங்களின் கால்களை மடக்கி (கிப்லாவை

நோக்கி) இரண்டு ஸஜ்தாக்கள் செய்தார்கள்' என அப்துல்லாஹ் இப்னு மஸ்வூத்(ரலி) கூறினார். Book: 8 - **ஸஹீஹுல் புகாரி**

இரண்டாவது காரணம் குறைத்துச் செய்வது. உதாரணமாக, ருக்னை மறந்தால், அதனைத் திரும்பச் செய்துதான் ஸஜ்தா ஸஹ்வு செய்ய வேண்டும். உதாரணத்திற்கு ஒரு ரகஅத்தில் உள்ள இரண்டு ஸஜ்தாவிற்கு பதிலாக ஒரு ஸஜ்தா மட்டும் செய்து, பின்னர் அவர் அடுத்த ரகஅத்தின் ஸஜ்தா செய்வதற்கு முன்னால், விடுபட்ட ஸஜ்தா குறித்து அவருக்கு ஞாபகம் வந்தால், உடனே அந்த விடுபட்ட ஸஜ்தாவைச் செய்துவிட்டு, எழுந்து அடுத்த ரகஅத்தாக ஆரம்பிக்க வேண்டும். ஆனால் அவருக்கு விடுபட்ட அந்த ஸஜ்தா அடுத்த ரகஅத்தில் ஸஜ்தா செய்த பிறகுதான் ஞாபகம் வந்தால், அந்த ரகஅத்தை அவர் முதல் ரகஅத்தாக எடுத்துக் கொண்டு, மறுபடியும் எழுந்து இரண்டாவது ரகஅத்தாக கணக்கில் கொள்ள வேண்டும். இறுதியில் ஸஜ்தா ஸஹ்வு செய்ய வேண்டும். இவ்வாறுதான் ருக்கூ மறந்தாலும் செய்ய வேண்டும்.

புஹாரி 1228

அபு ஹுரைராஹ் رَضِي الله عَنْهُ அறிவிப்பதாவது,

عَنْ أَبِي هُرَيْرَةَ ـ رضى الله عنه ـ أَنَّ رَسُولَ اللَّهِ صلى الله عليه وسلم انْصَرَفَ مِنِ اثْنَتَيْنِ فَقَالَ لَهُ ذُو الْيَدَيْنِ أَقُصِرَتِ الصَّلاَةُ أَمْ نَسِيتَ يَا رَسُولَ اللَّهِ فَقَالَ رَسُولُ اللَّهِ صلى الله عليه وسلم " أَصَدَقَ ذُو الْيَدَيْنِ ". فَقَالَ النَّاسُ نَعَمْ. فَقَامَ رَسُولُ اللَّهِ صلى الله عليه وسلم فَصَلَّى اثْنَتَيْنِ أُخْرَيَيْنِ ثُمَّ سَلَّمَ ثُمَّ كَبَّرَ فَسَجَدَ مِثْلَ سُجُودِهِ أَوْ أَطْوَلَ ثُمَّ رَفَعَ.

**1228.** அபூ ஹுரைரா (ரலி) அறிவித்தார். நபி(ஸல்) அவர்கள் இரண்டு ரக்அத்துடன் தொழுகையை முடித்தபோது துல்யதைன்(ரலி), 'இறைத்தூதர் அவர்களே! தொழுகை சுருக்கப்பட்டுவிட்டதா? அல்லது நீங்கள் மறந்து விட்டீர்களா?' எனக் கேட்டார். 'துல்யதைன் கூறுவது உண்மைதானா?' என்று நபி(ஸல்) அவர்கள் கேட்க, மக்களும் 'ஆம்' என்றார்கள். உடனே, நபி(ஸல்) அவர்கள் பிந்தைய இண்டு ரக்அத்களைத் தொழுதுவிட்டு ஸலாம் கொடுத்தார்கள். பின்பு தக்பீர் கூறித் தம் வழக்கமான ஸஜ்தாவைப் போன்றோ அல்லது அதைவிட சற்று நீண்டதாகவோ ஸஜ்தாச் செய்து, பின் (அதிலிருந்து) எழுந்தார்கள். (தஷஹ்ஹுத் ஓதவில்லை.) இப்னு அல்கமா கூறுகிறார்: நான் முஹம்மத் இப்னு ஸிரீனிடம் ஸஜ்தா ஸஹ்வில் தஷஹ்ஹுத் உண்டா? எனக் கேட்டேன். அதற்கவர், அபூ ஹுரைரா(ரலி) உடைய அறிவிப்பில் தஷஹ்ஹுத் இல்லைதான் என்றார்'. Book: 22 - **ஸஹீஹுல் புகாரி**

வாஜிபான விஷயங்களில் ஒன்றை விட்டுவிட்டால், அதற்கு ஸஜ்தா ஸஹ்வு செய்தால் போதும். உதாரணமாக, முதல் தஷஹ்ஹுத்தில் அமர மறந்துவிட்டு, மூன்றாவது ரகஅத்திற்கு எழுந்துவிட்டால், அவர் அதற்கு ஸஜ்தா ஸஹ்வு செய்தால் போதும்.

இப்னு மாஜாஹ் 1208

முகைய்ராஹ் இப்னு ஷு்.்.பாஹ் رَضِي الله عَنْهُ அறிவிப்பதாவது,

عَنِ الْمُغِيرَةِ بْنِ شُعْبَةَ، قَالَ قَالَ رَسُولُ اللَّهِ ـ صلى الله عليه وسلم ـ " إِذَا قَامَ أَحَدُكُمْ مِنَ الرَّكْعَتَيْنِ فَلَمْ يَسْتَتِمَّ قَائِمًا فَلْيَجْلِسْ فَإِذَا اسْتَتَمَّ قَائِمًا فَلاَ يَجْلِسْ وَيَسْجُدْ سَجْدَتَىِ السَّهْوِ " .

ரஸுலுல்லாஹ் صَلَّي الله عَلَيْهِ وَسلَّمَ கூறியுள்ளார்கள், ''யாராவது ஒருவர், (முதலாவது தஷஹ்ஹுத்தில் அமர மறந்துவிட்டு) இரண்டாவது ரகஅத்திற்கு பிறகு எழ ஆரம்பித்து, அவர் முழுவதுமாக

எழுந்திருக்கவில்லை என்றால், அவர் உடனே (தஷஹ்ஹுத்திற்காக) மறுபடியும் அமரவும். ஆனால் அவர் முழுவதுமாக எழுந்துவிட்டால், மறுபடியும் அமராமல், பின்னர் இரண்டு ஸஜ்தா ஸஹ்வைச் செய்து கொள்ள வேண்டும்.''

மூன்றாவதாக தொழுகையில் எத்தனை ரகஅத்துகள் தொழுதோம் என்பது போன்ற சந்தேகம் ஏற்படும்போதும் ஸஜ்தா ஸஹ்வைச் செய்து கொள்ள வேண்டும். அதற்கு முன்பாக சந்தேகம் ஏற்பட்டால் நாம் என்ன செய்ய வேண்டும் என்பதை முதலில் அறிவோம்.

முஸ்லிம் 571

அபு ஸயீத் அல் குத்ரி رَضِـي الله عَنْهُ அறிவிப்பதாவது,

عَنْ أَبِي سَعِيدٍ الْخُدْرِيِّ، قَالَ قَالَ رَسُولُ اللَّهِ صلى الله عليه وسلم " إِذَا شَكَّ أَحَدُكُمْ فِي صَلاَتِهِ فَلَمْ يَدْرِ كَمْ صَلَّى ثَلاَثًا أَمْ أَرْبَعًا فَلْيَطْرَحِ الشَّكَّ وَلْيَبْنِ عَلَى مَا اسْتَيْقَنَ ثُمَّ يَسْجُدُ سَجْدَتَيْنِ قَبْلَ أَنْ يُسَلِّمَ فَإِنْ كَانَ صَلَّى خَمْسًا شَفَعْنَ لَهُ صَلاَتَهُ وَإِنْ كَانَ صَلَّى إِتْمَامًا لأَرْبَعٍ كَانَتَا تَرْغِيمًا لِلشَّيْطَانِ " .

**990.** அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: உங்களில் ஒருவருக்குத் தாம் மூன்று ரக்அத்கள் தொழுதோமா அல்லது நான்கு ரக்அத்கள் தொழுதோமா என்று தொழுகையில் சந்தேகம் ஏற்பட்டால் சந்தேகத்தைக் கைவிட்டு, உறுதியான (மூன்று ரக்அத்கள் என்ப)தன் அடிப்படையில் (மீதியுள்ள ஒரு ரக்அத்தைத்) தொழுதுவிட்டு சலாம் கொடுப்பதற்கு முன் இரு சஜ்தாக்கள் செய்துகொள்ளட்டும். அவர் (உண்மையில்) ஐந்து ரக்அத்கள் தொழுது விட்டிருந்தால் (மறதிக்காகச் செய்த அவ்விரு சஜ்தாக்களால்) அவரது தொழுகையை அந்த (ஐந்து) ரக்அத்கள் இரட்டைப்படை ஆக்கிவிடும். அவர் நான்கு ரக்அத்கள் பூர்த்தி செய்துவிட்டிருந்தால் அவ்விரு சஜ்தாக்களும் (தொழுகையில் குழப்பம் ஏற்படுத்திய) ஷைத்தானை முறியடிப்பதாக அமையும். - மேற்கண்ட ஹதீஸ் மற்றோர் அறிவிப்பாளர் தொடர் வழியாகவும் வந்துள்ளது. அதிலும் "சலாம் கொடுப்பதற்கு முன் இரு சஜ்தாக்கள் செய்துகொள்ளட்டும்" என்றே இடம் பெற்றுள்ளது. Book: 5 - **ஸஹீஹ் முஸ்லிம்**

எனவே நாம் சந்தேகம் கொண்டால், குறைந்த அளவு எண்ணிக்கையைக் கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டும்.

அதேபோல எத்தனை ஸஜ்தா செய்தோம் என்று சந்தேகம் வந்தால், ஒரு ஸஜ்தாவாக எடுத்துக் கொண்டு தொழுகையை முடிக்க வேண்டும்.

## ஸஜ்தா ஸஹ்வு செய்யும் முறை

சிலர் ஒரு ஸலாம் சொல்லிவிட்டு, பின்னர் இரண்டு ஸஜ்தாக்கள் செய்து விட்டு மறுபடியும் அமர்ந்து சில துஆக்களை ஓதிவிட்டு இரண்டு பக்கமும் ஸஜ்தா செய்வார்கள். இதற்கு எந்த வித ஆதாரமும் இல்லை. ரஸூலுல்லாஹ் صَلَّي الله عَلَيْهِ وَسلَّمَ அவர்களின்படி, தொழுகையின் முடிவில் கூறும் ஸலாம் சொல்வதற்கு முன்னர், தக்பீர் கூறியவாறு இரண்டு ஸஜ்தாகள் செய்து பின்னர் உடனே ஸலாம் சொல்லி தொழுகையை முடிக்க வேண்டும். இதற்கான ஆதாரம் முன்பு சொல்லப்பட்ட முஸ்லிம் 571 ஹதீதாகும்.

மற்றொரு முறையின்படி தொழுகையின் முடிவு ஸலாம் சொன்ன பிறகு, பின்னர் தக்பீர் சொல்லி இரண்டு தடவைகள் ஸஜ்தா ஸஹ்வை செய்ய வேண்டும். இதற்கான ஆதாரம் முன்பு சொல்லப்பட்ட புஹாரி 404 ஹதீதாகும்.

சிலரின் கருத்துப்படி, தொழுகையில் அதிகமாகச் செய்ததற்காக ஸஜ்தா ஸஹ்வை தொழுகையை முடித்து விட்டுச் செய்ய வேண்டும் எனவும், குறைவாகச் செய்ததற்காக ஸஜ்தா ஸஹ்வை தொழுகையை முடிக்கும் முன்னர் செய்ய வேண்டும் எனவும் கூறுவார்கள். ஆனால் பொதுவான ஒன்றை நாம் பின்பற்றலாம்.

## ஸஜ்தா ஸஹ்வு பற்றிய மேலும் சில குறிப்புகள்

- பின்னர் செய்யப்படும் ஸஜ்தாவுக்குப் பிறகும் மறுபடியும் நாம் ஸலாம் சொல்ல வேண்டும். இதற்கான ஆதாரம் முன்பு சொல்லப்பட்ட புஹாரி 404 ஹதீதாகும்.
- ஒன்றுக்கு மேற்பட்ட மறதிக்கு எத்ததை தடவை ஸஜ்தா ஸஹ்வை செய்ய வேண்டும் என்பதில் கருத்து வேறுபாடுகள் இருந்தாலும், இரண்டு ஸஜ்தாக்களை மட்டும் ஸஜ்தா ஸஹ்வாக செய்தால் மட்டும் போதுமானதாகும்.
- ஸஜ்தா ஸஹ்வை செய்வதற்கே மறந்து விட்டால், நினைவு வந்தால் உடனே ஸஜ்தா ஸஹ்வை செய்ய வேண்டும். எனினும் நீண்ட நேரமாகிவிட்டால், உதாரணமாக நடைமுறையின்படி நீண்ட நேரம் ஆகிவிட்டால், தொழுகைக்கான நேரம் இருந்தால், பேணுதலுக்கா அந்தத் தொழுகையைத் திருப்பித் தொழுவிடுதல் நலம். நேரம் இல்லை என்றால் அதற்காக பாவமன்னிப்பு கேட்டுக் கொள்ள வேண்டும். நினைவே வரவில்லை என்றால், மறதி குறித்து அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَى மன்னிப்பவனாக இருக்கிறான்.

**Fiqh 21 - Laws Related to Prayer 6 - Sajdah Dilawat, Sajdah Shukr, and Acts that spoil the prayer**

# ஃபிக்ஹ் வகுப்பு 21 - தொழுகை தொடர்பான சட்டங்கள் 6 - ஸஜ்தா திலாவத், ஸஜ்தா ஷுக்ர், மற்றும் தொழுகையை வீணாக்கும் செயல்கள்

**ஆசிரியர்: அஷ் ஷெய்க் உவைஸ் உமரி நஸீரி**

ஸஜ்தா தொழுகையின் ஒரு பகுதியாகும். தொழுகையின் ருக்ன் ஆகும். எனினும் மூன்று விதமான ஸஜ்தாக்களைத் தவிர, தொழுகைக்கு வெளியில் ஸஜ்தா செய்வது பற்றி ஏதும் சொல்லப்படவில்லை. அவ்வாறில்லாமல் மற்ற ஸஜ்தாக்கள் இபாதத் அல்ல. தொழுகையில் ஸஜ்தா செய்வதுதான் இபாதத் ஆகும். ருக்கூ செய்பவர்களுடன் ருக்கூ செய்யுங்கள் எனவும், ஸஜ்தா செய்பவர்களுடன் ஸஜ்தா செய்யுங்கள் என்று குர்ஆனில் சொல்லப்பட்டது தொழுகையைத் தான் குறிக்கும். தனியாக ருக்கூவோ அல்லது ஸஜ்தாவோ செய்வதைக் குறிக்காது.

தொழுகைக்கு வெளியில் மூன்று வகையான ஸஜ்தாக்களை ரஸூலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ கற்றுக் கொடுத்துள்ளார்கள். அதன் மூலம் நாம் நன்மையைப் பெறலாம். மற்றவிதமான ஸஜ்தாகளை செய்வதனால் நன்மை ஏதும் கிடையாது.

முதலாவது, நாம் முந்தைய பாடத்தில் சொன்ன மறதிக்கான ஸஜ்தா, ஸஜ்தா ஸஹ்வு ஆகும். இது பற்றி நாம் விரிவாகக் கூறிவிட்டோம்.

இரண்டாவதாக, குர்ஆன் ஓதும்போது வரும் பதினைந்து ஸஜ்தா வசனங்களுக்காக நாம் ஸஜ்தா செய்வது. இது ஸஜ்தா திலாவத் ஆகும். அந்த வசனங்களை தொழுகையில் ஓதினாலும், அல்லது மற்ற சமயங்களில் ஓதினாலும் அதற்காக ஸஜ்தா செய்வதாகும். இதன் சட்டவரையானது, ஸஜ்தா திலாவத் செய்வது முஸ்தக.்.ப். விரும்பத்தக்கது அன்றி அது கட்டாயக் கடமையல்லை. உமர் رَضِيَ اللهُ عَنْهُ அவர்கள் ஜுமா உரை நிகழ்த்தும்போது, அவர்கள் அத்தியாயம் நஹ்ல் ஓதும்போது, அதில் வரும் ஸஜ்தா வசனத்தை ஓதிய பிறகு ஸஜ்தா செய்தார்கள். அதனைக் கேட்ட மக்களும் ஸஜ்தா செய்தார்கள். மறு ஜும்மாவிலும் அந்த வசனத்தை ஓதினார்கள். எனினும் அதிலுள்ள ஸஜ்தா வசனத்தை ஓதிய பிறகு ஸஜ்தா செய்யவில்லை. பின்னர் அவர்கள் மக்களைப் பார்த்து ஸஜ்தா திலவாத்தானது வாஜிபான ஒன்றல்ல எனவும், செய்பவர்களுக்கு நன்மை கிடைக்கும், செய்யாவிட்டால் குற்றமில்லை என்றார்கள். இது தான் அறிஞர்களின் கருத்தாகும்.

புஹாரி 1077

رَبِيعَةُ مِنْ عُمَرَ بْنِ الْخَطَّابِ ـ رضى الله عنه ـ قَرَأَ يَوْمَ الْجُمُعَةِ عَلَى الْمِنْبَرِ بِسُورَةِ النَّحْلِ حَتَّى إِذَا جَاءَ السَّجْدَةَ نَزَلَ فَسَجَدَ وَسَجَدَ النَّاسُ، حَتَّى إِذَا كَانَتِ الْجُمُعَةُ الْقَابِلَةُ قَرَأَ بِهَا حَتَّى إِذَا جَاءَ السَّجْدَةَ قَالَ يَا أَيُّهَا النَّاسُ إِنَّا نَمُرُّ بِالسُّجُودِ فَمَنْ سَجَدَ فَقَدْ أَصَابَ، وَمَنْ لَمْ يَسْجُدْ فَلاَ إِثْمَ عَلَيْهِ. وَلَمْ يَسْجُدْ عُمَرُ ـ رضى الله عنه. وَزَادَ نَافِعٌ عَنِ ابْنِ عُمَرَ ـ رضى الله عنهما إِنَّ اللَّهَ لَمْ يَفْرِضِ السُّجُودَ إِلاَّ أَنْ نَشَاءَ.

**1077.** ரபீஆ இப்னு அப்தில்லாஹ் அறிவித்தார். உமர்(ரலி) ஒரு வெள்ளிக்கிழமை மிம்பரில் நின்று நஹ்ல் அத்தியாயத்தை ஓதினார்கள். (அதிலுள்ள) ஸஜ்தா வசனத்தை அடைந்ததும் இறங்கி ஸஜ்தாச் செய்தார்கள். மக்களும் ஸஜ்தாச் செய்தனர். அடுத்த ஜும்ஆ வந்தபோது அதே அத்தியாயத்தை ஓதினார்கள். அப்போது ஸஜ்தா வசனத்தை அடைந்ததும் (மக்களை நோக்கி) 'மனிதர்களே! நாம் ஸஜ்தா வசனத்தை ஓதியிருக்கிறோம். ஸஜ்தாச் செய்கிறவர் நல்லதைச் செய்தவராவார். அவரின் மீது எந்தக் குற்றமுமில்லை' என்று கூறினார்கள். மேலும் அவர்கள் ஸஜ்தாச் செய்யவில்லை. நாமாக விரும்பிச் செய்தால் தவிர ஸஜ்தாவை அல்லாஹ் நம்மீது கடமையாக்கவில்லை என்று இப்னு உமர்(ரலி) கூறினார் என நாபிஃஉ குறிப்பிட்டார்கள். Book: 17 - **ஸஹீஹுல் புகாரி**

## ஸஜ்தா திலாவத்தின் சிறப்பு

முஸ்லிம் 81

அபு ஹுரைராஹ் رَضِـي الله عَنْهُ அறிவிப்பதாவது

عَنْ أَبِي هُرَيْرَةَ، قَالَ قَالَ رَسُولُ اللَّهِ صلى الله عليه وسلم " إِذَا قَرَأَ ابْنُ آدَمَ السَّجْدَةَ فَسَجَدَ اعْتَزَلَ الشَّيْطَانُ يَبْكِي يَقُولُ يَا وَيْلَهُ - وَفِي رِوَايَةِ أَبِي كُرَيْبٍ يَا وَيْلِي - أُمِرَ ابْنُ آدَمَ بِالسُّجُودِ فَسَجَدَ فَلَهُ الْجَنَّةُ وَأُمِرْتُ بِالسُّجُودِ فَأَبَيْتُ فَلِيَ النَّارُ " .

**133.** அல்லாஹ்வின் காகர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: ஆகமின் மைந்கன் (மனிகன்) சஜ்கா (சிரவணக்கக்கிற்கான) வசனக்கை ஒகி சிரவணக்கம் (சஜ்கா) செய்கால் ஷைக்கான் அழுகவாறே "அந்கோ எனக்கு வந்க நாசமே! ஆகமின் மைந்கன் சிரவணக்கம் செய்யும்படி கட்டளையிடப்பட்டான். அவன் சிரவணக்கம் செய்குவிட்டான். அவனுக்குச் சொர்க்கம் கிடைக்கப்போகிறகு. ஆனால் (ஆகி மனிகர் ஆகமுக்குச்) சிரம்பணியும்படி எனக்குக் கட்டளையிடப்பட்டகு. நானோ மறுக்கு விட்டேன். எனவே, எனக்கு நரகம்கான்" என்று கூறியபடி விலகிச்செல்கிறான். இகை அபூஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள். இந்க ஹகீஸ் இரு அறிவிப்பாளர்கொடர்களில் வந்குள்ளகு. - மேற்கண்ட ஹகீஸ் மற்றோர் அறிவிப்பாளர் கொடர் வழியாகவும் வந்குள்ளகு. அகில், "(ஆகமுக்குச் சிரம்பணியும்படி எனக்குக் கட்டளையிடப்பட்டகு.) ஆனால், நான் (அகற்கு) மாறுசெய்கேன். எனவே, எனக்கு நரகம்தான்" என்று (சிறு வித்தியாசத்துடன்) இடம்பெற்றுள்ளது. Book: 1 - **ஸஹீஹ் முஸ்லிம்**

குர்ஆனில் ஸஜ்தா வசனங்கள் மொத்தம் பதினைந்து ஆகும். இமாம் ஷா.ஃ.பியி رَحْمَةُ اللهِ عَلَيْهِ போன்ற அறிஞர்களின் கருத்து இதுதான் ஆகும். சிலர் பதினான்கு வசனங்கள் என்பார்கள். அத்தியாயம் ஹஜ்ஜில் இரண்டு ஸஜ்தா வசனங்கள் உள்ளன. சிலர் இதன் இரண்டாவது ஸஜ்தா வசனத்தை எடுத்துக் கொள்ளாததால், பதினான்கு என்பார்கள். அவ்வாறல்ல, அதனையும் சேர்த்து பதினைந்து என்பதே சரியாகும்.

## ஸஜ்தா திலாவத் செய்யும் முறை

தொழுகையில் இல்லாத நேரத்தில் ஸஜ்தா செய்வதாக இருந்தால், தக்பீர் கூற அவசியமில்லை. தக்பீர் சொல்லி ஸஜ்தா செய்ய வேண்டும் என்று எந்த அறிவிப்பும் இல்லை. ஸஜ்தா ஸஹ்வைச் செய்யும்போதுதான் தக்பீர் சொல்ல வேண்டும். தொழுகையின் போதும், வெளியிலும் ஸஜ்தா திலாவத்திற்கு அவசியமில்லை. எனினும் ஜமாஅத் தொழுகையின்போது, குழப்பத்தைத் தவிர்க்க தக்பீர் சொல்லி ஸஜ்தா செய்ய வேண்டும். தக்பீர் சொல்லியவாறு ஸஜ்தாவை விட்டு நிலைக்கு வர வேண்டும்.

இந்த ஸஜ்தாவுக்கு உளூ நிபந்தனை கிடையாது. தொழுகையிலும், உளூவுடன் குர்ஆன் ஓதும்போதும் உளூ இருந்தாலும், உளூ என்பது இந்த ஸஜ்தாவுக்கு நிபந்தனை இல்லை. உளூ இல்லாமலும் இதனைச் செய்யலாம்.

ஒரு தடவை ரஸூலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ அத்தியாயம் நஜ்ம் ஓதி கடைசியில் ஸஜ்தா செய்தார்கள். அத்துடன் ஸஹாபாக்களும் ஸஜ்தா செய்தார்கள். அங்கிருந்த கா.ஃ.பிர்கள் சிலரும் தங்களை அறியாமல் ஸஜ்தா செய்தார்கள். அந்த நேரத்தில் எல்லா ஸஹாபாக்களும் உளூவுடன் இருந்திருப்பார்கள் என்று சொல்ல முடியாது.

## ஸஜ்தா திலாவத் துஆ

"سَجَدَ وَجْهِيَ لِلَّذِي خَلَقَهُ، وَشَقَّ سَمْعَهُ وَبَصَرَهُ، بِحَوْلِهِ وَقُوَّتِهِ، فَتَبَارَكَ اللهُ أَحسَنُ الْخَالِقِينَ".

என்னைப் படைத்து, எனக்குக் கேள்வியையும், பார்வையையும் தன்னுடைய வல்லமையினாலும், சக்தியினாலும் கொடுத்த அவனுக்கே எனது முகம் சிரம்பணிகிறது. படைப்பில் சிறந்த அல்லாஹ் முபாரக்காக ஆகிவிட்டான்.

## ஸஜ்தா ஷுக்ர்

அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَى வுக்கு நன்றி செலுத்துவதற்காக செய்யும் ஸஜ்தா இது ஆகும். ரஸுலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ தனிப்பட்ட முறையில் நன்றிக்காக தொழுததாக செய்தியில்லை. ஷுக்ருக்கான தொழுகை என்று ஏதும் சொல்லப்படவில்லை. அதிகமான ந.ஃபில் தொழுகை, நோன்பு என நல்ல அமல்களைச் செய்வதுதான் உண்மையான நன்றியாகும். அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَى வுடைய கட்டளைகளை நாம் கடைபிடிப்பதுதான் உண்மையான நன்றியாகும்.

சில மணிநேரம் கடந்து அல்லது சில நாட்கள் கழித்து செய்வதல்ல இந்த ஸஜ்தா ஷுக்ர். மாறாக ஏதேனும் ஒரு நன்மையை நாம் கண்டால் அல்லது அடைந்தால் உடனே செய்வதுதான் ஸஜ்தா ஷுக்ர் ஆகும். ரஸுலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ அவர்களுக்கு மகிழ்ச்சி கொள்ளும் செய்தியை தாங்கள் கேட்டால், அவர்கள் உடனே ஸஜ்தா ஷுக்ர் செய்வார்கள்.

அப்துர் ரஹ்மான் இப்னு அவ்.ஃப் رَضِي الله عَنْهُ அறிவிப்பதாவது,

وَعَنْ عَبْدِ اَلرَّحْمَنِ بْنِ عَوْفٍ - رضى الله عنه - قَالَ : { سَجَدَ اَلنَّبِيُّ - صلى الله عليه وسلم -فَأَطَالَ اَلسُّجُودَ , ثُمَّ رَفَعَ رَأْسَهُ وَقَالَ : " إِنَّ جِبْرِيلَ آتَانِي , فَبَشَّرَنِي , فَسَجَدْتُ لِلَّهِ شُكْرًا" } رَوَاهُ أَحْمَدُ , وَصَحَّحَهُ اَلْحَاكِمُ [1] .

ரஸுலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ ஒரு நீண்ட ஸஜ்தாவைச் செய்தார்கள். பின்னர் அவர்கள் தங்களின் தலையை உயர்த்திக் கூறினார்கள், “நிச்சமயாக ஜிப்ரயீல் عَلَيْهِ السَّلَامُ வந்து நற்செய்தி கூறினார்கள். அதற்காக நான் அல்லாஹ் வுக்காக ஸஜ்தா ஷுக்ர் செய்தேன்.” (அஹ்மத் 191/1 ஹாக்கிம் 550/1)

அதேபோல் எந்த தீமையிலிருந்து நாம் விடுபட்டோம் என்ற செய்தி அறிந்தாலும் நாம் இந்த ஸஜ்தா செய்யலாம். இந்த ஸஜ்தாவிற்கு எந்த நிபந்தனையும் கிடையாது. கிப்லாவை முன்நோக்க வேண்டும் என்ற நிபந்தனையும் கிடையாது. எந்த நிலையில் இருந்தாலும், உளூ இல்லாவிட்டாலும், மறைக்கப்பட வேண்டிய உடலின் பகுதி மறைக்கப்படாமல் இருந்தாலும், நாம் இதனை உடனே செய்யலாம்.

யமன் நாட்டிலுள்ள வேதக்காரர்கள் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டதாக அலி رَضِي الله عَنْهُ அவர்கள் செய்தியை அனுப்பியவுடன், அதனைக் கேட்ட ரஸுலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ உடனே ஸஜ்தா ஷுக்ர் செய்ததாக பைஹக்கீ அறிவிப்பு கூறுகிறது. எனவே எந்த நல்ல செய்தியும் நாம் கேட்டால், உதாரணமாக நாம் பயந்து கொண்டிருக்கும் ஏதேனும் அறுவை சிகிட்சை வெற்றிகரமாக முடிந்தது என்பது போன்ற நற்செய்தி நாம் அடைந்துகொண்டால், உடனே நாம் ஸஜ்தா ஷுக்ரை நாம் எந்த நிலையில் இருந்தாலும் செய்யலாம்.

சிலர் துஆ செய்வதற்காக ஸஜ்தா செய்வார்கள். அவ்வாறு செய்யும்படிச் சொல்லப்படவில்லை. எனவே அவ்வாறு செய்ய வேண்டியதில்லை. தொழுகையில் செய்யப்படும் ஸஜ்தாக்களில் நாம் நமக்குத் தேவையானதைக் கேட்கலாம். வழக்கமாக ஓதும் திக்ருக்குப் பிறகு நமது தேவைக்குத் துஆக் கேட்கலாம்.

தொழுகையைச் சோராத செயல்கள் பற்றிய சட்டங்கள்

முதலில் நாம் தொழும்போது உள்ளச்சத்துடன் (குஷு) தொழ வேண்டும்.

ஸுரத்துல் முஃமினூன் (விசுவாசிகள்)

**23:1** قَدْ اَفْلَحَ الْمُؤْمِنُوْنَۙ **23:2** الَّذِيْنَ هُمْ فِىْ صَلَاتِهِمْ خَاشِعُوْنَ ۙ

**23:1.** ஈமான் கொண்டவர்கள் நிச்சயமாக வெற்றி பெற்று விட்டனர்.
**23:2.** அவர்கள் எத்தகையோரென்றால், தங்கள் தொழுகையில் உள்ளச்சத்தோடு இருப்பார்கள்.

நாம் தொழும்போது உள்ளச்சத்துடன் தொழுவதைக் குலைப்பதற்கு என்றே ஒரு ஷைத்தான் நம் பின்னால் நின்று கொண்டிருப்பான். அந்த ஷைத்தானுடைய பெயர் ஹின்ஸப் என ரஸூலுல்லாஹ் صَلَّى اللّٰهُ عَلَيْهِ وَسَلَّمَ கூறியுள்ளார்கள். அவன் நாம் தொழ ஆரம்பித்தவுடன், நம் மனதில் எல்லாவித எண்ணங்களையும் போட்டுவிடுவான். அவ்வாறு நாம் உணர்ந்தால், அவனிடமிருந்து நாம் அல்லாஹ் விடம் பாதுகாப்புத் தேட வேண்டும்.

முஸ்லிம் 2203

உத்மான் இப்னு அபு அல் ஆஸ் رَضِيَ اللهُ عَنْهُ அறிவிப்பதாவது,

أَنَّ عُثْمَانَ بْنَ أَبِي الْعَاصِ، أَتَى النَّبِيَّ صلى الله عليه وسلم فَقَالَ يَا رَسُولَ اللَّهِ إِنَّ الشَّيْطَانَ قَدْ حَالَ بَيْنِي وَبَيْنَ صَلاَتِي وَقِرَاءَتِي يَلْبِسُهَا عَلَىَّ . فَقَالَ رَسُولُ اللَّهِ صلى الله عليه وسلم " ذَاكَ شَيْطَانٌ يُقَالُ لَهُ خِنْزِبٌ فَإِذَا أَحْسَسْتَهُ فَتَعَوَّذْ بِاللَّهِ مِنْهُ وَاتْفِلْ عَلَى يَسَارِكَ ثَلاَثًا " . قَالَ فَفَعَلْتُ ذَلِكَ فَأَذْهَبَهُ اللَّهُ عَنِّي .

**4431.** அபுல்அலாஉ அல்ஆமிரீ (ரஹ்) அவர்கள் கூறியதாவது: உஸ்மான் பின் அபில்ஆஸ் (ரலி) அவர்கள் நபி (ஸல்) அவர்களிடம் சென்று, "அல்லாஹ்வின் தூதரே! (நான் தொழுது கொண்டிருக்கும்போது) எனக்கும் எனது தொழுகைக்கும் எனது ஓதலுக்குமிடையே ஷைத்தான் தடையாய் நின்று எனக்குக் குழப்பத்தை ஏற்படுத்துகிறான்" என்று கூறினார்கள். அதற்கு அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள், "அவன்தான் "கின்ஸப்" எனப்படும் ஷைத்தான் ஆவான். அவனை நீங்கள் உணர்ந்தால் அவனிடமிருந்து காக்குமாறு அல்லாஹ்விடம் கோரி, உங்கள் இடப் பக்கத்தில் மூன்று முறை துப்பிவிடுங்கள்" என்று கூறினார்கள். அவ்வாறே நான் செய்தபோது, என்னிடமிருந்து அவனை அல்லாஹ் அப்புறப்படுத்திவிட்டான். - மேற்கண்ட ஹதீஸ் உஸ்மான் பின் அபில்ஆஸ் (ரலி) அவர்களிடமிருந்தே மேலும் இரு அறிவிப்பாளர் தொடர்கள் வழியாகவும் வந்துள்ளது. அதில் "மூன்று தடவை" எனும் குறிப்பு இல்லை. - மேற்கண்ட ஹதீஸ் உஸ்மான் பின் அபில்ஆஸ் (ரலி) அவர்களிடமிருந்தே மற்றோர் அறிவிப்பாளர்தொடர் வழியாகவும் வந்துள்ளது. Book: 39 - **ஸஹீஹ் முஸ்லிம்**

## தொழுகையைச் சேராத அசைவுகள்

இதனை நாம் ஐந்தாகப் பிரிக்கலாம்.

1. ஹராமான செயல்கள்

தொழுகையில் இருக்கும் போது, இச்செயல்களைச் செய்தால், அவை தொழுகையை பாதித்துவிடும்.

(i) வேண்டுமென்றே பேசுவது தொழுகையை வீணடித்துவிடும். அறியாமையில் அல்லது மறதியில் பேசினால் வீணாகாது.

முஆவியா பின் ஹகம் رَضِيَ اللهُ عَنْهُ தொழுகையில் பேசியபோது ரஸூலுல்லாஹ் صَلَّى اللّٰهُ عَلَيْهِ وَسَلَّمَ பேசக்கூடாது என்று அறிவுறுத்தினார்கள்.

புஹாரி 4534

ஸைத் பின் அர்க்கம் رَضِيَ اللهُ عَنْهُ அறிவிப்பதாவது,

عَنْ زَيْدِ بْنِ أَرْقَمَ، قَالَ كُنَّا نَتَكَلَّمُ فِي الصَّلاَةِ يُكَلِّمُ أَحَدُنَا أَخَاهُ فِي حَاجَتِهِ حَتَّى نَزَلَتْ هَذِهِ الآيَةُ {حَافِظُوا عَلَى الصَّلَوَاتِ وَالصَّلاَةِ الْوُسْطَى وَقُومُوا لِلَّهِ قَانِتِينَ} فَأُمِرْنَا بِالسُّكُوتِ.

**4534.** ஸைத் இப்னு அர்கம் (ரலி) அறிவித்தார். (ஆரம்பக் காலத்தில்) நாங்கள் தொழுகையில் பேசிக்கொண்டிருந்தோம். எங்களில் ஒருவர் தம் தோழரிடம் (சொந்தத்) தேவை குறித்துப் பேசுவார். 'அனைத்துத் தொழுகைகளையும் (குறிப்பாக) நடுத் தொழுகையையும் பேணி(த் தொழுது) வாருங்கள். மேலும், நீங்கள் உள்ளச்சம் உடையவர்களாக நின்று அல்லாஹ்வை வணங்குங்கள்' எனும் (திருக்குர்ஆன் 02:238 வது) வசனம் அருளப்படும் வரை (நாங்கள் இவ்வாறே தொழுகையில் பேசிவந்தோம்). இந்த வசனம் அருளப்பட்டவுடன் பேசாமலிருக்கும் படி எங்களுக்குக் கட்டளையிடப்பட்டது. Book: 65 - **ஸஹீஹுல் புகாரி**

பின்னர் நாங்கள் தொழுகையில் பேசக் கூடாது என கட்டளையிடப்பட்டோம்.

(ii) சாப்பிடுவது மற்றும் பானம் அருந்துவது. இது குறித்து இஜ்மாஃ உள்ளது. அவ்வாறு செய்தால் தொழுகை வீணாகிவிடும்.

(iii) தேவையில்லாத அதிகமான அசைவுகள்: நின்று கொண்ருந்து தமது தாடியில் விரல்களை வைத்து கிளறுதல், கடிகாரத்தைப் பார்ப்பது, உடல் உறுப்புகளை சொரிந்து கொண்டிருப்பது போன்றவை இவற்றில் அடங்கும். இவ்வாறு செய்வதை வெளியில் உள்ளவர்கள் பார்த்தால், இவர் தொழுகிறாரா அல்லவா என்ற சந்தேகம் வரும் அளவுக்கு இருந்தால், அவை தேவையில்லாத அதிகமான அசைவுகளாக எடுத்துக் கொள்ளப்படும்.

(iv) சப்தமிட்டுச் சிரிப்பது: இதுவும் தொழுகையை வீணாக்கிவிடும். புன்னகை செய்தல் அனுமதிக்கப்படாத ஒன்றாக இருந்தாலும், அவ்வாறு செய்வதால் தொழுகை வீணாகாது.

(iv)வேண்டுமென்றே தொழுகையின் ருக்னை அதிகமாகச் செய்வது: உதாரணத்திற்கு, இரண்டுக்குப் பதிலாக மூன்று ஸஜ்தா செய்வது. இவ்வாறு தொழுகை வீணாகிவிட்டால் மீண்டும் அந்தத் தொழுகையை நாம் திருப்பித் தொழ வேண்டும்.

2. மக்ரூஹாகான (வெறுக்கத்தக்க) அசைவுகள்:

இவை தொழுகையை இது வீணாக்காது எனினும், வெறுக்கத்தக்க செயல்களாகும்.

(i) ஸஜ்தா செய்யும் இடத்தைத் தவிர மற்ற இடத்தைப் பார்ப்பது.

(ii) வானத்தைப் பார்ப்பது போன்றவை.

(iii) தேவையில்லாமல் சிலவற்றைச் செய்வது: உதாரணமாக கடிகாரம் பார்ப்பது. இதனை அடிக்கடி செய்தால் தொழுகை முறிந்துவிடும். ஆனால் ஓரிண்டு தடவைகள் செய்தால் மக்ரூஹ் ஆகும்.

3. வாஜிபான அசைவுகள்:

(i) உதாரணமாக செருப்பு அணிந்து தொழுபவர், அல்லது தொப்பி அணிந்து தொழுபவர், அவற்றில் நஜீஸ் இருப்பது அறிந்தால், அவற்றைக் கழற்ற நாம் செய்யும் அசைவுகள் வாஜிபாகி விடுகிறது. அபு தாவூத் ஹதீது 650 முன்னர் குறிப்பிட்டுள்ளோம்.

(ii) சரியான கிப்லா திசை தெரிந்தால், தொழுகையின்போதே அதன் திசைக்கு மாறுவது வாஜிப்.

(iii) இக்காலத்தில், தொழுகையின்போது கைப்பேசி மணி அடித்தால், அதனை நாம் அணைக்க வேண்டும். மற்றவர்களுக்கு இடையூறு செய்வதால் இதனை உடனே செய்ய வேண்டும். எனினும் தொழுயின்போது கைப்பேசி அடிக்காதவாறு நாம் முன்னரே சரிசெய்து வைத்துக் கொள்வதுதான் சிறந்தது.

(iv) தொழுகையின் வரிசையை சரிபடுத்த நாம் அசைவது வலியுறுத்தப்பட்டுள்ள ஒன்றாகும். வரிசையில் இடைவெளி இருந்தாலோ, முன்வரிசையை சரி செய்யவோ இவ்வாறு நாம் அசையலாம்.

ஒரு இரவுத் தொழுகையில் இப்னு அப்பாஸ், ரஸுலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ அவர்களின் இடது புறத்தில் நின்று தொழுதார்கள். ரஸுலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ அவர்கள் அவரை வலப்புறம் தொழும் வகையில் இழுத்து நிறுத்தினார்கள்.

(iv) இமாம் தவறைச் சுட்டிக்காட்ட ஸுப்ஹானல்லாஹ் என்று கூறுவதும் வாஜிபாகும். அத்தியாயம் ∴பாத்திஹா அல்லது மற்ற வசனங்களை மறந்து விட்டால் அதனை எடுத்துக் கொடுக்க வேண்டும்.

4. அனுமதிக்கப்பட்ட அசைவுகள்:

உடலில் ஏதேனும் அரிப்பு இருந்தால், சொரிந்து கொள்வது. ஜலதோஷம் இருந்தால், கைக் குட்டை கொண்டு மூக்கைத் துடைத்துக் கொள்வது, போன்ற தேவையான அசைவுகள் அனுமதிக்கப்பட்டுள்ளது.

புஹாரி 5996

أَبُو قَتَادَةَ، قَالَ خَرَجَ عَلَيْنَا النَّبِيُّ صلى الله عليه وسلم وَأُمَامَةُ بِنْتُ أَبِي الْعَاصِ عَلَى عَاتِقِهِ، فَصَلَّى فَإِذَا رَكَعَ وَضَعَهَا، وَإِذَا رَفَعَ رَفَعَهَا

**5996.** அபூ கதாதா (ரலி) அறிவித்தார் நபி(ஸல்) அவர்கள் தங்களின் தோளின் மீது (சிறுமி) உமாமா பின்த் அபில் ஆஸை அமர்த்திய வண்ணம் எங்களிடையே வந்து அப்படியே (எங்களுக்கு இமாமாக நின்று) தொழுகை நடத்தினார்கள். அவர்கள் ருகூஉ செய்யும்போது உமாமாவைக் கீழிறக்கிவிட்டார்கள். (சஜ்தாலிருந்து நிலைக்கு) உயரும்போது அவரை மீண்டும் (தோளில்) ஏற்றினார்கள்.24 Book: 78 - **ஸஹீஹுல் புகாரி**

**Fiqh 22 - Laws Related to Prayer 7 - The laws of the Sutra and the times when the superfluous prayer is forbidden**

# ஃபிக்ஹ் வகுப்பு 22 - தொழுகை தொடர்பான சட்டங்கள் 7 - சுத்ராவின் சட்டங்கள் மற்றும் உபரியான தொழுகை தொழுவதற்கு தடை செய்யப்பட்ட நேரங்கள்

**ஆசிரியர்: அஷ் ஷெய்க் உவைஸ் உமரி நஸீரி**

நாம் தொழும்போது உச்சத்துடன் (குஷூ) தொழ வேண்டும். அதற்கான வழிவகையில் தொழும்போது நாம் சுத்ராஹ்வை பயன்படுத்த வேண்டும். சுத்ராஹ் என்பது ஒரு தொழுகையாளி தமக்கு முன்னால் குறைந்த ஒரு முழம் உயரமுள்ள ஒரு பொருளை முன்னால் வைத்துக் கொண்டு தொழ வேண்டும் என ரஸுலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ கூறியுள்ளார்கள். அப்பொருள் ஒரு மரக்கட்டை, நாற்காலி போன்ற பொருளாக அல்லது ஒரு தூணின் முன்பாக குறைந்த அளவாக ஒரு முழம் இருக்குமாறு வைத்துத் தொழ வேண்டும். அவ்வாறு எந்தப் பொருளும் முன்னால் இல்லாமல் தொழுவதைத் தவிர்க்க வேண்டும். இவ்வாறு சுத்ராஹ்வை வைத்து தொழுவது, ஸுன்னாஹ் முஅக்கதாஹ் (வலியுறுத்தப்பட்ட ஸுன்னாஹ்) என சில அறிஞர்களும், கட்டாயக் கடமை என சில அறிஞர்களும் கூறியுள்ளார்கள்.

அபு தாவூத் 695

ஸஹ்ல் இப்னு அபு ஹஷ்மாஹ் رَضِيَ اللهُ عَنْهُ அறிவிப்பதாவது,

عَنْ سَهْلِ بْنِ أَبِي حَثْمَةَ، يَبْلُغُ بِهِ النَّبِيَّ صلى الله عليه وسلم قَالَ " إِذَا صَلَّى أَحَدُكُمْ إِلَى سُتْرَةٍ فَلْيَدْنُ مِنْهَا لاَ يَقْطَعُ الشَّيْطَانُ عَلَيْهِ صَلاَتَهُ " .

ரஸுலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ கூறியுள்ளார்கள், “யாரும் சுத்ராஹ்வை நோக்கி தொழுவதானால், அவர் அதற்கு நெருக்கமாகத் தொழுது கொள்ளட்டும். ஷைத்தான் அவரது தொழுகையில் இடையூறு செய்ய விடக்கூடாது.”

நமக்கும் சுத்ராஹ்வுக்கும் இடையில் நாம் தொழும் அளவிற்கு இடம் இருந்தால் போதுமானது.

அபு தாவூத் 695

ஸஹ்ல் رَضِيَ اللهُ عَنْهُ அறிவிப்பதாவது,

عَنْ سَهْلٍ، قَالَ وَكَانَ بَيْنَ مُقَامِ النَّبِيِّ صلى الله عليه وسلم وَبَيْنَ الْقِبْلَةِ مَمَرُّ عَنْزٍ . قَالَ أَبُو دَاوُدَ الْخَبَرُ لِلنُّفَيْلِيِّ .

ரஸுலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ அவர்கள் தொழுவதற்கும், கிப்லாவுக்கும் (சுத்ராஹ்) இடையில் உள்ள தூரம் ஒரு ஆடு போகும் அளவு தான்.

சுத்ராஹ் வைத்து தொழுவதை ரஸுலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ ஏவியிருப்பதால், இது கட்டாயம் என்று அந்த அறிஞர்கள் கூறுகிறார்கள்.

சில பள்ளிவாசல்களில் சுவருக்கும் தொழுபவருக்கும் இடையில் அதிக இடைவெளி விடுவது தவறானதாகும்.

சுத்ராஹ்வின் நோக்கம், அதனால் தொழுகையில் கவனம் திசைதிரும்பாமல் இருக்க உதவும். ஒரு நபர் தொழும்போது யாரும் முன்னால் கடந்துபோக வாய்ப்பே இல்லை என்றாலும், அவரும் சுத்ராஹ் வைத்துத்துத் தொழுவதுதான் சிறந்தது என அறிஞர்கள் கூறுகிறார்கள். அதன் மூலம் கவனம் சிதறாமல் உள்ளச்சத்துடன் தொழ வாய்ப்புண்டு.

சுத்ராஹ் பயன்படுத்துவதால் நாம் தொழும்போது யாரும் கடந்து செல்ல விரும்பினால், சுத்ராஹ்வுக்கு வெளியில், நம்மைக் கடந்து செல்ல வழிவகுக்கும். ஏனெனில் ஒரு தொழுகையாளிக்கு முன்னால் கடந்து செல்வது பெரும் பாவம் ஆகும். இதனைத் தடுக்க நாம் சுத்ராஹ்வை பயன்படுத்த வேண்டும்.

முஅத்தா மாலிக் 366

قَالَ رَسُولُ اللَّهِ صلى الله عليه وسلم " لَوْ يَعْلَمُ الْمَارُّ بَيْنَ يَدَىِ الْمُصَلِّي مَاذَا عَلَيْهِ لَكَانَ أَنْ يَقِفَ أَرْبَعِينَ خَيْرًا لَهُ مِنْ أَنْ يَمُرَّ بَيْنَ يَدَيْهِ " . قَالَ أَبُو النَّضْرِ لاَ أَدْرِي أَقَالَ أَرْبَعِينَ يَوْمًا أَوْ شَهْرًا أَوْ سَنَةً .

ரஸுலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ கூறியுள்ளார்கள், “ஒருவர் தொழும் மனிதரின் முன்னால் செல்லும்போது தாம் கொண்டு வரும் (பாவம்) பற்றி அறிந்திருப்பாரானால், அவர் அவரைக் கடந்து செல்வதற்குப் பதிலாக நாற்பது .. காத்திருப்பார்.”

அறிவிப்பாளர் அதனை நாட்களா, மாதங்களா அல்லது வருடங்களா என்பதை அறியவில்லை.

எனவே அவசரமாகச் செல்ல விரும்புவர்கள் சுத்ராஹ்வைக் கடந்து செல்லலாம். எனினும் யாரேனும் நீங்கள் தொழும்போது, சுத்ராஹ்விக்கு முன்னால் செல்ல விழைந்தால், அவரைத் தடுக்க வேண்டும்.

அபு தாவூத் 697

அபு ஸயீத் அல் குத்ரி رَضِي الله عَنْهُ அறிவிப்பதாவது,

عَنْ أَبِي سَعِيدٍ الْخُدْرِيِّ، أَنَّ رَسُولَ اللَّهِ صلى الله عليه وسلم قَالَ " إِذَا كَانَ أَحَدُكُمْ يُصَلِّي فَلاَ يَدَعْ أَحَدًا يَمُرُّ بَيْنَ يَدَيْهِ وَلْيَدْرَأْهُ مَا اسْتَطَاعَ فَإِنْ أَبَى فَلْيُقَاتِلْهُ فَإِنَّمَا هُوَ شَيْطَانٌ " .

“யாரும் தொழும்போது, தங்களுக்கு முன்னால் எந்த மனிதரும் கடக்க முயன்றால், முடிந்த அளவில் அவரைத் திரும்பச் செல்ல வைக்க வேண்டும். அவர் மறுத்தால், அவருடன் சண்டையிட வேண்டும். ஏனெனில் அவர் ஒரு ஷைத்தான் ஆவார்.”

## ந.ஃ.பில் தொழுகையின் சட்டங்கள்

நமக்கு கடமையாக்கப்பட்ட ஐவேளைத் தொழுகைகளைத் தவிர உள்ள உபரியான அனைத்துத் தொழுகைகளும் ந.ஃ.பில் தொழுகைகளாகும்.

அபு தாவூத் 391

தல்ஹா இப்னு உபைதுல்லாஹ் رَضِي الله عَنْهُ அறிவிப்பதாவது,

أَنَّهُ سَمِعَ طَلْحَةَ بْنَ عُبَيْدِ اللَّهِ، يَقُولُ جَاءَ رَجُلٌ إِلَى رَسُولِ اللَّهِ صلى الله عليه وسلم مِنْ أَهْلِ نَجْدٍ ثَائِرَ الرَّأْسِ يُسْمَعُ دَوِيُّ صَوْتِهِ وَلاَ يُفْقَهُ مَا يَقُولُ حَتَّى دَنَا فَإِذَا هُوَ يَسْأَلُ عَنِ الإِسْلاَمِ فَقَالَ رَسُولُ اللَّهِ صلى الله عليه وسلم " خَمْسُ صَلَوَاتٍ فِي الْيَوْمِ وَاللَّيْلَةِ " . قَالَ هَلْ عَلَىَّ غَيْرُهُنَّ قَالَ " لاَ إِلاَّ أَنْ تَطَّوَّعَ " . قَالَ وَذَكَرَ لَهُ رَسُولُ اللَّهِ صلى الله عليه وسلم صِيَامَ شَهْرِ رَمَضَانَ قَالَ هَلْ عَلَىَّ غَيْرُهُ قَالَ " لاَ إِلاَّ أَنْ تَطَّوَّعَ " . قَالَ

وَذَكَرَ لَهُ رَسُولُ اللَّهِ صلى الله عليه وسلم الصَّدَقَةَ . قَالَ فَهَلْ عَلَىَّ غَيْرُهَا قَالَ " لاَ إِلاَّ أَنْ تَطَّوَّعَ " . فَأَدْبَرَ الرَّجُلُ وَهُوَ يَقُولُ وَاللَّهِ لاَ أَزِيدُ عَلَى هَذَا وَلاَ أَنْقُصُ . فَقَالَ رَسُولُ اللَّهِ صلى الله عليه وسلم " أَفْلَحَ إِنْ صَدَقَ "

நஜத்தைச் சேர்ந்த தலைமுடி களைந்த ஒரு நபர் ரஸுலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ அவர்களிடம் வந்தார். அவரது முணுமுணுப்புக் குரல் சரியாகக் கேட்கவில்லை என்றாலும், அவர் கூறுவது புரிந்தது. அவர் அருகில் வந்ததும்தான், அவர் இஸ்லாத்தைக் குறித்துக் கேட்கிறார் என அறிய முடிந்தது. ரஸுலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ கூறினார்கள், “பகலும், இரவுமாக ஒரு நாளைக்கு ஐந்து வேளைத் தொழுகை.” அவர் வினவினார், “அதைத் தவிர நான் எதனையும் அதிகப்படுத்த வேண்டுமா?” ரஸுலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ கூறினார்கள், “இல்லை, நீர் உபரியாகச் செய்வதைத் தவிர.” பின்னர் ரமளான் மாத நோன்பைப் பற்றிக் கூறினார்கள். அவர் வினவினார், “அதைத் தவிர நான் எதனையும் அதிகப்படுத்த வேண்டுமா?” ரஸுலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ கூறினார்கள், “இல்லை, நீர் உபரியாகச் செய்வதைத் தவிர.” பின்னர் ஜகாத்தைப் பற்றிக் கூறினார்கள். அவர் வினவினார், “அதைத் தவிர நான் எதனையும் அதிகமாகக் கொடுக்க வேண்டுமா?” ரஸுலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ கூறினார்கள், “இல்லை, நீர் விருப்பமாகச் செய்வதைத் தவிர.” அந்த மனிதர் திரும்பிச் சென்றவாறு கூறினார், “அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَى வின் மீது ஆணையாக! நான் எதனையும் கூட்டமாட்டேன். அதிலிருந்து குறைக்கவும் மாட்டேன்.” ரஸுலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ கூறினார்கள், “அவர் உண்மையைக் கூறினால், அவர் வெற்றியாளர்தாம்.”

எனவே ஐவேளைத் தொழுகைகளைத் தவிர மற்றவை நஃபிலான தொழுகைகளாக எடுத்துக் கொள்ளலாம். எனிலும் சில தொழுகைகளில் விதிவிலக்குகள் உள்ளன. உதாரணமாக ஜனாஸா தொழுகை சிலர் கட்டாயம் தொழ வேண்டும்.

**நஃபில் தொழுகைகளின் சிறப்புக்கள்**

முதலாவதாக, அவற்றினால் அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَى வின் நெருக்கம் நமக்குக் கிடைக்கும்.

நாம் கடமையான தொழுகைகளை முற்றுமாக சரியாகத் தொழுவது கடினமான ஒன்றாகும். நேரம் தவறி தொழுதிருக்கலாம். தொழுகையில் தேவையான குஷூ இல்லாமல் இருந்திருக்கலாம். இவை போன்ற பல காரணங்களால் நமது கடமையான தொழுகைகளில் முழுமையாக இல்லாமல் குறைபாடுகள் இருக்க வாய்ப்புண்டு. எனவே நமது பதிவேடுகளில் உபரியான வணக்ககங்கள் இருந்தால், அதற்குப் பரிகாரமாக இருக்க வாய்ப்புண்டு.

அபு தாவூத் 864

அபு ஹுரைராஹ் رَضِيَ اللهُ عَنْهُ அறிவிப்பதாவது,

نِ النَّبِيِّ صلى الله عليه وسلم قَالَ " إِنَّ أَوَّلَ مَا يُحَاسَبُ النَّاسُ بِهِ يَوْمَ الْقِيَامَةِ مِنْ أَعْمَالِهِمُ الصَّلاَةُ قَالَ يَقُولُ رَبُّنَا جَلَّ وَعَزَّ لِمَلاَئِكَتِهِ وَهُوَ أَعْلَمُ انْظُرُوا فِي صَلاَةِ عَبْدِي أَتَمَّهَا أَمْ نَقَصَهَا فَإِنْ كَانَتْ تَامَّةً كُتِبَتْ لَهُ تَامَّةً

وَإِنْ كَانَ انْتَقَصَ مِنْهَا شَيْئًا قَالَ انْظُرُوا هَلْ لِعَبْدِي مِنْ تَطَوُّعٍ فَإِنْ كَانَ لَهُ تَطَوُّعٌ قَالَ أَتِمُّوا لِعَبْدِي فَرِيضَتَهُ مِنْ تَطَوُّعِهِ ثُمَّ تُؤْخَذُ الأَعْمَالُ عَلَى ذَاكُمْ " .

ரஸுலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ கூறியுள்ளர்கள், "நியாயத் தீர்ப்பு நாளில், மக்களிள் செயல்களைக் குறித்து முதன் முதலில் தொழுகையைப் பற்றிக் கேட்கப்படும். தான் அறிந்திருந்தாலும், மேலான அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَى தனது வானவர்களிடம் கூறுவான், "எனது அடியானின் தொழுகைகளை அவர் தொழுகையைச் சரியாகத் தொழுதுள்ளாரா அல்லது குறைவாகத் தொழுதுள்ளாராக என்று கவனியுங்கள். அவை சரியாக இருந்தால், அவ்வாறே சரியாக உள்ளது என்று பதியுங்கள். அவற்றில் குறையிருந்தால், அவன் கூறுவான், "எனது அடியான் செய்த உபரி தொழுகைகள் இருக்கலாம். அவ்வாறு இருந்தால், அவற்றைக் கடமையான தொழுகைகளுக்குப் பதிலாக எடுத்துக் கொள்ளுங்கள்." அவர்களின் செயல்கள் அவ்வாறே எடுத்துக் கொள்ளப்படும்.

அதுபோலவே உபரியான ஜகாத், நோன்பு போன்றவைகளும் எடுத்துக் கொள்ளப்படும்.

உபரியான தொழுகைகளில் ரஸுலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ அவர்கள் சொல்லாலும், செயலாலும் வலியுறுத்தியிருப்பது ஸுன்னாஹ் தொழுகைகளாகும். பொதுவாகவே எல்லா விதமான ந.்.பில் தொழுகைகளைத் தொழுவது சிறப்பாகும். ரஸுலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ சொன்னவற்றைத் தவிர, மற்ற ந.்.பில் தொழுகைகளுக்குக் காலம் நேரம் எதுவும் இல்லை. இரண்டிரண்டாக எத்தனை ரகஅத்துகளும் நாம் தொழலாம். எனினும் தொழக் கூடாத நேரங்கள் சில உள்ளன. அந்த நேரங்களில் ந.்.பில் தொழுகைகளைத் தொழக் கூடாது.

## தொழக் கூடாத நேரங்கள்

1. சூரியன் உதிக்கும் நேரம்.
2. சூரியன் நடு உச்சியின் நேரம்.
3. சூரியன் மறையும் நேரம்.
4. பஜ்ர் தொழுத பிறகு சூரியன் உதிக்கும் வரை.
5. அஸர் தொழுத பிறகு சூரியன் மறையும் வரை.

மற்ற நேரங்களில் எப்போது வேண்டுமானாலும், ந.்.பில் தொழுகைகளைத் தொழலாம்.

முஸ்லிம் 831

உக்பா இப்னு அமீர் رَضِيَ اللهُ عَنْهُ அறிவிப்பதாவது,

عُقْبَةَ بْنَ عَامِرٍ الْجُهَنِيَّ، يَقُولُ ثَلاَثُ سَاعَاتٍ كَانَ رَسُولُ اللَّهِ صلى الله عليه وسلم يَنْهَانَا أَنْ نُصَلِّيَ فِيهِنَّ أَوْ أَنْ نَقْبُرَ فِيهِنَّ مَوْتَانَا حِينَ تَطْلُعُ الشَّمْسُ بَازِغَةً حَتَّى تَرْتَفِعَ وَحِينَ يَقُومُ قَائِمُ الظَّهِيرَةِ حَتَّى تَمِيلَ الشَّمْسُ وَحِينَ تَضَيَّفُ الشَّمْسُ لِلْغُرُوبِ حَتَّى تَغْرُبَ .

**1511.** உக்பா பின் ஆமிர் அல்ஜுஹனீ (ரலி) அவர்கள் கூறியதாவது: மூன்று நேரங்களில் தொழ வேண்டாம்; அல்லது இறந்தவர்களைப் புதைக்க வேண்டாம் என எங்களுக்கு அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் தடை விதித்துவந்தார்கள். 1.சூரியன் உதயமாகத் துவங்கியதிலிருந்து நன்கு உயரும்வரை, 2.ஒருவர்உச்சிப் பொழுதில் நிற்கும்போது நிழல் விழாது போகும்) நண்பகல்

துவங்கியதிலிருந்து சூரியன் (மேற்கு) சாயும்வரை. 3. சூரியன் அஸ்தமிக்கத் தலைப்பட்டதிலிருந்து நன்கு மறையும்வரை. Book: 6 - **ஸஹீஹ் முஸ்லிம்**

முஸ்லிம் 825

அபு ஹுரைராஹ் رَضِي الله عَنْهُ அறிவிப்பதாவது,

عَنْ أَبِي هُرَيْرَةَ، أَنَّ رَسُولَ اللَّهِ صلى الله عليه وسلم نَهَى عَنِ الصَّلاَةِ بَعْدَ الْعَصْرِ حَتَّى تَغْرُبَ الشَّمْسُ وَعَنِ الصَّلاَةِ بَعْدَ الصُّبْحِ حَتَّى تَطْلُعَ الشَّمْسُ

**1503.** அபூஹுரைரா (ரலி) அவர்கள் கூறியதாவது: அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் அஸ்ருக்குப் பின்னாலிருந்து சூரியன் மறையும் வரைத் தொழ வேண்டாம் எனவும்,சுப்ஹுக்குப் பின்னாலிருந்து சூரியன் உதயமாகும் வரைத் தொழ வேண்டாம் எனவும் தடை செய்தார்கள். Book: 6 - **ஸஹீஹ் முஸ்லிம்**

எனினும் கடமையான தொழுகையை மறதியினாலோ அல்லது தூக்கத்தினாலோ தொழாமல் இருந்தால் இந்த நேரங்களில் உடனே தொழலாம். குறிப்பிட்ட காரணங்கள் இருக்கும் தொழுகைக்கும் இந்த சட்டம் பொருந்தாது. உதாரணம் ஜனாஸா தொழுகை, தஹிய்யத்துல் மஸ்ஜித் தொழுகை, பஜ்ர் தொழுகைக்கு முந்தைய ஸுன்னாஹ் தொழுகை ஜமாஅத்தின் காரணமாக பஜ்ருக்கு முன்னால் தொழவில்லை என்றாலும் நாம் இந்நேரங்களில் தொழலாம்.

## ஃபிக்ஹ் வகுப்பு 23 - தொழுகை தொடர்பான சட்டங்கள் 8 - வித்ரு மற்றும் இரவு தொழுகையின் சட்டங்கள்

**ஆசிரியர்: அஷ் ஷெய்க் உவைஸ் உமரி நளீரி**

உபரியான தொழுகைகளில் அதிகம் வலியுறுத்தப்பட்ட தொழுகைகளில் வித்ரு தொழுகையாகும். இமாம் அபு ஹனீ.்.பா رَحْمَهُ الله அவர்கள் இதனை வாஜிபு என்று சொல்வார்கள். அது பலவீனமான அறிப்பினால் உள்ளது. எனினும் அது வலியுறுத்தப்பட்ட ஸுன்னாஹ் முஅக்கதா ஆகும்.

அபு தாவூத் 1416

அலி இப்னு அபு தாலிப் رَضِي الله عَنْهُ அறிவிப்பதாவது,

عَنْ عَلِيٍّ، - رضى الله عنه - قَالَ قَالَ رَسُولُ اللَّهِ صلى الله عليه وسلم " يَا أَهْلَ الْقُرْآنِ أَوْتِرُوا فَإِنَّ اللَّهَ وِتْرٌ يُحِبُّ الْوِتْرَ "

ரஸுலுல்லாஹ் صَلَّى الله عَلَيْهِ وَسَلَّمَ கூறியுள்ளார்கள், “அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَى ஒருவனே! ஒருமையை விரும்புகிறான். குர்ஆனுடைய மக்களே வித்ரு தொழுங்கள்.”

வித்ருத் தொழுகையை வழக்கமாகத் தொடாமல் விட்டவர்கள் கெட்டவர்கள் எனவும், அவர்களது சாட்சியத்தை ஏற்றுக் கொள்ளக் கூடாது எனவும் இமாம் அஹ்மது இப்னு ஹன்.்.பல் رَحْمَهُ الله கூறியுள்ளார். வித்ருத் தொழுகையின் நேரம் இஷாத் தொழுகையிலிருந்து ஆரம்பித்து, பஜ்ர் தொழுகையின் ஆரம்பம் வரையாகும்.

அபு தாவூத் 1418

காரிஜா இப்னு ஹுதாபாஹ் رَضِي الله عَنْهُ அறிவிப்பதாவது,

عَنْ خَارِجَةَ بْنِ حُذَافَةَ، - قَالَ أَبُو الْوَلِيدِ الْعَدَوِيُّ - قَالَ خَرَجَ عَلَيْنَا رَسُولُ اللَّهِ صلى الله عليه وسلم فَقَالَ " إِنَّ اللَّهَ عَزَّ وَجَلَّ قَدْ أَمَدَّكُمْ بِصَلاَةٍ وَهِيَ خَيْرٌ لَكُمْ مِنْ حُمْرِ النَّعَمِ وَهِيَ الْوِتْرُ فَجَعَلَهَا لَكُمْ فِيمَا بَيْنَ الْعِشَاءِ إِلَى طُلُوعِ الْفَجْرِ " .

ரஸுலுல்லாஹ் صَلَّى الله عَلَيْهِ وَسَلَّمَ கூறியுள்ளார்கள், “அல்லாஹ் உங்களுக்கு ஒரு தொழுகையை அளித்துள்ளான். அது உங்களுக்கு சிவப்பு ஒட்டகத்தை விட சிறப்பானது. அது வித்ர் ஆகும். இரவுத் தொழுகைக்கும், விடியலுக்கும் இடையில் ஏற்படுத்தியுள்ளான்.

இவற்றில் சிறந்த நேரம் இரவின் கடைசிப்பகுதியாகும்.

புஹாரி 1145

அபு ஹுரைராஹ் رَضِي الله عَنْهُ அறிவிப்பதாவது,

عَنْ أَبِي هُرَيْرَةَ - رضى الله عنه - أَنَّ رَسُولَ اللَّهِ صلى الله عليه وسلم قَالَ " يَنْزِلُ رَبُّنَا تَبَارَكَ وَتَعَالَى كُلَّ لَيْلَةٍ إِلَى السَّمَاءِ الدُّنْيَا حِينَ يَبْقَى ثُلُثُ اللَّيْلِ الآخِرُ يَقُولُ مَنْ يَدْعُونِي فَأَسْتَجِيبَ لَهُ مَنْ يَسْأَلُنِي فَأُعْطِيَهُ مَنْ يَسْتَغْفِرُنِي فَأَغْفِرَ لَهُ "

**1145.** இறைத்தூதர்(ஸல்) அவர்கள் கூறினார்கள். 'நம்முடைய இறைவன் ஒவ்வொரு இரவும் கீழ் வானத்திற்கு இறங்கி இரவில் மூன்றில் ஒரு பகுதி இருக்கும்போது, 'என்னிடம் யாரேனும் பிரார்த்தித்தால் அதை நான் அங்கீகரிக்கிறேன். யாரேனும் என்னிடம் கேட்டால் அவருக்கு

கொடுக்கிறேன். யாரேனும் என்னிடம் பாவமன்னிப்புக் கோரினால் அவரை நான் மன்னிக்கிறேன்' என்று கூறுவான்'. என அபூ ஹுரைரா(ரலி) அறிவித்தார். Book: 19 - **ஸஹீஹுல் புகாரி**

எனினும் அந்நேரத்தில் கண்விழிக்க முடியாமல் போய்விடும் என அஞ்சினால், இஷாவிற்குப் பிறகு வித்ருத் தொழலாம்.

முஸ்லிம் 721

அபு ஹுரைராஹ் رَضِي الله عَنْهُ அறிவிப்பதாவது,

عَنْ أَبِي هُرَيْرَةَ، قَالَ أَوْصَانِي خَلِيلِي صلى الله عليه وسلم بِثَلاَثٍ بِصِيَامِ ثَلاَثَةِ أَيَّامٍ مِنْ كُلِّ شَهْرٍ وَرَكْعَتَىِ الضُّحَى وَأَنْ أُوتِرَ قَبْلَ أَنْ أَرْقُدَ

**1303.** அபூஹுரைரா (ரலி) அவர்கள் கூறினார்கள்: என் உற்ற தோழர் (நபி-ஸல்) அவர்கள் ஒவ்வொரு மாதமும் மூன்று நாட்கள் நோன்பு நோற்பது, இரண்டு ரக்அத்கள் ளுஹாத் தொழுவது, வித்ர் தொழுதுவிட்டு உறங்குவது ஆகிய மூன்று விஷயங்களை எனக்கு அறிவுறுத்தினார்கள். Book: 6 - **ஸஹீஹ் முஸ்லிம்**

அபு ஹுரைராஹ் رَضِي الله عَنْهُ இரவில் ஒரு பகுதியைத் தங்கள் பாடத்தைப் பயிலவதற்கும், பின்னர் வித்ரு தொழுகைக்காகவும், பின்னர் ஒரு பகுதியை தூங்குவதற்கும் ஒதுக்கிக் கொள்வார்கள். அவர்கள் வித்ருத் தொழுகையை விட்டுவிடக் கூடாது என்பதற்காக ரஸூலுல்லாஹ் صَلَّى الله عَلَيْهِ وَسلَّمَ அவ்வாறு அவர்களுக்கு அறிவுறுத்தினார்கள். இரவில் ஒரு பகுதியை கல்விக்காக ஒதுக்கியதிலிருந்து நாம் படிப்பினை பெற வேண்டும். நாமும் கல்விக்காக நேரத்தை ஒதுக்குவது நல்லது.. அவ்வாறு அபு ஹுரைராஹ் رَضِي الله عَنْهُ நேரத்தை ஒதுக்கியதால்தான், மூன்று வருடங்கள் மட்டுமே ரஸூலுல்லாஹ் صَلَّى الله عَلَيْهِ وَسلَّمَ அவர்களுடன் இருந்தாலும், மற்றவர்களை விட மிக அதிகமான ஹதீதுகளை அறிவிக்கக்கூடிய பாக்கியத்தை அவர்கள் பெற்றார்கள்.

### வித்ருக் தொழுகையின் எண்ணிக்கை

குறைந்த அளவாக ஒரு ரகஅத் ஆகும். ரஸூலுல்லாஹ் صَلَّى الله عَلَيْهِ وَسلَّمَ அதிக அளவில் தொழுத எண்ணிக்கை அதிகப்பட்சம் பதின்னொன்று ஆகும். ஒற்றைப்படையான ஒன்றிலிருந்து ஆரம்பமாகும். ஒரு ரகஅத் என்பதற்கு ஆதாரம்,

அபு தாவூத் 1421, இப்னு மாஜாஹ். 1175

இப்னு உமர் رَضِي الله عَنْهُ அறிவிப்பதாவது,

عَنِ ابْنِ عُمَرَ، أَنَّ رَجُلاً، مِنْ أَهْلِ الْبَادِيَةِ سَأَلَ النَّبِيَّ صلى الله عليه وسلم عَنْ صَلاَةِ اللَّيْلِ فَقَالَ بِأُصْبُعَيْهِ هَكَذَا مَثْنَى مَثْنَى وَالْوِتْرُ رَكْعَةٌ مِنْ آخِرِ اللَّيْلِ.

“பாலைவனத்தில் வசித்த ஒருவர், ரஸூலுல்லாஹ் صَلَّى الله عَلَيْهِ وَسلَّمَ அவர்களிடம் இரவுத் தொழுகையைப் பற்றி கேட்டார். அவர்கள் தங்களின் இருவிரல்களினால் ஜோடியாக இவ்வாறு காட்டினார்கள். இரவில் கடைசியில் வித்ரு தொழுகையானது ஒரு ரகஅத் ஆகும்.”

புஹாரியிலும் இந்த வித ஹதீது இருந்தாலும், சிலர் இந்த ஹதீதை வேறு விதமாக விளக்க முற்படுவார்கள். அதிகப்பட்ச எண்ணிக்கைக்கு ஆதாரமானது,

புஹார் 3569

அபு ஸலமாஹ் இப்னு அப்துர் ரஹ்மான் رَضِي الله عَنْهُ அறிவிப்பதாவது,

عَنْ أَبِي سَلَمَةَ بْنِ عَبْدِ الرَّحْمَنِ، أَنَّهُ سَأَلَ عَائِشَةَ ـ رضى الله عنها ـ كَيْفَ كَانَتْ صَلاَةُ رَسُولِ اللَّهِ صلى الله عليه وسلم فِي رَمَضَانَ قَالَتْ مَا كَانَ يَزِيدُ فِي رَمَضَانَ وَلاَ غَيْرِهِ عَلَى إِحْدَى عَشْرَةَ رَكْعَةً،

**3569.** அபூ ஸலமா இப்னு அப்திர் ரஹ்மான்(ரஹ்) அறிவித்தார் நான் ஆயிஷா(ரலி) அவர்களிடம், 'ரமளான் மாதத்தி(ன் இரவுகளி)ல் இறைத்தூதர்(ஸல்) அவர்களின் தொழுகை எப்படியிருந்தது?' என்று கேட்டேன். அதற்கு அவர்கள், 'ரமளானிலும் மற்ற மாதங்களிலும் அவர்கள் பதினொரு ரக்அத்துகளுக்கு அதிகமாகத் தொழுததில்லை. (முதலில்) நான்கு ரக்அத்துகள் தொழுவார்கள். அதன் அழகையும் நீளத்தையும் பற்றிக் கேட்காதே. பிறகு நான்கு ரக்அத்துகள் தொழுவார்கள். அதன் அழகையும் நீளத்தையும் பற்றிக் கேட்காதே. பிறகு மூன்று ரக்அத்துகள் தொழுவார்கள். நான் 'இறைத்தூதர் அவர்களே! நீங்கள் வித்ரு (மூன்று ரக்அத்கள்) தொழுவதற்கு முன்னால் உறங்குவீர்களா?' என்று கேட்டேன். அவர்கள், 'என் கண் தான் உறங்குகிறது; என் உள்ளம் உறங்குவதில்லை' என்று பதிலளித்தார்கள்' என்று கூறினார்கள். Book : 61 - **ஸஹீஹுல் புகாரி**

எனினும் நாம் அதற்கு அதிகமான எண்ணிக்கையிலும் தொழலாம் என சில அறிஞர்கள் கூறியுள்ளனர். முஸ்லிம் 749

இப்னு உமர் رَضِي الله عَنْهُ அறிவிப்பதாவது,

عَنِ ابْنِ عُمَرَ، أَنَّ رَجُلاً، سَأَلَ رَسُولَ اللَّهِ صلى الله عليه وسلم عَنْ صَلاَةِ اللَّيْلِ فَقَالَ رَسُولُ اللَّهِ صلى الله عليه وسلم " صَلاَةُ اللَّيْلِ مَثْنَى مَثْنَى فَإِذَا خَشِيَ أَحَدُكُمُ الصُّبْحَ صَلَّى رَكْعَةً وَاحِدَةً تُوتِرُ لَهُ مَا قَدْ صَلَّى " .

**1363.** இப்னு உமர் (ரலி) அவர்கள் கூறியதாவது: ஒரு மனிதர் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களிடம் இரவுத் தொழுகை பற்றிக் கேட்டார். அதற்கு அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள், "இரவுத் தொழுகை இரண்டிரண்டு ரக்அத்களாகும். ஆனால், உங்களில் ஒருவர் சுப்ஹு (நேரம் வந்துவிட்டதோ) என்று அஞ்சினால் அவர் ஒரு ரக்அத் (வித்ர்) தொழட்டும்! (அவ்வாறு தொழுதால்) அவர் (முன்னர்) தொழுதவற்றை அது ஒற்றையாக ஆக்கிவிடும்" என்று பதிலளித்தார்கள். இந்த ஹதீஸ் இரு அறிவிப்பாளர்தொடர்களில் வந்துள்ளது. Book: 6 - **ஸஹீஹ் முஸ்லிம்**

இந்த ஹதீதை ஆதாரமாகக் கொண்டு அதிக எண்ணிக்கையிலும் நாம் தொழலாம் என அறிஞர்கள் கூறுகின்றனர்.

### வித்ருத் தொழுகை முறை

ஒரு ரகஅத் என்றால் வழக்கமாகத் தொழலாம்.

மூன்று ரகஅத் தொழும்போது இவ்வாறாகத் தொழலாம்.

1. மூன்று ரகஅத்துகளையும், இரண்டாவது ரகஅத்தில் தஷஹ்ஹுத் இருப்பில் இல்லாமல் தொடர்நது தொழலாம்.
2. இரண்டு ரகஅத்துகள் தொழுது ஸலாம் கொடுத்து விட்டு, மீண்டும் எழுந்து மூன்றாவது ரகஅத்தைத் தொழலாம். நிய்யத் மூன்று ரகஅத்துகள் என நினைவில் கொள்ள வேண்டும்.

ஐந்து ரகஅத் தொழுதால், கடைசியில் மட்டும் ஒரு தஷஹ்ஹுத் இருப்பில் இருந்துவிட்டுத் தொழலாம். ஏழு ரகஅத்துகளையும் இவ்வாறு ஒரே ஒரு தஷஹ்ஹுத் இருப்பில் தொழுது முடித்திருக்கிறார்கள்.

ஒன்பது ரகஅத்துகளை, எட்டாவது ரகஅத்தில் முதல் தஷஹ்ஹுத் இருப்பில் இருந்து எழுந்துவிட்டு ஒன்பதாவது ரகஅத்துகளையும் இறுதி தஷஹ்ஹுத் இருப்பில் அமர்ந்து விட்டு ஸலாம் சொல்வார்கள்.

பதின்னொன்று ரகஅத் தொழுதால், இரண்டிரண்டாகத் தொழுது ஸலாம் சொல்லி, கடைசியில் ஒரு ரகஅத் தொழ வேண்டும். அல்லது இரண்டிரண்டாக எட்டு ரகஅத்துகள் தொழுது விட்டு, கடைசி மூன்று ரகஅத்துகளும் ஒன்றாகத் தொழ வேண்டும்.

அதற்கு அதிகமாகத் தொழ விரும்புவர்கள், இரண்டிரண்டாகத் தொழுது ஸலாம் சொல்லி, கடைசியில் ஒரு ரகஅத் தொழ வேண்டும்.

## வித்ருத் தொழுகையின் மற்ற குறிப்புகள்

1. இஷாத் தொழுகை தொழுதுவிட்டு தூங்கச் சென்றவர்கள், மீண்டும் எழுந்து தஹஜ்ஜத் தொழலாம். கடைசித் தொழுகை வித்ராக இருக்க வேண்டும் என்பதற்காகத் திரும்பவும் வித்ருத் தொழ வேண்டியதில்லை. எனினும் வித்ருத் தொழுகையை கடைசியில் தொழுவதுதான் ஸுன்னாஹ் ஆகும்.

2. குனூத் ஓதுதல் ஸுன்னாஹ் ஆகும். அதனை ருக்கூவுக்கு முன்னாலும் ஓதலாம், அல்லது அதற்குப் பின்னாலும் ருக்கூவிற்குப் பிறகு எழுந்து ஓதலாம். குனூத் தொழ மறந்துவிட்டால், வித்ரு தொழுகையில் எவ்வித குற்றமும் இல்லை. ஸஜ்தா ஸஹ்வும் செய்ய வேண்டிய அவசியமில்லை.

3. வித்ரு தொழுகை நேரம் சென்றுவிட்டால், அவர்கள் சூரியன் உதித்த பிறகு, அதற்குப் பதிலாக இரண்டு ரகஅத்துகளாகத் (شَفْع) தொழலாம். ஒரு தடவை அவர்கள் அதனை சூரியன் உதித்த பிறகு தாங்கள் வழக்கமாகத் தொழும் பதினொன்று ரகஅத்துக்களுக்குப் பதிலகால பன்னிரண்டு ரகஅத்துகள் தொழுதார்கள். இவ்வாறோ நாமும் வழக்கமாகத் தொழும் எண்ணிக்கையில் ஒன்றை அதிகப்படுத்திக் கொள்ள வேண்டும்.

4. வித்ரு தொழுது முடித்ததும், سبحان الملك القدّوس (ஸுப்ஹானல் மலிக்குல் குத்தூஸ்) என மூன்று தடவைகள் கூற வேண்டும். மூன்றாவது தடவை சொல்லும்போது. சப்தத்தைச் சிறிது உயர்த்த வேண்டும்.

5. ரமழானில் வித்ருத் தொழுகை ஜமாஅத்தாகத் தொழ வலியுறுத்தப்பட்டுள்ளது. மற்ற காலங்களில் அவ்வாறு இல்லை.

## இரவுத் தொழுகை

வித்ருத் தொழுகைக்கும் இரவுத் தொழுகைக்கும் பல ஒற்றுமைகள் உள்ளன.

- இரண்டும் வலியுறுத்தப்பட்ட ஒன்றுதான், பர்ல் அல்ல.
- இரண்டுடைய நேரமும் ஒன்றே ஆகும.
- சிறந்த நேரம் இரண்டுக்கும் இரவின் கடைசி பகுதியாகும்.
- இரண்டும் ஒன்றுதான் சில அறிஞர்கள் கூறியுள்ளனர். ஒற்றைப்படையாகத் தொழுதால் வித்ரு ஆகும். இரட்டைப்படையாக இருந்தால் அது இரவுத் தொழுகையாகும்.

அன்னை ஆயிஷா அவர்களின் முந்தைய ஹதீது இதனைக் குறிக்கிறது.
கடமையான தொழுகைக்குப் பிறகு சிறந்த தொழுகை தஹஜ்ஜத் தொழுகைதான். எனவே அதில் ஆர்வம் காட்ட வேண்டும். முக்கியமான அழைப்புப் பணியில் இருப்பவர்கள் இதனைப் பேண வேண்டும்.

ஸூரத்துல் முஸ்ஸம்மில் (போர்வை போர்த்தியவர்)

**73:2** قُمِ الَّيْلَ اِلَّا قَلِيْلًا ۙ

**73:2.** இரவில் - சிறிது நேரம் தவிர்த்து (தொழுகைக்காக எழுந்து) நிற்பீராக;

நமக்கு தஹஜ்ஜத் தொழும் பாக்கியத்தை அல்லாஹ் அருள்புரிவானாக!

**Fiqh 24 - Laws Related to Prayer 9 - Emphasized prayers (Sunnath-e-Muaqqadah)**

# ஃபிக்ஹ் வகுப்பு 24 - தொழுகை தொடர்பான சட்டங்கள் 9 - வலியுறுத்தப்பட்ட தொழுகைகள்

**ஆசிரியர்: அஷ் ஷெய்க் உவைஸ் உமரி நளீரி**

இந்தப் பாடத்தில் நாம் வலியுறுத்தப்பட்ட ஸுன்னாஹ் தொழுகைகள் பற்றிக் காண்போம். ஸுன்னாஹ் முஅக்கதாஹ், ரவாத்திப் (முன் பின் ஸுன்னாஹ்கள்) பற்றி நாம் அறிவோம். கடமையான தொழுகை (பர்லு) தொழுகைகளுக்கு முன்னும், பின்னும் தொழும் ஸுன்னாஹ் தொழுகைகளை இது குறிக்கும்.

**ஒரு நாளில் பன்னிரண்டு ரகஅத்துக்கள்**

முஸ்லிம் 728

அன்னை உம்மு ஹபீபாஹ் رَضِيِ اللّٰه عَنْها அறிவிப்பதாவது,

أُمَّ حَبِيبَةَ تَقُولُ سَمِعْتُ رَسُولَ اللَّهِ صلى الله عليه وسلم يَقُولُ " مَنْ صَلَّى اثْنَتَىْ عَشْرَةَ رَكْعَةً فِي يَوْمٍ وَلَيْلَةٍ بُنِيَ لَهُ بِهِنَّ بَيْتٌ فِي الْجَنَّةِ "

**1319.** அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: யார் ஒவ்வொரு நாளும் பன்னிரண்டு ரக்அத்கள் (சுன்னத்) தொழுகின்றாரோ அதற்காக அவருக்குச் சொர்க்கத்தில் ஒரு மாளிகை எழுப்பப்படுகிறது.

இதை உம்மு ஹபீபா (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள். உம்மு ஹபீபா (ரலி) அவர்கள் கூறினார்கள்: இதை நான் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களிடம் கேட்டதிலிருந்து அந்தப் பன்னிரண்டு ரக்அத்களை நான் கைவிட்டதேயில்லை.Book: 6 - **ஸஹீஹ் முஸ்லிம்**

அவை எந்தந்த நேரத்தில் தொழுவது என்பது பற்றி இந்த ஹதீதில் கூறப்பட்டுள்ளது:

திர்மிதி 415

அன்னை உம்மு ஹபீபாஹ் رَضِيِ اللّٰه عَنْها அறிவிப்பதாவது,

عَنْ أُمِّ حَبِيبَةَ، قَالَتْ قَالَ رَسُولُ اللَّهِ صلى الله عليه وسلم " مَنْ صَلَّى فِي يَوْمٍ وَلَيْلَةٍ ثِنْتَىْ عَشْرَةَ رَكْعَةً بُنِيَ لَهُ بَيْتٌ فِي الْجَنَّةِ أَرْبَعًا قَبْلَ الظُّهْرِ وَرَكْعَتَيْنِ بَعْدَهَا وَرَكْعَتَيْنِ بَعْدَ الْمَغْرِبِ وَرَكْعَتَيْنِ بَعْدَ الْعِشَاءِ وَرَكْعَتَيْنِ قَبْلَ صَلاَةِ الْفَجْرِ "

“ரஸூலுல்லாஹ் صَلَّى اللّٰه عَلَيْه وَسَلَّم கூறியுள்ளார்கள், “ஒரு பகல் இரவில் யார் பன்னிரண்டு ரகஅத்துகள் யாரும் தொழுதால் அவருக்கு சுவனத்தில் ஒரு வீடு கட்டப்படும். லுஹருக்கு முன்னால் நான்கு ரகஅத்துக்கள், இரண்டு அதற்குப் பின்னர், மக்ரிப்புக்குப் பிறகு இரண்டு ரகஅத்துக்கள், இஷாவிற்குப் பிறகு இரண்டு ரகஅத்துக்கள், ஃபஜ்ருக்கு முன்னால் இரண்டு ரகஅத்துக்கள் ஆகியன.

அன்னை உம்மு ஹபீபாஹ் رَضِيِ اللّٰه عَنْها தொடர்ந்து கூறிப்பிடுவதாவது,

قَالَتْ أُمُّ حَبِيبَةَ فَمَا بَرِحْتُ أُصَلِّيهِنَّ بَعْدُ

“அதன் பிறகு நான் அவ்வாறு தொழுவதை பின்னர் விடவே இல்லை.”

ஃபஜ்ருக்கு முன்னால் தொழக்கூடிய இரண்டு ரகஅத்துக்கள் அதிகம் சிறப்புள்ளது.

முஸ்லிம் 725

عَنْ عَائِشَةَ، عَنِ النَّبِيِّ صلى الله عليه وسلم قَالَ " رَكْعَتَا الْفَجْرِ خَيْرٌ مِنَ الدُّنْيَا وَمَا فِيهَا " .

**1315.** ஆயிஷா (ரலி) அவர்கள் கூறியதாவது: நபி (ஸல்) அவர்கள் ஃபஜ்ர் நேரத்தில் தொழும் (சுன்னத்) இரண்டு ரக்அத்கள் பற்றிக் கூறுகையில், "அவ்விரண்டு ரக்அத்களும் உலகிலுள்ள அனைத்தையும்விட எனக்கு மிகவும் விருப்பமானவையாகும்" என்று கூறினார்கள். Book: 6 - **ஸஹீஹ் முஸ்லிம்**

எனவே ரஸுலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ பயணத்திலும் இந்த இரண்டு ரகஅத்துகளை(யும், வித்ருத் தொழுகையையும்) விடமாட்டார்கள்.

ஒரு நாளில் பன்னிரண்டு ரகஅத்துகள் என்பது ஜும்மா நாளில் பொருந்தாது. ஜும்மா அன்று தொழுகைக்கு முன் ஸுன்னாஹ் நான்கு என்று வரையறுக்கப்படவில்லை. ஒருவரால், இமாம் மின்பர் ஏறும் முன்பு வரை எத்தனை ரகஅத்துக்கள் தொழ முடியுமோ, அத்தனை ரகஅத்துகள் தொழலாம் என ரஸுலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ கூறியுள்ளார்கள்.

புஹாரி 883

ஸல்மான் ∴பார்ஸீ رَضِيَ اللهُ عَنْهُ அறிவிப்பதாவது,

عَنْ سَلْمَانَ الْفَارِسِيِّ، قَالَ قَالَ النَّبِيُّ صلى الله عليه وسلم " لاَ يَغْتَسِلُ رَجُلٌ يَوْمَ الْجُمُعَةِ، وَيَتَطَهَّرُ مَا اسْتَطَاعَ مِنْ طُهْرٍ، وَيَدَّهِنُ مِنْ دُهْنِهِ، أَوْ يَمَسُّ مِنْ طِيبِ بَيْتِهِ ثُمَّ يَخْرُجُ، فَلاَ يُفَرِّقُ بَيْنَ اثْنَيْنِ، ثُمَّ يُصَلِّي مَا كُتِبَ لَهُ، ثُمَّ يُنْصِتُ إِذَا تَكَلَّمَ الإِمَامُ، إِلاَّ غُفِرَ لَهُ مَا بَيْنَهُ وَبَيْنَ الْجُمُعَةِ الأُخْرَى ".

**883.** இறைத்தூதர்(ஸல்) அவர்கள் கூறினார்கள்: 'ஜும்ஆ நாளில் குளித்துவிட்டு இயன்றவரை சுத்தமாகித் தமக்குரிய எண்ணெய்யைத் தேய்த்துக் கொண்டு தம் வீட்டிலுள்ள நறுமணத்தைப் பூசிக் கொண்டு பள்ளிக்கு வந்து (அங்கு நெருக்கமாக அமர்ந்திருக்கும்) இரண்டு நபர்களைப் பிரித்துவிடாமல், தமக்கு விதிக்கப் பட்டதைத் தொழுதுவிட்டு, இமாம் உரையாற்றத் தொடங்கியதும் வாய் மூடி மவனமாக இருந்தால் அந்த ஜும்ஆவுக்கும் அடுத்த ஜும்ஆவுக்கும் இடையிலான பாவங்கள் மன்னிக்கப்படுகின்றன.' என ஸல்மான் பார்ஸி(ரலி) அறிவித்தார். Book : 11 - **ஸஹீஹுல் புகாரி**

அதே போல் ஜும்மாவிற்குப் பிறகு நான்கு ரகஅத்துக்கள் தொழ வேண்டும்.

முஸ்லிம் 881

அபு ஹுரைராஹ் رَضِيَ اللهُ عَنْهُ அறிவிப்பதாவது,

أَبِي، هُرَيْرَةَ قَالَ قَالَ رَسُولُ اللَّهِ صلى الله عليه وسلم " إِذَا صَلَّى أَحَدُكُمُ الْجُمُعَةَ فَلْيُصَلِّ بَعْدَهَا أَرْبَعًا " .

**1597.** அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: உங்களில் ஒருவர் ஜுமுஆ தொழுத பின் நான்கு ரக்அத்கள் (சுன்னத்) தொழட்டும்! இதை அபூஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள். Book: 7 - **ஸஹீஹ் முஸ்லிம்**

இது பள்ளிவாசலில் ஜும்மாவிற்குப் பிறகு தொழ வேண்டும். அவ்வாறு தொழாமல் வீட்டிற்குச் சென்றால்,

புஹாரி 937

அப்துல்லாஹ் இப்னு உமர் رَضِيَ اللهُ عَنْهُ அறிவிப்பதாவது,

عَنْ عَبْدِ اللَّهِ بْنِ عُمَرَ، أَنَّ رَسُولَ اللَّهِ صلى الله عليه وسلم

.....وَكَانَ لاَ يُصَلِّي بَعْدَ الْجُمُعَةِ حَتَّى يَنْصَرِفَ فَيُصَلِّي رَكْعَتَيْنِ

**937.** அப்துல்லாஹ் இப்னு உமர்(ரலி) அறிவித்தார். நபி(ஸல்) அவர்கள் லுஹருக்கு முன் இரண்டு ரக்அத்களும் பின் இரண்டு ரக்அத்களும் தொழுபவர்களாகவும் மஃரிபுக்குப் பிறகு தம் வீட்டில் இரண்டு ரக்அத்கள் தொழுபவர்களாகவும் இஷாவுக்குப் பிறகு இரண்டு ரக்அத்கள் தொழுபவர்களாகவும் இருந்தனர். ஜும்ஆவுக்குப் பின் (வீட்டுக்குப்) புறப்பட்டுச் சென்று இரண்டு ரக்அத்கள் தொழுபவர்களாகவும் இருந்தனர். Book : 11 - **ஸஹீஹுல் புகாரி**

எனவே ஜும்மாவுக்குப் பிறகு பள்ளிவாசலில் தொழுதால் நான்கு ரகஅத்துக்களும், வீட்டில் தொழுதால் இரண்டு ரகஅத்துக்களும் ஸுன்னாஹ் ஆகும்.

### லுஹருக்குப் பிறகு (இரண்டிரண்டாக) நான்கு ரஅத்துக்கள்

முன்னர் சொன்னபடி பன்னிரண்டு ரகஅத்துகளில் லுஹருக்குப் பிறகு இரண்டு ரகஅத்துக்கள் தொழுகையும் அடங்கும் என்றாலும், லுஹருக்குப் பிறகு நான்கு ரகஅத்துக்கள் தொழுவது சிறப்பாகும்.

அபு தாவூத் 1269

அன்னை உம்மு ஹபீபாஹ் رَضِي الله عَنْهَا கூறியுள்ளதாவது,

قَالَتْ أُمُّ حَبِيبَةَ زَوْجُ النَّبِيِّ صلى الله عليه وسلم قَالَ رَسُولُ اللَّهِ صلى الله عليه وسلم " مَنْ حَافَظَ عَلَى أَرْبَعِ رَكَعَاتٍ قَبْلَ الظُّهْرِ وَأَرْبَعٍ بَعْدَهَا حَرُمَ عَلَى النَّارِ "

"ரஸூலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ கூறியுள்ளார்கள், "யார் வழக்கமாக லுஹருக்கு முன்பும், பின்பும் நான்கு ரகஅத்துக்களும் தொழுது வந்தால், அவருக்கு நரகம் ஹராமாக்கப்படும்."

### அஸர் தொழுகைக்கு முன்பு (இரண்டிரண்டாக) நான்கு ரகஅத்துக்கள்

அபு தாவூத் 1271

அப்துல்லாஹ் இப்னு உமர் رَضِي الله عَنْهُ அறிவிப்பதாவது,

عَنِ ابْنِ عُمَرَ، قَالَ قَالَ رَسُولُ اللَّهِ صلى الله عليه وسلم " رَحِمَ اللَّهُ امْرَأً صَلَّى قَبْلَ الْعَصْرِ أَرْبَعًا " .

"ரஸூலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ கூறியுள்ளார்கள், "அஸருக்கு முன்னால் நான்கு ரகஅத்துக்கள் தொழுபவருக்கு அல்லாஹ் அருள் புரியட்டும்."

இஷாவுக்குப் பின்பு (இரண்டிரண்டாக) நான்கு ரகஅத்துக்கள்:

இதன் சிறப்பு பற்றியும் கூறப்பட்டுள்ளது.

இப்னு அப்பாஸ் رَضِي الله عَنْهُ அறிவிப்பதாவது,

فَصَلَّى النَّبِيُّ صلى الله عليه وسلم الْعِشَاءَ، ثُمَّ جَاءَ إِلَى مَنْزِلِهِ، فَصَلَّى أَرْبَعَ رَكَعَاتٍ، ثُمَّ نَامَ،

"ரஸூலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ கூறியுள்ளார்கள், "...அவர்கள் இஷாத் தொழுகைக்குப் பிறகு வீட்டில் வந்து நான்கு ரகஅத்துக்கள் தொழுதார்கள். பின்னர் உறங்கினார்கள்..

இந்த நான்கு ரகஅத்துக்கள் தொழுதால் லைலத்துல் கத்ர் இரவில் தொழுத நன்மை கிடைக்கும் என்ற பலவீனமான செய்தியும் உள்ளது.

### மக்ரிப்புக்கு முன்னர் இரண்டு ரகஅத்துக்கள்

புஹாரி 1183

அப்துல்லாஹ் அல் முஸ்னீ رَضِي الله عَنْهُ அறிவிப்பதாவது,

عَنِ الْحُسَيْنِ، عَنِ ابْنِ بُرَيْدَةَ، قَالَ حَدَّثَنِي عَبْدُ اللَّهِ الْمُزَنِيُّ، عَنِ النَّبِيِّ صلى الله عليه وسلم قَالَ " صَلُّوا قَبْلَ صَلاَةِ الْمَغْرِبِ ". قَالَ فِي الثَّالِثَةِ ـ لِمَنْ شَاءَ كَرَاهِيَةَ أَنْ يَتَّخِذَهَا النَّاسُ سُنَّةً.

**1183.** அப்துல்லாஹ் அல் முஸ்னி(ரலி) அறிவித்தார். மஃரிபுக்கு முன் நீங்கள் தொழுங்கள். மஃரிபுக்கு முன் தொழுங்கள். மஃரிபுக்கு முன் விரும்புபவர்கள் தொழுங்கள்' என்று இறைத்தூதர்(ஸல்)

அவர்கள் கூறினார்கள். மக்கள் அதை ஒரு ஸுன்னத்தாகக் கருதக்கூடாது. என்பதற்காகவே இவ்வாறு குறிப்பிட்டார்கள். Book: 19 - **ஸஹீஹுல் புகாரி**

எனினும் முக்கியமான ஸஹாபாக்கள் இதனைத் தொழ விரைந்துள்ளார்கள்.

புஹாரி 503

அனஸ் رَضِي الله عَنْهُ அறிவிப்பதாவது,

عَنْ أَنَسٍ، قَالَ لَقَدْ رَأَيْتُ كِبَارَ أَصْحَابِ النَّبِيِّ صلى الله عليه وسلم يَبْتَدِرُونَ السَّوَارِيَ عِنْدَ الْمَغْرِبِ. وَزَادَ شُعْبَةُ عَنْ عَمْرٍو عَنْ أَنَسٍ حَتَّى يَخْرُجَ النَّبِيُّ صلى الله عليه وسلم.

**503.** அனஸ் (ரலி) அறிவிக்கார். மஃரிபு(க்கு பாங்கு சொன்னது) முதல் நபி(ஸல்) அவர்கள் வெளியே வரும் வரை முகிய நபித்தோழர்கள் (இரண்டு ரக்அத்கள் முன் ஸுன்னத் தொழுவதற்காகத்) தூண்களை நோக்கி விரைவார்கள். Book :8 - **ஸஹீஹுல் புகாரி**

பள்ளிவாசல் தூண்களை நோக்கி தொழ விரைவாகச் செல்வார்கள்.

பொதுவாகவே அதானுக்கும் பர்ளுத் தொழுகைக்கும் இடையில் தொழுகை உள்ளது.

புஹாரி 627

அப்துல்லாஹ் இப்னு முக்ஃபல் رَضِي الله عَنْهُ அறிவிப்பதாவது,

عَنْ عَبْدِ اللَّهِ بْنِ مُغَفَّلٍ، قَالَ قَالَ النَّبِيُّ صلى الله عليه وسلم " بَيْنَ كُلِّ أَذَانَيْنِ صَلاَةٌ بَيْنَ كُلِّ أَذَانَيْنِ صَلاَةٌ ـ ثُمَّ قَالَ فِي الثَّالِثَةِ ـ لِمَنْ شَاءَ ".

**627.** அப்துல்லாஹ் இப்னு முகப்பல் (ரலி) அறிவிக்கார். 'ஒவ்வொரு பாங்குக்கும் இகாமத்துக்குமிடையில் ஒரு தொழுகை உண்டு' என்று நபி (ஸல்) அவர்கள் இரண்டு முறை கூறிவிட்டு மூன்றாம் முறை 'விரும்பியவர்கள் தொழலாம்' என்றார்கள். Book: 10 - **ஸஹீஹுல் புகாரி**

### ஸுன்னாஹ் தொழுகைகளுக்கு இடையில் உள்ள வித்தியாசம்

முன்னால் சொல்லப்பட்ட ஒரு நாளின் பன்னிரண்டு ரகஅத்திற்கும், இப்போது கூறப்படட உபரித் தொழுகைகளுக்கும் உள்ள வித்தியாசம் யாவை? நாம் பயணத்தில் இல்லாமல் இருந்தால், முந்தைய பன்னிரண்டு ரகஅத்துக்களையும் கடமையான தொழுகையைப் போல தொழ வேண்டும் என்று வலியுறுத்திக் கூறப்பட்டுள்ளது. பயணத்தில் இருக்கும் போது ஃபஜ்ருக்கு முந்தைய இரண்டு ரகஅத்துக்கள் தவிர மற்றவைகளை ரஸுலுல்லாஹ் صَلَّى الله عَلَيْهِ وَسَلَّمَ தொழ மாட்டார்கள். எனவே இவ்வாறு தொழாமல் இருப்பதுதான் ஸுன்னாஹ் ஆகும். இப்னு உமர் அவர்களும் இவ்வாறே தொழுது வந்தார்கள். அவர்கள் ஏன் ஸுன்னாஹ்களைத் தொழுவதில்லை என்று வினவப்பட்டபோது, அவர்கள் அதுதான் ஸுன்னாஹ்வாகும் என்றாகும். இல்லையென்றால், பயணத்தின் காரணமாக தாங்கள் பர்ளுத் தொழுகைகளை நான்கிலிருந்து இரண்டாக குறைக்காமல் தொழுதிருக்கலாமே எனக் கூறினார்கள். எனவே பயணத்தில் இருப்பவர்களில் ஸுன்னாஹ் தொழாதவர்களே சிறந்தவர்கள் ஆவார்கள்.

இந்த ஸுன்னாஹ் முகஅக்கதாவை, பர்ளுத் தொழுகையைப் போல தொடர்ந்து செய்ய வேண்டும். ஆனால் மற்ற உபரித் தொழுகைகளை அந்த அளவிற்குத் தொடர்ந்து தொழாமல், இடையிடையே விட்டுவிட வேண்டும்.

அன்னை ஆயிஷா رَضِيَ اللهُ عَنْهَا அவர்களும், ரஸுலுல்லாஹ் صَلَّى الله عَلَيْهِ وَسَلَّمَ இப்படியான தொழுகைகளை விட்டுவிட்டுத்தான் தொழுவார்கள் என அறிவித்திருக்கிறார்கள்.

### தஹிய்யத் மஸ்ஜித் தொழுகை

புஹாரி 1167

அபு கத்தாதாஹ் رَضِي الله عَنْهُ அறிவிப்பதாவது,

أَبَا قَتَادَةَ بْنَ رِبْعِيٍّ الأَنْصَارِيَّ ـ رضى الله عنه ـ قَالَ قَالَ النَّبِيُّ صلى الله عليه وسلم " إِذَا دَخَلَ أَحَدُكُمُ الْمَسْجِدَ فَلاَ يَجْلِسْ حَتَّى يُصَلِّيَ رَكْعَتَيْنِ ".

**1167.** இறைத்தூதர்(ஸல்) அவர்கள் கூறினார்கள்: 'உங்களில் ஒருவர் பள்ளியில் நுழைந்ததும் இரண்டு ரக்அத்கள் தொழாமல் உட்கார வேண்டாம்'. என அபூ கதாதா(ரலி) அறிவித்தார். Book: 19 - **ஸஹீஹுல் புகாரி**

ஒரு தடவை அவர்கள் மின்பரில் இருக்கும்போது, ஒரு ஸஹாபி பள்ளிவாசலில் நுழைந்து உடனே அமர்ந்து விட்டார். அவரை எழுந்து இரண்டு ரகஅத்துக்கள் தொழுமாறு கூறினார்கள்.

பள்ளிவாசலில் நுழைந்ததும், வழக்கமான வேறு எந்த தொழுகையைத் தொழுதால், தஹிய்யத் தொழுகை எனத் தனியாகத் தொழ வேண்டியதில்லை.

## ளுஹாத் தொழுகை

ஃபஜ்ர் தொழுகைக்குப் பிறகு காத்திருந்து சூரியன் உதித்த சில நிமிடங்கள் கழித்து தொழுவது, இஸ்ராக், ளுஹா மற்றும் அவ்வாபீன் என்று பல பெயர்களில் அழைக்கப்படுகிறது. இது குறைந்தபட்சம் இரண்டு ரகஅத்துக்களாகவும், அதிகப்பட்சம் இரண்டிரண்டு ரகஅத்துக்களாக எட்டு ரகஅத்துக்கள் தொழலாம்.

முஸ்லிம் 720

அபுதர் رَضِي الله عَنْهُ அறிவிப்பதாவது,

عَنْ أَبِي ذَرٍّ، عَنِ النَّبِيِّ صلى الله عليه وسلم أَنَّهُ قَالَ " يُصْبِحُ عَلَى كُلِّ سُلاَمَى مِنْ أَحَدِكُمْ صَدَقَةٌ فَكُلُّ تَسْبِيحَةٍ صَدَقَةٌ وَكُلُّ تَحْمِيدَةٍ صَدَقَةٌ وَكُلُّ تَهْلِيلَةٍ صَدَقَةٌ وَكُلُّ تَكْبِيرَةٍ صَدَقَةٌ وَأَمْرٌ بِالْمَعْرُوفِ صَدَقَةٌ وَنَهْىٌ عَنِ الْمُنْكَرِ صَدَقَةٌ وَيُجْزِئُ مِنْ ذَلِكَ رَكْعَتَانِ يَرْكَعُهُمَا مِنَ الضُّحَى " .

**1302.** நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: உங்களில் ஒருவர் ஒவ்வொரு காலையிலும் (தமது உடலிலுள்ள) ஒவ்வொரு மூட்டிற்காகவும் தர்மம் செய்வது கடமையாகும்;இறைவனைத் துதிக்கும் ஒவ்வொரு துதிச் சொல்லும் (சுப்ஹானல்லாஹ்) தர்மமாகும். ஒவ்வொரு புகழ்மாலையும் (அல்ஹம்து லில்லாஹ்) தர்மமாகும். ஒவ்வொரு "ஓரிறை உறுதிமொழி"யும் (லா இலாஹ இல்லல்லாஹ்) தர்மமாகும்; அவனைப் பெருமைப்படுத்தும் ஒவ்வொரு சொல்லும் (அல்லாஹு அக்பர்) தர்மமே! நல்லதை ஏவுதலும் தர்மமே! தீமைகளைத் தடுத்தலும் தர்மமே! இவை அனைத்திற்கும் (ஈடாக) முற்பகல் நேரத்தில் (ளுஹா) இரண்டு ரக்அத்கள் தொழுவது போதுமானதாக அமையும். இதை அபூதர் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள். Book: 6 - **ஸஹீஹ் முஸ்லிம்**

## இஸ்திகாராஹ் தொழுகை

ஒரு காரியத்தைச் செய்ய நினைக்கும்போது, அதன் நன்மை, தீமை பற்றி குழப்பிய நிலையில், தெளிவிற்காக அல்லாஹ் வின் உதவி கேட்டுத் தொழும் தொழுகை இஸ்திகாரா தொழுகையாகும். ஒரு செயல் பற்றி சரியான முடிவு எடுக்க அல்லாஹ் துஆ கேட்கும் தொழுகை இஸ்திகாராஹ் ஆகும்.

புஹாரி 1166

ஜாபிர் இப்னு அப்துல்லாஹ் رَضِي الله عَنْهُ அறிவிப்பதாவது,

عَنْ جَابِرِ بْنِ عَبْدِ اللَّهِ ـ رضى الله عنهما ـ قَالَ كَانَ رَسُولُ اللَّهِ صلى الله عليه وسلم يُعَلِّمُنَا الاِسْتِخَارَةَ فِي الأُمُورِ كَمَا يُعَلِّمُنَا السُّورَةَ مِنَ الْقُرْآنِ يَقُولُ " إِذَا هَمَّ أَحَدُكُمْ بِالأَمْرِ فَلْيَرْكَعْ رَكْعَتَيْنِ مِنْ غَيْرِ الْفَرِيضَةِ ثُمَّ لِيَقُلِ اللَّهُمَّ إِنِّي أَسْتَخِيرُكَ بِعِلْمِكَ وَأَسْتَقْدِرُكَ بِقُدْرَتِكَ، وَأَسْأَلُكَ مِنْ فَضْلِكَ الْعَظِيمِ، فَإِنَّكَ تَقْدِرُ وَلاَ أَقْدِرُ وَتَعْلَمُ

وَلاَ أَعْلَمُ وَأَنْتَ عَلاَّمُ الْغُيُوبِ، اللَّهُمَّ إِنْ كُنْتَ تَعْلَمُ أَنَّ هَذَا الأَمْرَ خَيْرٌ لِي فِي دِينِي وَمَعَاشِي وَعَاقِبَةِ أَمْرِي ـ أَوْ قَالَ عَاجِلِ أَمْرِي وَآجِلِهِ ـ فَاقْدُرْهُ لِي وَيَسِّرْهُ لِي ثُمَّ بَارِكْ لِي فِيهِ، وَإِنْ كُنْتَ تَعْلَمُ أَنَّ هَذَا الأَمْرَ شَرٌّ لِي فِي دِينِي وَمَعَاشِي وَعَاقِبَةِ أَمْرِي ـ أَوْ قَالَ فِي عَاجِلِ أَمْرِي وَآجِلِهِ ـ فَاصْرِفْهُ عَنِّي وَاصْرِفْنِي عَنْهُ، وَاقْدُرْ لِي الْخَيْرَ حَيْثُ كَانَ ثُمَّ أَرْضِنِي بِهِ ـ قَالَ ـ وَيُسَمِّي حَاجَتَهُ ".

**1162.** ஜாபிர் இப்னு அப்தில்லாஹ்(ரலி) அறிவித்தார். நபி(ஸல்) அவர்கள் குர்ஆனுடைய அத்தியாயங்களை எங்களுக்குக் கற்றுத் தந்தது போல் எல்லாக் காரியங்களிலும் நல்லதைத் தேர்வு செய்யும் முறையையும் கற்றுத் தந்தார்கள். அவர்கள் கூறினார்கள்: 'உங்களில் ஒருவருக்கு ஏதேனும் பிரச்சினை ஏற்பட்டால் கடமையல்லாத இரண்டு ரக்அத்களை அவர் தொழட்டும். பின்னர் 'இறைவா! உனக்கு ஞானம் இருப்பதால் உன்னிடம் நல்லதை வேண்டுகிறேன். உனக்கு வல்லமை இருப்பதால் உன்னிடம் வல்லமையை வேண்டுகிறேன். உன்னுடைய மகத்தான அருளை உன்னிடம் வேண்டுகிறேன். நீ அனைத்திற்கும் அறிகிறாய். நான் அறிய மாட்டேன். மறைவான என்னுடைய இந்தக் காரியம் என்னுடைய மார்க்கத்திற்கும் என்னுடைய வாழ்க்கைக்கும் என்னுடைய மறுமைக்கும் சிறந்தது என்று நீ அறிந்தால் அதற்குரிய ஆற்றலை எனக்குத் தா! அதை எனக்கு எளிதாக்கித் தா! பிறகு அதில் எனக்கு பரக்கத் செய்! இந்தக் காரியம் என்னுடைய மார்க்கத்திற்கும் என்னுடைய வாழ்க்கைக்கும் கெட்டது என்று நீ அறிந்தால் என்னைவிட்டு இந்தக் காரியத்தையும் இந்தக் காரியத்தையும்விட்டு என்னையும் திருப்பி விடு. எங்கிருந்தாலும் எனக்கு நல்லவற்றிற்கு ஆற்றலைத் தா! திருப்தியைத் தா! என்று கூறட்டும். அதன் பிறகு தம் தேவையைக் குறிப்பிடட்டும்.' Book: 19 - ஸஹீஹுல் புகாரி

என்ன காரியம் என்பதை இதில் சேர்க்குமாறு ரஸூலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ பின்னர் கூறினார்கள். வாஜிபான காரியங்களிலோ, அல்லது வலியுறுத்தப்பட்ட விஷயங்களில் இஸ்திகாராஹ் செய்ய வேண்டியதில்லை. முடிவு எடுக்கும் விஷயங்களில் ஏதேனும் குழப்பம் ஏற்பட்டால் இதனை செய்ய வேண்டும். உதாரணமாக, மணம் முடிக்கும்போது மணமகளை அல்லது மணமகனைத் தேர்தெடுக்கும்போது, முடிவெடுப்பதில் சிரமம் இருந்தால், வியாபார விஷயங்களில், பயணங்கள் போவதா வேண்டாமா என்று குழப்பமான நிலையில் நாம் இதனைக் கொண்டு அல்லாஹ் வின் உதவியை நாடலாம்.

பர்ளு அல்லாத இரண்டு ரகஅத்துக்களை இஸ்திகாராஹ் நிய்யத்துடன் தொழுது, மேற்கண்ட துஆவை ஓத வேண்டும். அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَى நமக்கு நன்மையில் முடியும் காரியத்திற்கு வழி வகுத்து, அதனை இலேசாக ஆக்கிவிடுவான்.

அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَى வின் உதவி நமக்கு என்றும் கிடைக்கத் துஆச் செய்வோம்.

**Fiqh 25 - Laws Related to Prayer 10 - Emphasized prayers (Sunnath-e-Muaqqadah)**

# ஃபிக்ஹ் வகுப்பு 25 - தொழுகை தொடர்பான சட்டங்கள் 10 - அதான் (பாங்கு) சட்டங்கள்

**ஆசிரியர்: அஷ் ஷெய்க் உவைஸ் உமரி நஸீரி**

முதலில் அதான் பற்றிய சட்டங்களைக் காண்போம்.

தொழுகை ஹிஜ்ரி பத்தாம் ஆண்டில் கடமையாக்கப்பட்டது. பின்னர் ரஸுலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَமதினாவுக்கு ஹிஜ்ரத் செய்தார்கள். அங்கு பள்ளிவாசல் கட்டப்பட்டு ஒன்றாகத் தொழ ஆரம்பிக்கும் நிலையில். தொழுகை நேரத்தில் அனைவரையும் ஒன்று கூட்டுவதற்கான வழிமுறை ஏதும் இல்லாத காலத்தினால், சிலருக்கு ஜமாஅத்தில் சேருவதில்லை தவறும் நிலை இருந்தது. எனவே அது குறித்து அவர்கள் ஆலோசனை செய்தார்கள்.

சிலர் தொழுகை நேரம் வந்தால், நெருப்பை மூட்டினால், அதனைக் கண்டு மக்கள் வரலாம் என்ற யோசனையைக் கூறினார்கள். மற்றொரு ஸஹாபி தொழுகைக்கு வரும்படி நாம் அழைக்காலம் என்ற யோசனையைக் கூறினார். ரஸுலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَஅவர்களுக்கு இந்த யோசனை சரியாகப்பட்டது. எனினும் எப்படிச் சொல்லி அழைப்பது என்ற விவரம் முடிவு செய்யப்படாமல் அந்த கூட்டம் முடிந்தது.

அன்றிரவில் அப்துல்லாஹ் இப்னு ஸைத் அப்து ரப்பிஹி رَضِي الله عَنْهُஓர் கனவு கண்டார். கனவில் ஒரு கையில் சங்கு ஒன்றை வைத்திருந்தார். அவர் அதனைத் தமக்குத் தருமாறு வேண்டினார். அது எதற்கு என்று அந்த மனிதர் வினவே, தாம் அதனை ஊதுவதன் மூலம் மக்களை ஜமாஅத் தொழுகைக்கு அழைக்க உதவும் என்றார். அந்த மனிதரோ, அழைப்பு கொடுப்பதற்குத் தாம் அதனைவிடச் சிறந்த வழி ஒன்றை கூறுவதாகச் சொல்லி அதான் சொல்லும் கூறினார். விழித்ததும், அவர் ஓடோடிச் சென்று அதனை ரஸுலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَஅவர்களிடம் கூற, அவர்களும் இது அல்லாஹ் விடமிருந்து வந்த நற்செய்தி என, அந்த முறையை ஏற்றுக் கொண்டவர்களாக, பிலால் رَضِي الله عَنْهُஅவர்களை அழைத்து அவரிடம் அவ்வாறே அதான் கூறி மக்களை அழைக்குமாறு சொன்னார்கள். பிலால் رَضِي الله عَنْهُஅவர்கள் தங்களின் உரத்த குரலில் முதன்முதலாக அதானைச் சொல்ல, அதனைக் கேட்ட உமர் رَضِي الله عَنْهُஅவர்கள், உடனே பள்ளிவாசலுக்கு ஓடோடி வந்தார்கள். இந்தச் சொற்களை நான் கனவில் இப்போதுதான் கேட்டுக் கொண்டேன் என்று அவர்கள் ரஸுலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَஅவர்களிடம் கூறினார்கள்.

அபு தாவூத் 506

இப்னு அபி லைலா رَضِي الله عَنْهُஅறிவிப்பதாவது,

أُحِيلَتِ الصَّلاَةُ ثَلاَثَةَ أَحْوَالٍ - قَالَ - وَحَدَّثَنَا أَصْحَابُنَا أَنَّ رَسُولَ اللَّهِ صلى الله عليه وسلم قَالَ " لَقَدْ أَعْجَبَنِي أَنْ تَكُونَ صَلاَةُ الْمُسْلِمِينَ - أَوْ قَالَ الْمُؤْمِنِينَ - وَاحِدَةً حَتَّى لَقَدْ هَمَمْتُ أَنْ أَبُثَّ رِجَالاً فِي الدُّورِ يُنَادُونَ النَّاسَ بِحِينِ الصَّلاَةِ وَحَتَّى هَمَمْتُ أَنْ آمُرَ رِجَالاً يَقُومُونَ عَلَى الآطَامِ يُنَادُونَ الْمُسْلِمِينَ بِحِينِ الصَّلاَةِ حَتَّى نَقَسُوا أَوْ كَادُوا أَنْ يَنْقُسُوا " . قَالَ فَجَاءَ رَجُلٌ مِنَ الأَنْصَارِ فَقَالَ يَا رَسُولَ اللَّهِ إِنِّي لَمَّا رَجَعْتُ - لِمَا رَأَيْتُ

مِنَ اهْتِمَامِكَ - رَأَيْتُ رَجُلاً كَأَنَّ عَلَيْهِ ثَوْبَيْنِ أَخْضَرَيْنِ فَقَامَ عَلَى الْمَسْجِدِ فَأَذَّنَ ثُمَّ قَعَدَ قَعْدَةً ثُمَّ قَامَ فَقَالَ مِثْلَهَا إِلاَّ أَنَّهُ يَقُولُ قَدْ قَامَتِ الصَّلاَةُ وَلَوْلاَ أَنْ يَقُولَ النَّاسُ - قَالَ ابْنُ الْمُثَنَّى أَنْ تَقُولُوا - لَقُلْتُ إِنِّي كُنْتُ يَقْظَانًا غَيْرَ نَائِمٍ . فَقَالَ رَسُولُ اللَّهِ صلى الله عليه وسلم وَقَالَ ابْنُ الْمُثَنَّى " لَقَدْ أَرَاكَ اللَّهُ خَيْرًا " . وَلَمْ يَقُلْ عَمْرٌو " لَقَدْ أَرَاكَ اللَّهُ خَيْرًا فَمُرْ بِلاَلاً فَلْيُؤَذِّنْ " . قَالَ فَقَالَ عُمَرُ أَمَا إِنِّي قَدْ رَأَيْتُ مِثْلَ الَّذِي رَأَى وَلَكِنِّي لَمَّا سُبِقْتُ اسْتَحْيَيْتُ .

தொழுகை மூன்று கட்டமாக நிகழ்ந்தது. ரஸுலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ கூறினார்கள், “முஸ்லிம்கள் ஒன்றாகத் தொழுவது (ஜமாஅத்) எனக்கு விருப்பமாக உள்ளது. எனவே நான் மக்களை வீட்டிற்குச் சென்று அழைக்கலாம் என நினைக்கிறேன். மேலும் கோட்டையின் மீது மக்களை ஏறிச் சென்று மக்களுக்கு தொழுகை நேரத்தை அறிவிக்க வேண்டும் எனவும் ஆணையிட வேண்டும் என் முடிவு எடுத்தேன். அவ்வாறு மணி அடிக்க முனையும்போது, அன்ஸாரிகளில் ஒருவர் ஓடோடி வந்து கூறினார், “ரஸுலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ அவர்களே! நான் தாங்களை விட்டுச் சென்றபோது, நான் தங்களின் கவலையை உணர்ந்தேன். நான் (கனவில்) இரண்டு பச்சைத் துணி போர்த்திய ஒருவரைக் கண்டேன். அவர் பள்ளிவாசலில் ஏறி நின்று மக்களைத் தொழுகைக்காக அழைத்தார். பின்னர் அவர் சிறிது நேரம் அமர்ந்துவிட்டு பிறகு எழுந்து நின்று கத் காமத்துஸ் ஸலாத் என்பதைத் தவிர (அதானைப் போல) இவ்வாறு கூறினார். என்னை மட்டும் பொய்யன் என்று கூறாவிட்டால், நான் விழித்துக் கொண்டுதான் இருந்தேன், நான் தூங்கவில்லை என்று கூறுவேன்.’ ரஸுலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ கூறினார்கள், “அல்லாஹ் உமக்கு நல்ல கனவைக் காட்டியுள்ளான்.” பின்னர் அவர்கள் பிலால் رَضِيَ اللهُ عَنْهُ அவர்களை அழைத்து அதான் கூறுமாறு பணித்தார்கள். அப்போது உமர் رَضِيَ اللهُ عَنْهُ கூறினார்கள், “நானும் இதைப் போன்ற கனவைக் கண்டேன். ஆனால் அவர் முதலில் கூறிவிட்டார். நான் அதனைக் கூற வெட்கப்பட்டேன்.”

இவ்வாறு கனவில் வருவது குறித்த விளக்கத்தைக் கூற ரஸுலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ இருந்தார்கள். இப்போது நாம் காணும் கனவு குறித்து சரியான விளக்கம் கூற வழியில்லை என்பதால், கனவை வைத்துக் கொண்டு எதனையும் நாம் முடிவு செய்யக் கூடாது.

## அதானின் சிறப்புகள்

அதான் கூறும் ஒருவருக்கு, அதனைக் கேட்ட மனிதர்கள், ஜின்கள் மற்றும் அனைத்துப் பொருட்களும் மறுமைநாளில் சாட்சி கூறும். ஏனெனில் அதில் கலிமா, தொழுகை அழைப்பு போன்ற பல விஷயங்கள் உள்ளன.

புஹாரி 609

அப்துர் ரஹ்மான் رَضِيَ اللهُ عَنْهُ அறிவிப்பதாவது,

عَبْدِ الرَّحْمَنِ بْنِ أَبِي صَعْصَعَةَ الأَنْصَارِيِّ، ثُمَّ الْمَازِنِيِّ عَنْ أَبِيهِ، أَنَّهُ أَخْبَرَهُ أَنَّ أَبَا سَعِيدٍ الْخُدْرِيَّ قَالَ لَهُ " إِنِّي أَرَاكَ تُحِبُّ الْغَنَمَ وَالْبَادِيَةَ، فَإِذَا كُنْتَ فِي غَنَمِكَ أَوْ بَادِيَتِكَ فَأَذَّنْتَ بِالصَّلاَةِ فَارْفَعْ صَوْتَكَ بِالنِّدَاءِ، فَإِنَّهُ لاَ يَسْمَعُ مَدَى صَوْتِ الْمُؤَذِّنِ جِنٌّ وَلاَ إِنْسٌ وَلاَ شَىْءٌ إِلاَّ شَهِدَ لَهُ يَوْمَ الْقِيَامَةِ ". قَالَ أَبُو سَعِيدٍ سَمِعْتُهُ مِنْ رَسُولِ اللَّهِ صلى الله عليه وسلم.

**609.** அப்துல்லாஹ் இப்னு அப்கிர் ரஹ்மான் அறிவிக்கார். அபூ ஸயீதுல் குத்ரீ (ரலி) என்னிடம் 'நீர் ஆடுகளை மேய்ப்பதிலும் காட்டுப் புறங்களுக்குச் செல்வதிலும் ஆசைப்படுவதை காண்கிறேன். நீர் ஆடுகளுடன் சென்றால் அல்லது காட்டுப் புறம் சென்றால் தொழுகைக்காக பாங்கு சொல்லும்போது குரல் உயர்த்திச் சொல்வீராக! காரணம், முஅத்தினுடைய பாங்கு சப்தத்தைக் கேட்கிற ஜின்னாக இருந்தாலும் மனிதனாக இருந்தாலும் வேறு எதுவாக இருந்தாலும் அவருக்காக மறுமை நாளில் பரிந்துரை செய்வார்கள்' எனக் கூறிவிட்டு, இவ்வாறு நபி(ஸல்) அவர்கள் சொல்ல, கேட்டேன் என்றும் கூறினார்கள். Book: 10 - **ஸஹீஹுல் புகாரி**

## அதான் சட்டங்கள்

அதான் சொல்ல வேண்டுமா என்பதில் கருத்து வேறுபாடு உள்ளது. இது பர்லு கி∴பாயாஹ் என்று சொல்லப்படுகிறது. யாராவது சொல்ல வேண்டும். இல்லை என்றால் எல்லோரும் விட்டவர்களாகக் கருதப்படுவார்.

புஹாரி 610

ஹுமைத் رَضِي الله عَنْهُ அறிவிப்பதாவது,

عَنْ أَنَسِ بْنِ مَالِكٍ، أَنَّ النَّبِيَّ صلى الله عليه وسلم كَانَ إِذَا غَزَا بِنَا قَوْمًا لَمْ يَكُنْ يَغْزُو بِنَا حَتَّى يُصْبِحَ وَيَنْظُرَ، فَإِنْ سَمِعَ أَذَانًا كَفَّ عَنْهُمْ، وَإِنْ لَمْ يَسْمَعْ أَذَانًا أَغَارَ عَلَيْهِمْ،

**610.** அனஸ் இப்னு மாலிக் (ரலி) அறிவிக்கார்.நபி(ஸல்) அவர்கள் எந்தக் கூட்டத்தினரோடாவது போரிடுவதாக இருந்தால் சுத்தில் ஸுப்ஹ் நேரம் வரும் வரை எங்களைப் போரில் ஈடுபடுத்த மாட்டார்கள். ஸுப்ஹ் நேரம் வந்ததும் கவனிப்பார்கள். எதிர் தரப்பிலிருந்து பாங்கு சொல்லும் சப்தம் கேட்டால் தாக்காமலிருப்பதும் கேட்கவில்லையானால் திடீர்த் தாக்குதல் நடத்துவதும் நபி(ஸல்) அவர்களின் வழக்கமாக இருந்தது. இந்நிலையில் நாங்கள் கைபரை நோக்கிப் புறப்பட்டோம். இரவு நேரத்தில் அந்த இடத்தைச் சென்றடைந்தோம். ஸுப்ஹ் நேரம் வந்ததும் பாங்கு சப்தம் கேட்காததால் நபி(ஸல்) அவர்கள் வாகனத்தில் ஏறினார்கள். நான் அபூ தல்ஹாவுக்குப் பின்னால் அவரின் வாகனத்தில் ஏறிக் கொண்டேன். என்னுடைய பாதம் நபி(ஸல்) அவர்களின் பாதத்தில் (அடிக்கடி) படும் (அளவுக்கு நெருக்கமாகச் சென்றோம்). அப்போது கைபர் வாசிகள் தங்களின் மண் வெட்டிகளையும் தானியம் அளக்கும் (மரக்கால் போன்ற) அளவைகளையும் எடுத்துக் கொண்டு எங்களை நோக்கி வந்து கொண்டிருந்தார்கள். நபி(ஸல்) அவர்களைப் பார்த்ததும் (கிலியுடன்) 'அல்லாஹ்வின் மீது ஆணையாக இதோ முஹம்மத்! அவரின் படை!' என்றனர். நபி(ஸல்) அவர்கள், அம்மக்களைக் கண்டதும் 'அல்லாஹு அக்பர்! அல்லாஹு அக்பர்! கைபர் வீழ்ந்தது! நாம் ஒரு கூட்டத்தினரைத் தாக்கினால், அவர்களின் காலைப்பொழுது கெட்டதாயிருக்கும்' என்றார்கள். Book: 10 - **ஸஹீஹுல் புகாரி**

எனவே முஸ்லிம்கள் அதான் சொல்வார்கள் என்பது இதன் மூலம் தெரிகிறது.

## அதான் சொல்லும் முறை

பல விதமான முறைகள் கூறப்படுள்ளது. ஆரம்பத்தில் பிலால் رَضِي الله عَنْهُ அவர்கள் அன்ஸாரித் தோழர் கூறிய முறைப்படிப் பிலால் அவர்கள் கூறினார்கள். இப்போது நாம் கூறும் அதான் தர்ஜீ அதான் என்பார்கள். திரும்பத் திரும்ப இரண்டு முறை கூறுவது. மக்காவில் முஅத்தினாகப் பணிபுரிந்த அபு மஹ்துாரா رَضِي الله عَنْهُ என்பவருக்கு ரஸுலுல்லாஹ் صَلَّى الله عَلَيْهِ وَسَلَّمَ கற்றுக் கொடுத்தார்கள்.

முஸ்லிம் 379

அபு மஹ்துாரா رَضِي الله عَنْهُ என்பவருக்கு ரஸுலுல்லாஹ் صَلَّى الله عَلَيْهِ وَسَلَّمَ கற்றுக் கொடுத்தார்கள்.

عَنْ عَبْدِ اللَّهِ بْنِ مُحَيْرِيزٍ، عَنْ أَبِي مَحْذُورَةَ، أَنَّ نَبِيَّ اللَّهِ صلى الله عليه وسلم عَلَّمَهُ هَذَا الأَذَانَ " اللَّهُ أَكْبَرُ اللَّهُ أَكْبَرُ أَشْهَدُ أَنْ لاَ إِلَهَ إِلاَّ اللَّهُ أَشْهَدُ أَنْ لاَ إِلَهَ إِلاَّ اللَّهُ أَشْهَدُ أَنَّ مُحَمَّدًا رَسُولُ اللَّهِ أَشْهَدُ أَنَّ مُحَمَّدًا رَسُولُ اللَّهِ - ثُمَّ يَعُودُ فَيَقُولُ - أَشْهَدُ أَنْ لاَ إِلَهَ إِلاَّ اللَّهُ أَشْهَدُ أَنْ لاَ إِلَهَ إِلاَّ اللَّهُ أَشْهَدُ أَنَّ مُحَمَّدًا رَسُولُ اللَّهِ أَشْهَدُ أَنَّ مُحَمَّدًا رَسُولُ اللَّهِ حَيَّ عَلَى الصَّلاَةِ - مَرَّتَيْنِ - حَىَّ عَلَى الْفَلاَحِ - مَرَّتَيْنِ " . زَادَ إِسْحَاقُ " اللَّهُ أَكْبَرُ اللَّهُ أَكْبَرُ لاَ إِلَهَ إِلاَّ اللَّهُ " .

| اِلَّا اللّٰهُ | اِلَٰهَ | لَّآ | اَنْ | اَشْهَدُ | اَكْبَرُ | اَللّٰهُ |
|---|---|---|---|---|---|---|
| யில்லல்லாஹு | யிலாஹ | லா | அன் | அஷ்ஹது | அக்பர் | அல்லாஹு |
| அல்லாஹ்வை தவிர | இறைவன் | இல்லை | என்று | நான் சாட்சி கூறுகிறேன் | மிகப் பெரியவன் | அல்லாஹு |
| அல்லாஹ் மிகப்பெரியவன வணக்கத்திற்குரியவன் அல்லாஹுவைத் தவிர வேறு நாயன் இல்லை என்று நான் சாட்சி கூறுகிறேன் | | | | | | |

| اللّٰهِ | الرَّسُوْلُ | مُحَمَّدً | اَنَّ | اَشْهَدُ |
|---|---|---|---|---|
| அல்லாஹு | அர் ரஸூலு | முஹம்மதன் | அன்ன | அஷ்ஹது |
| அல்லாஹு | இறை தூதர் | முஹம்மத் (ஸல்) | நிச்சயமாக | நான் சாட்சி கூறுகிறேன் |
| நிச்சயமாக முஹம்மது நபி (ஸல்) அவர்கள் அல்லாஹ்வின் திருத்தூதர் என்று சாட்சி கூறுகிறேன் | | | | |

| الْفَلَاحِ | عَلَى | حَيَّ | الصَّلَاةِ | عَلَى | حَيَّ |
|---|---|---|---|---|---|
| அல்ஃபலாஹ் | அலா | ஹய்ய | அஸ்ஸலாது | அலா | ஹய்ய |
| வெற்றி | பால் | விரைந்து | தொழுகை | பால் | விரைந்து |
| தொழுகையின் பால் விரைந்து வாருங்கள் வெற்றியின் பால் விரைந்து வாருங்கள் | | | | | |

| النَّوْمِ | مِنَ | خَيْرٌ | اَلصَّلَاةُ |
|---|---|---|---|
| அந்நெளம் | மினன் | கய்ருன் | அஸ்ஸலாது |
| தூக்கம் | விட | சிறந்தது | தொழுகை |
| தூக்கத்தை விட தொழுகை மிகச்சிறந்தது ஆகும் | | | |

| اِلَّا اللّٰهُ | اِلَٰهَ | لَا | اَكْبَرُ | اللّٰهُ |
|---|---|---|---|---|
| இல்லல்லாஹு | இலாஹ் | லா | அக்பர் | அல்லாஹு |
| அல்லாஹ்வை தவிர | இறைவன் | இல்லை | மிகப் பெரியவன் | அல்லாஹு |
| அல்லாஹ் மிகப்பெரியவன், வணக்கத்திற்குரிவன், அல்லாஹ்வைத் தவிர வேறு நாயன் இல்லை | | | | |

**623.** அபூமஹ்தூரா (ரலி) அவர்கள் கூறியதாவது: நபி (ஸல்) அவர்கள் எனக்கு இந்தத் தொழுகை அறிவிப்பு(பாங்கு) முறையைக் கற்றுத் தந்தார்கள்: அல்லாஹு அக்பர், அல்லாஹு அக்பர் (அல்லாஹ் மிகப் பெரியவன், அல்லாஹ் மிகப் பெரியவன்). (பின்னர் மெதுவாக) அஷ்ஹது அல்லாயிலாஹ இல்லல்லாஹ், அஷ்ஹது அல்லாயிலாஹ இல்லல்லாஹ் (அல்லாஹ்வைத் தவிர வேறு இறைவனில்லை என்று நான் உறுதிமொழிகிறேன்; அல்லாஹ்வைத் தவிர வேறு இறைவனில்லை என்று நான் உறுதிமொழிகிறேன்). அஷ்ஹது அன்ன முஹம்மதர் ரசூலுல்லாஹ், அஷ்ஹது அன்ன முஹம்மதர் ரசூலுல்லாஹ் (முஹம்மத் (ஸல்) அவர்கள் இறைவனின் தூதர் ஆவார்கள் என்று நான் உறுதிமொழிகிறேன்; முஹம்மத் (ஸல்) அவர்கள் இறைவனின் தூதர் ஆவார்கள் என்று நான் உறுதிமொழிகிறேன்). பின்னர் மீண்டும் (சப்தமாக) அஷ்ஹது அல்லாயிலாஹ இல்லல்லாஹ், அஷ்ஹது அல்லாயிலாஹ இல்லல்லாஹ். அஷ்ஹது அன்ன முஹம்மதர் ரசூலுல்லாஹ், அஷ்ஹது அன்ன முஹம்மதர் ரசூலுல்லாஹ். பின்னர் ஹய்ய அலஸ் ஸலாஹ் (தொழ வாருங்கள்) என்று இரு முறையும், ஹய்ய அலல் ஃபலாஹ் (வெற்றியின் பக்கம் வாருங்கள்) என்று இரு முறையும் கூறினார்கள். இந்த ஹதீஸ் இரு அறிவிப்பாளர்தொடர்களில் வந்துள்ளது. அவற்றில், இஸ்ஹாக் பின் இப்ராஹீம் (ரஹ்) அவர்களது அறிவிப்பில், (ஹய்ய அலல் ஃபலாஹ் என்பதற்குப் பிறகு) அல்லாஹு அக்பர், அல்லாஹு அக்பர், லாயிலாஹ இல்லல்லாஹ் (அல்லாஹ் மிகப் பெரியவன், அல்லாஹ் மிகப் பெரியவன், அல்லாஹ்வைத் தவிர வேறு

இறைவனில்லை) என்று நபி (ஸல்) அவர்கள் பாங்கு சொல்லக் கற்றுக்கொடுத்தார்கள் என அதிகப்படியாக இடம்பெற்றுள்ளது. Book: 4 - **ஸஹீஹ் முஸ்லிம்**

நான்கு ஸஹாதாக்களையும் (சாட்சியங்களையும்) கூறும்போது மட்டும் குரலைத் தாழ்த்திக் கொள்ள வேண்டும் என்று சொல்லிக் கொடுக்கப்பட்டது. சில அறிஞர்கள் இது சொல்லிக் கொடுக்கப்பட்ட முறைதான் எனவே இந்த முறையில் கூறக் கூடாது என்று சொல்வார்கள். எனினும் சரியானதாக இல்லை. எனினும் தமது 59ஆவது வயதில் மரணமான அபு மஹ்துாரா رَضِي الله عَنْهُ இறுதி வரையிலும் அவ்வாறே அதான் சொன்னார்கள்.

### இகாமத்துடைய சொற்கள்

புஹாரி 605

அனஸ் رَضِي الله عَنْهُ அறிவிப்பதாவது,

عَنْ أَبِي قِلاَبَةَ، عَنْ أَنَسٍ، قَالَ أُمِرَ بِلاَلٌ أَنْ يَشْفَعَ، الأَذَانَ وَأَنْ يُوتِرَ الإِقَامَةَ إِلاَّ الإِقَامَةَ.

**605.** அனஸ் (ரலி) அறிவிக்கார். பாங்கின் வாசகங்களை இரட்டை இரட்டையாகவம் 'கக்காமகிஸ்ஸலாக்' என்பதைக் கவிர உள்ள இகாமக்கின் வாசகங்களை ஒற்றையாகவும் சொல்லுமாறு பிலால்(ரலி) கட்டளையிடப்பட்டார்கள். Book: 10 - **ஸஹீஹுல் புகாரி**

மற்றொரு அறிவிப்பில் அனைத்ததையும் இரண்டு முறை சொல்லுமாறு வந்துள்ளது என்பதால், அதுவும் ஸுன்னாஹ்தான்.

### பஜ்ருடைய அதான்

அபு தாவூத் 504

அபு மஹ்துாரா رَضِي الله عَنْهُ அறிவிப்பதாவது,

قَالَ وَكَانَ يَقُولُ فِي الْفَجْرِ الصَّلاَةُ خَيْرٌ مِنَ النَّوْمِ ..

பஜ்ர் தொழுகைக்கு 'துாக்கத்தை விடத் தொழுகை சிறந்தது' என்று சொல்லுமாறு ரஸுலுல்லாஹ் صَلَّى الله عَلَيْهِ وَسَلَّمَ கற்றுக் கொடுத்தார்கள்.

மழை போன்ற இடர்காலங்களில் வீட்டில் தொழுது கொள்ளுங்கள் என்றும் அதானில் சொல்லப்படும்.

அதான் சொல்பவரின் ஒழுங்குமுறைகள்

- முதலில் நிய்யத், மக்களுக்கு தொழுகைக்காக அழைக்கிறேன் என்ற நிய்யத் இருக்க வேண்டும். அதானைக் கற்றுக் கொடுக்கும்போது அந்த நிய்யத் இருக்க வேண்டியதில்லை.
- உளூவுடன் இருப்பது சிறந்தது.
- கிப்லாவை முன்நோக்கி இருக்க வேண்டும்.
- நின்று கொண்டு சொல்ல வேண்டும்.
- ஆள்காட்டி விரலை காதில் வைத்துக் கொள்வது.
- ஹைய்ய அலஸ் ஸலாஹ் என்று கூறும்போது வலது பக்கமும், ஹைய்ய அலல் ∴பலாஹ் என்று கூறும்போது இடது பக்கமும் திருப்புவது.

புஹாரி 634

அவ்ன் இப்னு அபி ஜுஹைய்∴பாஹ் رَضِي الله عَنْهُ அறிவிப்பதாவது,

عَوْنِ بْنِ أَبِي جُحَيْفَةَ، عَنْ أَبِيهِ، أَنَّهُ رَأَى بِلاَلاً يُؤَذِّنُ فَجَعَلْتُ أَتَتَبَّعُ فَاهُ هَا هُنَا وَهَا هُنَا بِالأَذَانِ.

**634.** அவன் பின் அபி ஜுஹைஃபா (ரலி) அறிவிக்கார். என் தந்தை, "தொழுகைக்காக அதானை உச்சரிக்கும் போது பிலால் (ரலி) முகத்தை பக்கத்திலிருந்து பக்கமாக திருப்புவதை நான் கண்டேன்" என்றார். Book: 10 - **ஸஹீஹுல் புகாரி**

ஹைய்ய அலஸ் ஸலாஹ் என்று கூறும்போது ஒரு முறை வலது பக்கமும், மறு முறை இடது பக்கமும், ஹய்ய அலல் ∴பலாஹ் என்று கூறும்போது ஒரு முறை வலது பக்கமும், மறு முறை இடது பக்கமும் கூறலாம்.

முன்னர் ஒலி பெருக்கி இல்லாததால், இரண்டு பக்கமும் கேட்க வேண்டும் என்ற நோக்கில் கூறப்பட்டது என்பதால், இப்போது அவ்வாறு திரும்பாமலும் சொல்லலாம்.

- தனிமையில் தொழும்போதும் அதான் சொல்லலாம்.

அபு தாவூது 1203

உக்பா இப்னு ஆமிர் رَضِي الله عَنْهُ அறிவிப்பதாவது,

عَنْ عُقْبَةَ بْنِ عَامِرٍ، قَالَ سَمِعْتُ رَسُولَ اللَّهِ صلى الله عليه وسلم يَقُولُ " يَعْجَبُ رَبُّكُمْ مِنْ رَاعِي غَنَمٍ فِي رَأْسِ شَظِيَّةٍ بِجَبَلٍ يُؤَذِّنُ بِالصَّلاَةِ وَيُصَلِّي فَيَقُولُ اللَّهُ عَزَّ وَجَلَّ انْظُرُوا إِلَى عَبْدِي هَذَا يُؤَذِّنُ وَيُقِيمُ الصَّلاَةَ يَخَافُ مِنِّي فَقَدْ غَفَرْتُ لِعَبْدِي وَأَدْخَلْتُهُ الْجَنَّةَ " .

ரஸுலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ அவர்கள் கூற நான் கேட்டுள்ளேன், “ஒரு மலையின் உச்சியில் ஆடு மேய்க்கும் இடையர் தொழுவதைக் குறித்து அல்லாஹ் கூறுகிறான், ‘இதோ இந்த எனது அடியாரைப் பாருங்கள்! அவர் தொழுகைக்காக அழைப்பு விடுத்துவிட்டுத் தொழுகிறார். என்னைக் குறித்து அஞ்சுகிறார். எனவே நான் அவரது பாவத்தை மன்னித்து, சுவனத்தில் நுழைய வைப்பேன்.’

- அதானுக்கு முன்னால் தரூத் ஓதுவது என்று சொல்லிக் கொடுக்கப்படவில்லை. அதற்குப் பின்னர்தான் ஸலவாத்து சொல்லும்படிக் கூறப்பட்டுள்ளது. அது போல அதானுக்கு சில நிமிடங்கள் பிறகு அஸ்ஸலாஹ் என்று மீண்டும் நினைவுறுத்தக் கூறுவது என்பது சொல்லப்படாத ஒன்றாகும். இது பித்அத் ஆன ஒன்றாகும். இவ்வாறு திரும்பச் சொல்வதைக் கண்ட இப்னு உமர் அப்பள்ளியை விட்டு சென்று வேறு பள்ளிக்குச் சென்று விட்டார்.
- அதான் சரியான மஹ்ரஜ் (مخرج) விதத்தில் கூற வேண்டும். அவ்வாறு தெரியாமல் தவறாக கூறுவது ஹராமாகும்.
- அதானுக்கு பதில் சொல்ல அதனையே நாம் திருப்பிச் சொல்ல வேண்டும். ஹைய்ய அல ஸலாஹ் மற்றும், ஹய்ய அலல் ∴பலாஹ் கூறும்போது, லா ஹைவ்ல வலா குவ்வத்த இல்லா பில்லாஹி என்று கூற வேண்டும்.
- அதான் சொன்ன பிறகு ஸலவாத்தும், அவர்களுக்காகத் துஆவும் செய்ய வேண்டும்.

| القَائِمَةِ | وَالصَّلاَةِ | التَّامَّةِ | هٰذِهِ الدَّعْوَةِ | اَللّٰهُمَّ رَبَّ |
|---|---|---|---|---|
| அல்காயிமதி | வஸ்லாதி | அத்தாம்மதி | ஹாதிஹித் த.்.வதி | அல்லாஹு ம்ம ரப்ப |
| நிலையான | தொழுகை | பரிபூரணம் | இந்த அழைப்பை | யா அல்லாஹ் இரட்சகனே |
| யா அல்லாஹ்! பரிபூரணமான இந்த அழைப்பினுடைய நிலை பெரும் தொழுகையுடைய இரட்சகனே | | | | |
| وَالْفَضِيْلَةَ | الْوَسِيْلَةَ | مُحَمَّدٍ | سَيِّدنَا | آتِ |
| அல்.்.பலீலத்த | அல்வஸீலத்த | முஹம்மதின் | ஸய்யிதினா | ஆத்தி |
| மேன்மை | உயர்பதவி | முஹம்மத் நபி | எங்களின் தலைவர் | தருவாயாக |
| எங்களின் தலைவர் முஹம்மது நபி (ஸல்) அவர்களுக்கு சுவர்கத்தில் வஸிலா என்னும் பதவியையும் (ஜன்னத்தின் உயர்பதவி) மேன்மையையும் கொடுப்பாயாக! | | | | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | وَعَدْتَّهُ | الَّذِيْ | مَحْمُوْدَنِ | مَقَامًا | وَابْعَثْهُ | |
| | வஅத்தஹு | அல்லதி | மஹ்மூதனி | மகாமம் | வப்அஸ்ஹு | |
| | நீ அவர்களுக்கு வாக்களித்தாய் | எதை | மஹ்மூத் எனக்கூடிய இடம் | இடம் | எழுப்புவாயாக | |
| அன்னாருக்கு நீ வாக்களித்துள்ள படி மகாமே மஹ்மூத் என்னும் புகழ் மிகுலகத்தில் அன்னாரை நீ எழுப்புவாயாக! | | | | | | |

## இகாமத் பற்றி மற்றும் சில செய்திகள்

அதான் சொல்லும்போது நாம் பதில் சொல்வதுபோல, இகமாத்திற்கும் அதே மாதிரி பதில் சொல்ல வேண்டுமா என்பதில் இருவித கருத்துக்கள் உள்ளன.

ஒன்றின்படி இது வலியுறுத்தப்பட்டதாகும். காரணம், அதானுக்குப் பதில் சொல்ல வேண்டும் என்ற ஹதீதில் அதான் என்ற சொல் பயன்படுத்தப்படாமல், அழைப்பு (**النداء**) என்ற சொல்தான் பயன்படுத்தப்பட்டுள்ளது. எனவே அழைப்பு இரண்டுக்கும் பொருந்தும் என்பதால் நாம் இகாமத்திற்கும் பதில் சொல்லலாம். எனினும் கத் காமத்திஸ் ஸலாஹ் என்று சொல்லும்போது, சிலர் கூறும் பதிலுக்கு ஆதாரம் இல்லை. இகாமத்திற்குப் பிறகு ஸலவாத்தும் கூறலாம்.

எனினும் சிலர் அழைப்பு என்ற இந்த சொல்லும் அதானைத்தான் குறிக்கும் என்பதால் பதில் சொல்ல வேண்டியதில்லை என்பார்கள்.

*ரியாளுஸ்ஸாலிஹீன்* 1066 Bulugh al-Maram 307

அபு ஹுரைராஹ் رَضِـيَ الله عَنْهُ அறிவிப்பதாவது,

: { أَتَى اَلنَّبِيَّ - صلى الله عليه وسلم -رَجُلٌ أَعْمَى فَقَالَ: يَا رَسُولَ اَللَّهِ! لَيْسَ لِي قَائِدٌ يَقُودُنِي إِلَى اَلْمَسْجِدِ, فَرَخَّصَ لَهُ, فَلَمَّا وَلَّى دَعَاهُ, فَقَالَ: "هَلْ تَسْمَعُ اَلنِّدَاءَ بِالصَّلَاةِ?" قَالَ: نَعَمْ. قَالَ: "فَأَجِبْ" } رَوَاهُ مُسْلِمٌ [1] .

ஒரு கண் தெரியாதவர் ரஸுலுல்லாஹ் صَلَّى الله عَلَيْهِ وَسَلَّمَ அவர்களிடம் வந்து வினவினார், “ரஸுலுல்லாஹ் صَلَّى الله عَلَيْهِ وَسَلَّمَ அவர்களே! என்னைப் பள்ளிவாசலுக்குக் கூட்டிச் செல்ல எந்த வழிகாட்டியும் இல்லை.” எனவே அவர்கள் அவருக்கு (வீட்டில் தொழ) அனுமதி அளித்தார்கள். அந்த மனிதர் சென்று விட்டார். பின்னர் அவரை ரஸுலுல்லாஹ் صَلَّى الله عَلَيْهِ وَسَلَّمَ அழைத்து வினவினார், “நீர் தொழுகையின் அழைப்பை (அதானைக்) கேட்கிறீர்களா?” அவர், “ஆம்.” என்றார். அவர்கள் கூறினார்கள், “அதற்குப் பதில் கூறும் (வகையில் தொழுகைக்கு பள்ளிவாசல் வர வேண்டும்.”

இந்த ஹதீதில் அழைப்பு (النداء) என்ற சொல்தான் பயன்படுத்தப்பட்டுள்ளது. இகாமத் கூறும்போது, நாம் ஸ.ஃ.ப்.ஃ.புகளை சரிபடுத்தும் முயற்சியில் இருப்பதால், இகாமத்திற்கு் பதில் சொல்ல இயலாமல் போகலாம்.

இரண்டில் எந்தக் கருத்தையும் எடுத்துக் கொள்ளலாம்.

# ஃபிக்ஹ் வகுப்பு 26 - பள்ளிவாசல் சம்பந்தப்பட்ட சட்டங்கள்

**ஆசிரியர்: அஷ் ஷெய்க் உவைஸ் உமரி நளீரி**

### பள்ளிவாசலின் சிறப்பு

முஸ்லிம் 671

அபு ஹுரைராஹ் رَضِي الله عَنْهُ அறிவிப்பதாவது,

أَبِي هُرَيْرَةَ عَنْ أَبِي هُرَيْرَةَ أَنَّ رَسُولَ اللَّهِ صلى الله عليه وسلم قَالَ " أَحَبُّ الْبِلاَدِ إِلَى اللَّهِ مَسَاجِدُهَا وَأَبْغَضُ الْبِلاَدِ إِلَى اللَّهِ أَسْوَاقُهَا " .

**1190.** அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: ஓர் ஊரிலுள்ள இடங்களில் அல்லாஹ்விற்கு மிகவும் விருப்பமான இடம் பள்ளிவாசலாகும். ஓர் ஊரிலுள்ள இடங்களிலேயே அல்லாஹ்வின் வெறுப்பிற்குரிய இடம் கடைத்தெருவாகும். இதை அபூஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள். Book: 5 - **ஸஹீஹ் முஸ்லிம்**

### பள்ளிவாசலுக்கு வரும் போது அமைதியாக வர வேண்டும்.

புஹாரி 636

அபு ஹுரைராஹ் رَضِي الله عَنْهُ அறிவிப்பதாவது,

عَنْ أَبِي هُرَيْرَةَ، عَنِ النَّبِيِّ صلى الله عليه وسلم قَالَ " إِذَا سَمِعْتُمُ الإِقَامَةَ فَامْشُوا إِلَى الصَّلاَةِ، وَعَلَيْكُمْ بِالسَّكِينَةِ وَالْوَقَارِ وَلاَ تُسْرِعُوا، فَمَا أَدْرَكْتُمْ فَصَلُّوا وَمَا فَاتَكُمْ فَأَتِمُّوا " .

**636.** இறைத்தூதர்(ஸல்) அவர்கள் கூறினார்கள்: 'நீங்கள் இகாமத் சொல்லுவதைச் செவியுற்றால் தொழுகைக்குச் செல்லுங்கள். அப்போது நீங்கள் அமைதியான முறையிலும் கண்ணியமாகவும் செல்லுங்கள். அவசரமாகச் செல்லாதீர்கள். உங்களுக்குக் கிடைத்த ரக்அத்களை (ஜமாஅத்துடன்) தொழுங்கள்; உங்களுக்குக் தவறிப் போனதைப் பூர்த்தி செய்யுங்கள்.' என அபூ ஹுரைரா(ரலி) அறிவித்தார். Book: 10 - **ஸஹீஹுல் புகாரி**

### வெங்காயம், பூண்டு ஆகியவற்றை சமைக்காமல் சாப்பிட்டுவிட்டுச செல்லக் கூடாது

புஹாரி 7359

ஜாபிர் இப்னு அப்துல்லாஹ் رَضِي الله عَنْهُ அறிவிப்பதாவது,

عَنْ جَابِرِ بْنِ عَبْدِ اللَّهِ، قَالَ قَالَ النَّبِيُّ صلى الله عليه وسلم " مَنْ أَكَلَ ثُومًا أَوْ بَصَلاً، فَلْيَعْتَزِلْنَا أَوْ لِيَعْتَزِلْ مَسْجِدَنَا، وَلْيَقْعُدْ فِي بَيْتِهِ "

**7359.** இறைத்தூதர்(ஸல்) அவர்கள் கூறினார்கள்: (பச்சை) வெள்ளைப் பூண்டையோ வெங்காயத்தையோ உண்டவர், 'நம்மிடமிருந்து விலகியிருக்கட்டும்' அல்லது 'நம்முடைய பள்ளிவாசலிலிருந்து விலகியிருக்கட்டு' அவர் தம் இல்லத்திலேயே அமர்ந்து கொள்ளட்டும். என ஜாபிர் இப்னு அப்தில்லாஹ்(ரலி) அறிவித்தார். Book: 96 - **ஸஹீஹுல் புகாரி**

### பள்ளிவாசலில் நுழையும்போதும் வெளிவரும்போதும் ஓதக் கூடிய துஆக்கள்

நுழையும்போது ஓதக் கூடிய துஆ:

أعوذُ بِاللهِ العَظِيـمِ، وَبِوَجْهِـهِ الكَرِيـمِ وَسُلْطَـانِهِ القَدِيـمِ، مِنَ الشَّيْـطَانِ الرَّجِـيمِ، [ بِسْمِ اللهِ وَالصَّلَاةُ وَالسَّلَامُ عَلَى رَسُولِ اللهِ]، اَللَّهُـمَّ افْتَـحْ لِي أَبْوَابَ رَحْمَتِـكَ

மகத்தான அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَى வின் திருமுகம், மற்றும் அவனது புராதன வல்லமையின் பொருட்டால் எடுத்தெறியப்பட்ட ஷைத்தானிடமிருந்து நான் பாதுகாவல் தேடுகிறேன். அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَى வின் திருப்பெயரால். ஸலவாத்தும், ஸலாமும் ரஸுலுல்லாஹ் صَلَّى الله عَلَيْهِ وَسَلَّمَ அவர்களின் மீது உண்டாவதாக. யா அல்லாஹ்! உனது அருட்கொடையின் வாயிலை எனக்காகத் திறந்து வைப்பாயாக!

பள்ளிவாசலை விட்டு வெளிவரும்போது ஓதக் கூடிய துஆ

بِسْمِ اللهِ وَالصَّلَاةُ وَالسَّلَامُ عَلَى رَسُولِ اللهِ، اَللَّهُمَّ إِنِّي أَسْأَلُكَ مِنْ فَضْـلِكَ، اَللَّهُمَّ اعْصِمْنِـي مِنَ الشَّيْـطَانِ الرَّجِيمِ

அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَى வின் திருப்பெயரால். ஸலவாத்தும், ஸலாமும் ரஸுலுல்லாஹ் صَلَّى الله عَلَيْهِ وَسَلَّمَ அவர்களின் மீது உண்டாவதாக. யா அல்லாஹ் உனது பேருபகாரித்திலிருந்து வேண்டுகிறேன். யா அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَى! சபிக்கப்பட்ட ஷைத்தானிடமிருந்து என்னைக் காப்பாயாக!

## தஹிய்யத்துல் மஸ்ஜித் தொழுகை

முந்தைய பாடத்தில் கூறப்பட்டுள்ளது போல, நாம் பள்ளிவாசல் நுழைந்ததும் அமருவதற்கு முன்னால் இரண்டு ரகஅத்துக்கள் தஹிய்யத்துல் மஸ்ஜித் தொழுகையைத் தொழ வேண்டும். நாம் வேறு ஏதும் ஸுன்னாஹ் தொழுதால், தனியாக இதனைத் தொழ வேண்டியதில்லை.

## பள்ளிவாசலில் பேசுவது

அனுமதிக்கப்பட்ட பேச்சு, உலக சம்பந்தப்பட்டதாக இருந்தாலும் பேச அனுமதியுண்டு. வீண் விவாதம், கெட்ட பேச்சு ஆகியன கூடாது. தபரானி இரண்டாவது பாகம் 24 ஹதீதில் குறிப்பிடப்பட்டுள்ளது. மற்றவர்களுக்கு இடையூறு இல்லாத விதத்தில் மெதுவாகப் பேச வேண்டும். ஸஹாபாக்கள் பேசிக்கொண்டிருப்பதைக் கண்ட ரஸுலுல்லாஹ் صَلَّى الله عَلَيْهِ وَسَلَّمَ அவர்கள் புன்னகைத்துச் சென்றுவிட்டார்கள். எனினும் பள்ளிவாசலுக்கு வியாபாரம் சம்பந்தப்பட்ட பேச்சுகளைப் பேசக் கூடாது எனத் தடை உள்ளது.

திர்மிதி 1321

அபு ஹுரைராஹ் رَضِـيَ الله عَنْهُ அறிவிப்பதாவது,

عَنْ أَبِي هُرَيْرَةَ، أَنَّ رَسُولَ اللَّهِ صلى الله عليه وسلم قَالَ " إِذَا رَأَيْتُمْ مَنْ يَبِيعُ أَوْ يَبْتَاعُ فِي الْمَسْجِدِ فَقُولُوا لاَ أَرْبَحَ اللَّهُ تِجَارَتَكَ وَإِذَا رَأَيْتُمْ مَنْ يَنْشُدُ فِيهِ ضَالَّةً فَقُولُوا لاَ رَدَّ اللَّهُ عَلَيْكَ "

ரஸுலுல்லாஹ் صَلَّى الله عَلَيْهِ وَسَلَّمَ கூறியுள்ளார்கள், “யாராவது பள்ளிவாசலில் விற்பதையும், வாங்குவதையும் கண்டால், ‘உமது வியாபாரத்தில் இலாபம் கிடைக்காமல் போகட்டும்.’ என்று கூறுவீராக! மேலும் யாரேனும் காணாமல் போன பொருள் பற்றி அறிவித்தால், ‘அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَى உமக்கு கிடைக்காமல் போகட்டும்.’ என்று கூறுவீராக!”

முஸ்லிம் 568

அபு ஹுரைராஹ் رَضِي الله عَنْهُ அறிவிப்பதாவது,

أَبَا هُرَيْرَةَ، يَقُولُ قَالَ رَسُولُ اللَّهِ صلى الله عليه وسلم " مَنْ سَمِعَ رَجُلاً يَنْشُدُ ضَالَّةً فِي الْمَسْجِدِ فَلْيَقُلْ لاَ رَدَّهَا اللَّهُ عَلَيْكَ فَإِنَّ الْمَسَاجِدَ لَمْ تُبْنَ لِهَذَا " .

**981.** அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: காணாமற்போன ஒரு பொருளைப் பள்ளிவாசலுக்குள் தேடிக்கொண்டிருப்பவரின் குரலைச் செவியுறுபவர் "அல்லாஹ் அதை உனக்குத் திரும்பக் கிடைக்காமல் செய்வானாக!" என்று கூறட்டும். ஏனெனில், பள்ளிவாசல்கள் இதற்காகக் கட்டப்படவில்லை. இதை அபூஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள். - மேற்கண்ட ஹதீஸ் அபூஹுரைரா (ரலி) அவர்களிடமிருந்தே மற்றோர் அறிவிப்பாளர் தொடர் வழியாகவும் வந்துள்ளது. Book: 5 - **ஸஹீஹ் முஸ்லிம்**

எனவே வியாபாரத்தைப் பற்றியும், வெளியே காணாமல் போன பொருட்களைப் பற்றியும் பேசக் கூடாது. பள்ளிவாசலுக்குள் காணாமல் போன பொருள்பற்றி அங்கு கூறலாம்.

## தொழுகைக்குக் காத்திருப்பது

புஹாரி 659

அபு ஹுரைராஹ் رَضِي الله عَنْهُ அறிவிப்பதாவது,

عَنْ أَبِي هُرَيْرَةَ، أَنَّ رَسُولَ اللَّهِ صلى الله عليه وسلم قَالَ " الْمَلاَئِكَةُ تُصَلِّي عَلَى أَحَدِكُمْ مَا دَامَ فِي مُصَلاَّهُ مَا لَمْ يُحْدِثْ اللَّهُمَّ اغْفِرْ لَهُ، اللَّهُمَّ ارْحَمْهُ. لاَ يَزَالُ أَحَدُكُمْ فِي صَلاَةٍ مَا دَامَتِ الصَّلاَةُ تَحْبِسُهُ، لاَ يَمْنَعُهُ أَنْ يَنْقَلِبَ إِلَى أَهْلِهِ إِلاَّ الصَّلاَةُ ".

**659.** இறைத்தூதர்(ஸல்) அவர்கள் கூறினார்கள்: 'உங்களில் ஒருவர் தாம் தொழுமிடத்தில் உளூவுடன் இருக்கும் போதெல்லாம் அவருக்காக வானவர்கள் பிரார்த்திக்கிறார்கள். தங்கள் பிரார்த்தனையில், 'இறைவா! இவரை மன்னித்து விடு! இவருக்கு நீ கருணை புரி!' என்றும் கூறுவார்கள். உங்களில் ஒருவர் தொழுவதற்காகக் காத்திருந்து தொழுகைதான் அவரைத் தம் மனைவி மக்களிடம் செல்ல விடாமல் தடுத்து நிறுத்தியிருக்குமானால் அவர் தொழுகையில் இருப்பவராகவே கருதப்படுவார்.' என அபூ ஹுரைரா(ரலி) அறிவித்தார். Book: 10 - **ஸஹீஹுல் புகாரி**

## பள்ளிவாசலில் உறங்குவது

தேவைப்பட்டால் உறங்குவது அனுமதிக்கப்பட்டதாகும்.

புஹாரி 475

அப்பாத் இப்னு தமீம் رَضِي الله عَنْهُ அறிவிப்பதாவது,

عَنْ عَبَّادِ بْنِ تَمِيمٍ، عَنْ عَمِّهِ، أَنَّهُ رَأَى رَسُولَ اللَّهِ صلى الله عليه وسلم مُسْتَلْقِيًا فِي الْمَسْجِدِ

**475.** அப்துல்லாஹ் இப்னு ஸைத் இப்னி ஆஸிம்(ரலி) அறிவித்தார். நபி(ஸல்) அவர்கள் ஒரு காலின் மேல் இன்னொரு காலைப் போட்டுக் கொண்டு பள்ளிவாசலில் மல்லாந்து படுத்திருந்ததை கண்டேன். உமர்(ரலி), உஸ்மான்(ரலி) ஆகியோரும் இவ்வாறு செய்பவர்களாக இருந்ததை ஸயீத் இப்னு அல்முஸய்யப் குறிப்பிடுகிறார். Book: 8 - **ஸஹீஹுல் புகாரி**

எனவே சிறுதூக்கமாக பள்ளிவாசலில் லுஹருக்குப் பிறகு தூங்குவது வலியுறுத்தப்பட்டுள்ளது.

## ஜமாஅத் தொழுகை

இது ஒவ்வொரு ஆண் மீதும் கட்டாயக் கடமையாகும். ஏதேனும் மார்க்கத்தில் அனுமதிக்கப்பட்ட காரணத்திற்காக தனியாகத் தொழலாம்.

ஸூரத்துல் பகரா (பசு மாடு)

2:43 وَاَقِيْمُوا الصَّلٰوةَ وَاٰتُوا الزَّكٰوةَ وَارْكَعُوْا مَعَ الرّٰكِعِيْنَ

**2:43.** தொழுகையைக் கடைப் பிடியுங்கள்; ஜகாத்தையும் (ஒழுங்காகக்) கொடுத்து வாருங்கள் ருகூஃ செய்வோரோடு சேர்ந்து நீங்களும் ருகூஃ செய்யுங்கள்.

எனவே நாம் தொழுபவர்களோடு நாம் ஜமாஅத்தாக தொழ வேண்டும்.

புஹாரி 644

அபு ஹுரைராஹ் رَضِي الله عَنْهُ அறிவிப்பதாவது,

عَنْ أَبِي هُرَيْرَةَ، أَنَّ رَسُولَ اللَّهِ صلى الله عليه وسلم قَالَ " وَالَّذِي نَفْسِي بِيَدِهِ لَقَدْ هَمَمْتُ أَنْ آمُرَ بِحَطَبٍ فَيُحْطَبَ، ثُمَّ آمُرَ بِالصَّلاَةِ فَيُؤَذَّنَ لَهَا، ثُمَّ آمُرَ رَجُلاً فَيَؤُمَّ النَّاسَ، ثُمَّ أُخَالِفَ إِلَى رِجَالٍ فَأُحَرِّقَ عَلَيْهِمْ بُيُوتَهُمْ،

**644.** இறைத்தூதர்(ஸல்) அவர்கள் கூறினார்கள்: 'என்னுடைய உயிர் எவனுடைய கரத்திலிருக்கிறதோ அந்த அல்லாஹ்வின் மீது ஆணையாக! விறகுகளைக் கொண்டு வருமாறு நான் கட்டளையிட்டு அதன் படி விறகுகள் கொண்டு வரப்பட்டுப் பின்னர் தொழுகைக்கு அழைக்குமாறு நான் உத்தரவிட்டு, அதன்படி அழைக்கப்பட்டுப் பின்னர் ஒருவரை மக்களுக்குத் தொழுகை நடத்துமாறு கட்டளையிட்டு, அதன் படி அவர் தொழுகை நடத்திப் பின்னர் தொழுகைக்கு வராமலிருக்கிற ஆண்களின் வீடுகளுக்குச் சென்று வீட்டோடு அவர்களை எரிப்பதற்கு நான் நினைத்ததுண்டு. என்னுடைய உயிர் யாருடைய கையில் இருக்கிறதோ அவரின் மீது ஆணையாகப் பள்ளியில் ஒரு துண்டு இறைச்சி, அல்லது ஆட்டுக் குளம்பு கொடுக்கப்படுகிறது என்று அவர்கள் எவரேனும் அறிவார்களானால் நிச்சயமாக இஷாத் தொழுகைக்காக ஜமாஅத்திற்கு வந்து விடுவார்கள்.' என அபூ ஹுரைரா(ரலி) அறிவித்தார். Book: 10 - **ஸஹீஹுல் புகாரி**

எனவே ஜமாஅத் கடமையில்லாமல் இருந்தால் இவ்வாறு சொல்லியிருக்க மாட்டார்கள். இதே போல் கண் பார்வையற்ற ஸஹாபி பற்றிய முன்பு கூறப்பட்ட ஹதீதுயையும் நோக்க வேண்டும்.

### ரியாளுஸ்ஸாலிஹீன் 1066 Bulugh al-Maram 307

அபு ஹுரைராஹ் رَضِي الله عَنْهُ அறிவிப்பதாவது,

: { أَتَى اَلنَّبِيَّ - صلى الله عليه وسلم -رَجُلٌ أَعْمَى فَقَالَ: يَا رَسُولَ اَللَّهِ! لَيْسَ لِي قَائِدٌ يَقُودُنِي إِلَى اَلْمَسْجِدِ, فَرَخَّصَ لَهُ, فَلَمَّا وَلَّى دَعَاهُ, فَقَالَ: "هَلْ تَسْمَعُ اَلنِّدَاءَ بِالصَّلَاةِ?" قَالَ: نَعَمْ. قَالَ: "فَأَجِبْ" } رَوَاهُ مُسْلِمٌ [1] .

ஒரு கண் தெரியாதவர் ரஸூலுல்லாஹ் صَلَّى الله عَلَيْهِ وَسلَّمَ அவர்களிடம் வந்து வினவினார், “ரஸூலுல்லாஹ் صَلَّى الله عَلَيْهِ وَسلَّمَ அவர்களே! என்னைப் பள்ளிவாசலுக்குக் கூட்டிச் செல்ல எந்த வழிகாட்டியும் இல்லை.” எனவே அவர்கள் அவருக்கு (வீட்டில் தொழ) அனுமதி அளித்தார்கள். அந்த மனிதர் சென்று விட்டார். பின்னர் அவரை ரஸூலுல்லாஹ் صَلَّى الله عَلَيْهِ وَسلَّمَ அழைத்து வினவினார், “நீர் தொழுகையின் அழைப்பை (அதானைக்) கேட்கிறீர்களா?” அவர், “ஆம்.” என்றார். அவர்கள் கூறினார்கள், “அதற்குப் பதில் கூறும் (வகையில் தொழுகைக்கு பள்ளிவாசல் வர வேண்டும்.”

நமக்கு கண் பார்வை நன்றாக இருந்து, பாதைகளும் சரியாக இருக்கும் நிலையில் நாம் எவ்வாறு ஜமாஅத் தொழுகையை விட முடியும்.

மேலும் போர்க்களத்தில் கூட நாம் எவ்வாறு ஜமாஅத்தில் தொழ வேண்டும் என்பதனைத் திருக்குர்ஆன் தெளிவாகக் கூறுகிறது.

ஸூரத்துன்னிஸாவு (பெண்கள்)

**4:102** وَاِذَا كُنْتَ فِيْهِمْ فَاَقَمْتَ لَهُمُ الصَّلٰوةَ فَلْتَقُمْ طَآٮِٕفَةٌ مِّنْهُمْ مَّعَكَ وَلْيَاْخُذُوْۤا اَسْلِحَتَهُمْ فَاِذَا سَجَدُوْا فَلْيَكُوْنُوْا مِنْ وَّرَآٮِٕكُمْ وَلْتَاْتِ طَآٮِٕفَةٌ اُخْرٰى لَمْ يُصَلُّوْا فَلْيُصَلُّوْا مَعَكَ وَلْيَاْخُذُوْا حِذْرَهُمْ وَاَسْلِحَتَهُمْ‌ ۚ وَدَّ الَّذِيْنَ كَفَرُوْا لَوْ تَغْفُلُوْنَ عَنْ اَسْلِحَتِكُمْ وَاَمْتِعَتِكُمْ فَيَمِيْلُوْنَ عَلَيْكُمْ مَّيْلَةً وَّاحِدَةً‌ ؕ وَلَا جُنَاحَ عَلَيْكُمْ اِنْ كَانَ بِكُمْ اَذًى مِّنْ مَّطَرٍ اَوْ كُنْتُمْ مَّرْضٰۤى اَنْ تَضَعُوْۤا اَسْلِحَتَكُمْ‌ ۚ وَخُذُوْا حِذْرَكُمْ‌ ؕ اِنَّ اللّٰهَ اَعَدَّ لِلْكٰفِرِيْنَ عَذَابًا مُّهِيْنًا

**4:102.** (நபியே! போர் முனையில்) அவர்களுடன் நீர் இருந்து, அவர்களுக்கு தொழவைக்க நீர்(இமாமாக) நின்றால் அவர்களில் ஒரு பிரிவினர் தம் ஆயுதங்களைத் தாங்கிக் கொண்டு உம்முடன் தொழட்டும்; அவர்கள் உம்முடன் ஸஜ்தா செய்து (தொழுகையை முடித்ததும்) அவர்கள் (விலகிச் சென்று) உங்கள் பின்புறம் (உங்களைக் காத்து நிற்கட்டும்); அப்பொழுது, தொழாமலிருந்த மற்றொரு பிரிவினர் வந்து உம்முடன் தொழட்டும். ஆயினும் அவர்களும் தங்கள் ஆயுதங்களைத் தாங்கிய வண்ணம், தங்களைப் பற்றி எச்சரிக்கையாக இருக்கட்டும் - ஏனெனில் நீங்கள் உங்கள் ஆயுதங்களைப்பற்றியும், உங்கள் சாமான்களைப் பற்றியும் கவனக் குறைவாக இருந்தால், அப்பொழுது உங்கள் மீது ஒரேயடியாகச் சாய்ந்து (தாக்கி) விடலாமென்று காஃபிர்கள் விரும்புகின்றனர்; ஆனால் மழையினால் உங்களுக்கு இடைஞ்சல் இருந்தாலோ, அல்லது நீங்கள் நோயாளிகளாக இருப்பதினாலோ, உங்களுடைய ஆயுதங்களைக் (கையில் பிடிக்க இயலாது) கீழே வைத்து விடுவது உங்கள் மீது குற்றம் ஆகாது; எனினும் நீங்கள் எச்சரிக்கையாகவே இருந்து கொள்ளுங்கள். நிச்சயமாக அல்லாஹ் காஃபிர்களுக்கு இழிவு தரும் வேதனையைச் சித்தப்படுத்தி வைத்திருக்கின்றான்.

மேலும் இப்னு மஸ்வூத் رَضِي الله عَنْهُ கூறிப்பிடுவதாவது, “ஜமாஅத் தொழுகை ரஸுலுல்லாஹ் صَلَّى الله عَلَيْهِ وَسلَّمَ அவர்கள் கற்றுக் கொடுத்தது. இதனை விட்டுவிட்டால் வழிகேடு தான். ஜமாஅத் தொழுகையை அறியப்பட்ட முனாஃபிக்குகள் தாம் விட்டுவிட்டு வீட்டில் தொழுவார்கள். நடக்க இயலாத ஸஹாபாக்களும், மற்றவர்களின் துணையோடு கால்களை இழுத்தவாரேனும் பள்ளிவாசலுக்கு வந்துதான் தொழுவார்கள்.” எனவே ஜமாஅத் தொழுகை கட்டாயக் கடமையாகும்.

## ஜமாஅத் தொழுகையில் வரிசை பற்றிய சட்டங்கள்

இரண்டு நபர்கள் இருந்தாலும் ஜமாஅத்தாகத் தொழலாம். ரஸுலுல்லாஹ் صَلَّى الله عَلَيْهِ وَسلَّمَ அவர்களும் இப்னு அப்பாஸ் رَضِي الله عَنْهُ அவர்களும் இரண்டாக, இப்னு மஸ்வூத் رَضِي الله عَنْهُ மற்றும் அனஸ் رَضِي الله عَنْهُ ஆகியோருடன் இரண்டு நபராகத் தொழுதுள்ளார்கள்.

புஹாரி 859

இப்னு அப்பாஸ் رَضِي الله عَنْهُ அறிவிப்பதாவது,

فَتَوَضَّأْتُ نَحْوًا مِمَّا تَوَضَّأَ، ثُمَّ جِئْتُ فَقُمْتُ عَنْ يَسَارِهِ، فَحَوَّلَنِي فَجَعَلَنِي عَنْ يَمِينِهِ، ثُمَّ صَلَّى مَا شَاءَ اللَّهُ، .. ثُمَّ اضْطَجَعَ فَنَامَ حَتَّى نَفَخَ،

**859.** இப்னு அப்பாஸ் (ரலி) அறிவிக்கார். என்னுடைய சிறிய தாயார் மைமூனா(ரலி) வீட்டில் நான் ஓரிரவு தங்கினேன். இரவில் ஒரு பகுதி கழிந்ததும் நபி(ஸல்) (உறக்கத்திலிருந்து) விழிக்கார்கள். பின்னர் எழுந்து சென்று தொங்கவிடப்பட்டிருந்த தோல் பையிலிருந்து சுருக்கமாக உளூச் செய்தார்கள். பின்னர் எழுந்து தொழலானார்கள். நானும் எழுந்து நபி(ஸல்) செய்தது போன்று உளூச் செய்து அவர்களின் இடப்புறமாக நின்று கொண்டேன். அவர்கள் என்னைப் பிடித்துத் தம் வலப்புறமாக நிறுத்தினார்கள். பின்னர் அல்லாஹ் நாடியதைத் தொழுதுவிட்டு குறட்டைவருமளவு படுத்துறங்கினார்கள். அவர்களிடம் (ஸுப்ஹ்) தொழுகை பற்றி முஅத்தின் அறிவிப்பதற்கு வந்தபோது அவருடன் தொழுகைக்காகச் சென்றார்கள். (மீண்டும்) உளூச் செய்யாமலே தொழுகை நடத்தினார்கள். Book: 10

மஹ்ரமான ஒரு ஆணும் பெண்ணும் தனியாக நின்று தொழலாம்.

அபு தாவூத் 1309

அபு ஸயீத் رَضِيَ الله عَنْهُ மற்றும் அபு ஹுரைராஹ் رَضِيَ الله عَنْهُ அறிவிப்பதாவது,

نْ أَبِي سَعِيدٍ، وَأَبِي، هُرَيْرَةَ قَالاَ قَالَ رَسُولُ اللَّهِ صلى الله عليه وسلم " إِذَا أَيْقَظَ الرَّجُلُ أَهْلَهُ مِنَ اللَّيْلِ فَصَلَّيَا أَوْ صَلَّى رَكْعَتَيْنِ جَمِيعًا كُتِبَا فِي الذَّاكِرِينَ وَالذَّاكِرَاتِ "

ரஸுலுல்லாஹ் صَلَّى اللّٰه عَلَيْهِ وَسَلَّمَ கூறியுள்ளார்கள், "ஒரு மனிதர் தமது மனைவியை இறவில் எழுப்பி பின்னர் இரண்டு பேர்களும் இரண்டு ரகஅத்துக்கள் ஒன்றாகத் தொழுதார்களானால், அந்த மனிதரும், அந்தப் பெண்மணியும் அல்லாஹ் வை நினைவு கூர்ந்தவர்களாகப் பதியப்படும்."

ஜமாஅத் எண்ணிக்கை அதிகமாகும் அளவிற்கு நன்மைகளும் அதிகமாகக் கிடைக்கும்.

அபு தாவூத் 554

உபை இப்னு க'அப் رَضِيَ الله عَنْهُ அறிவிப்பதாவது,

وَإِنَّ صَلاَةَ الرَّجُلِ مَعَ الرَّجُلِ أَزْكَى مِنْ صَلاَتِهِ وَحْدَهُ وَصَلاَتُهُ مَعَ الرَّجُلَيْنِ أَزْكَى مِنْ صَلاَتِهِ مَعَ الرَّجُلِ وَمَا كَثُرَ فَهُوَ أَحَبُّ إِلَى اللَّهِ تَعَالَى " .

ஒருவர் மற்றொருவரோடு தொழுதால், அவர் தனியாகத் தொழுவதைவிடத் தூய்மையாக இருக்கும். இருவரோடு தொழுதால் அதனை விடத் தூய்மையாக இருக்கும். எனினும் அதிகமாக (எண்ணிக்கையில்) தொழுதால், மோலான அல்லாஹ் வுக்கு மிகவும் உவப்பாக இருக்கும்.

## இமாமத் செய்வதற்கான உரிமை

அதிகம் குர்ஆன் அறிந்தவராக, அதிகம் குர்ஆனை மற்றும் ஹதீதுகளை அறிந்தவராக, மற்றும் வயதில் மூத்தவராக இருந்தால், அவருக்கு இமாமத்துச் செய்ய உரிமை அதிகமாகும்.

முஸ்லிம் 673

அபு மஸ்வூத் அல் அன்ஸாரி رَضِيَ الله عَنْهُ அறிவிப்பதாவது,

عَنْ أَبِي مَسْعُودٍ الأَنْصَارِيِّ، قَالَ قَالَ رَسُولُ اللَّهِ صلى الله عليه وسلم " يَؤُمُّ الْقَوْمَ أَقْرَؤُهُمْ لِكِتَابِ اللَّهِ فَإِنْ كَانُوا فِي الْقِرَاءَةِ سَوَاءً فَأَعْلَمُهُمْ بِالسُّنَّةِ

**1192.** அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: அல்லாஹ்வின் வேதத்தை நன்கு ஓதத் தெரிந்தவரே மக்களுக்குத் தலைமை தாங்கித் தொழுவிப்பார். மக்கள் அனைவருமே சம அளவில் ஓதத் தெரிந்தவர்களாய் இருந்தால் அவர்களில் நபிவழியை நன்கு அறிந்தவர் (தலைமை தாங்கித் தொழுவிப்பார்). அதிலும் அவர்கள் சமஅளவு அறிவுடையோராய் இருந்தால் அவர்களில் முதலில்

நாடு துறந்து (ஹிஜ்ரத்) வந்தவர் (தலைமை தாங்கித் தொழுவிப்பார்). அவர்கள் அனைவரும் சம காலத்தில் நாடு துறந்து வந்திருப்பின் அவர்களில் முதலில் இஸ்லாத்தைத் தழுவியவர் (தலைமை தாங்கித் தொழுவிப்பார்). ஒருவர் மற்றொரு மனிதருடைய அதிகாரத்திற்குட்பட்ட இடத்தில் (அவருடைய அனுமதியின்றி) தலைமை தாங்கித் தொழுவிக்க வேண்டாம். ஒரு மனிதருக்குரிய வீட்டில் அவரது விரிப்பின் மீது அவருடைய அனுமதியின்றி அமர வேண்டாம். இதை அபூமஸ்ஊத் அல்அன்சாரி (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள் இந்த ஹதீஸ் இரு அறிவிப்பாளர்தொடர் களில் வந்துள்ளது. Book: 5 - **ஸஹீஹ் முஸ்லிம்**

எனினும் அதிகம் தெரிந்தவர்கள் மற்றவர்களின் பின்னால் நின்று தொழலாம். அப்துர் ரஹ்மான் இப்னு அவ்.:.ப் அவர்களின் பின்னால், ரஸுலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ தொழுதிருக்கிறார்கள்.

### முதல் ஸ.:.ப் (வரிசை)

ஜமாஅத்தில் முதல் வரிசையில் இடம் இருந்தும் அடுத்த வரிசையில் தொழக் கூடாது

அபு தாவூத் 671

அனஸ் இப்னு மாலிக் رَضِيَ اللهُ عَنْهُ அறிவிப்பதாவது,

عَنْ أَنَسِ بْنِ مَالِكٍ، أَنَّ رَسُولَ اللَّهِ صلى الله عليه وسلم قَالَ " أَتِمُّوا الصَّفَّ الْمُقَدَّمَ ثُمَّ الَّذِي يَلِيهِ فَمَا كَانَ مِنْ نَقْصٍ فَلْيَكُنْ فِي الصَّفِّ الْمُؤَخَّرِ " .

ரஸுலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ கூறியதாவது, “முதல் வரிசையில் பூர்த்தி செய்யுங்கள். பின்னர் அடுத்த வரிசை. பூர்த்தி செய்யப்படாத வரிசை கடைசியாக இருக்கட்டும்.”

முதல் வரிசையில் இடது புறத்தைவிட வலது புறம் சிறந்தது. அடுத்த வரிசையிலும் அவ்வாறே வலது புறம் சிறந்தது. தனியாக ஒருவராக ஒரு வரிசையில் தொழுவது பற்றிச் சிலர் முன் வரிசையில் ஒருவரைப் பின்னால் இழுத்துக் கொண்டு இருவராக நிற்க வேண்டும் என்று கூறப்படும் செய்தி பலவீனமானதாகும். ஒருவரே தனியாகத் தொழுதாலும் ஜமாஅத் நன்மை கிடைக்கும்.

வரிசையில் தோளோடு தோள் சேர்த்துத் தொழ வேண்டும் என்பது பற்றி பல ஹதீதுகள் உள்ளன. வரிசையில் இடைவெளி விடக் கூடாது. இடைவெளி விட்டால் ஷைத்தான் இடையில் புகுந்து விடுவான்.

### பெண்கள் பள்ளிவாசலுக்கு வருவது பற்றிய விவரங்கள்

அபு தாவூத் 565

அபு ஹுரைராஹ் رَضِيَ اللهُ عَنْهُ அறிவிப்பதாவது,

أَبِي هُرَيْرَةَ، أَنَّ رَسُولَ اللَّهِ صلى الله عليه وسلم قَالَ " لاَ تَمْنَعُوا إِمَاءَ اللَّهِ مَسَاجِدَ اللَّهِ وَلَكِنْ لِيَخْرُجْنَ وَهُنَّ تَفِلاَتٌ " .

ரஸுலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ கூறியதாவது, “அல்லாஹ் வின் பெண் அடியார்களை பள்ளிவாசலுக்கு வருவதைத் தடுக்காதீர்கள். எனினும் அவர்கள் நறுமணம் பூசாமல் செல்லட்டும்.”

எனினும் பெண்கள் வீட்டில் தொழுவதுதான் சிறந்தது. இதற்குப் பல ஆதாரங்கள் உண்டு.

அபு தாவூத் 567

இப்னு உமர் رَضِيَ اللهُ عَنْهُ அறிவிப்பதாவது,

عَنِ ابْنِ عُمَرَ، قَالَ قَالَ رَسُولُ اللَّهِ صلى الله عليه وسلم " لاَ تَمْنَعُوا نِسَاءَكُمُ الْمَسَاجِدَ وَبُيُوتُهُنَّ خَيْرٌ لَهُنَّ " .

ரஸுலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ கூறியதாவது, ‘‘பெண்களைப் பள்ளிவாசலுக்கு வருவதைத் தடுக்காதீர்கள். எனினும் அவர்கள் வீடுகள் அவர்களுக்கு(த் தொழுவதற்குச்) சிறந்தது.’’

எனினும் பெண்களின் நிலையைக் கண்டு இக்காலத்தில் ரஸுலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ அவர்கள் பள்ளிவாசலுக்குச் செல்வதை தடை செய்திருப்பார்கள் என்ற அன்னை ஆயிஷா رَضِيَ اللهُ عَنْهَا அவர்களின் அறிவிப்பைப் கொண்டு இப்போது பெண்கள் பள்ளிவாசல் வருவதைத் தடைசெய்வது கூடும் என்று கருத்துரைக்கிறார்கள். எனினும் அது தவறானக் கருத்தாகும்.

மேலும் பெண்கள் பள்ளிவாசலுக்கு மட்டுமல்லாமல், வெளியில் எங்கு சென்றாலும் ஹாரம் என்று ரஸுலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ கூறியுள்ளார்கள். இப்படிப்பட்ட பெண்களைப் பற்றித்தான் அன்னை ஆயிஷா رَضِيَ اللهُ عَنْهَا அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள் என்பதால் பெண்களின் அனுமதியைப் பொதுவான விதத்தில் தடுக்க முடியாது. பெண்களும் பள்ளிவாசல் சென்று மார்க்கம் அறிய வாய்ப்பினை அளிக்க வேண்டும்.

**Fiqh 27 - Laws relating to Imam and Ma'moom**

# ஃபிக்ஹ் வகுப்பு 27 - இமாம் மற்றும் மஃமூம் தொடர்பான சட்டங்கள்

**ஆசிரியர்: அஷ் ஷெய்க் உவைஸ் உமரி நளீரி**

## இமாம் பற்றிய சட்டங்கள்

இமாமானவர் மார்க்க விஷயத்தில் அமானிதத்தைப் பேணுபவராக, நபித்தொழுகை பற்றி ஆதாரப்பூர்வமான ஹதீதுகள் மூலம், முற்றும் அறிந்தவராக, அதனைக் கடைபிடித்துத் தொழுபவராக இருக்க வேண்டும். இமாம் என்றால் வழி நடத்துபவர் என்று பொருள். எனவே அவர் மக்களை வழி நடத்துபவர் என்பதால், தொழுகை சம்பந்தப்பட்ட எல்லா விஷயங்களிலும் நபிவழியைப் பின்பற்றி மக்களுக்கு வழி காட்ட வேண்டும். இது இமாமின் அடிப்படை கடமையாகும்.

தொழுகையில் பிஸ்மில்லாஹிர்ரஹ்மானிர்ரஹீம் என்பதனை சப்தமிட்டு ஓதுவதா அல்லது மெதுவாக ஓதுவதாக என்பது குறித்து கேள்வி எழலாம்.

முஸ்லிம் 399

அனஸ் رَضِي الله عَنْهُ அறிவிப்பதாவது,

عَنْ أَنَسٍ، قَالَ صَلَّيْتُ مَعَ رَسُولِ اللَّهِ صلى الله عليه وسلم وَأَبِي بَكْرٍ وَعُمَرَ وَعُثْمَانَ فَلَمْ أَسْمَعْ أَحَدًا مِنْهُمْ يَقْرَأُ ‏{‏ بِسْمِ اللَّهِ الرَّحْمَنِ الرَّحِيمِ‏}‏ ‏.‏

**667.** அனஸ் பின் மாலிக் (ரலி) அவர்கள் கூறியதாவது: அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள், அபூபக்ர் (ரலி), உமர் (ரலி) மற்றும் உஸ்மான் (ரலி) ஆகியோருடன் (அவர்களுக்குப் பின்னால் நின்று) நான் தொழுதிருக்கிறேன். அவர்களில் யாருமே பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர் ரஹீம் என்பதை (சப்தமாக) ஓதியதை நான் கேட்டதில்லை. இதை கத்தாதா (ரஹ்) அவர்கள் அறிவிக்கிறார்கள். இந்த ஹதீஸ் இரு அறிவிப்பாளர்தொடர்களில் வந்துள்ளது. Book: 4 - **ஸஹீஹ் முஸ்லிம்**

ஒரு சில நேரங்களில் சப்தமாக பிஸ்மில்லாஹிர்ரஹ்மானிர்ரஹீம் ஓதுவதனால் தவறு ஏதும் இல்லை.

ஆமீன் கூறுவது மௌளமாக சொல்ல வேண்டுமா அல்லது சப்தமாகக் கூற வேண்டுமா?

புஹாரி 780, முவத்தா மாலிக் 47, நஸாயி 928

அபு ஹுரைராஹ் رَضِي الله عَنْهُ அறிவிப்பதாவது,

نْ أَبِي هُرَيْرَةَ، أَنَّ رَسُولَ اللَّهِ صلى الله عليه وسلم قَالَ ‏"‏ إِذَا أَمَّنَ الإِمَامُ فَأَمِّنُوا فَإِنَّهُ مَنْ وَافَقَ تَأْمِينُهُ تَأْمِينَ الْمَلاَئِكَةِ غُفِرَ لَهُ مَا تَقَدَّمَ مِنْ ذَنْبِهِ ‏"‏

**780.** இறைத்தூதர்(ஸல்) அவர்கள் அறிவித்தார்கள். 'இமாம் ஆமீன் கூறும்போது நீங்களும் ஆமீன் கூறுங்கள்! ஒருவர் கூறும் ஆமீன் வானவர்கள் கூறும் ஆமீனுடன் ஒத்து அமையுமாயின் அவரின் முன்சென்ற பாவங்கள் மன்னிக்கப்படுகின்றன. என அபூ ஹுரைரா(ரலி) அறிவித்தார். நபி(ஸல்) அவர்கள் ஆமீன் என்று கூறுபவர்களாக இருந்தார்கள் என இப்னு ஷிஹாப் குறிப்பிடுகிறார். Book: 10 - **ஸஹீஹுல் புகாரி**

எனவே இமாம் ஆமின் என்பதைச் சப்தமாகச் சொன்னால்தான் மற்றவர்களினால் கேட்க முடியும். மெதுவாகத் தொழப்படும் தொழுகைகளில் மெதுவாக ஆமின் என்றும், சப்தமாகத் தொழும் தொழுகைகளில் சப்தமாக ஆமின் சொல்ல வேண்டும்.

தொழுகையில் அத்தியாயம் ஃபாத்திஹாவுக்குப் பிறகு எந்த துணை அத்தியாயம் ஓத வேண்டும்? ஸுன்னாஹ்வின்படி ஓதப்படும் அத்தியாயங்கள் எவை?

வெள்ளிக் கிழமைகளில்

பஜ்ரில்

அப்பாஸ் رَضِي الله عَنْهُ அறிவிப்பதாவது,

عَنِ ابْنِ عَبَّاسٍ، أَنَّ رَسُولَ اللَّهِ صلى الله عليه وسلم كَانَ يَقْرَأُ فِي صَلاَةِ الْفَجْرِ يَوْمَ الْجُمُعَةِ تَنْزِيلَ السَّجْدَةَ وَ هَلْ أَتَى عَلَى الإِنْسَانِ حِينٌ مِنَ الدَّهْرِ

ரஸுலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ வெள்ளிக் கிழமை பஜ்ர் தொழுகையில் அத்தியாயம் ஸஜ்தா மற்றும் அத்தியாயம் ஹல் அதா அலல் இன்ஸான மினத் தஹ்ரி

ஜும்மாவில்

அபு தாவூத் 1125

عَنْ سَمُرَةَ بْنِ جُنْدُبٍ، أَنَّ رَسُولَ اللَّهِ صلى الله عليه وسلم كَانَ يَقْرَأُ فِي صَلاَةِ الْجُمُعَةِ { سَبِّحِ اسْمَ رَبِّكَ الأَعْلَى } وَ { هَلْ أَتَاكَ حَدِيثُ الْغَاشِيَةِ }

ரஸுலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ வெள்ளிக் கிழமைகளில் ஸப்பிஹிஸ்ம ரப்பிக்கல் அ.்லா மற்றும் ஹல் அதாக்க ஹதீதுல் ்.காஷியா அத்தியாங்களை ஓதுவார்கள்.

அபு தாவூத் 1075

فِي صَلاَةِ الْجُمُعَةِ بِسُورَةِ الْجُمُعَةِ وَ إِذَا جَاءَكَ الْمُنَافِقُونَ

வெள்ளிக் கிழமை தொழுகைகளில் அத்தியாயம் ஜும்மா மற்று இதா ஜாஅல் முனா.்பிகூன் ஆகியவற்றை ஓதுவார்கள்.

இஷா தொழுகையில்

புஹாரி 769

அல் பராஹ் رَضِي الله عَنْهُ அறிவிப்பதாவது,

سَمِعَ الْبَرَاءَ، رضى الله عنه قَالَ سَمِعْتُ النَّبِيَّ صلى الله عليه وسلم يَقْرَأُ {وَالتِّينِ وَالزَّيْتُونِ} فِي الْعِشَاءِ، وَمَا سَمِعْتُ أَحَدًا أَحْسَنَ صَوْتًا مِنْهُ أَوْ قِرَاءَةً.

**769.** பராவு இப்னு ஆஸிப்(ரலி) அறிவிக்கார். இஷாக் தொழுகையில் 'வக்கீனி வஸ்ஸைக்கூனி' என்ற அக்கியாயக்கை நபி(ஸல்) அவர்கள் ஓத செவியுற்றுள்ளேன். அவர்களை விட அழகிய குரலில் வேறெவரும் ஓத நான் செவியுற்றதில்லை. Book: 10 - **ஸஹீஹுல் புகாரி**

மற்ற தொழுகைகளில் மக்களில் தொழுகைகளை சுலபமாகச் செய்வதற்காக சிறு சிறு அத்தியாங்களை ஓதுமாறு ரஸுலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ கூறியுள்ளார்கள். பெரிய அத்தியாயங்களை ஓதுவதென்றால், அதில் சிறு பகுதியை ஓத வேண்டும்.

பலவீனமானவார்கள், நோயாளிகள், வயதானவனர்கள், அவசரத் தேவையுள்ளவர்கள் ஆகியோரைக் கணக்கில் எடுத்துக் கொண்டு நாம் தொழுகையைச் சுருக்கமாக தொழ வைக்க வேண்டும்.

முஸ்லிம் 470

அனஸ் رَضِي الله عَنْهُ அறிவிப்பதாவது,

عَنْ أَنَسٍ، قَالَ أَنَسٌ كَانَ رَسُولُ اللَّهِ صلى الله عليه وسلم يَسْمَعُ بُكَاءَ الصَّبِيِّ مَعَ أُمِّهِ وَهُوَ فِي الصَّلاَةِ فَيَقْرَأُ بِالسُّورَةِ الْخَفِيفَةِ أَوْ بِالسُّورَةِ الْقَصِيرَةِ .

**808.** அனஸ் (ரலி) அவர்கள் கூறியகாவகு: அல்லாஹ்வின் கூகர் (ஸல்) அவர்கள் தொழுவித்துக்கொண்டிருக்கும்போது (பின்னால் தொழும் பெண்களிடையே உள்ள) குழந்தை தன்

தாயிடம் அழுதுகொண்டிருப்பதைச் செவியேற்பார்கள். உடனே சுருக்கமான அத்தியாயத்தை அல்லது சிறிய அத்தியாயத்தை ஓதுவார்கள்.- இதை ஸாபித் அல்புனானீ (ரஹ்) அவர்கள் அறிவிக்கிறார்கள். Book: 4 - **ஸஹீஹ் முஸ்லிம்**

முஆத் இப்னு ஜபல் நீண்ட நேரம் தொழ வைப்பார்கள். அது குறித்து ஒரு ஸஹாபி ரஸூலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ அவர்களிடம் முறையிட்டார்.

புஹாரி رَضِيَ الله عَنْهُ 701

அம்ர் رَضِيَ الله عَنْهُ அறிவிப்பதாவது,

نْ عَمْرٍو، قَالَ سَمِعْتُ جَابِرَ بْنَ عَبْدِ اللَّهِ، قَالَ كَانَ مُعَاذُ بْنُ جَبَلٍ يُصَلِّي مَعَ النَّبِيِّ صلى الله عليه وسلم ثُمَّ يَرْجِعُ فَيَؤُمُّ قَوْمَهُ، فَصَلَّى الْعِشَاءَ فَقَرَأَ بِالْبَقَرَةِ، فَانْصَرَفَ الرَّجُلُ، فَكَأَنَّ مُعَاذًا تَنَاوَلَ مِنْهُ، فَبَلَغَ النَّبِيَّ صلى الله عليه وسلم فَقَالَ " فَتَّانٌ فَتَّانٌ فَتَّانٌ " ثَلاَثَ مِرَارٍ أَوْ قَالَ " فَاتِنًا فَاتِنًا فَاتِنٌ " وَأَمَرَهُ بِسُورَتَيْنِ مِنْ أَوْسَطِ الْمُفَصَّلِ قَالَ عَمْرٌو لاَ أَحْفَظُهُمَا

**701.** ஜாபிர் இப்னு அப்தில்லாஹ்(ரலி) அறிவித்தார். முஆத் இப்னு ஜபல்(ரலி) நபி(ஸல்) அவர்களுடன் தொழுதுவிட்டுத் தம் குழுவினரிடம் சென்று அவர்களுக்கு இமாமாகத் தொழுகை நடத்துவது வழக்கம். (ஒரு முறை) இஷாத் தொழுகை நடத்தும்போது 'அல்பகரா' அத்தியாயத்தை ஓதினார்கள். அப்போது ஒருவர்(தொழுகையை)விட்டும் விலகிச் சென்றார். (தொழுது முடித்ததும்) முஆத் இப்னு ஜபல்(ரலி) அவரைக் கண்டித்தார்கள். இச்செய்தி நபி(ஸல்) அவர்களுக்குத் தெரிய வந்தபோது '(நீரென்ன) குழப்பவாதியா?' என்று மும்முறை நபி(ஸல்) அவர்கள் முஆத்(ரலி)ஐ நோக்கிக் கூறினார்கள். மேலும், நடுத்தரமான இரண்டு அத்தியாயங்களை ஓதித் தொழுமாறு அவருக்குக் கட்டளையிட்டார்கள். ஜாபிர்(ரலி) அவர்களிடமிருந்து இதை அறிவிக்கும் அம்ர் 'அந்த இரண்டு அத்தியாயங்களை எவையென ஜாபிர்(ரலி) குறிப்பிட்டார்கள். அது எனக்கு நினைவில் இல்லை' என்றும் குறிப்பிட்டார்கள். Book: 10 - **ஸஹீஹுல் புகாரி**

ஸப்பிஹிஸ்ம, வஷ் ஷம்ஸி போன்ற அத்தியாயங்களை ஓதுவதன் மூலம், மக்களுக்கு சுலபமாக ஆக்க வேண்டும். மக்கள் அனைவரும் ஜமாஅத்தில் வந்து இணையுமாறு தொழுகைகளை இலகுவாக்க வேண்டும். தராவிஹ், தஹஜ்ஜுத் போன்ற தொழுகைகளில நீண்ட அத்தியாயங்களை ஓதுவதில் தவறில்லை. அவை கட்டாயமாக்கப்பட்ட தொழுகை இல்லை என்பதாலும், அமர்ந்தும் தொழ வாய்ப்புள்ளதாலும் அவ்வாறு தொழ வைக்கலாம். ஜமாஅத்தில் சேராமல் தனியாகவும் தொழலாம்.

தொழுகையின் முடிவில் ஸலாம் சொல்வது சாதாரணமாகவே இருக்க வேண்டும். அவ்வாறில்லாமல் தேவைக்கு அதிகமாக ஸலாத்தினை வெகு நேரம் இழுத்துச் சொல்லக் கூடாது. அதன் காரணமாக, வலது பக்கம் ஸலாம் சொன்ன பிறகு, ம:ஃமூம்கள் இமாம் இடது பக்க ஸலாமை இழுத்துச் சொல்லி முடிக்கும் வரை, அவர்கள் வலப்பக்கமே வெகு நேரம் திரும்பி இருக்க வேண்டிய கட்டாயம் ஏற்படக் கூடும். இதனைத் தவிர்க்க வேண்டும்.

### ம:ஃமூம் (இமாமைப் பின்பற்றுபவர்கள்)கவனிக்க வேண்டியவைகள்

ம:ஃமூம்கள் இமாமைப் பின்தொட வேண்டுமே அன்றி அவருக்க முன்பாக எதனையும் செய்யக் கூடாது. அதைப் போல் இமாம் ஒரு செயலை முடித்து, அடுத்த செயலுக்குச் சென்ற நிலையிலும், ம:ஃமூம் தாமதித்து முந்தைய செயலைச் செய்யக் கூடாது. முந்திக் கொள்வதும், அவருடன் சரிசமமாகச் செய்வதும், தாமதிப்பதும் தவறாகும். அவர் செய்யச் செய்ய நாம் தொடர வேண்டும்.

அபு தாவூத் 601

அனஸ் இப்னு மாலிக் رَضِيَ الله عَنْهُ அறிவிப்பதாவது,

عَنْ أَنَسِ بْنِ مَالِكٍ، أَنَّ رَسُولَ اللَّهِ صلى الله عليه وسلم رَكِبَ فَرَسًا فَصُرِعَ عَنْهُ فَجُحِشَ شِقُّهُ الأَيْمَنُ فَصَلَّى صَلاَةً مِنَ الصَّلَوَاتِ وَهُوَ قَاعِدٌ وَصَلَّيْنَا وَرَاءَهُ قُعُودًا فَلَمَّا انْصَرَفَ قَالَ " إِنَّمَا جُعِلَ الإِمَامُ لِيُؤْتَمَّ بِهِ فَإِذَا صَلَّى قَائِمًا فَصَلُّوا قِيَامًا وَإِذَا رَكَعَ فَارْكَعُوا وَإِذَا رَفَعَ فَارْفَعُوا وَإِذَا قَالَ سَمِعَ اللَّهُ لِمَنْ حَمِدَهُ فَقُولُوا رَبَّنَا وَلَكَ الْحَمْدُ وَإِذَا صَلَّى جَالِسًا فَصَلُّوا جُلُوسًا أَجْمَعُونَ " .

ரஸூலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ குதிரையில் சவாரி செய்தபோது, அவர்கள் எறியப்பட்டார்கள். அப்போது அவர்கள் ஒரு தொழுகையை அமர்ந்தவாறு தொழுதார்கள். நாங்களும் அமர்ந்தவாறே தொழுதோம். அவர்கள் தொழுது முடித்ததும் கூறினார்கள், "இமாம் பின்தொடர்வதற்காகவே நியமிக்கப்பட்டுள்ளார். எனவே அவர்கள் நின்று கொண்டு தொழுதால், நீங்களும் நின்று கொண்டு தொழுங்கள். அவர் ருக்கூ செய்தால் நீங்களும் ருக்கூ செய்யுங்கள். அவர் நிமிர்ந்தால், நீங்களும் நிமிர்ந்து கொள்ளுங்கள். அவர் ஸமிஅல்லாஹு லிமன் ஹமீதா என்று சொன்னால், எங்களின் இரட்சகனே! உனக்கே எல்லாப் புகழும் என்று கூறுங்கள். அவர் அமர்ந்து தொழுதால், நீங்கள் அனைவரும் அமர்ந்து தொழுங்கள்."

முவத்தா மாலிக் 61

அபு ஹுரைராஹ் رَضِيَ اللهُ عَنْهُ அறிவிப்பதாவது,

عَنْ أَبِي هُرَيْرَةَ، أَنَّهُ قَالَ الَّذِي يَرْفَعُ رَأْسَهُ وَيَخْفِضُهُ قَبْلَ الإِمَامِ فَإِنَّمَا نَاصِيَتُهُ بِيَدِ شَيْطَانٍ .

யாரேனும் ஒருவர் தமது தலையை உயர்த்துவதும், தாழ்த்துவதும் இமாமுக்கு முன்பாகச் செய்தால், அவரது நெற்றி ஷைத்தானின் கையில் உள்ளது.

மேலும் ம∴மூமின் தாமதத்தின் காரணமாக, இமாமைப் பின்தொடருவதில் தாமதம் ஏற்பட்டு அவரைப் பின்தொடர முடியாமல் போனால், தொழுகையின் ருக்குனை விட்டுவிட்டு நேரடியாக இமாமைத் தொடர வேண்டும். பின்ன்ர அவர் அந்த ரகஅத்தைக் கணக்கில் எடுக்காமல், இமாம் தொழுகையை முடித்தபிறகு, ம∴மூம் விட்ட ரகஅத்தைத் தொழுது ஸஜ்தா செய்து தொழுகையை முடிக்க வேண்டும். அத்தியாயம் ∴பாத்திஹாவை ம∴மூம்கள் ஓத வேண்டுமா என்பதில் கருத்து வேறுபாடு உள்ளது. ஓதத் தேவை இல்லை என சிலரும், அனைவரும் ஓத வேண்டும் என்று சிலரும் கருத்து கொள்கின்றனர். மேலும் சிலர் சப்தமிட்டு ஓதப்படும் தொழுகையில் ஓத வேண்டியதில்லை எனவும், மெதுவாக ஓதப்படும் தொழுகையில் அனைவரும் ஓத வேண்டும் என்று கருத்து கொண்டுள்ளனர். ஆனால் எல்லா தொழுகைகளிலும் அனைவரும் அத்தியாயம் ∴பாத்திஹாவை ஓத வேண்டும்.

புஹாரி 756

உபாதாஹ் இப்னு ஸாமித் رَضِيَ اللهُ عَنْهُ அறிவிப்பதாவது,

عَنْ عُبَادَةَ بْنِ الصَّامِتِ، أَنَّ رَسُولَ اللَّهِ صلى الله عليه وسلم قَالَ " لاَ صَلاَةَ لِمَنْ لَمْ يَقْرَأْ بِفَاتِحَةِ الْكِتَابِ ".

**756.** இறைத்தூதர்(ஸல்) அவர்கள் கூறினார்கள்: 'திருக்குர்ஆனின் தோற்றுவாயை (அல்ஹம்து சூராவை) ஓதாதவருக்குத் தொழுகை கூடாது.' இதை உபாதா இப்னு ஸாமித்(ரலி) அறிவித்தார். Book :10 - ***ஸஹீஹுல் புகாரி***

இமாம் புஹாரி رَحْمَةُ اللهِ عَلَيْهِ தனியாக் ஹிஸ்புல் கிராஅத் அல் ∴பாத்திஹா என்னும் நூலில் இது குறித்து ஒரு ஹதீதைப் பதிந்துள்ளார்கள். அதில் ரஸூலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ தொழுகையில் ஓதும்போது, மற்றவர்களும் அவர்களுடன் சேர்ந்து ஓதுவார்கள். அது அவர்களுக்கு இடைஞ்சலாக இருந்தபோது, அவர்கள் மற்றவர்களை தங்களைப் பின்தொடர்ந்து ஓத வேண்டாம் என்று தடுத்த

ரஸுலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ அவர்கள் அத்தியாயம் ∴பாத்திஹாவைத் தவிர என்று கூறினார்கள்.
சிலர் ஸூரத்துல் அஃராஃப் (சிகரங்கள்)

7:204 وَاِذَا قُرِئَ الْقُرْاٰنُ فَاسْتَمِعُوْا لَهٗ وَاَنْصِتُوْا لَعَلَّكُمْ تُرْحَمُوْنَ

**7:204.** குர்ஆன் ஓதப்படும்போது அதனை நீங்கள் செவிதாழ்த்தி (கவனமாகக்) கேளுங்கள்; அப்பொழுது நிசப்தமாக இருங்கள் - (இதனால்) நீங்கள் கிருபை செய்யப்படுவீர்கள்

என்ற வசனத்தைக் கூறி இமாம் ஓதும்போது மற்றவர்கள் ஓதக் கூடாது என்பார்கள். ஆனால் இவ்வசனம் கா∴பிர்கள் சம்பந்தமாகக் குறிப்பிட்டுக் கூறப்பட்ட வசனமன்றி, அத்தியாயம் ∴பாத்திஹாவை ஓதக் கூடாது என்பதற்கான வசனமல்ல.
இமாமுடைய கிராஅத்தான் ம∴மூம்களின் கிராஅத் என்ற ஒரு ஹதீதையும் அவர்கள் எடுத்துக் கூறுவார்கள். அந்த ஹதீதும் பலவீனமானதாகும்.

எனவே அத்தியாயம் ∴பாத்திஹாவை இமாமும், ம∴மூமும் கட்டாயம் ஓத வேண்டும். எனினும் ஒரு சந்தர்ப்பத்தில் மட்டும் அவ்வாறு ம∴மூம் அத்தியாயம் ∴பாத்திஹாவை ஓதாமல் இருந்தாலும், அத்தொழுகையில் எவ்வித குறையும் வராது. எந்த ம∴மூமும், இமாமை அவர் ருக்கூவிலிருந்து எழுவதற்கு முன்னால் ஜமாஅத்தில் சேர்ந்தால், அந்த ரகஅத் அவருக்குக் கணக்கில் எடுத்துக் கொள்ளப்படும். எனினும் அவ்வாறு அவர் சேரும்போது, அவர் அத்தியாயம் ∴பாத்திஹாவை ஓத நேரம் கிடைக்காமல் இமாமை ருக்கூவில் தொடரும்போது, அவர் அந்த சந்தர்ப்பத்தில் அத்தியாயம் ∴பாத்திஹாவை ஓதாமல் இருந்தாலும் அத்தொழுகை ஏற்றுக் கொள்ளப்படும். அதற்கான ஆதாரம்,
அபு தாவூத் 893
அபு ஹுரைராஹ் رَضِي الله عَنْهُ அறிவிப்பதாவது,

عَنْ أَبِي هُرَيْرَةَ، قَالَ قَالَ رَسُولُ اللَّهِ صلى الله عليه وسلم " إِذَا جِئْتُمْ إِلَى الصَّلاَةِ وَنَحْنُ سُجُودٌ فَاسْجُدُوا وَلاَ تَعُدُّوهَا شَيْئًا وَمَنْ أَدْرَكَ الرَّكْعَةَ فَقَدْ أَدْرَكَ الصَّلاَةَ " .

ரஸுலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ கூறியுள்ளார்கள், “யாராவது நாங்கள் தொழும்போது ஸுஜூதில் இருப்பதைக் கண்டால், அவரும் ஸுஜூதில் சேர்ந்து கொள்ளட்டும். அவர் (அந்த ரகஅத்தில்) எதனையும் பெற மாட்டார். எனினும் அவர் தொழுகையில் இருப்பதைப் பெற்றுக் கொள்வார்.’
அதாவது அவருக்கு அந்த ரகஅத் கிடைக்காவிட்டாலும், அவர் ஜமாஅத்தில் அப்போது சேர்ந்த நன்மை கிடைக்கும். உதாரணமாக கடைசி ரகஅத்தில் அவர் ஸுஜூத்தில் சேர்ந்தால், அவர் மொத்த ரகஅத்துகளைத் திரும்பவும் தொழவேண்டும் என்றிருந்தாலும், ஜமாஅத்தில் சேர்ந்த நன்மை அவருக்குக் கிடைத்துவிடும்.

மற்றொரு அறிவிப்பின்படி, இமாம் நிற்பதாகவோ, ருக்கூ செய்வதாகவோ அல்லது ஸுஜூதிலோ நீங்கள் கண்டால் அந்த நிலைக்கே நீங்கள் தக்பீர் சொல்லி சேர்ந்துவிடுங்கள் இமாம் அல்பானி கூறிப்பிடுகிறார். மேலும் ஸஜ்தாவில் சேர்ந்தால் அந்த ரகஅத்தைக் கணக்கிடக்கூடாது. எனவே இதில் கியாம், ருக்கூ மற்றும் ஸுஜூத் என்ற மூன்று நிலைகள் கூறப்பட்டுள்ளது. கியாமில் ம∴மூமுக்கு அத்தியாயம் ∴பாத்திஹாவை ஓத வாய்ப்புண்டு. ஆனால் ருக்கூவில் சேரும்போது அத்தியாயம் ∴பாத்திஹாவை ஓத வாய்ப்புக் கிடைக்காது என்றாலும், அந்த ரகஅத் கணக்கிடப்படும் என்தால் அத்தியாயம் ∴பாத்திஹாவை ஓதாமல் இருந்ததால் தொழுகையில் குறை ஏற்படாது.

எனினும் தனியாக அத்தியாயம் ஃபாத்திஹா பற்றி எழுதிய நூலில், அத்தியாயம் ஃபாத்திஹா ஓதப்படாத ரகஅத்தைக் கணக்கில் எடுக்கக் கூடாது என இமாம் புஹாரி رَحْمَةُ الله عَلَيْهِ பதிந்துள்ளார்கள். இவ்வாறு இரு வேறு கருத்துக்கள் இருந்தாலும், முந்தையக் கருத்தின் மூலம், ருக்கூ செல்வதற்கு முன்னால் ஜமாஅத்தில் சேர்ந்து அத்தியாயம் ஃபாத்திஹாவைய ஓதவில்லை என்றாலும் தொழுகை பூரணமாகும் என்பதை நாம் எடுத்துக் கொள்ளலாம்.

இமாம் ஆமீன் சொல்லும்போது மஃமூம்களும் ஆமீன் சொல்ல வேண்டும் என்று முன்பு கூறியிருந்தோம். இமாம் ஆமீன் என்பதை சப்தமாகக் கூறுவார். அதைப்போல் மஃமூம்களும் சப்தமாகக் கூற வேண்டுமா அல்லது மெதுவாகக் கூற வேண்டுமா என்ற விஷயத்தில், அவர்கள் சப்தமாகக் கூறவேண்டும் என்பதே ஸுன்னாஹ்வுக்கு நெருக்கமான ஒன்றாப்படுகிறது. நாம் முன்பு சொன்ன புஹாரி 780, முவத்தா மாலிக் 47, நஸாயி 928 ஹதீதுகளில், இமாம் ஆமீன் சொல்லும்போது, நீங்களும் ஆமீன் என்று சொல்லுங்கள் என்று குறிப்பிடப்பட்டுள்ளதே தவிர, நீங்கள் மௌனமாக ஆமீன் கூறுங்கள் என்று குறிப்பிடப்படவில்லை. எனவே அவர்கள் கூறாத ஒன்றை நாம் ஏற்படுத்தவில்லை.

ஒரு மஃமூம் மட்டும் தொழுகையில் பின்தொடர்ந்தால், இமாம் சிறிதளவு முன்னாலும், மஃமூம் சிறிது பின்னாலும், இருவருக்கும் வித்தியாசம் தெரியும் அளவில் நிற்பார்கள். இவ்வாறு நின்று தொழுவதற்கு எவ்வித ஆதாரமும் இல்லை. இருவரும் சமமாகத்தான் நிற்க வேண்டும். முன்பு கூறப்பட்ட ஒரு ஹதீதில், இப்னு மஸ்வூத் رَضِي الله عَنْهُ, ரஸூலுல்லாஹ் صَلَّى الله عَلَيْهِ وَسَلَّمَ அவர்களுக்கு இடப்புறம் நின்று தொழுதார். ரஸூலுல்லாஹ் صَلَّى الله عَلَيْهِ وَسَلَّمَ அவரின் காதினைப் பிடித்து இழுத்து வலதுபக்கம் நிற்க வைத்தார்கள். இதில் சற்றுதள்ளி நிற்க வேண்டும் என்று சொல்லப்படவில்லை. எனவே வரிசை என்ற முறையில் இருவரும் சமமாகத்தான் நிற்க வேண்டும்.

பெண்கள் பெண்களுக்கு இமாமத் நடத்தலாம். ஆனால் அவர்கள் ஆண்களுக்கு இமாமத் செய்யக் கூடாது. அன்னை ஆயிஷா رَضِي الله عَنْهَا அவர்கள் பெண்களுக்கு இமாமத் செய்திருக்கிறார்கள். பெண்கள் அவ்வாறு இமாமத் செய்யும்போது, தனியாக முன்னால் நிற்கக்கூடாது. மற்றவர்களுடன் சமமாக நின்றுதான் இமாமத் செய்ய வேண்டும். பைஹக்கி 3. 131 நூலில் அன்னை ஆயிஷா அவரகள் தொழ வைக்கும்போது இவ்வாறுதான் தொழுகை நடத்தினார்கள் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

**Fiqh 28 - Laws of Praying Qasr**

## ஃபிக்ஹ் வகுப்பு 28 - தொழுகையை கஸ்ர் செய்வதின் சட்டங்கள்

**ஆசிரியர்: அஷ் ஷெய்க் உவைஸ் உமரி நஸீரி**

இப்போது ஜமாஹ் வ கஸ்ர் தொழுகை பற்றி நாம் காண்போம். ஜம்வு மற்றும் கஸ்ர் என்று வழக்கமாகக் கூறப்படும். ஜம்வு என்பது சேர்த்துத் தொழுவது. லுஹர் மற்றும் அஸர் தொழுகைகளை இணைத்துத் தொழுவது ஒரு உதாரணமாகும். லுஹர் தொழுகையை அதே நேரத்திலும், அத்துடன் அஸர் தொழுகையையும் சேர்த்துத் தொழுவது ஜம்வுத் தக்தீம் என்பதாகும். அஸரை முற்படுத்தித் தொழுதல் இதன் பொருளாகும். அவ்வாறில்லாமல் அஸர் நேரத்தில் லுஹரைப் பிற்படுத்தி, முதலில் லுஹரையும் பின்னர் அஸரையும் தொழுவது ஜம்வுத் தக்ஹீர் என்பதாகும்.

அதைப் போல மக்ரிப்பையும், இஷாவையும் சேர்த்து, மக்ரிபை இஷாவுடன் முற்படுத்தியோ, அல்லது மக்ரிபைப் பிற்படுத்தி இஷாத் தொழுகையுடனோ தொழலாம். எனினும் பஜ்ரையும், லுஹரையும் இணைக்க முடியாது. அதைப் போல அஸரையும், மக்ரிப்பையும் அல்லது இஷாவையும், பஜ்ரையும் இணைக்க முடியாது.

கஸ்ர் என்பது நான்கு ரகஅத்துக்கள் உள்ள தொழுகைகளை இரண்டு ரகஅத்துகளாகத் தொழுவது ஆகும். இது லுஹர், அஸர் மற்றும் இஷா ஆகியவற்றிற்குப் பொருந்தும். மற்றத் தொழுகைகளுக்கு இது பொருந்தாது.

புஹாரி 1090

அன்னை ஆயிஷா رَضِيَ اللهُ عَنْهَا அறிவிப்பதாவது,

عَنْ عَائِشَةَ ـ رضى الله عنها ـ قَالَتِ الصَّلاَةُ أَوَّلُ مَا فُرِضَتْ رَكْعَتَيْنِ فَأُقِرَّتْ صَلاَةُ السَّفَرِ، وَأُتِمَّتْ صَلاَةُ الْحَضَرِ.

**1090.** ஆயிஷா (ரலி) அறிவித்தார். தொழுகை ஆரம்பத்தில் இரண்டு ரக்அத்களாகத்தான் கடமையாக்கப்பட்டது. பயணத் தொழுகை அவ்வாறே நீடித்தது. (சொந்த) ஊரில் தொழும் தொழுகை (நான்கு ரக்அத்களாக) முழுமை படுத்தப்பட்டது. நான் உர்வாவிடம் ஆயிஷா(ரலி) ஏன் முழுமையாக தொழுதனர் என்று கேட்டேன். அதற்கவர், 'உஸ்மான்(ரலி) விளங்கியது போல் அவரும் விளங்கிவிட்டார். (அதாவது மக்காவைச் சொந்த ஊராக இருவரும் கருதிவிட்டனர்) என்று விடையளித்தார். Book: 18 - **ஸஹீஹுல் புகாரி**

இவ்வாறு கஸ்ர் தொழுவது பயணத்தின்போதுதான் நடைமுறைப்படுத்த வேண்டும். பயணம் என்பது எந்த அளவு தூரம் என்பது பற்றி அறிஞர்கள் 80 கி.மீ (மூன்று பர்ஸக்) எனக் கூறியுள்ளனர். இது ரஸுலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ ஒரு தடவை பயணம் செய்தபோது சுருக்கித் தொழுததைக் குறித்து ஸஹாபாக்கள் அறிவிக்கும்போது, அந்த நேரத்தில் ரஸுலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ பயணம் செய்த தூரம் மூன்று பரஸக் ஆகும். இந்த அளவுதான் கஸ்ருக்கான பயண தூரம் என்று உறுதி செய்யப்பட்ட எந்த ஹதீதும் காணப்படவில்லை. எனவே வழக்கத்தில் மக்கள் பயணம் என்று எதனை கருதுகிறார்களோ, அந்தத் தூரம் கஸருக்கான தூரமாகக் கணக்கிடப்பட வேண்டும்.

முந்தைய காலத்தில் வாகன வசதியில்லாத நிலையில் குறைந்த தூரம் செல்வதே, உதாரணமாக 20-30 கி. மீ செல்வே ஒரு பயணமாகக் கருதப்படும். இன்றைய காலத்தில் அவ்வாறில்லை. எனவே மக்கள் வழக்கமாக எந்த அளவு தூரத்திற்குச் செல்வதை பயணம் எனக் கருதுவார்களோ, அந்தத் தூரத்தை எடுத்துக் கொள்ளலாம்.

இரண்டாகத்தான் தொழ வேண்டுமா அல்லது அது கட்டாயமில்லை என்பது பற்றி கருத்து வேறுபாடுகள் உள்ளன. எனினும் ரஸுலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسلَّمَ செய்திருக்கிறார்கள் என்பதால் அவ்வாறு தொழுவதுதான் சிறந்து என்பதில் மாற்று கருத்தில்லை.

கஸ்ரின் கால அளவு: இதற்குப் பயணத்தை இரண்டாகப் பிரிக்கலாம். ஒரு பயணத்தில் நாம் தொடர்ந்து இருக்கிற நிலையாகும். உதாரணத்திற்கு அக்காலதில் ஒரு ஊரிலிருந்து மற்றொரு ஊர் செல்ல மாதங்கள் ஆகும். இக்காலத்தில் கப்பலில் பயணம் செய்வதுதான் அதிக நாட்கள் ஆகும். அவ்வாறு செய்யும்போது நாடிய ஊரை அடையும் வரை கஸ்ர் செய்யலாம். அதுபோன்றுதான் மற்ற வாகனங்களில் மேற்கொள்ளும் பயணங்களும் செல்லும்வரை கஸ்ர் செய்யலாம்.

நாம் நாடிய ஊரை அடைந்தப் பிறகு, அந்த அந்நிய ஊரில் கஸ்ர் செய்ய அனுமதிக்கப்பட்ட நாட்களைக் கணிக்க, நாம் அங்கு தங்கியிருக்கும் நிலையை இரண்டாகப் பிரிக்கலாம். நாம் எத்தனை நாட்கள் தங்கப் போகிறீர்கள் என்ற முடிவு உறுதியாகத் தெரியாத நிலையில் நாம் அங்கிருக்கும்வரை கஸ்ர் செய்து கொள்ளலாம்.

இதற்காக ஆதாரம் முந்தைய புஹாரி 1090 அன்னை ஆயிஷா رَضِيَ اللهُ عَنْهَا அவர்களின் அறிவிப்பு. மற்றொரு அறிவிப்பு அனஸ் அவர்களின் அறிவிப்பாகும். அவர்களின் கூற்றின்படி மதினாவை விட்டுப் பயணத்தைத் தொடங்கி அங்கு திரும்பி வரும்வரை இரண்டிரண்டாகத் தொழுது வந்தோம்.

முஸ்லிம் 688

மூஸா இப்னு ஸலமாஹ் رَضِيَ اللهُ عَنْهُ அறிவிப்பதாவது,

عَنْ مُوسَى بْنِ سَلَمَةَ الْهُذَلِيِّ، قَالَ سَأَلْتُ ابْنَ عَبَّاسٍ كَيْفَ أُصَلِّي إِذَا كُنْتُ بِمَكَّةَ إِذَا لَمْ أُصَلِّ مَعَ الإِمَامِ . فَقَالَ رَكْعَتَيْنِ سُنَّةَ أَبِي الْقَاسِمِ صلى الله عليه وسلم

**1225.** மூசா பின் சலமா அல்ஹுதலீ (ரஹ்) அவர்கள் கூறியதாவது: நான் இப்னு அப்பாஸ் (ரலி) அவர்களிடம், "(வெளியூர்வாசியான) நான் மக்காவில் இருக்கும் போது இமாமுடன் தொழாமல் (தனித்துத் தொழுபவனாக) இருந்தால் எவ்வாறு தொழவேண்டும்?" என்று கேட்டேன். அதற்கு இப்னு அப்பாஸ் (ரலி) அவர்கள், "அபுல்காசிம் (முஹம்மத்-ஸல்) அவர்களின் வழிமுறைப்படி இரண்டு ரக்அத்களாக (தொழுது கொள்ளுங்கள்)" என்று பதிலளித்தார்கள். இந்த ஹதீஸ் இரு அறிவிப்பாளர்தொடர்களில் வந்துள்ளது. - மேற்கண்ட ஹதீஸ் மேலும் இரு அறிவிப்பாளர்தொடர்கள் வழியாகவும் வந்துள்ளது. Book: 6 - **ஸஹீஹ் முஸ்லிம்**

புஹாரி 4299

இக்ரிமா رَضِيَ اللهُ عَنْهُ அறிவிப்பதாவது

عَنْ عِكْرِمَةَ، عَنِ ابْنِ عَبَّاسٍ، قَالَ أَقَمْنَا مَعَ النَّبِيِّ صلى الله عليه وسلم فِي سَفَرٍ تِسْعَ عَشْرَةَ نَقْصُرُ الصَّلاَةَ. وَقَالَ ابْنُ عَبَّاسٍ وَنَحْنُ نَقْصُرُ مَا بَيْنَنَا وَبَيْنَ تِسْعَ عَشْرَةَ، فَإِذَا زِدْنَا أَتْمَمْنَا.

**4299.** இப்னு அப்பாஸ் (ரலி) அறிவித்தார். நாங்கள் ஒரு பயணத்தின்போது நபி(ஸல்) அவர்களுடன் தொழுகையைச் சுருக்கித் தொழுதவர்களாக பத்தொன்பது நாள்கள் தங்கினோம். (பொதுவாக) நாங்கள் (பயணம் மேற்கொண்டு தங்கினால்) பத்தொன்பது நாள்கள் வரை சுருக்கித் தொழு(தபடி தங்கு)வோம். அதற்கு மேலும் நாங்கள் தங்கும்போது (சுருக்கித் தொழாமல் வழக்கப்படி) முழுமையாகத் தொழுவோம். Book: 64 - **ஸஹீஹுல் புகாரி**

நாம் ஏற்கனவே பயணத்தில் எத்தனை நாட்கள் தங்கப் போகிறோம் என தீர்மானித்து விட்டால், நான்கு நாட்களுக்குக் குறைவாகத் தங்க நினைத்தால், நாம் மூன்று நாட்கள் கஸ்ர் செய்து கொள்ளலாம்.

முஸ்லிம்1352

அல் அலா رَضِيَ الله عَنْهُ இப்னு அல் ஹள்ரமீ அறிவிப்பதாவது,

الْعَلاَءَ بْنَ الْحَضْرَمِيِّ، يَقُولُ سَمِعْتُ رَسُولَ اللَّهِ صلى الله عليه وسلم يَقُولُ " لِلْمُهَاجِرِ إِقَامَةُ ثَلاَثٍ بَعْدَ الصَّدَرِ بِمَكَّةَ " . كَأَنَّهُ يَقُولُ لاَ يَزِيدُ عَلَيْهَا .

**2628.** அப்துர் ரஹ்மான் பின் ஹுமைத் (ரஹ்) அவர்கள் கூறியதாவது: சாயிப் பின் யஸீத் (ரலி) அவர்களிடம் (கலீஃபா) உமர் பின் அப்தில் அஸீஸ் (ரஹ்) அவர்கள், (முஹாஜிர் ஹஜ் கிரியைகளை நிறைவேற்றிவிட்டு, மினாவிலிருந்து திரும்பிய பிறகு) மக்காவில் தங்குவது பற்றி (ஹதீஸ்) எதையேனும் செவியுற்றுள்ளீர்களா?" என்று கேட்டார்கள். அதற்கு சாயிப் (ரலி) அவர்கள், "முஹாஜிர் (மினாவிலிருந்து) திரும்பிய பிறகு மூன்று இரவுகள் மக்காவில் தங்க அனுமதி உண்டு" என அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள் என்று அலாஉ பின் அல்ஹள்ரமீ (ரலி) அவர்கள் சொல்ல நான் கேட்டுள்ளேன்" என்றார்கள். "அதைவிட அதிகமாக்கக் கூடாது" என்று சொன்னதைப் போன்று இருந்தது. Book: 15 - **ஸஹீஹ் முஸ்லிம்**

இதனை வைத்துக் கொண்டு இமாம்களான மாலிக் رَضِيَ الله عَنْهُ மற்றும் ஷா.ஃபிஇ رَضِيَ الله عَنْهُ ஆகியோர், மூன்று நாட்கள் என்பது பயணம் என்று அடங்கும் என்று கருத்துக் கொள்கிறார்கள். எனவே நாம் ஏற்கனவே பயண அளவை தீர்மானித்துவிட்டால், மூன்று நாட்கள் வரை கஸ்ர் செய்யலாம். நான்கு நாட்கள் அல்லது அதற்கு அதிகமாக தங்குவதாகத் தீர்மானித்தால் கஸ்ர் செய்யக் கூடாது. அவ்வாறு தீர்மானிக்கவில்லை என்றால், சென்ற காரியம் எப்போது முடியும் என்ற அறியாத நிலையில் நாம் அவ்வூரில் இருக்கும்வரை கஸ்ர் செய்யலாம்.

ஜம்ஆ செய்வது பற்றி நாம் முன்னர் கூறப்பட்டது போல், இரண்டு தொழுகைகளைச் சேர்த்துத் தொழுவது. இதற்கும் கஸ்ர் தொழுகைக்கும் உள்ள வித்தியாசம், கஸ்ர் தொழுகையானது பயணத்தின்போது மட்டும் அனுமதிக்கப்பட்டதாகும். ஆனால் ஜம்ஆ செய்வதை பயணத்திலும், சில சமயங்களில் ஊரில் இருக்கும் நேரத்திலும் அனுமதிக்கப்பட்டது.

இது அர.ஃபா மற்றும் முஜ்லிபா ஆகிய இடங்களில் மட்டுமே முறையே லுஹரையும் அஸரையும், மற்றும் மக்ரிபையும் இஷாவையும் ஜம்ஆகாத் தொழ அனுமதிக்கப்பட்ட ஒன்றுதான் என சிலர் கூறுவர். இது சரியான கருத்து அல்ல. மாறாக அவர்கள மதினாவில் இருக்கும் சமயத்திலும் ரஸூலுல்லாஹ் صَلَّى الله عَلَيْهِ وَسَلَّمَ இவ்வாறு ஜம்ஆ செய்து தொழுதுள்ளார்கள். எனவே இது ஹாஜிகளுக்கும் மட்டும் அனுமதிக்கப்பட்ட ஒன்று அல்ல.

முஸ்லிம் 705

இப்னு அப்பாஸ் رَضِيَ الله عَنْهُ அறிவிப்பதாவது,

عَنِ ابْنِ عَبَّاسٍ، قَالَ صَلَّى رَسُولُ اللَّهِ صلى الله عليه وسلم الظُّهْرَ وَالْعَصْرَ جَمِيعًا وَالْمَغْرِبَ وَالْعِشَاءَ جَمِيعًا فِي غَيْرِ خَوْفٍ وَلاَ سَفَرٍ .

**1267.** இப்னு அப்பாஸ் (ரலி) அவர்கள் கூறியதாவது: அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் லுஹரையும் அஸ்ரையும் சேர்த்து ஒரே நேரத்தில் தொழுதார்கள்; மஃக்ரிபையும் இஷாவையும் ஒரே நேரத்தில் தொழுதார்கள்; அப்போது (போர் அபாயம் மிகுந்த) அச்ச நிலையிலோ பயணத்திலோ அவர்கள் இருக்கவில்லை. Book: 6 - **ஸஹீஹ் முஸ்லிம்**

சில அறிவிப்புகளில் பயணம் என்பதற்குப் பதிலாக மழை என்று கூறப்பட்டுள்ளது.

எனவே அவர்கள் மதினாவில் இருக்கும்போதே தொழுதார்கள். மேலும் இதில் அச்சம், மற்றும் மழை எனக் கூறப்பட்டுள்ளதால், போர் போன்ற அச்ச நேரத்திலும், கடுமையான மழை பெய்யும் என்ற நிலையிலும் நாம் ஜம்ஆ செய்து தொழலாம் எனக் எடுத்துக் கொள்ளப்படுகிறது.

பயணிக்கவில்லை என்று சொல்லப்பட்டுள்ளதால், பயணம் இல்லாத நேரத்திலும் ஜம்ஆ செய்யலாம். இந்த மூன்றும் இல்லாத நேரத்திலும் ரஸுலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ அவர்கள் ஜம்ஆ செய்திருக்கிறார்கள்.

எதற்காக இவ்வாறு ரஸுலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ செய்திருக்கிறார்கள் என இப்னு அப்பாஸ் رَضِيَ اللهُ عَنْهُ அவர்களிடம் கேட்கப்பட்டபோது, அவர் கூறினார்,

مَا حَمَلَهُ عَلَى ذَلِكَ قَالَ أَرَادَ أَنْ لاَ يُحْرِجَ أُمَّتَهُ .

தங்கள் உம்மத்தினருக்கு கடினம் இருக்கக் கூடாது என அவர்கள் விரும்பினார்கள்.

இக்கட்டான சூழ்நிலைகளில் நோயாளிகள், தவிர்க்க முடியாத சில சமயங்களில் எப்போதாவது இரண்டு நேரத் தொழுகை (உதாரணமாக நீண்ட நேர அறுவை சிகிட்சையை ஆரம்பிக்கும் நிலையில்) தொழலாம்.

ஜும்ஆ தொழுகையையும், அஸரையும் சேர்த்து ஜம்அ செய்யக் கூடாது. ஏனெனில் பயணி மீது ஜும்ஆ கடமையில்லை.

**Fiqh 29 - Laws of Jum'a Prayer**

# ஃபிக்ஹ் வகுப்பு 29 - ஜும்மா தொழுகை சட்டங்கள்

**ஆசிரியர்: அஷ் ஷெய்க் உவைஸ் உமரி நளீரி**

## ஜும்ஆ நாளின் சிறப்புகள்

திர்மதி 488

அபு ஹுரைராஹ் رَضِـي الله عَنْهُ அறிவிப்பதாவது,

عَنْ أَبِي هُرَيْرَةَ، أَنَّ النَّبِيَّ صلى الله عليه وسلم قَالَ " خَيْرُ يَوْمٍ طَلَعَتْ فِيهِ الشَّمْسُ يَوْمُ الْجُمُعَةِ فِيهِ خُلِقَ آدَمُ وَفِيهِ أُدْخِلَ الْجَنَّةَ وَفِيهِ أُخْرِجَ مِنْهَا وَلاَ تَقُومُ السَّاعَةُ إِلاَّ فِي يَوْمِ الْجُمُعَةِ "

ரஸுலுல்லாஹ் صَلَّى اللّٰه عَلَيْهِ وَسَلَّمَ கூறியுள்ளார்கள், "சூரியன் உதிக்கும் நாளில் மிகச் சிறந்த நாள் வெள்ளிக்கிழமை ஆகும். அந்த நாளில் தான் ஆதம் படைக்கப்பட்டார்கள். அந்த நாளில்தான் அவர்கள் சுவனத்தில் நுழைந்தார்கள். அந்த நாளில்தான் அதிலிருந்து அவர்கள் வெளியேற்றப்பட்டார்கள். அந்த நாளில் அல்லாமல் முடிவு நாள் ஏற்படுத்தப்பட மாட்டாது."

முஸ்லிம் 233

அபு ஹுரைராஹ் رَضِـي الله عَنْهُ அறிவிப்பதாவது,

عَنْ مُحَمَّدٍ، عَنْ أَبِي هُرَيْرَةَ، عَنِ النَّبِيِّ صلى الله عليه وسلم قَالَ " الصَّلَوَاتُ الْخَمْسُ وَالْجُمُعَةُ إِلَى الْجُمُعَةِ كَفَّارَاتٌ لِمَا بَيْنَهُنَّ " .

**394.** அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: ஐவேளைத் தொழுகைகள், ஒரு ஜுமுஆவிலிருந்து மறு ஜுமுஆ ஆகியன அவற்றுக்கிடையே ஏற்படும் பாவங்களுக்குப் பரிகாரங்களாகும். பெரும்பாவங்களில் சிக்காதவரை. இதை அபூஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள். இந்த ஹதீஸ் மூன்று அறிவிப்பாளர்தொடர்களில் வந்துள்ளது. Book: 2 - **ஸஹீஹ் முஸ்லிம்**

## ஜும்ஆவின் சட்டங்கள்

பருவ வயதை அடைந்த ஆரோக்கியமான, பயணத்தில் இல்லாத ஒவ்வொரு ஆணின் மீதும் கட்டாயக் கடமையாகும்.

அபு தாவூத் 1067

தாரிக் இப்னு ஷிஹாப் رَضِـي الله عَنْهُ அறிவிப்பதாவது,

عَنْ طَارِقِ بْنِ شِهَابٍ، عَنِ النَّبِيِّ صلى الله عليه وسلم قَالَ " الْجُمُعَةُ حَقٌّ وَاجِبٌ عَلَى كُلِّ مُسْلِمٍ فِي جَمَاعَةٍ إِلاَّ أَرْبَعَةً عَبْدٌ مَمْلُوكٌ أَوِ امْرَأَةٌ أَوْ صَبِيٌّ أَوْ مَرِيضٌ "

ரஸுலுல்லாஹ் صَلَّى اللّٰه عَلَيْهِ وَسَلَّمَ கூறியுள்ளார்கள், "அடிமை, பெண், சிறுவன் மற்றும் நோயாளி ஆகிய நான்கு பேர்களைத் தவிர ஜும்ஆ எல்லா முஸ்லிம்களின் மீதும் கடமையாகும்."

ஸூரத்துல் ஜுமுஆ (வெள்ளிக் கிழமை)

62:9 يٰۤاَيُّهَا الَّذِيْنَ اٰمَنُوْۤا اِذَا نُوْدِىَ لِلصَّلٰوةِ مِنْ يَّوْمِ الْجُمُعَةِ فَاسْعَوْا اِلٰى ذِكْرِ اللّٰهِ وَذَرُوا الْبَيْعَ ؕ ذٰ لِكُمْ خَيْرٌ لَّـكُمْ اِنْ كُنْتُمْ تَعْلَمُوْنَ

**62:9.** ஈமான் கொண்டவர்களே! ஜுமுஆ உடைய நாளில் தொழுகைக்காக நீங்கள் அழைக்கப்பட்டால், வியாபாரத்தை விட்டுவிட்டு, அல்லாஹ்வைத் தியானிக்க (பள்ளிக்கு) விரைந்து செல்லுங்கள் - நீங்கள் அறிபவர்களாக இருப்பின் இதுவே உங்களுக்கு மிக மேலான நன்மையுடையதாகும்.

அபு தாவூத் 1052

அல் ஜ.்துல் ழம்ரி رَضِي الله عَنْهُ அறிவிப்பதாவது,

عَنْ أَبِي الْجَعْدِ الضَّمْرِيِّ، - وَكَانَتْ لَهُ صُحْبَةٌ - أَنَّ رَسُولَ اللَّهِ صلى الله عليه وسلم قَالَ " مَنْ تَرَكَ ثَلاَثَ جُمَعٍ تَهَاوُنًا بِهَا طَبَعَ اللَّهُ عَلَى قَلْبِهِ " .

ரஸூலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ கூறியுள்ளார்கள், "யார் ஜும்ஆத் தொழுகையை பொடுபோக்காக (தொடர்ந்து) மூன்று தடவை விட்டுவிடுகிறார்களோ, அவரது இதயத்தில் அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَى முத்திரையிட்டு விடுவான்."

## ஜும்ஆ தொழுகைக்கான மக்களின் எண்ணிக்கை

குறிப்பிட்ட இத்தனை நபர்கள் இருந்தால்தான் ஜும்ஆ நிறைவேற்ற வேண்டும் என்ற வரையறை ஏதும் குறிப்பிடப்படவில்லை. எனவே குறைந்தபட்ச நபர்களான இரண்டு பேர் இருந்தால் ஜமாஅத்தாகத் தொழலாம் என்ற நிலையில் இரண்டு நபர்கள் இருந்தாலும், ஜும்ஆவை நாம் நடத்தலாம். அவர்கள் பள்ளிவாசலிலும் அதனை நடத்தலாம். அது அல்லாமல் தொழ அனுமதிக்கப்பட்ட எந்த இடத்திலும் இரண்டு நபர்கள் சேர்ந்து ஜும்ஆ தொழலாம்.

## ஜும்ஆத் தொழுகையின் நேரம்

இது லுஹர் தொழுகையின் நேரமாகும். அதாவது சூரியன் உச்சியை விட்டுச் சாயத் தொடங்கியபிறகு, ஒரு பொருளின் நிழலின் நீளம் அதன் அளவை அடையும் வரை அதன் நேரமாகும். எனினும் சூரியன் சாயந்தவுடனே தொழ வேண்டும். முற்படுத்தித் தொழுமாறு ரஸூலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ அறிவித்த ஹதீதுகளில் உள்ள சொற்களைக் கொண்டு சில அறிஞர்கள் சூரியன் நடு உச்சிக்கு வரும் முன்பே கூட தொழலாம் என்ற கருத்தைக் கூறுகிறார்கள். எனினும் நாம் லுஹர் நேரத்தில் ஆரம்பப்பகுதியில் தொழுவது சிறப்பாகும்.

## ஜும்ஆ நிபந்தனைகள்

ஜும்ஆவை உரிய நேரத்தில் அதற்குரிய (குத்பா) பிரசங்கத்தைப் பேசி இரண்டு ரகஅத்துக்கள் தொழுதால், ஜும்ஆ நிறைவேறிவிடும். எனவே இதில் உரிய நேரம், குத்பா, இரண்டு ரகஅத்துக்கள் என்ற மூன்று நிபந்தனைகள் உள்ளன.

லுஹர் நேர நான்கு ரகஅத்துக்களுக்குப் பதிலாக, குத்பாவும், இரண்டு ரகஅத்துக்களும் தொழ வேண்டும்.

## ஜும்ஆ குத்பா

இது இரண்டு ரகஅத்துக்களுக்கு இணையாகும். இதனை நிகழ்த்தாமல், இரண்டு ரகஅத்துக்கள் மட்டும் ஜும்ஆகத் தொழுதால், தொழுகை ஏற்றுக் கொள்ளப்படாது. ஜும்ஆ கூடாது.

இரண்டு குத்பாக்கள் இதில் அடங்கும். நின்று குத்பாவை ஓத வேண்டும். இரண்டு குத்பாக்களுக்கு இடையில் சிறிது அமர்ந்து கொள்ள வேண்டும். முதல் குத்பாவை விட இரண்டாவது குத்பா சிறியதாக இருக்க வேண்டும்.

குத்பாவில் அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَى வைப் புகழ வேண்டும். ரஸூலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ அவர்கள் ஓதிய குத்பத்துல் ஹாஜாஹ்வை ஓத வேண்டும்.

## குத்பத்துல் ஹாஜாஹ்

إِنَّ الْحَمْدَ لِلَّهِ نَحْمَدُهُ وَنَسْتَعِيْنُهُ وَنَسْتَغْفِرُهُ وَنَعُوذُ بِاللهِ مِنْ شُرُوْرِ أَنْفُسِنَا وَمِنْ سَيِّئَاتِ أَعْمَالِنَا، مَنْ يَهْدِهِ اللهُ فَلاَ مُضِلَّ لَهُ وَمَنْ يُضْلِلْهُ فَلاَ هَادِيَ لَهُ.
وَأَشْهَدُ أَنْ لاَ إِلَهَ إِلاَّ اللهُ وَحْدَهُ لاَ شَرِيْكَ لَهُ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُوْلُهُ.

நிச்சயமாக எல்லாப் புகழும் அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَى வுக்கே! நாம் அவனையே புகழுகிறோம். அவனிடமே உதவி தேடுகிறோம். அவனிடமே பாவ மன்னிப்பு கோறுகிறோம். நமது நப்ஸின் தீங்குகளிலிருந்தும், நமது தீய செய்களிலிருந்தும் அவனிடமே பாதுகாப்பு தேடுகிறோம். அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَى யாருக்கு நேர்வழி காட்டுகிறானோ, அவரை யாரும் வழி கெடுக்க முடியாது. யாரை அவன் வழி கெடுக்கிறானோ, அவரை யாரும் நேர்வழிப் படுத்த முடியாது. அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَى வைத் தவிர வழிபட யாருமில்லை என நான் சாட்சியம் அளிக்கிறேன். அவன் தனித்தவன். அவனுக்கு யாதொரு இணையும் இல்லை. முஹம்மது صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ அவனது அடியாரும், திருத்துாதராகவும் இருக்கிறார்கள் எனவும் நான் சாட்சியம் அளிக்கிறேன்.

### ஸூரத்துல்ஆல இம்ரான் (இம்ரானின் சந்ததிகள்)

3:102 يٰۤاَيُّهَا الَّذِيْنَ اٰمَنُوا اتَّقُوا اللّٰهَ حَقَّ تُقٰتِهٖ وَلَا تَمُوْتُنَّ اِلَّا وَاَنْتُمْ مُّسْلِمُوْنَ

**3:102.** நம்பிக்கை கொண்டோரே! நீங்கள் அல்லாஹ்வை அஞ்ச வேண்டிய முறைப்படி அஞ்சுங்கள்; மேலும், (அல்லாஹ்வுக்கு முற்றிலும் வழிப்பட்ட) முஸ்லிம்களாக அன்றி நீங்கள் மரணிக்காதீர்கள்.

### ஸூரத்துன்னிஸாவு (பெண்கள்)

4:1 يٰۤاَيُّهَا النَّاسُ اتَّقُوْا رَبَّكُمُ الَّذِىْ خَلَقَكُمْ مِّنْ نَّفْسٍ وَّاحِدَةٍ وَّخَلَقَ مِنْهَا زَوْجَهَا وَبَثَّ مِنْهُمَا رِجَالًا كَثِيْرًا وَّنِسَآءً ‌ۚ وَاتَّقُوا اللّٰهَ الَّذِىْ تَسَآءَلُوْنَ بِهٖ وَالْاَرْحَامَ ‌ؕ اِنَّ اللّٰهَ كَانَ عَلَيْكُمْ رَقِيْبًا

**4:1.** மனிதர்களே! உங்கள் இறைவனுக்குப் பயந்து நடந்து கொள்ளுங்கள், அவன் உங்கள் யாவரையும் ஒரே ஆத்மாவிலிருந்து படைத்தான், அவரிலிருந்தே அவர் மனைவியையும் படைத்தான்; பின்னர் இவ்விருவரிலிருந்து, அநேக ஆண்களையும் பெண்களையும் (வெளிப்படுத்தி உலகில்) பரவச் செய்தான்; ஆகவே, அல்லாஹ்வுக்கே பயந்து கொள்ளுங்கள்; அவனைக்கொண்டே நீங்கள் ஒருவருக்கொருவர் (தமக்குரிய உரிமைகளைக்) கேட்டுக் கொள்கிறீர்கள்; மேலும் (உங்கள்) இரத்தக் கலப்புடைய உறவினர்களையும் (ஆதரியுங்கள்) - நிச்சயமாக அல்லாஹ் உங்கள் மீது கண்காணிப்பவனாகவே இருக்கின்றான்.

### ஸூரத்துல் அஹ்ஜாப் (சதிகார அணியினர்)

33:70 يٰۤاَيُّهَا الَّذِيْنَ اٰمَنُوا اتَّقُوا اللّٰهَ وَقُوْلُوْا قَوْلًا سَدِيْدًا ۙ

33:71 يُّصْلِحْ لَـكُمْ اَعْمَالَـكُمْ وَيَغْفِرْ لَـكُمْ ذُنُوْبَكُمْ‌ ؕ وَمَنْ يُّطِعِ اللّٰهَ وَرَسُوْلَهٗ فَقَدْ فَازَ فَوْزًا عَظِيْمًا

**33:70.** ஈமான் கொண்டவர்களே! நீங்கள் அல்லாஹ்வுக்கு அஞ்சுங்கள்; (எந்நிலையிலும்) நேர்மையான சொல்லையே சொல்லுங்கள்.

**33:71.** (அவ்வாறு செய்வீர்களாயின்) அவன் உங்களுடைய காரியங்களை உங்களுக்குச் சீராக்கி வைப்பான்; உங்கள் பாவங்களை உங்களுக்கு மன்னிப்பான்; அன்றியும் அல்லாஹ்வுக்கும் அவன் தூதருக்கும் எவர் வழிப்படுகிறாரோ, அவர் மகத்தான வெற்றி கொண்டு விட்டார்.

أَمَّا بَعْد

பிற பின்னர்:

إِنَّ أَصْدَقَ الْحَدِيثِ كِتَابُ اللَّهِ وَأَحْسَنَ الْهَدْيِ هَدْىُ مُحَمَّدٍ وَشَرَّ الأُمُورِ مُحْدَثَاتُهَا وَكُلَّ مُحْدَثَةٍ بِدْعَةٌ وَكُلَّ بِدْعَةٍ ضَلاَلَةٌ وَكُلَّ ضَلاَلَةٍ فِي النَّارِ

நிச்சயமாக அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَى வின் வேதம்தான் உண்மையான செய்தியாகும். சிறப்பான செய்தி முஹம்மது صَلَّى اللَّهُ عَلَيْهِ وَسَلَّمَ அவர்களின் ஹதீது தான். காரியங்களில் கெட்டது புதினமாகும். ஒவ்வொரு புதினமும் பித்அத் ஆகும். ஒவ்வொரு பித்அத்தும் வழி கேடாகும். ஒவ்வொரு வழிகேடும் நரக நெருப்பில் (சேர்க்கும்.)

இந்தக் குத்பாதான் குத்பத்துல் ஹாஜாஹ் ஆகும். இதைத்தான் ரஸுலுல்லாஹ் صَلَّى اللَّهُ عَلَيْهِ وَسَلَّمَ ஜும்ஆவிலும், முக்கியமான சபைகளிலும், திருமணங்களிலும் ஓதுவார்கள். ரஸுலுல்லாஹ் صَلَّى اللَّهُ عَلَيْهِ وَسَلَّمَ அவர்கள் பயன்படுத்தாத பயன்படுத்தாத சிலவற்றையும் சேர்த்துச் சொல்வது கூடாது. உதாரணமாக, وَنَسْتَعِيْنُهُ وَنَسْتَغْفِرُهُ என்பதற்குப் பிறகு *வ நு.மினு பிஹி, வநத் தவக்கலு அலைஹி* என்று சேர்ப்பது தவறான சொற்களாக இல்லாமல் இருந்தாலும், அது குத்பத்துல் ஹாஜாஹ் ஆக ஆகாது.

பின்னர் மக்களுக்கு பயபக்தியைக் (இறையச்சத்தைக்) குறிந்து, மார்க்க விஷயங்கள் குறித்து கூறவேண்டும்.

குத்பாவை மின்பரில் (உயரமான இடத்தில்) நின்று கூறுவது ஸுன்னாஹ் ஆகும். இரண்டு குத்பாவுக்கு இடையில் சிறிது நேரம் அமர வேண்டும். குத்பா சுருக்கமாக இருக்கவேண்டும். புத்திசாலிக்கு அடையாளம் குத்பாவைச் சுருக்குவதும், தொழுகையை நீட்டுவதும் என ரஸுலுல்லாஹ் صَلَّى اللَّهُ عَلَيْهِ وَسَلَّمَ கூறியுள்ளார்கள். ஆனால் இப்போது நடைமுறை மாறிவுள்ளது. மார்க்க விஷயங்களை மக்களுக்குக் கூற குத்பா மட்டும்தான் வழி என்பதால், அதனை நீட்டிக்கும் நிர்ப்பந்தம் உள்ளது. ரஸுலுல்லாஹ் صَلَّى اللَّهُ عَلَيْهِ وَسَلَّمَ அவர்களின் காலத்தில், மற்ற நேரங்களில் நடத்தப்படும் இஸ்லாமிய கல்வியை நினைவூட்டும் நேரமாக குத்பா சுருக்கமாக இருக்கும்.

## ஜும்ஆத் தொழுகை

இந்தத் தொழுயையில் சப்தமாகக் கிராஅத் ஓதவேண்டும். ஸுன்னாஹ் முறையில் ஓதப்படும் அத்தியாயங்கள்.

அபு தாவூத் 1125

عَنْ سَمُرَةَ بْنِ جُنْدُبٍ، أَنَّ رَسُولَ اللَّهِ صلى الله عليه وسلم كَانَ يَقْرَأُ فِي صَلاَةِ الْجُمُعَةِ { سَبِّحِ اسْمَ رَبِّكَ الأَعْلَى } وَ { هَلْ أَتَاكَ حَدِيثُ الْغَاشِيَةِ }

ரஸுலுல்லாஹ் صَلَّى اللَّهُ عَلَيْهِ وَسَلَّمَ வெள்ளிக் கிழமைகளில் ஸப்பிஹிஸ்ம ரப்பிக்கல் அ.லா மற்றும் ஹல் அதாக்க ஹதீதுல் .காஷியா அத்தியாங்களை ஓதுவார்கள்.

அபு தாவூத் 1075

فِي صَلاَةِ الْجُمُعَةِ بِسُورَةِ الْجُمُعَةِ وَ إِذَا جَاءَكَ الْمُنَافِقُونَ

வெள்ளிக் கிழமை தொழுகைகளில் அத்தியாயம் ஜும்மா மற்று இதா ஜாஅல் முனா.:.பிகூன் ஆகியவற்றை ஓதுவார்கள். மற்ற அத்தியாயங்களையும் ஓதலாம்.

ஜும்ஆத் தொழுகைக்குத் தாமதமாக இணைபவருக்கு இமாமோடு, ஒரு ரகஅத் முழுமையாகக் கிடைத்தால், அவருக்கு ஜும்ஆ முழுமையாகக் கிடைத்துவிடும். அவர் குத்பாவைக் கேட்காமல் இருந்தும் அத்தொழுகை முழுமையாகக் கிடைக்கும்.

புஹாரி 580

அபு ஹுரைராஹ் رَضِي الله عَنْهُ அறிவிப்பதாவது,

عَنْ أَبِي هُرَيْرَةَ، أَنَّ رَسُولَ اللَّهِ صلى الله عليه وسلم قَالَ " مَنْ أَدْرَكَ رَكْعَةً مِنَ الصَّلاَةِ فَقَدْ أَدْرَكَ الصَّلاَةَ ".

**580.** இறைத்தூதர்(ஸல்) அவர்கள் கூறினார்கள்: 'தொழுகையில் ஒரு ரக்அத்தை (அதற்குரிய நேரத்தில்) அடைந்து கொள்பவர் அந்தத் தொழுகையை அடைந்து கொள்கிறார்.' என அபூ ஹுரைரா(ரலி) அறிவித்தார். Book: 9 - **ஸஹீஹுல் புகாரி**

இது ஈதுத் தொழுகைகளுக்கும் பொருந்தும். இவ்வாறு ஒரு ரகஅத் கிடைக்காமல், அத்தயஹிய்யாத்தில்தான் ஒருவர் சேர்ந்தாரானால், அவருக்கு ஜும்ஆ கிடைக்காது. அவர் நான்கு ரகஅத்துக்கள் லுஹர் தொழ வேண்டும்.

**ஜும்ஆ அன்று வலியுறுத்தப்பட்டவை**

1. குளிப்பது: இது கடமை என இந்த ஹதீதின்படிக் கூறப்படுகிறது.

முஸ்லிம் 846

அபு ஸயீத் அல் குத்ரிய்யு رَضِي الله عَنْهُ அறிவிப்பதாவது,

عَنْ أَبِي سَعِيدٍ الْخُدْرِيِّ، أَنَّ رَسُولَ اللَّهِ صلى الله عليه وسلم قَالَ " الْغُسْلُ يَوْمَ الْجُمُعَةِ وَاجِبٌ عَلَى كُلِّ مُحْتَلِمٍ " .

**1535.** அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர் கள் கூறினார்கள்: வெள்ளிக்கிழமை குளிப்பது பருவமடைந்த ஒவ்வொருவர் மீதும் கடமையாகும். இதை அபூசயீத் அல்குத்ரீ (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள். Book: 7 - **ஸஹீஹ் முஸ்லிம்**

சிலர் இது வலியுறுத்தப்பட்டது எனக் கூறுகிறார்கள்.

2. சுத்தமான நல்லாடை உடுத்தி நறுமணம் பூசிச் செல்ல வேண்டும்.
3. சீக்கிரமாகப் பள்ளிக்குச் செல்ல வேண்டும்.

முஸ்லிம் 850

அபு ஹுரைராஹ் رَضِي الله عَنْهُ அறிவிப்பதாவது,

عَنْ أَبِي هُرَيْرَةَ، أَنَّ رَسُولَ اللَّهِ صلى الله عليه وسلم قَالَ " مَنِ اغْتَسَلَ يَوْمَ الْجُمُعَةِ غُسْلَ الْجَنَابَةِ ثُمَّ رَاحَ فَكَأَنَّمَا قَرَّبَ بَدَنَةً وَمَنْ رَاحَ فِي السَّاعَةِ الثَّانِيَةِ فَكَأَنَّمَا قَرَّبَ بَقَرَةً وَمَنْ رَاحَ فِي السَّاعَةِ الثَّالِثَةِ فَكَأَنَّمَا قَرَّبَ كَبْشًا أَقْرَنَ وَمَنْ رَاحَ فِي السَّاعَةِ الرَّابِعَةِ فَكَأَنَّمَا قَرَّبَ دَجَاجَةً وَمَنْ رَاحَ فِي السَّاعَةِ الْخَامِسَةِ فَكَأَنَّمَا قَرَّبَ بَيْضَةً فَإِذَا خَرَجَ الإِمَامُ حَضَرَتِ الْمَلاَئِكَةُ يَسْتَمِعُونَ الذِّكْرَ " .

**1540.** அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: பெருந்துடக்கிற்காகக் குளிப்பதைப் போன்று வெள்ளியன்று குளித்துவிட்டு (நேரத்தோடு) பள்ளிவாசலுக்கு(ச்) செல்பவர், ஓர் ஒட்டகத்தைக் குர்பானி கொடுத்தவர் போன்றவர் ஆவார். (அதற்கடுத்த) இரண்டாம் நேரத்தில்

செல்பவர் ஒரு மாட்டைக் குர்பானி கொடுத்தவர் போன்றவர் ஆவார். மூன்றாம் நேரத்தில் செல்பவர் கொம்புள்ள ஆட்டைக் குர்பானி கொடுத்தவர் போன்றவர் ஆவார். நான்காம் நேரத்தில் செல்பவர் ஒரு கோழியைக் குர்பானி செய்தவர் போன்றவர் ஆவார். ஐந்தாம் நேரத்தில் செல்பவர் முட்டையைக் தர்மம் செய்தவர் போன்றவர் ஆவார். இமாம் (தமது அறையிலிருந்து) வெளியேறி (பள்ளிவாசலுக்குள் வந்து)விட்டால், (பெயர்களைப் பதிவு செய்யும்) வானவர்களும் இமாமின் சொற்பொழிவைச் செவியுற (உள்ளே) வந்துவிடுகின்றனர். இதை அபூஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள். Book: 7 - **ஸஹீஹ் முஸ்லிம்**

அபு தாவூத் 345

அவ்ஸ் இப்னு அவ்ஸ் தக்க.்.பி رَضِي الله عَنْهُ அறிவிப்பதாவது,

حَدَّثَنِي أَوْسُ بْنُ أَوْسٍ الثَّقَفِيُّ، سَمِعْتُ رَسُولَ اللَّهِ صلى الله عليه وسلم يَقُولُ " مَنْ غَسَّلَ يَوْمَ الْجُمُعَةِ وَاغْتَسَلَ ثُمَّ بَكَّرَ وَابْتَكَرَ وَمَشَى وَلَمْ يَرْكَبْ وَدَنَا مِنَ الإِمَامِ فَاسْتَمَعَ وَلَمْ يَلْغُ كَانَ لَهُ بِكُلِّ خُطْوَةٍ عَمَلُ سَنَةٍ أَجْرُ صِيَامِهَا وَقِيَامِهَا " .

ரஸூலுல்லாஹ் صَلَّى الله عَلَيْهِ وَسَلَّمَ கூறியுள்ளார்கள், "யார் வெள்ளி அன்று தமது மனைவியைக் குளிப்பாட்டித் தாமும் குளித்து, சீக்கிரமாகச் சென்று, குத்பா ஆரம்பத்திலுருந்து கேட்க வாகனத்தில் செல்லாமல் நடந்து சென்று, இமாமுக்கு அருகிலுள்ள இடத்தில் அமர்ந்து, குத்பாவைக் கவனமாகக் கேட்டு, எவ்வித வேண்டாத பேச்சையும் பேசாமல் இருந்தால், அவர் ஒரு வருட நோன்பிருந்த நன்மையையும், இரவில் தொழுத நன்மையையும் ஒவ்வொரு காலடிக்கும் பெறுவார்."

4. ஜும்ஆத் தொழுகைக்கு முன்னால் இரண்டிரண்டு ரகஅத்துகளாக முடிந்த அளவு தொழ வேண்டும். தஹிய்யதுல் மஸ்ஜித் இரண்டு ரகஅத்துகளாவது தொழ வேண்டும்.

5. அத்தியாயம் கஹ.்.ப் வெள்ளியன்று ஓதினால் அடுத்த ஜும்ஆ வரை ஒளியாக்குவான். (ஹாக்கிம் 2/399)

6. ஜும்ஆ அன்று ரஸூலுல்லாஹ் صَلَّى الله عَلَيْهِ وَسَلَّمَ அவர்களின் மீது அதிகமதிகம் ஸலவாத்து ஓத வேண்டும்.

அபு தாவூத் 1531

அவ்ஸ் இப்னு அவ்ஸ் தக்க.்.பி رَضِي الله عَنْهُ அறிவிப்பதாவது,

عَنْ أَوْسِ بْنِ أَوْسٍ، قَالَ قَالَ النَّبِيُّ صلى الله عليه وسلم " إِنَّ مِنْ أَفْضَلِ أَيَّامِكُمْ يَوْمَ الْجُمُعَةِ فَأَكْثِرُوا عَلَىَّ مِنَ الصَّلاَةِ فِيهِ فَإِنَّ صَلاَتَكُمْ مَعْرُوضَةٌ عَلَىَّ " . قَالَ فَقَالُوا يَا رَسُولَ اللَّهِ وَكَيْفَ تُعْرَضُ صَلاَتُنَا عَلَيْكَ وَقَدْ أَرِمْتَ قَالَ يَقُولُونَ بَلِيتَ . قَالَ " إِنَّ اللَّهَ تَبَارَكَ وَتَعَالَى حَرَّمَ عَلَى الأَرْضِ أَجْسَادَ الأَنْبِيَاءِ صَلَّى اللَّهُ عَلَيْهِمْ "

ரஸூலுல்லாஹ் صَلَّى الله عَلَيْهِ وَسَلَّمَ கூறியுள்ளார்கள், "உங்களின் சிறந்த நாட்களில் வெள்ளிக்கிழமையும் ஒன்றாகும். எனவே வெள்ளியன்று என் மீது அதிகம் ஸலவாத்துச் சொல்லுங்கள். உங்களின் ஸலவாத்துக்கள் என்னிடம் சமர்ப்பிக்கப்படுகின்றன." (நபித்தோழர்களான) அவர்கள் வினவினார்கள், "தங்கள் மரணித்த பிறகு எப்படி சமர்மிக்கப்படும்?" அவர்கள் பதிலளித்தார்கள், "நபிமார்களின் உடலைத் தின்பதை அல்லாஹ் பூமிக்கு ஹராமாக்கி இருக்கிறான்."

7. ஜும்ஆவில் ஒரு குறிப்பிட்ட நேரம் துஆ ஏற்றுக் கொள்ளப்படும் நேரமாகும். அது இரண்டு குத்பாவுக்கு இடையில் இமாம் அமர்ந்திருக்கும் நேரம் எனவும், அஸருக்குப் பிறகு மக்ரிப் வரை எனவும கருத்துக்கள் உள்ளன. பின்னர் குறிப்பிடப்பட்ட கருத்து சரியானதாகும்.

ரியாதுஸ் ஸாலிஹீன் 1156

அபு ஹுரைராஹ் رَضِـي الله عَنْهُ அறிவிப்பதாவது,

وعنه أن رسول الله صلى الله عليه وسلم ، ذكر يوم الجمعة، فقال: "فيها ساعة لا يوافقها عبد مسلم، وهو قائم يصلي يسأل الله شيئًا، إلا أعطاه إياه"

வெள்ளியின் சிறப்பைப்பற்றி கூறும்போது, ரஸுலுல்லாஹ் صَلَّى اللّٰهُ عَلَيْهِ وَسَلَّمَ கூறியுள்ளார்கள், "வெள்ளியன்று ஒரு நேரம் உள்ளது. அதில் எந்த முஸ்லிம் தொழுது துஆ கேட்பாரோ, அவர் கேட்டுகும் எதவும் ஏற்றுக் கொள்ளப்படும்." அது சிறிய நேரம் எனக் காட்டும் வகையில தமது கரத்தைக் காட்டினார்கள்.

### ஜும்ஆ நாளில் செய்யக் கூடாத விஷயங்கள்

1. வியாபாரம் செய்வது தடை செய்யப்பட்டுள்ளது.

ஸூரத்துல் ஜுமுஆ (வெள்ளிக் கிழமை)

62:9 يٰۤاَيُّهَا الَّذِيْنَ اٰمَنُوْۤا اِذَا نُوْدِىَ لِلصَّلٰوةِ مِنْ يَّوْمِ الْجُمُعَةِ فَاسْعَوْا اِلٰى ذِكْرِ اللّٰهِ وَذَرُوا الْبَيْعَ‌ ؕ ذٰ لِكُمْ خَيْرٌ لَّكُمْ اِنْ كُنْتُمْ تَعْلَمُوْنَ

**62:9.** ஈமான் கொண்டவர்களே! ஜுமுஆ உடைய நாளில் தொழுகைக்காக நீங்கள் அழைக்கப்பட்டால், வியாபாரத்தை விட்டுவிட்டு, அல்லாஹ்வைத் தியானிக்க (பள்ளிக்கு) விரைந்து செல்லுங்கள் - நீங்கள் அறிபவர்களாக இருப்பின் இதுவே உங்களுக்கு மிக மேலான நன்மையுடையதாகும்.

2. வெள்ளிக்கிழமை மட்டும் நோன்பு நோற்பது தடை செய்யப்பட்டுள்ளது. முந்தைய (வியாழன்) அல்லது பிந்தைய (சனி) நாட்களோடு சேர்த்து நோன்பு நோற்பது அனுமதிக்கப்பட்டுள்ளது.

திர்மிதி 743

அபு ஹுரைராஹ் رَضِـي الله عَنْهُ அறிவிப்பதாவது,

عَنْ أَبِي هُرَيْرَةَ، قَالَ قَالَ رَسُولُ اللَّهِ صلى الله عليه وسلم " لاَ يَصُومُ أَحَدُكُمْ يَوْمَ الْجُمُعَةِ إِلاَّ أَنْ يَصُومَ قَبْلَهُ أَوْ يَصُومَ بَعْدَهُ "

ரஸுலுல்லாஹ் صَلَّى اللّٰهُ عَلَيْهِ وَسَلَّمَ கூறியுள்ளார்கள், "உங்களில் யாரும் முன்போ அல்லது பின்போ நோன்பு வைக்காமல் வெள்ளி அன்று (மட்டும் தனியாக) நோன்பு வைக்கக் கூடாது."

3. வெள்ளி இரவு அன்று மட்டும் தஹஜ்ஜத் தொழுவது கூடாது.

ரியாத் அஸ் ஸாலிஹீன் 2760

அபு ஹுரைராஹ் رَضِـي الله عَنْهُ அறிவிப்பதாவது,

عن أبي هريرة رضي الله عنه عن النبي صلى الله عليه وسلم قال: "لا تخصوا ليلة الجمعة بقيام من بين الليالي، ولا تخصوا يوم الجمعة بصيام من بين الأيام إلا أن يكون في صوم يصومه أحدكم" ((رواه مسلم)).

ரஸுலுல்லாஹ் صَلَّى اللّٰهُ عَلَيْهِ وَسَلَّمَ கூறியுள்ளார்கள், "மற்ற இரவுகளிலிருந்து வெள்ளி இரவை மட்டும் தொழுகைக்காக எழுந்து நிற்காதீர்கள். மற்ற நாட்களை விட்டு வெள்ளி மட்டும் நோன்புக்காகத் தேர்ந்தெடுக்காதீர்கள்...."

4. ஜுஃம்ஆ அன்று பள்ளிவாசலில் மற்றவர்களின் தோள் புஜத்தைத் தாண்டி செல்வது, இருவரைப் பிரித்து அமர்வது ஆகியன தடை செய்யப்பட்டுள்ளது.

5. குத்பா ஓதும்போது பேசுவது தடை செய்யப்பட்டுள்ளது.

அபு தாவூத் 1112

அபு ஹுஃரைராஹ் رَضِي الله عَنْهُ அறிவிப்பதாவது,

عَنْ أَبِي هُرَيْرَةَ، أَنَّ رَسُولَ اللَّهِ صلى الله عليه وسلم قَالَ " إِذَا قُلْتَ أَنْصِتْ وَالإِمَامُ يَخْطُبُ فَقَدْ لَغَوْتَ " .

ரஸுஃலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ கூறியுள்ளார்கள், “இமாம் குத்பா ஓதும்போது, நீங்கள் (அருகில் உள்ளவரை) அமைதியாக இரு என்று சொன்னால், நீர் தேவையில்லாமல் பேசியதாகக் கருதப்படும்.”

புளூ.்.க் அல் மரம் 374

இப்னு அப்பாஸ் رَضِي الله عَنْهُ அறிவிப்பதாவது,

وَعَنِ ابْنِ عَبَّاسٍ رَضِيَ اَللَّهُ عَنْهُمَا قَالَ: قَالَ رَسُولُ اَللَّهِ - صلى الله عليه وسلم -{ مَنْ تَكَلَّمَ يَوْمَ اَلْجُمُعَةِ وَالْإِمَامُ يَخْطُبُ فَهُوَ كَمَثَلِ اَلْحِمَارِ يَحْمِلُ أَسْفَارًا, وَالَّذِي يَقُولُ لَهُ: أَنْصِتْ, لَيْسَتْ لَهُ جُمُعَةٌ } رَوَاهُ أَحْمَدُ,

ரஸுஃலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ கூறியுள்ளார்கள், “வெள்ளியன்று இமாம் குத்பா ஓதும்போது, யார் பேசுகிறாரோ, அவர் புத்தகத்தைச் சுமந்த கழுதையைப் போலாவார். யார் அமைதியாக இருக்குமாறு கூறுகிறாரோ, அவருக்கு(ம்) ஜுஃம்ஆ இல்லை.”

**Fiqh 30 - Eid Prayers and Prayer Laws for Rain**

# ஃபிக்ஹ் வகுப்பு 30 - பெருநாள் தொழுகை மற்றும் மழை வேண்டி தொழுகை சட்டங்கள்

**ஆசிரியர்: அஷ் ஷெய்க் உவைஸ் உமரி நளீரி**

## பெருநாள் தொழுகை சட்டங்கள்

அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَى நமக்கு இரண்டு பெருநாட்களைக் கொடுத்துள்ளான். ஒன்று, ஒரு ரமளான் மாத நோன்பிருந்து, ஷவ்வால் ஒன்றில் கொண்டாடப்படும் ஈதுல் ∴பித்ர். இரண்டாவது, துல் ஹஜ் பத்தாம் நாள் கொண்டாடப்படும் ஈதுல் அல்ஹா ஆகியன.

வெள்ளிக் கிழமையும் பெருநாளாகக் கருதப்படுகிறது. இந்த இரண்டு நாட்களையல்லாமல் மற்ற எந்த நாளையும் பெருநாளாகக் கொண்டாடுவது பித்அத் ஆகும்.

## பெருநாள் சட்டங்கள்

பெருநாள் தொழுகை பற்றி கருத்து வேறுபாடு உள்ளது. அவற்றில் சிறந்தது அது கட்டாயக் கடமையாகும். அவ்வாறு சொல்லக் காரணம், ரஸுலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ பெருநாள் தொழுகையை விட்டதாகவோ, அல்லது விட்டுவிடலாம் என்று சலுகை வழங்கியதாகவோ ஆதாரம் இல்லை. முன்னர் வித்ருத் தொழுகை கடமை இல்லை என்று சொல்பவர்கள், ஐவேளை தொழுகைதான் கடமையாக்கப்பட்டுள்ளது எனறு கூறப்பட்டது. அதே போல்தான் பெருநாள் தொழுகையும் என்ற குழப்பம் ஏற்படலாம். அதற்கான பதிலாவது, ஒரு இரவு, ஒரு பகலில் அதாவது ஒரு நாளில்தான் ஐவேளை தொழுகை கடமை என்று கூறப்பட்டுள்ளது. எனவே வித்ரு என்ற ஆறாவது தொழுகை கடமை இல்லை. பெருநாள் தொழுகையோ வருடத்திற்கு இரு முறை வருவதுதான். இவற்றை ரஸுலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ விட்டதே இல்லை. மேலும் பெண்களும், பெருநாள் தொழுகைக்கு வரவேண்டும் என்று ரஸுலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ கூறியுள்ளார்கள். எந்த அளவிற்கு என்றால், தமக்குப் பர்தா இல்லை என்றாலும், தமது சகோதரியில் பர்தாவுடன் சேர்ந்து அணிந்து வரவேண்டும் என்று கூறியுள்ளார்கள். மாதவிடாய் உள்ள பெண்களும், பெருநாள் குத்பாவிற்குப் பிறகு செய்யப்படும் துஆவில் கலந்து கொள்ளுமாறும் ரஸுலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ கூறியுள்ளார்கள். இந்த அளவிற்கு வலியுறுத்தி ரஸுலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ சொல்லியிருப்பதால், அது கடமையாகத்தான் இருக்க வேண்டும்.

## தொழுகை நேரம்

சூரியன் உதித்த பிறகு ஒரு ஈட்டி அளவு உயரம் வந்தவுடன் தொழ வேண்டும். அதாவது சூரியன் உதித்து 15-20 நிமிடங்களுக்குப் பிறகு தொழுகையில் நேரமாகும். எனினும் இரு பெருநாள் தொழுகைகளுக்குள் நாம் பிரித்துப் பார்க்க வேண்டும். ஈதுல் அல்ஹா அன்று நேரம் வந்து உடனே தொழுதுவது நல்லது. அதன் பிறகு உள்ஹிய்யா கொடுக்க வசதியாக இருக்கும். ஈதுல் ∴பித்ர் அன்று சற்று தாமதமாக தொழ வைப்பது சிறந்தது. இது தொழுகைக்கு முன்னால் ஸதகத்துல் ∴பித்ராஹ் கொடுக்க வசதியாக இருக்கும்.

## செய்ய வேண்டும் என வலியுறுத்தப்பட்டவைகள்

1. குளிப்பது, நறுமணம் பூசுவது மற்றும் தம்மிடமுள்ள சிறந்த ஆடையை உடுத்துவது.
2. ஈத்கா திடலில் பெருநாள் தொழுவது. தொழ முடியாத சூழ்நிலையில் பள்ளிவாசலிலும் தொழலாம்.

3. தொழுகைக்கு செல்லும் முன் ஒற்றைப்பட எண்ணிக்கையில் பேரித்தப்பழம் சாப்பிடுவது ஈதுல் ∴பித்ரில் வலியுறுத்தப்பட்டுள்ளது. தொழுகைக்கு முன்னால் ஏதும் சாப்பிடாமல், குர்பானி இறைச்சியிலிருந்து சாப்பிடஈதுல் அல்ஹாவில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

4. ஈத்காவிற்கு நடந்து சென்று, நடந்து வருவது.

5. போகும்போது ஒரு வழியாகவும், திரும்பி வருவது வேறுவழியாகவும் வருவது.

6. தக்பீரை அதிகமாக, சப்தமாகக் கூறுவது. ரஸூலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ குறிப்பிட்ட சில சொற்களைக் கொண்டுதான் தக்பீர் சொன்னார்கள் என்ற அறிவிப்புகள் இல்லை. எனினும் ஸஹாபாக்கள் சொன்னதாக பல அறிவிப்புகள் உள்ளன. இப்னு மஸ்வூத், இப்னு அப்பாஸ் போன்ற ஸஹாபக்கள் கூறியதாகக் சொல்லப்பட்டிருக்கிறது.

இவ்வாறு ஒரு தடவை கூறுவது,

اللهُ أكبَرُ، اللهُ أكبَرُ، اللهُ أكبَرُ،
لَاإِلَهَ إلاَّ اللهُ وَاللهُ أكْبَرُ،
اللهُ أكْبَرُ وَلِلَّهِ الْحَمدُ.

அல்லது இரண்டு தடவைகள் கூறி மூன்றாவது இவ்வாறு கூறலாம்.

اللهُ أكبَرُ، اللهُ أكبَرُ، اللهُ أكبَرُ،
لَاإِلَهَ إلاَّ اللهُ وَاللهُ أكْبَرُ،
اللهُ أكْبَرُ وَلِلَّهِ الْحَمدُ.
اللهُ أكبَرُ كَبِيرًا،
وَالْحَمْدُ لِلَّهِ كَثِيرًا،

7. ஸஹாபாக்கள் ‘தகப்பல்அல்லாஹு மின்னா வ மின்கும் ஸாலிஹல் அ∴மால்’ (அல்லாஹ் உங்களுடைய மற்றும் எங்களுடைய நற்செயல்களை அல்லாஹ் ஏற்றுக் கொள்வானாக!) என ஒருவருக்கு ஒருவர் வாழ்த்து சொல்வார்கள். இவ்வாறு சொல்வதில் ஏதும் தடையில்லை. இதையல்லாமல் வேறு ஏதும் இல்லை.

## தொழுகை சட்டங்கள்

தொழுகைக்கு முன் பாங்கு சொல்வது ஸுன்னாஹ் கிடையாது. இகாமத்தும் சொல்வது நபி வழியல்ல. தொழுகைக்கு முன்பும், பின்பும் எவ்வித ஸுன்னாஹ்வான தொழுகைக்கும் ஆதாரமில்லை. எனினும் சில காரணங்களுக்காக பெருநாள் தொழுகை பள்ளிவாசலில் நடந்தால், பள்ளி காணிக்கைத் தொழுகை இரண்டு ரகஅத்துக்கள் தொழலாம்.

ஜமாஅத் தொழுகை தவறிவிட்டால், தனியாகவும் பெருநாள் தொழுகை தொழலாம்.

## தொழுகை வழிமுறைகள்.

தொழுகை இரண்டு ரகஅத்துக்கள் ஆகும். முதல் ரகஅத்தில் தக்பீர் தஹ்ரிமா அல்லாமல் (முதல் தக்பீர்) ஏழு முறை தக்பீர் சொல்ல வேண்டும். சில அறிவிப்புகளின்படி ஆறு தக்பீர் (மொத்தம் ஏழு) சொல்வதற்கும் ஆதாரம் உண்டு. அதிகப்படியான தக்பீர் சொல்லும்போது, கையை உயர்த்துவதற்கு ஆதாரமில்லை. பின்னர் அத்தியாயம் ∴பாத்திஹாவை சப்தமாக ஓத வேண்டும். பின்னர் துணை அத்தியாயம் ஓதி அந்த ரகஅத்தை முடிக்க வேண்டும்.

இரண்டாவது ரகஅத்தில் எழும் தக்பீர் அல்லாமல் மேலும் ஐந்து தக்பீர் சொல்லி வழக்கம்போல அந்த ரகஅத்தையும் தொழ வேண்டும்.

முதல் ரகஅத்தில் அத்தியாயம் அ.ஃலாவும், இரண்டாவது ரகஅத்தில் அத்தியாயம் காஷியாஹ்வும் ஓதுவது ஸுன்னாஹ் ஆகும்.

முஸ்லிம் 878

நு.ஃமான் இப்னு பஷிர் رَضِي الله عَنْهُ அறிவிப்பதாவது,

سَبِّحِ اسْمَ }عَنِ النُّعْمَانِ بْنِ بَشِيرٍ، قَالَ كَانَ رَسُولُ اللَّهِ صلى الله عليه وسلم يَقْرَأُ فِي الْعِيدَيْنِ وَفِي الْجُمُعَةِ بِـ { هَلْ أَتَاكَ حَدِيثُ الْغَاشِيَةِ} وَ {رَبِّكَ الأَعْلَى

**1592.** நுஅமான் பின் பஷீர் (ரலி) அவர்கள் கூறியதாவது: அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் இரு பெருநாள் தொழுகையிலும் ஜுமுஆவிலும் "சப்பி ஹிஸ்ம ரப்பிகல் அஃலா" (87) மற்றும் ‘ஹல் அத்தாக்க ஹதீஸுல் ஃகாஷியா" (88) ஆகிய அத்தியாயங்களை ஓதுவார்கள். பெருநாளும் ஜுமுஆவும் ஒரே நாளில் வந்துவிட்டாலும், இரு தொழுகைகளிலும் அவ்விரு அத்தியாயங்களையே ஓதுவார்கள். Book: 7 - **ஸஹீஹ் முஸ்லிம்**

அத்தியாயம் கா.ஃப் மற்றும் அத்தியாயம் அல் கமர் ஆகியவற்றையும் ரஸூலுல்லாஹ் صَلَّي الله عَلَيْهِ وَسلَّمَ ஓதுவார்கள்.

### மழை வேண்டித் தொழுகை

தொடர்ந்து, அல்லது அதிக நாட்கள் இடைவெளிவிட்டு, பஞ்சம் ஏற்படும் அளவிற்கு மழை பெய்யாவிட்டால், நாம் மழை வேண்டி தொழுகை நடத்த வேண்டும். விட்டு விட்டு மழை பெய்தால், மழையை அதிகப்படுத்த வேண்டி நாம் துஆ செய்ய வேண்டும். மழை பெய்யாத நிலையில் அதற்காகத் தொழ வேண்டும். இது முஸ்தஹப்பான ஒன்றாகும். ரஸூலுல்லாஹ் صَلَّي الله عَلَيْهِ وَسلَّمَ அவர்களின் காலத்திலும், அவர்களுக்குப் பிறகு நான்கு கலி.ஃபாக்களான அபு பக்ரு உமர் உதுமான் அலீ ஆகியோர் காலத்திலும் மழைக்கான தொழுகை நடத்தப்பட்டுள்ளது.

### தொழும் முறை

இதுவும் பெருநாள் தொழுகையைப் போன்றதாகும். அதிகத் தக்பீர்களுடன் தொழ வேண்டும். அப்படியல்லாமல் வழக்கமான தொழுகையைப் போலவும் தொழலாம் என்ற அறிவிப்புகளும் உள்ளன. பெரும்பான்மை அறிஞர்கள் பெருநாள் தொழுகையைப் போலத் தொழ வேண்டும் என்பதாகும். இத்தொழுகையிலும் குத்பா உண்டு. குத்பாவை தொழுகைக்கு முன்னாலும் ஓதலாம். தொழுத பிறகும் ஓதலாம். இரண்டுவிதமாகவும் அறிவிப்புகள் உள்ளன.

தொழுத பிறகு இமாம் துஆ கேட்க வேண்டும். அப்போது வழக்கத்திற்கு மாறாக புறங்கை மேல்நோக்கி இருக்குமாறு திருப்பி வைத்து, கைளை ஏந்திக் கொள்ள வேண்டும். மற்றவர்கள் ஆமீன் கூற வேண்டும்.

அனைவரும் தங்களின் போர்வையை மாற்றிப் போட்டுக் கொள்ள வேண்டும்.

புஹாரி 1005

அப்பாத் இப்னு தமீமுடைய சிறிய தந்தை رَضِي الله عَنْهُ கூறியதாவது,

عَنْ عَبَّادِ بْنِ تَمِيمٍ، عَنْ عَمِّهِ، قَالَ خَرَجَ النَّبِيُّ صلى الله عليه وسلم يَسْتَسْقِي وَحَوَّلَ رِدَاءَهُ

**1005.** அப்துல்லாஹ் இப்னு ஸைத்(ரலி) அறிவிக்கார். நபி(ஸல்) அவர்கள் மழை வேண்டி(த் தொழும் திடலுக்கு)ப் புறப்பட்டார்கள். (அப்போது) தம் மேலாடையை மாற்றிப் போட்டுக் கொண்டார்கள். Book: 15 - **ஸஹீஹுல் புகாரி**

மழை வேண்டி துஆ

புஹாரி 1014

ஷாரிக் رَضِي الله عَنْهُ அறிவிப்பதாவது,

حَدَّثَنَا قُتَيْبَةُ بْنُ سَعِيدٍ، قَالَ حَدَّثَنَا إِسْمَاعِيلُ بْنُ جَعْفَرٍ، عَنْ شَرِيكٍ، عَنْ أَنَسِ بْنِ مَالِكٍ، أَنَّ رَجُلاً، دَخَلَ الْمَسْجِدَ يَوْمَ جُمُعَةٍ مِنْ بَابٍ كَانَ نَحْوَ دَارِ الْقَضَاءِ، وَرَسُولُ اللَّهِ صلى الله عليه وسلم قَائِمٌ يَخْطُبُ، فَاسْتَقْبَلَ رَسُولَ اللَّهِ صلى الله عليه وسلم قَائِمًا ثُمَّ قَالَ يَا رَسُولَ اللَّهِ هَلَكَتِ الأَمْوَالُ وَانْقَطَعَتِ السُّبُلُ، فَادْعُ اللَّهَ يُغِيثُنَا فَرَفَعَ رَسُولُ اللَّهِ صلى الله عليه وسلم يَدَيْهِ ثُمَّ قَالَ " اللَّهُمَّ أَغِثْنَا، اللَّهُمَّ أَغِثْنَا، اللَّهُمَّ أَغِثْنَا ". قَالَ أَنَسٌ وَلاَ وَاللَّهِ مَا نَرَى فِي السَّمَاءِ مِنْ سَحَابٍ، وَلاَ قَزَعَةً، وَمَا بَيْنَنَا وَبَيْنَ سَلْعٍ مِنْ بَيْتٍ وَلاَ دَارٍ. قَالَ فَطَلَعَتْ مِنْ وَرَائِهِ سَحَابَةٌ مِثْلُ التُّرْسِ، فَلَمَّا تَوَسَّطَتِ السَّمَاءَ انْتَشَرَتْ ثُمَّ أَمْطَرَتْ، فَلاَ وَاللَّهِ مَا رَأَيْنَا الشَّمْسَ سِتًّا، ثُمَّ دَخَلَ رَجُلٌ مِنْ ذَلِكَ الْبَابِ فِي الْجُمُعَةِ وَرَسُولُ اللَّهِ صلى الله عليه وسلم قَائِمٌ يَخْطُبُ، فَاسْتَقْبَلَهُ قَائِمًا فَقَالَ يَا رَسُولَ اللَّهِ هَلَكَتِ الأَمْوَالُ وَانْقَطَعَتِ السُّبُلُ، فَادْعُ اللَّهَ يُمْسِكْهَا عَنَّا. قَالَ فَرَفَعَ رَسُولُ اللَّهِ صلى الله عليه وسلم يَدَيْهِ ثُمَّ قَالَ " اللَّهُمَّ حَوَالَيْنَا وَلاَ عَلَيْنَا، اللَّهُمَّ عَلَى الآكَامِ وَالظِّرَابِ وَبُطُونِ الأَوْدِيَةِ وَمَنَابِتِ الشَّجَرِ ". قَالَ فَأَقْلَعَتْ وَخَرَجْنَا نَمْشِي فِي الشَّمْسِ. قَالَ شَرِيكٌ سَأَلْتُ أَنَسَ بْنَ مَالِكٍ أَهُوَ الرَّجُلُ الأَوَّلُ فَقَالَ مَا أَدْرِي.

**1014.** அனஸ் இப்னு மாலிக்(ரலி) அறிவித்தார். ஜும்ஆ நாளில் நபி(ஸல்) அவர்கள் நின்று உரை நிகழ்த்திக் கொண்டிருக்கும்போது 'தாருல்களா' எனும் வாசல் வழியாக ஒருவர் வந்தார். நின்றவாறே நபி(ஸல்) அவர்களை நோக்கி, 'இறைத்தூதர் அவர்களே! செல்வங்கள் அழிந்துவிட்டன. பாதைகள் துண்டிக்கப்பட்டுவிட்டன. எனவே எங்களுக்கு மழை பொழியச் செய்யுமாறு அல்லாஹ்விடம் பிரார்த்தியுங்கள்' என்று கேட்டார். நபி(ஸல்) அவர்கள் தங்களின் கைகளை உயர்த்தி, 'இறைவா! எங்களுக்கு மழை பொழியச் செய்வாயாக!' என்று பிரார்த்தித்தார்கள். அல்லாஹ்வின் மீது ஆணையாக வானத்தில் திரண்ட மேகத்தையோ பிரிந்து கிடக்கும் மேகங்களையோ நாங்கள் காணவில்லை. எங்களுக்கும் (அதாவது மதீனாவுக்கும்) 'ஸல்உ' என்னும் மலைக்குமிடையே எந்த வீடும் கட்டிடமும் இருக்கவில்லை. (வெட்ட வெளியாக இருந்தது.) அப்போது அம்மலைக்குப் பின்புறமிருந்து கேடயம் போன்று ஒரு மேகம் தோன்றி வானத்தின் மையப் பகுதிக்கு வந்து சிதறி மழை பொழிந்தது. அல்லாஹ்வின் மீது ஆணையாக, ஆறு நாள்கள் சூரியனையே நாங்கள் பார்க்கவில்லை. அடுத்த ஜும்ஆவில் நபி(ஸல்) அவர்கள் நின்று உரைநிகழ்த்தும்போது ஒருவர் அதே வாசல் வழியாக வந்தார். நின்றவாறே நபி(ஸல்) அவர்களை நோக்கி, ' இறைத்தூதர் அவர்களே! செல்வங்கள் அழிந்துவிட்டன. பாதைகள் துண்டிக்கப்பட்டுவிட்டன. எனவே மழையை நிறுத்துமாறு அல்லாஹ்விடம் பிரார்த்தியுங்கள்' என்றார். உடன் நபி(ஸல்) அவர்கள் தம் கைகளை உயர்த்தி 'இறைவா! எங்கள் சுற்றுப் புறங்களில் (இம்மழையைப் பொழியச் செய்வாயாக!) எங்களுக்குப் பாதகமாக இதை நீ ஆக்கிவிடாதே. இறைவா! மணற்குன்றுகள், மலைகள், ஓடைகள், விளைநிலங்கள் ஆகியவற்றின் மீது (இம்மழையைப் பொழியச் செய்வாயாக!)' என்று பிரார்த்தித்தார்கள். உடனே மழை நின்றது. நாங்கள் வெயிலில் நடந்து சென்றோம். இரண்டாவதாக வந்த மனிதர் முதலில் வந்தவர் தாமா? என்று அனஸ்(ரலி) அவர்களிடம் கேட்டேன். அதற்கு அவர்கள் 'தெரியாது' என்றனர் என ஷரீக் கூறுகிறார். Book: 15 - **ஸஹீஹுல் புகாரி**

மழை பெய்யாமல் இருக்கவும் ரஸூலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ துஆ கற்றுக் கொடுத்திருக்கிறார்கள்.

மழை பெய்யும்போது, அது பயனுள்ள மழையாகப் பெய்யவும் என ரஸூலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ துஆ செய்திருகிறார்கள்.

மழை அதிக நட்டம் ஏற்படுத்தினால்

اللَّهُمَّ حَوَالَيْنَا وَلاَ عَلَيْنَا"

யா அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَى ! எங்களுக்கு மழை வேண்டாம், எங்களைச் சுற்றி பொழிய வைப்பாயாக! என துஆ செய்வார்கள்.

**Fiqh 31 - Eclipse Prayer and Janasa Prayer**

## ஃபிக்ஹ் வகுப்பு 31 - கிரகண தொழுகை மற்றும் ஜனாஸா தொழுகை

**ஆசிரியர்: அஷ் ஷெய்க் உவைஸ் உமரி நஸீரி**

### கிரகணத் தொழுகை

இதை அரபியில் صلاة الاكسوف என்று கூறுவார்கள். கிரகணம் சூரிய கிரகணம் மற்றும் சந்திர கிரகணம் என இரண்டு வகைப்படும். அறியாமை காலத்தில உலகின் சம்பவங்களுக்காக நிகழ்கிறது என்று நினைத்தார்கள். ரஸுலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ மதினாவில் இருக்கும் போது ஒரே ஒரு தடவை ஹிஜ்ரி பத்தாம் ஆண்டு ஷவ்வால் 29ல் சூரிய கிரகணம் ஏற்பட்டது. அன்று ரஸுலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ அவர்களின் ஆண் குழந்தை இப்ராஹீம் இறந்துவிட்டார்கள். ஸஹாபக்கள் ரஸுலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ அவர்களின் குழந்தை இறந்தது காரணமாகத்தான் அந்த சூரிய கிரகணம் ஏற்பட்டதாகப் பேசிக் கொண்டார்கள். அதனை அறிந்த ரஸுலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ அதனை மறுத்தார்கள்.

புஹாரி 1060

முகீரத் இப்னு ஷு.:.பத் رَضِيَ اللهُ عَنْهُ அறிவிப்பதாவது,

قَالَ سَمِعْتُ الْمُغِيرَةَ بْنَ شُعْبَةَ، يَقُولُ انْكَسَفَتِ الشَّمْسُ يَوْمَ مَاتَ إِبْرَاهِيمُ، فَقَالَ النَّاسُ انْكَسَفَتْ لِمَوْتِ إِبْرَاهِيمَ. فَقَالَ رَسُولُ اللَّهِ صلى الله عليه وسلم " إِنَّ الشَّمْسَ وَالْقَمَرَ آيَتَانِ مِنْ آيَاتِ اللَّهِ، لاَ يَنْكَسِفَانِ لِمَوْتِ أَحَدٍ وَلاَ لِحَيَاتِهِ، فَإِذَا رَأَيْتُمُوهُمَا فَادْعُوا اللَّهَ وَصَلُّوا حَتَّى يَنْجَلِيَ ".

**1060.** முகீரா இப்னு ஷுஉபா(ரலி) அறிவிக்கார். இப்ராஹீம்(ரலி) மரணித்த நேரத்தில் சூரிய கிரகணம் ஏற்பட்டது. 'இப்ராஹீமின் மரணத்திற்காகக் கிரகணம் ஏற்பட்டது' என்று மக்கள் பேசிக் கொண்டனர். அப்போது நபி(ஸல்) அவர்கள், 'சூரியனும் சந்திரனும் அல்லாஹ்வின் இரண்டு அத்தாட்சிகளாகும். எவருடைய மரணத்திற்காகவோ வாழ்விற்காகவோ கிரகணம் ஏற்படுவதில்லை. எனவே நீங்கள் கிரகணத்தைக் கண்டால் அல்லாஹ்விடம் பிரார்த்தியுங்கள். அது விலகும் வரை தொழுங்கள்' என்று கூறினார்கள். Book: 16 - **ஸஹீஹுல் புகாரி**

இந்த ஹதீது கிரகணத் தொழுகை பற்றிய அநேக சட்டங்களைக் கூறுகிறது.

அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَى கூறுகிறான், ஸூரத்துத் தக்வீர் (சுருட்டுதல்)

**81:1** إِذَا الشَّمْسُ كُوِّرَتْ ۙ

**81:1.** சூரியன் (ஒளியில்லாததாகச்) சுருட்டப்படும் போது-

இவ்வாறு சூரியின் மறுமை நாளின் முழுமையாக ஒளியிழந்து காணப்படும். கிரகணம் ஏற்படும்போது தற்காலிகமாக இவ்வாறு ஒளி குறைக்கப்படும்போது, நாம் மறுமை நாளை நினைவு கொள்ள வேண்டும். எனவே மறுமையின் நிரந்த நிலையினை நினைவு கூர்வதுதான் இவ்வுலகில் ஏற்படும் கிரகணங்களின் நோக்கமாகும்.

### கிரகணத் தொழுகை முறை

இத் தொழுகை ஸுன்னாஹ் முஸ்தக.:.பா, வலியுறுத்தப்பட்ட ஒன்றா அல்லது கட்டாயக் கடமையா என்பதில் கருத்து வேறுபாடு உள்ளது. பல அறிஞர்கள் இது வலியுறுத்தப்பட்ட ஸுன்னாஹ் ஆகும். சிலர் கடமை எனவும் கூறியுள்ளார்கள்.

முன்னர் கூறப்பட்ட ஹதீதில், “யாரேனும் அதனைக் கண்டால், அல்லாஹ் விடம் துஆக் கேட்டு, அது நீங்கும்வரை தொழுது கொள்ளுங்கள்.” என ரஸூலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ கூறியுள்ளார்கள்.

## தொழும் நேரம்

ரஸூலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ அவர்களின் கூற்றுப்படி அதனைக் கண்டால் தொழ வேண்டும். அது முடியும்வரை தொழ வேண்டும். எனவே கிரகணம் ஏற்பட்டதைக் கண்டவுடன்தான் (உறுதிபடுத்திய பின்புதான்) தொழ வேண்டும். செய்திகளின் நேரத்தை அறிந்தாலும் நாம் காணாதவரை தொழ ஆரம்பிக்கக் கூடாது. கிரகணம் நீங்கியதை உணரும்வரை நாம் தொழுகையைத் தொடர வேண்டும். தொழுகை நாம் சீக்கிரமாக முடித்திருந்தால், அதன்பிறகு கிரகணம் முடியும்வரை திக்று மற்றும் துஆக்களில் ஈடுபட வேண்டும். ரஸூலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ அவர்களின் ஹதீதின்படி அவையும் தொழுகையாகத்தான் கருதப்படும். இத்தொழுகைக்கு அதான் மற்றும் இகாமத் கிடையாது.

## தொழும் முறை

இரண்டு ரகஅத்துகள் தொழ வேண்டும். ஒவ்வொரு ரகஅத்துகளிலும், இரண்டு ருக்கூ செய்ய வேண்டும். மொத்தம் நான்கு ருக்கூ செய்ய வேண்டும். முதல் ரகஅத்தில் அத்தியாயம் ∴பாத்திஹாவிற்குப் பிறகு, குர்ஆனின் நீண்ட அத்தியாயத்தை, அதிக வசனங்களை ஓத வேண்டும். பின்னர் ருக்கூ செய்து, அதில் அதிக நேரம் தரிபட்டு அதற்கான திக்ருகளை நாம் ஓத வேண்டும். மறுபடியும் நிலைக்கு வந்து அதன் திக்றுகளை ஓதிய பிறகு, மறுபடியும் அத்தியாயம் ∴பாத்திஹா மற்றும் குர்ஆனின் நீண்ட அத்தியாயத்தை, அதிக வசனங்களை ஓத வேண்டும். எனினும் முந்தைய அளவைவிட சற்று குறைவாக ஓத வேண்டும். மறுபடியும் ருக்கூ செய்ய வேண்டும். அதிலும் அதிக நேரம் தரிபட வேண்டும். பின்னர் நிலைக்கு வந்து வழக்கமானவிதமாக முதல் ரகஅத்தை முடிக்க வேண்டும். எனினும் இரண்டு ஸஜ்தாக்களிலும் அதிக நேரம் தரிபட வேண்டும். பின்னர் எழுந்து முதல் ரகஅத்தைப் போல இரண்டாவது ரகஅத்தைத் தொழ வேண்டும். இதில் குர்ஆன் கிராஅத்தை முதல் ரகஅத்தைவிட சிறிதாக முதல் நிலையிலும், அதனினும் சிறிதாக இரண்டாவது நிலையிலும் ஓத வேண்டும்.

## தொழுகையின் ஸுன்னாஹ்கள்

1. பள்ளிவாசலில் ஜமாஅத்தாகத் தொழுவது. தனியாகவும் தொழலாம். வீட்டிலும் ஜமாஅத்தாகத் தொழலாம்.
2. துஆ திக்ருகளை அதிகமாக ஓத வேண்டும்.
3. தொழுகைக்குப் பிறகு மக்களுக்கு உபதேசம் செய்ய வேண்டும்.

## ஜனாஸாத் தொழுகை

இரு ∴பர்லு கி∴பாயாஹ் ஆகும். சிலர் செய்ய வேண்டும். எல்லோம் செய்ய வேண்டும் என்ற கட்டாயமில்லை. ஆனால் யாரும் தொழவில்லை என்றால் எல்லோரும் குற்றவாளியாகக் கருதப்படுவார்கள். ∴பர்லு கி∴பாயாஹ்வுக்கு மற்றுமொரு உதாரணம், உயிரோடு போராடுபவரை (உதாரணமாக நீரில் மூழ்கிக் கொண்டிருப்பவரை)க் காப்பாற்றுவது. யாராவது காப்பாற்ற வேண்டும். யாரும் காப்பாற்றவில்லை என்றால் பார்க்கும் அனைவரும் குற்றவாளியாகிவிடுவார்கள்.

## ஜனாஸா தொழுகையின் நன்மை

அபு ஹுரைராஹ் رَضِيَ اللهُ عَنْهُ அறிவிப்பதாவது,

عَنْ أَبِي هُرَيْرَةَ، قَالَ قَالَ رَسُولُ اللَّهِ صلى الله عليه وسلم " مَنْ تَبِعَ جَنَازَةً فَصَلَّى عَلَيْهَا ثُمَّ انْصَرَفَ فَلَهُ قِيرَاطٌ مِنَ الأَجْرِ وَمَنْ تَبِعَهَا فَصَلَّى عَلَيْهَا ثُمَّ قَعَدَ حَتَّى يُفْرَغَ مِنْ دَفْنِهَا فَلَهُ قِيرَاطَانِ مِنَ الأَجْرِ كُلُّ وَاحِدٍ مِنْهُمَا أَعْظَمُ مِنْ أُحُدٍ " .

ரஸுலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ கூறியுள்ளதாவது, “யாரேனும் ஒருவர் ஒரு ஜனாஸாவைத் தொடர்ந்து பின்னர் அதற்கான தொழுகையை தொழுகிறாரோ, அவருக்கு ஒரு கீராத் நன்மை கிடைக்கும். மேலும் யாரேனும் ஒருவர் ஒரு ஜனாஸாவைத் தொடர்ந்து பின்னர் அதற்கான தொழுகையை தொழுதுவிட்டு, அதனை அடக்கும்வரை முழுமையாக அங்கிருக்கிறாரோ, அவருக்கு இரண்டு கீராத் நன்மையைப் பெறுவார். அவவை இரண்டும் உஹது மலையைவிடப் பெரியதாகும். இப்னு உமர் தொழுதுவிட்டு வீட்டிற்குச் சென்றுவிடுவார். அதனைக் கண்ணுற்ற அபு ஹுரைராஹ் இந்த ஹதீதைச் சொல்ல, அவர் அதனைக் குறித்து அன்னை ஆயிஷா அவர்களிடம் வினவ, அவர்களும் ஆம் என்று சொல்ல, இப்னு உமர் தாம் அநேக கீராத் நன்மைகளை விட்டுவிட்டு கைதேசம் அடைந்தோமே என்று வருந்தினார்.

## தொழும் முறை

இத்தொழுகையில் கியாம் (நிலை) மட்டுமே உள்ளது. ருக்கூவும், ஸஜ்தாவும் கிடையாது. தொழுகையில் நான்கு தக்பீர்கள் சொல்ல வேண்டும். முதல் தக்பீர் சொன்ன பிறகு, அத்தியாயம் ∴பாத்திஹாவை ஓத வேண்டும். பின்னர் விரும்பினால் சிறிய ஸூராவை அல்லது சில வசனங்களை ஓதலாம். அத்தியாம் ∴பாத்திஹா ஓதுவது குறித்து கருத்து வேறுபாடு உள்ளது. இப்னு உமர் ஜனாஸா தொழுகையில் ஓதமாட்டார் என்ற அறிவிப்பைக் கொண்டு ஓதக் கூடாது என்று சிலர் கூறுவர். இதுவும் ஒரு தொழுகைதான் என்பதால் கட்டாயம் ஓத வேண்டும் என சில அறிஞர்கள் கூறுவர். இன்னும் சிலர் இரண்டுக்கும் பொதுவாக ஓதுவது சிறந்தது எனவும், ஓதாமல் இருந்தாலும் தொழுகை கூடிவிடும் என்று சொல்கிறார்கள். இமாம் ஹன∴பி மற்றும் இமாம் மாலிக் ஆகியோர் ஓத வேண்டாம் என்ற கருத்தைக் கொண்டவர்கள். இமாம் ஷா∴பியி மற்றும் இமாம் ஹன்பல் ஆகியோர் ஓத வேண்டும் என்ற கருத்தைக் கொண்டவர்கள். எனினும் அத்தியாயம் ∴பாத்திஹா ஓதுவது என்ற கருத்துதான் சிறந்ததாகும். ஏனெனில் ஜனாஸா தொழுகையும் ஒரு தொழுகைதான். தக்பீர் தஹ்ரிமாவுடன் ஆரம்பித்து ஸலாமுடன் முடிக்கிறோம். கிப்லாவை நோக்கிதான் தொழுகிறோம். தொழுகையின்போது பேசக் கூடாது மற்றும் உளூ அவசியம். எனவே அத்தியாயம் ∴பாத்திஹா ஓதாமல் தொழுகை கூடாது என்ற ஹதீது இதற்கும் பொருந்தும். இந்தத் தொழுகைக்கு விதிவிலக்கு உண்டு என எந்த அறிவிப்பும் இல்லை. இப்னு உமர் அத்தொழுகையில் அத்தியாயம் ∴பாத்திஹா ஓதமாட்டார் என அறிந்துதான் இப்னு அப்பாஸ் மௌனமாக ஓதவேண்டிய இத்தொழுகையில், முதல் தக்பீருக்குப் பிறகு அத்தியாயம் ∴பாத்திஹாவை சப்தமாக ஓதி முடித்தார். அவ்வாறு தாம் சப்தமாக ஓதக் காரணம், அத்தியாயம் ∴பாத்திஹா ஓதுவது நபிவழி என்பததை உணர்த்துவதுதான் என்றார்கள். இரண்டாவது தக்பீருக்குப் பிறகு ஸலவாத்து இப்ராஹீம் ஓத வேண்டும்.

اللَّهُمَّ صَلِّ عَلَى مُحَمَّدٍ وَعَلَى آلِ مُحَمَّدٍ
كَمَا صَلَّيْتَ عَلَى إِبْرَاهِيمَ وَعَلَى آلِ إِبْرَاهِيمَ
إِنَّكَ حَمِيدٌ مَجِيدٌ.
اللَّهُمَّ بَارِكْ عَلَى مُحَمَّدٍ، وَعَلَى آلِ مُحَمَّدٍ
كَمَا بَارَكْتَ عَلَى إِبْرَاهِيمَ وَعَلَى آلِ إِبْرَاهِيمَ
إِنَّكَ حَمِيدٌ مَجِيدٌ.

மூன்றாம் தக்பீருக்குப் பிறகு மையத்திற்காகத் துஆ ஓத வேண்டும்.

اللَّهُمَّ اغْفِرْ لِحَيِّنَا وَمَيِّتِنَا وَشَاهِدِنَا ،
وَغَائِبِنَا ، وَصَغِيرِنَا وَكَبِيرِنَا ، وَذَكَرِنَا
وَأُنْثَانَا. اللَّهُمَّ مَنْ أَحْيَيْتَهُ مِنَّا فَأَحْيِهِ
عَلَى الإِسْلامِ وَمَنْ تَوَفَّيْتَهُ مِنَّا فَتَوَفَّهُ
عَلَى الإِيمَانِ ، اللَّهُمَّ لاَ تَحْرِمْنَا أَجْرَهُ
وَلاَ تُضِلَّنَا بَعْدَهُ.

யா அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَى! எங்களின் உயிருடன் இருப்பவர்களையும், மரணித்தவர்களையும், (இங்கு) பிரசன்னமாக இருப்பவர்களையும், (இங்கு வராமல்) மறைவாக இருப்பவர்களையும், சிறியவர்களையும், பெரியவர்களையும், ஆண்களையும், பெண்களையும் மன்னிப்பாயாக! யா அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَى! எங்களில் யாரையெல்லாம் நீ வாழ வைத்திருக்கிறாயோ அவர்களை இஸ்லாத்தில் வாழ வைப்பாயாக! யாரையெல்லாம் மரணிக்கச் செய்கிறாயோ அவர்களை ஈமானில் மரணிக்கச் செய்வாயாக! அவர்களின் நற்கூலிகளைத் தடை செய்யாதிருப்பாயாக! அவர்களுக்குப் பிறகு எங்களை வழிகேட்டில் விடாமல் இருப்பாயாக!

நான்காம் தக்பீருக்குப் பிறகு ஸலாம் சொல்லலாம். எனினும் நான்காம் தக்பீருக்குப் பிறகும் மையத்திற்குத் துஆ செய்யலாம்.

தக்பீர் சொல்லும்போது கையை உயர்த்துமாறு அறிவிப்பு இல்லை. எனினும் இப்னு உமர் கையை உயர்த்தியுள்ளார். அதுபோல் பெருநாள் தொழுகையிலும் அவர் கையை உயர்த்தியுள்ளார்.

**Fiqh 32 - Prayers Not Mentioned in Islam**

## ஃபிக்ஹ் வகுப்பு 32 - இஸ்லாத்தில் கூறப்படாத தொழுகைகள்

**ஆசிரியர்: அஷ் ஷெய்க் உவைஸ் உமரி நஸீரி**

இப்போது ஆதாரமில்லாமல் தொழக்கூடிய சில தொழுகைகளைப் பற்றி இங்கு குறிப்பிடப் போகிறோம். அவற்றில் சிலர் கூறும் ஆதாரங்களைக் கொண்ட ஓரிரண்டு தொழுகைகளைத் தவிர மற்ற தொழுகைகளை நாம் தொழாமல் தவிர்க்க வேண்டும். ஏனெனில் இல்லாத ஒன்றைச் செய்வது பித்அத் ஆகும்.

### 1. ஸலாத்துத் தஸ்பீஹ்

இந்தத் தொழுகையைக் குறித்து ஹதீது அறிஞர்களின் நிலைப்பாடு இரண்டாக இருக்கிறது. இது பற்றிய ஹதீது இட்டுக் கட்டப்பட்டது என்பது ஒரு நிலைப்பாடாகும். உயர்ந்த தரத்தில் உள்ள ஹதீது கிடையாது என்றும் கூறுகிறார்கள். இந்தத் தொழுகையைக் குறித்துக் கூறும்போது, இத்தொழுகையை தினமும் தொழவேண்டும் எனவும், அதற்கு முடியாவிட்டால், வாரம் ஒரு முறை அல்லது மாதம் ஒரு முறை அல்லது வருடம் ஒரு முறை, அதுவும் முடியாவிட்டால் தம் ஆயுளில் ஒரு தடவையாவது தொழ வேண்டும் என்று கூறப்படுகிறது. இப்படிப்பட்ட சிறப்பு சொல்லப்படும் இந்த தொழுகையை ரஸுலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ அவர்கள் தொழுதாக எந்த ஹதீதும் கிடைக்கவில்லை. தஹஜ்ஜுத் மற்றும் லுஹா தொழுகையை வலியுறுத்தியதாகக் கூறப்பட்டதோடு, அவற்றை ரஸுலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ தொழுதுள்ளார்கள் என்ற செய்திகளும் இருக்கின்றன. அவற்றை ஸஹாபாக்களும் தொழுததாக செய்திகள் உள்ளன. ஆனால் சிறப்பாகக் கூறப்படும் இந்த தஸ்பீஹ் தொழுகை ரஸுலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ அவர்களோ, அல்லது ஸஹாபாக்களோ தொழுததாக எந்த செய்தியும் கிடைக்காததால், ஹதீது கலை நிபுணர்கள், இது சம்பந்தமான ஹதீது இட்டுக் கட்டப்பட்டதோ என சந்தேகம் கொள்கின்றனர். மற்றொரு காணமாக, இத்தொழுகையில் திக்ருகளில் ஒவ்வொரு நிலையிலும் குறிப்பிட்ட எண்ணிக்கையில் தொழ வேண்டும் என மற்ற தொழுகைகளைவிட வித்தியாசமாக இருக்கிறது என்கிறார்கள். இமாம்களில் அபு ஹனீ.ஃபா رَحْمَةُ اللهِ عَلَيْهِ, மாலிக் رَحْمَةُ اللهِ عَلَيْهِ மற்றும் ஷாபிஇ رَحْمَةُ اللهِ عَلَيْهِஆகியோர் இந்தத் தொழுகையைப் பற்றி எந்த கருத்தும் சொல்லவில்லை. இமாம் ஹன்பல் رَحْمَةُ اللهِ عَلَيْهِ அவர்களும் இதனைப் பலவீனமான ஹதீது என்று கூறியுள்ளார்கள். எனினும் பிற்காலத்தில் ஏற்றுக் கொண்டதாகவும் செய்தி உள்ளது. மற்ற இமாம்கள் இது குறித்து எந்த ஒன்றையும் சொல்லவில்லை என்பதால், இது பிற்காலத்தில் இட்டுக் கொள்ளப்பட்ட ஹதீதாக இருக்கலாம் என்ற கருத்தும் உள்ளது. இன்னும் சில ஹதீதுகலை வல்லுநர்கள் இந்த ஹதீதை அங்கீகாரம் செய்துள்ளார்கள். ஒன்றுக்கும் மேற்பட்ட அறிவிப்பாளர்களிடமிருந்து கிடைத்திருக்கிறது என்பதால், இதனை ஏற்றுக் கொள்ளலாம் என்ற கருத்தை அவர்கள் எடுத்துக் கொள்கிறார்கள். மற்றவர்களிடமிருந்தும் அறிவிப்பு வரவில்லையே என்ற நினைக்க வேண்டாம் என்றும் கூறுகிறார்கள். எனவே நாம் நிலைப்பாடு எவ்வாறு இருக்க வேண்டும் என்றால், யார் முன்னர் சொன்ன கருத்தின்படி இந்த ஹதீது இட்டுக்கட்டப்பட்டது என்பதால் தொழுவதில்லை என்று முடிவு செய்தார்களோ, அவர்களைத் தொழுமாறு நாம் கட்டாயப்படுத்தத் தேவையில்லை. யார் இதனை ஆதாரப்பூர்வமான ஹதீது என நினைத்துத் தொழுவார்களோ, அவர்களையும் தடுக்க வேண்டாம். ஆசிரியரின் கருத்தாவது, எவ்வித ஆதாரமும் கிடைக்கவில்லை என்பதால், இந்த ஹதீது ஸஹீஹ் என்ற தரத்தில் இல்லாமல், பலர் கூறுவதால் ஹஸன் என்ற தரத்தில் உள்ளது. மேலும் ஸுலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ அவர்களோ, அல்லது ஸஹாபாக்களோ தொழுததாக எந்த செய்தியும்

கிடைக்காததால், இத்தொழுகையைத் தவிர்த்தால் நல்லது. எனினும் தொழுதால் தடுக்க வேண்டியதில்லை.

### 2. ஸலாத்துஷ் ஷுக்ர்

நன்றிக்கானத் தொழுகையாக இதனைச் சிலர் தொழுவார்கள். இவ்வாறு தொழ வேண்டும் என்பதற்காக ஸுலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ அவர்களின் வழிகாட்டுதல் ஏதும் இல்லை. இது முன்னரே குறிப்பிட்டுள்ளோம். நன்றிக்கான ஸஜ்தாதான் உள்ளது. நமக்காக எந்த ஒரு நற்செய்தி அல்லது நன்மை கிடைத்தால் உடனே ஸஜ்தா செய்வதுதான் ஸஜ்தா ஷுக்ர் ஆகும்.

ரஸுலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ அவர்களுக்கு மகிழ்ச்சி கொள்ளும் செய்தியை தாங்கள் கேட்டால், அவர்கள் உடனே ஸஜ்தா ஷுக்ர் செய்வார்கள்.

அப்துர் ரஹ்மான் இப்னு அவ்ஃப் رَضِيَ اللهُ عَنْهُ அறிவிப்பதாவது,

وَعَنْ عَبْدِ اَلرَّحْمَنِ بْنِ عَوْفٍ - رضى الله عنه - قَالَ : { سَجَدَ اَلنَّبِيُّ - صلى الله عليه وسلم -فَأَطَالَ اَلسُّجُودَ , ثُمَّ رَفَعَ رَأْسَهُ وَقَالَ : " إِنَّ جِبْرِيلَ آتَانِي , فَبَشَّرَنِي , فَسَجَدْتُ لِلَّهِ شُكْرًا" } رَوَاهُ أَحْمَدُ , وَصَحَّحَهُ اَلْحَاكِمُ .[1]

ரஸுலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ ஒரு நீண்ட ஸஜ்தாவைச் செய்தார்கள். பின்னர் அவர்கள் தங்களின் தலையை உயர்த்திக் கூறினார்கள், "நிச்சமயாக ஜிப்ரயீல் عَلَيْهِ السَّلاَمُ வந்து நற்செய்தி கூறினார்கள். அதற்காக நான் அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَى வுக்காக ஸஜ்தா ஷுக்ர் செய்தேன்." (அஹ்மத் 191/1 ஹாக்கிம் 550/1)

எனவே அதற்காகத் தொழுகை ஏதும் இல்லை. மார்க்கத்தை ஒழுங்காகப் பின்பற்றினாலே அது நன்றியறிதல்தான்.

### 3. ஸலாத்துல் ஹாஜாஹ்

நமது நாட்டம் நிறைவேறுவதற்காக ஸலாத்துல் ஹாஜாஹ் இரண்டு ரகஅத்துக்கள் தொழுவார்கள்.
அபு தாவூத் 1384

அப்துல்லாஹ் இப்னு அவ்ஃபல் அஸ்லமிய்யு رَضِيَ اللهُ عَنْهُ அறிவிப்பதாவது,

عَنْ عَبْدِ اللَّهِ بْنِ أَبِي أَوْفَى الأَسْلَمِيِّ، قَالَ خَرَجَ عَلَيْنَا رَسُولُ اللَّهِ ـ صلى الله عليه وسلم ـ فَقَالَ " مَنْ كَانَتْ لَهُ حَاجَةٌ إِلَى اللَّهِ أَوْ إِلَى أَحَدٍ مِنْ خَلْقِهِ فَلْيَتَوَضَّأْ وَلْيُصَلِّ رَكْعَتَيْنِ ثُمَّ لْيَقُلْ لاَ إِلَهَ إِلاَّ اللَّهُ الْحَلِيمُ الْكَرِيمُ سُبْحَانَ اللَّهِ رَبِّ الْعَرْشِ الْعَظِيمِ الْحَمْدُ لِلَّهِ رَبِّ الْعَالَمِينَ اللَّهُمَّ إِنِّي أَسْأَلُكَ مُوجِبَاتِ رَحْمَتِكَ وَعَزَائِمَ مَغْفِرَتِكَ وَالْغَنِيمَةَ مِنْ كُلِّ بِرٍّ وَالسَّلاَمَةَ مِنْ كُلِّ إِثْمٍ أَسْأَلُكَ أَلاَّ تَدَعَ لِي ذَنْبًا إِلاَّ غَفَرْتَهُ وَلاَ هَمًّا إِلاَّ فَرَّجْتَهُ وَلاَ حَاجَةً هِيَ لَكَ رِضًا إِلاَّ قَضَيْتَهَا لِي ثُمَّ يَسْأَلُ اللَّهَ مِنْ أَمْرِ الدُّنْيَا وَالآخِرَةِ مَا شَاءَ فَإِنَّهُ يُقَدَّرُ "

ரஸுலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ வந்து எங்களிடம் கூறினார்கள்,

யாருக்காவது அல்லாஹ் விடமோ, அவனது படைப்பிடமோ ஏதும் தேவைப்பட்டால், அவர் உளூச் செய்து இரண்டு ரகஅத்துக்கள் தொழுது பின்னர் இவ்வாறு கூறவும். "வழிபடுவதற்கு உரியவன் அல்லாஹ் வைத் தவிர யாருமில்லை. சாந்தமானவன், சங்கை மிக்கவன். அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَى மிகத் தூய்மையானவன். மகத்தான அர்ஷின் இரட்சகன். அகிலத்தின் இரட்சகனாகிய அல்லாஹ் வுக்கே எல்லாப் புகழும். யா அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَى!, உனது அருள் மற்றும் மன்னிப்பிற்கான வழிமுறைகளையும், ஒவ்வொரு நற்செயல்களிலும் நற்பயன்களையும், எல்லா பாவங்களிலிலிருந்தும் ஸலாமத்தையும் வேண்டுகிறேன். எனது எந்த பாவத்தையும் நீ மன்னிக்காமல் விடுவதை விட்டும், எந்தத் துன்பத்தையும் என்னிடமிருந்து நீங்காமல் இருப்பதை விட்டும், நீ பொருந்திக் கொள்ளும் எனது

எல்லாத் தேவைகளையும் நிறைவேற்றுவதைக் கொண்டும், உன்னிடம் வேண்டுகிறேன்.'' பின்னர் அவர் அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَى விடம் இம்மைக்கும் மறுமைக்கும் தேவையான எதனையும் கேட்டுக் கொள்ளவும். ஏனெனில் இது விதியாக்கப்பட்டது.
எனினும் இது மிகப்பலவீனமான ஹதீது என ஷைக் அல்பானி குறிப்பிட்டுள்ளார். எனவே இந்த ஹதீதைக் கொண்டு நாம் இபாதத் செய்யக் கூடாது.
எனினும் பொதுவாக, இந்த ஹாஜத் எண்ணம் இல்லாமல், பின்னால் இந்தக் குறிப்பிட்ட துஆவும் இல்லாமல் நாம் தொழலாம். ரஸூலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ அவர்களுக்கு ஏதேனும் பிரச்சனை வந்தால், அவர்கள் தொழுகை கடமையில்லாத நேரங்களில் தொழுயையின் பக்கம் விரைவார்கள்.

ஸூரத்துல் பகரா (பசு மாடு)

**2:153** يٰۤاَيُّهَا الَّذِيْنَ اٰمَنُوا اسْتَعِيْنُوْا بِالصَّبْرِ وَالصَّلٰوةِ ؕ اِنَّ اللّٰهَ مَعَ الصّٰبِرِيْنَ

**2:153.** நம்பிக்கை கொண்டோரே! பொறுமையுடனும், தொழுகையுடனும்(இறைவனிடம்) உதவி தேடுங்கள்; நிச்சயமாக அல்லாஹ் பொறுமையுடையவர்களுடன் இருக்கிறான்.

விசுவாசம் கொண்டவர்களே! பொறுமையைக் கொண்டும், தொழுகையைக் கொண்டும் உதவி தேடுங்கள். நிச்சயமாக அல்லாஹ் பொறுமையாளர்களுடன் இருக்கிறான்.
எனவே நாம் இரண்டு ரகஅத்துக்கள் தொழுது நாம் துஆ கேட்டு உதவி கேட்கலாம். அந்த நேரத்தில் கடமையான தொழுகை இருந்தால், அதனைத் தொழுதுவிட்டு கேட்கலாம். தொழுகையில் ஸலாம் சொல்வதற்கு முன்னாலும் துஆ கேட்கலாம்.

### 4. ஸலாத்துல் அவ்வாபீன்

இவ்வாறு ஒரு தொழுகை இருக்கிறது என்றாலும், லுஹாத் தொழுகையைத்தான் இவ்வாறு அழைக்கப்படுகிறது. அவ்வாபீன் என்று தனியாக எந்தத் தொழுகையும் இல்லை. லுஹா, இஷ்ராக் மற்றும் அவ்வாபீன் போன்ற அனைத்தும் ஒரே தொழுகைதான். பஜ்ர் தொழுது, காத்திருந்து சூரியன் உதித்து சுமார் 20 நிமிடங்களுக்குப் பிறகு ஸலாத்துல் இஷ்ராக் தொழ வேண்டும்.
திர்மிதி 586
அனஸ் இப்னு மாலிக் رَضِيَ اللهُ عَنْهُ அறிவிப்பதாவது,

عَنْ أَنَسِ بْنِ مَالِكٍ، قَالَ قَالَ رَسُولُ اللَّهِ صلى الله عليه وسلم " مَنْ صَلَّى الْغَدَاةَ فِي جَمَاعَةٍ ثُمَّ قَعَدَ يَذْكُرُ اللَّهَ حَتَّى تَطْلُعَ الشَّمْسُ ثُمَّ صَلَّى رَكْعَتَيْنِ كَانَتْ لَهُ كَأَجْرِ حَجَّةٍ وَعُمْرَةٍ " . قَالَ قَالَ رَسُولُ اللَّهِ صلى الله عليه وسلم " تَامَّةٍ تَامَّةٍ تَامَّةٍ "

ரஸூலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ கூறியுள்ளார்கள், ''யார் பஜ்ர் தொழுகை ஜமாத்துடன் தொழுது, சூரியன் உதிக்கும் வரை அல்லாஹ் வை நினைவு கூர்ந்து, பின்னர் இரண்டு ரகஅத்துக்கள் தொழுவாறோ, அவருக்கு ஹஜ், மற்றும் உம்ரா செய்த நன்மை கிடைக்கும்.'' பின்னர் ரஸூலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ கூறினார்கள், ''முழுமை படுத்துங்கள், முழுமை படுத்துங்கள், முழுமை படுத்துங்கள்.:.''
எனவே இஷ்ராக் (சூரியன் வெளிச்சம் பரவும்) நேரத்தில் தொழுவதால் அது இஷ்ராக் என்று அழைக்கிறோம். இது இரண்டிலிருந்து, எட்டு ரகஅத்துக்கள் தொழலாம். ஒருவர் கடுமையான வெயில்

அடிக்கும் நேரத்தில் தொழுதால் அதனை அவ்வாபீன் என்று ரஸுலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ கூறியிருக்கிறார்கள்.

## 5. ஸலாத்துல் ரகாயிப்

ரஜப் மாதத்தில் சிலர் இதனைத் தொழுவார்கள். இதற்கு எந்த விதமாக ஆதாரமும் இல்லை.

## 6. ஷ.ஃ.பான் பதினைந்தில்

சிலர் இந்த நாளில் தொழுவதற்கும் ஆதாரப்பூர்வமான ஹதீது ஏதும் இல்லை. ஷ.ஃ.பான் பதினைந்தின் சிறப்பு என்னவென்றால், இணை வைப்பவர்கள், மற்றும் முஸ்லிம் சகோதரர்களை வெறுப்பவர்கள் ஆகியவர்களைத் தவிர மற்றவர்களின் பாவத்தை அல்லாஹ் மன்னிக்கிறான். எனவே அதன் சிறப்பை நாம் கண்ணியப்படுத்த, நாம் வாழ்க்கையில் எவ்வித ஷிர்க்கையும் செய்யாமலும், மற்ற சகோதரர்களின் மீது வெறுப்பு கொள்ளாமலும் இருக்க முயல வேண்டும்.

## 7 மற்ற தொழுகைகள்

ஸலாத்துந் நாரியாஹ், ஸலாத்துல் கினாபாஹ், ஸலாத்துல் குர்பா என பல பெயர்களில் இந்தியாவிலும், எகிப்து, அரேபிய நாடுகளிலும் தொழுவார்கள். எனினும் இதற்கு ஆதாரப்பூர்வமான செய்திகள் ஏதும் இல்லை.

வலியுறுத்தப்பட்டதாக நாம் முந்தைய பாடத்தில் சொன்னது போல, ஒரு நாளில் பன்னிரண்டு ரகஅத்துக்கள், லுஹருக்குப் பிறகு இரண்டு ரகஅத்துக்கள் அதிகமாக, அஸருக்கு முன்பு நான்கு ரகஅத்துக்கள், இஷாவுக்கு முன் வீட்டில் நான்கு ரகஅத்துக்கள், மக்ரிப்புக்கு முன் இரண்டு ரகஅத்துக்கள், லுஹாத் தொழுகை, வித்ருத் தொழுகை, அல்லாஹ் வுக்கு மிகவும் உவப்பான தஹஜ்ஜத் தொழுகை என பல உபரியானத் தொழுகைகள் ஆதாராப்பூர்வமான தொழுகைகள் உள்ளன. இவற்றை நாம் தொழுவதில் அக்கறை எடுக்காமல், மற்ற தொழுகைகளில் நாம் ஈடுபடுவது பித்அத்தாக ஆகிவிடும். ரஸுலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ அவர்கள் காட்டிய வழிமுறையில் நாம் நமது நற்செயல்களை அமைத்துக் கொள்வதும், அவர்கள் கூறாதவற்றைத் தவிர்ப்பதும், நாம் அவர்களின் மீது கொண்டுள்ள அன்பை வெளிப்படுத்தும் வாய்பை நமக்கு அளிக்கும். அவ்வாறு ரஸுலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ அவர்களின் வழியில் நமது இபாதத்துகளை அமைக்கும் பாக்கியத்தை நம் அனைவருக்கும் அல்லாஹ் தந்தருள் புரிவானாக! ஆமீன்.

## Fiqh 33 - Lessons related to Zakat-1 - The Importance of Zakat and the Items for which Zakat is obligatory

## ஃபிக்ஹ் வகுப்பு 33 - ஜகாத் தொடர்பான பாடங்கள்-1 - ஜகாத்தின் முக்கியத்துவம் மற்றும் ஜகாத் கடமையாகும் பொருட்கள்

**ஆசிரியர்: அஷ் ஷெய்க் உவைஸ் உமரி நஸீரி**

இஸ்லாத்தின் ஐந்து கடமைகளில் மூன்றாவது அடிப்படையான ஜகாத் பற்றி இங்கு காண்போம். மதினாவிற்கு வந்த பிறகு இது கடமையாக்கப் பட்டது. இதைக் குறித்து சுமார் 40 இடங்களில் கூறப்பட்டுள்ளது. ஜகாத் சுமார் 35 இடங்களில் நேரடியாகவும், ஸதகாஹ் என சில இடங்களிலும் கூறப்பட்டுள்ளது.

ஸூரத்துல் பகரா (பசு மாடு)

**2:43** وَاَقِيْمُوا الصَّلٰوةَ وَاٰتُوا الزَّكٰوةَ وَارْكَعُوْا مَعَ الرّٰكِعِيْنَ

**2:43.** தொழுகையைக் கடைப் பிடியுங்கள்; ஜகாத்தையும் (ஒழுங்காகக்) கொடுத்து வாருங்கள் ருகூஃ செய்வோரோடு சேர்ந்து நீங்களும் ருகூஃ செய்யுங்கள்.

இவ்வாறு பல இடங்களில் கூறியுள்ளான். அவ்வாறு நல்லடியார்கள் கொடுப்பார்கள் எனவும், கொடுக்காமல் இருந்தால் என்ன தண்டனை எனவும் அவன் கூறியுள்ளான்.

இது வசதி உள்ளவர்கள் மீது கட்டாயமான கடமையாக உள்ளது. கொடுக்காமல் இருந்தால் உள்ள தண்டனை பற்றி அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَى குறிப்பிடுகிறான்:

ஸூரத்துத் தவ்பா (மனவருந்தி மன்னிப்பு தேடுதல்)

**9:35** يَّوْمَ يُحْمٰى عَلَيْهَا فِىْ نَارِ جَهَنَّمَ فَتُكْوٰى بِهَا جِبَاهُهُمْ وَجُنُوْبُهُمْ وَظُهُوْرُهُمْ‌ؕ هٰذَا مَا كَنَزْتُمْ لِاَنْفُسِكُمْ فَذُوْقُوْا مَا كُنْتُمْ تَكْنِزُوْنَ

**9:35.** (நபியே! அவர்களுக்கு நீர் அந்த நாளை நினைவூட்டுவீராக!) அந்த நாளில் (அவர்கள் சேமித்து வைத்த செல்வத்தை) நரக நெருப்பிலிட்டுக் காய்ச்சி, அதைக் கொண்டு அவர்களுடைய நெற்றிகளிலும் விலாப்புறங்களிலும், முதுகுகளிலும் சூடு போடப்படும் - (இன்னும்) “இது தான் நீங்கள் உங்களுக்காகச் சேமித்து வைத்தது - ஆகவே நீங்கள் சேமித்து வைத்ததைச் சுவைத்துப் பாருங்கள்” (என்று கூறப்படும்).

முஸ்லிம் 22

அப்துல்லாஹ் இப்னு உமர் رَضِيَ الله عَنْهُ அறிவிப்பதாவது,

نْ عَبْدِ اللَّهِ بْنِ عُمَرَ، قَالَ قَالَ رَسُولُ اللَّهِ صلى الله عليه وسلم " أُمِرْتُ أَنْ أُقَاتِلَ النَّاسَ حَتَّى يَشْهَدُوا أَنْ لاَ إِلَهَ إِلاَّ اللَّهُ وَأَنَّ مُحَمَّدًا رَسُولُ اللَّهِ وَيُقِيمُوا الصَّلاَةَ وَيُؤْتُوا الزَّكَاةَ

**36.** அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: அல்லாஹ்வைத் தவிர வேறு இறைவன் இல்லை என்றும் முஹம்மத் (ஆகிய நான்) அல்லாஹ்வின் தூதர் ஆவேன் என்றும் உறுதிமொழி கூறி, தொழுகையைக் கடைப்பிடித்து, ஸகாத்தும் வழங்கும்வரை இந்த மக்களுடன் போரிடுமாறு எனக்குக் கட்டளை இடப்பட்டுள்ளது. இவ்வாறு அவர்கள் செய்துவிட்டால் (தகுந்த காரணம் இருந்தாலன்றி) என்னிடமிருந்து தம் உயிரையும்

உடைமைகளையும் பாதுகாத்துக் கொள்வார்கள். அவர்களது (அந்தரங்கம் குறித்த) விசாரணை அல்லாஹ்வின் பொறுப்பில் உள்ளது. இதை அப்துல்லாஹ் பின் உமர் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள். Book: 1 - **ஸஹீஹ் முஸ்லிம்**

இதன் மூலம் கலிமாஹ், தொழுகை, ஜகாத் ஆகிய இவை மூன்றும் முக்கியம் என நாம் அறியலாம். ரஸூலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ அவர்களும் தங்களின் அழைப்பு பணியில் முதலில் ஏகத்துவம், இரண்டாவது தொழுகை மற்றும் மூன்றாவது ஜகாத் என வலியுறுத்திக் கூறியுள்ளார்கள். அதனால்தான் முன்பு குறிப்பிட்ட ஹதீதின்படி முஆத் இப்னு ஜபல் رَضِيَ اللهُ عَنْهُ அவர்களை ஏமன் நாட்டிற்கு ரஸூலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ அனுப்பியபோது, இந்த மூன்றையும் வரிசையாகக் கூறி கடைபிடிக்கச் செய்யுமாறு சொல்லி அனுப்பினார்கள்.

ரஸூலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ அவர்களின் மறைவிற்குப் பிறகு சிலர் ஜகாத் கொடுக்க மறுத்தபோதுஇ அபூபக்கர் (ரழி)அவர்கள் மீது போர் தொடுக்கத் தயங்கவில்லை.

### இந்த ஜகாத் யார் மீது கடமை?

**நிபந்தனைகள்**

1. முஸ்லிமாக இருக்கவேண்டும்
2. சுதந்திரமானவராக இருக்கவேண்டும்
3. நிர்ணயிக்கப்பட்ட அளவை (நிஸாஃப்) அடைந்திருக்க வேண்டும்

காபிர்கள் மீது கடமை இல்லை. அடிமைகள் மீதும் கடமை இல்லை. நிர்ணயிக்கப்பட்ட அளவிற்குக் குறைவாக இருந்தால் கடமை இல்லை.

### ஜகாத் கடமையாகும் பொருட்கள்

1. கால் நடைகள்: இது அன்ஆம் என்று சொல்லப்படும் விலங்குகள். அவை ஆடு (செம்மறி மற்றும் வெள்ளாடு), மாடு மற்றும் ஒட்டகம் ஆகியன. இதற்கான நிஸாஃப் - குறைந்த அளவு. ஐந்து ஒட்டகம், முப்பது மாடுகள், நாற்பது ஆடுகள். இவை ஒரு வருடம் இருந்தால் ஜகாத் கடமையாகும்.
2. விளைபொருட்கள்: சேமித்து வைக்கக்கூடிய தானியங்கள், சேமித்து வைக்கக்கூடிய கனி வகைகள். (உதாரணமாக பேரித்தம் பழம்) அழுகிப் போகக் கூடியவற்றிக்கு கடமை இல்லை. அறுவடை செய்யும்போது கணக்கிட்டு ஜகாத் கொடுக்க வேண்டும். முந்தையது போல ஒரு வருடம் என்ற கால அளவு கிடையாது. ஒரு வருடத்தில் எத்தனை முறை அறுவடை செய்தாலும், அவ்வப்போது ஜகாத் கொடுக்கப்பட வேண்டும்.

### ஜகாத்தின் அளவு

ஆடுகள்:

| ஆடுகளின் எண்ணிக்கை | ஜகாத் கொடுக்க வேண்டியது |
|---|---|
| 40 - 120 | ஒரு ஆடு |
| 121 - 200 | இரண்டு ஆடுகள் |
| 201 - 399 | மூன்று ஆடுகள் |
| இதன் பிறகு ஒவ்வொரு 100 ஆட்டிற்கும் | ஒரு ஆடு |

ஒட்டகங்கள்:

| ஒட்டகங்கள் எண்ணிக்கை | ஜகாத் கொடுக்க வேண்டியது |
|---|---|
| 5 - 9 | ஒரு ஆடு |
| 10 - 14 | இரண்டு ஆடுகள் |
| 15 - 19 | மூன்று ஆடுகள் |
| 20 - 24 | நான்கு ஆடுகள் |
| 25 - 35 | ஒரு வயது முடிந்த ஒட்டகம் |
| 36 - 45 | இரண்டு வயது முடிந்த ஒட்டகம் |
| 46 - 60 | மூன்று வயது முடிந்த ஒட்டகம் |
| 61 - 75 | நான்கு வயது முடிந்த ஒட்டகம் |
| 76 - 90 | இரண்டு வயது முடிந்த இரண்டு ஒட்டகம் |
| 91 - 120 | மூன்று வயது முடிந்த இரண்டு ஒட்டகம் |
| 120 - 129 | இரண்டு வயது முடிந்த மூன்று ஒட்டகம் அல்லது மூன்று வயது முடிந்த இரண்டு ஒட்டகம் |
| இதன் பிறகு ஒவ்வொரு 40 அல்லது ஒவ்வொரு 50 | இரண்டு வயது முடிந்த ஒட்டகம் மூன்று வயது முடிந்த ஒட்டகம் |

மாடுகள்

| மாடுகளின் எண்ணிக்கை | ஜகாத் கொடுக்க வேண்டியது |
|---|---|
| 30 - 39 | இரண்டு வயது முடிந்த மாடு |
| 40 - 59 | மூன்று வயது முடிந்த மாடு |
| 60 - 89 | இரண்டு வயது முடிந்த இரண்டு மாடுகள் |
| இதன் பிறகு ஒவ்வொரு 30 அல்லது ஒவ்வொரு 40 | இரண்டு வயது முடிந்த மாடு மூன்று வயது முடிந்த மாடு |

**Fiqh 34 - Lessons related to Zakat-2 - Zakat Laws on Crop Yield and Gold**

# ஃபிக்ஹ் வகுப்பு 34 - ஜகாத் தொடர்பான பாடங்கள்-2 - விளைச்சல் மற்றும் தங்கம் ஆகியவற்றின் ஜகாத் சட்டங்கள்

**ஆசிரியர்: அஷ் ஷெய்க் உவைஸ் உமரி நஸீரி**

விளைபொருட்கள்: இதன் நிஸாஃப் ஐந்து வஸக் அளவிக்குக்கு மேல் இருந்தால் கடமையாகும். இக்கால அளவின்படி அறுநூறு கிலோ கிராம் ஆகும். (ஒரு 120 கிலோ கிராம்) அறுவடை செய்யும்போது கணக்கிட்டு ஜகாத் கொடுக்க வேண்டும். ஒரு வருடம் என்ற கால அளவு கிடையாது. ஒரு வருடத்தில் எத்தனை முறை அறுவடை செய்தாலும், அவ்வப்போது ஜகாத் கொடுக்கப்பட வேண்டும்.

ஸூரத்துல் அன்ஆம் (ஆடு, மாடு, ஒட்டகம்)

**6:141** وَهُوَ الَّذِىۡۤ اَنۡشَاَ جَنّٰتٍ مَّعۡرُوۡشٰتٍ وَّغَيۡرَ مَعۡرُوۡشٰتٍ وَّالنَّخۡلَ وَالزَّرۡعَ مُخۡتَلِفًا اُكُلُهٗ وَالزَّيۡتُوۡنَ وَالرُّمَّانَ مُتَشَابِهًا وَّغَيۡرَ مُتَشَابِهٍ‌ ؕ كُلُوۡا مِنۡ ثَمَرِهٖۤ اِذَاۤ اَثۡمَرَ وَاٰتُوۡا حَقَّهٗ يَوۡمَ حَصَادِهٖ‌ ۖ وَلَا تُسۡرِفُوۡا‌ ؕ اِنَّهٗ لَا يُحِبُّ الۡمُسۡرِفِيۡنَ

**6:141.** பந்தல்களில் படரவிடப்பட்ட கொடிகளும், படரவிடப்படாத செடிகளும், பேரீத்த மரங்களும் உள்ள சோலைகளையும், புசிக்கத்தக்க விதவிதமான காய், கறி, தானியங்களையும், ஒன்றுபோலும் வெவ்வேறாகவும் தோற்றமளிக்கும் ஜைத்தூன் (ஒலிவம்) மாதுளை ஆகியவற்றையும், அவனே படைத்தான். ஆகவே அவை பலனளித்தால் அவற்றின் பலனிலிருந்து புசியுங்கள். அவற்றை அறுவடை செய்யும் காலத்தில் அதற்குரிய (கடமையான) பாகத்தைக் கொடுத்து விடுங்கள். வீண் விரயம் செய்யாதீர்கள்- நிச்சயமாக அவன் (அல்லாஹ்) வீண் விரயம் செய்பவர்களை நேசிப்பதில்லை.

முஸ்லிம் 979

அபு ஸயித் அல் குத்ரி رَضِيَ الله عَنْهُ அறிவிப்பதாவது,

عَنْ أَبِي سَعِيدٍ الْخُدْرِيِّ، عَنِ النَّبِيِّ صلى الله عليه وسلم قَالَ " لَيْسَ فِيمَا دُونَ خَمْسَةِ أَوْسُقٍ صَدَقَةٌ

**1780.** நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: (தானியங்களில்) ஐந்து "வஸக்"குகளை விடக் குறைவானவற்றில் ஸகாத் இல்லை; (கால்நடைகளில்) ஐந்து ஒட்டகங்களுக்குக் குறைவானவற்றில் ஸகாத் இல்லை. (வெள்ளியில்) ஐந்து "ஊக்கியா"க்களுக்குக் குறைவானவற்றில் ஸகாத் இல்லை. இதை அபூசயீத் அல்குத்ரீ (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள். Book: 12 - **ஸஹீஹ் முஸ்லிம்**

ஜகாத்தின் அளவு: அறுநூறு கிலோ கிராம் அளவிற்கு அதிகமாக வந்தால், அதில் எவ்வளவு கொடுக்க வேண்டும் என்பது இரண்டு விதமாக அளவிட வேண்டும். விளைச்சலுக்குப் பயன்படுத்திய தண்ணீரைப், பொருட்செலவுடன் பெற்றுக் கொண்டாரா அல்லது வானம் பார்த்த பூமி போல தானாக வந்த மழை நீர் அல்லது ஆற்று நீர் கொண்டு பயரிட்டாரா என்பதைக் கொண்டு அளவிட வேண்டும்.

முதலில் கூறிய விதமாக, பொருட்செலவுடன் பயிரிட்டால், அவர் இருபதுக்கு ஒரு பங்கு ஜகாத் கொடுக்க வேண்டும். உதாரணமாக அறுநூறு கிலோ கிராம் அளவிற்கு அறுவடை செய்தால் முப்பது கிலோ கிராம் ஜகாத் கொடுக்க வேண்டும். ஆயிரம் கிலோ கிராம் அளவிற்கு அறுவடை செய்தால் ஐம்பது கிலோ கிராம் ஜகாத் கொடுக்க வேண்டும்.

தானாக வந்த மழை நீர் அல்லது ஆற்று நீர் கொண்டு பயரிட்டு அறுவடை செய்தால், அவர் பத்துக்கு ஒரு பங்கு ஜகாத் கொடுக்க வேண்டும். உதாரணமாக அறுநூறு கிலோ கிராம் அளவிற்கு அறுவடை செய்தால் அறுபது கிலோ கிராம் ஜகாத் கொடுக்க வேண்டும். ஆயிரம் கிலோ கிராம் அளவிற்கு அறுவடை செய்தால் நூறு கிலோ கிராம் ஜகாத் கொடுக்க வேண்டும்.

### தங்கம் மற்றும் வெள்ளி

அக்காலத்தில் தீனார்களும், திர்ஹங்களும் பயன்படுத்தப் பட்டது. தீனார்கள் தங்கக் காசுகளாகும். திர்ஹங்கள் வெள்ளி காசுகளாகும். காகித பணம் அப்போது இல்லை. நம்மிடல் தங்கம் மற்றும் வெள்ளி ஆகியன காசுகளாக இருந்தாலும், அல்லது ஆபரணமாக இருந்தாலும் ஜகாத் கடமையாகும். அறிஞர்களின் மத்தியில் காணப்படும் சிறந்த கருத்து இதுதான்.

அந் நஸாயி 2479

அமர் இப்னு ஷுஐப் رَضِيَ الله عَنْهُஅறிவிப்பதாவது,

عَنْ عَمْرِو بْنِ شُعَيْبٍ، عَنْ أَبِيهِ، عَنْ جَدِّهِ، أَنَّ امْرَأَةً، مِنْ أَهْلِ الْيَمَنِ أَتَتْ رَسُولَ اللَّهِ صلى الله عليه وسلم وَبِنْتٌ لَهَا فِي يَدِ ابْنَتِهَا مَسَكَتَانِ غَلِيظَتَانِ مِنْ ذَهَبٍ فَقَالَ " أَتُؤَدِّينَ زَكَاةَ هَذَا " . قَالَتْ لاَ . قَالَ " أَيَسُرُّكِ أَنْ يُسَوِّرَكِ اللَّهُ عَزَّ وَجَلَّ بِهِمَا يَوْمَ الْقِيَامَةِ سِوَارَيْنِ مِنْ نَارٍ " . قَالَ فَخَلَعَتْهُمَا فَأَلْقَتْهُمَا إِلَى رَسُولِ اللَّهِ صلى الله عليه وسلم فَقَالَتْ هُمَا لِلَّهِ وَلِرَسُولِهِ صلى الله عليه وسلم .

ஏமனைச் சேர்ந்த ஒரு பெண்மணி தம் மகளுடன் ரஸூலுல்லாஹ் صَلَّي الله عَلَيْهِ وَسَلَّمَ அவர்களைக் காண வந்தார். மகளின் கையில் இரண்டு தடிமனான வளையல்கள் இருந்தன. அவர்கள் வினவினார்கள்இ “இவற்றிக்கு நீர் ஜகாத் கொடுத்தீரா?” அவர்இ “இல்லை” என்றார். அவர்கள் கூறினார்கள், “கியாம நாளில் அல்லாஹ் உமக்கு நெருப்பால் ஆன இரண்டு வலையல்களை அளித்தால் நீர் மகிழ்ச்சி கொள்வீரா?” எனவே அவர் அவற்றை எடுத்து ரஸூலுல்லாஹ் صَلَّي الله عَلَيْهِ وَسَلَّمَஅவர்களிடம் கொடுத்துஇ “இது அல்லாஹ்வின் தூதர் صَلَّي الله عَلَيْهِ وَسَلَّمَஅவர்களுக்கு” எனக் கூறினார்.

எனவே ஆபரணமாக இருந்தாலும் ஜகாத் கடமையாகும். இவற்றின் நிஸாஃப் ஆனது இருபது தீனார்கள். அவை ஒரு வருடம் அவரிடம் இருந்தால்தான் கடமையாகும். இருபது தீனார்கள் என்பது இக்காலத்தின் அளவின்படி எண்பத்து ஐந்து கிராம் ஆகும். எண்பத்து ஐந்து கிராம் தங்கத்திற்குக் குறைவாக இருந்தால் கடமை இல்லை. அதுபோல அந்த அளவு அல்லது அதற்கு அதிகமாக இருந்து அது ஒரு வருடத்தின் இடையில் குறைந்து விட்டால் அதற்கு கடமை இல்லை.

முவத்தா மாலிக் 11

..... الزَّكَاةَ فِي كُلِّ عَامٍ يُوزَنُ فَيُؤْخَذُ رُبُعُ عُشْرِهِ .......

...நாற்பதில் ஒரு பங்கு ஜகாத் கொடுக்க வேண்டும்.

இதன்படி நாம் கணக்கிட்டால், 100-க்கு 2.5 சதவீதம் (2.5%) என்ற அளவில் கொடுக்க வேண்டும். அதாவது நம்மிடம் உள்ள தங்கம் நிஸாஃப் அளவைத் தாண்டி அவ்வாறு ஒரு வருடம் நம்மிடல் இருந்தால் அதில் 2.5 சதவீதம் ஜகாத் கொடுக்க வேண்டும். உதாரணமாக 200 கிராம் இருந்ததால் 5 கிராம் ஜகாத் கொடுக்க வேண்டும்.

தங்கத்திற்குப் பதிலாக அதன் மதிப்புள்ள பணத்தையும் நாம் ஜகத்த்தாகக் கொடுக்கலாம்.

**Fiqh 35 - Lessons related to Zakat-3 - Zakat laws on silver and merchandise**

## ஃபிக்ஹ் வகுப்பு 35 - ஜகாத் தொடர்பான பாடங்கள்-3 - வெள்ளி மற்றும் வியாபார பொருட்களின் ஜகாத் சட்டங்கள்

**ஆசிரியர்: அஷ் ஷெய்க் உவைஸ் உமரி நளீமீ**

### வெள்ளிக்கான ஜகாத் கணக்கு

முஸ்னத் அஹ்மத் 711

அலி رَضِي الله عَنْهُ அறிவிப்பதாவது,

عَنْ عَلِيٍّ، رَضِيَ اللَّهُ عَنْهُ قَالَ قَالَ رَسُولُ اللَّهِ صَلَّى اللَّهُ عَلَيْهِ وَسَلَّمَ قَدْ عَفَوْتُ لَكُمْ عَنْ الْخَيْلِ وَالرَّقِيقِ فَهَاتُوا صَدَقَةَ الرِّقَّةِ مِنْ كُلِّ أَرْبَعِينَ دِرْهَمًا دِرْهَمًا وَلَيْسَ فِي تِسْعِينَ وَمِائَةٍ شَيْءٌ فَإِذَا بَلَغَتْ مِائَتَيْنِ فَفِيهَا خَمْسَةُ دَرَاهِمَ

ரஸூலுல்லாஹ் صَلَّي الله عَلَيْهِ وَسلَّمَ கூறியுள்ளார்கள்இ "குதிரைகளுக்கும் அடிமைகளுக்கும் ஜகாத் நிவாரணம் அளித்து விட்டேன். வெள்ளிக்கு ஜகாத் கொடுங்கள். ஒவ்வொரு நாற்பது திர்ஹத்திகும் ஒரு திர்ஹம் கொடுங்கள். நூற்றுத் தொண்ணூற்று ஒன்பதுக்கு ஜகாத் இல்லை. இருநூறை அடைந்தால் ஐந்து திர்ஹம் கடமையாகும்.

இந்த ஹதீதின்படி வெள்ளியின் நிஸாஃப் அளவு 200 திர்ஹங்கள் ஆகும். இது ஒரு வருடம் கழிந்த பிறகு கடமையாகும். 200 திர்ஹங்கள் என்பது இக்கால அளவின்படி 599 கிராம் ஆகும். எல்லா வெள்ளி ஆபரணங்கள் மொத்தம் 599 கிராம் அளவைத் தாண்டினால்இ ஜகாத் கடமையாகும். ஜகாத்தின் அளவு நாற்பது திர்ஹத்திற்கும் ஒரு திர்ஹம் என்று ஹதீதில் கூறப்பட்டது போல 2.5 % கொடுக்க வேண்டும். 600 கிராம் இருந்தால் 15 கிராம் கொடுக்க வேண்டும். இதனை பணமாகவோ அல்லது வெள்ளியாகவோ கொடுக்கலாம்.

தற்போது நாம் புழங்கும் காகிதப் பணத்திற்கு நாம் ஜகாத் கொடுக்க வேண்டுமா? அந்த காலத்தில் புழக்கத்திற்கு தங்கம் மற்றும் வெள்ளி நாணயங்களைப் பயன் படுத்தினார்கள். நாம் காகிதப் பணத்தைப் பயன்படுத்துவதால்இ அதுபோலவே அதற்கும் ஜகாத் கொடுக்க வேண்டும். பணத்திகான நிஸாஃப் அளவுஇ தங்கத்தின் அளவா அல்லது வெள்ளியின் அளவா என்பதில் கருத்து வேறுபாடு உள்ளது.

முந்தைய நிஸாஃப் அளவானதுஇ

ஒட்டகத்திற்கு - ஐந்து ஒட்டகங்கள்.

தங்கத்திற்கு - இருபது தீனார்கள்.

வெள்ளிக்கு - 200 திர்ஹங்கள்இ

அக்காலத்தில் இருபது தீனார்கள் கொடுத்து ஐந்து ஒட்டகங்கள் வாங்கலாம். அதைபோல் 200 திர்ஹங்கள் கொடுத்தும் ஐந்து ஒட்டகங்கள் வாங்கலாம். அனால் இப்போதோ 599 கிராம் வெள்ளியைக் கொடுத்து ஐந்து ஒட்டகங்கள் வாங்க முடியாது. அதே நேரத்தில் எண்பத்து ஐந்து கிராம் தங்கத்தைக் கொடுத்து ஐந்து ஒட்டகங்கள் வாங்கலாம். அதாவது எண்பத்து ஐந்து கிராம் தங்கத்தைக் (சுமார் 4.5 இலட்சம் ரூபாயைக்) கொடுத்து ஐந்து ஒட்டகங்கள் வாங்கலாம். ஆனால் 599 கிராம் வெள்ளியைக் கொடுத்து (சுமார் 45 ஆயிரம் ரூபாயைக்) கொடுத்து ஒரு ஒட்டகம் கூட வாங்க முடியாது. அக்காலத்தில் வெள்ளியின் மதிப்பு இன்றைய மதிப்பை விடக் கூடுதலாக இருந்தது. எனவே பணத்திற்கான நிஸாஃப் தங்கத்தின் நிஸாஃபாக்க எடுத்துக் கொள்வதுதான் சிறந்தது என பல அறிஞர்கள் கருத்து கொள்கின்றனர். எனவே நம்மிடம் எண்பத்து ஐந்து கிராம் தங்கத்தின் மதிப்புள்ள பணம் ஒரு வருடம் முழுமையாக கையில்

இருந்தால்இ நமக்கு ஜகாத் கடமையாகிறது. அதில் 2.5% கணக்கிட்டு ஜகாத் கொடுக்க வேண்டும். இடையில் பணம் குறைந்த விட்டால் கடமை இல்லாமல் போய்விடும். மறுபடியும் அந்தத் தொகை வந்து ஒரு வருடம் இருந்ததால்தான் ஜகாத் கடமையாகும்.

### வியாபாரப் பொருட்கள்

நாம் வியாபாரத்திற்காக சேமித்து வைக்கும் பொருட்களுக்கு ஜகாத் கொடுக்கவேண்டும். உதாரணமாக இரும்புக் கடையில்இ நாம் இருப்பு வைத்திருக்கும் இரும்புப் பொருட்கள்இ தளவாடப் பொருட்கள்இ துணிமணிகள் போன்றவை. காய்கறிகளை நாம் சேமித்து வைப்பதில்லை. எனவே அவை இதில் அடங்காது. இதற்கான நிஸாஃப் அளவையும் தங்கத்தின் அளவாக எடுத்துக் கொள்ளலாம்.

எனவே சுமார் 4.5 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள பொருட்கள் ஒரு வருடம் இருந்தால் அதற்கான தொகைக்கு 2.5% கணக்கிட்டு ஜகாத் கொடுக்க வேண்டும். உதாரணமாகஇ 5 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள பொருட்கள் ஒரு வருடம் இருந்தால் 5,00,000 x 2.5 / 100 = 12,500 ரூபாய் கொடுக்க வேண்டும்.

நாம் வசிக்கும் வீடுஇ பயன்படுத்தும் வீட்டு உபயோகப் பொருட்கள்இ பல இலட்ச மதிப்புள்ள நாம் உபயோகப்படுத்தும் கார்இ நாம் வசிக்க வாங்கிப்போட்ட நிலம் ஆகியவற்றிற்கு ஜகாத் இல்லை. விற்கும் நோக்கில் நிலம் வாங்கிப்போட்டால் அதனை ஜகாத்திற்குக் கணக்கில் கொள்ள வேண்டும்.

ஜகாத் கொடுக்க வேண்டிய பொருளுக்கு அன்றைய நாளில் உள்ள மதிப்பைக் கொண்டு ஜகாத் கணக்கிட வேண்டும்.

Fiqh 36 - Lessons related to Zakat-4 - To whom can Zakat be paid?

# ஃபிக்ஹ் வகுப்பு 36 - ஜகாத் தொடர்பான பாடங்கள்-4 - ஜகாத் யாருக்கெல்லாம் கொடுக்கலாம்?

**ஆசிரியர்: அஷ் ஷெய்க் உவைஸ் உமரி நளீரி**

## ஜகாத் பற்றிய கேள்விகள்

1. தாய் மற்றும் மனைவியிடம் தங்கம் இருந்தால் அவற்றை நாம் கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டுமா? பதில்: அவரவர் வைத்திருக்கும் தங்கங்களுக்கு அவரவர் தாம் பொறுப்பு ஆகும். மொத்தமாகக் கணக்கிடத் தேவை இல்லை.
2. ஒருவரிடம்இ தங்கம்இ பணம் ஆகியன இருந்தால்இ நிஸாஃபுக்கு அனைத்தையும் சேர்த்துக் கணக்கிட வேண்டுமா அல்லதுஇ ஒவ்வொன்றுக்கும் தனித்தனியாக நிஸாஃப் பார்க்க வேண்டுமா? பதில்: இது குறித்து அறிஞர்களுக்கு இடையில் கருத்து வேறுபாடு உள்ளது. ரஸூலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ அவர்கள் தங்கத்திற்கும்இ வெள்ளிக்கும் தனித்தனியாகத்தான் இருபது தீனார்கள் மற்றும் 200 திர்ஹங்கள் எனக் கூறியுள்ளார்கள். எனவே தங்கம், வெள்ளி மற்றும் பணம் ஆகியவற்றைத் தனித்தனியாக நிஸாஃப் பார்க்க வேண்டும் என பல அறிஞர்கள் கூறியுள்ளனர். ஆனால் ஏழைகளை மனிதில் கொண்டும்இ பேணுதலுக்காகவும் நிஸாஃப் சேர்த்துப் பார்த்துக் கொடுக்கலாம் என சில அறிஞர்கள் கூறியுள்ளனர். தனித்தனியாகப் பார்ப்பது சிறந்தது. அல்லாஹ் மிக அறிந்தவன்.
3. நம்மிடம் உள்ள ஜகாத் கொடுக்க வேண்டிய பொருளில் நிஸாஃப் அளவைவிடக் குறைவாக உள்ளது. அதே நேரத்தில் நாம் மற்றவருக்குக் கொடுத்த கடனை சேர்த்தால் நிஸாஃப் அளவைத் தாண்டிவிடும். நாம் என்ன செய்ய வேண்டும்? பதில்: கடன் கொடுத்த பணம் திரும்பி வரும் என்ற நம்பிக்கை இருந்தால் அதனைச் சேர்த்து தான் கணக்கிட வேண்டும். திருப்பி வராது என்ற நிலை தோன்றினால். அந்த வருடத்திற்கு அதனைச் சேர்க்க வேண்டியதில்லை என்பது பல அறிஞர்களின் கருத்தாகும்.
4. அடகு வைக்கப்பட்ட தங்கத்தையும் சேர்த்து தான் கணக்கிட வேண்டும்.
5. கடன் உள்ளவர்களுக்கு ஜகாத் கடமையில்லை. ஆனால் செல்வந்தர்கள் வேறு காரணங்களுக்காக கடன் வாங்கினால் அவர்கள் அதனைக் காரணம் காட்டி ஜகாத்தைத் தவிர்க்க முடியாது

## யாருக்கெல்லாம் கொடுக்கலாம்?

ஸூரத்துத் தவ்பா (மனவருந்தி மன்னிப்பு தேடுதல்)

**9:60** اِنَّمَا الصَّدَقٰتُ لِلْفُقَرَآءِ وَالْمَسٰكِيْنِ وَالْعٰمِلِيْنَ عَلَيْهَا وَالْمُؤَلَّفَةِ قُلُوْبُهُمْ وَفِى الرِّقَابِ وَالْغٰرِمِيْنَ وَفِىْ سَبِيْلِ اللّٰهِ وَابْنِ السَّبِيْلِ‌ؕ فَرِيْضَةً مِّنَ اللّٰهِ‌ؕ وَاللّٰهُ عَلِيْمٌ حَكِيْمٌ

**9:60.** (ஜகாத் என்னும்) தானங்கள் தரித்திரர்களுக்கும், ஏழைகளுக்கும், தானத்தை வசூல் செய்யும் ஊழியர்களுக்கும், இஸ்லாத்தின் பால் அவர்கள் உள்ளங்கள் ஈர்க்கப்படுவதற்காகவும், அடிமைகளை விடுதலை செய்வதற்காகவும், கடன் பட்டிருப்பவர்களுக்கும், அல்லாஹ்வின் பாதையில் (போர் புரிவோருக்கும்), வழிப்போக்கர்களுக்குமே உரியவை. (இது) அல்லாஹ் விதித்த கடமையாகும் - அல்லாஹ் (யாவும்) அறிபவன், மிக்க ஞானமுடையோன்.

இதில் சொல்லப்பட்ட எட்டு நபர்களுக்குத்தான் ஜகாத் கொடுக்க வேண்டும். அவர்கள் அல்லாமல் வேறு யாருக்கும் கொடுத்தால், ஜகாத் கடமை நிறைவேறாது.

அவர்கள்:

1. தரித்திரர்கள்
2. ஏழைகள்
3. தானத்தை வசூல் செய்யும் ஊழியர்கள்
4. இஸ்லாத்தின் பால் அவர்கள் உள்ளங்கள் ஈர்க்கப்படுவதற்காக
5. அடிமைகளை விடுதலை செய்வதற்காக
6. கடன் பட்டிருப்பவர்கள்
7. அல்லாஹ்வின் سُبْحَانَهُ وَتَعَالَى பாதையில் (போர் புரிவோருக்கு)
8. வழிப்போக்கர்களுக்கு

தரித்திரர்கள் மற்றும் ஏழைகள்: இவர்களில் ஏழையை விட மிகவும் வறியவர்கள் தரித்திரர்லாகும். அடிப்படைத் தேவைகளைக் கூட பூர்த்தி செய்ய இயலாதவர்கள். பசிக்குக் கூட வழி இல்லாதவர்கள். ஏழைகள் ஓரளவு சிறந்தவர்கள்.

ஜகாத் வசூல் செய்பவர்களுக்கு அதிலிருந்து கூலியாகக் கொடுக்கலாம்.

முஸ்லிம் அல்லாதவர்கள் உதவி செய்யப்பட்டால், இஸ்லாத்தை ஏற்க வாய்ப்புண்டு என்றல் அவர்களுக்கு ஜகாத் கொடுக்கலாம். முஸ்லிம்களாக பெயரளவில் உள்ளவர்களை இஸ்லாத்தில் ஈடுபாடு கொள்ளச் செய்வதற்கும் ஜகாத் கொடுக்கலாம்.

அடிமை நிலை முன்னர் இருந்தது. அவர்களை விடுவிக்க ஜகாத் பொருளைப் பயன்படுத்தலாம். இகாகத்தில் அப்பாவி முஸ்லிம்கள், தேவை இல்லாமல் சிறை பட்டிருந்தால், அவர்கை விடுவிக்க ஜகாத் பொருளைப் பயன்படுத்தலாம்.

சுயமாக கடனை அடைக்க முடியாதவர்களுக்கு ஜகாத் கொடுக்கலாம். திருப்பித் திருப்பி கடன் வாங்குபவர்களை இதில் சேர்க்கமுடியாது.

அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَى வின் பாதையில் என்பது பொதுவான சொல் என்றாலும், எல்லா நல்லவற்றையும் இதில் சேர்த்தால், எட்டு நபர்கள்தான் ஜகாத் தகுதியுள்ளவர்கள் என்பது பொருளற்றுப் போகும். ஜிஹாதிற்காக செல்பவர்களுக்கு இது பொருந்தும். குர்ஆனில் அல்லாஹ்வின் பாதையில் என்பது ஜிஹாத் என அதிகமாகக் கூறப்பட்டுள்ளது. பள்ளிவாசலுக்கு, மதரஸாக்களுக்கு ஜகாத் கொடுக்கக் கூடாது.

வழிப்போக்கர்கள் செல்வந்தர்களாக இருக்கலாம். ஆனால் அவர்கள் பயணத்தில் இருக்கும்போது பணம் இல்லாத நிலை ஏற்பட்டால் அவர்கள் ஜகாத் பெற அந்நேரத்தில் தகுதியானவர்கள்.

## யாருக்கெல்லாம் கொடுக்கக் கூடாது?

1. மேலே கூறப்பட்ட எட்டு நபர்கள் தவிர.
2. இந்த பட்டியலின்படி தகுதி இருந்தாலும் சிலருக்குக் கொடுக்கக் கூடாது.
   a. அஹ்லுல் பைத் - ரஸுலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ அவர்களின் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள்.
   b. தாய் தந்தையர்கள்இ தாத்தா மற்றும் பாட்டி. மகன்இ மகள்இ பேரன் மற்றும் பேத்தி மற்றும் மனைவி.

இவர்கள் தடை செய்யப்படக் காரணம், இவர்களைக் கண்காணிப்பது நமது நேரடிப் கடமையாகும். என்னினும் மனைவி தம் கணவருக்கு ஜகாத் கொடுக்கலாம். ஜகாத் கொடுப்பதில் மற்ற உறவினர்களுக்கு முன்னுரிமை கொடுப்பது சிறந்தது.

அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَى நம் அனைவருக்கும் ஜகாத் கடமையை நிறைவேற்றும் பாக்கியம் அளிப்பானாக!

**Fiqh 37 - Lessons related to Zakat-4 - Laws of Fitra and Regulations for Giving Sadhaka**

## ஃபிக்ஹ் வகுப்பு 37 - ஜகாத் தொடர்பான பாடங்கள்-5 - ஃபித்ராவின் சட்டங்கள் மற்றும் ஸதகா கொடுப்பதின் ஒழுங்குகள்

**ஆசிரியர்: அஷ் ஷெய்க் உவைஸ் உமரி நஸீரி**

ஜகாத்தை நாம் உடனே கொடுக்க வேண்டும். எனினும் ஜகாத்தை முற்படுத்தி கொடுப்பது அனுமதிக்கப் பட்டுள்ளது. தங்களின் பெரிய தந்தை அப்பாஸ் رَضِيَ الله عَنْهُ அவர்களிடம், ஒரு வருடம் முன்பாகக் கொடுக்க ரஸூலுல்லாஹ் صَلَّى الله عَلَيْهِ وَسلَّمَ அவர்களிடம் அனுமதி கேட்டபோது, ஏழைகளின் நலன் கருதி அனுமதி கொடுத்தார்கள்.

### ஃபித்ராவின் சட்டங்கள்

ஸதகத்துல் ஃபித்ர் என்பதும் ஜகாத்தின் ஒரு வகையாகும். இதுவும் அதைப் போலவே கட்டாயக் கடமையாகும். இது யார் மீது கடமையாகும்? இதற்கான ஒரு நிஸாஃபை ரஸூலுல்லாஹ் صَلَّى الله عَلَيْهِ وَسلَّمَ ஏற்படுத்தவில்லை. யாருக்கு அதனைக் கொடுக்க முடியுமோஇ அவர் அதனைக் கொடுக்க வேண்டும். குறிப்பிட்ட அளவு நிஸாஃப் சொல்லப்படவில்லைஇ குடும்பத்தில் உள்ள ஒவ்வொரு நபருக்கும் கடமை என ரஸூலுல்லாஹ் صَلَّى الله عَلَيْهِ وَسلَّمَ கூறியுள்ளார்கள். ஆண், பெண் மற்றும் அக்காலத்தில் அடிமைகளும் அதில் அடங்கும். அன்று பிறக்கும் குழந்தைக்கும் இது பொருந்தும்.

### பித்ராவின் அளவு

ஒரு ஸா அளவு ஆகும்.

முஸ்லிம் 984

இப்னு உமர் رَضِيَ الله عَنْهُ அறிவிப்பதாவது,

نِ ابْنِ عُمَرَ، قَالَ فَرَضَ رَسُولُ اللَّهِ صلى الله عليه وسلم زَكَاةَ الْفِطْرِ صَاعًا مِنْ تَمْرٍ أَوْ صَاعًا مِنْ شَعِيرٍ عَلَى كُلِّ

**பாடம் : 4 நோன்புப் பெருநாள் தர்மமாகப் பேரீச்சம் பழம், தோல் நீக்கப்படாத கோதுமை ஆகியவற்றை வழங்குவது முஸ்லிம்கள் மீது கடமையாகும். 1791.** இப்னு உமர் (ரலி) அவர்கள் கூறியதாவது: முஸ்லிம்களில் சுதந்திரமானவர்கள், அடிமைகள், ஆண்கள் மற்றும் பெண்கள் ஆகிய அனைவர் மீதும் பேரீச்சம் பழத்தில் ஒரு "ஸாஉ" அல்லது தோல் நீக்கப்படாத (வாற்) கோதுமையில் ஒரு "ஸாஉ" (ஏழைகளுக்கு வழங்குவது கடமையாகும்) என ரமளான் நோன்புப் பெருநாள் தர்மத்தை அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் மக்களுக்கு நிர்ணயித்தார்கள். இந்த ஹதீஸ் மூன்று அறிவிப்பாளர்தொடர்களில் வந்துள்ளது. Book: 12 - **ஸஹீஹ் முஸ்லிம்**

ஒரு ஸாஉ என்பது ஒரு பாத்திரமாகும். நாடு நிலையான ஒரு மனிதர் இரண்டு கைகளால் நான்கு முறை தானியத்தை எடுத்துப் போட்டால் அந்த பாத்திரம் நிறைந்துவிடும். இததான் ஒருவருக்குக் கொடுக்கும் அளவாகும். இது சுமார் 2-2.5 கிலோ வரலாம். எனவே பேணுதலுக்காக 2.5 கிலோ கொடுக்கலாம். எதனைக் கொடுக்க வேண்டும் என்பதில் கருத்து வேறுபாடு உள்ளது. ரஸூலுல்லாஹ் صَلَّى الله عَلَيْهِ وَسلَّمَ அவர்களின் காலத்தில் தானியம் -

கோதுமை, பேரிச்சம்பழம் அல்லது பார்லி போன்றவைகளைக் கொடுப்பார்கள். எனவே தானியம் கொடுப்பதுதான் சிறந்தது. சில அறிஞர்கள் அதற்கான பணத்தையும் கொடுக்கலாம். எனினும் தானியம் கொடுப்பதுதான் ஸுன்னாஹ் முறையாகும்.

### பித்ரா கொடுக்க வேண்டிய நேரம்

புஹாரி 1509:

இப்னு உமர் رَضِـي الله عَنْهُ அறிவிப்பதாவது,

نِ ابْنِ عُمَرَ ـ رضى الله عنهما ـ أَنَّ النَّبِيَّ صلى الله عليه وسلم أَمَرَ بِزَكَاةِ الْفِطْرِ قَبْلَ خُرُوجِ النَّاسِ إِلَى الصَّلاَةِ.

**1509.** இப்னு உமர் (ரலி) அறிவிக்கார். நோன்புப் பெருநாள் தர்மத்தை மக்கள் தொழுகைக்காகப் புறப்படுவதற்கு முன்னால் கொடுத்து விடும்படி நபி(ஸல்) அவர்கள் கட்டளையிட்டார்கள். Book: 24 - **ஸஹீஹுல் புகாரி**

முவத்தா மாலிக் 17/56:

யஹ்யா رَضِـي الله عَنْهُ அறிவிப்பதாவது,

نَّ عَبْدَ اللَّهِ بْنَ عُمَرَ، كَانَ يَبْعَثُ بِزَكَاةِ الْفِطْرِ إِلَى الَّذِي تُجْمَعُ عِنْدَهُ قَبْلَ الْفِطْرِ بِيَوْمَيْنِ أَوْ ثَلاَثَةٍ .

அப்துல்லாஹ் இப்னு உமர் رَضِـي الله عَنْهُ நோன்பு முடியும் இரண்டு அல்லது மூன்று நாட்களுக்கு முன்பே ஜகாத் ஃபித்ராவை சேமித்துக் கொடுப்பார்கள்.

எனவே நாம் முன்பும் கொடுக்கலாம். எனினும் பெருநாள் தொழுகைக்கு முன்பே கொடுத்து விடவேண்டும். ஃபித்ராவைக் கொடுக்காமல் தொழச் சென்றால் தம் கடமையை விட்டவர் ஆவார். அவர் தௌபா செய்ய வேண்டும்.

ஃபித்ராவைக் வறியவர்களுக்குக் கொடுக்க வேண்டும்.

### ஃபித்ராவின் நோக்கம்

இப்னு மாஜாஹ் 1827:

இப்னு அப்பாஸ் رَضِـي الله عَنْهُ அறிவிப்பதாவது,

نِ ابْنِ عَبَّاسٍ، قَالَ فَرَضَ رَسُولُ اللَّهِ ـ صلى الله عليه وسلم ـ زَكَاةَ الْفِطْرِ طُهْرَةً لِلصَّائِمِ مِنَ اللَّغْوِ وَالرَّفَثِ وَطُعْمَةً لِلْمَسَاكِينِ فَمَنْ أَدَّاهَا قَبْلَ الصَّلاَةِ فَهِيَ زَكَاةٌ مَقْبُولَةٌ وَمَنْ أَدَّاهَا بَعْدَ الصَّلاَةِ فَهِيَ صَدَقَةٌ مِنَ الصَّدَقَاتِ .

ஆபாச, கெட்ட பேச்சிலிருந்து நோன்பாளியை சுத்தப்படுத்தவும், ஏழைகளுக்கு உணவளிக்கவும் ஜகாத் ஃபித்ராவை ரஸூலுல்லாஹ் صَلَّي الله عَلَيْهِ وَسلَّمَ விதியாக்கினார்கள். யார் ஈதுக்கு முன்னால் அதனைக் கொடுக்கிறார்களோ அது ஜகாத்தாக ஏற்றுக் கொள்ளப்படும். தொழுகைக்குப் பின்னர் கொடுத்தால் அது (சாதாரண) ஸதகாவாகும்.

மற்ற விஷயங்கள்:

ஒரு சில சமயங்களில் உபரியான தானதர்மங்கள் கடமையான ஒன்றாக மாற வாய்ப்புள்ளது. சூழ்நிலையைப் பொறுத்து அவ்வாறு மாற வாய்ப்புள்ளது. ஒருவர் நம் கண் முன்னால்

பசியாலோ அல்லது தாகத்தாலோ அவதிப்படும்போது அவருக்கு அதனை அளிப்பது நமக்குக் கடமையாகிவிடும்.

முஸ்லிம் 2659:

அபூ ஹுரைராஹ் رَضِيَ الله عَنْهُ அறிவிப்பதாவது:

نْ أَبِي هُرَيْرَةَ، قَالَ قَالَ رَسُولُ اللَّهِ صلى الله عليه وسلم " إِنَّ اللَّهَ عَزَّ وَجَلَّ يَقُولُ يَوْمَ الْقِيَامَةِ يَا ابْنَ آدَمَ مَرِضْتُ فَلَمْ تَعُدْنِي . قَالَ يَا رَبِّ كَيْفَ أَعُودُكَ وَأَنْتَ رَبُّ الْعَالَمِينَ . قَالَ أَمَا عَلِمْتَ أَنَّ عَبْدِي فُلاَنًا مَرِضَ فَلَمْ تَعُدْهُ أَمَا عَلِمْتَ أَنَّكَ لَوْ عُدْتَهُ لَوَجَدْتَنِي عِنْدَهُ يَا ابْنَ آدَمَ اسْتَطْعَمْتُكَ فَلَمْ تُطْعِمْنِي . قَالَ يَا رَبِّ وَكَيْفَ أُطْعِمُكَ وَأَنْتَ رَبُّ الْعَالَمِينَ . قَالَ أَمَا عَلِمْتَ أَنَّهُ اسْتَطْعَمَكَ عَبْدِي فُلاَنٌ فَلَمْ تُطْعِمْهُ أَمَا عَلِمْتَ أَنَّكَ لَوْ أَطْعَمْتَهُ لَوَجَدْتَ ذَلِكَ عِنْدِي يَا ابْنَ آدَمَ اسْتَسْقَيْتُكَ فَلَمْ تَسْقِنِي . قَالَ يَا رَبِّ كَيْفَ أَسْقِيكَ وَأَنْتَ رَبُّ الْعَالَمِينَ قَالَ اسْتَسْقَاكَ عَبْدِي فُلاَنٌ فَلَمْ تَسْقِهِ أَمَا إِنَّكَ لَوْ سَقَيْتَهُ وَجَدْتَ ذَلِكَ عِنْدِي " .

**5021.** அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: வல்லமையும் மாண்பும் மிக்க அல்லாஹ் மறுமை நாளில் (ஒரு மனிதரிடம்), "ஆதமின் மகனே! (மனிதா!) நான் நோயுற்றிருந்தபோது என்னை உடல்நலம் விசாரிக்க நீ வரவில்லையே (ஏன்)?" என்று கேட்பான். அதற்கு மனிதன், "என் இறைவா! நீயோ அகிலத்தாரின் அதிபதியாயிருக்க, உன்னை நான் எவ்வாறு உடல்நலம் விசாரிப்பேன்?" என்று கேட்பான். அதற்கு அல்லாஹ், "உனக்குத் தெரியுமா? என் அடியானான இன்ன மனிதன் நோய்வாய்ப்பட்டிருந்தபோது அவனிடம் சென்று நீ நலம் விசாரிக்கவில்லை. தெரிந்துகொள்: அவனை உடல்நலம் விசாரிக்க நீ சென்றிருந்தால் அவனிடம் என்னைக் கண்டிருப்பாய்" என்று கூறுவான். மேலும் அல்லாஹ், "ஆதமின் மகனே! (மனிதா!) நான் உன்னிடம் உணவு கேட்டேன். ஆனால், நீ எனக்கு உணவளிக்கவில்லை" என்பான். அதற்கு மனிதன், "என் இறைவா! நீ அகிலத்தாரின் அதிபதியாயிருக்க, உனக்கு நான் எவ்வாறு உணவளிக்க இயலும்?" என்று கேட்பான். அதற்கு அல்லாஹ், "உனக்குத் தெரியுமா? உன்னிடம் என் அடியானான இன்ன மனிதன் உண்பதற்கு உணவு கேட்டான். ஆனால், அவனுக்கு நீ உணவளிக்கவில்லை. தெரிந்துகொள்: அவனுக்கு நீ உணவளித்திருந்தால் அ(தற்குரிய)தை என்னிடம் நீ கண்டிருப்பாய்" என்று கூறுவான். மேலும் "ஆதமின் மகனே! (மனிதா!) நான் உன்னிடம் குடிப்பதற்கு தண்ணீர் கேட்டேன். ஆனால், எனக்கு நீ தண்ணீர் தரவில்லை" என்று அல்லாஹ் கூறுவான். அதற்கு மனிதன், "என் இறைவா! நீயோ அகிலத்தாரின் அதிபதியாயிருக்க,உனக்கு நான் எவ்வாறு தண்ணீர் தர இயலும்?" என்று கேட்பான். அதற்கு அல்லாஹ், "என் அடியானான இன்ன மனிதன் உன்னிடம் குடிப்பதற்குத் தண்ணீர் கேட்டான். ஆனால், அவனுக்கு நீ தண்ணீர் கொடுக்கவில்லை. தெரிந்துகொள்: அவனுக்குக் குடிப்பதற்கு நீ தண்ணீர் கொடுத்திருந்தால் அ(தற்குரிய)தை என்னிடம் நீ கண்டிருப்பாய்" என்று கூறுவான். இதை அபூஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள். Book: 45 - **ஸஹீஹ் முஸ்லிம்**

## ஜகாத் கொடுக்கும்போது பேண வேண்டியவை

உள்ளச்சத்துடன் நாம் கொடுக்க வேண்டும். நம்மைக் கொடையாளி என்று மக்கள் சொல்ல வென்றும் என்ற எண்ணத்தில் கொடுக்கக்கூடாது. அவ்வாறு கொடுப்பவனை முதலில் விசாரித்து நரகில் எறியப்படும்.

நாம் தானதர்மங்கள் கொடுக்கும் எண்ணம் இருந்தால் தாமதமில்ல்லாமல் உடனே கொடுத்து விட வேண்டும். ஒரு தடவை ரஸூலுல்லாஹ் صَلَّي الله عَلَيْهِ وَسلَّمَ தொழுதுவிட்டு உடனே பள்ளிவாசல் விட்டு சென்று விட்டார்கள். காரணம் கேட்டபோது தங்களுக்கு ஸதக்கா பணம் நினைவிற்கு வந்ததால் அதனைக் கொடுக்கச் சென்றதாகக் கூறினார்கள்.

நாம் கொடுத்த ஜகாத்தைச் சொல்லிக்காட்டினால் அதன் நன்மை வீணாகிவிடும்.

2:264 يٰۤاَيُّهَا الَّذِيْنَ اٰمَنُوْا لَا تُبْطِلُوْا صَدَقٰتِكُمْ بِالْمَنِّ وَالْاَذٰىۙ كَالَّذِىْ يُنْفِقُ مَالَهٗ رِئَآءَ النَّاسِ وَلَا يُؤْمِنُ بِاللّٰهِ وَالْيَوْمِ الْاٰخِرِ‌ؕ فَمَثَلُهٗ كَمَثَلِ صَفْوَانٍ عَلَيْهِ تُرَابٌ فَاَصَابَهٗ وَابِلٌ فَتَرَكَهٗ صَلْدًا ‌ؕ لَا يَقْدِرُوْنَ عَلٰى شَىْءٍ مِّمَّا كَسَبُوْا ‌ؕ وَاللّٰهُ لَا يَهْدِى الْقَوْمَ الْكٰفِرِيْنَ

**2:264.** நம்பிக்கை கொண்டவர்களே! அல்லாஹ்வின் மீதும், இறுதி நாளின் மீதும் நம்பிக்கை கொள்ளாமல், மனிதர்களுக்குக் காட்டுவதற்காகவே தன் பொருளைச் செலவழிப்பவனைப்போல், கொடுத்ததைச் சொல்லிக் காண்பித்தும், நோவினைகள் செய்தும் உங்கள் ஸதக்காவை (தான தர்மங்களைப்) பாழாக்கி விடாதீர்கள்; அ(ப்படிச் செய்ப)வனுக்கு உவமையாவது: ஒரு வழுக்குப் பாறையாகும்; அதன் மேல் சிறிது மண் படிந்துள்ளது; அதன் மீது பெருமழை பெய்து (அதிலிருந்த சிறிது மண்ணையும் கழுவித்) துடைத்து விட்டது; இவ்வாறே அவர்கள் செய்த -(தானத்)திலிருந்து யாதொரு பலனையும் அடைய மாட்டார்கள்; இன்னும், அல்லாஹ் காஃபிரான மக்களை நேர் வழியில் செலுத்துவதில்லை.

தானதர்மங்கள் கொடுக்கும்போது உறவினர்களுக்கு முன்னுரிமை கொடுக்க வேண்டும்.

அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَى நம் அனைவருக்கும் ஜகாத் கடமையை நிறைவேற்றும் பாக்கியம் அளிப்பானாக!

## Fiqh 38 - Lessons related to Fasting-1 - Laws of Fasting

# ஃபிக்ஹ் வகுப்பு 38 - நோன்பு தொடர்பான பாடங்கள்-1 - நோன்பின் சட்டங்கள்

**ஆசிரியர்: அஷ் ஷெய்க் உவைஸ் உமரி நஸீரி**

காலையில் ஃபஜ்ர் நேரத்திலிருந்து சூரியன் மறையும்வரை நோன்பு இருப்பது என்பது இஸ்லாத்தின் நான்காம் தூணாக உள்ளது.

முஸ்லிம் 1

أَبِي عُمَرُ بْنُ الْخَطَّابِ قَالَ بَيْنَمَا نَحْنُ عِنْدَ رَسُولِ اللَّهِ صلى الله عليه وسلم ذَاتَ يَوْمٍ إِذْ طَلَعَ عَلَيْنَا رَجُلٌ شَدِيدُ بَيَاضِ الثِّيَابِ شَدِيدُ سَوَادِ الشَّعَرِ لاَ يُرَى عَلَيْهِ أَثَرُ السَّفَرِ وَلاَ يَعْرِفُهُ مِنَّا أَحَدٌ حَتَّى جَلَسَ إِلَى النَّبِيِّ صلى الله عليه وسلم فَأَسْنَدَ رُكْبَتَيْهِ إِلَى رُكْبَتَيْهِ وَوَضَعَ كَفَّيْهِ عَلَى فَخِذَيْهِ وَقَالَ يَا مُحَمَّدُ أَخْبِرْنِي عَنِ الإِسْلاَمِ . فَقَالَ رَسُولُ اللَّهِ صلى الله عليه وسلم " الإِسْلاَمُ أَنْ تَشْهَدَ أَنْ لاَ إِلَهَ إِلاَّ اللَّهُ وَأَنَّ مُحَمَّدًا رَسُولُ اللَّهِ وَتُقِيمَ الصَّلاَةَ وَتُؤْتِيَ الزَّكَاةَ وَتَصُومَ رَمَضَانَ وَتَحُجَّ الْبَيْتَ إِنِ اسْتَطَعْتَ إِلَيْهِ سَبِيلاً . قَالَ صَدَقْتَ . قَالَ فَعَجِبْنَا لَهُ يَسْأَلُهُ وَيُصَدِّقُهُ .

உமர் பின் அல் கத்தாப் رَضِي الله عَنْهُ அவர்கள் என்னிடம் தெரிவித்தார்கள்: நாங்கள் ஒரு நாள் ரஸூலுல்லாஹ் صَلَّى الله عَلَيْه وَسَلَّمَ அவர்களின் அருகில் இருந்தபோது தூய வெண்ணிற ஆடை அணிந்த, அடர் கறுப்பு நிறத்தில் தலைமுடி உடைய ஒரு மனிதர் வந்தார். பயணத்தில் வந்த எந்த அடையாளமும் அவரிடம் காணப்படவில்லை;எங்களில் எவருக்கும் அவரை (யார் என)த் தெரிய வில்லை. அவர் ரஸூலுல்லாஹ் صَلَّى الله عَلَيْه وَسَلَّمَ அவர்களின் அருகில் (சென்று), தம் முழங்கால்களை நபியவர்களின் முழங்கால்களோடு இணைத்துக்கொண்டு (நெருக்கமாக) அமர்ந்தார். அவர் தம் கைகளைத் தம் தொடைகள்மீது வைத்(து பவ்வியமாக அமர்ந்)தார். பிறகு முஹம்மதே! இஸ்லாம் (அடிபணிதல்) என்றால் என்னவென்று எனக்குத் தெரிவியுங்கள்" என்று கேட்டார். அதற்கு அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَ வின் தூதர் (ஸல்) அவர்கள், இஸ்லாம் என்பது, அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَ வைத் தவிர வேறு இறைவன் இல்லை என்றும் முஹம்மத் (ஆகிய நான்) அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَ வின் தூதர் என்றும் நீங்கள் உறுதி கூறுவதாகும். மேலும்,தொழுகையைக் கடைப்பிடிப்பதும், ஸகாத்தை வழங்கிவருவதும், ரமளான் மாதத்தில் நோன்பு நோற்பதும், சென்றுவர இயன்றால் இறையில்லம் கஅபாவில் ஹஜ்" செய்வதும் ஆகும்" என்று பதிலளித்தார்கள்.

நோன்பு நோற்பது பருவம் அடைந்த ஆண், பெண் அனைவரின் மீதும் கடமையாகும்.

ஸூரத்துல் பகரா (பசு மாடு)

**2:183** يٰۤاَيُّهَا الَّذِيْنَ اٰمَنُوْا كُتِبَ عَلَيْكُمُ الصِّيَامُ كَمَا كُتِبَ عَلَى الَّذِيْنَ مِنْ قَبْلِكُمْ لَعَلَّكُمْ تَتَّقُوْنَۙ

**2:183.** ஈமான் கொண்டோர்களே! உங்களுக்கு முன் இருந்தவர்கள் மீது நோன்பு விதிக்கப்பட்டிருந்தது போல் உங்கள் மீதும்(அது) விதிக்கப்பட்டுள்ளது; (அதன் மூலம்) நீங்கள் இறையச்சமுடையோர் ஆகலாம்

முதலில் ஆஷூரா நோன்பு கடமையாக இருந்தது. ஹிஜ்ரி இரண்டாம் ஆண்டில் ரமழான் நோன்பு விதியான பிறகு அந்த நோன்பு நஃபில் நோன்பாக ஆனது. ரஸூலுல்லாஹ் صَلَّى الله عَلَيْه وَسَلَّمَ தங்களின் வாழ்கையில் ஒன்பது வருடங்கள் ரமழான் நோன்பு வைத்திருக்கிறார்கள்.

ரமழான் பிறை பார்த்து நோன்பை ஆரம்பிக்க வேண்டும். ஷவ்வால் பிறை பார்த்து நோன்பை முடிக்க வேண்டும். நோன்பின்

முஸ்லிம் 1081

அபூ ஹுரைராஹ் رَضِيَ الله عَنْهُ அறிவிப்பதாவது:

عَنْ أَبِي هُرَيْرَةَ، - رضى الله عنه - أَنَّ النَّبِيَّ صلى الله عليه وسلم قَالَ " صُومُوا لِرُؤْيَتِهِ وَأَفْطِرُوا لِرُؤْيَتِهِ فَإِنْ غُمِّيَ عَلَيْكُمْ فَأَكْمِلُوا الْعَدَدَ " .

**1972.** அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: நீங்கள் பிறையைப் பார்த்து நோன்பு நோறுங்கள். (மறு)பிறையைப் பார்த்து நோன்பை விடுங்கள். (ரமளான் பிறை இருபத்தொன்பதாம் நாள் மாலை) உங்களுக்கு மேகமூட்டம் தென்படுமானால் முப்பதாவது நாளும் நோன்பு நோற்றுக்கொள்ளுங்கள். இதை அபூஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள். Book: 13 - **ஸஹீஹ் முஸ்லிம்**

## நோன்பின் நிய்யத்

நிய்யத்தானது உள்ளத்தில் வரும் எண்ணம்தாம். எனவே இது வாய் வழியாகச் சொல்வதில்லை. அதற்கு எந்த ஆதாரமும் இல்லை. உள்ளத்தால் அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَى. வுக்கு என்றே எல்லா அமல்களையும் நாம் எண்ண வேண்டும். உள்ளத்தில் பெருமை, முகஸ்துதி கொண்டு சொல்லால் நாம் எதனையும் மொழிவதில் எந்த பொருளும் இல்லை.

எனவே நாம் நோன்பு நோற்பதற்கான வாய் மொழி நிய்யத் ஏதும் இல்லை. மற்ற நஃபில் நோன்பு நிய்யத்திற்கும், ரமழான் நோன்பு நிய்யத்திற்கும் வேறுபாடு உள்ளது. மற்ற நஃபில் நோன்பு நிய்யத் ஃபஜ்ருக்கு முன்பு எண்ணவேண்டும் என்ற அவசியம் இல்லை. அனால் ரமழான் நோன்பு நிய்யத் ஃபஜ்ருக்கு முன்பு சஹர் நேரத்திலேயே வர வேண்டும்.

முஸ்லிம் 1154

அன்னை ஆயிஷா رَضِيَ اللّٰهُ عَنْهَا அறிவிப்பதாவது:

عَنْ عَائِشَةَ أُمِّ الْمُؤْمِنِينَ، قَالَتْ دَخَلَ عَلَىَّ النَّبِيُّ صلى الله عليه وسلم ذَاتَ يَوْمٍ فَقَالَ " هَلْ عِنْدَكُمْ شَىْءٌ " . فَقُلْنَا لاَ . قَالَ " فَإِنِّي إِذًا صَائِمٌ "

**2124.** இறைநம்பிக்கையாளர்களின் அன்னை ஆயிஷா (ரலி) அவர்கள் கூறியதாவது: அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் ஒரு நாள் என்னிடம் (வந்து), "ஆயிஷா! உங்களிடம் (உண்பதற்கு) ஏதேனும் இருக்கிறதா?" என்று கேட்டார்கள். நான், "அல்லாஹ்வின் தூதரே! எங்களிடம் எதுவுமில்லை" என்றேன். உடனே "அவ்வாறாயின் நான் நோன்பாளியாக இருந்துகொள்கிறேன்" என்று கூறிவிட்டுப் புறப்பட்டுச் சென்றார்கள். Book: 13 - **ஸஹீஹ் முஸ்லிம்**

எனவே நஃபில் நோன்பு நிய்யத் ஃபஜ்ருக்கு முன்பு எண்ணவேண்டும் என்ற அவசியம் இல்லை

அந் நஸயீ 2334:

அனை ஹஃப்ஸா رَضِيَ اللّٰهُ عَنْهَا அறிவிப்பதாவது:

أَنَّ النَّبِيَّ صلى الله عليه وسلم قَالَ " مَنْ لَمْ يُبَيِّتِ الصِّيَامَ قَبْلَ الْفَجْرِ فَلاَ صِيَامَ لَهُ "

யார் ஃபஜ்ருக்கு முன்பாக நிய்யத் வைக்கவில்லையோ அவருக்கு நோன்பு இல்லை.

ஒருவர் நோயாளியாக இருந்து சரியான பிறகு ஃபஜ்ருக்கு நோன்பு நிய்யத் வைத்து நோன்பிருக்க முடியாது.

## நோன்பின் கடமை

சிறு வயதில் நோன்பு வைக்க நாம் ஊக்கப்படுத்த வேண்டும்.

முஸ்லிம் 1136:

ருபய்யிஉ பின்த் முஅவ்வித் பின் அஃப்ரா رَضِيَ الله عَنْهُ அவர்கள் கூறியதாவது:

فَكُنَّا بَعْدَ ذَلِكَ نَصُومُهُ وَنُصَوِّمُ صِبْيَانَنَا الصِّغَارَ مِنْهُمْ إِنْ شَاءَ اللَّهُ وَنَذْهَبُ إِلَى الْمَسْجِدِ فَنَجْعَلُ لَهُمُ اللُّعْبَةَ مِنَ الْعِهْنِ فَإِذَا بَكَى أَحَدُهُمْ عَلَى الطَّعَامِ أَعْطَيْنَاهَا إِيَّاهُ عِنْدَ الإِفْطَارِ .

**2091.** ருபய்யிஉ பின்த் முஅவ்வித் பின் அஃப்ரா (ரலி) அவர்கள் கூறியதாவது: அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் ஆஷூரா (முஹர்ரம் பத்தாவது) நாளன்று காலையில் மதீனா புறநகரிலுள்ள அன்சாரிகளின் கிராமங்களுக்கு ஆளனுப்பி "(இன்று) காலையில் நோன்பாளியாக இருப்பவர், தமது நோன்பைத் தொடரட்டும்;நோன்பு நோற்காமல் காலைப் பொழுதை அடைந்தவர் இன்றைய தினத்தின் எஞ்சிய பொழுதை (நோன்பிருந்து) நிறைவு செய்யட்டும்" என்று அறிவிக்கச்செய்தார்கள். நாங்கள் அதன் பின்னர் அந்நாளில் நோன்பு நோற்கலானோம்; எங்கள் சிறுவர்களையும் -அல்லாஹ் நாடினால்- நோன்பு நோற்கச்செய்வோம். நாங்கள் பள்ளிவாசலுக்குச் செல்லும்போது, கம்பளியாலான விளையாட்டுப் பொருட்களை அவர்களுக்காகச் செய்து, அவர்களில் ஒருவன் (பசியால்) உணவு கேட்டு அழும்போது நோன்பு துறக்கும் நேரம்வரை (அவன் பசியை மறந்திருப்பதற்காக) அவனிடம் அந்த விளையாட்டுப் பொருளைக் கொடுப்போம். Book: 13 - **ஸஹீஹ் முஸ்லிம்**

உமர் ஆட்சி காலத்தில் மது அருந்திவிட்டு வந்தார். அவரிடம் முஸ்லிம் சிறுவர்கள் நோன்பிருக்கிறார்களே உமக்கு வெட்கம் இல்லையா என்று வினவினார்.

பருவம் அடைந்த அனைவருக்கும் நோன்பு கடமையாகும்.

ஸூரத்துல் பகரா (பசு மாடு)

**2:185** شَهْرُ رَمَضَانَ الَّذِىْٓ اُنْزِلَ فِيْهِ الْقُرْاٰنُ هُدًى لِّلنَّاسِ وَ بَيِّنٰتٍ مِّنَ الْهُدٰى وَالْفُرْقَانِۚ فَمَنْ شَهِدَ مِنْكُمُ الشَّهْرَ فَلْيَصُمْهُ ؕ وَمَنْ كَانَ مَرِيْضًا اَوْ عَلٰى سَفَرٍ فَعِدَّةٌ مِّنْ اَيَّامٍ اُخَرَ ؕ يُرِيْدُ اللّٰهُ بِكُمُ الْيُسْرَ وَلَا يُرِيْدُ بِكُمُ الْعُسْرَ وَلِتُكْمِلُوا الْعِدَّةَ وَلِتُكَبِّرُوا اللّٰهَ عَلٰى مَا هَدٰٮكُمْ وَلَعَلَّكُمْ تَشْكُرُوْنَ

**2:185.** ரமளான் மாதம் எத்தகையதென்றால் அதில் தான் மனிதர்களுக்கு (முழுமையான வழிகாட்டியாகவும், தெளிவான சான்றுகளைக் கொண்டதாகவும்; (நன்மை - தீமைகளைப்) பிரித்தறிவிப்பதுமான அல் குர்ஆன் இறக்கியருளப் பெற்றது; ஆகவே, உங்களில் எவர் அம்மாதத்தை அடைகிறாரோ, அவர் அம்மாதம் நோன்பு நோற்க வேண்டும்; எனினும் எவர் நோயாளியாகவோ அல்லது பயணத்திலோ இருக்கிறாரோ (அவர் அக்குறிப்பிட்ட நாட்களின் நோன்பைப்) பின்வரும் நாட்களில் நோற்க வேண்டும்; அல்லாஹ் உங்களுக்கு இலகுவானதை நாடுகிறானே தவிர, உங்களுக்கு சிரமமானதை அவன் நாடவில்லை; குறிப்பிட்ட நாட்கள் (நோன்பில் விடுபட்டுப் போனதைப்) பூர்த்தி செய்யவும், உங்களுக்கு நேர்வழி காட்டியதற்காக அல்லாஹ்வின் மகத்துவத்தை நீங்கள் போற்றி நன்றி செலுத்துவதற்காகவுமே (அல்லாஹ் இதன் மூலம் நாடுகிறான்).

நோய் தற்காலிகமானதாகவும் இருக்கலாம். உதாரணமாக, காய்ச்சல் போன்றவற்றிக்கு அந்த நாட்களில் நோன்பை விட்டு விட்டுப் பின்னர் நாட்களைக் கணக்கிட்டு நோன்பு வைக்கலாம். நாள்பட்ட நோயாளி என்றால் ஒரு நோன்புக்குப் பதிலாக ஒரு ஏழைக்கு உணவளிக்க வேண்டும். ஒரு மாதம் வைக்க இயலவில்லை என்றல் முப்பது நபர்களுக்கு அல்லது ஒரே நபருக்கு முப்பது நாட்கள் உணவளிக்கலாம். இது ஃபித்யா ஆகும்.

பயணிகளுக்கும் நோன்பு விட அனுமதி இருந்தாலும், அவரது பயணத்தில் எவ்வித சிரமமும் இல்லாமல் இருந்தால் நோன்பு வைப்பதில் தவறில்லை. சிரமம் இருக்கும் என்றாலும், வைக்க முடியும் என்று நினைத்தால் நோன்பு வைக்கலாம் அல்லது விடலாம். எனினும், கட்டாயம் பாதிப்பு வரும் என்ற நிலையில் பயணத்தில் நோன்பு வைப்பது கூடாது. மற்ற நாட்களில் அதனை நாம் வைத்துக் கொள்ள வேண்டும்.

மூன்றாவதாக, கர்பிணிப் பெண்கள், பாலூட்டும் பெண்கள், தங்களுக்கோ, தங்களின் குழந்தைகளுக்கோ பாதிப்பு ஏற்படும் என்ற அச்சம் இருந்தால் நோன்பை விடலாம். அவ்வாறு

இல்லை என்றால் நோன்பு வைக்க வேண்டும். பின்னர் நோன்பு வைக்கக் கொள்ள வேண்டும். சில அறிஞர்கள் ஃபித்யா கொடுக்கலாம் என்பார்கள். எனினும் அவர்களின் கூற்றுப்படி பயணிகளும், இவர்களும் ஒன்றே என்பதால் நோன்பு வைக்க வேண்டும் என்பதே சரி.

நோன்பு வைக்க வேண்டிய கடன் உள்ளவர்கள், அடுத்த ரமழானுக்குள் வைத்து விட வேண்டும். விடுபட்ட நோன்புகளைத் தொடர்ந்து தான் வைக்க வேண்டும் என அவசியமில்லை. விட்டு விட்டும் வைக்கலாம்.

**Fiqh 39 - Lessons related to Fasting-2 - What Breaks the Fast and The Laws of Nafil Fasting**

## ஃபிக்ஹ் வகுப்பு 39 - நோன்பு தொடர்பான பாடங்கள்-2 - நோன்பை முறிக்கக்கூடியவைகள் மற்றும் நஃபில் நோன்பின் சட்டங்கள்

**ஆசிரியர்: அஷ் ஷெய்க் உவைஸ் உமரி நளீரி**

### நோன்பை முறிக்கக் கூடிய காரியங்கள்

1. வேண்டுமென்றே உண்ணுவதும், பருகுவதும். சிறிதளவானாலும், அதிகமானாலும் சரியே. எனினும் மறந்து சாப்பிட்டால் நோன்பு முறியாது.

புஹாரி 6669:

அபூ ஹுரைராஹ் رَضِي الله عَنْهُ அறிவிப்பதாவது:

عَنْ أَبِي هُرَيْرَةَ ـ رضى الله عنه ـ قَالَ قَالَ النَّبِيُّ صلى الله عليه وسلم " مَنْ أَكَلَ نَاسِيًا وَهْوَ صَائِمٌ فَلْيُتِمَّ صَوْمَهُ، فَإِنَّمَا أَطْعَمَهُ اللَّهُ وَسَقَاهُ ".

**6669.** இறைத்தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்' நோன்பு நோற்றிருக்கும் ஒருவர் மறதியாகச் சாப்பிட்டுவிட்டால் அவர் தம் நோன்பை நிறைவு செய்யட்டும்! ஏனெனில், அல்லாஹ்வே அவரை உண்ணவும் பருகவும் செய்தான். என அபூ ஹுரைரா(ரலி) அறிவித்தார். Book: 83 - **ஸஹீஹுல் புகாரி**

அதே நேரத்தில் நோன்பில் பற்களில் இருந்த உணவு வாயுக்கு வந்தால் அதனைத் துப்பி விடவேண்டும். அறியாமல் உள்ளே சென்றால் பிரச்சினை இல்லை.
கோபக்கார கணவருக்காக நோன்பிருந்த நிலையில் ஒரு பெண்மணி சுவைத்துப் பார்க்கலாம். ஆனால் அதனை அருந்திவிடக் கூடாது என இப்னு அப்பாஸ் கூறியுள்ளார்கள்.
ரஸூலுல்லாஹ் صَلَّى الله عَلَيْهِ وَسلَّمَ மிஸ்வாக் செய்யும்போது ஏற்படும் சுவையைத் துப்பிவிடுவார்கள்.

2. வேண்டுமென்றே வாந்தி எடுப்பது நோன்பை முறித்துவிடும்.

அபு தாவூத் 2380

அபூ ஹுரைராஹ் رَضِي الله عَنْهُ அறிவிப்பதாவது:

نْ أَبِي هُرَيْرَةَ، قَالَ قَالَ رَسُولُ اللَّهِ صلى الله عليه وسلم " مَنْ ذَرَعَهُ قَىْءٌ وَهُوَ صَائِمٌ فَلَيْسَ عَلَيْهِ قَضَاءٌ وَإِنِ اسْتَقَاءَ فَلْيَقْضِ "

ரஸூலுல்லாஹ் صَلَّى الله عَلَيْهِ وَسلَّمَ கூறியதாவது, "யாராவது நோன்பில் திடீரென்று வாந்தி எடுத்தால், அதற்காக அவர் திருப்ப வைக்க வேண்டியதில்லை. அனால் வேண்டுமென்றே வாந்தி எடுத்தால் வைக்க வேண்டியதில்லை.

3. வாயைத் தவிர உடம்பின் வேறு பகுதியிலிருந்து ஏதாவது நுழைப்பது:
உதாரணமாக மூக்கில் வழியாக தண்ணீர் வேகமாக உறிஞ்சி அது தொண்டை வழியாக உள்ளே சென்றால், நோன்பு முறிந்துவிடும்.

கிர்மிதி: 788

ஆஸிம் பின்த் லகித் رَضِي الله عَنْهاَ தமது தந்தை மூலமாக அறிவிப்பதாவது:

الَ سَمِعْتُ عَاصِمَ بْنَ لَقِيطِ بْنِ صَبْرَةَ، عَنْ أَبِيهِ، قَالَ قُلْتُ يَا رَسُولَ اللَّهِ أَخْبِرْنِي عَنِ الْوُضُوءِ، . قَالَ " أَسْبِغِ الْوُضُوءَ وَخَلِّلْ بَيْنَ الأَصَابِعِ وَبَالِغْ فِي الاِسْتِنْشَاقِ إِلاَّ أَنْ تَكُونَ صَائِمًا "

ரஸூலுல்லாஹ் صَلَّى الله عَلَيْهِ وَسلَّمَ என்னிடம் உளூ பற்றிக் கூறியதாவது, "உளூ செய்யுங்கள். மூக்கை அதிகமான தண்ணீரை வைத்துக் கழுவுங்கள், நோன்பின் போது தவிர"

அது போல் சத்துக்காக ஊசி போடுவது, இரத்தம் ஏற்றுவது ஆகியன கூடாது. தொண்டைக்கு வராதவாதுமிகக் குறைந்த அளவு கண் மற்று காதுக்கு மருந்து ஊற்றிக் கொள்ளலாம்.

4. அதிகமாக இரத்தம் வெளியேறுவது:

இப்னு மாஜாஹ் 1679

அபூ ஹுரைராஹ் رَضِي الله عَنْهُ அறிவிப்பதாவது:

عَنْ أَبِي هُرَيْرَةَ، قَالَ قَالَ رَسُولُ اللَّهِ ـ صلى الله عليه وسلم ـ " أَفْطَرَ الْحَاجِمُ وَالْمَحْجُومُ "

ரஸூலுல்லாஹ் صَلَّى الله عَلَيْهِ وَسلَّمَ கூறியதாவது, “இரத்தம் குத்தி (ஹிஜாமாஹ்) வாங்கியவரும், வாங்கப்பட்டவரும் நோன்பை முறித்துவிட்டார்கள்.

அதிக இரத்தம் மயக்கம் ஏற்படக்கூடும் என்பதால் இதனைத் தடுத்துள்ளார்கள். எனினும்,

புஹாரி 1939

இப்னு அப்பாஸ் رَضِي الله عَنْهُ அறிவிப்பதாவது:

عَنِ ابْنِ عَبَّاسٍ ـ رضى الله عنهما ـ قَالَ احْتَجَمَ النَّبِيُّ صلى الله عليه وسلم وَهُوَ صَائِمٌ.

ரஸூலுல்லாஹ் صَلَّي الله عَلَيْهِ وَسلَّمَ நோன்பிருந்த நிலையில் ஹிஜாமாஹ் செய்து கொண்டார்கள்.

எனவே நல்ல திடம் உள்ளவர்கள் இரத்த தானம் செய்யலாம். உடல்நிலை பாதிக்கக் கூடும் என்றால் அது நோன்பை முறிக்கும்.

5. மனைவியுடன் கூடுவது: மிகப் பெரிய பாவமாகும்.

முவத்தா மாலிக் 18/19

அதாஹ் இப்னு யஸீர் رَضِي الله عَنْهُ அறிவிப்பதாவது:

عَنْ عَطَاءِ بْنِ يَسَارٍ ، أَنَّ عَبْدَ اللَّهِ بْنَ عَبَّاسٍ ، سُئِلَ عَنِ الْقُبْلَةِ، لِلصَّائِمِ فَأَرْخَصَ فِيهَا لِلشَّيْخِ وَكَرِهَهَا لِلشَّابِّ

(மனைவியை) நோன்பில் முத்தமிடுவது பற்றி இப்னு அப்பாஸ் யிடம் கேட்கப்பட்டபோது வயதானவர்களுக்கு அது அனுமதிக்கப்பட்டது எனவும் இளைஞர்களுக்கு இல்லை எனவும் கூறினார்.

இவ்வாறு ரஸூலுல்லாஹ் صَلَّى الله عَلَيْهِ وَسلَّمَ இளைஞர்களுக்குக் கூடாது என்பதற்குக் காரணம் அவர்கள் தங்களைக் கட்டுப் படுத்த முடியாமல் மனைவியுடன் கூடிவிடக் கூடும் என்பதால்.

எனவே மனைவியுடன் கூடுவது நோன்பை முறித்து விடும். அவ்வாறு செய்துவிட்டால் அதற்குரிய பரிகாரமாவது:

முஸ்லிம் 1111

அபூ ஹுரைராஹ் رَضِي الله عَنْهُ அறிவிப்பதாவது:

عَنْ أَبِي هُرَيْرَةَ، ـ رضى الله عنه ـ أَنَّ رَجُلاً، وَقَعَ بِامْرَأَتِهِ فِي رَمَضَانَ فَاسْتَفْتَى رَسُولَ اللَّهِ صلى الله عليه وسلم عَنْ ذَلِكَ فَقَالَ " هَلْ تَجِدُ رَقَبَةً " . قَالَ لاَ . قَالَ " وَهَلْ تَسْتَطِيعُ صِيَامَ شَهْرَيْنِ " . قَالَ لاَ . قَالَ " فَأَطْعِمْ سِتِّينَ مِسْكِينًا " .

**2036.** அபூஹுரைரா (ரலி) அவர்கள் கூறியதாவது: நபி (ஸல்) அவர்களிடம் ஒரு மனிதர் வந்து, "நான் அழிந்துவிட்டேன், அல்லாஹ்வின் தூதரே!" என்றார். நபி (ஸல்) அவர்கள், "உமது அழிவுக்குக் காரணம் என்ன?" என்று கேட்டார்கள். "நான் ரமளானில் (நோன்பு வைத்துக்கொண்டே) என் மனைவியுடன் (பகலில்) தாம்பத்திய உறவு கொண்டுவிட்டேன்" என்று அவர் சொன்னார். நபி (ஸல்) அவர்கள், "(இதற்குப் பரிகாரமாக) ஓர் அடிமையை விடுதலைசெய்ய உம்மால் இயலுமா?" என்று கேட்டார்கள். அவர் "இல்லை" என்றார். "தொடர்ந்து இருமாதங்கள் நோன்பு நோற்க உம்மால் முடியுமா?" என்று நபி (ஸல்) அவர்கள் கேட்டார்கள். அவர் "இல்லை" என்றார். "அறுபது ஏழைகளுக்கு உணவளிக்க உம்மால் இயலுமா?" என்று நபி (ஸல்) அவர்கள் கேட்க, அவர் "இல்லை" என்று கூறிவிட்டுப் பிறகு அமர்ந்துவிட்டார். பின்னர் நபி (ஸல்) அவர்களிடம் பேரீச்சம் பழங்கள் உள்ள ஒரு கூடை கொண்டு வரப்பட்டது. நபி (ஸல்) அவர்கள் அந்த மனிதரிடம், "இதை(ப் பெற்று) தர்மம் செய்வீராக!" என்று கூறினார்கள். அவர், "எங்களைவிட ஏழையாக இருப்போருக்கா (நான் தர்மம் செய்ய வேண்டும்)? இந்நகரத்தின் இருமலைகளுக்கு இடையே எங்களைவிட மிக வறியநிலையில் எந்த வீட்டாரும் இல்லை" என்றார்.

உடனே நபி (ஸல்) அவர்கள் தம் கடைவாய்ப்பற்கள் தெரியச் சிரித்துவிட்டு, "நீர் (இதைப் பெற்றுச்) சென்று, உம் வீட்டாருக்கே ஊட்டுவீராக!" என்றார்கள். இந்த ஹதீஸ் நான்கு அறிவிப்பாளர் தொடர்களில் வந்துள்ளது. - மேற்கண்ட ஹதீஸ் மற்றோர் அறிவிப்பாளர்தொடர் வழியாகவும் வந்துள்ளது. அதில் "கூடை ("அரக்") என்பதற்கு "ஸன்பீல்" (பெரிய கூடை) என்று பொருள்" என இடம் பெற்றுள்ளது. மேலும், "உடனே நபி (ஸல்) அவர்கள் தம் கடைவாய்ப்பற்கள் தெரியச் சிரித்தார்கள்" எனும் குறிப்பு இடம்பெறவில்லை. Book: 13 - **ஸஹீஹ் முஸ்லிம்**

6. மாத விடாய் மற்றும் பிரசவ தொடக்கு: அந்த நோன்பை விட்டு விட்டு ரமழானுக்குப் பிறகு கணக்கிட்டு வைக்க வேண்டும்.
மேலும் நோன்பின் உண்மையான நோக்கத்தைப் புரிந்து கொண்டு எல்லாவித தீமைகளையும் தவிர்த்துக் கொள்வது நல்லது. உதாரணமாக பொய், புறம் ஆகியன கூடாது. இவை நோன்பை முறிக்காது. எனினும் நன்மையை பாழாக்கும்.

இப்னு மாஜாஹ் 1689
அபூ ஹுரைராஹ் رَضِيَ الله عَنْهُ அறிவிப்பதாவது:

عَنْ أَبِي هُرَيْرَةَ، قَالَ قَالَ رَسُولُ اللَّهِ ـ صلى الله عليه وسلم ـ " مَنْ لَمْ يَدَعْ قَوْلَ الزُّورِ وَالْجَهْلَ وَالْعَمَلَ بِهِ فَلاَ حَاجَةَ لِلَّهِ فِي أَنْ يَدَعَ طَعَامَهُ وَشَرَابَهُ "

ரஸூலுல்லாஹ் صَلَّى الله عَلَيْهِ وَسلَّمَ கூறியதாவது, "யார் கெட்ட, மடத்தனமான பேச்சுகளை விடாமல் அதன்படி நடக்கிறார்களோ, அவர்கள் உணவு மற்றும் பானத்தை விடுவதில் அல்லாஹ்வுக்கு எவ்வித தேவையும் இல்லை.
குளித்தால், தைலம் பூசுவதால் எல்லாம் நோன்பு முறியாது. முன்னர் சொல்லப்பட்டது தவிர மாற்றவை பற்றி நாம் குழப்பம் கொள்ள வேண்டாம். இரத்தம் பற்றி முன்னர் கூறியது போல் அதிகமாக வெறியேறி ஆபத்து விளைவிக்கும் என்றால்தான் முறியும். சாதரணமாக மூக்கில் இருந்து அல்லது காயத்திலிருந்து சிறிது வடிவது ஆகிவற்றை பொருட்படுத்த வேண்டாம்.
நோன்பிருக்கும்போது அதிகமாகத் துஆ கேட்க வேண்டும். பயணி, நோன்பாளி மற்றும் தந்தை தமது மகனுக்கு செய்யும் துஆ ஆகிய ஏற்றுக்கொள்ளப் படும் என ரஸூலுல்லாஹ் صَلَّى الله عَلَيْهِ وَسلَّمَ கூறியுள்ளார்கள். எனவே நோன்பிருக்கும் நேரம் முழுவதும் துஆ கேட்கலாம்.

## நோன்பு திறப்பது

திர்மிதி 696:
அனஸ் இப்னு மாலிக் رَضِيَ الله عَنْهُ அறிவிப்பதாவது:

عَنْ أَنَسِ بْنِ مَالِكٍ، قَالَ " كَانَ النَّبِيُّ صلى الله عليه وسلم يُفْطِرُ قَبْلَ أَنْ يُصَلِّيَ عَلَى رُطَبَاتٍ فَإِنْ لَمْ تَكُنْ رُطَبَاتٌ فَتُمَيْرَاتٍ فَإِنْ لَمْ تَكُنْ تُمَيْرَاتٌ حَسَا حَسَوَاتٍ مِنْ مَاءٍ "

ரஸூலுல்லாஹ் صَلَّى الله عَلَيْهِ وَسلَّمَ தொழுகைக்கு முன்னால் புதிய பேரீச்சம்பழம் பழம் கொண்டு நோன்பு திறப்பார்கள். இல்லை என்றால் காய்ந்த பேரீச்சம்பழம் பழம் கொண்டு நோன்பு திறப்பார்கள். காய்ந்த பேரீச்சம்பழம் பழம் இல்லை என்றால் தண்ணீரைக் கொண்டு திறப்பார்கள்.

## நோன்பு திறக்கும்போது சொல்லப்படும் துஆ

அபு தாவூத் 2367:
மர்வான் இப்னு ஸலீம் رَضِيَ الله عَنْهُ அறிவிப்பதாவது:

وَقَالَ كَانَ رَسُولُ اللَّهِ صلى الله عليه وسلم إِذَا أَفْطَرَ قَالَ " ذَهَبَ الظَّمَأُ وَابْتَلَّتِ الْعُرُوقُ وَثَبَتَ الأَجْرُ إِنْ شَاءَ اللَّهُ " .

ரஸூலுல்லாஹ் صَلَّى الله عَلَيْهِ وَسلَّمَ நோன்பு திறக்கும்போதுகூறியதாவது, "தாகம் தணிந்தது. நரம்புகள் நனைந்தன, கூலி உறுதியாகிவிட்டது இன் ஷா அல்லாஹ்"
இதனை நோன்பு திறந்ததும் ஓதவேண்டும். இது அல்லாத வேறு எந்த துஆவும் ஓதப்படவில்லை.

## நஃபிலான நோன்புகள்

இதன் சிறப்பாவது: நோன்புகள் அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَى வுக்கு உவப்பானது. மேலும் ரமழான் நோன்பின் குறைபாடு இவற்றின் மூலாம் சரி செய்யப்படலாம்.

1. ஸவ்ம் தாவூதி: தாவூத் அவர்கள் ஒரு நாள் விட்டு ஒரு நாள் நோன்பு வைப்பார்கள். இதுதான் அதிகபட்ச நோன்பாகும்.

புஹாரி 3420

அப்துல்லாஹ் இப்னு அமர் رَضِيَ الله عَنْهُ அறிவிப்பதாவது:

عَبْدَ اللَّهِ بْنَ عَمْرٍو، قَالَ قَالَ لِي رَسُولُ اللَّهِ صلى الله عليه وسلم " أَحَبُّ الصِّيَامِ إِلَى اللَّهِ صِيَامُ دَاوُدَ، كَانَ يَصُومُ يَوْمًا وَيُفْطِرُ يَوْمًا، وَأَحَبُّ الصَّلاَةِ إِلَى اللَّهِ صَلاَةُ دَاوُدَ، كَانَ يَنَامُ نِصْفَ اللَّيْلِ وَيَقُومُ ثُلُثَهُ وَيَنَامُ سُدُسَهُ "

**3420.** அப்துல்லாஹ் இப்னு அம்ர் (ரலி) அறிவித்தார் இறைத்தூதர்(ஸல்) அவர்கள் என்னிடம், 'அல்லாஹ்வுக்கு மிகவும் விருப்பமான நோன்பு தாவூத்(அலை) அவர்களின் நோன்பாகும். அவர்கள் ஒரு நாள் நோன்பு நோற்று, ஒரு நாள்விட்டுவிடுவார்கள். அல்லாஹ்வுக்கு மிகவும் விருப்பமான தொழுகை தாவூத்(அலை) அவர்களின் தொழுகையாகும். அவர்கள் இரவில் பாதி நேரம் உறங்குவார்கள். அதில் மூன்றில் ஒரு பகுதி நேரம் நின்று வணங்குவார்கள். அதில் ஆறில் ஒரு பகுதி நேரம் (மீண்டும்) உறங்குவார்கள்' என்று கூறினார்கள். Book: 60 - **ஸஹீஹுல் புகாரி**

2. அய்யாமுல் ஃபீழ்: ஒவ்வொரு மாதமும் பிறை 13, 14, 15 (பிரகாசமான) நாட்களில் வைக்கப்படும் நோன்பு.

நாஸாயீ 2420

ஜரீர் இப்னு அப்துல்லாஹ் رَضِيَ الله عَنْهُ அறிவிப்பதாவது:

جَرِيرِ بْنِ عَبْدِ اللَّهِ، عَنِ النَّبِيِّ صلى الله عليه وسلم قَالَ " صِيَامُ ثَلاَثَةِ أَيَّامٍ مِنْ كُلِّ شَهْرٍ صِيَامُ الدَّهْرِ وَأَيَّامُ الْبِيضِ صَبِيحَةَ ثَلاَثَ عَشْرَةَ وَأَرْبَعَ عَشْرَةَ وَخَمْسَ عَشْرَةَ " .

ரஸூலுல்லாஹ் صَلَّى الله عَلَيْهِ وَسلَّمَ கூறியதாவது, "ஒரு மாதத்தில் மூன்று நாள்கள் நோன்பு வைப்பது, ஆயுள் முழுவதும் நோன்பு வைப்பதாகும். அப்பிரகாசமான நாட்கள் 13, 14 15 ஆகும்.

3. ஒவ்வொரு திங்கள் மற்றும் வியாழக்கிழமைகளில் வைக்கப்படும் நோன்புகள்.

திர்மிதி 747

அபூ ஹுரைராஹ் رَضِيَ الله عَنْهُ அறிவிப்பதாவது:

عَنْ أَبِي هُرَيْرَةَ، أَنَّ رَسُولَ اللَّهِ صلى الله عليه وسلم قَالَ " تُعْرَضُ الأَعْمَالُ يَوْمَ الاِثْنَيْنِ وَالْخَمِيسِ فَأُحِبُّ أَنْ يُعْرَضَ عَمَلِي وَأَنَا صَائِمٌ "

ரஸூலுல்லாஹ் صَلَّى الله عَلَيْهِ وَسلَّمَ கூறியதாவது, "நற்செயல்கள் திங்களிலும், வியாழனிலும் சமர்ப்பிக்கப் படுகிறது. எனது நற்செயல்கள் சமர்ப்பிக்கப் படும்போது நான் நோன்பாளியாக இருக்க விரும்புகிறேன்."

மற்றோரு ஹதீதில் திங்கள்கிழமை தங்களின் பிறந்தநாள் என ரஸூலுல்லாஹ் صَلَّى الله عَلَيْهِ وَسلَّمَ கூறியுள்ளார்கள்.

4. ஷவ்வால் மாதம் ஆறு நோன்புகள்: தொடராகவும், விட்டு விட்டும் வைக்கலாம்.

முஸ்லிம் 1164:

அபு அயயூப் அல் அன்ஸாரி رَضِيَ الله عَنْهُ அறிவிப்பதாவது:

وَعَنْ أَبِي أَيُّوبَ اَلْأَنْصَارِيِّ - رضى الله عنه - أَنَّ رَسُولَ اَللَّهِ - صلى الله عليه وسلم -قَالَ: { مَنْ صَامَ رَمَضَانَ, ثُمَّ أَتْبَعَهُ سِتًّا مِنْ شَوَّالٍ كَانَ كَصِيَامِ اَلدَّهْرِ } رَوَاهُ مُسْلِمٌ

**2159.** அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:ரமளான் மாதம் நோன்பு நோற்று அதைத் தொடர்ந்து ஷவ்வால் மாதத்தில் ஆறு நோன்பு நோற்றவர், காலமெல்லாம் நோன்பு நோற்றவரைப்

போன்றவராவார். இதை அபூஅய்யூப் அல்அன்சாரி (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள். Book: 13 - **ஸஹீஹ் முஸ்லிம்**

5. ஆஷுரா நோன்பு: இது கடந்த ஒரு வருட பாவத்திற்கு பரிகாரமாக இருக்கும் என ரஸூலுல்லாஹ் صَلَّي الله عَلَيْهِ وَسلَّمَ கூறியுள்ளார்கள்.

وعن أبي قتادة رضي الله عنه أن رسول الله صلى الله عليه وسلم سئل عن صيام يوم عاشوراء فقال: "يكفر السنة الماضية" ((رواه مسلم))

6. அரஃபா நோன்பு:

திர்மிதி 749

அபு கத்தாதாஹ் رَضِي الله عَنْهُ அறிவிப்பதாவது:

عَنْ أَبِي قَتَادَةَ، أَنَّ النَّبِيَّ صلى الله عليه وسلم قَالَ " صِيَامُ يَوْمِ عَرَفَةَ إِنِّي أَحْتَسِبُ عَلَى اللَّهِ أَنْ يُكَفِّرَ السَّنَةَ الَّتِي قَبْلَهُ وَالسَّنَةَ الَّتِي بَعْدَهُ "

ரஸூலுல்லாஹ் صَلَّى الله عَلَيْهِ وَسلَّمَ கூறியதாவது, "அரஃபா நாளில் நோன்பு வைப்பது முந்தைய மற்றும் வரும் ஒரு வருட பாவத்திற்கு பரிகாரமாக இருக்கும்."

தனியாக வெள்ளி மட்டும் நோன்பு பிடிக்கக் கூடாது.

**Fiqh 40 - Lessons Related to Hajj and Umrah -1 - Laws of Hajj and Umrah and Meeqats of Ihram**

# ஃபிக்ஹ் வகுப்பு 40 - ஹஜ் உம்ரா தொடர்பான பாடங்கள்-1 - ஹஜ் உம்ராவின் சட்டங்கள் மற்றும் இஹ்ராமின் மீக்காத்துகள்

**ஆசிரியர்: அஷ் ஷெய்க் உவைஸ் உமரி நஸீரி**

**ஹஜ் சட்டங்கள்:** ஹஜ்ஜானது வாழ்நாளில் ஒரு தடவை முடிந்தவர்களுக்குக் கடமையாகும்.

ஸூரத்துல்ஆல இம்ரான் (இம்ரானின் சந்ததிகள்)

**3:97** فِيْهِ اٰيٰتٌ ۢ بَيِّنٰتٌ مَّقَامُ اِبْرٰهِيْمَ ۚ وَمَنْ دَخَلَهٗ كَانَ اٰمِنًا ؕ وَلِلّٰهِ عَلَى النَّاسِ حِجُّ الْبَيْتِ مَنِ اسْتَطَاعَ اِلَيْهِ سَبِيْلًا ؕ وَمَنْ كَفَرَ فَاِنَّ اللّٰهَ غَنِىٌّ عَنِ الْعٰلَمِيْنَ

**3:97.** அதில் தெளிவான அத்தாட்சிகள் உள்ளன. (உதாரணமாக, இப்ராஹீம் நின்ற இடம்) மகாமு இப்ராஹீம் இருக்கின்றது; மேலும் எவர் அதில் நுழைகிறாரோ அவர் (அச்சம் தீர்ந்தவராகப்) பாதுகாப்பும் பெறுகிறார்; இன்னும் அதற்கு(ச் செல்வதற்கு)ரிய பாதையில் பயணம் செய்ய சக்தி பெற்றிருக்கும் மனிதர்களுக்கு அல்லாஹ்வுக்காக அவ்வீடு சென்று ஹஜ் செய்வது கடமையாகும். ஆனால், எவரேனும் இதை நிராகரித்தால் (அதனால் அல்லாஹ்வுக்குக் குறையேற்படப் போவதில்லை; ஏனெனில்) - நிச்சயமாக அல்லாஹ் உலகத்தோர் எவர் தேவையும் அற்றவனாக இருக்கின்றான்.

ஹஜ்ஜானது இஸ்லாத்தின் ஐந்தாவது கடமை ஆகும்.

முஸ்லிம் 16

அப்துல்லாஹ் இப்னு உமர் رَضِي الله عَنْهُ அறிவிப்பதாவது:

عَنْ أَبِيهِ، قَالَ قَالَ عَبْدُ اللَّهِ قَالَ رَسُولُ اللَّهِ صلى الله عليه وسلم " بُنِيَ الإِسْلاَمُ عَلَى خَمْسٍ شَهَادَةِ أَنْ لاَ إِلَهَ إِلاَّ اللَّهُ وَأَنَّ مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُولُهُ وَإِقَامِ الصَّلاَةِ وَإِيتَاءِ الزَّكَاةِ وَحَجِّ الْبَيْتِ وَصَوْمِ رَمَضَانَ " .

**20.** நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: இஸ்லாம் ஐந்து (தூண்கள்)மீது நிறுவப்பட்டுள்ளது. அல்லாஹ்வையே வழிபட்டு, அவன் அல்லாதவற்றை நிராகரிப்பது;தொழுகையைக் கடைப்பிடிப்பது; ஸகாத் வழங்குவது; இறையில்லம் கஅபாவில் ஹஜ் செய்வது; ரமளான் மாதத்தில் நோன்பு நோற்பது. (ஆகியனவே அந்த ஐந்தும்.) இதை அப்துல்லாஹ் பின் உமர் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள். Book: 1 - **ஸஹீஹ் முஸ்லிம்**

முன்பு சொல்லப்பட்ட ஹதீது ஜிப்ரயீலும் இதனைக் குறிப்பிடுகிறது.

முஸ்லிம் 1350

அபூ ஹுரைராஹ் رَضِي الله عَنْهُ அறிவிப்பதாவது:

عَنْ أَبِي هُرَيْرَةَ، قَالَ قَالَ رَسُولُ اللَّهِ صلى الله عليه وسلم " مَنْ أَتَى هَذَا الْبَيْتَ فَلَمْ يَرْفُثْ وَلَمْ يَفْسُقْ رَجَعَ كَمَا وَلَدَتْهُ أُمُّهُ

**2625.** அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: தீய பேச்சுகள் மற்றும் பாவச்செயல்களில் ஈடுபடாமல் இந்த(க் கஅபா) ஆலயத்திற்கு வந்(து ஹஜ் செய்)தவர், அன்று பிறந்த பாலகனைப் போன்று திரும்புகிறார். இதை அபூஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள். Book: 15 - **ஸஹீஹ் முஸ்லிம்**

ஹிஜ்ரத் செய்வது அனைத்துப் பாவங்களையும் அழிப்பது போல ஹஜ்ஜும் அனைத்துப் பாவங்களையும் அழித்து விடும் என ரஸூலுல்லாஹ் صَلَّى الله عَلَيْهِ وَسلَّمَ கூறியுள்ளார்கள். ஹிஜ்ரி ஒன்பதாம் ஆண்டு ஹஜ் கடமையானது. அதன் சட்டங்களும் இறக்கப்பட்டன.

**உம்ராவின் சட்டங்கள்:** சிலர் அறிஞர்கள் வலியுறுத்தப்பட்ட சுன்னாஹ் என்று கூறுகிறார்கள். இன்னும் சிலரோ, யாருக்கு சகதி அவருக்கு இது கடமையாகும். இதுதான் சிறந்த கருத்தாகும்.

ஸூரத்துல் பகரா (பசு மாடு)

2:196 وَأَتِمُّوا الْحَجَّ وَالْعُمْرَةَ لِلَّهِ ۚ ...

**2:196.** ஹஜ்ஜையும், உம்ராவையும் அல்லாஹ்வுக்காகப் பூர்த்தி செய்யுங்கள்; ...

எனவே இது அல்லாஹ் வின் கட்டளையாகும். எனவே இது சுன்னாஹ்தான் என்பதற்கு எந்த ஆதாரமும் இல்லை. ஹதீது ஜிப்ரயீலில் ஒரு அறிவிப்பின்படி ஹஜ்ஜும் உம்ராவும் என்று கூறப்பட்டுள்ளது.

எனவே உம்ரா செய்வதற்கு வசதி இருந்தால் செய்ய வேண்டியது கடமையாகும்.

திர்மிதி 933

அபூ ஹுரைராஹ் رَضِيَ الله عَنْهُ அறிவிப்பதாவது:

عَنْ أَبِي هُرَيْرَةَ، قَالَ قَالَ رَسُولُ اللَّهِ صلى الله عليه وسلم " الْعُمْرَةُ إِلَى الْعُمْرَةِ تُكَفِّرُ

ரஸூலுல்லாஹ் صَلَّى الله عَلَيْهِ وَسلَّمَ கூறியதாவது, “ஒரு உம்ராவுக்கும் மற்றொரு உம்ராவுக்கும் இடையிலுள்ள பாவங்கள் மன்னிக்கப்படும்.

அவர் பெரும் பாவங்களைத் தவிர்த்து விட வேண்டும்.

ஒரே ஒரு உம்ரா செய்வதால் உள்ள சிறப்பு பற்றி ஏதும் குறிப்பிடவில்லை என்றாலும், உம்ராவின்போது நாம் மஸ்ஜிக் ஹராமில் தோழா வாய்ப்பு கிடைக்கும். அங்கு தொழுவது மற்ற பள்ளிவாசலில் தொழுவதைவிட ஒரு லட்சம் நன்மை என்பதால் நமக்கு பல லட்சம் நன்மைகள் ஏற்படும் வாய்ப்பை அது பெற்றுத் தரும்.

மற்ற பள்ளிவாசலில் தொழும் தொழுகையை விட மஸ்ஜிக் நபவியில் தொழுவது ஆயிரம் மடங்கு சிறந்தது. மஸ்ஜிதுல் அக்ஸாவில் தொழுவது ஐநூறு மடங்கு சிறந்தது.

**ஹஜ் மற்றும் உம்ரா சட்டங்கள்:** இஹ்ராம் செய்தல்: இஹ்ராம் என்றல் புனிதம் என்று பொருள். இதனைக் கவனத்தில் கொண்டு நாம் மிகவும் பேணுதலாக இருக்க வேண்டும், தவிர்க்க வேண்டியதை நாம் கட்டாயம் தவிர்க்க வேண்டும். முன்னர் சொன்னது போல புனித மாதங்களில் போர் புரிவது தவிர்க்கப்பட வேண்டும். அது போல் தக்பீர் தஹ்ரிமாவில் நாம் பேசுவது, சாப்பிடுவது, நடப்பது போன்றவையை நாம் தவிர்க்க வேண்டும். அது போல மஸ்ஜித் ஹராம் எல்லையில் நாம் சிலவற்றைத் தவிர்க்க வேண்டும்.

இது போல் இஹ்ராம் செய்தாலும் நாம் தவிர்க்க வேண்டிய விஷயங்கள் உள்ளன. இஹ்ராம் என்பது உம்ரா அல்லது ஹஜ்ஜுக்கான நிய்யத் வைப்பது. அவ்வாறு வைத்தவுடன், அதற்கான கட்டுப்பாடுகள் வந்து விடும். இவ்வாறு நிய்யத் செய்வதுதான் இஹ்ராம் ஆகும். அத்துடன் குறிப்பிட்ட ஆடையை அணிந்து கொள்ள வேண்டும். இந்த குறிப்பிட்ட ஆடை ஏதும் பெண்களுக்குக் கிடையாது.

இந்த இபாதத்தை ஆரம்பிக்கும் நேரமும் இடமும் மீக்காத் எனப்படும். நேரத்தைப் பொறுத்தளவில், உம்ராவுக்குக் கால வரம்பு கிடையாது. ஆனால் ஹஜ்ஜுக்கு ஷவ்வால் மாதம் ஆரம்பித்து தில் ஹஜ் ஒன்பது வரை உள்ள காலமாகும். ஷவ்வாலுக்கு முன்னால் ஹஜ் ஆரம்பிக்கக் கூடாது.

**மீக்காத்:** இடத்தைப் பொறுத்தளவில் மதீனாவாசிகள் துல் ஹுலைஃபா என்ற இடத்தில் இஹ்ராம் செய்ய வேண்டும். மறதியாக அதனைத் தாண்டி வந்து விட்டாலும், திரும்பச் சென்று அங்கிருந்து இஹ்ராம் செய்ய வேண்டும்.

நஜத் மற்றும் பகுதியிலிருந்து வருபவர்கள், கர்னுல் மனாஸில் என்ற இடத்தில் இஹ்ராம் செய்ய வேண்டும். சிரியா, எகிப்து மற்றும் மேற்கத்திய நாடுகளிலிருந்து வருபவர்கள், ஜுஹ்ஃபா என்ற இடத்தில் இஹ்ராம் செய்ய வேண்டும். யமன் மற்றும் இந்திய நாட்டிலிருந்து வருபவர்கள், யலம்லம் என்ற இடத்தில் இஹ்ராம் செய்ய வேண்டும். இராக் நாட்டிலிருந்து வருபவர்கள், தாத்து இர்க் (தாத்துல் இராக்) என்ற இடத்தில் இஹ்ராம் செய்ய வேண்டும்.

நிய்யத் இல்லாமல் இந்த இடங்களைக் கடக்கக் கூடாது. எல்லைகளான இந்த இடங்களுக்கு உள்ளே இருப்பவர்கள், அவர்கள் தங்களின் வீடுகளில் இருந்தே இஹ்ராம் செய்ய வேண்டும். மக்காவாசிகளும் அவ்வாறே வீடுகளிளிருதே இஹ்ராம் செய்ய வேண்டும்.

**Fiqh 41 - Lessons Related to Hajj and Umrah -2 - Things forbidden in the state of Ihram**

## ஃபிக்ஹ் வகுப்பு 41 - ஹஜ் உம்ரா தொடர்பான பாடங்கள்-2 - இஹ்ராமில் செய்யக்கூடாதவைகள்

**ஆசிரியர்: அஷ் ஷெய்க் உவைஸ் உமரி நளீரி**

மீகாத்தை இஹ்ராம் செய்யாமல் சென்றார்கள் திரும்பவும் மீக்காத் செல்ல முடியாவிட்டால், அதற்குப் பரிகாரமாக, ஒரு குர்பானி கொடுத்து விட்டு அந்த இடத்திலிருந்தே இஹ்ரம் செய்யலாம்.

இஹ்ராமில் செய்யக்கூடாதவைகள்:

பத்து விஷயங்கள் இதில் அடங்கும்.

1. முடி வெட்டக்கூடாது.

2. நகங்களை வெட்டக்கூடாது.

3. உடலிலும், ஆடையிலும் நறுமணம் பூசக் கூடாது.

இவை மூன்றும் ஆண்கள் மற்றும் பெண்கள் ஆகிய இருவருக்கும் பொருந்தும்.

4. தலையை மறைக்கக் கூடாது.

5. தையல் துணியை அணியக்கூடாது.

இவை இரண்டும் ஆண்களுக்கானது.

4. நிகாப் (nose piece) அணியக்கூடாது. ஹஜ் பயணத்தில் அன்னை ஆயிஷா (ரழி) அவர்கள் அந்நிய ஆண்கள் வந்தால் தங்களின் முந்தானையை இழுத்துப் பயன்படுத்துவார்கள்.

5. கையுறைகளை அணியக்கூடாது.

இவை இரண்டும் பெண்களுக்கானது.

6. உடலுறவு அல்லாமல் மற்றபடியான வழியில் (முத்தம் போன்ற) தம் இச்சைகளைப் பூர்த்தி செயக்கூடாது.

இந்த ஆறு விஷயங்களில் எதனையும் செய்து விட்டால் அதற்காக ஃபித்யா (பரிகாரம்) கொடுப்பது கடமையாகும். அது மூன்று நாட்கள் நோன்பு வைப்பது. அதற்கு இயலாவிட்டால், ஆறு ஏழைகளுக்கு உணவளிக்க வேண்டும், அல்லது ஒரு ஆட்டை பலியிட வேண்டும்.

7. உடலுறவு கொள்வது.

இதனை மீறி செய்து விட்டால், முதல் ஹலாலுக்கு முன்பு இந்த தவறைச் செய்திருந்தால், ஹஜ் வீணாகி விடும். ஒரு ஒட்டகத்தைப் பலியிட வேண்டும். அடுத்த வருடம் ஹஜ் செய்ய வேண்டும். முதல் ஹலாலுக்கு பிறகு இந்த தவறைச் செய்திருந்தால், ஒரு ஆட்டைப் பலியிட வேண்டும். ஹஜ் வீணாகி விடாது.

8. திருமண சம்பந்தம் பேசக்கூடாது. திருமணமும் முடிக்கக் கூடாது. திருமணத்தை நடத்தவும் கூடாது. பரிகாரம் ஏதும் இல்லை. ஆனால் அவை அனைத்தும் செல்லாது.

உதாரணமாக, இருவருக்கு இடையில் திருமண சம்பந்தம் பேசி முடித்த பிறகு, வேறு யாரும் அவர்களை திருமண விஷயமாக சம்பந்தம் பேசுவது வழக்கமாக ஹராமாகும். ஆனால் ஹஜ்ஜில் சம்பந்தம் பேசுவதே கூடாது என்பதால், அவ்வாறு பேசப்பட்ட சம்பந்தம் செல்லாது என்பதால் வேறு யாரும் சம்பந்தம் செய்வது ஹராம் அல்ல. அதுபோல் திருமணமும் செல்லாது.

9. வேட்டையாடக் கூடாது.

வேட்டையாடி விட்டால், வேட்டையாடிய விலங்கைப் போல ஒன்றையும் பலியிட வேண்டும். அல்லது அந்த விலங்கு கிடைக்காவிட்டால், அதன் மதிப்புள்ள பணத்தை ஏழைகளுக்கு உணவளிக்க வேண்டும். அல்லது எத்தனை ஏழைகளுக்கு உணவளிக்க முடியுமோ, அத்தனை நாட்கள் நோன்பு வைக்க வேண்டும்.

ஸூரத்துல் மாயிதா (ஆகாரம்) (உணவு மரவை)

5:95 يٰۤاَيُّهَا الَّذِيْنَ اٰمَنُوْا لَا تَقْتُلُوا الصَّيْدَ وَاَنْتُمْ حُرُمٌ ؕ وَمَنْ قَتَلَهٗ مِنْكُمْ مُّتَعَمِّدًا فَجَزَآءٌ مِّثْلُ مَا قَتَلَ مِنَ النَّعَمِ يَحْكُمُ بِهٖ ذَوَا عَدْلٍ مِّنْكُمْ هَدْيًاۢ بٰلِغَ الْكَعْبَةِ اَوْ كَفَّارَةٌ طَعَامُ مَسٰكِيْنَ اَوْ عَدْلُ ذٰ لِكَ صِيَامًا لِّيَذُوْقَ وَبَالَ اَمْرِهٖ ؕ عَفَا اللّٰهُ عَمَّا سَلَفَ ؕ وَمَنْ عَادَ فَيَنْتَقِمُ اللّٰهُ مِنْهُ ؕ وَاللّٰهُ عَزِيْزٌ ذُو انْتِقَامٍ

**5:95.** ஈமான் கொண்டவர்களே! நீங்கள் இஹ்ராம் உடை உடுத்தியவர்களாக இருக்கும் நிலையில் வேட்டை(யாடி)ப் பிராணிகளைக் கொல்லாதீர்கள்; உங்களில் யாராவது ஒருவர் வேண்டுமென்றே அதைக் கொன்றால், (ஆடு, மாடு, ஒட்டகை போன்ற) கால்நடைகளிலிருந்து அவர் கொன்றதற்கு சமமான ஒன்றை(ப் பரிகாரமாக) ஈடாகக் கொடுக்க வேண்டியது; அதற்கு உங்களில் நீதமுடைய இருவர் தீர்ப்பளிக்க வேண்டும்; அது கஃபாவை அடைய வேண்டிய குர்பானியாகும்; அல்லது பரிகாரமாக ஏழைகளுக்கு உணவளிக்க வேண்டும், அல்லது (பரிகாரமளிக்க ஏதும் இல்லையாயின்) தனதுவினையின் பலனை அனுபவிப்பதற்காக அதற்குச் சமமான நோன்புகள் நோற்பது (அதற்கு ஈடாகும்;) முன்னால் நடந்ததை அல்லாஹ் மன்னித்து விட்டான், எவர் மீண்டும் (இதைச்) செய்வாரோ அல்லாஹ் அவரை வேதனை செய்வான், அல்லாஹ் (யாவரையும்) மிகைத்தவனாகவும், (குற்றம் செய்வோருக்குத் தக்க) தண்டனை கொடுக்க உரியோனாகவும் இருக்கிறான்.

10. தரம் எல்லைக்குள் எந்த மரத்தையும் வெட்டக்கூடாது. செடிகளையும் பிடுங்கக் கூடாது. மறந்து செய்தால் அவர் தவ்பா செய்யட்டும். வேண்டுமென்றே செய்தால் ஒரு ஆட்டைப் பலியிட வேண்டும்.

## ஃபிக்ஹ் வகுப்பு 42 - ஹஜ் உம்ரா தொடர்பான பாடங்கள்-3 - உம்ரா வழிமுறைகள்

**ஆசிரியர்: அஷ் ஷெய்க் உவைஸ் உமரி நஸீரி**

### உம்ரா செய்யும் முறை

இதில் நாம் நான்கு விஷயங்களை செய்ய வேண்டும். ஒன்றாவது மீகாத்தில் இஹ்ராம்.நிய்யத் வைக்க வேண்டும். இரண்டாவதாக கஃபாவை எழு முறை வளம் வருவது. மூன்றாவது ஸஃபா மற்றும் மறவா மலைகளுக்கு இடையில் எழு தடவை ஸயீ செய்வது. நான்காவது ஆண்கள் மொட்டை அடிப்பது அல்லது முடியைக் கத்தரிப்பது. பெண்கள் ஒரு இன்ச் அளவு முடி வெட்ட வேண்டும். இவை அனைத்தையும் செய்து விட்டால் உம்ரா நிறைவேறிவிடும்.
இத்துடன் சில ஸுன்னாஹ்வான வலியுறுத்தப்பட்ட விஷயங்கள் சில உள்ளன. அவற்றைச் செய்தால் கூடுதல் நன்மைகள் கிடைக்கும்.

1. இஹ்ராம்: நிய்யத் வைக்கும் முன்பு குளிப்பது வலியுறுத்தப்பட்ட ஒன்றாகும். புஹாரியில் ரஸூலுல்லாஹ் صَلَّى الله عَلَيْهِ وَسلَّمَ குளித்து இஹ்ராம் அணிந்ததகக் கூறப்பத்துள்ளது.

முஸ்லிம் 1209:
அன்னை ஆயிஷா رَضِيَ الله عَنْهَا அறிவிப்பதாவது:
عَنْ عَائِشَةَ، - رضى الله عنها - قَالَتْ نُفِسَتْ أَسْمَاءُ بِنْتُ عُمَيْسٍ بِمُحَمَّدِ بْنِ أَبِي بَكْرٍ بِالشَّجَرَةِ فَأَمَرَ رَسُولُ اللَّهِ صلى الله عليه وسلم أَبَا بَكْرٍ يَأْمُرُهَا أَنْ تَغْتَسِلَ وَتُهِلَّ .

**2296.** ஆயிஷா (ரலி) அவர்கள் கூறியதாவது: அஸ்மா பின்த் உமைஸ் (ரலி) அவர்களுக்கு "அஷ்ஷஜரா" எனுமிடத்தில் முஹம்மத் பின் அபீபக்ர் எனும் குழந்தை பிறந்தது. அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் அஸ்மா பின்த் உமைஸ் (ரலி) அவர்களைக் குளித்துவிட்டு, தல்பியா கூறச் சொல்லுமாறு (என் தந்தை) அபூபக்ர் (ரலி) அவர்களுக்கு உத்தரவிட்டார்கள். Book: 15 - **ஸஹீஹ் முஸ்லிம்**

குளிக்க பிறகு உடலில் இஹ்ராம் அணிவதற்கு முன்பு உடலில் மட்டும் நறுமணம் பூசலாம். துணியில் பூசக்கூடாது. உடல் நறுமண வாசனை இஹ்ராம் அணிந்த பிறகும் இருந்தால் தவறில்லை.

பின்னர் லப்பைக் அல்லாஹும்ம பி உம்ரத்தின் என்று ஒரு முறை சொல்ல வேண்டும். இப்ராஹீம் அவர்களின் ஹஜ் அழைப்பிற்கு இது பதிலாக இருக்கிறது. இது நிய்யத் அல்ல. நான் உம்ராவுக்காக வந்திருக்கிறேன் என்று இதன் பொருள்.
பின்னர் தல்பியாஹ்வைக் கூற வேண்டும்.

புஹாரி 1550
அன்னை ஆயிஷா رَضِيَ اللهُ عَنْهَا அறிவிப்பதாவது:
قَالَتْ إِنِّي لأَعْلَمُ كَيْفَ كَانَ النَّبِيُّ صلى الله عليه وسلم يُلَبِّي لَبَّيْكَ اللَّهُمَّ لَبَّيْكَ، لَبَّيْكَ لاَ شَرِيكَ لَكَ لَبَّيْكَ، إِنَّ الْحَمْدَ وَالنِّعْمَةَ لَكَ

**1550.** ஆயிஷா(ரலி) அறிவித்தார். நபி(ஸல்) அவர்களின் தல்பியா எவ்வாறு இருந்தது என்பதை நான் நன்கறிவேன். 'இதோ, உன் அழைப்பை ஏற்று வந்து விட்டேன்! இறைவா! உனக்கே நான் கீழ்ப்படிகிறேன்! இணையில்லாதோனே! உனக்கே நான் கீழ்ப்படிகிறேன்! உன் அழைப்பை ஏற்று வந்து விட்டேன்! புகழும் அருட்கொடையும் உனக்கே உரியன!' இதுவே நபி(ஸல்) அவர்களின் தல்பியாவாகும். Book: 25 - **ஸஹீஹுல் புகாரி**

لَبَّيْكَ اَللّٰهُمَّ لَبَّيْكَ لَبَّيْكَ لَا شَرِيكَ لَكَ لَبَّيْكَ اِنَّ الْحَمْدَ
وَالنِّعْمَةَ لَكَ وَالْمُلْكَ لَا شَرِيكَ لَكَ

ஆண்கள் உரத்த குரலில் சொல்ல வேண்டும்.

அபூஸயீத் அல்குத்ரீ رَضِيَ الله عَنْهُ கூறியதாவது:

وَعَنْ أَبِي سَعِيدٍ الْخُدْرِيِّ، - رضى الله عنهما - قَالاَ قَدِمْنَا مَعَ النَّبِيِّ صلى الله عليه وسلم وَنَحْنُ نَصْرُخُ بِالْحَجِّ صُرَاخًا

நாங்கள் ரஸூலுல்லாஹ் صَلَّى الله عَلَيْهِ وَسلَّمَ அவர்களுடன் உரத்த குரலில் ஹஜ்ஜுக்காகத் தல்பியா முழங்கியவர்களாகப் புறப்பட்டோம்.

பெண்கள் தங்களுள் மஹ்ரமாக வருபவர்களுக்குக் கேட்கும் அளவிற்கு மெதுவாக சொல்லவேண்டும். மீக்காத்திலிருந்து சொல்ல ஆரம்பித்து மஸ்ஜித் ஹராம் அடையும் வரை சொல்ல வேண்டும். பின்னர் பள்ளிவாயல் நுழைவு துஆ ஓதியவாறு சென்று தவாஃப் செய்ய வேண்டும்.

### தவாஃப் செய்யும் முறை

முதலில் ஹஜ்ருல் அஸ்வத்திலிருந்து தொடக்கி, கஃபா இடப்புறமாக இருக்குமாறு நாம் எழு முறை சுற்றி வர வேண்டும். இந்த தவாஃப்பில் உள்ள ஸுன்னாஹ் காரியங்கள்:
வாய்ப்பு கிடைத்தால் ஹஜ்ருல் அஸ்வத்தை முத்தமிடுவது. இல்லை என்றால் கையைக் கொண்டு அதனைத் தொட்டுக் கையை முத்தமிடுவது. அதற்கும் வாய்ப்பில்லை என்றால் சைகை செய்து அல்லாஹு அக்பர் என்று சொல்ல வேண்டும். அப்போது முத்தமிட வேண்டாம். இவை கடமை அல்ல. எனவே இதற்காக மற்ற முஸ்லிம்களைத் தள்ளி விட்டு செல்லக் கூடாது. என்னெனில் முஸ்லிம்களுக்குத் துன்பம் கொடுக்காமல் இருப்பது கடமையாகும். உமர் அவர்களுக்கும் இது குறித்து எச்சரிக்கையாக இருக்குமாறு ரஸூலுல்லாஹ் صَلَّي الله عَلَيْهِ وَسلَّمَ அறிவுறுத்தியுள்ளார்கள்.

திர்மிதி 961

இப்னு அப்பாஸ் رَضِيَ الله عَنْهُ அறிவிப்பதாவது:

عَنِ ابْنِ عَبَّاسٍ، قَالَ قَالَ رَسُولُ اللَّهِ صلى الله عليه وسلم فِي الْحَجَرِ " وَاللَّهِ لَيَبْعَثَنَّهُ اللَّهُ يَوْمَ الْقِيَامَةِ لَهُ عَيْنَانِ يُبْصِرُ بِهِمَا وَلِسَانٌ يَنْطِقُ بِهِ يَشْهَدُ عَلَى مَنِ اسْتَلَمَهُ بِحَقٍّ "

ரஸூலுல்லாஹ் صَلَّي الله عَلَيْهِ وَسلَّمَ கூறியுள்ளதாவது: “அல்லாஹ் வின் மீது ஆணையாக! கியாம நாளில் அல்லாஹ் அதற்கு இரண்டு கண்ணையும் ஒரு நாவையும் படைப்பான். கண்ணைக் கொண்டு பார்த்து, நாவைக் கொண்டு தம்மைத் தொட்டவரைப் பற்றி சாட்சி சொல்லும்.”
ஹஜ்ருல் அஸ்வத்திலிருந்து ஆராம்பித்து சுற்றி வரும்போது, நான்காவது மூலையாக வருவது ‘ருக்னே யமானி’ என்பதாகும். அதற்கும் ஹஜ்ருல் அஸ்வத்திற்கும் இடையில்

رَبَّنَا آتِنَا فِي الدُّنْيَا حَسَنَةً وَفِي الْآخِرَةِ حَسَنَةً وَقِنَا عَذَابَ النَّارِ

(எங்கள் இறைவனே!) எங்களுக்கு இவ்வுலகில் நற்பாக்கியங்களைத் தந்தருள்வாயாக; மறுமையிலும் நற்பாக்கியங்களைத் தந்தருள்வாயாக; இன்னும் எங்களை(நரக) நெருப்பின் வேதனையிலிருந்தும் காத்தருள்வாயாக!”

ருக்னே யமானியைத் தொட முடிந்தால் தொட வேண்டும். இல்லையென்றல் சைகை செய்ய வேண்டியதில்லை.
ஆண்கள் தவாஃப் செய்யும்போது, தங்களின் மேலாடையை வலது தோல்பாட்டை தெரியுமாறு அணிய வேண்டும். மேலும் முதல் மூன்று சுற்றில் சற்று வேகமாக நடக்க வேண்டும். முன்பு

சொல்லப்பட்ட துஆவைத் தவிர மற்ற நேரங்களுக்கு என்று குறிப்பிட்ட துஆ ஏதும் இல்லை. தமக்குத் தேவையான துஆக்கள் ஓதலாம். திக்ர் செய்யலாம். தவாஃப் முடிந்த பிறகு மகாம் இப்ராஹீம் அருகில் இரண்டு ரகஅத் ஸுன்னாஹ் தொழ வேண்டும். இடம் இல்லை என்றல், பள்ளிவாசலில் எங்கும் தொழலாம்.

### ஸயீ செய்யும் முறை

ஸஃபா மலையிலிருந்து நாம் **ஸயீயை** ஆரம்பிக்க வேண்டும்.

ஸூரத்துல் பகரா (பசு மாடு) 158

**2:158** اِنَّ الصَّفَا وَالْمَرْوَةَ مِنْ شَعَآٮِٕرِ اللّٰهِ‌ۚ

நிச்சயமாக “ஸஃபா”, “மர்வா” (என்னும் மலைகள்) அல்லாஹ்வின் அடையாளங்களில் நின்றும் உள்ளன;

எனவே நாம் **ஸயீயை** ஸஃபா மலையிலிருந்து ஆரம்பிக்க வேண்டும். மர்வாவிலிருந்து ஆரம்பிப்பது பித்அத். அது **ஸயீ ஆகாது.** ஸஃபா மலையிலிருந்து மர்வா செல்வது ஒரு சுற்று ஆகும். இவ்வாறு கணக்கிட்டு மர்வாவில் ஏழாவது சுற்றை முடிக்க வேண்டும்.

ஆரம்பிக்கும்போது ஸஃபா மலையின் மீது நின்று துஆ ஓதலாம். இந்த வசனத்தையும் ஓதலாம்.

ஸூரத்துல் பகரா (பசு மாடு)

**2:158** اِنَّ الصَّفَا وَالْمَرْوَةَ مِنْ شَعَآٮِٕرِ اللّٰهِ‌ۚ فَمَنْ حَجَّ الْبَيْتَ اَوِ اعْتَمَرَ فَلَا جُنَاحَ عَلَيْهِ اَنْ يَّطَّوَّفَ بِهِمَا ‌ؕ وَمَنْ تَطَوَّعَ خَيْرًا ۙ فَاِنَّ اللّٰهَ شَاكِرٌ عَلِيْمٌ

**2:158.** நிச்சயமாக “ஸஃபா”, “மர்வா” (என்னும் மலைகள்) அல்லாஹ்வின் அடையாளங்களில் நின்றும் உள்ளன; எனவே எவர் (கஃபா என்னும்) அவ்வீட்டை ஹஜ் அல்லது உம்ரா செய்வார்களோ அவர்கள் அவ்விரு மலைகளையும் சுற்றி வருதல் குற்றமல்ல; இன்னும் எவனொருவன் உபரியாக நற்கருமங்கள் செய்கிறானோ, (அவனுக்கு) நிச்சயமாக அல்லாஹ் நன்றியறிதல் காண்பிப்பவனாகவும், (அவனுடைய நற்செயல்களை) நன்கறிந்தவனாகவும் இருக்கின்றான்.

இவை அனைத்தும் ஸுன்னாஹ் ஆகும். **ஸயீ செய்யும்போது** தேவையான துஆக்கள் ஓதலாம். திக்ர் செய்யலாம். அல்லது குர்ஆன் ஓதலாம். குறிப்பிட்ட துஆ ஏதும் இல்லை. **ஸயீ செய்யும்போது இடையில் அப்தஹ் என்ற இடத்தில் மட்டும்** சற்று வேகமாக நடக்க வேண்டும். இந்த இடம் பச்சை விளக்கு மூலம் அடையாளம் காட்டப்பட்டிருக்கும். இறுதியாக ஆண்கள் மொட்டை அடிக்க வேண்டும், அல்லது முடியைக் கத்திரிக்க வேண்டும்.

புஹாரி 1728

அபூ ஹுரைரா(ரலி) அறிவிப்பதாவது:

عَنْ أَبِي هُرَيْرَةَ ـ رضى الله عنه ـ قَالَ قَالَ رَسُولُ اللَّهِ صلى الله عليه وسلم " اللَّهُمَّ اغْفِرْ لِلْمُحَلِّقِينَ ". قَالُوا وَلِلْمُقَصِّرِينَ قَالَ " اللَّهُمَّ اغْفِرْ لِلْمُحَلِّقِينَ ". قَالُوا وَلِلْمُقَصِّرِينَ قَالَهَا ثَلاَثًا قَالَ " وَلِلْمُقَصِّرِينَ "

**1728.** அபூ ஹுரைரா(ரலி) அறிவிக்கார். நபி(ஸல்) அவர்கள், 'இறைவா! தலையை மழித்துக் கொள்பவர்களை மன்னிப்பாயாக!' எனப் பிரார்த்திக்கார்கள்; உடனே, தோழர்கள் 'முடியைக் குறைத்துக் கொள்பவர்களையும்...' என்றனர். (மீண்டும்) நபி(ஸல்) அவர்கள் 'இறைவா! தலையை மழித்துக் கொள்பவர்களை மன்னிப்பாயாக!' என்று பிரார்த்தித்தபோது தோழர்கள் 'முடியைக் குறைத்துக் கொள்பவர்களையும்...' என்றனர். நபி(ஸல்) அவர்கள் மூன்றாவது முறையாகவும் அதைக் கூறியபோது 'முடியைக் குறைத்துக் கொள்பவர்களையும் (மன்னிப்பாயாக!)' எனக் கூறினார்கள். Book: 25 - **ஸஹீஹுல் புகாரி**

பெண்கள் ஒரு இன்ச் அளவு முடியைக் கத்திரித்துக் கொள்ள வேண்டும்.

நாம் முடி வெட்டிக்கொள்ளும் வரை இஹ்ராமில் இருப்பதை நினைவில் கொண்டு அந்த நிலையில் உள்ள பத்து காரியங்களை தவிர்த்து கொள்ள வேண்டும் என்பதை நினைவு படுத்துகிறோம்.

இப்போது உம்ரா முழுமையாகி விட்டது.

**Fiqh 43 - Lessons Related to Hajj and Umrah -4 - Pillars and Duties of Hajj**

## ஃபிக்ஹ் வகுப்பு 43 - ஹஜ் உம்ரா தொடர்பான பாடங்கள்-4 - ஹஜ்ஜின் ருகுண்கள் மற்றும் வாஜிபாத்துகள்

**ஆசிரியர்: அஷ் ஷெய்க் உவைஸ் உமரி நஸீரி**

ஹஜ் மூன்று வகைப்படும்.

1. ஹஜ் தமத்துவு
2. ஹஜ் கிரான்
3. ஹஜ் இஃப்ராத்

ஹஜ் தமத்துவு: இதில் ஹஜ்ஜும், உம்ராவும் அடங்கும். முதலில் உம்ரா நிய்யத் செய்து அதனை நிறைவேற்றி நாம் ஹலால் ஆகிவிட வேண்டும். பின்னர் ஹஜ் காலம் வந்ததும், ஹஜ் நியத்துடன் ஹஜ் செய்ய வேண்டும்.

ஹஜ் கிரான்: இதிலும் உம்ராவும், ஹஜ்ஜும் இருக்கும். எனினும் இரண்டையும் ஒரே இஹ்ராமில். உம்ராவை முடித்து, தொடர்ந்து ஹஜ் செய்ய வேண்டும். இடையில் ஹலால் ஆகக் கூடாது.

எனவே தமத்துவில் தனித்தனி இஹ்ராமும் இரண்டுக்கும் இடையே இடைவெளி இருக்கும்.

ஹஜ் இஃப்ராத்: இஃப்ராத் என்றால் ஒருமை என்று பொருள். இதில் ஹஜ் மட்டும் செய்ய வேண்டும்.

இவை மூன்றில் தமத்துவுதான் சிறந்ததாகும். ரஸூலுல்லாஹ் அவர்கள் தங்களின் வாழ்கையில் ஒரே ஒரு ஹஜ் - ஹஜ் கிரான்தான் செய்துள்ளார்கள். என்னினும் ஸஹாபாக்களுக்கு தமத்துவை தான் சிபாரிசு செய்துள்ளார்கள். ரஸூலுல்லாஹ் ஹஜ் மற்றும் உம்ரா செய்வதற்காக ஹதீ - குர்பானி பிராணியை எடுத்துக் கொண்டு புறப்பட்டு விட்டார்கள். பின்னர்தான் அவர்களுக்கு தமத்தவு சிறந்தது என்று அறிவிப்பு வந்தது. அவர்கள் ஹதீயைக் கொண்டு வந்ததால் கிரான் முறைப்படி ஹஜ் செய்தார்கள். ஹதீ கொண்டு வராதவர்களை தமத்துவு முறைப்படி ஹஜ் செய்யுமாறு கூறினார்கள்.

இதன்படி தமத்துவு தான் சிறந்தது என அறியலாம்.

### ஹஜ்ஜுடைய தூண்கள்: (அரக்கான்கள்)

1. இஹ்ராம்: ஆண்கள் ஹஜ்ஜுக்கான நியத்துடன் இஹ்ராம் அணிய வேண்டும். பெண்கள் நிய்யத் வைக்க வேண்டும்,
2. அரஃபாவில் துல் ஹஜ் ஒன்பதாம் நாள் தங்குவது.
3. தவாஃபுல் இஃபாதாஹ் அல்லது ஜியாராஹ் செய்வது
4. ஸஃபா மற்றும் மறவா மலைகளுக்கு இடையில் ஸயீ செய்வது

இவற்றில் எந்த ஒன்றையும் விட்டாலும் ஹஜ் கூடாது.

### ஹஜ்ஜுடைய வாஜிபாத்துகள்:

1. மீக்காத்திலிருந்து இர்ஹாம் செய்வது.
2. அரஃபாவில் சூரியன் மறையும் வரை தங்குவது.
3. முஜ்தலிஃபாவில் இரவு தங்குவது.

4. அய்யாமுத் தஷ்ரீக் (பிறை 11, 12, 13 ஆகிய) நாட்களில் இரவில் மினாவில் தங்குவது.

5. அந்த நாட்களில் சைத்தான்களுக்கு வரிசையாகக் கல்லெறிவது.

6. மொட்டை அடிப்பது அல்லது முடியைக் கத்திரிப்பது.

7. தவாஃபுல் விதா செய்வது.

இந்த எழு வாஜிபாத்துகளில் ஒன்றை விட்டால் பரிகாரமாக ஒரு குர்பானி கொடுக்க வேண்டும். குர்பானி கொடுத்து விட்டால் ஹஜ் நிறைவேறி விடும்.

**Fiqh 44 - Lessons Related to Hajj and Umrah -5 - The Method of Thamathu Hajj**

# ஃபிக்ஹ் வகுப்பு 44 - ஹஜ் உம்ரா தொடர்பான பாடங்கள்-5 - தமத்து ஹஜ்ஜின் வழிமுறை

**ஆசிரியர்: அஷ் ஷெய்க் உவைஸ் உமரி நஸீரி**

இதில் உம்ரா முற்றும் ஹஜ் ஆகியவற்றை தனித்தனி இஹ்ராமுடன் செய்வது தமத்து முறை ஆகும். ஷவ்வால் மாதத்திற்குப் பிறகு உம்ராவை முடித்து அவர் இஹ்ராமிலிருந்து விலக வேண்டும். பின்னர் துல்ஹஜ் எட்டாம் நாளிலிருந்து துல்ஹஜ் பதின்மூன்று வரை ஹஜ்ஜுடைய காரியங்கள் நடை பெரும்.

### துல்ஹஜ் எட்டாம் நாள்

இந்த நாள் யவ்முத் தர்விய்யாஹ் என்று அழைக்கப்படும். இன்று ஹஜ்ஜுக்கு இஹ்ராம் செய்ய வேண்டும். பின்னர் மினாவிற்கு சென்று அங்கு தங்க வேண்டும்.

### துல்ஹஜ் ஒன்பதாம் நாள்

இது அரஃபாவுடைய நாள் ஆகும். சூரியன் உதித்த பிறகு, மினாவை விட்டு அரஃபாவுக்கு சென்று அங்கு தங்க வேண்டும். சூரியன் மறையும் வரை அங்கு தங்கி, பின்னர் முஜ்தலிஃபா சென்று அங்கு இரவு தங்க வேண்டும்.

### துல்ஹஜ் பத்தாம் நாள்

இது பெருநாள் - யவ்முன்னகர் - குர்பானியுடைய நாள் ஆகும். முஜ்தலிஃபாவிலிருந்து சூரியன் உதித்து சில நிமிடங்களுக்குப் பிறகு மினாவிற்கு வரவேண்டும்.

1. அங்கு பெரிய ஷைத்தானின் மீது (ஜம்ரத்துல் உக்பா - ஜம்ரத்துல் குப்ராஹ்) எழு கற்களை எரிய வேண்டும்.
2. குர்பானி கொடுக்க வேண்டும்.
3. தலையை மழிப்பது அல்லது கத்தரிப்பது.
4. கஃபாவிற்கு சென்று தவாஃபுஸ் ஸியாராஹ் - தவாஃபுல் இஃபாதாஹ் எழு சுற்றுகள் சுற்ற வேண்டும்.
5. ஸஃபா மர்வா இடையில் ஸயீ செய்ய வேண்டும்.

கல்லெறிந்து, குர்பானி கொடுத்து, தலையை மழித்த பிறகு முதல் ஹாலாலை அடிவார்கள். என்னினும் இஹ்ராம் நிலையில் தான் இருக்கிறார்கள். தவாஃபு மற்றும் ஸயீ செய்த பிறகு அவர்கள் முழுமையாக இஹ்ராமிலிருந்து விடுபடுவார்கள்.

### துல்ஹஜ் பதினொன்று, பன்னிரண்டு மற்றும் பதின்மூன்று நாட்கள்

இந்நாட்கள் அய்யாமுத் தஷ்ரீக் என அழைக்கப்படும். இம்மூன்று நாட்களும் மினாவில் தங்கி, முறையே சிறிய (முதல்) ஷைத்தான், நடு (இரண்டாவது) ஷைத்தான், பின்னர் கடைசி (பெரிய) ஷைத்தான் என வரிசையாக ஏழு கற்கள் எரிய வேண்டும். முதல் இரண்டு ஷைத்தானுக்கு கற்கள் எறிந்த பிறகு கிப்லாவை நோக்கி துஆ செய்யலாம். ஆனால் பெரிய ஷைத்தானுக்கு கற்கள் எறிந்த பிறகு ரஸூலுல்லாஹ் صَلَّى الله عَلَيْهِ وَسلَّمَ துஆ செய்யவில்லை. இம்மூன்று நாட்களும் இவ்வாறு செய்தால் அவர்களின் ஹஜ் கடமை முடிந்தது. பின்னர் நாட்டுக்குத் திரும்பும்போது கடைசியாக தவாஃபுல் விதா - பயணத் தவாஃப் செய்துவிட்டு விடைபெற வேண்டும்.

நம் அனைவருக்கும் இந்த மகத்தான இபாத்ததை செய்யும் பாக்கியம் அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَى அளிப்பானாக!

**Fiqh 45 - Lessons Related to Hajj and Umrah -6 - Mistakes made during Hajj Umrah**

## ஃபிக்ஹ் வகுப்பு 45 - ஹஜ் உம்ரா தொடர்பான பாடங்கள்-6 - ஹஜ் உம்ராவில் ஏற்படும் தவறுகள்

**ஆசிரியர்: அஷ் ஷெய்க் உவைஸ் உமரி நஸீரி**

1. எந்த நற்செயலாக இருந்தாலும் நாம் உளத்தூய்மையுடன் செய்ய வேண்டும். இது அடிப்படை நிபந்தனை. எல்லா காரியங்களும் அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَى வுக்காக செய்ய வேண்டும். அவ்வாறு இல்லாமல் இருந்தால் அது அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَى விடம் ஏற்றுக்கொள்ளப்படாது. மறுக்கப்படும். இது ஹஜ் மற்றும் உம்ராவுக்கும் பொருந்தும். நாம் ஹாஜி அல்லது அல்ஹாஜ் என்ற பட்டப்பெயர் கொள்ள வேண்டும் என்பதற்காக அவற்றை செய்யக் கூடாது. நாம் ஹஜ் செய்தவர் என ஏன் நமது பெயருடன் இணைத்துக் கூறப்படுவதை விரும்ப வேண்டும்? நம்மை யாரும் ஹாஜி என்றாலும் நாம் அதனை ஏற்பது சரியாகாது. நாம் தொழுவதால் நம்மை யாரும் தொழுகையாளி என்ற அடைமொழியுடன் அழைப்பதில்லை. அவ்வாறு அழைக்க வேண்டும் என எதிர்ப்பார்பதும் இலை. அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَى வுக்காகவே தொழுகிறோம், நோன்பு வைக்கிறோம். அதுபோல் தான் அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَى வுக்காகவே ஹஜ்ஜும் உம்ராவும் செய்கிறோம். எனவே நம்மை ஹாஜி என்று அழைப்பதை நாம் தடுக்க வேண்டும். அழைப்பவரிடம் அது குறித்து விளக்க வேண்டும். நம்மை ஹாஜி என அழைக்க வேண்டும் என்ற நோக்கத்தில் இருந்தால் நாம் மிகவும் கஷ்டப்பட்டு செய்த அந்த வணக்கம் வீணாகி விடக்கூடும்.

2. மஸ்ஜித் ஹராமில் தொழுவது ஒரு லட்சம் நன்மையை விடச் சிறந்தது என்பதை அறிவோம். மஸ்ஜித் நபவியில் தொழுவது ஆயிரம் நன்மையை விடச் சிறந்தது. இவ்வாறிருக்க, நாம் ஹஜ் செல்லும்போது, அதிக வணக்கங்களில், நபில் தொழுகைகளில் ஈடுபடுவது சிறந்தது. அவ்வாறு இல்லாமல், பொழுதுபோக்கு எண்ணத்துடன் கடைவீதிகளில் நேரத்தைச் செலவழிப்பது வீணான காரியமாகும்.

3. ஒரே பயணத்தில் ஒன்றுக்கு மேற்பட்ட உம்ரா செய்வதும் நபிவழி ஆகாது. ரஸூலுல்லாஹ் صَلَّي الله عَلَيْهِ وَسلَّمَ மூன்று அல்லது நான்கு உம்ராக்கள்தான் செய்துள்ளார்கள். எனினும் அவர்கள் ஒரு பயணத்தில் ஒரு உம்ராதான் செய்துள்ளார்கள். ஸஹாபாக்களும் அவ்வாறு ஒரு உம்ராதான் செய்துள்ளார்கள். அடிக்கடி உம்ரா செய்து அதிக நன்மைகளை திரட்டலாம் என்பதாக இருந்தால், ரஸூலுல்லாஹ் صَلَّي الله عَلَيْهِ وَسلَّمَ அவர்களும், ஸஹாபாக்களும் அவ்வாறு செய்திருப்பார்கள். அனால் அவ்வாறு செய்யவில்லை. நாம் அவ்வாறு செய்தால் அதிக நன்மை கிடைக்காது. மாறாக ஸுன்னாஹ்வுக்கு மாற்றமாக அமைந்துவிடும். ஒரு உம்ரா செய்தால் ஸுன்னாஹ்வைப் பின்பற்றிய நன்மை கிடைக்கும். எனவே ஒன்றுக்கு மேற்பட்ட உம்ரா செய்வதில் ஏதும் நன்மை இல்லை.

4. இஹ்ராம் குறித்த தவறுகள்: இஹ்ராமுக்காக இரண்டு ரகஅத் தொழுகை என ஏதும் இல்லை. அதனை தவிர்க்க வேண்டும். மேலும் இஹ்ராம் நிலையில் கைக்கடிகாரம், கண்ணாடி, செருப்பு போன்றவற்றை அணிவது தவறு என சிலர் நினைக்கிறார்கள். அவை எல்லாம் தவறில்லை. அதுபோல, வெயிலுக்குக் குடை பிடிப்பது, நிழலில் நிற்பது, இஹ்ராம் உடையை மாற்றுவது, குளிப்பது எல்லாம் செய்வதில் தவறில்லை.

5. தவாஃப் செய்யும்போது, ருக்னே-யமனி மற்றும் ஹஜ்ர் அஸ்வத் ஆகியவற்றிக்கு இடையில் மட்டும்தான் கீழே குறிப்பட்ட

رَبَّنَا آتِنَا فِي الدُّنْيَا حَسَنَةً وَفِي الْآخِرَةِ حَسَنَةً وَقِنَا عَذَابَ النَّارِ

(எங்கள் இறைவனே!) எங்களுக்கு இவ்வுலகில் நற்பாக்கியங்களைத் தந்தருள்வாயாக; மறுமையிலும் நற்பாக்கியங்களைத் தந்தருள்வாயாக; இன்னும் எங்களை(நரக) நெருப்பின் வேதனையிலிருந்தும் காத்தருள்வாயாக!"

என்ற துஆ ஓதலாம். மற்றபடி வேறு எந்த துஆவும் குறிப்பிட்டுச் சொல்லப்படவில்லை.

6. தவாஃப் செய்யும்போது மற்றவர்களுக்கு தொந்தரவு ஏற்படும் வகையில் அதிக சப்தத்துடன் ஓதக்கூடாது.

7. தவாஃப் செய்து முடிந்த பிறகு வலது தோள்பட்டையை மூடிவிட வேண்டும். திறந்து வைத்திருக்க வேண்டியதில்லை.

8. ஷைத்தானுக்கு கல் எரியும்போது ஆவேசமாக, கோபமாகக் கல் எறிவது கூடாது. செருப்பு போன்றவற்றை எறியக்கூடாது. அங்கிருத்து ஷைத்தானைத் திட்டுவது கூடாது. ரஸூலுல்லாஹ் صَلَّي الله عَلَيْهِ وَسلَّمَ செய்த ஸுன்னாஹ்வைத்தான் நாம் செய்ய வேண்டும். ஷைத்தான் அங்கு இருப்பதாக நினைத்துக்கொண்டு நாம் கல் எறிவது, திட்டுவது ஆகியன செய்யக்கூடாதவையாகும்.

ஹிரா குகைக்குச் சென்று இரண்டு ரகஅத் தொழுவது, அரஃபா மலையில் ஏறுவது போன்ற தவறுகள் எவை என அறிந்து நாம் தவிர்த்துக் கொள்ளவேண்டும்.

அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَى நமக்கு ஹஜ் மற்றும் உம்ரா செய்யும் பாக்கியத்தை அளிப்பானாக! அந்த நேரத்தில் ஒழுங்கான விதத்தில் அந்த கடமைகளைச் செய்யும்படியும், பித்அத் விஷயங்களை தவிர்க்கும்படியும் நமக்கு அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَى அருள்பாலிப்பானாக!

- o - o - o - o - o - o - o - o - o **முற்றும்** - o - o - o - o - o - o - o - o - o